# சேதுபதி செப்பேடுகள்

புலவர் செ. இராசு, எம்.ஏ.,

# சேதுபதி செப்பேடுகள்

பதிப்பாசிரியர்

**புலவர் செ. இராசு, எம்.ஏ.,**

தலைவர், கல்வெட்டியல்துறை

தமிழ்ப் பல்கலைக்கழகம்

**தமிழ்ப் பல்கலைக்கழகம்**

தஞ்சாவூர்

ISBN : 81-7090-220-9

**எட்டாம் உலகத் தமிழ் மாநாடு**
பதிப்புச் சுழல் நிதி வெளியீடு எண் : 15

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 172
திருவள்ளுவராண்டு 2025 கார்த்திகை
திசம்பர் - 1994

நூல் : **சேதுபதி செப்பேடுகள்**

ஆசிரியர் : **செ. இராசு**

பதிப்பு : முதற்பதிப்பு

**விலை : ரூ. 200-00**

**அச்சிட்டோர் :**
அமுதா அச்சகம்,
34, செ. பி. கோயில் தெரு,
சிதம்பரம்.

**படம் :**
தமிழ்ப் பல்கலைக்கழக அச்சகம்,
தஞ்சாவூர்.

# முகவுரை

**முனைவர். ஔவை நடராசன்**
துணைவேந்தர்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

சங்கம் என்ற சொல் முன்னாளில் வழக்கில் இல்லை. மன்றம் என்பது அப்பொருளில் வழங்கியது. அகன்ற இலந்தை மரத்தின் நிழலில் - மன்றத்தில் புலவர்களும், பாணர்களும் குழீஇயிருந்து தமிழ் நலம் பேசி உவந்ததைக் கேட்டு மகிழ்ந்து சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் பாணர்க்கும், புலவர்க்கும் அழியாப் பெருஞ் செல்வம் வழங்கினான் என்பர். 'இரத்திநீடிய அகன்றலை மன்றத்துக் கரப்பில் உள்ளமொடு வேண்டுமொழி பயிற்றி, அமலைக் கொழுஞ்சோறு ஆர்ந்த பாணர்க்கு அகலாச் செல்வம் முழுவதும் செய்தோன், எங்கோன் வளவன் வாழ்க! நின் பீடுகெழு நோன்றாள் பாடேனாயின் பல்கதிர்ச் செல்வன் படுவது அறியேன்' என ஆலத்தூர் கிழார் பாடும் பாடற் பொருளில் சோழர் பேரூரில் புலவர் கூடல் மிளிர்ந்ததென அறிஞர் கருதுவர். அம் மரபை ஒட்டியே பல்லாண்டுகள் கழிந்து, தண்ணார் தமிழ் வளர்க்கும் தஞ்சை மாநகரில் அருட்டுறைக்குப் பெரிய கோயிற் போலவே தமிழ் நலம்பேணும் அரிய கோயிலாகத் தமிழ்ப் பல்கலைக் கழகம் திகழ்கிறது.

1981-ஆம் ஆண்டு மாமதுரையில் நிகழ்ந்த ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டின் அறிவுப் பயனாகத் தமிழ்ப் பல்கலைக் கழகம் தஞ்சையில் தோற்றம் பெற்றது. கடந்த பதின்மூன்று ஆண்டுகளில் இப் பல்கலைக் கழகம் உயராய்வு நிறுவனமாக ஓங்கி வளர்ந்துள்ளது. உலகிலுள்ள எழுபதுக்கும் மேற்பட்ட நாடுகளில் தமிழ் பேசும் மக்கள் பரவியுள்ளனர். உலகெங்கும் வாழும் தமிழ் மக்களின் கனவுகளை நனவாக்கும் முயற்சியில் இப் பல்கலைக் கழகம் தமிழ்ப் பண்பாட்டுக் கலையரங்கமாக மிளிரவேண்டுமென்பதும் நமது நோக்கமாகும். எட்டாம் உலகத் தமிழ் மாநாடு தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக்கழக வாகை வளாகத்தில் 1995 சனவரி 1 முதல் 5-ஆம் நாள் வரை நடைபெறுகிறது. இவ்வரிய நிகழ்ச்சியை நினைவுகூரும் வகையில் தமிழக அரசு இப்

பல்கலைக் கழகத்திற்குப் பத்து இலட்சநிதி வழங்கிப் பதிப்புச்சுழல் நிதியை அமைத்தது. சுழல் நிதியின் பதிப்பாக இந்நூல் இன்று தொடங்கும் உலகத் தமிழ் மாநாட்டின் போது வெளியிடப்படுகிறது. பல்லாண்டுகளாக அச்சேறாமல் இருந்த இந்நூல் தமிழுலகின் கையில் இப்போது கிடைப்பது நமது பேறாகும்.

துறைதோறும் தமிழின் சிறப்பையும் வளத்தையும் உலகுக்கு ஆய்வு நூல்களாகப் படைத்து வழங்குவது பல்கலைக் கழகத்தின் கடமையாகும். பல்கலைக்கழக அறிஞராகிய நூலாசிரியரைப் பாராட்டி மகிழ்கிறேன். ஏட்டளவில் இருந்த பனுவல்களின் அச்சு வடிவைக் காணும் கற்றோர் போற்றவும் ஊக்கமளிக்கவும் வேண்டுகிறோம்.

15—12—94

ஔவை நடராசன்

# சேதுபதி செப்பேடுகள்

## பதிப்புரை

### சங்க கால மறவர்

சேதுபதிகள் மறவர் இனத்தைச் சார்ந்தவர்கள். மறவர்கள் தமிழ்நாட்டின் தொன்மைச் சிறப்பு வாய்ந்த குடிகள். சங்க இலக்கியங்களில்

'வில்லோர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்'[1]

'நல்லமர்க் கடந்த நாணுடை மறவர்'[2]

'வீங்கு சிலை மறவர்'[3]

'போரெனில் புகலும் புனைகழல் மறவர்'[4]

'உறின் உயிர் அஞ்சா மறவர்'[5]

'மறவர் மறவ'[6]

'விசும்புறழ் புரிசை வெம்ப முற்றி
பைங்கண் யானை வேந்துபுறத்து இறுத்த
நல்எயில் உடையோர் உடையம் என்னும்
பெருந்தகை மறவர்'[7]

'செந்தொடை மறவர்'[8]

---

1. அகநானூறு 35.
2. மேலது 67.
3. மேலது 89.
4. புறநானூறு 31.
5. திருக்குறள் 778,
6. பெரும்பாணாற்றுப்படை 455.
7. நற்றிணை 287.
8. மேலது 48.

எனப் பல்வேறு இடங்களில் மறவர் குறிக்கப் பெறுகின்றனர். படைத்தலைவராக, பாலை நிலம் வாழ்பவராக, மறக்குடியைச் சேர்ந்தவர்களாக, வீரமும் ஆண்மையும் உடைய வெற்றி வீரர்களாக அவர்கள் எங்கும் வருணிக்கப்படுவதைக் காணுகின்றோம். இவர்கள் படைவீரர்களா? அல்லது இன்றைய மறவர் குலத்தின் முன்னோர்களா? என்பது ஆய்வுக்குரியது. இன்றைய மறவர் குலத்தின் முன்னோராக இவர்களைக் கொண்டால் தவறேதுமில்லை. இரு சாராரிடமும் ஒத்த பண்புகள் இயல்புகள் நிலவுவதால் சிலர் எண்ணுவது போல இருசாராருக்கும் தொடர்பு இருக்கக்கூடும்.[9]

**மறவர் பிரிவுகள்**

'மறவர் சாதி விளக்கம்' என்னும் மெக்கன்சி தொகுத்த ஆவணம்[10]

செம்பிநாட்டு மறவர்

கொண்டையங்கோட்டை மறவர்

ஆப்பனூர் மறவர்

ஆகாத்த மறவர்

ஓரூர்நாட்டு மறவர்

உப்புக்கட்டி மறவர்

குறிச்சிக்காட்டு மறவர்

என மறவரில் ஏழு பிரிவினரைக் குறிக்கிறது.

மற்றொரு நூலில் பின்வருமாறு 11 மறவர் பிரிவுகள் கூறப்படுகின்றன,[11]

செம்பிநாட்டு மறவர்

கொண்டையங்கோட்டை மறவர்

சிறுதாலி கட்டி மறவர்

வன்னிய மறவர்

பண்டார மறவர்

காரண மறவர்

---

9. Dr. S.Kadhirvel, A History of the Maravas, Madurai Publishing House, Madurai, 1977.

10. மெக்கன்சி ஆவணம் எண் D 2743; R 370 அர்சினர் கீழ்த்திசைச் சுவடி நூலகம் சென்னை.

11 A History of the Maravas. p.9.

ஆப்பனூர்நாட்டு மறவர்
ஆகாத்த மறவர்
உப்புக்கோட்டை மறவர்
குறிச்சி மறவர்
சேர்வைக்கார மறவர்

இவர்களில் இராமநாதபுரம் சேதுபதிகளும், சிவகங்கைச் சீமையை ஆட்சி புரிந்த மறவர்குலப் பெருமக்களும் செம்பி நாட்டு மறவர் குலத்தைச்சேர்ந்த வர்கள். செம்பி நாடு என்னும் பகுதியைச் சேர்ந்தவர்கள் ஆதலின் இவர்கள் செம்பிநாட்டு மறவர் எனப்பட்டனர். இச்செம்பி நாடு கல்வெட்டுக்களில் செம்பி நாடு' என்றும் 'கீட்செம்பிநாடு' என்றும் [12] 'வடதலைச் செம்பிநாடு' என்றும் குறிக்கப்பட்டன.

## சோழர் தொடர்பு

செம்பியன் என்பது சோழருக்குரிய பெயர். எனவே 'செம்பி நாடு' மறவருக்குரியது என்றால் அவர் சோழரோடு தொடர்புடைய குடியினர் என்பது பெறப்படும். சேதுபதி அரசர்தம் முன்னோர் தஞ்சாவூருக்குக் கிழக் கிலும், தென் கிழக்கிலும் வசித்து அங்கிருந்து கடல்வழி தொண்டித் துறை முகம் மூலம் முதலில் இங்கு வந்தவர்கள் எனச் சிலர் கூறுவர்.[13] எல்லாச் சேது பதி அரசர்களும் 'தொண்டியந் துறைவன்' எனத் தவறாமல் தம்மை அழைத் துக் கொண்டதைச் செப்பேடு மூலம் காண்கின்றோம்.

சேதுபதிகள் ஆட்சிக்குரிய நாட்டைச் செம்பிநாடு என்று புள்ளை அந் தாதி கூறுகிறது.[14] சேது நாட்டுக்கு 'ராசேந்திர மங்கலநாடு' என்று பெயர் வழங்குகிறது.[15] இராமநாதபுரம் வரும்முன் சேதுபதிகளின் முன்னோர்கள் துகவூர்க் கூற்றத்துக் காத்தூரான குலோத்துங்க சோழநல்லூர் கிழ்ப்பால் விரையாதகண்டனில் இருந்தனர் என்று எல்லாச் செப்பேடுகளும் கூறுகின்றன.

கி.பி. 1059 இல் சோழர் இலங்கைமீது படைஎடுத்தபோது சென்ற பாதையில் பாதுகாப்பிற்காக ஒரு படையை நிறுத்தினர் என்றும் அப் படைத் தலைவன் வழிவந்தவனே பின்னாளில் சேதுபதிகள் என்னும் சிறப்பினைப்

---

12. S.I.I. VIII 398.
13. ப.ஆ. முத்துத் தாண்டவராயபிள்ளை, செந்தமிழ்ச் செல்வி, 1935, பிப்ரவரி-மார்ச்சு.
14. மீ. மனோகரன், கிழவன் சேதுபதி, அகரம், சிவகங்கை, 1983, ப. 24.
15. கே. இராமசாமி அய்யர், புதுக்கோட்டை இராஜ்ஜியச் சரித்திரம், ப. 37.

பெற்றனர் என்றும் கூறப்பெறுகிறது.[16] சேதுபதிகட்குரிய கொடிகளில் 'புலிக் கொடி' யும் உரியதாகக் கூறப்படுகிறது. அபிதான சிந்தாமணி' குலோத்துங்க சேதுபதி என்பவர் ஒருவர் இருந்த செய்தியைக் கூறுகிறது.

இவைகளையெல்லாம் நோக்கும்போது மறவர்களும், அவர்கள் தலைவர்களாகிய சேதுபதிகளும் பழங்காலத்தில் சோழரோடு - சோழ நாட்டோடு தொடர்புடையவர்கள் என்பது பெறப்படுகிறது.

**சேதுபதிகள்**

இராமன், இராவணனால் கவர்ந்து செல்லப்பட்ட சீதையை மீட்கப் பெரும்படையுடன் இலங்கை சென்றபோது வானர சேனைகளைக் கொண்டு கடலில் கட்டுவித்த திருஅணையே 'சேது' எனப்படும். இந்தச் சேதுவைக் காவல் புரிவதற்கு இராமனால் நியமிக்கப்பெற்ற மறவர் தலைவர் வழி வந்தவர்களே சேதுபதிகள் ஆயினர் என்பர். அவர்கள் இராமனால் பிரதிட்டை செய்யப்பெற்ற இராமலிங்கத்தையும் காப்பவர் ஆயினர்.

எனவே அவர்கள் சேதுபதிகள் என்ற பட்டத்துடன் சேதுவோடு தொடர்புடைய

தேவை நகராதிபன்
சேதுமூல ரட்சா துரந்தரன்
இராமநாதசுவாமி காரிய துரந்தரன்
தனுக்கோடி காவலன்
சேது காவலன்
திருவணை காவலன்
கந்தமாதன கிரியான்

போன்ற, பல பட்டங்களையும் பெற்றிருந்தனர்.

போர்ச்சுக்கீசியர் 1618 இல் கால்கொள்ளும்வரை யாழ்ப்பாணத்தை ஆண்டுவந்த கலிங்க வமிசத்தைச் சேர்ந்த ஆரிய அரசர்களும் தம்மைச் 'சேது காவலர்' என அழைத்துக் கொண்டனர். தாங்களும் இராமனால் ஆளநியமிக்கப்பட்டனர் என்றும் இராமர் தங்களுக்குக் கொற்றக்குடையும், ஒற்றைச்

16. Ramanathapuram Dt. Gazetteer (1972), p. 140,

சங்கும், ரிஷபக் கொடியும், சேதுச்சின்னமும் அளித்தார் என்றும் பரராசசேகரன் செகராசசேகரன் எனப்பட்டப்பெயர்களைத் தரித்துக் கொண்ட அவ்வரசர்கள் கூறிக் கொண்டனர்.[17]

> 'போது போனது வந்தது தனிமையும் புகுந்தது பனிவாடை
> தூது போனவண் டிவ்வழி மறந்தது சொல்லுவ தினியாதோ
> ஓது வார்புகழ் மணவையர் அதிபதி ஓரூல கொவ்வாதான்
> சேது காவலன் ஆரிய சேகரன் திருவுளம் தெரியாதோ'[18]

என்ற செகராச சேகரமாலையில் யாழ்ப்பாண ஆரிய அரசன் 'சேதுகாவலன்' எனக் குறிக்கப் பெறுவதைக் காண்கின்றோம்.

'சிங்கை ஆரியன் சேது காவலன்'

எனப் பண்டிதராசர் இயற்றிய தட்சிண கைலாசமாகிய திரிகோணமலைப் புராணத்திலும் கூறப்பட்டுள்ளது.[19]

மங்கலச் சொல்லாக 'ஸ்வஸ்திஸ்ரீ' என்று கல்வெட்டின் தொடக்கத்தில் வெட்டப்பெறுவது போல யாழ்ப்பாண அரசர்கள் தங்கள் கல்வெட்டுக்களின் தொடக்கத்தில் பொறிக்கச் 'சேது' என்ற சொல்லையே பயன்படுத்தினர்.[20]

யாழ்ப்பாண ஆரிய அரசர்கள் காசுகளிலும் 'சேது' என்ற சொல் காணப்படுகிறது.[21]

பாண்டி நாட்டுப் பகுதியை ஆட்சிபுரிந்த வாணாதிராய அரசர்கள் தம் ஆட்சிக்குட்பட்ட பகுதியாக இராமேசுவரத்தையும் கொண்டிருந்தனர். அவர்களுள் சிலர் தங்களைச் 'சேதுகாவலன்' என்றும் 'தேவை நகராதிபன்' 'திருவணை காவலன்' 'சேதுமூல ரட்சா துரந்தரன்' என்றும் பெயர்கள் வைத்துக் கொண்டனர்.[22]

யாழ்ப்பாண அரசர்கட்கும், வாணாதிராயர்க்கும் சேதுக்கும் தொடர்பு காரணமாகச் சில பட்டப் பெயர்கள் பெற்றிருக்கலாம். ஆனால் சேதுபதிகள் என்ற சிறப்புப் பெயருக்குரியவர்கள் மறவர்குலத் தலைவர்களே.

---

17. M.C. Rasanayakam, Ancient Jafna, pp. 293-296.
18. பெருந்தொகை, ப. 287.
19. M.C. Rasanayakam, Ancient Jafna, p. 299
20. S.I.I. IV 1413
21. மீ. மனோகரன், கிழவன் சேதுபதி, ப. 28.
22. வெ. வேதாச்சலம், பாண்டி நாட்டில் வாணாதிராயர்கள், பக். 75,92.

இராமேசுவரம் சென்று வழிபடும் பக்தர்கள் சேதுபதிகளையும் வந்து தரிசித்துச் செல்லுவது பண்டைய வழக்கம். எனவே தனிப்பாடல்கள்

'ஆதிபதி யானமண்ட லாதிபதி வம்சபதி அரசர்க்கு என்றும்
நீதிபதி சத்ரபதி சமத்தான பதிவிசய நிறைந்தே நிற்கும்
மாதுபதி துரகபதி கசபதிந ராதிபதி வளர்தென் தேவைச்
சேதுபதி தெரிசனமே இராமலிங்க தெரிசனமாய்ச் செப்பலாமே'[23]

'சேதுபதி என்றுநர சென்மமெடுத் தாய்கமல
மாது பதிக்குன்பேர் வாய்க்குமா - பூதலத்தில்
நீயே ரகுராமன் நின்னையிங்குப் பெற்றெடுத்த
தாயே யருட்கோ சலை'[24]

எனப் பாராட்டுகின்றன. சேதுபதிகளை இராமபிரான் அவதாரம் என்றே புலவர்கள் அழைத்தனர்.

'ஆழி அடைத்த அபிராமா'

என்று அந்தகக்கவி வீரராகவ முதலியாரும் பாடினார்.

சேதுபதிகள் செப்பேடுகளில் அவர்கள் 'சேதுங்கராய வங்கிஷன்' என்றும் 'செயதுங்கராய வங்கிஷன்' என்றும் அழைக்கப் பெறுகின்றனர். தனிப்பாடல் ஒன்று

'மூவேந் தருமற்றுச் சங்கமும் போய்ப்பதின் மூன்றோடெட்டுக்
கோவேந் தரும்அற்று மற்றொரு வேந்தன்கொடையுமற்றுப்
பாவேந்தர் காற்றில் இலவம்பஞ் சாகப் பறக்கையிலே
தேவேந்திர தாருவொத் தாய்ரகு நாத செயதுங்கனே'[25]

எனச் சேதுபதிகளைப் புகழுகிறது, செயதுங்கள்-சேதுங்கன் என ஆகிச்சேது என்ற சொல் உருவாகிறக்கலாமா என்பதும் ஆய்வுக்குரியது.

**சேதுபதிகளின் தொன்மை**

இன்றைய சேதுபதி அரச மரபு 1604 அல்லது 1605 ஆம் ஆண்டு நிறுவப் பட்டது என வரலாற்று ஆசிரியர்கள் குறிக்கின்றனர். ஆனால் பல்வேறு

23. பெருந்தொகை, பா. 1284.
24. மேலது, பா. I285.
25. பெருந்தொகை, பா. 1286.

குறிப்புகளிலிருந்து அதற்கு முன்பே அப்பகுதியில் ஆதிக்கம் செலுத்திய பரம்பரை சேதுபதிகள் பரம்பரை என்ற முடிவுக்கு வரலாம்.

கி.பி. 11 அல்லது 12 ஆம் நூற்றாண்டிலேயே சேதுபதி பரம்பரை தோற்றம் பெற்றது என்று இராமநாதபுரம் மாவட்டக் கெசட்டியர் பல்வேறு ஆதாரங்கள் காட்டி நிறுவுகிறது.[26]

இலங்காபுரித் தண்டநாயகன் 1170-71 இல் தென்னிந்தியா மீது படை எடுத்தபோது சேதுபதிகளைவென்றான் என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.[27] கால்டுவெல் பாண்டிய அரசர்கள் சேதுபதிகட்கு ஆட்சியுரிமை நல்கியிருந்தனர் என்று கூறுகிறார்.[28] கி.பி. 1414-15ஆம் ஆண்டில் உடையான் சேதுபதி என்பவர் முகவைச் சீமையில் ஆட்சி செலுத்தியுள்ளார். 1489-90 இல் சின்ன உடையான் சேதுபதி என்ற தலைவர் இப் பகுதியில் அதிகாரம் செலுத்தியுள்ளார். 1500-01இல் திருமலை சேதுபதி என்பவர் இராமேசுவரம் கோயிலுக்குத் திருப்பணிகள் செய்துள்ளார். 1539-40 இல் ரகுநாதத் திருமலை சேதுபதி என்பவர் திருமலையின் மகனாகக் குறிக்கப்பட்டுள்ளார்.[29]

இராபர்ட் சீவெல் கூறிய பட்டியலை அடிப்படையாக வைத்து அபிதான சிந்தாமணி என்னும் நூல் 1604 இல் பட்டம் பெற்ற உடையான் சேதுபதிக்கு முன்னர் 10 சேதுபதிகள் ஆட்சிபுரிந்துள்ளனர் என்று கூறிக் கீழ்க்கண்ட பட்டியலையும் தந்துள்ளது.[30]

1) ஆதி ரகுநாத சேதுபதி
2) ஜெயதுங்க ரகுநாத சேதுபதி
3) அதிவீர ரகுநாத சேதுபதி
4) வரகுண ரகுநாத சேதுபதி
5) குலோத்துங்க சேதுபதி
6) சமரகோலாகல சேதுபதி
7) மார்த்தாண்ட பைரவச் சேதுபதி

---

26, Ramanathapuram Dt. Gazetteer, p. 140.
27. செந்தமிழ், 1935, பிப்ரவரி-மார்ச்சு,
28 Ancient Jafna, p. 58.
29 Robert Sewell, A Sketch of the Dynastics of Southern India, p. 87.
30. அபிதானசிந்தாமணி, ப. 1626.

8) சுந்தர பாண்டிய சேதுபதி

9) காங்கேய ரகுநாத சேதுபதி

10) விஜய முத்துராமலிங்க சேதுபதி

மேற்கண்ட குறிப்புக்கள் மூலம் 1604-1605 க்கு முன்பே சேதுபதிகள் என்ற பெயரில் சிலர் இருந்துள்ளமை பெறப்படுகிறது.

எனவே மதுரை நாயக்கரால் சேதுபதிகள் ஆட்சிக்குப் புதியவர்களாக ஏற்படுத்தப்பெறவில்லை. அப்பகுதிப் பெரும்பான்மை மக்களான மறவர் குடியைச் சேர்ந்தவர்களாகவும், அவர்கள் தலைவர்களாகவும், அப்பகுதியில் அதிகாரம் செலுத்திய குறுநிலத் தலைவர்களாகவும் விளங்கிய சேதுபதிகளைத் தேர்ந்தெடுத்தே ஆட்சிப் பொறுப்பை அளித்தனர் என்பது தெரியவருகிறது.

**சேதுபதி அரசு ஏற்படக் காரணம்**

மதுரை நாயக்க மன்னன் முத்துக்கிருஷ்ணப்பன் (1601-1609) காலத்தில் சேதுபதி அரச மரபு நிறுவப்பட்டது. ஏன் இராமநாதபுரம் பகுதியில் சேதுபதிகள் தனியரசர்களாக உருவாக்கப்பட்டனர் என்பதற்கு ஆய்வாளர்கள் கீழ்க்கண்ட பல்வேறு காரணங்களைக் கூறுகின்றனர்.

1) பிற்காலப் பாண்டியர்கள் விசயநகர ஆட்சிக்குட்பட்ட மதுரையிலிருந்து தென்காசிப் பகுதிக்குச் சென்றபின் இராமநாதபுரம் கடற்கரைப் பகுதி கவனிப்பாரற்றுக் கிடந்தது.

2) பாண்டியர்களுக்குக் குதிரைகள் விற்கவந்த இசுலாமிய வணிகர்களும், அவர்களுடன் வந்த பிற வணிகர்களும் கீழக்கரை, காயல் பட்டினம், பெரியபட்டினம் போன்ற பகுதிகளில் நிலையாகத் தங்கிக் கடல் ஆதிக்கம் செலுத்தினர்.

3) தூத்துக்குடி, வைப்பார், புன்னைக்காயல் போன்ற பலபகுதிகளில் குடியேறிய போர்ச்சுக்கீசியர் கடற்கரை மக்களை மதமாற்றம் செய்ததோடு வரியும் வசூலிக்கத் தொடங்கினர். முத்துக் குளிக்கும் தொழிலையும் கைப்பற்ற முனைந்தனர். கடற்கரையில் போர்ச்சுக்கீசியப் பேரரசரின் பெயரில் ஒரு நாட்டையே உருவாக்க முனைந்தனர்.

4) மதுரையிலிருந்து நாயக்க மன்னர்களால் அனுப்பட்ட ஆட்சித் தலைவர்கள் மறவர்சீமையில் தங்கள் அதிகாரத்தைச் செலுத்த முடியாமல் தோல்வியுற்றனர்.

5) இராமநாதபுரம் பகுதியில் சில பாண்டியர் கால்வழியினர், வாண திராயரின் கால்வழியினர், தும்பிச்சி நாயக்கர் போன்ற சில குறு நிலத் தலைவர்கள் மதுரை நாயக்கர் ஆட்சிக்குக் கட்டுப்படாமல் தனி அரசு செலுத்தச் சமயம் வாய்க்கும்போது முற்பட்டனர்.

6) வட இந்தியாவில் உள்ள காசிக்கு நிகரான இராமேசுவரத்திற்கு இந்தியாவெங்கணுமிருந்து யாத்ரீகர்கள் வந்தனர். அவர்கள் இராமநாதபுரம் காட்டுப் பகுதியில் கொள்ளையர்களால் கொள்ளையடிக்கப்பட்டனர். அவர்களில் மதுரை சென்று நாயக்க அரசரிடம் முறையிட்டனர்.

7) நாயக்க மன்னர்களின் குலகுருவானவரும், ஒரு சைவப் பெரியாரும் ஆன அறிஞர் ஒருவர் இராமேசுவரயாத்திரை செய்ய விரும்பினார். அவர் புண்ணிய இராமேசுவர யாத்திரை முடிந்து திரும்பும் வரைக்கும் அவரைப் பத்திரமாகப் பாதுகாத்து அவருக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் மறவர் தலைவன் சேதுபதி செய்து கொடுத்தான் என்பர். அதனால் மகிழ்ந்து மதுரை நாயக்கர் சேதுபதிகட்கு அரசுப் பட்டம் தந்தனர் என்பர்.

இவ்விதமான அரசியல், பொருளாதார, சமய, சமூகக் காரணங்களை முன்னிட்டு மதுரை நாயக்கர் செம்பி நாட்டு மறவர்குலத் தலைவனான போகலூர் சடைக்கத்தேவன் எல்லாத் தகுதியும் பெற்றிருந்ததால் பொருத்தமான அவரைச்சேதுபதி அரசராக நியமித்தனர்.

## செப்பேடுகள் கிடைக்கும் இடமும் அமைப்பும்

இச்செப்பேடுகள் தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள் போன்ற சைவ மடங்களிலும், திருப்பெருந்துறை, அழகர்கோயில், கீழக்கரை, இராமநாதபுரம், திருவாரூர், திருப்புல்லாணி, பெருவயல்போன்ற ஊர்க் கோயில்களிலும், சில கோயில் அர்ச்சகர்களிடமும், பரம்பரையாகச் செப்பேடுகளைக் காத்துவரும் தனியார் வசமும், சென்னை எழும்பூர், அரசு அருங்காட்சியகத்திலும் இராமநாதபுரம் தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத்துறை அருங்காட்சியகத்திலும் கிடைத்தன, சில செப்பேடுகள் பள்ளிவாசல்களிலும் கிடைத்தன. ஊர்ப்பொதுவாகச் சில செப்பேடுகள் உள்ளன.

ஜேம்சு பர்கஸ் அவர்களும், எஸ்.எம். நடேசசாஸ்திரியார் அவர்களும் 1886 இல் வெளியிட்ட Tamil and Sanskrit Inscriptions என்னும் நூலில் 16 செப்பேடுகளும், 1975 இல் வெளியிடப்பெற்ற இராமேசுவரம் குடமுழுக்கு விழா மலரில் 23 செப்பேடுகளும் வெளிவந்துள்ளன. இராமநாதபுரம் டாக்டர் எஸ்.எம்.

கமால் அவர்கள் வெளியிட்ட விடுதலைப் போரில் சேதுபதி மன்னர் என்ற நூலில் முதலில் ஒரு செப்பேடு வெளிவந்துள்ளது. கல்வெட்டு இதழிலும், ஆவணம் இதழிலும் சில செப்பேடுகளைக் கமால் அவர்கள் அவ்வப்போது வெளியிட்டார்கள்.

டாக்டர் எஸ்.எம். கமால் அவர்கள் பல்வேறு இடங்களில் கள ஆய்வுப் பயணத்தை மேற்கொண்டு சேகரித்த அரிய செப்பேடுகளையெல்லாம் தொகுத்து 'சேதுபதி மன்னர் செப்பேடுகள்' என்னும் பெயரில் 1992 திசம்பரில் நூலாக வெளியிட்டார்கள். விரிவான பல்வேறு ஆய்வுக் குறிப்புக்களுடன் வெளிவந்த அந்நூல் இத்தொகுப்பிற்கு மிகவும் பயன்பட்டது. அவர் நூலில் 90 செப்பேடுகள் அச்சாகியுள்ளன.

கோவை இரா.ப. கருணானந்தம், மேலப்பனையூர் கரு. இராசேந்திரன் காரைக்குடி பேராசிரியை நா. வள்ளி ஆகியோர் சில செப்பேடுகளைத் தேடித்தந்தனர்.

பெரும்பான்மையான செப்பேடுகள் நீள்சதுர வடிவிலானவை (20 செ.மீ. × 32 செ.மீ.) சில செப்பேடுகள் அகலம் குறைந்தும் நீளம் அதிகமாகவும் உள்ளன 13 செ.மீ. × 48 செ.மீ.). பெரும்பாலான செப்பேடுகளில் தமிழுடன் கிரந்த எழுத்துக்கள் கலந்துள்ளன.

திருமலை சேதுபதியின் காலத்திற்கு முற்பட்ட செப்பேடுகளில் தமிழிலும் அவருக்குப் பிற்பட்ட செப்பேடுகளில் தெலுங்கிலும் கையெழுத்தும், இறை வணக்கத் தொடரும் பொறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

பல செப்பேடுகளில் அவ்வக்கோயில் மரபுக்கு ஏற்ப அழகிய வரை கோட்டு ஓவியங்கள் வரையப்பெற்றிருப்பதைக் காணலாம்.

**செப்பேடுகளின் பொருள்**

இத் தொகுதியிலுள்ள பல செப்பேடுகள் அரசர்களும், அரசியரும், அலுவலர்களும் அந்தணர்களும், கோயில் அர்ச்சகர்கட்கும் கொடுத்த கொடையாக உள்ளன. இதிலிருந்து அக்காலச் சமய, சமுதாய வாழ்வில் அந்தணர்கள் பெற்றிருந்த இன்றியமையாத இடத்தை அறிகின்றோம்.

இராமேசுவரம் தலத்திற்கு அளித்த கொடை பற்றிய செப்பேடுகள் பெரும்பாலானவை. இவற்றின் மூலம் இராமேசுவரம் கோயிலின் வழிபாடு செய்விப்போர், பணியாளர்கள், நிர்வாகம், நீதி, பூசைமுறை, பழக்க வழக்கங்கள், கொடையாளர்கள், கொடுத்த கொடை, விழாக்கள் பற்றிய பல செய்திகளை விரிவாக அறிகின்றோம்.

அடுத்துத் திருப்பெருந்துறை பற்றிய செப்பேடுகள் சில உள்ளன. திருப்புல்லாணி, திருவாவடுதுறை ஆதீனம், திருப்பனந்தாள் காசிமடம், திருவாரூர், இராமநாதபுரம், உத்தரகோசமங்கை, சிதம்பரம், பெருங்கரை, கீழக்கரை, வளுவாபுரி, அழகர் கோயில், தேவிபட்டணம், குளவயல், பழனிமலை, பெருவயல், சிவகங்கை, இராசசிங்க மங்கலம் போன்ற பல தலங்களிலுள்ள பல்வேறு கோயில்கட்குக் கொடை அளித்த செப்பேடுகள் உள்ளன.

சில செப்பேடுகள் நிலவிற்பனை, மக்கள் குடியேற்றம், காணியாட்சி பெறுதல், கொலை வழக்கு, உரிமைச் சிக்கல்களைத் தீர்த்தல் போன்ற செய்திகளைக் கூறுகின்றன.

மூன்று செப்பேடுகள் அரசர் பெண்களைச் சிறை எடுத்தது தொடர்பானவை. சில செப்பேடுகள் முத்துக் குளித்தல், வணிகம் தொடர்பானவை.

இச் செப்பேடுகளின் மூலம் சேதுபதிகள் காலச் சமயம், சமயத் தலைவர்கள், சமூகம், வணிகம், பொருளாதார நிலை, வேளாண்மை, பிற தொழில்கள், குற்றங்கள், தண்டனை, நாணயமுறை, அளவுமுறை, நீர் நிலைகள் முத்துக் குளித்தல், நாட்டுப் பிரிவுகள், அரசு அலுவலர்கள், சேதுபதிகள் குடும்பம், திருமண உறவுகள், காடழித்து நாடாக்குதல் போன்ற பல்வேறு செய்திகளை நன்கு அறிகின்றோம்.

### நாட்டுப் பிரிவுகள்

சேதுபதிகள் ஆட்சிக் காலத்தில்தான் புதுக்கோட்டை அரசும், சிவகங்கை அரசும் ஏற்பட்டன. சேதுபதிகள் பல ஜமீன்களை ஏற்படுத்தினர். அவைகளில் பெரும்பாலும் தங்கள் உறவினர்களையே ஜமீன்தார்களாக நியமித்தனர். எந்தெந்த ஜமீன்தார்கள் சேதுபதி சபையில் எவ்வாறு மதிக்கப்பட்டனர் என்பதை மெக்கன்சியின் ஏடு ஒன்று விளக்குகிறது.

ஆட்சிப்பகுதிகள் வளநாடு, நாடு, ராச்சியம், சீமை, சேகரம், வட்டகை சேர்வை, பற்று, கூற்றம், தாலுக்கா, மாகாணம், கிராமம் எனப் பலவாறு பிரிக்கப்பட்டன.

அஞ்சுகோட்டை நாடு, அமரடக்கி நாடு, ஏழுகோட்டை நாடு, கீழ்ச் செம்பி நாடு, செம்பி நாடு, செவ்விருக்கை நாடு, நாலுகோட்டை நாடு, திருச்சி நாடு, தென்னாலை நாடு, தேர்போகி நாடு, புனப்பிரளய நாடு, முத்தத்து நாடு, முத்து நாடு, தெட்சண ராச்சியம், அஞ்சிரண்டு சீமை, அறந்தாங்கி சீமை இராமநாதபுரம் சீமை, உடையாத் தேவர் சீமை, குமுதசீமை, சிவகங்கைசீமை,

சூரைக்குடிச் சீமை, சேதுபதி சீமை, திருப்புத்தூர்ச் சீமை, திருவாடானைச் சீமை, மேல்கரை குமுதச் சீமை, மேலை மகாணிச் சீமை, வெள்ளாம்பற்றுச் சீமை, மதுரை சேகரம், உருவாட்டி வட்டகை, ஓரூர் வட்டகை, அறுகாதங் குடிச் சேர்வை, தோப்போகி நாட்டுச் சேர்வை, முத்தத்து நாட்டுச் சேர்வை, அஞ்சுகோட்டைப்பத்து, அமரடக்கிப்பற்று, சுமாரணிபத்து, துகவூர்க்கூற்றம், காமங்கோட்டைத் தாலுக்கா, புதூர் மாகாணம், கொள்காணிக்கிராமம், கோயில் கிராமம், சீவிதக் கிராமம், சேனைக்காணிக் கிராமம், பண்ணைக் கிராமம், பிரமதேயக் கிராமம் என்பன செப்பேட்டில் காணும் சில நாட்டுப் பிரிவுகளாகும். இவற்றில் சில தனி ஊர்களாகும்.

பேரூர் ஒன்றைச் சேர்த்துப் புதிதாக அமையும் ஊர் உள்க்கிடை என்று கூறப்பட்டது.

**அரசு அலுவலர்கள்**

சேதுபதிகள் ஆட்சியில் பல அரசு அலுவலர்கள் இருந்துள்ளனர். அவர்கள் பெயர்கள் செப்பேடுகளில் குறிப்பிடப்பெறுகின்றன.

அட்டவணை, அம்பலக்காரர், ஆயத்துறை, இராசயம், கணக்குப்பிள்ளை, களஞ்சியம், காரியக்காரர், காரியத்துக்குக் கர்த்தர், காவல், காவல்குடி, கீதார ஊழியம், கொட்டியம், சத்திர மணியக்காரர், சுங்கம், செய்தி அட்டவணை, சேருவைகாரர், தண்டல்காரர், தளவாய் (தளகர்த்தம்), தானாபதிக்கம், நடுபாடிகாவல், பாளையப்பட்டுச் சேருவை, பிரதாணி, பொக்கிசம், மணியகாரர், மத்யஸ்தர், வழிமுறைகாரர், வாசல் ஊழியம் போன்ற பல்வேறு அரசு ஊழியர்கள் பெயர்களை இச் செப்பேடு நமக்குத் தருகின்றன. அரசு அலுவலர்கள் சிலரும் ஆலயங்கட்குக் கொடை வழங்கியுள்ளனர்.

**நீதி**

சேதுப்திகளின் ஆட்சிக் காலத்தில் குற்றங்களை விசாரித்து நீதி செலுத்தும் முறை மிகச் சிறப்பாக நடைபெற்றது.

ஒருமுறை இராமேசுவரத்திலுள்ள இடைச்சுமண தீர்த்த உரிமை தொடர்பாகக் குருக்கள் சபையாருக்கும், ஆரிய மகாசனங்களுக்கும் வழக்கு எழுந்த போது முத்துக்குமார விசைய ரகுநாத சேதுபதி (1735-1747) தளகர்த்தம், பிரதாணி, பெரியகட்டளை இராமநாத பண்டாரம், சத்திர மணியக்காரன் உட்பட்ட அதிகாரிகள் முன்னிலையில் உள்ளூர்ப் பொதுமக்கள் சார்பாக 18 உறுப்பினர்களை நியமித்து விசாரிக்குமாறு செய்தார். புரோகிதர், பிராமணர், புல

வர், கடல்துறை உப்பள அலுவலர், பல்வேறு வணிகர், இசுலாமியர், பணிக்கர் நாடார் முதலிய பொதுமக்கள் அக்குழுவில் இடம்பெற்றிருந்தனர். சாதி வேறுபாடு ஓங்கியிருந்த அக்காலத்தில் உயர்ந்த அந்தணர் வழக்கைப் பொதுமக்கள் விசாரித்தது சிறப்பானதோர் செயலாகும். இது மக்களாட்சி முறைக்கு அடிகோலியதாகும்.

வாய்மொழி, முறிநறுக்கு (ஓலை), செய்தி அட்டவணை, செப்பேடு முன்தீர்ப்பு, அலுபல உரிமை, முன் வழக்கம் இவைகளை யெல்லாம் ஆராய்ந்து 316 ஆண்டுகட்கு முற்பட்ட செப்பேட்டின்படித் தீர்ப்பளிக்கப்பட்டது என்ற விபரத்தை ஒரு செப்பேடு தெளிவாக்குகிறது.

இராமேசுவரம் கோயில் தொடர்பான எல்லா வழக்குகளையும் பெரிய கட்டளை இராமநாத பண்டாரம் எனப்படும் கோயில் நிர்வாகியே விசாரித்துத் தண்டனை அளிக்கலாம் என ஒரு செப்பேடு கூறப்பட்டுள்ளது.

'அவரவர் செய்த குற்றங்களைப் பராபரிச்சு தெண்டினை பண்ணி விலங்கிடுகின்ற பேரை விலங்கிடுவித்து அபராதம் வாங்குகின்ற பேரை அபராதம் வாங்குவித்து' என்ற தொடரால் அவைகளை அறிகின்றோம்.

இராமேசுவரம் ஊருக்குள் கோயில் தொடர்பான குற்றங்கள் நடைபெற்றால் கோயில் பெரிய கட்டளை ஊர் மணியக்காரனிடம் சொல்லித் தண்டிக்க வேண்டும். மணியக்காரன் தண்டனை கொடுக்காவிட்டால் அரசனிடம் முறையிடலாம்.

கள்ளரைக் காவல் பண்ணவேண்டும் எனில் உள்ளூர் கொல்லன், தச்சன் இவர்கள் துணை செய்ய வேண்டும்.

திருட்டுப் போனால் குற்றவாளிகளைத் தண்டிப்பதுடன் திருட்டுப் பொருள் திரும்பப் பெற்று உரியவருக்கு அளிக்கப்பட்டது.

கொலை வழக்குகூட ஒரே நாளில் நடைபெற்று அன்றே தீர்ப்பளிக்கப் பட்டுள்ளது. பெரும்பாலும் 'பலிக்குப்பலி' என்ற நடைமுறையே கையாளப் பட்டது.

வழக்கு விசாரிக்கும் நீதிபதிகள் மத்யஸ்தர் அல்லது நடு என்று அழைக்கப்பட்டனர்.

வழக்கு 'விபகாரம்' என்றும், வழக்குரைத்தல் 'கூரையேறுதல்' என்றும், விசாரணை 'தேறுதல்' என்றும் குறிக்கப்பட்டுள்ளன.

**சமயப் பொறுமை**

சேதுபதி அரசர்கள் சைவ சமயத்தையே தங்கள் சமயமாகக் கொண்டிருந்தாலும் பிற சமயங்கட்கும் ஆதரவு நல்கியுள்ளனர்.

திருப்புல்லாணி தெய்வச்சிலைப்பெருமாள், மதுரை மாவட்ட அழகர் கோயில்[4] இராமநாதபுரம் கோதண்டராமர் கோயில் ஆகியவற்றிற்குப் பல கொடைகள் அளித்துள்ளனர். இராமேசுவரத்திலேயே இராமருக்கும் அவருடைய பரிவார தெய்வங்களுக்குப் பல கொடைகள் அளித்துள்ளார்.

முத்து விசைய வடுகநாதத் தேவர் அனுமந்தக்குடி சமணப்பள்ளிக்குக் கொடை அளித்துள்ளார். ஒரு செப்பேட்டில் எல்லை கூறும்போது அங்கு சமணப்பள்ளி இருந்தமை கூறப்படுகிறது.

முத்துப்பேட்டையில் இருந்த கிறித்துவத் தேவாலயத்திற்கு முத்துராமலிங்க சேதுபதி கொடை அளித்துள்ளார்.

இராமேசுவரம் ஆபில் காபில் பள்ளிவாசல், ஏர்வாடி சுல்தான் சையத் இபுறாகீம் வலி தர்கா' இராமநாதபுரம் ஈசாபள்ளிவாசல் போன்ற பள்ளிவாசல் கட்குச் சேதுபதி மன்னர்கள் கொடையளித்துள்ளனர்.

பிற செப்பேடுகளிலும் எல்லை கூறும்போது சேகு இபுறாகீம் மரைக்காயர் தோட்டம், குஞ்சானோடை பள்ளிவாசல் தோட்டம், பள்ளிவாசலுக்கு மேற்கு எனவரும் தொடர்களால் சேதுபதி சீமையில் இசுலாம் பெற்றிருந்த செல்வாக்குப் புலப்படும்.

சேதுபதிகள் காவல்குடிகளாகப் பல இசுலாமியர்களை நியமித்திருந்தனர். பல இசுலாமியப் புலவர்கள் சேதுபதிகளின் அவைக்களத்தை அலங்கரித்துள்ளனர்.

**நீர்நிலைகள்**

இயற்கையாகவே சேதுபதிகளின் ஆட்சிப்பகுதி மழை மிகக் குறைவான வறட்சியான பாலை போன்ற பகுதியும், காடுகளும் உள்ளவைகளாகும். காட்டினை அழித்து விளைநிலம் ஆக்கிய அவர்கள் பல நீர்நிலைகளை ஏற்படுத்தினர். வைகை ஆறு, குண்டாறு போன்றவற்றில் புது அணைகளையும் குளங்களையும் கட்டினர். 'வைகை வளநாடன்' என்ற பட்டப்பெயர் அதன் பொருட்டே அவர்கட்கு வந்ததாகும்.

நீர்நிலைகளின் பல்வேறு பெயர்கள், பாசனம் தொடர்பான சொற்கள் செப்பேடுகளின் பல பயின்று வருகின்றன. நீர் நிலைகள் இடங்களுக்குத்

தக்கவாறு ஏற்படுத்தப் பெற்றன. கீழ்வரும் நீர்நிலைகள் தொடர்பான பெயர் கள் மூலம் அவற்றின் மிகுதியையும் சிறப்பையும் அறியலாம்.

அவை அஞ்சாம்மடை, அணை, ஆத்துக்கால், ஆறு, இரகுநாதக்காவேரி, உள் வாய், ஊத்து, ஊத்துக்கால், ஊருணி, ஏந்தல், ஏரி, ஓடை, கரை, கலிங்கு, கவாத் தலை, கால், கிணறு, குட்டம் குளக்கால், குளம், கோர்வை, கூபம், கொம்பு, சிறகு. நீர்கோர்வை, நீர்ப்பிடி, நீர்வாங்கி, நீராணிக்கம், படுகை, புதுக்கண் மாய், புறவாய், மடை, மடைப்போக்கு, மறிச்சுக்கட்டி, மறுகால், மறுகால் தலை, வாய், வாய்த்தலை, வாவி என்பனவாம்.

**வேளாண்மைப் பணிகள்**

நிலங்கள் அளந்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டிருந்தன. நிலங்களின் எல் லைகளில் கற்கள் நடப்பட்டிருந்தன. வைணவத் தொடர்பான நிலங்களுக்குத் திருவாழிக்கல் அல்லது சக்கரக்கல்லும், சைவ சமயம் தொடர்பான நிலங்களுக் குச் சூலக்கல்லும், பிற நிலங்களுக்கு வாமனக்கல் அல்லது குத்துக்கல் நடப் பட்டிருந்தன. எல்லையைக் குறிக்க எல்கை என்ற சொல்லுடன் மால், பொளி, தாவு என்ற சொற்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. விதை அளவினை வைத்தே (விரையடி) பெரும்பாலும் நிலத்தின் பரப்பளவு நிர்ணயிக்கப்பட்டது.

'காடுவெட்டிப் புன்செய்' 'கண்மாயும் ஊரணியும் வெட்டி' 'புதுக்கண்மாய் 'குண்டாற்றை அடைத்து' என்பன போன்ற தொடர்களால் விளைநிலம் உரு வாக்கும் முயற்சிகள் நடைபெற்றதை அறிகிறோம். பயிர் பார்த்து விளைந்த நிலத்திற்கு மட்டுமே வரி அல்லது மகமை வசூல் செய்யப்பெற்றது. பஞ்சந் தாங்கி வயல் போல நிலங்கட்குத் தனித்தனிப் பெயர்களும் வழங்கின.

நிலங்களின் பல்வேறு தன்மைகளுக்கு ஏற்பப் பலவாறு பெயர்கள் வழங்கப் பெற்றன.

ஆயக்கட்டு, கரிசல், காடு, காணி, குறுக்கம், செய், செவ்வல், தட்டு, தரவை, தரிசு, தாக்கு. திட்டு, திடல், தோட்டம், தோப்பு, நத்தம், நன்செய் பண்ணை, பரப்பு, பாழ், பிரவிடை, புரவு, புன்செய், பொட்டல், வயக்கல், வயல் போன்ற பல்வேறு நிலம் தொடர்பான பெயர்களைச் சேதுபதி செப் பேடுகளில் காணுகிறோம்.

**வணிகமும் பொருளாதார நிலையும்**

சேதுபதி சீமையில் விற்பனையாகும் பொருள்களை அளக்கப்பட்டன, எண் ணப்பட்டன. நிறுக்கப்பட்டன என மூன்று வகையாகப் பிரித்திருந்தனர். வெளி யூர் வியாபாரிகளைவிட உள்ளூர் வியாபாரிகட்குச் சற்று வரி குறைவாகவே

இருந்தது. வணிக நிறுவனங்கள் பேட்டை, கடை சில்லறைக்கடை எனப் பட்டன. தொழிற்சாலைகள் பட்டடை எனப்பட்டது. வியாபாரிகட்கு உதவி செய்யத் தரகர் இருந்தனர்.

சேதுபதி நாட்டில் கடற்கரைகள் அதிகம் இருப்பதால் கடல் வழிக மும் சிறப்பாக நடைபெற்றது. தோணி, வளைதோணி, பாறு, படகு என்பவை கடல் வாணிகத்திற்குப் பயன்படுத்தப்பெற்றன.

கொள்வினை, விற்பனை, வியாபாரம், ஏற்றுமதி, இறக்குமதி என வாணிகம் பலவகையாக நடைபெற்றன. வணிகப் பொருள்கள் நடை, பொதி, சுமை, கண்டி என்னும் அளவைகளில் வணிகத்துக்கு வந்தன. அளவு கருவி கட்கு இராசமுத்திரை இடம் பெற்றிருந்தமையால் அவை 'முத்திரைப்படி' என்பவை போல அழைக்கப்பெற்றன.

வணிகர்கள் கொடுக்கும் வரியும், மகமையும் கொள்வினை ஏறினாலும் இறங்கினாலும் ஒரே அளவையாக இருக்க வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டது.

அரசனுக்குக் கொடுக்கவேண்டிய வரி அரண்மனைத் திருவை எனப்பட்டது. அரண்மனையிலும் நாட்டின் பல பகுதிகளிலும் பொன்னையும், பொருளையும் சேமிக்கக் களஞ்சியங்கள் இருந்தன.

பொன், பணம், வீரராயன் பொன், வீரராயன் பணம், சுளி மின்னல்பொன் சுளிப்பொன், மதுரைப் பொன், திருக்கோகர்ணம் பொன், கம்பட்டம், கம்பட்ட வரி போன்றவை நாணயப் புழக்கம் தொடர்பான சொற்களாகும்.

சாராயக்குடிகள். இடைகுடி, வாணியர் குடி போன்றோரும் 18 சாதியின ரும் தம் வாணிகத்தில் ஈடுபட்டிருந்தனர். உப்பெடுக்கும் தொழில் மிகச்சிறந்த முறையில் நடைபெற்றது. உப்பளங்கள் பல இடங்களில் இருந்தன.

முத்துக் குளித்தலும், சங்கு சேகரித்தலும் மிகச் சிறப்பாக நடைபெற்றது சேதுபதி அரசர்கட்கு மிகவும் வருவாய் தரும் தொழில்களில் இவை முக்கிய மானதாகும். முத்து எடுக்குமிடம் 'சலாபத்துறை' எனப்பட்டது.

நெசவுத் தொழிலும் அதிகமாக நடைபெற்றது. துலுக்கர், சோனகர், பட்டு நூல்காரர், ஈழம்புஞ்சைக்காரர், வள்ளுவன், பறையன், புனையேரி சாணான் ஆகியோர் நெசவுத் தொழிலில் ஈடுபட்டனர். 'நெசவன்' என்ற புதுச்சொல்லைச் செப்பேடொன்றில் காணுகின்றோம்.

பேட்டையில் விற்கப்பட்ட சில பொருள்கள், உப்பு முதல் கற்பூரம் வரை. சாராயம், நெல், அரிசி, பிற தானியம், பாக்கு, மிளகு, சவளி, காயி, பலசரக்கு செம்பு, துத்தநாகம், பட்டுப்புடவை, பன்னீர், கிராம்பு, சாதிக்காயி, பத்திரி பட்டுநூல், கருப்புக்கட்டி, பனாட்டு, புளி, கருப்புக் கொட்டான், கொட்டப் பாக்கு, தேங்காய் என்பன.

**வரிகள்**

விளைபொருளுக்கும், விற்பனையாகும் சரக்குகளுக்கும். தொழில்கட்கும் பல்வேறு வரிகள் விதிக்கப்பட்டன. அவை மூலமாகச் சேதுபதி நாட்டில் நடந்து வந்த வேளாண்மை, வணிகம், தொழில் பற்றிய செய்திகளை அறிந்து கொள்ளுகின்றோம்.

செப்பேடுகளில் கீழ்வரும் வரிகள் குறிக்கப்பெற்றுள்ளன.

அள்ளுத்தீருவை, ஆயக்கட்டுவரி, ஆயத்துறை, ஆயம், ஆள் அமஞ்சி இடங்கைவரி, இடைவரி, ஈழம் புஞ்சைவரி, உம்பளவரி, உலுப்பை, உளக்குவரி ஊழியம், எழுத்தாணிவரி, கடமை, கத்திக்கடமை, கம்பட்டவரி, கல்வரி களஞ்சியவரி, குளவரி காசெடுப்பு, காணிக்கை, காணிக்கைவரி, கிராமவரி கீதாரம், குடிவாரக்கணக்கு கூரைவரி, கையெடுப்பு, கொட்டிய எருது, கொடிக்கால் வரி, கொத்துக்கணக்கு வரி, கொல்லர் வரி, கோசாலை வரி சத்தவரி, சம்மாதம், சாணார்வரி, சாதிவரி, சுங்கம், சுரபிக்கத்தாவரி, சுராபிப் பசு, சுவந்திரம், செக்கு ஆயம், செக்கு வரி, செம்பு விலை, சொர்ணாதாயம், சோடி வரி, தச்சர்வரி, தட்டுவரி, திருகைவரி, திருவை, நன்மாட்டுவரி, நன்மாடு, நிலவரி, பட்டணசாமி வலங்கைவரி, பட்டயவரி, பலபட்டடைவரி, பள்வரி பனங்கடமை, பாசிவரி, புகையிலைவரி, புஞ்சைவரி, பெட்டிவரி, பேர்வாரிக்கம், மகமை, மடத்துவரி, மனைவரி, மானோன்புக்கிடாய்வரி, முள்ளுவரி, வண்டிக் கிடாவரி, வண்டிமாடு வலங்கைவரி, வெள்ளைக்குடைவரி, வேண்டுகோள்வரி வைக்கல்கட்டுவரி என்பன.

**வளைதடி**

வீரம் மிக்க மறவர்கள் தங்கள் குலச்சின்னமாகவும், குலத்தின் சிறப்புக் கருவியாகவும் 'வளரி' எனப்படும் வளைதடியைக் கொண்டிருந்தனர். இவ்வளரி 'குணில்' என்றும் 'வளைகுணில்' என்றும் 'வளைதடி' என்றும் குறிக்கப்பெறும். இக்கருவி பிறைச்சந்திரன் போன்ற வடிவினை உடையது. தாக்கியபின் எய்தவரிடமே திரும்பிவரக்கூடிய அதிசயத் தன்மையை உடையது.

இச் சிறப்புமிக்க ஆயுதம் இராமன் கையில் இருந்த சக்கரத்தில் பாதிப் பகுதி என்றும், இராமபெருமானால் சேதுபதிகட்கு அளிக்கப்பட்டது என்றும் கூறுவர். இவ்வளரியாகிய வளைதடியைப் போரிடவும், வேட்டைக்கும் சேதுபதி யரசர்தம் வீரர்கள் பயன்படுத்தினர். இவ்வளரியின் பல மாதிரிகள் இராமநாத புரத்தில் உள்ள தமிழ்நாடு அரசு தொல்பொருள் துறை அருங்காட்சியகத்தில் உள்ளன. 'மறவர்கள் தருவது வளரிப்பிரசாதம்' என்ற பழமொழியும் ஒன்றுண்டு.

மூவேந்தர்கள் தங்கள் சின்னமான புலி வில் மீன் சின்னங்களை மேருவிற் பொறித்துத் தம் வீரத்தை நிலைநாட்டினர். அதுபோல் சேதுபதி அரசர்கள் தம்முடைய வளரியை மேருவில் பொறித்தனர் என்று செப்பேடுகள் கூறுகின்றன.

'குன்றனைய மேருவில் குன்றா வளைகுணில் பொறித்தவன்'

'குன்றனைய மேருவில் குன்றா வளரி பொறித்தவன்'

என்பன செப்பேட்டுத் தொடர்கள்.

சேதுபதிகள்தம் வளைதடிகள்தாம் பாண்டியர் கயல் சின்னங்களைக் காப்பதாகப் பழம்பாடல் ஒன்றுண்டு.

'படிகாக்கும் தனிக்கவிகை பார்வேந்தர் தங்கள்மணி
முடிகாக்கும் செங்கோன்மை முறைகாக்கும் படிபாதிக்
குடிகாக்கும் வழுதிதனிக் கொடியையடல் கெருண்டா
வடமேரில் கயல்காக்கும் மறவர்கையில் வளைதடியே'

இப் பாடலால் பாண்டியர் நாளிலேயே மறவர்படையிருந்தது என்பது புலப்படுகிறது,

**செப்பேடு எழுதுதல்**

ஆணைகளை முதலில் ஓலையில் எழுதி அதன் பிறகே செப்பேட்டில் பொறித்தனர். பல செப்பேடுகளில் ஓலையில் எழுதியது யார்? செப்பேட்டில் எழுத்துக்களைப் பொறித்தது யார் என்று மிகவும் தெளிவாகக் கூறப்படுகிறது. ஓலையில் எழுதியவர்கள் பெரும்பாலும் இராயசம் அல்லது கணக்குப்பிள்ளை களாக இருக்கின்றனர். செப்பேட்டில் பொறித்தவர்கள் ஆசாரிகள் அல்லது சிற்பிகளாக இருக்கின்றனர்.

பல செப்பேடுகளில் தல மரபுக்கு ஏற்ப அழகிய வரைகோட்டு ஓவியங்கள் உள்ளன. சில செப்பேடுகளில் கோடிட்டு எழுதப்பட்டுள்ளன. பெரும்பான்மையான செப்பேடுகளில் இருபுறமும் எழுதப்பட்டுள்ளன.

1. 'உடையினா பிள்ளை புத்ரன் ராயசம் முத்து ஆதிநாராயணபிள்ளை தாளப்பத்திரப்படிக்கு விசுவநாத ஆசாரி புத்திரன் முத்தப்பாசாரி எழுத்து'

2. இராயசம் தர்மராசப்பிள்ளை சவாதுப்படிக்கு உத்தரகோசமங்கை வீரனாசாரி மகன் அதிவீரனாசாரி கையெளுத்து'

3. ராயசம் முத்தரிதுபிள்ளைமகன் ராமலிங்கம் எழுத்துப்படிக்கு தாமிர சாசனம் தீர்த்தது ஈசுரமூர்த்தி ஆசாரி மகள் குழந்தைவேல்'

4, 'பொக்கிசக் கணக்கு ஆதிநாராயணப்பிள்ளை மகன் தளவாத்தான் கையெழுத்துப்படிக்கு முத்துப்பத்தர் மகன் வேலாயுதம் கையெழுத்து'

என்ற தொடர்கள் எழுதிய இருசாராரைக் குறிக்கும்வண்ணம் அமைந்துள்ளன. ஒரு செப்பேட்டில் 'பட்டயம் எழுதிய ஆசாரிக்கு பொன் 10 பணம்' என எழுதப்பட்டுள்ளது.

செப்பேட்டைப் பொறித்த ஒருவர் 'இந்தப் பட்டயத்துக்கு எழுத்துக் குற்றம் சொல்க்குற்றம் பொருள்வாசகப்பிழை வரி இடருதல் யாதொரு பிளையும் பெரியோர்கள் பொறுத்துக் கொள்ளவும்' என வேண்டியுள்ளார்.

இச்செப்பேடுகளைத் தொகுப்பதற்குத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் அவர்களும், நிர்வாகத்தினரும் அனுமதியளித்து வேண்டிய உதவிகள் செய்தனர்.

இதனை எட்டாம் உலகத்தமிழ் மாநாட்டின்போது வெளியிட அனுமதி நல்கி முகவுரையும் வழங்கிய துணைவேந்தர் ஔவை நடராசன் அவர்கட்கு என் பணிவார்ந்த நன்றி உரியதாகுக.

15—12—1994 புலவர். செ. இராசு

# நன்றியுரை

சேதுபதி செப்பேடுகள் தொகுக்கும் பணிகள் நடைபெறும் போது பல்வேறு வகைகளில் உதவிகள் புரிந்து ஆய்வுப் பணியை ஊக்குவித்து அறிவுரை வழங்கிய கல்வெட்டியல் துறைப் பேராசிரியர் முனைவர் **எ. சுப்பராயலு** அவர்கட்கும், முதுநிலை விரிவுரையாளர் முனைவர் **கா. ராஜன்** அவர்கட்கும்,

'சேதுபதி செப்பேடுகள்' என்னும் இந்நூலை நுண்ணாய்வு செய்த அண்ணாமலைப் பல்கலைக் கழக பேராசிரியர் **எம். எஸ். கோவிந்தசாமி** அவர்கட்கும்,

தம்மிடம் உள்ள செப்பேடுகளை வழங்கிய திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள் ஆதீனத் தலைவர்கட்கும்,

தங்கள் தொகுப்புச் செப்பேடுகளைப் படி எடுக்க அனுமதி அளித்த மத்தியத் தொல்லியல் துறையின் மைசூர் கல்வெட்டுப் பிரிவின் இயக்குநர், முதன்மைக் கல்வெட்டு அலுவலர் அவர்கட்கும்,

இராமநாதபுரம், தமிழக அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை அருங்காட்சியகச் செப்பேடுகளைப் படி எடுத்துக் கொள்ள அனுமதி அளித்த தொல்பொருள்துறை இயக்குநர் **நடன. காசிநாதன்** அவர்கட்கும்,

கோவை அலுவலர், **இரா. ப. கருணானந்தம்** அவர்கட்கும்,

சென்னை, எழும்பூர் அரசு அருங்காட்சியகம் இயக்குநர் அவர்கட்கும்,

பல செப்பேடுகளை முன்பு அளித்ததுடன் தம் நூலில் உள்ள புதிய செப்பேடுகளையும் பயன்படுத்திக்கொள்ள அனுமதி அளித்த இராமநாதபுரம் **டாக்டர் எஸ். எம். கமால்** அவர்கட்கும்*,

மேலப்பனையூர் **கரு. இராசேந்திரன்**, காரைக்குடி பேராசிரியை திருமதி **நா. வள்ளி** அவர்கட்கும், குடவாயில் **பாலசுப்பிரமணியம்** அவர்கட்கும்,

சொல்லடைவு தயாரிப்பதில் உதவிகள் புரிந்த அரிய கையெழுத்துச் சுவடித்துறை முதுநிலை விரிவுரையாளர் முனைவர் **ம. சா. அறிவுடைநம்பி**, கல்வெட்டியல் துறை ஆய்வாளர் **கே. ஆர். சங்கரன்** ஆகியோருக்கும் என் மனமார்ந்த நன்றி உரியதாகுக.

தங்கள் படங்களை அச்சிடுவதற்கு அனுமதி வழங்கிப் படங்களையும் அளித்த பாண்டிச்சேரி **பிரெஞ்சு இந்திய இயல் கழகத்தாருக்கும்,** நாணயங்கள் படம் அளித்த தஞ்சை அளக்குடி **சீதாராமன்** அவர்கட்கும்,

குறுகிய காலத்தில் இந்நூலை விரைந்து சிறப்பாக அச்சிட்ட **சிதம்பரம் அழகா** அச்சகத்தாருக்கும் நன்றி உரியதாகுக.

---

*இராமநாதபுரம், டாக்டர் எஸ். எம். கமால் அவர்களின் சேதுபதி மன்னர் செப்பேடுகள் என்னும் நூலிலிருந்து அவர்கள் ஆய்வில் கண்டுபிடித்த 10, 15, 21, 25, 30, 39, 44, 45, 46 48, 52, 54, 56, 57, 61, 62, 68, 72, 73, 77, 78, 80, 84, 86, 88 எண்ணுள்ள செப்பேடுகள் இந்நூலில் எடுத்தாளப் பட்டுள்ளன.

## சேதுபதி அரசர் பரம்பரை

| | | |
|---|---|---|
| 1. | முதலாவது சடைக்கத்தேவர் என்ற உடையான் சேதுபதி | கி.பி. 1605—1621 |
| 2. | கூத்தன் சேதுபதி | 1622—1635 |
| 3. | இரண்டாவது சடைக்கன் என்ற தளவாய் சேதுபதி | 1635 - 1646 |
| 4. | இரகுநாத சேதுபதி என்ற திருமலை சேதுபதி | 1647—1672 |
| 5. | இராஜ சூர்ய சேதுபதி | 1672 |
| 6. | அதன ரகுநாத சேதுபதி | 1673 |
| 7. | இரண்டாவது ரகுநாத சேதுபதி என்ற கிழவன் சேதுபதி | 1674 – 1710 |
| 8. | திருவுடையாத் தேவர் என்ற விசைய ரகுநாத சேதுபதி | 1711—1725 |
| 9. | தண்ட.த்தேவர் என்ற சுந்தரேசுவர ரகுநாத சேதுபதி | 1726 |
| 10. | பவானி சங்கரன் | 1726 – 1729 |
| 11. | கட்டயத்தேவர் என்ற குமாரமுத்து விசைய ரகுநாத சேதுபதி | 1730 – 1735 |
| 12. | சிவகுமார முத்து விஜயத்தேவர் என்ற முத்துக்குமார ரகுநாத சேதுபதி | 1736 – 1748 |
| 13. | இராக்கத் தேவர் | 1748 – 1749 |
| 14. | செல்லத்தேவர் என்ற செல்லமுத்து விஜய ரகுநாத சேதுபதி | 1749 - 1762 |
| 15. | முத்து ராமலிங்க சேதுபதி | 1763 – 1772<br>1782 - 1795 |

## இராமநாதபுரம் ஜமீன் *

| | | |
|---|---|---|
| 1. | ராணி மங்களேசுவரி நாச்சியார் | கி பி. 1803—1812 |
| 2. | அண்ணாசாமி என்ற முத்து விசைய ரகுநாத சேதுபதி | 1812—1820 |
| 3. | ராமசாமி சேதுபதி | 1829—1830 |
| 4. | துரைராஜ நாச்சியார் | 1830—1845 |
| 5. | பர்வதவர்த்தினி நாச்சியார் | 1846—1862 |
| 6. | முத்துராமலிங்க சேதுபதி | 1862—1873 |
| 7. | ராஜா பாஸ்கர சேதுபதி | 1889—1903 |
| 8. | ராஜராஜேசுவரர் என்ற முத்துராமலிங்க சேதுபதி | 1903—1928 |
| 9. | ராஜா சண்முக ராஜேசுவர நாகநாத சேதுபதி | 1928—1967 |
| 10. | ராஜா ராமநாத சேதுபதி | 1967—1979 |
| 11. | ராணி இந்திராதேவி | 1979 முதல் |

*

1820–1828 நீதிமன்ற ஆட்சி
1871-1873 ஆங்கிலேயர் ஆட்சி
1873-1889 நீதிமன்ற ஆட்சி

# பொருளடக்கம்


முகவுரை

பதிப்புரை

1. மூம்முகாத்தன் செப்பேடு ... 1
2. கருங்குளச் செப்பேடு ... 5
3. இராமேசுவரம் செப்பேடு ... 8
4. இராமேசுவரம் செப்பேடு ... 12
5. மன்னார் சலாபச் செப்பேடு ... 19
6. இராமேசுவரம் செப்பேடு ... 23
7. இராமேசுவரம் செப்பேடு ... 28
8. மருதங்க நல்லூர்ச் செப்பேடு ... 37
9. சேதுகால் செப்பேடு ... 42
10. இராமநாதபுரம் செப்பேடு ... 46
11. முகிழ்த்தகம் செப்பேடு ... 48
12. இராமேசுவரம் செப்பேடு ... 52
13. கணக்கன்வயல் செப்பேடு ... 58
14. இராமேசுவரம் செப்பேடு ... 64
15. இராமேசுவரம் செப்பேடு ... 68
16, அல்லிக்குளம் செப்பேடு ... 72
17. ஆனையேரிவயல் செப்பேடு ... 79
18. திருப்பெருந்துறைச் செப்பேடு ... 84
19. நாட்டிசேரி செப்பேடு ... 89
20. ஆனாந்தூர்ச் செப்பேடு ... 96

| | | |
|---|---|---|
| 21, | பெருங்காட்டுச் செப்பேடு | ... 104 |
| 22. | சென்னீலக்குடி செப்பேடு | ... 109 |
| 23. | கொத்தங்குளம் செப்பேடு | ... 113 |
| 24. | தச்சமல்லிச் செப்பேடு | ... 118 |
| 25. | புளியங்குடிச் செப்பேடு | ... 125 |
| 26. | இராமேசுவரம் செப்பேடு | ... 128 |
| 27. | திருக்காணூர்ச் செப்பேடு | ... 131 |
| 28. | புல்லுக்குடிச் செப்பேடு | .... 136 |
| 29. | உத்திரகோசமங்கைச் செப்பேடு | ... 142 |
| 30. | கீழக்கரைச் செப்பேடு | ... 146 |
| 31. | சேமனூர்ச் செப்பேடு | ... 152 |
| 32. | புதுவைக்கோட்டைச் செப்பேடு | ... 158 |
| 33. | சுந்தரபாண்டியன் பட்டணம் செப்பேடு | ... 162 |
| 34 | புதுக்கோட்டைச் செப்பேடு | ... 166 |
| 35, | இளமனூர்ச் செப்பேடு | ... 171 |
| 36. | இராசசிங்கமங்கலம் செப்பேடு | ... 177 |
| 37. | இராமானுசப்பேரிச் செப்பேடு | ... 182 |
| 38. | பலிசாதனச் செப்பேடு | ... 188 |
| 39. | நல்லுக்குறிச்சி செப்பேடு | .... 196 |
| 40. | திருப்பொற்கோட்டைச் செப்பேடு | ... 201 |
| 41. | மேலைச்சீத்தைச் செப்பேடு | ... 206 |
| 42. | இளமனூர்ச் செப்பேடு | ... 209 |
| 43. | திருப்புல்லாணிச் செப்பேடு | ... 214 |
| 44. | பட்டுக்கோட்டைச் செப்பேடு | ... 220 |

| | | |
|---|---|---|
| 45. | கடம்பங்குடிச் செப்பேடு | ... 224 |
| 46. | களத்தூர்ச் செப்பேடு | ... 227 |
| 47. | இராமநாதபுரம் செப்பேடு | ... 233 |
| 48. | கோட்டக்குடிச் செப்பேடு | ... 238 |
| 49. | ஆய்க்குடிச் செப்பேடு | ... 243 |
| 50. | அத்தியூத்துச் செப்பேடு | ... 248 |
| 51. | மன்னார் சலாபச் செப்பேடு | ... 252 |
| 52. | விளத்தூர்ச் செப்பேடு | ... 256 |
| 53. | தேவிப்பட்டினச் செப்பேடு | ... 267 |
| 54. | சாக்காங்குடிச் செப்பேடு | ... 270 |
| 55. | காக்குடிச் செப்பேடு | ... 278 |
| 56. | பால்குளம் செப்பேடு | ... 282 |
| 57. | அன்னவாசல் செப்பேடு | ... 286 |
| 58. | தேர்போகிச் செப்பேடு | ... 290 |
| 59. | மன்னார்சலாபச் செப்பேடு | ... 296 |
| 60. | பனையங்கால் செப்பேடு | ... 301 |
| 61. | கொத்தங்குடிச் செப்பேடு | ... 308 |
| 62. | கீழைக்காட்டுச் செப்பேடு | ... 313 |
| 63. | காராம்பல் செப்பேடு | ... 318 |
| 64. | கள்ளிக்கோட்டைச் செப்பேடு | ... 323 |
| 65. | பொசுக்குடிச் செப்பேடு | ... 327 |
| 66. | செறந்தைச் செப்பேடு | ... 331 |
| 67. | திருப்பொற்கோட்டைச் செப்பேடு | ... 336 |
| 68. | குளத்தூர்ச் செப்பேடு | ... 343 |

| | | |
|---|---|---|
| 69. | கொள்ளனூர்ச் செப்பேடு | ... 348 |
| 70. | ஈகா பள்ளிவாசல் செப்பேடு | ... 354 |
| 71. | முதலூர்ச் செப்பேடு | ... 358 |
| 72. | கதயனேந்தல் செப்பேடு | ... 365 |
| 73. | பெருவயல் செப்பேடு | .... 370 |
| 74. | பாவையேந்தல் செப்பேடு | .... 371 |
| 75. | ஏர்வாடிச் செப்பேடு | ... 380 |
| 76. | இராமேசுவரம் செப்பேடு | ... 396 |
| 77. | இராமேசுவரம் செப்பேடு | ... 396 |
| 78. | நாட்டுசேரிச் செப்பேடு | ... 406 |
| 79. | இராசசிங்கமங்கலம் செப்பேடு | ... 412 |
| 80. | சாருவூரனேந்தல் செப்பேடு | ... 415 |
| 81. | வேப்பங்குள செப்பேடு | ... 421 |
| 82. | கருக்காத்திச் செப்பேடு | ... 425 |
| 83. | சிக்கில் செப்பேடு | ... 429 |
| 84. | அரியக்குடிச் செப்பேடு | ... 434 |
| 85. | பாலக்குளம் செப்பேடு | ... 438 |
| 86. | இராமேசுவரம் செப்பேடு | ... 444 |
| 87. | நிலமழகியமங்களம் செப்பேடு | ... 448 |
| 88. | அனிச்சகுடிச் செப்பேடு | ... 452 |
| 89. | இராமேசுவரம் செப்பேடு | ... 457 |
| 90. | அனுமநேரிச் செப்பேடு | ... 463 |
| 91. | தெஞ்சியேந்தல் செப்பேடு | ... 469 |
| 92. | விலானூர்ச் செப்பேடு | ... 473 |

| | | |
|---|---|---|
| 93. | வள்ளைக்குளம் செப்பேடு | ... 479 |
| 94. | சொக்காணைச் செப்பேடு | ... 484 |
| 95. | கழுநீர்மங்கலம் செப்பேடு | ... 488 |
| 96. | பெயராமாத்தேவன் ஏந்தல் செப்பேடு | ... 498 |
| 97. | குளப்பட்டிச் செப்பேடு | ... 493 |
| 98. | செய்யானேந்தல் ஓலைப்பட்டயம் | ... 502 |
| 99. | செப்பேடு கண்டான் செப்பேடு | ... 506 |
| 100. | புவனேசுவரிபுரம் செப்பேடு | .... 511 |
| 101. | நெடியமாணிக்கம் செப்பேடு | ... 515 |
| 102. | வீரலட்சுமி நாச்சியார் செப்பேடு | ... 521 |
| 103. | பெரியமடைச் செப்பேடு | ... 523 |
| 104. | துவாக்குடிச் செப்பேடு | ... 525 |
| 105. | ஆலங்குளச் செப்பேடு | ... 529 |
| 106. | வடமாத்தூர்ச் செப்பேடு | ... 531 |
| 107. | பெருவாய்க்கோட்டைச் செப்பேடு | ... 538 |

# 1

# மும்முகாத்தன் செப்பேடு

| | | |
|---|---|---|
| இருக்கும் இடம் | : | அரசு அருங்காட்சியகம், எழும்பூர், சென்னை |
| அரசர் | : | தளவாய் சேதுபதி காத்த தேவர் |
| காலம் | : | 19—11—1606 |
| அளவு | : | 25.5 செ.மீ. × 19 செ.மீ. |

**அமைப்பும் செய்தியும் :** செப்பேட்டில்[1] 1521 என எழுதி இறுதி 1-9ஆக மாற்றப்பெற்றுள்ளது. பண்டைய எழுத்தில் 1-9 ஆகியவற்றிற்கு அதிக வேறுபாடு இல்லை.

தளவாய் சேதுபதி காத்த தேவர் இராமேசுவரம் இராமநாதசுவாமி, பருவதவர்த்தனி அம்மன் ஆகியோருக்கு அபிடேகம், நெய்வேத்தியம், பூசை ஆகியவற்றுக்காக இராமேசுவரம் கோயில் நிர்வாகி இராமநாத பண்டாரம் அவர்கள் வசம் மும்முகாத்தன், பாண்டியூர், தியாகவஞ்சேரி, வெங்கட்டங்குறிச்சி, கொந்தை என ஐந்து ஊர்களைக் கொடையாக அளித்ததை இச்செப்பேடு கூறுகிறது. இவ்வூர்கள் இராமநாதபுரம்

---

1. *Tamil and Sanskrit Inscriptions No.3, pp.66-68;*
   *Sevell's Lists, Vol. II, No. 30, p.5;*
   *ARE, A. 11 of 1911.*

மாவட்டம் பரமக்குடி வட்டத்தில் உள்ளன. முதல் மூன்று ஊர்கள் வைகையாற்றின் வடகரை யிலும், இறுதி இரண்டு ஊர்கள் வைகை யாற்றின் தென் கரையிலும் உள்ளன.

இவ்வூர்களின் நிலங்கள், வரி உள்ளிட்ட வருவாய் எல்லாவற் றையும் சேதுபதி அரசர் இராமேசுவரம் கோயிலுக்கு அளித்தார்.

செப்பேட்டின் இறுதிப் பகுதியில் தளவாய் சேதுபதி கையொப்ப மிட்டுள்ளார். இச்செப்பேட்டின் காலம் சடைக்கத் தேவர் என்ற உடை யான் சேதுபதி காலமாகும். அவருக்கு (மதுரை நாயக்கர் ஆட்சிக்கு உட்பட்ட) தளவாய் சேதுபதி என்று பெயர் இருந்திருக்கலாம் என இச்செப்பேட்டின் மூலம் அறிகின்றோம். 1605 ஆம் ஆண்டு சேதுபதி அரசர்கள் நியமிக்கப்பெற்றவுடன் அடுத்த ஆண்டு அளிக்கப் பெற்ற இச்செப்பேடு சேதுபதி அரசர்களின் முதல் செப்பேடு என்னும் பெருமையைப் பெறுகிறது.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 சொஸ்திஸ்ரீ சாலிவாகன சகாத்தம் 1529 யிதின் மே
2 ல் செல்லாநின்ற பராபவஷு கார்த்திகைமீ 20உ கிஷ்ண ப
3 ச்சம் அமாவாசையும் அனுச நட்சத்திரமும் சுபயோக சுபகரண
4 மும் பெற்ற புண்ணிய காலத்தில் தேவை நகராதிபன் சேதுமூல
5 ரெட்சா துரந்தரன் இராமனாதசுவாமி க்காரியதுரந்தரன் சி
6 வபூசா துரந்தரன் பரராச கெச சிங்கம் சொரிமுத்து வன்னிய
7 ன் மகாமண்டலேசுரன் மூவராயிர கண்டன் கண்டனாடு கொண்டு சி
8 காண்டனாடு குடாதான் பட்டமானங் காத்தான் துட்டராயிர கண்ட
9 ன் புவனேக வீரகஞ்சுகன் வீரவள நாடன் வேதியர்கள் கா
10 வலன் அரசராவண ராமன் பரதள விபாடன் அந்தம்பிர கண்ட
11 ன் சுவாமிதுரோகியள் பஞ்சவர்ண ராவுத்தராயன் வைகை
12 வளநாடன் கொட்டமடக்கி யிவுளிபாவடி மிதித்தேருவா
13 ர் கண்டன் வீரவெம்பறமாலையான் இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம்

14 பகைமன்னர் சிங்கம் துரைராயன் மதப்புலி அடைக்கலங் கா
15 த்தான் தாலிக்கிவேலி சத்திராதியன் முண்டன் வன்னியராட்டம் த
16 விள்த்தான் மேவலர்கள் வணங்குமிரு தாளினான் வீரமகா
17 கெம்பீரன் கீர்த்திபிரதாபன் ஆரியமானங் காத்தான் தொண்
18 டியன்துறை காவலன் துர்க ரேபந்தன் அனும கேதநன் குடைக்
19 கி கர்ணன் பரிக்கி நகுலன் பரதனாடகப் பிரவீணன் கறுணா க
20 டாச்சன் திலதனுதல் மடமாதர் மடலெளுது வருசுமுகன் வி
21 சையலெட்சுமி காந்தன் கலைதெரியும் விற்பனன் காமினி கந்தப்
22 பன் சத்தியபாசா அரிச்சந்திரன் சங்கீத சாயித்திய வித்தியா வி
23 நோதன் வீரதண்டை சேமத்தலை விளங்குமிரு தாளினான் சகல சா
24 ம்பிராச்சிய லெட்சுமி வாசன் செயதுங்கராய வங்கிஷாதிப
25 னான துகலூர்க் கூத்தத்தில் காத்தூரான குலோத்துங்க சோள நல்
26 லூர் கீள்பால் விரையாத கண்டனில் இருக்கும் ராச ஸ்ரீ தளவா
27 ய் சேதுபதி காத்ததேவரவர்கள் இராமனாதசுவாமி பறுவதவ
28 ர்த்தனி அம்மன் அபிஷேக னெய்வேதனம் பூசைக்கி இராமனாத ப
29 ண்டாரமவர்கள் பாரிசம் தானபூர்வமாக கட்டளையிட்டது
30 மும்முகாத்தன் பாண்டியூர் தியாகவஞ்சேரி வெங்கட்டங்
31 குறிச்சி கொந்தை அஞ்சி கிறாமமும் மேல்படி நாங்கெல்கை
32 க்குள்பட்ட நஞ்சை புஞ்சை திட்டு திடல் ஏந்தல் பிரவி
33 ட குட்டம் குளம் பள்வரி பணவரி சகல சமுதாயமும் ச

## இரண்டாம் பக்கம்

34 றுவ மானியமாக இராமனாதசுவாமிக்கு உபையமாக
35 தாம்புரசாதன பட்டையம் குடுத்தோம் இந்தகிராமம் ச
36 ந்திராதித்தாள் சந்ததிப்பிரவேசம் உள்ளவரைக்கும் ஆ
37 ண்டு அனுபவித்துக்கொள்ளக் கடவாராகவும் இந்த தர்
38 மம் யாதாமொருத்தர் அபிமானிச்சு பரிபாலனம் பண்ணி
39 க் கொண்டவர்கள் கோடி கெங்கா ஸ்நாநம் பண்ணின
40 சுகிர்தமும் கோடி தனுக்கோடி தீர்த்தமாடின சுகிர்

41 தமும் கோடி கன்னிகாதான பலனும் கோடி பூதானம் பண்
42 ணின பலனும் கோடி அக்கிரகார பிரதிட்டை பண்ணின ப
43 லனும் அடைவாராகவும் இதற்கு ஆராகிலும் அகிதம் ப
44 ண்ணின பேர்கள் கெங்கைக்கரையிலே காராம்பசு
45 வ கொண்ண தோசத்திலேயும் விறுமகத்தி பண்ணின
46 தோசத்திலேயும் மாதாபிதாவை கொண்ணதோசத்தி
47 லேயும் போவாராகவும் உ தளவாய் சேதுபதி ஊ

# 2

# கருங்குளச் செப்பேடு

இருக்கும் இடம் : அரசு அருங்காட்சியகம், எழும்பூர், சென்னை

அரசர் : தளவாய் சேதுபதி காத்த தேவர்

காலம் : 13–7–1607

அளவு : 21.5. செ.மீ. × 16.5. செ.மீ.

**அமைப்பும் செய்தியும்** : தளவாய் சேதுபதி அரசர் அவர்கள் இராமேசுவரம் இராமநாதசுவாமி பர்வதவர்த்தனி அம்மன் கோயிலில் உடையவர் கட்டளைப் பூசைக்காக 13–7–1607 அன்று அப்பனூர் நாட்டில் கருங்குளம் உள்ளிட்ட எட்டு ஏந்தல்களைக் கொடையாக அளித்ததை இச்செப்பேடு கூறுகிறது.[1]

கொடையாக அளிக்கப்பட்ட ஏந்தல்கள்: 1. கருங்குளம் 2. கள்ளிக்குளம், 3. கருசங்குளம், 4. வேலங்குளம், 5. பொட்டக்குளம், 6. வெடந்தை கண்ணன் ஏந்தல், 7. பொதுவணமூத்தான் ஏந்தல் 8. சிறுகுளம் என்பன வாகும். இவற்றுட்குட்பட்ட அனைத்து நீர்நிலைகளும், நிலங்களும் எல்லா வரிகளும் கொடையாக அளிக்கப்பட்டன.

---

1. *Tamil and Sanskrit Inscriptions, No. 4, pp. 68-70; Sewell's Lists, Vol II, No. 32, p.6; ARE, A. 2 of 1911.*

# செப்பேடு

## முதல் பக்கம்

1 சொத்திஸ்ரீ சாலிவாகன சகாத்தம் 1530 யி
2 தின்மேல் செல்லாநின்ற பிலவங்க ஸ்ரீ ஆடி மீம் 10உ
3 கிஷ்ணபச்சம் அமாவாசையும் பூச நட்சத்திரமும் சுபயோ
4 க சுபகரணம்பெற்ற புண்ணியகாலத்தில் தேவை நகரா
5 திபன் சேதுமூல ரெட்சா துரந்தரன் இராமனாதசுவாமி க
6 ாரியதுரந்தரன் சிவபூசா துரந்தரன் பரராச கெச சிங்கம்
7 சொரிமுத்து வன்னியன் மகாமண்டலேசுவரன் மூவரா
8 ய கண்டன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு குடாதான்
9 பட்டமானங் காத்தான் துஷ்டராயிர கண்டன் புவனேக
10 வீரகஞ்சுகன் வீரவளநாடன் வேதியர்கள் காவல
11 ன் அரச ராவண ராமன் பரதள விபாடன் அந்தம்பிர க
12 ண்டன் சுவாமிதுரோகியள் பஞ்சவர்ண ராவுத்தராய
13 ன் வைகை வளனாடன் கொட்டமடக்கி யிவுளிபாவடி மிதித்
14 தேருவார் கண்டன் வீரவெம்பாமாலையான் இளஞ்சிங்
15 கம் தளஞ்சிங்கம் பகைமன்னர் சிங்கம் துரைராயன் மத
16 ப்புலி அடைக்கலம்ங்காத்தான் தாலிக்கு வேலி சத்தி
17 ராதியள் முண்டன் வன்னியராட்டம் தவிள்த்தான் மே
18 வலர் வணங்குமிரு தாளினான் வீரமகா கெம்பீரன்
19 கீர்த்திபிரதாபன் ஆரிய மானங் காத்தான் தொண்
20 டியன்துறை காவலன் துர்க ரேவந்தன் அனும கேத
21 னன் குடைக்கி கறுணன் பரிக்கி நகுலன் பரதனாட
22 கப் பிரவீணன் கறுணா கடாச்சன் திலதனுதல் மட
23 மாதர் மடலெளுத வருஞ் சுமுகன் விசைய லெட்சு
24 மீகாந்தன் கலைதெரியும் விர்ப்பனன் காமினீ கந்த
25 ப்பன் சத்தியபாசா அரிச்சந்திரன் சங்கீதசாகியித்
26 திய வித்தியா வினோதன் வீரதண்டை சேமத்தலை வி

27 ளங்குமிரு தாளினான் சகல சாம்பிராச்சிய லெட்சுமி
28 வாசன் சேதுங்கராய வங்கிஷாதிபனான துகவூர் கூ
29 த்தத்தில் காத்தூரான குலோத்துங்க சோளநல்லூர்
30 கீள்பால் விரையாதகண்டனில் இருக்கும் ராசஸ்ரீ

## இரண்டாம் பக்கம்

31 தளவாய் சேதுபதி காத்ததேவர் அவர்கள் ராம
32 னாதசுவாமி பருவதவர்த்தனி அம்மன் உடையவர் க
33 ட்டளை பூசைக்கி இராமனாத பண்டாரமவர்கள் பாரி
34 சம் சேதுதனுக்கோடியில் தானபூறுவமாக கட்
35 டளை யிட்டது அப்பனூர் னாட்டில் கருங்குளம் கள்ளிக்
36 குளம் கருசங்குளம் வேலங்குளம் பொட்டக்குளம் வெ
37 டந்தைகண்ணன் பொதுவணமுத்தான் சிறுகுளம் ஆ
38 க எட்டுயேந்தலும் மேபடி ஏந்தல்கள் பரினா
39 ங்கெல்கைகுள்பட்ட குட்டம் குளம் நஞ்சை புஞ்சை
40 திட்டு திடல் வரிசைவரி பனவரி சொர்னாதாய்ம் ச
41 கலமும் இராமனாதசுவாமி உடையவர் கட்டளை பூ
42 சக்கி தானபூறுவமாக சறுவமானியமாக தாம்பிர
43 சாதனபட்டையம் குடுத்தோம் இந்த கிராமம் சந்திரா
44 தித்தாள் சந்ததிப்பிரவேசம் உள்ளவரைக்கும் ஆண்டு
45 அனுபவிச்சுக்கொள்ளக் கடவராகவும் இந்த தர்ம
46 ம் யாதாமொருத்தர் அபிமானிச்சு பரிபாலனம் பண்ணி
47 க்கொண்டவர்கள் கோடி கெங்காஸ்நானம் பண்ணி
48 ன பலனும் கோடி தனுக்கோடி தீர்த்தம் ஆடின சு
49 கிர்தமும் கோடி கன்னிகாதான பலனும் கோடி அக்கிர
50 கார பிரதிட்டைபண்ணின பலமும் அடைவாராக
51 வும் இதற்கு ஆராகிலும் அகிதம் பண்ணினபேர்கள்
52 கெங்கைக் கரையிலே காராம்பசுவை கொன்ற
53 தோஷத்திலேயும் விறுமகத்தி பண்ணின தோ
54 சத்திலேயும் மாதாபிதாவை கொன்ற தோசத்தி
55 லேயும் போவாராகவும் உ தளவாய் சேதுபதி உ

# 3

# இராமேசுவரம் செப்பேடு

இருக்கும் இடம் : இராமேசுவரம் இரகுநாதக் குருக்கள்

அரசர் : திருமலை உடையான் சேதுபதி காத்த தேவர்

காலம் : 18—7—1607

அளவு : 21.5 செ.மீ. × 16.5 செ.மீ.

**அமைப்பும் செய்தியும் :** இச்செப்பேட்டின் நகல் கிடைக்கவில்லை. இச்செப்பேடு வெளியாகிய இடத்தின் மூலம் இங்கு வெளியிடப் படுகிறது. [1]

முதல் சேதுபதி அரசராகப் பொறுப்பேற்ற உடையான் சேதுபதி இராமேசுவரம் வழிபாட்டுக்குச் சென்றார். அப்போது இராமேசுவரம் பஞ்ச தேசத்து ஆரிய மகாசனங்கள் சேதுபதி அரசருக்குச் செங்கோல் கொடுத்தனர்.

செங்கோல் கொடுத்த பஞ்ச தேசத்து ஆரிய மகாசனங்கள் என்னும் வடநாட்டு அந்தணர்களுக்குச் சேதுபதி அரசர் கொடுத்த நிலதானத்தை இச்செப்பேடு விவரிக்கிறது. ஆந்திரம், கர்நாடகம், கேரளம், மராட்டம், கொங்கணம் என்ற ஐந்து பகுதியிலிருந்து வந்த வர்கள் ஆதலால் பஞ்ச தேசத்தார் எனப்பட்டனர்.

---

1. *Tamil and Sanskrit Inscriptions, No. 2, p. 65-66.*

அவர்களுக்குக் கொடுக்கப் பெற்ற நிலம் இராமேசுவரம் இராமநாதசுவாமி கோயிலை ஒட்டி இருந்தது. அந்நிலப்பகுதி இராமேசுவரம் கோயில் சன்னதி அக்கினி தீர்த்தத்தைக் கிழக்கு எல்லையாகவும், வட சமுத்திரத்தை வடக்கு எல்லையாகவும், தென் சமுத்திரத்தைத் தெற்கு எல்லையாகவும், தாசரதி நாதர் கோயிலை மேற்கு எல்லையாகவும் பெற்றிருந்தது.

இந்த எல்லைகட்குட்பட்ட அனைத்து நிலம், வருவாய் ஆகியவை களையும் சேதுபதி அரசர் கொடையாக அளித்தார்.

கற்பகமடல் வரைந்தெழுதப்பட்டது என்றும், அதனை எழுதியவர் இராமநாதபுரம் மேலாசாரி மகன் மாயாண்டியாசாரி என்றும் கூறப் பட்டுள்ளது. இராமநாதசுவாமியை தாசரதிநாதர் கோயில் என்றும், செப்பேட்டைக் கற்பக மடல் என்றும் கூறப்பட்டுள்ளது நயமான பகுதிகள் ஆகும்.

இறுதியில் தானத்தைக் காப்பதன் புண்ணியம் கூறும் இரண்டு வடமொழிச் சுலோகங்கள் கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளன.

# செப்பேடு

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாத்தம் 1529 க்குமேல் செல்லாநின்ற
பிலவங்க நாம ஸம்வச்சரத்தில்

2 தெட்சணாயநத்தில் கிரீஷ்ம ருதுவில் ஆடிமாசத்தில் சுக்கிலபட்சத்தில்
சதுர்த்தியும் அசுவதி நட்சத்தி

3 றமும் சுபயோக சுபகரணமும் கூடின சுபதினத்தில் தேவை
நகறாதிபன் சேதுமூல துறந்தறன்

4 ஸ்ரீராமநாதசுவாமி காறிய துறந்தறன் சிவபூஜா துறந்தரன்
பறராஜசேகரன் மஹாமண்டலேசுவறன்

5 அறியராயிற தளவிபாடன் பாசைக்குத் தப்புவராத கண்டன்
மூவராய கண்டன் கண்டநாடு கொண்டு கொ

6 ண்டநாடு குடாதான் பட்டமானங் காத்தான் மூவராய கண்டன்
வீரவள நாடன் வேதியர் காவலன்

7 சாடிக்காரர் கண்டன் சாமித் துறோகியள் முண்டன்
கொட்டமடக்கிய வீற

8 வெண்பாமாலையான் ஆரியமானங் காத்தான் சகலசாம்பிராச்சிய
வாசன் சேது காவலன் வங்குஷாதிப

9 னாந துகவூற்க் கூத்தத்தில்க் காத்தூறான குலோத்துங்க சோள
நல்லூற் கீள்பால் விறையாத கண்ட

10 னில் இருக்கும் ஸ்ரீ திருமலை உடையான் சேதுபதி காத்த
தேவறவர்கள் தானசாஸனம் கொடுத்தபடி

11 நாம் றாமீசுவறத்து சேதுஸ்நானத்துக்கு வந்தமுன்னுக்கு றாமீசுவறம்
ஸ்ரீ றாமநாதசுவாமி கோவில் ஸ்தா

12 னீகம் பூஜை பறிசாறகம் செய்துகொண்டிருக்கிற} பஞ்சதேசத்து
ஆரிய மஹாஜனங்கள் நமக்கு

13 செங்கோல் கொடுத்தனுப்பிவிக்கிறமுன்னுக்கு நாம் பூமிதானம்
பண்ணிக் கொடுத்தது ராமீசுவறம் கோவில்

14 சன்னதி அக்கினி தீர்த்தத்துக்கு மேற்கு வடசமுத்திறக் கறைக்கு
தெற்கு தென்சமுத்திரத்துக்கு வடக்கு மே

15 ல்பாற்கெல்கை தாசறதினாதற் கோவிலுக்கு கிளக்கு இன்னாங்
கெல்கைக்கு உள்ளிட்ட பூமியும் அதிலு

16 ள்ள புன்செயும் மாவடை மறவடை திட்டு திடல் மேல்னோக்கிய
மறமும் கீள்னோக்கிய கிணரும் நீரும் பா

17 சியும் குடிபடை சகலசமுதாயப் பிறாப்பித்தியும் நிதி னிக்ஷேப ஜெல
தரு பாஷாண ஆக்ஷேண்ணிய

18 ஆகாம்மிய சித்த சாத்தியமென்று சொல்லப்பட்ட அஷ்ட்ட போக
சுவாமியங்களும் சகிறண்ணியோதக

19 தாறா பூற்வமாக தானசாஸனம் கட்டளை இட்டபடியினாலே
சந்திறாதித்திய சந்ததிப்பிறவேசம்

20 புத்திற பௌத்திற பாறம்பறையாக ஸற்வமாணியமாக ஆண்டனுப
வித்துக் கொள்ளும்படி கட்டளையிட்

21 டோம் இந்த தானசாசனப் பட்டயம் கற்பகமடல்
வறைந்தெளுதினது ராமநாதபுரம் மேலாசாறி

22 மகன் மாயாண் டியாசாரி கய்யெளுத்து ஸ்வதத்தாத்வி குணம்
புண்யம் பரதத்தாநு பாலநம் பர

23 தத்தாப ஹாரேண ஸ்வதத்தம் நிஷ்பலம் பவேது: தாந பாலந
யோர்மத்யே தாநா ஸ்ரயோது பாலநம்

24 தாநாத் ஸ்வர்க்க மவாப்நோதி பாலநாத் அச்சுதம் பதம்: உ
ஸ்ரீ ராமநாத சுவாமி சகாயம்

# 4

# இராமேசுவரம் செப்பேடு

இருக்கும் இடம் : தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத் துறை அருங்காட்சியகம், இராமநாதபுரம்.

அரசர் : தளவாய் சேதுபதி காத்த தேவர்

காலம் : 22—1—1610

அளவு : 27.5 செ.மீ. × 12.5 செ.மீ.

**அமைப்பும் செய்தியும்** : அழகிய துளையில்லாத கைப்பிடியில் உ குறி இடப்பட்டுள்ளது.[1] செப்பேட்டின் இறுதியில் இரண்டாம் பக்கத்தில் உ தளவாய் சேதுபதி உ என்று அரசர் பெயர் எழுதப் பட்டுள்ளது. இச்செப்பேட்டில் கிரந்த எழுத்துக்கள் பயன்பாடு மிகக் குறைவாகவே காணப்படுகிறது. காலக் குறிப்பும் பஞ்சாங்கக் குறிப்புக்களும் பொருந்திவராமல் உள்ளது.

இச்செப்பேடு வழக்கமான கொடைச் செப்பேடாக இல்லாமல் இராமேசுவரம் நிருவாகம் பற்றிய சில ஆணைகளை, குறிப்பாகக் குற்றம் செய்தவர்களைத் தண்டித்தல் பற்றிய செய்திகளைக் கூறுவ தாகவே உள்ளது. பட்டம் ஏற்ற சேதுபதி அரசர் இராமேசுவரம் கோயிலில் கீழே குறித்தபடி நிருவாகம் நடைபெற வேண்டு மென்று ஆணை பிறப்பித்துள்ளார்.

---

1. *ARE, A 34 of 1947.*

1. இராமநாத சுவாமிக்குக் கொடை அளித்துக் கட்டளை நடை பெறும் கிராமங்களில் உள்ள மணியகாரர், கணக்குப்பிள்ளை மார், குடியானவர்கள், கோயிலிலே சஞ்சாரம் பண்ணுகிற தொழிலாளியள், பரிசுபட்டர் முதலானவர்கள், கோயில் தோப்புக்காரர், நந்தவனக்காரர் ஆகியோர் குற்றங்கள் செய் தால் குற்றங்களை விசாரித்துக் குற்றங்களுக்கு ஏற்றவாறு தண்டனை விதித்து, விலங்கு இடுகின்ற குற்றங்களுக்கு விலங்கிடவும், அபராதம் விதிக்கின்ற குற்றங்களுக்கு அபராதம் விதிக்கவும், அபராதம் வசூல் செய்யவும் இராமேசுவரம் கோயில் காரியக்காரர் இராமநாத பண்டாரத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது.

2. இராமேசுவரம் கோயிலுக்குரிய நந்தவனத்திலும், வாழைத் தோப்பு, தென்னந்தோப்பு, இலுப்பைத் தோப்பு, பனந்தோப்பு போன்ற கோயிலுக்குரிய தோப்புக்களிலும் கோயில் தொடர்பு இல்லாத பிற மனிதர்கள் சென்று அங்கு திருடினால் இராமேசு வரம் கோயில் காரியக்காரர் இராமநாத பண்டாரமே அந்தத் தக் கள்ளர்களுக்குத் தண்டனை விதித்து அபராதம் வாங்கிக் கொள்ளலாம்.

3. பண்டாரத்தின் வகைப் பிராமணப் பிள்ளைகள், தவசிப்பிள்ளைகள், அவர்களைச் சேர்ந்த சனங்கள் பாம்பன் துறையைத் தோணி மூலம் கடந்து செல்ல வேண்டுமென்றால் இராமேசுவரம் காரியக்காரர் இராமநாதபண்டாரம் அளிக்கும் சீட்டின்படியே தோணிவிட வேண்டும்.

4. ஏதாவது ஒரு திருடரைக் காவல்பண்ண வேண்டுமென்று இராமேசுவரம் காரியக்காரர் இராமநாத பண்டாரம் கூறினால் கொல்லன், தச்சன் ஆகியோர் அதன்படி செய்ய வேண்டும்.

5. கோயிலைச் சேர்ந்த பசுமாடு, எருமைமாடு, மடத்தைச்சேர்ந்த பசுமாடு, எருமைமாடு ஆகியவைகளை யாராவது திருடர்கள் திருட்டு பிரட்டுச் செய்தால் இராமேசுவரம் காரியக்காரர் இராமநாத பண்டாரமே தண்டித்து அபராதம் வாங்கிக் கொள்ளலாம்.

6. பாம்பனாற்று வழியாகவும், கல்லடிசாலை, அக்கினி தீர்த்தக் கரை, புளியடித்துறை, புங்கடித் துறை போன்ற துறைமுக வழியாகவும் கோயிலுக்குரிய மாடுகளை யாராவது தோணியி லேற்றிக் கொண்டு சென்றால் இராமேசுவரம் காரியக்காரர் இராமநாதபண்டாரம் தலத்து மணியக்காரனுக்குச் சொல்லி மணியக்காரன் மூலம் அவர்களைத் தண்டிக்க வேண்டும்.

மணியக்காரன் தண்டிக்காமல் விட்டுவிட்டால் சேதுபதி அரசருக்குத் தெரிவிக்க வேண்டும். சேதுபதி அரசர் தண்டனை விதித்துக் கோயில் உடைமைகளையும் திருப்பி வாங்கித்தருவார்.

சேதுபதியரசர் காலத்தில் 17ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் சேதுநாட்டுக் கோயில் நிருவாகம், நீதிமுறை, தண்டனை முதலிய வைகள் எவ்வாறு நடைபெற்றன என்பதை அறிய இச்செப்பேடு மிகச்சிறந்த சான்றாக அமைந்துள்ளது.

கோயிலுக்குள்ளும், கோயிலைச் சார்ந்த பிற இடங்களிலும், மடத்திலும் நிருவாகப் பொறுப்புடன் நீதிப் பொறுப்பையும் இராமேசு வரம் காரியக்காரர்களே கவனித்துக் கொண்டனர்.

ஊருக்குள் நடைபெறும் சிறு வழக்குகளில் மணியக்காரனே விசாரித்துத் தண்டனையளிக்கவும் அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது.

கோயில் தொடர்புடைய குற்றங்கள் கோயில் தவிர ஊருக்குள் பிற இடங்களில் நடந்தால் கோயில் காரியக்காரரும், தலத்து மணியக் காரரும் இணைந்து செயலாற்ற வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

இராமேசுவரம் கோயில் தொடர்புடைய மக்கள் யாராக இருந்தா லும் கோயில் காரியக்காரர் சீட்டின்படியே (அனுமதி) பாம்பன் துறையில் தோணியில் ஏற உரிமையுடையவர்கள் என்பதன்மூலம் கோயில் பணியாளர்கள் வெளியேறுவது தடுக்கப்பட்டுள்ளது தெரிகிறது.

கோயில் பணியாளர்களை மட்டும் அல்லாமல் கோயிலில் திருடும்பிறரையும் தண்டிக்கக் கோயில் காரியக்காரர்கள் உரிமை பெற்றிருந்தனர்.

கோயிலில் நடைபெறும் சில குற்றங்களுக்கேற்பச் சிலருக்கு விலங்கிட வேண்டுமென்றால் அப்பணியைக் கொல்லர், தச்சர் ஆகியோர் செய்துள்ளனர். அதற்கென்று நிலையான பணியாளர்கள் இல்லை.

கோயில் கரியக்காரர் கூறும் எல்லாப் புகார்களையும் தலத்து மணியக்காரன் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பதில்லை. இதன் மூலம் தலத்து மணியக்காரனின் தனித்தன்மையையும் உள்ளூரில் அவனுக்கிருக்கும் அதிகாரப் பொறுப்பையும் அறிகின்றோம்.

கோயில் பொருள்களைத் திருடினால் தண்டனையாக அபராதம் விதிப்பதுமட்டுமல்லாமல் கோயிலில் திருட்டுப்போன பொருளும் கோயிலுக்குத் திருப்பி வாங்கித் தரப்பட்டுள்ளது.

இராமேசுவரத்திற்குச் செல்ல அக்காலத்தில் பயன்படுத்திய 5 வழிகள் இச்செப்பேட்டில் கூறப்பட்டுள்ளன. (1) பாம்பனாற்று வழி (2) கல்லடி சாலை (3) அக்கினி தீர்த்தக்கரை (4) புளி யடித்துறை (5) புங்கடித்துறை.

கோயில் பணியாளர்கள் 'தொழிலாளியள்' என்ற சொல்லால் அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலியவாகன சகாத்தம் 1531 இதின் மேற் செல்லாநின்ற ரத்தாக்கிஷ வருடம் தைய் பு 25உ சரத்

2 ரிதுவில் ஆசிவிச மாதத்தில் கிட்டினபட்சத்தில் அம்மாவாசையும் கெற்பபிறவாசமும் சுவாதி நட்செத்திரமும்

3 சுபயோக சுபகரணமும் பெத்த புண்ணிய காலத்தில் தேவை நகராதிபன் சேதுமூல லெட்ஷா துரந்தரன் இராமநாத சுவ

4 ாமி காரிய துரந்தரன் சிவபூசா துரந்தரன் பரராச சேகரன் பரராச கெச சிங்கம் சொரிமுத்து வன்னியன் மகாமண்ட

5 லேசுரன் மூவராயர் கண்டன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு குடாதான் பட்டமானங் காத்தான் துட்டரா

6 யிர கண்டன் புவனேக வீரன் வீரகஞ்சுகன் வீரவளநாடன் வேதியர் காவலன் அரச ராவண ராமன் பரதள விபாட

7 னந்தம்பர கண்டன் சுவாமித் துரோகியள் பஞ்சவன்ன ராயராவுத்தன் வய்கை வளநாடன் கொட்ட

8 மடக்கி இவிளி பாவடி மிதித்தேறுவார் கண்டன் வீரவெண்பா
மாலை இளஞ்சிங்கம்ந் தளைஞ்சிங்கம் ப

9 கைமன்னர் சிங்கம் துரைராயன் மதப்புலி அடைக்கலங் காத்தான்
தாலிக்கு வேலி சத்துராதியள் மிண்ட

10 ன் வன்னிய ராட்டந் தவிள்த்தான் மேவலர்கள் வணங்குமிரு
தாழினான் வீரமகா கெம்பீரன் கீற்றிப் பிறதாபன்

11 ஆரிய மானங்காத்தான் தொண்டியந்துறை காவலன் துர்க ரேபந்தன்
அனும கேதனன் குடைக்குக் கறீன்ன

12 ன் பரிக்கு நகுலன் பரதநாடகப் பிறவீணன் கடாட்சன்
திலதநுதல் மடமாதர் மடலெளுத வரு சுமு

13 கண் விசையலெட்சுமி காந்தன் கலைதெரியும் விற்ப்பன்னன்
காமினி கந்தப்பன் சத்தியபாஷா அரிச்சந்

14 திரன் சங்கீத சாயுத்திய வித்தியா வினோதன் வீர தண்டை
சேமத்தலை விழங்குமிரு தாழினா

15 ன் சகல சாம்பிறாச்சிய லெட்சிமிவாசன் சேதுங்கராய வங்கிஷா
திபனான துகவூர் கூத்தத்தி

16 தில் காத்தூரான குலோத்துங்க சோழ நல்லூர் கிள்பால்
விரையாத கண்டனிலிருக்கும் ஸ்ரீராசஸ்ரீ தழவாய் சேதுப

17 தி காத்த தேவர் அவர்கள் இராமநாத பண்டாரம் அவர்களுக்குத்
தாம்புரசாதன பட்டையங் கொடுத்தபடி இராம

18 னாத சுவாமிக்கு நடக்கிற கிறாமத்திலேயிருந்து மணியகாறர்
கணக்கப் பிள்ளைமார் குடியானவர்களையும்

19 கோவிலிலே சஞ்சாரம் பண்ணுகிற தொழிலாளியளையும் பரிசு
பட்டர் முதலான பேர்களையும் கோவில் தோப்

20 புக்காறர் நத்தவானக்காரர் இவர்கள் முதலான பேர்களையும்
அவரவர் செய்த குற்றா குற்றங்களைப் பராபரிச்சுத்

21 தெண்டினை பண்ணி விலங்கிலிடுகிறபேரை விலங்கிலிட்டுக் குற்றா
குற்றத்துக்குத் தக்கது இராமனாத பண்டாரமே

22 அவராதம் வாங்கிற பேரை அவராதம் வாங்கி நடப்பிச்சி கொள்ளச்
சொல்லிக் கட்டளையிட்டோம் இதுவல்லாம

23 ல் கோயில் நந்தவானம் கோயில்வகை வாழைத் தோப்புத் தென்னந்
தோப்பு இலுப்பைத் தோப்புப் பனைந் தோ

24 ப்பு இது முதலான தோப்புக்களிலே அண்ணிதாக இருக்கிற மனிடர்
போய்த் திருடினார்களேயானா லந்தக் கள்ளனைப் பண்

25 டாரமே தெண்டினை பண்ணி அவராதம் வாங்கிக் கொள்ளச்
சொல்லிக் கட்டளையிட்டோம் பண்டாரத்தின் வகை

26 ப் பிராமணப் பிள்ளையள் தவசிப்பிள்ளையள் அவரைச் சார்ந்த
சனங்களுக்கும் பாம்பன்துறைக்குப் பண்

27 டாரத்தின் சீட்டின்படிக்குத் தோணிவிடச் சொல்லிக் கட்டளையிட்
டோம் யாதாமொரு கள்ளரைப் பண்டாரங்

28 காவல்ப்பண்ண வேணுமென்று கொல்லன் தச்சனை யழைக்கச்
சொன்னால் அந்தப்படிக்குக் கேள்க்கச் சொல்

29 லிக் கட்டளையிட்டோம் கோவில் வகையாகயிருக்கிற பசுமாடு
எருமைமாடு மடத்துப்பசு எருமைமாடு உ

30 ண்டானதுகளை யாதாமொரு கள்ளர் திருட்டுப்பிரட்டு நடப்பிச்சால்
பண்டாரமே தெண்டினைபண்ணி

## இரண்டாம் பக்கம்

31 அவதாரம் வாங்கிக்கொள்ளவும் பாம்பனாற்று வழியாகவும் கல்லடி
சாலை அக்கினி தீர்த்தக்கரை புளியடி

32 த்துறை புங்கடித்துறை இந்தத் துறைமுகங்களிலே கோவில்வகை
மாட்டை யாதாமொருத்தர் தோணியேற்றி

33 க் கொண்டுபோனால் பண்டாரம் அவர்கள் தலத்து மணியக்
காரனுடனே சொல்லி மணியக்காறன் அந்தக் கள்ள

34 னைத் தெண்டினை பண்ணாதே போனால் நம்முடனே சொல்ல
அவர்களை நாமே தெண்டினை பண்ணிக் கோ

35 விலுடமை வாங்கித் தருவோமாகவும் இந்தப்படிக்கு ராமீசுரம்
கோவில் ராமனாத பண்டாரமவர்

36 களுக்குத் தாம்புர சாதன பட்டையங் குடுத்தோம் அந்தப்படிக்கு
நடப்பிச்சுக் கொள்வாராகவும் இந்தப்படிக்கு

37 யாதாமொருத்தர் அபிமானித்து நடப்பித்தார்கள் அவர்கள் கோடி
கெங்கா ஸ்நானம் பண்ணின சுகுற்தமும் கோடி

38 தனுக்கோடித் தீத்தமாடின சுகுற்தமும் கோடி கன்னியாதான
பலனும் கோடி பூதானம் பண்ணின பலனும் கோ

39 டி அக்கிறகாரம் பண்ணின பலனும் அடைவாராகவும் இதுக்கு
ஆராகிலும் அகிதம் பண்ணினவன் கெங்கைக் க

40 ரையில்க் காராம்பசுவைக்கொன்ற தோஷத்திலேயும் விறுமகஷ்த்தி
பண்ணின தோஷத்திலேயும் மாதா பி

41 தாவைக் கொண்ண தோஷத்திலேயும் போகக் கடவாராகவும் உ

42 உ தளவாய் சேதுபதி உ

# 5

# மன்னார் சலாபச் செப்பேடு

இருக்கும் இடம் : அரசு அருங்காட்சியகம், எழும்பூர் சென்னை

அரசர் : தளவாய் சேதுபதி காத்ததேவர்

காலம் : 22—1—1625

அளவு : 48 செ.மீ. × 18 செ.மீ.

**அமைப்பும் செய்தியும்** : இராமேசுவரம் திருக்கோயிலுக்குப் பல ஊர்களைக் கொடையாக அளித்த சேதுபதி மன்னர் தமக்கு உரித்தான மன்னார் முத்துச் சலாபத் துறையில் குளிக்கும் முத்துக்களில் ஒரு பகுதியை இராமேசுவரம் கோயிலுக்குக் கொடையாக அளித்ததை இச்செப்பேடு கூறுகிறது.

மன்னார்ப் பகுதியில் நல்ல முத்துக்கள் உற்பத்தியாகின்றன. பன்னெடுங்காலம் அங்கு முத்துக் குளித்தல் தொழில் நடைபெற்று வருகிறது. அதற்குப் பல இலக்கிய, வரலாற்றுச் சான்றுகள் உள்ளன.

ஏழுகல் முத்துக்குளித்து அதில் வருகின்ற முத்துக்களைக் கோயிலுக்கு அளிக்குமாறு அரசர் கட்டளையிட்டுள்ளார்.

இச்செப்பேட்டை எழுதியவர் பெயர் திருப்புல்லாணி என்று கூறப்பட்டுள்ளது.

# செப்பேடு

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1546 இதின்மேல்
செல்லானின்ற ரத்தாட்சி வருஷம்

2 தையி 25ந் தேதி வசந்தருது ஆசிர மாதம்
கிருஷ்ண பட்சத்தில் அமாவாசையில்

3 கோப்பிரவாசமும் சுவாதி நட்சத்திரமும் சுபயோக
சுபகரணமும் பெத்த புண்ணிய காலத்தில் தே

4 வை நகராதிபதி சேது மூல ரெட்சா துரந்தரன் இராமநாத
சுவாமி காரிய துரந்த

5 ரன் சிவபூஜா துரந்தரன் பரராஜசேகரன் பரராஜ
சிங்கம் சொரிமுத்து வன்னியன் ம

6 கா மண்டலேஸ்வரன் மூவராய கண்டன் கண்டநாடு
கொண்டு கொண்டநாடு கொடாதான்

7 பட்டமானங் காத்தான் சலுக்கராய கண்டன் புவனேக
வீரன் வீரகஞ்சுகன் வீர

8 வள நாடன் வேதியர் காவலன் அரசராவண ராமன்
பரதள விபாடன் அந்தம்பர

9 கண்டன் சுவாமித் துரோகியள் மிண்டன் பஞ்சவர்ணராய
ராவுத்தன் வைகை

10 வளநாடன் கொட்டமடக்கி இவுளி பாவடி மிதித்தேறுவார்
கண்டன் வீரவெண்பாமாலை

11 இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகைமன்னர் சிங்கம் மதுரை
ராயன் மதப்புலி அடைக்கலங்

12 காத்தான் தாலிக்கு வேலி சத்துராதியள் முண்டன்
வன்னியராட்டம் தவிழ்த்தான் மேவல

13 ர்கள் வணங்குமிரு தாளினான் வீரமகா கெம்பீரன்
கியாதிப் பிரதாபன் ஆரியர் மானங்காத்

14 தான் தொண்டியந்துறைக் காவலன் துர்க ரேபந்தன்
அனுமகேதனன் கொடைக்கு

15 கருணன் பரிக்கு நகுலன் பரத நாடகப் பிரவீணன்
கருணா காடாட்சன் திலதநுதல் மட

16 மாதர் மடல் எழுதவரு சுமுகன் விஜயலெட்சுமி காந்தன்
கலை தெரியும் விற்பணன் கா

17 மிணி கந்தப்பன் சத்திய பாஷா அரிச்சந்திரன் சங்கீத
சாகித்திய வித்தியா வினோதன்

18 வீர தண்டை சேமத்தலை விளங்குமிரு தாளினன் சகல்
சாம்ராஜ்ய லெட்சுமி வாச

19 ன் செயதுங்க வங்கிசாதிபனான துகவூர் கூத்தத்தில்
காத்தூராள குலோத்துங்க

20 சோழநல்லூர் கீழ்பால் விரையாத கண்டனில் இருக்கும்
தளவாய் சேதுபதி காத்த தேவர் அவர்கள்

21 இராமேசுவரம் கோயில் இராமநாத பண்டாரம் அவர்
களுக்கு தாம்பிர சாதனம் பண்ணி

22 க்கொடுத்தபடி சாதனமாவது மன்னார் சலாபத் துறையில்
நம்மிட சமஸ்தானத்துக்

23 கு சலாபம் குளிக்கிறதில் ஸ்ரீ இராமநாத சுவாமி
கட்டளைக்கு ஏழு கல் குளித்துக் கொள்

24 ளச் சொல்லி தான சாதனம் பண்ணிவிச்சு சலாபம்
குளிக்கிற வருஷம் தோறும்

25 சுவாமிக்கு ஏழு கல்லு குளித்து அதில் வருகிற ஊதியங்
கோயிலைச் சாரப் பண்ணிவிச்

26 சுக்கொள்ளச் சொல்லி கட்டளையிட்டபடியினாலே அந்தப்
படிக்கு ஆச்சந்திரார்க்கமா யனுப

27 வித்துக் கொள்வாராகவும் இந்தப்படிக்கு இராமேசுவரம்
கோயில் இராமநாத பண்டாரம் அவர்

28 களுக்கு தாம்பிர சாதன பட்டயம் கொடுத்தோம் இது
காரியத்தில் யாதா மொருத்தர்

29 அபிமானித்து நடத்தி வைத்தார்களே ஆனால் அவர்
களுக்கு கோடி கெங்கா ஸ்நானமும் பண்ணின

30 சுகிர்தமும் கோடி தனுஷ்கோடி யாடின கோடி கன்னியா
தானம் பண்ணின பலனும்

31 அடைவார் ஆகவும் அகிதம் பண்ணினால் கங்கை கரை யில் காராம் பசுவைக் கொன்ற

32 தோஷத்திலேயும் மாதா பிதாவை கொன்ற தோஷத்தி லேயும் போகக் கடவாராகவும்

33 இந்த தாம்பிர சாதனம் எழுதினேன் வீரப்ப பண்டாரம் மகன் திருப் புல்லாணி

34 தளவாய் சேதுபதி

# 6

# இராமேசுவரம் செப்பேடு

இருக்கும் இடம் : தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத் துறை அருங்காட்சியகம் இராமநாதபுரம்

அரசன் : தளவாய் சேதுபதி காத்த தேவர்

காலம் : 6–4–1628

அளவு : 25 செ.மீ. × 14 செ.மீ.

**அமைப்பும் செய்தியும்** : இச்செப்பேடு படிக்கட்டுக்கள் போல் உள்ளடங்கி உயர்ந்து செல்லும் அழகிய கைப்பிடியைத் துளையுடன் கொண்டது. கைப்பிடியில் உ குறி உள்ளது. அதிகம் கிரந்த எழுத்துக்கள் கலக்காத செப்பேடு. 'உ தளவாய் சேதுபதி' எனப் பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளது.

இது இராமேசுவரம் இராமநாதசுவாமி காரிய துரந்தரரான இராமநாத பண்டாரம் அவர்களுக்குத் தளவாய் சேதுபதி அவர்கள் எழுதிக்கொடுத்த பட்டையம் என்று கூறப்படுகிறது. கொடைச் செப்பேடாக இல்லாமல் பூசை முறைகளைக் கூறும் செப்பேடாக உள்ளது.

சேதுபதியவர்கள் பிச்சிப்பூவும், பச்சைப் பாலும் படைத்து அர்த்தசாம வழிபாடு செய்ய ஏற்பாடு செய்திருந்தார். பின்னர் இராமநாத சுவாமிக்குச் சகல உபகரணங்களுடன் அபிடேகம், நெய்வேத்தியம், உற்சவம் முதலியன நடத்த வேண்டுமென்று எண்ணிப் பூசைக் கட்டளைகள் ஏற்படுத்த நிலங்களைக் கொடையாக அளித்தார்.

இராமேசுவரம் கோயில் அர்ச்சகரும், தானிகரும் அரசரிடம் 'நீங்கள் சேதுவுக்கு அரசராக இருப்பதால் அரமனைக் காரியக்காரர் களும், நாட்டு மக்களும், வேறு நாட்டு மக்களும் அரசர் பெயரில் கட்டளை நடத்துகிறார்கள்' என்று கூறினர்.

அதற்குச் சேதுபதியவர்கள், நம்முடைய கட்டளை, பிற சேதுபதி அரசர்கள் தந்த பட்டக்காணிக்கைக் கட்டளை ஆகியவைகளைக் கொண்டு நம் பெயரில் பூசை நடத்தினால் போதும். கோயில் உள் துறைக் கட்டளையிலே நடந்துவரும் பூசைகள் முன்பு போலவே நடைபெற்று வரலாம். நாம் விட்ட கட்டளைகளிலிருந்து மட்டும் நம் பெயரால் வழிபாடு நடத்தவேண்டும். அப்போதுதான் புண்ணியம் நம்மை வந்து சேரும். பிறர் கொடுக்கும் பொருள் பாவத் திரவியங் களாக இருக்கலாம். எனவே அதை நம்முடைய பூசையிலே வாங்கி நடத்த வேண்டாம் என்று கூறினார்.

இவ்வாறு என்றென்றைக்கும் நடைபெற வேண்டும் என்று ஆணையிட்டுச் செப்பேடு வெட்டித் தந்தார்.

சேதுபதியரசர்களின் பக்தித்திறனுக்கு இச்செப்பேடு எடுத்துக் காட்டாகத் திகழுகிறது.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாற்த்தம் 1549 இதன்மேற் செல்லாநின்ற

2 விபவ ஸ்ரு சித்திரை மீ 10உ சுக்கில பட்சமும் திறையோ தெசியும் புணர்

3 பூச நட்செத்திரமும் சோபனநாம யோகமும் பாலவாகரணமுங் கூடின

4 சுபதினத்தில் தேவை நகராதிபன் சேதுமூல லெட்ஷா துரந்தரன் ராமனாத

5 சுவாமி காரிய துரந்தரன் பரராசசேசரன் சொரிமுத்து வன்னியன் மகாம

6 ண்டலேசுரன் மூவராயிர கண்டன் கண்டநாடு கொண்டு கொண்ட நாடு கு

7 டாதான் அந்தம்பர கண்டன் சுவாமித் துரோகியள் முண்டன் வய்கை வழநாட

8 ன் அடைக்கலங் காத்தான் தாலிக்கு வேலி தொண்டியந்துறை காவலன்

9 வீரதண்டை சேமத்தலை விழங்குமிரு தாழினான் சேதுங்கராய வங்கிஷாதி

10 பன் துகவூர்க் கூத்தத்தில் காத்தூரான குலோத்துங்க சோழநல்லூர் கீள்

11 பால் விரையாத கண்டனிலிருக்கும் உடையான் சேதுபதிகாத்த தேவரவர்கள்

12 புத்திரன் தளவாய் சேதுபதி காத்த தேவரவர்கள் ராமநாதசுவாமி காரி

13 ய துரந்தரரான ராமநாத பண்டாரமவர்களுக்குத் தாம்பிரசாதனப் ப

14 ட்டையம் யெளுதிக் கொடுத்த பரிசாவது சுவாமிக்கு னாம் பிச்சிப் பூவும்

15 பச்சைப்பாலும் அத்தசாமத்தில் அவிஷேகம் பண்ணிக் கொண்டு வருமி

16 டத்தில் ராமனாத சுவாமிக்குச் சகலயுபகரணங்களுடனே யுங்கூட அவிஷேக நெய்

17 வேத்தியம் உச்சப முதலாகியது நடப்பிக்க வேணுமென்று கட்டளை யுண்டுபண்

18 ணிக் கிறாம பூமியளும் விட்டு நடப்பித்து வருமிடத்தில் தாங்களும் அச்சகரு

19 ம் தானிகரும் நம்மிடத்திலே சொன்னது இந்தச் சேதுவுக்கு ராசாவா யிருக்

20 கிறபடியினாலே அரமனை வாசலிலே உள்ள காரியக்காறரும் இந்த ராச்சிய

21 த்திலுள்ள சறுவசனங்களும் பரராட்டத்திலுள்ள சனங்களும் நமக்குப் பி

22 றிதிவர்த்தகத்தக காணிக்கையள் உபையம் முதலாகிய தெல்லாம் நம்மு

23 டைய கட்டளையிலே நடப்பிப்பார்களே யென்று சொன்ன படியினாலே நம்

24 முடைய கட்டளைக்கு நாம் குடுத்திருக்கிற கிராம பூமியளும் நம்முடைய ஆதீன

25 த்துக்கிருக்கிற பேர் குடுக்கிற பட்டக் காணிக்கைக் கிறாமமல்லாமல்

26 நம்முடைய கட்டளைக்கு விடுகிற கிறாமங்களிலேயும் உண்டாகிய பலப்

27 புரோசனங் கொண்டு நம்முடைய கட்டளைப் பூசை நடப்பித்துக் கொண்

28 டுவருகிறதே யல்லாமல் பூறுவாபூறுவம் கோவிலுள்த் துறைக் கட்ட

## இரண்டாம் பக்கம்

29 ளையிலே நடந்துவருகிறபடிக்கு நம்முடைய ராச்சியத்திலே உண்டாகிய உபை

30 யங்கள் காணிக்கையளும் கோவிலுள்த்துறைக் கட்டளையிலே தானே பூறு

31 வாபூறுவம் நடந்துவந்த படிக்கு அனுபவித்துக் கொள்ளச் சொல்லி

32 யும் நம்முடைய கட்டளையிலே நம்முடைய சொந்தத் திரவிய

33 ங்கொண்டு அவிஷேக நெய்வேத்தியம் உச்சபம் நடப்பித்து அந்தப் ப

34 லன் நம்மைவந்து சாருகிறதே அல்லாமல் பிறத்தியாருடைய திரவிய

35 ம் பாவத் திரவியமாயிருக்கும் ஆனப்படியினாலே நம்முடைய கட்ட

36 ளையிலே வாங்கி நடப்பிக்கத் தேவையில்லை யென்று சேதுவிலே நி

37 லவரம் பண்ணிவித்து நம்முடைய ஆதினத்திலே சுவாமிக்குக் குடுக்கிற

38 பட்டக் கிறாமமும் நம்முடைய ராச்சியத்திலே உள்ள காரியக்காறர் ம

39 த்தச் சனங்கள் குடுக்கிற உபையம் பரராட்டத்திலுள்ள உபையங் கா

40 ணிக்கை முதலான தெல்லாம் கோவிலுள்த் துறைக் கட்டளையிலே

41 தானே ஆற்சந்தராற்கம் அனுபவித்துக் கொள்ளச் சொல்லி ராமநா

42 தசுவாமி சன்னதியிலே தாராபூறுவமாகத் தாம்பிர சாதனங் குடுத்த

43 படியினாலே சந்திராதித்தர் வரைக்கும் யிந்தத் தாம்பிர சாதனப்படி

44 கும் கோவிலுள்த்துறைக் கட்டளையிலே தானே அனுபவித்துக் கொள்ளக் கட

45 வாராகவும் ராமனாதன் துணை உ தளவாய் சேதுபதி

# 7

# இராமேசுவரம் செப்பேடு

இருக்கும் இடம் : தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத் துறை அருங்காட்சியகம் இராமநாதபுரம்.

அரசர் : தளவாய் சேதுபதி காத்த தேவர்.

காலம் : 13—1—1632

அளவு : 48 செ.மீ. × 13 செ.மீ.

**அமைப்பும் செய்தியும்** : சிறு கைப்பிடியுடன் நீண்ட சதுர வடிவில் அமைந்துள்ள செப்பேடு[1]. கைப்பிடியில் உ எனப் பொறிக்கப் பட்டுள்ளது. கிரந்த எழுத்துக்களோ தெலுங்கோ இல்லாத செப்பேடு, சகஆண்டு குறிக்கப்படவில்லை. தமிழ் ஆண்டு மாதம் தேதி மட்டுமே குறிக்கப்பட்டுள்ளது, பிற பஞ்சாங்கக் குறிப்புக்கள் எதுவும் இல்லை. பிற செப்பேடுகளில் வரும் அரசரைப் பற்றிய புகழுரைகள் இதில் எதுவுமில்லை.

---

1) *ARE, A 24 of 1947.*

இராமேசுவரம் கோயிலில் வழிபாடியற்றும் பணியில் உள்ள குருக்கள்மார், சபையார் தமிழ் ஆரியர் அனைவரும் மதுரைத் திருமலை நாயக்கர் அவர்களின் தளவாய் சேதுபதி காத்த தேவருக்கு ஒரு ஒப்பந்தம் (இசைவு முறி) எழுதிக் கொடுத்ததை இச்செப்பேடு விவரிக்கிறது. குருக்கள்மார் மராட்டிய அந்தணர்கள்.

இவர்கள் ஒருவர் வழிபாட்டுப் பணியில் உள்ள இடங்களில் பிறர் சென்று வழிபாட்டுப் பணி செய்ததால் அரண்மனை அதிகாரிகள் விசாரித்து யார்யார் எந்தெந்தப் பணிகளைச் செய்ய வேண்டும் அதற்காக என்னென்ன பெறவேண்டும் என்று வரையறை செய்யப்பெற்றதை இச்செப்பேடு அறிவிக்கிறது, இராமநாதசுவாமி கோயில் தலைமைக் கண்காணிப்பாளர் இராமநாத பண்டாரம் இச்செப்பேட்டில் குறிக்கப் பெறவில்லை. இக்கால கட்டத்தில் அவர் இல்லை போலும்.

**குருக்கள்மார் செய்ய வேண்டிய கோயிற்பணிகள் :** அணுமேசுரர், இராமநாதசுவாமி, மலைவளர் காதலியம்மன், படிகலிங்கம், இராமநாதசுவாமியின் உற்சவ விக்கிரகம், தாண்டவேசுரர், தேவை அம்பலவாணர், பல்லக்கு நாயகர் ஆகிய சன்னதிகளில் பூசை செய்தல். பல்லக்கு நாயகரைப் பூசை செய்வதுடன் எழுந்தருளச் செய்தல். வெள்ளைத்துர்க்கையம்மனைப் பூசை செய்தல். சுற்றுத் திருக் கோயில், பரிவார தேவதைகள் ஆகியவற்றிற்கு நெய்வேத்தியம் படைத்தல், தீபாராதனை செய்தல், திருவாபரணம் சாத்தல், இப்பூசைகளை அவற்றுக்குரிய காலாகாலங்களிலே தவறாமல் செய்தல் வேண்டும்.

**குருக்கள்மாருக்கு அளிக்க வேண்டிய உரிமைகள் :**

அணுமேசுரர் பூசைக்கு பணம் $\frac{1}{4}$
இராமநாதசுவாமி பூசைக்கு பணம் 1
மலைவளர் காதலியம்மன் பூசைக்கு பணம் $\frac{1}{4}$

பூசையின் போது உரிமையாகப் பிரசாதம் முன்பு அளிக்கப்படவில்லை. இப்போது பிரசாதமும் கட்டளையிடப்பட்டது.

படிகலிங்கப் பூசைக்குப் பிரசாதம் நாழி
வெள்ளைத் துர்க்கை பூசைக்குப் பிரசாதம் 1 நாழி
சந்தனம் 10க்கு 1

தோசை, வடை, பணியாரம், பத்துக்கு 1

வெற்றிலை வாரத்திற்கு 1 நாள்

கய்வித்தாரம் அழகு பணி சாத்த 4 பணம்

திருக்கார்த்திகைக்கு பொன் 2 பணம் 1

திருவிழாவுக்கு பொன் 2 பணம் 1

மாசித் திருவிழா கும்ப வத்திரத்துக்கு பச்சவடம் 3

கும்ப தெட்சிணை பொன் 3

தர்மகர்த்தா கட்டளையில் ருத்திரா அபிஷேகம் செய்தால் பணம் 7

பஞ்சாமிருதம் தயாரித்தால் பணம் 1

கும்பாபிடேக காலங்களில் உண்டியில் வரும் காசிலும் எள்ளிலும் சுவாமிக்கு 2 பங்கு, குருக்கள்மாருக்கு 1 பங்கு

**சபையார் செய்ய வேண்டிய கோயிற் பணிகள் :** விசுவலிங்கம் இராமலிங்கம், மலைவளர் காதலி அம்மன், எழுந்தருளும் நாயகர், தாண்டவேசுரர், தேவை அம்பலவாண சுவாமி, இவர்களுக்குத் திருமஞ்சனம் செய்வித்தல், உள்ளே கொண்டு வந்து வைத்துக் கட்டளையை எடுத்துக் கொடுத்தல், சுயம்பாகமும் பண்ணி அந்த நெய்வேத்தியமும் சன்னதியில் கொண்டுவந்து போடுதல், தூப தீபம் கொடுத்தல், சுற்றுப் பரிவார தேவதைகளுக்கு அபிடேகம் செய்து நெய்வேத்தியம் கொண்டு போதல் உற்சவமூர்த்தி ஆகிய சீவிலி நாயகரைப் பல்லக்கில் எழுந்தருளப் பண்ணுதல், யானைமேல் திருமஞ் சனநீர் கொண்டுவருதல், வரும் அடியார்கட்குக் கோடி தீர்த்தம் எடுத்து விடுதல் ஆகியவை.

இச்செயல்களைத் தக்க காலங்களில் நிறைவேற்ற வேண்டும்.

**சபையாருக்கு அளிக்க வேண்டிய உரிமைகள்:**

ஒரு நாளுக்குப் பிரசாதம் நாழி 24

சுத்துக் கட்டளை உபயத்தில் குறுணிக்கு 1 நாழிப் பிரசாதம்

கறியமுது எட்டில் ஒன்று

சில்வரிசிக்கு ஒரு நாளுக்குப் பணம் ½ வீதம் மாதம் 15 பணம்

**தமிழ் ஆரியர் செய்ய வேண்டிய கோயிற்பணிகள் :**

மேலே கூறிய சன்னதிகட்கு நெய்வேத்தியம் பண்ணின தளிகை மாற்றுதல், சைவப் பண்டாரங்கள் உள்ள அறைதவிர மற்ற அறைகளில் தங்கள் முறைமைப் பணிகள் செய்தல், சந்தனம் அரைத்தல், திருவிளக்குப் பார்த்தல், பல்லக்கு எழுந்தருளச் செய்தல், உற்சவத்தின் போது சுவாமியைத் வேரில் எழுந்தருளச் செய்தல், யார்யாருக்கு என்று ஒதுக்கப்பட்டதோ அந்த அந்தச் சன்னதிவாசலில் காவல் இருத்தல் வில்வம் திருமாலை கட்டும் பண்டாரங்கள் இல்லாதபோது வழிபாடு நடந்தால் மாலை கட்டுதல், தானத்தாருக்காகத் திருவாபரணம் கொண்டு போய் வைத்தல், கட்டியம், அடப்பம், காளாஞ்சி, அன்னக் கெண்டியை பரிசை அடியொழுக்கு அணைசு தாசிகளுக்கு தட்டி பார்த்தல் நிர்மாலியம் செலவழித்தல், கோயிலுக்கு வரும் காரியக் காரர்கள், மரியாதி மனுஷர்களுக்கு பிரசாதம் கொண்டுபோய் அளித்தல் போன்ற வற்றைச் செய்து கொண்டு நிர்ணயிக்கப்பட்ட சோறும் சம்பளமும் பெற்றுக் கொண்டு காலா காலங்களில் குறை எதுவும் ஏற்படாமல் பணிகள் செய்தல்.

குறிப்பிட்ட காலத்தில் பூசை செய்யாதிருந்தாலும், கோயில் திறந்திருக்க வேண்டிய காலங்களில் அடைத்தாலும் அரசர் ஆணைக் குள்ப்பட்டு நடவாவிட்டாலும் அவர்கள் அரைமனைக்கு அபராதம் 1200 பொன் அளித்துத் தமது காணியாட்சியையும் இழக்க வேண்டும்

குருக்கள்மார், சபையார், தமிழ் ஆரியர் மூன்று வகையாரும் ஒப்புக்கொண்டு இந்த ஒப்பந்தத்தை எழுதித் தந்தனர்.

இந்த ஒப்பந்தத்தை எழுதியவர் முத்துக்காமாட்சி என்பவர்.

இறுதியில் மூன்று வகைப் பணியாளர்களும் ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டுள்ளனர்.

**குருக்கள்மார்**

வாமவேதக் குருக்கள், கெங்காதரக்குருக்கள், சங்கரக் குருக்கள், சருவேசுவரக் குருக்கள், இராமனாதக் குருக்கள், சந்திரசேகரக் குருக்கள்.

**சபையார்**

சேதுராமபட்டன், விரிசிப்பட்டன், நரசிங்கப்பட்டன்.

**தமிழ் ஆரியர்**

நயினார், அரிச்சந்திரன், நாராயணன், வேல்வாங்கினான், தம்பிராமன் உமையாதேவன், அமரர் தொழ நின்றான், சோமேசுர முதலி, கடலடைத்தான், கெங்கையாடிப்பெருமாள். சருவேசுரன், ஆண்டயினான், நயினா பிள்ளை, சேது நிலையிட்ட பிராதிராயன், தெசரதராமன், தாண்டவமூத்தியார், அரிபட்டன், பெரிய முதலி, யெங்கு தேவன், சந்திர தேவன், ஆண்டயினான், மாதவ பட்டன், இராமபிள்ளை, தன்மராசி தாறுமூர்த்தி, ஆண்டயினான், சருவேசுரன், தம்பி நயினார், ஒப்பிலாத பெருமாள், தும்மிணியாண்டி.

வேல்வாங்கினான், அமரர் தொழ நின்றான், கடலடைத்தான், கெங்கை யாடி, சேது நிலையிட்ட பிரமாதிராயன், தசரத ராமன், ஒப்பில்லாத பெருமாள், தும்மிணியாண்டி போன்ற பெயர்கள், சிறப்பு மிக்கவை இவைகளில் பல இராமனோடு தொடர்புகொண்ட பெயர்கள். கெங்கை யாடி என்பது கங்கைக்குப் போய்வந்தவர்கள் பெயரோடு சேர்த்து வைத்துக் கொள்ளும் பெயர் ஆகும்.[1]

தும்மிணி என்பது பவித்திர மாணிக்கம் என்று வழங்கப்பெற்ற பெயரின் வேறு வடிவம்.[2]

சேதுபதி அரசர்களில் கிழவன் சேதுபதிவரை ஆட்சிபுரிந்தவர் கள் மதுரை நாயக்கரின் மேலாண்மையை ஏற்றுக் கொண்டனர் என்ப தற்கு இச்செப்பேடு சான்றாக அமைகிறது. 17ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இராமேசுவரம் கோயில் நிர்வாகம், வழிபாடு, இறை பணியாளர்கள் பற்றிய மிக அரிய செய்திகளை இச்சேப்பேடு தருகிறது.

---

1) இசுலாமியர்கள் ஹஜ் யாத்திரை சென்றோர் ஹாஜி என்று தங்கள் பெயரோடு சேர்த்துக் கொள்வதைப் போன்றது.

2) பவித்திர மாணிக்கம் – தூய மணி; தூயமணி-தும்மணி ஆயிற்று-

# செப்பேடு

## முதல் பக்கம்

உ

1 பிறசோற்பத்தி வருடம் தையி மீ15 உ திருமலை நாயக்கரய்யனர் களுக்கு தளவாய் சேதுபதி காத்த தேவரவர்களுக்கு ராமீசுரம் குருக்கள்மார் சபையார் தமிழ் ஆரியர் அனைவருமோம் இசைவு முறி குடுத்தபடி நாங்கள் அனைவரும் சுவந்திர

2 சுவாமி யமரிமிதமாய் அதர்மனை ஏறிப்போய் வாசலில் கும்பிட்டபடி யினாலே அரமனையார் கேட்கவே யதுபடி சுவாமி பூசிக்கிற குருக்கள்மார் அவர்கள் செய்யும் தொழில் அனுமேசுரரை பூசை பண்ணுகிறது ராமனாத சுவாமியை பூசை பண்ணுகி

3 றது மலைவளர் காதலியம்மனை பூசை பண்ணுகிறது படிக லிங்கத்தை பூசை பண்ணுகிறது உச்சவ விக்கிறகம் ராமனாத சுவாமியை பூசை பண்ணுகிறது தாண்டவேசுரரைப் பூசை பண்ணுகிறது தேவை அம்பலவாண

4 ரை பூசை பண்ணுகிறது பல்லக்கு னாயகரைப் பூசை பண்ணு கிறது யெழுந்தருளப் பண்ணுகிறதும் வெள்ளை துற்கையம்மனை பூசை பண்ணுகிறதும் சுத்து கோவிலுக்கு பரிவார தேவதையளுக் கும் நெய்வே

5 த்தியம் தீபாராதனையும் பண்ணுகிறதும் திருவாபரணம் சாத்து கிறதும் யிந்த தொழில் காலா காலங்களிலே பண்ணிக் கொண்டு யெங்கள் சுவந்திரம் அனுமேசுர பூசைக்கு பணம் ¼ ராமனாத சுவாமி பூசை

6 க்கு பணம் 1ம் அம்மன் மலைவளர்காதலி அம்மன் பூசைக்கு பணம் ¼ ம் ஆக பணம் 1½யும் பிறசாதம் பூறுவமில்லாத படியினாலே பிற்ப்பாடு கட்டளையிட்டது படிகலிங்க பூசைக்கு பிறசாதம் யிருநாழியும் வெள்ளைது

7 ற்க்கைக்கு னாழிப் பிறசாதமும் ஆகமுன்னாழி பிறசாதமும் சந்தனம் பத்துக்கு ஒன்றும் தோசை வடை பணியாரம் பத்துக்கு ஒன்றும் பாக்கு வெத்திலை யேழ்னாளைக் கொருநாளும் யேற்றபடி மாதமொன்றுக்கு

8 கயவித்தாரம் அழகு பணி சாத்த பணம் 4ம் திருகார்த்திகைக்கு பொன் 2 பணம் 1 திருவிழாவுக்கு பொன் 2 பணம் 1 ம் மாசித் திருவிழாவுக்கு கும்பவத்திரத்துக்கு பச்சவடம் மூன்றும் கும்பதெட் சனை பொன் 3

9 ம் தன்மகற்த்தா உபயகட்டளையில் ருத்திர அபிசேகம் பண்ணிவித் தால்பணம் 7 ம் பஞ்சாமிறுதம் பண்ணிவித்தால் ஒரு பணமும் கும்ப அபிஷேகம் காலம் உண்டிகயில் காசும் எள்ளும்

10 சுவாமிக்கு ரண்டு பங்கும் எங்களுக்கு ஒரு பங்கும் பத்திக்கொள்ள கடவோமாகவும் சபையார் செய்யீற தொழில் விசுவலிங்கம் ராமலிங்கம் மலைவளர் காதலி அம்

11 மன் எழுந்தருளும் நாயகர் தாண்டவேசுரர் தேவை அம்பலவாண சுவாமி இவர்களுக்கு திருமஞ்சனம் எடுத்து கட்டுகிறது உள்ளே கொண்டுலந்து வ

12 ச்ச படிக்கட்டளையை எடுத்துக் கொடுக்கிறது சுயம்பாகமும் பண்ணி அந்த நெய்வேத்தியமும் சன்னதியில் கொண்டுவந்து போடுகிறது தூபதீபம் கொடுக்கி

13 றது சுத்துப் பரிவார தேவதையளுக்கு அபிஷேகமும் பண்ணி நெய் வேத்தியம் கொண்டுபோறது சீவிலி நாயகர் பல்லக்கிலெழுந் தருளப் பண்ணுகிறது யாணை மேல்

14 திருமஞ்சனம் கொண்டு வருகிறது வந்த பரிசுக்கு கோடி தீற்த்த மெடுத்து விடுகிறது இந்த தொழில்களெல்லாம் சபையார் கால காலங்களிலே செய்து கொ

15 ண்டு எங்கள்சுவந்திரம் ணாளொன்றுக்குப் பிறுசாதம் நாழி இருபத்து நாலும் சுத்துக் கட்டளை உபையத்தில் குறுணிக்கு நாழிப் பிறசா தமும் கறியமுது எட்டிலொன்றும் சில்வரி

16 கிக்கு நாளொன்றுக்கு அரைப்பணமாக மாதமொன்றுக்குப் பதின்னஞ்சு பணமும் பத்திக் கொள்ளக் கடவோமாகவும் தமிழ் ஆரியர் செய்யிற தொழில் இந்தவகைச் சன்னதிய

17 ளுக்கு நெய்வேத்தியம் பண்ணின தளிகை மாத்துகிறதும் சய்வப் பண்டாரங்கள் யிருக்கிற அறைபோக மத்துண்டாகிய அறை முறையிலே யிருக்கிறதும் சந்தணம்

18 அரைக்கிறதும் திருவிளக்குப் பார்க்கிறதும் பல்லக்கு யெழுந்தருளப் பண்ணுகிறதும் உச்சவத்துக்கு சுவாமியை தேடகத்தில் திருத் தேரிலெழுந்தருள

## இரண்டாம் பக்கம்

19 ப் பண்ணுகிறதும் அந்தஅந்தச் சன்னதிவாசல் காத்திருக்கிறதும் வில்வம் திருமாலை கட்டுகிற பண்டாரங்களல்லாமல் விசேஷ முண்டானால்

20 செய்து வருகிறதும் தானத்தார் திருவாபரணம் கொண்டுபோய் வய்க்கிறதும் கட்டியம் அடப்பம் காளாஞ்சி அன்னக்கெண்டியை பரிசை யடியொழுக்கு அ

21 ணைசு தாசியளுக்கு தட்டி பாற்க்கிறதும் நிற்மாலியம் சிலவழிக் கிறது வந்துஇருக்கிற காரியக்காறர் மரியாதி மனுசருக்கு பிரசா தம் கொண்டுபோய்க் கொடுக்கிறது இந்த தொழிலுண்

22 டாகிய தெல்லாம் செய்துகொண்டு யெங்களுக்கு நிலபரம் பண்ணிண சோறும் சம்பளமும் பத்திக் கொண்டு காலா காலங்களிலே சுவாமி பணிவிடை தாட்சி வரா

23 மல் செய்துவரக் கடவோமாகவும் யிப்படி கால காலங்களிலே பூசை பண்ணாமலிருந்தாலும் கோவில் யடைத்தாலும் ராசமுத்திரைக் குள்ப்பட்டு நடவாமலிருந்தாலும்

24 அரமனைக்கு அபராதம் ஆயிரத்திருனூறு பொன்னுமிறுத்து யெங்கள் காணியாட்சியும் இழந்து போக கடவோமாகவும் இந்தப் படிக்கு சம்மதித்து இசைவுமுறி குடுத்தோ

25 ம் திருமலை நாயக்கரய்யனவர்களுக்கு தளவாய் சேதுபதி காத்த தேவரவர்களுக்கு குருக்கள்மார் சபையார் தமிழுஆரியருமோம் இந்தப்படிக்கு தி

26 ருமலை நாயக்கரய்யனவர்கள் பாதத்தாணை தளவாய் சேதுபதி காத்ததேவரவர்களாணையே தப்பாது இந்த இசைவுமுறி யெழுதினேன் முத்துக்கா

27 மாட்சி உ வாமதேவ குருக்கள் கெங்காதர குருக்கள் சங்கர குருக்கள் சறுவேசுர குருக்கள் ராமனாத குருக்கள் சந்திரசேகர குருக்கள் சவையாரில்

28 சேதுராமபட்டன் விரிசி பட்டன் நரசிங்கப் பட்டன் தமிழ்ஆரியரில் நயினார் அரிச்சந்திரன் நாராயணன் வேல் வாங்கினான் தம்பிரா மன் உமையா தேவன் அ

29 மரர் தொழ நின்னான் சோமேசுரமுதலி கடலடைத்தான் கெங்கை யாடி பெருமாள் சறுவேசுரன் ஆண்டயினான் நயினாபிள்ளை சேது நிலையிட்ட பிரமாதிராயன் தெ

30 சரத ராமன் தாண்டவமூத்தியார் அரிபட்டன் பெரிய முதலி யெங்கு தேவன் சந்திரதேவன் ஆண்டயினான் மாதவபட்டன் ராம பிள்ளை தன்மராசி தாறுமூர்த்தி ஆண்டயினா

31 ன் சறுவேசுரன் தம்பி நயினார் ஒப்பிலாத பெருமாள் துப்பினி யாண்டி உ

# 8

# மருதங்கநல்லூர்ச் செப்பேடு

இருக்கும் இடம் : தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை அருங்காட்சியகம், இராமநாதபுரம்

அரசர் : தளவாய் சேதுபதி

காலம் : 23—1—1632

அளவு ; 23 செ.மீ. × 13.5 செ.மீ.

**அமைப்பும் செய்தியும் :** துளையில்லாத அழகிய கைப்பிடியில் உ குறி உள்ளது[1] இரண்டாம் பக்க இறுதியில் உ தளவாய் சேதுபதி உ என்று அரசர் பெயர் எழுதப் பட்டுள்ளது. கிரந்த எழுத்துக்கள் மிக குறைவாகவே காணப்படுகின்றன. மாதத்தைக் குறிக்க 4 என்ற குறியீடு உள்ளது. தை மாதம் என எழுதி மீண்டும் ஆசிபிச மாதம் என எழுதப்பட்டுள்ளது. இச்செப்பேட்டில் குறிக்கப் பட்டுள்ள சர்லிவாகன ஆண்டு 1538ம், தமிழ் ஆண்டும் பொருந்தி வரவில்லை. பஞ்சாங்கக் குறிப்பிலும் தவறு உள்ளது. சாலிவாகன ஆண்டு குறித்த எண்ணைக் கணக்கில் கொள்ளாமல் தமிழ் ஆண்டு பிரசோத்பத்தி இங்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

---

1. *ARE, A.31 of 1947.*

இச்செப்பேட்டிலிருந்து தளவாய் சேதுபதி தளவாய் என்று பட்டம் பெற்று அரசர் ஆன நாள் எது என்பது தெளிவாகக் கிடைக்கிறது. 'தழவாய் சேதுபதி என்று பேருங் கொடுத்து ராமனாதசுவாமி விருது காவிய்டால் காவிகூடாரம் காவிப்பன்னாகம் காவிகுடை உபையசாமரம் இதுமுதலானதெல்லாம் சுவாமி நமக்கு மிக வரிசை யாகக் கட்டளையிட்டபடியினாலே' தாம் மருதங்கநல்லூர் நாற்பாங்கு எல்லைகட்குட்பட்ட அனைத்து நிலங்களையும் கொடையாக அளிப்பதாகச் சேதுபதி அரசர் செப்பேட்டில் கூறியுள்ளார்.

இச்செப்பேட்டின் மூலம் சேதுபதி அரசர் ஒருவர் புதியதாகப் பட்டம் ஏற்கும்போது அரசுப்பொறுப்பை இராமேசுவரம் இராமநாத சுவாமியே அளிக்கிறார் என்று அதனைப் பயபக்தியுடன் புனிதமாகக் கருதி ஏற்றுக்கொள்ளும் வழக்கம் இருந்ததை அறிகின்றோம். இறை வன் தன் பெயரில் விருதும் வேறுபல அரச சின்ன விருதுகளும் அளிப்பதாகக் கருதிப் பெற்றுக்கொள்ளும் முறையும் இருந்தது என்பதனையும் அறிகின்றோம்.

ஒவ்வொரு அரசரும் தாம் பட்டம் ஏற்கும்போது 'பட்டக்காணிக்கை' என்ற பெயரில் இராமேசுவரம் கோயிலுக்குக் கிராமம் ஒன்றைக் கொடை அளிப்பது வழக்கம். சிலர் இராமேசுவரத்துடன் வேறு கோயிலுக்கும் கொடை அளிப்பர். அவ்வழக்கத்திற்கு ஏற்பத் தளவாய் சேதுபதி இராமேசுவரம் இறைவனுக்கு அளித்த பட்டக் காணிக்கைக் கிராமம் தான் மருதங்கநல்லூர் என்று குறிக்கப்படுகிறது.

இரண்டாம் சடைக்கத் தேவர் என்ற தளவாய் சேதுபதி 1635 இல் பட்டம் பெற்றதாக வரலாற்றில் குறிக்கப்படுகிறது. ஆனால் 1632 இல் பட்டம் பெற்றிருக்கலாம் என்று இச்செப்பேடு மூலம் அறிகின்றோம்.

சேதுபதி படடக்காணிக்கையாக அளித்த மருதங்கநல்லூர் வருவாயிலிருந்து இராமேசுவரம் பருவதவர்த்தனி அம்மனுக்குச் சந்தனக்காப்பு, மஞ்சள் காப்பு, திருவிளக்கு வைத்தல் போன்ற அறங்களைச் செய்தல்வேண்டும் என்று குறிக்கப்பட்டுள்ளது.

கிராமத்தை 'அபிமானிச்சு' வளம் உண்டாகச் செய்தவர்களுக்குப் புண்ணியம் கிடைக்கும் என்று கூறப்பட்டுள்ளது. இறுதியில் தளவாய் சேதுபதி கையொப்பம் காணப்படுகிறது.

# செப்பேடு

## முதல் பக்கம்

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலியவாகன சகாத்தம் 1538 இதின்மேற் செல்லானின்

2 ற பிறசோற்பதி ஆண்டு தை பு 25 உ சரத்ருதுவில் ஆசிபிச மார்தத்தில்
கிட்

3 டின பட்ஷத்தில் அம்மாவாசையும் கெற்ப பிரவாசரமும் சுவாதி நட்
செத்திரமும்

4 சுபயோக சுபகரணமும் பெத்த புண்ணிய காலத்தில் தேவை
நகராதிபன்

5 சேதுமூல லெட்ஷா துரந்தரன் இராமநாத சுவாமி காரிய துரந்தரன்

6 சிவபூசா துரந்தரன் பரராசசேகரன் பரராச கெச சிங்கம்
சொரிமுத்து

7 வன்னியன் மகாமண்டலேசுரன் மூவராயர கண்டன் கண்டநாடு

8 கொண்டு கொண்டநாடு குடாதான் பட்டமானங் காத்தான் துட்ட
ராயிர கண்

9 டன் புவனேகவீரன் வீரகஞ்சுகன் வீரவளநாடன் வேதியர் காவலன்

10 அரசராவண ராமன் பரதள விபாடன் நந்தம்பர கண்டன் சுவாமித்து

11 ரோகியள் பஞ்சவன்ன ராய ராவுத்தன் வய்கை வளநாடன் கொட்ட

12 மடக்கி இவிளி பாவடி மிதித்தேறுவார் கண்டன் வீரவெண்பாமாலை

13 இளஞ்சிங்கம்ந் தளைஞ்சிங்கம் பகைமன்னர் சிங்கம் துரைராயன் ம

14 தப்புலி அடைக்கலங் காத்தான் தாலிக்குவேலி சத்துராதியள் மிண்ட

15 ன் வன்னியராட்டந் தவிள்த்தான் மேவலர்கள் வணங்குமிரு தாழி

16 னான் வீரமகா கெம்பீரன் கீற்றிப்பிறதாபன் ஆரிய மானங்காத்தான்
தொ

17 ண்டியந்துறை காவலன் துர்க ரேபந்தன் அனுமகேதனன் குடைக்கு

18 க் கற்ன்னன் பரிக்கு நகுலன் பரதநாடகப் பிறவீணன் கருணா கடாட்

19 சன் திலகநுதல் மடமாதர் மடலெளுத வருசுமுகன் விசையலெட்

20 சிமிகாந்தன் கலைதெரியும் வீற்ப்பன்னன் காமினி கந்தப்டன் சத்திய

21 பாஷர் அரிச்சந்திரன் சங்கீத சாயுத்திய வித்தியா வினோதன் வீரதண்

22 ஷட் சேமத்தலை விழுங்குமிரு தாழினாண் சகல சாம்பிறாச்சிய லெட்சிமி னி

23 வாசன் சேதுங்தராய வங்கிஷாதிபனான துகவூர்க் கூத்தத்தில் காத்தூ ரான கு

24 லோத்துங்க சோழநல்லூர் கீழ்பால் விரையாத கண்டனிலிருக்கும்

25 ஸ்ரீராசஸ்ரீ தழவாய் சேதுபதியென்று பேருங்கொடுத்து ராமனாத சுவாமி

26 விருது காவியிட்டால் காவிகூடாரம் காவிப்பன்னாகம் காவிகுடை உபையு சா

27 மரம் இது முதலானதெல்லாம் சுவாமி நம்க்கு மிக வரிசையாகக் கட்டளை

28 யிட்ட படியினாலே மருதங்கநல்லூர் ரெங்கிற கிறாமம் நாண் கெல்கைக்கு

29 ள்பட்ட நஞ்சை புஞ்செய் திட்டுத் திடல் சகல கழுதாயமும் ராமநாத சுவாமி

## இரண்டாம் பக்கம்

30 க்குப் பட்டக் காணியாகக் கட்டளையிட்டு பறுவத வற்த்தனி அம் மனுக்கு சந்தன

31 க்சுாப்பு மஞ்சள்க்காப்பு திருவிளக்குமாக இந்தக் கிறாமம் சந்திராதித் தர் சந்திர

32 ப் பிறவேசம் வரைக்கு நடந்து வரத்தக்கதாக யாதாமொருத்தர் அவிமானிச்

33 சு கிறாமத்தை வழம்பண்ணி யந்ததுகம் சுவாமிக்குச் சேர்ப்பித்தார்க

34 ள் அவர்கள் கோடி கெங்காஷ்த்தானம் பண்ணின சுகுறுதமும் கோடி தனு

35 க்கோடி தீர்த்தமாடின சுகுற்தமும் கோடி கன்னியாதான பலமும் கோ

36 டி பூதானம் பண்ணின பலமும் கோடி அக்கிராகாரம் பண்ணின பலமும்

37 அடைவராகவும் இதுக்கு ஆராகிலும் அகிதம் பண்ணினவன் கெங்கைக் கரையிலே

38 காராம் பசுவைக் கொண்ண தோஷத்திலேயும் பிறுமகஷ்த்தி பண்ணின் தோஷத்தி

39 லேயும் மாதா பிதாவைக் கொண்ண தோஷத்திலேயும் போகக் கடவாராகவும்

40 உ தளவாய் சேதுபதி உ

# 9

# சேதுகால் செப்பேடு

இருக்கும் இடம் : தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை அருங்காட்சியகம், இராமநாதபுரம்

அரசர் : தளவாய் சேதுபதி

காலம் : 23–1–1632

அளவு : 24 செ.மீ. × 12.5 செ.மீ.

**அமைப்பும் செய்தியும் :** அழகிய முறையில் அமைக்கப்பெற்ற கைப்பிடியில் துளை இல்லாமல் உ குறி பெற்ற செப்பேடாகும்[1]. கிரந்தத் தின் பயன்பாடு மிகவும் குறைவாகவே உள்ளது.

தளவாய் சேதுபதியவர்களுக்குத் 'தளவாய்' என்று பெயர் கொடுத்து, இராமநாதசுவாமி விருது, காவிடால், காவிக்கூடாரம், காவிப்பன்னாகம், காவிக்குடை, உபைய சாமரம் போன்ற வரிசைகளை இராமநாத சுவாமி அருளிச் செய்த காரணத்தால் அவருக்குச் சேது கால் என்னும் ஊரைத் தானமாகக் கொடுத்ததை இச்செப்பேடு கூறு கிறது. அவ்வூர் இராமநாத சுவாமிக்குப் பட்டக் காணிக்கையாகக் கொடுக்கப்பட்டது.

---

1. *ARE, A. 26 of 1947.*

அன்போடு யார் கிராமத்தை வளம் செய்து அதன் பலன் சுவாமிக் குச் சேருமாறு செய்கிறார்களோ அவர்களுக்குப் புண்ணியம் கிடைக் கும் என்று இச்செப்பேட்டில் கூறப்பட்டுள்ளது.

செப்பேட்டின் இறுதியில் தளவாய் சேதுபதியின் பெயர் எழுதப் பட்டுள்ளது. பட்டம் பெற்ற இதே நாளில் மருதங்க நல்லூரையும் இராமேசுவரத்திற்குக் கொடையாக அளித்ததை முன்செப்டேடு கூறுகிறது.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகார்த்தம் 1538 இதின் மேற் செல்லானின்ற பிறசோற்பதி

2 வருடம் தைய் மீ 2ஃஉ சரதுருதுவில் ஆசிவிச மாதத்தில் கிட்டிண பட்ஷத்தில் அம்மாவாசையு

3 ம் கெற்பமறவாசரமும் சுவாதி நட்செத்திரமும சுபயோக சுபகரணமும் பெத்த புண்

4 ணிய காலத்தில் தேவை நகராதிபன் சேதுமூல லெட்ஷ்மி துரந்தரன் இராமநாத சுவா

5 மி காரிய துரந்தரன் சிவபூசா துரத்தரன் பரராச கெச சிங்கம் சொரிமுத்து வன்னியன்

6 மகாமண்டலேசுரன் மூவராய கண்டன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு குடா

7 தான் பட்டமானங் காத்தான் துட்டராயிர கண்டன் புவனேக வீர கஞ்சுகன் வீரவள

8 நாடன் வேதியர் காவலன் அரசராவண ராமன் பரதள விபாட னந்தம்பர கண்டன் சு

9 வாமித் துரோகியள் பஞ்சவன்னராய ராவுத்தன் வய்கை வளநாடன் கொட்டமடக்கி

10 இவிளி பாவடி மிதித்தேறுவர் கண்டன் வீரவெண்பா மாலை இளஞ் சிங்கந் தளைஞ்சிங்க

11 ம் பகைமன்னர் சிங்கம் துரைராயன் மதப்புலி அடைக்கலங் காத்தான் தாலிக்கு

12 வேலி சத்துராதியன் மிண்டன் வண்ணியராட்டந் தவிர்த்தான் மேவவர்கள் வணங்கு

13 மிகு தாழினான் வீரமகா கெம்பீரன் கீற்றிப் பிறதாபன் ஆரிய மாலங் காத்தான் தொண்டிய

14 ந்துறை காவலன் துர்க ரேபந்துன் அனுமகேதனன் குடைக்கு கற்ன்னன் பரி

15 க்கு நகுலன் பரத நாடகப் பிறவீணன் கருணாகடாட்சன் திலதநுதல் மடமாதர்

16 மடலெளுத வருசுமுகன் விசையலெட்சுமி காந்தன் கலைதெரியும் விற்ப்பன்னன் கா

17 மினி கந்தப்பன் சத்தியபாஷா அரிச்சந்திரன் சங்கீத சாயுத்தியா வித்தியா வினோதன்

18 வீரதண்டை சேமத்தலை விழங்குமிரு தாழினான் சகல சாம்பிறாச்சிய லெட்சுமீ னிவாசன்

19 சேதுங்கராய வங்ஷாதிபனான துகவூர்க் கூத்தத்தில் காத்தூரான குலோத்துங்

20 க சோழநல்லூர் கீழ்ப்பால் விரையாத கண்டனிலிருக்கும் ஸ்ரீராசஸ்ரீ தளவாய் சேதுப

21 தியென்று பேருங் கொடுத்து ராமநாதசுவாமி விருது காவியிடால் காவிகூடார

22 ம் காவிப்பன்னாகம் காவிக்குடை உபைய சாமரம் இது முதலான தெல்லாம் சு

23 வாமி நமக்கு மிக வரிசையாகக் கட்டளையிட்ட படியினாலே சேது காலென்

24 கிற கிறாமம் நான்கெல்லைக்குள்ப்பட்ட நஞ்சைபுஞ்சை திட்டுத் திடர் சகல சமுதாயமும் ரா

25 மநாத சுவாமிக்குப் பட்டக் காணியாகக் கட்டளையிட்டுத் தாம்பிற சாதனப் பட்டை

26 யம் குடுத்தோம் இந்தக் கிறாமம் சந்திராதித்தர் சந்ததிப் பிறவேசகம் வரைக்கு நடந்துவரத்த

27 க்கதாக யாதாமொருத்தர் அபிமானிச்சு கிறாமத்தை வழம் பண்ணிய ந்ததுகம் சுவா

28 மிக்குச்சேர நடப்பித்தார்கள் அவர்கள் கோடி கெங்காஷ்தானம் பண் ணின சுகுறுதமும்

29 கோடி தனுக்கோடி தீர்த்தமாடின சுகுறுதமும் கோடி கன்னியா தான பலமு

## இரண்டாம் பக்கம்

30 ம் கோடி பூதானம் பண்ணின பலமும் அக்கிரகாரம் பண்ணின பலமும்

31 அடைவராகவும் இதுக்கு ஆராகிலும் அகிதம் பண்ணினவன் கெங்கைக் க

32 ரையிலே காராம் பசுவைக் கொண்ண தோஷத்திலேயும் விறுமகஷ்த்தி பண்

33 ணின தோஷத்திலேயும் மாதாபிதாவைக் கொண்ண தோஷத்திலேயும் போகக் கட

34 வாராகவும்

35 உ தளவாய் சேதுபதி உ

# 10

# இராமநாதபுரம் செப்பேடு

இருக்கும் இடம் : தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை அருங்காட்சியகம், இராமநாதபுரம்

அரசர் : தளவாய் சேதுபதி காத்த தேவர்

காலம் : 26—7—1641

**அமைப்பும் செய்தியும் :** இது காலக்குறிப்பும் அரசரைப் பற்றிய புகழுரைகளும் மட்டுமே உள்ள செப்பேடு. 14-ஆம் அடி தொடங்கிய வுடன் செப்பேட்டு எழுத்துகள் நின்றுவிடுகின்றது.[1]

இருப்பினும் இச்செப்பேட்டுக் காலக் குறிப்பு தளவாய் சேதுபதி காத்த தேவர் அவர்களுக்குப் பொருந்திவருகிறது. அவர் காலத்தில் அளிக்கப்பெற்ற ஒரு கொடைச் செய்திக்காக இச்சேப்டேடு வெட்டத் தொடங்கியிருக்க வேண்டும். பின் என்ன காரணத்தினாலோ செப்பேடு வெட்டி முடிக்கப்பெறவில்லை.

---

1. *ARE, A. 44 of 1947.*

# செப்பேடு

1 உ சொ ஸ்ரீ சாலிவாகன சகாத்தம் 1564 யிதன் மேற் செல்லாநின்ற
விசு வருடம் ஆடி . . . .

2 . . . தெட்சணாயனத்தில் ஆதித்தவாரமும் அம்மாவாசையும்

3 சவுபாக்கிய நாமயோகமும் பத்திரவாகனமும் கூடிய சுபயோக சுப
தினத்தில் தேவைநகர்ராதிபன் சேதுமூ

4 லாரெட்சா துரந்தரன் இராமநாத சுவாமி காரியா துரந்தரன் சிவ
பூசா துரந்தரன் பரராச கெச சிங்கம்

5 சொரிமுத்து வன்னியன் மகாமண்டலேசுபரன் மூவராய கண்டன்
கண்டநாடு கொண்டு கொண்டநாடு குடா

6 தான் பட்டமானம் காத்தான் துட்டராயிர கண்டன் புவனேக வீர
கஞ்சுகன் வீரவளநாடன்

7 பர்தள விபாடன் அந்தம்பிர கண்டன் சாமித் துரோகியின் முண்டன்
பஞ்சவன்ன ராய ராவுத்தன் டனுக்கு

8 ரர் கண்டன் வையகை வளநாடன் கொட்டமடக்கி யிவுலி பாவடி
மிதித்தேறுவார் கண்டன் வீர

9 வெண்பாமாலை இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகைமன்னர் சிங்கம்
மதுரை ராயன் ஆத்துப்பாச்சி கடலில்

10 ப்பாச்சி மதப்புலி அடைக்கலங் காத்தான் தாலிக்கிவேலி சத்துருவாதியள்
முண்ட வன்னியரர்ட்டந் தவிள்

11 த்தான் மேவலர்கள் வணங்குமிரு தாளினான் வீரமகாகெப்பீரன்
கீர்த்திப் பிரதாபன் தொண்டியன்துறைக் காவலன்

12 துர்க்க ரேபந்தன் அனுமகேதனன் குடைக்கி கற்னன் பரிக்கு நகுலன்
பரதநாடக பிறவீணன் கருணா கடாச்சன்

13 குன்றினுயர் மேருவை குன்றா விளைக்குணில் பொறித்தவன் திலகநுதல்
மடல்ழ் மாதர் மடலெழுதவரு சுமு

14 கன். . . . . .

# 11

# முகிழ்த்தகம் செப்பேடு

இருக்கும் இடம் : டாக்டர் எஸ்.எம்.கமால் அவர்கள் இல்லம் இராமநாதபுரம்

அரசர் : இரகுநாத சேதுபதி காத்த தேவர்

காலம் : 31—1—1648

**அமைப்பும் செய்தியும்** : இராமநாதசுவாமி, பர்வதவர்த்தனி அம்மன் பூசை நெய்வேத்தியத்திற்கும், ஆவணி மூலத்திருவிழா உற்சவத்துக்கும் சேதுபதி அவர்களின் கட்டளையாக இராமநாத பண்டாரம் வசம் முகிழ்த்தகம் கிராமத்தைக் கொடையாக விட்ட செய்தி கூறப்படுகிறது.

மாணிக்கவாசகர்க்காக நரிகளையெல்லாம் பரியாக்கி அரிமர்த்தனபாண்டியனிடம் இறைவன் கையளித்த நாள் ஆவணி மூலம்நாளாகும். இச் செய்தி ஹாலாஸ்ய மகாத்மியத்திலும், வேம்பத்தூரார்ின் திருவாலவாயுடையார் புராணத்திலும், பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடல் புராணத்திலும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சி மதுரைத் திருக்கோயிலில் நடைபெற்றுவந்தது. அவ்விழாவைச் சேதுபதி அரசர்கள் இராமேசுவரம் கோயிலிலும் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்தமையை இச்செப்பேடு விளக்குகிறது. (1674 ஆம் ஆண்டும் ஆவணி மூலநாள்

விழாவிற்குக் கொடை அளிக்கப்பட்டதை மற்றொரு செப்பேடும் கூறுகிறது). முகிழ்த்தகம் அரும்பூர்க் கூற்றத்தில் உள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. திருவாடானை வட்டத்தில் திருவாடனைக்கும் தொண்டிக்கும் இடையே அரும்பூர் உள்ளது.

## செப்பேடு

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1570 இத ன்மேல் செல்லாநின்ற சர்வ

2 சித்து வருஷம் மாசிமாதம் சோமவாரமும் பஞ்சமியும் சுவாதி நட்சத் திரமும்

3 சௌபாக்கிய நாம யோகமும் வால வாகரனமும் பெத்த சுபயோக சுபதினத்தில்

4 தேவை நகராதிபன் சேதுமூல ரட்சா துரந்தரன் இராமநாத சுவாமி காரிய துரந்தரன் சிவ

5 பூசா துரந்தரன் பரராஜ கெச சிங்கம் சொரிமுத்து வன்னியன் மகா மண்டலேசுவரன் அரிய

6 ராய தள விபாடணன் பாசைக்கு தப்புவார் கண்டன் மூவராய கண்டன் கண்ட

7 நாடு கொண்டு கொண்டநாடு கொடாதான் பட்டமானம் காத்தான் துஷ்டராயிர கண்டன்

8 புவனேக வீரன் வீரகஞ்சுகன் வீரவள நாடன் வேதியர் காவலன் அரச ராவண ராமன் பரதள

9 விபாடன் அந்தம்பர கண்டன் சாடிக்கார கண்டன் சாமி துரோகியள் முண்டன் பஞ்

10 சவர்ன ராய ரா்வுத்தன் பனுக்குவார் கண்டன், வையை வளநாடன் கொட்டமடக்கி இவு

11 ளிபாவடி மிதித்து ஏறுவார் கண்டன் வீர வெண்பாமாலை இளஞ் சிங்கம் தளஞ்சிங்கம் பகை

12 மன்னர் சிங்கம் மதுரை ராயன் ஆத்துப் பாய்ச்சி கடலில் பாய்ச்சி மதப்புலி

13 அடைக்கலங் காத்தான் தாலிக்கு வேலி சத்துராதியர் மூண்டன் வன்னியராட்டந்

14 தவிழ்த்தான் மேவலர்கள் வணங்குமிரு தாளினான் வீரமகா கெப்பிரன் ஆரியர் மா

15 ணங்காத்தான் கீர்த்திப் பிரதாபன் தொண்டியந்துறைக் காவலன் துர்க ரேபந்தன்

16 அனுமகேதனன் கொடைக்குக் கர்ணன் பரிக்கு நகுலன் பரத நாடக பிரவீணன்

17 கருணா கடாச்சன் குன்றிலுயர் மேருவைக் குன்றாய் வனைகினில் பொசித்தவன்

18 திலதநுதல் மடமாதர் மடலெழுத வரு சுமுகன் விசய லட்சுமி காந்தன் கலை

19 தெரியும் விற்பனன் காமினி கந்தப்பன் சத்திய பாசா அரிச்சந்திரன் சங்கீத சாகித்ய

20 வித்தியா வினோதன் வீரத்தண்டை சேமத்தலை விளங்குமிரு தாளினன் சகல சாம்பிராச்

21 சிய லெட்சுமி விலாசன் செயதுங்க ராய வங்கிசாதிபன் ரணசூர கௌரவ குலத்தில்

22 காத்தூரான குலோத்துங்க சோழநல்லூர் கீழ்பால் விரையாத கண்டனில் இருக்கும் ஸ்ரீமது

23 இரண்யகற்பயாஜி ரெகுநாத சேதுபதி காத்ததேவர் அவர்கள் இராமநாத சுவாமி பர்வத

24 வர்த்தினி அம்மன் பூசை நெய்வேத்தியத்திற்கும் ஆவணி மூல திருவிழா உற்சவத்திற்கும்

25 இராமநாத பண்டாரமவர்கள் பாரிசமாக நம்முட தனது கட்டளைக்கு தானபூர்வமாக

26 கட்டளையிட்டது அரும்பூர் குரத்தில் முகிழ்த்தகம் கிராமம் மேற்படி உள்கடை யேந்தல்களும்

27 பரிநான்கெல்கையில் உட்பட்ட குட்டம் குளம், நஞ்சை புஞ்சை திட்டு, திடல் பணவரி சொர்ணா

28 தாயம் சகல சமுதாயமும் சர்வமானியமாக இராமநாத சுவாமிக்கு உபயமாக தாம்புர

29 சாதன பட்டயம் கொடுத்தோம் இந்தக்கிராமம் சந்திராதித்தாள் சந்ததி பிரவேசம் உள்

30 ளவரைக்கும் ஆண்டு அனுபவிச்சுக் கொள்ள கடவராகவும் இந்ததர்மம் யாதாருமொ

31 ருவர் அபிமானுச்சு பரிபாலனம் பண்ணிக் கொண்ட பேர்கள் கோடி கெங்கா ஸ்நானம் பண்ணின சுகிர்தமும் கோடி கன்னி

32 காதான பலனும் கோடி பூதானம் பண்ணின பலனும் கோடி அக்ரஹார பிரதிட்டை

33 பண்ணின பலனும் அடைவார்கள் இதற்கு யாராகிலும் அகிதம் பண்ணினபேர்கள்

34 கெங்கைக் கரையில் காராம் பசுவை கொன்ற தோஷத்திலேயும் பிரமகத்தி பண்ணின

35 ஸ்திரிகத்தி தோஷத்திலேயும் மாதா பிதாவை கொன்ற தோஷத்திலே யும் போவார்களாக

# 12

# இராமேசுவரம் செப்பேடு

இருக்கும் இடம் : தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை அருங்காட்சியகம், இராமநாதபுரம்

அரசன் : திருமலை சேதுபதி காத்த தேவர்

காலம் : 3–1–1653

அளவு : 30 செ.மீ. × 14 செ.மீ.

**அமைப்பும் செய்தியும்** : மிகவும் நன்றாக அமைக்கப்பட்டு அழகிய வரைகோட்டு ஓவியங்களுடன் கைப்பிடி திகழ்கிறது. கைப்பிடியில் உ எனக் குறியிடப்பட்டுள்ளது. முதல் பக்க இடையில் சேதுபதி எனத் தெலுங்கில் எழுதப்பட்டுள்ளது. கைப்பிடியில் துளை இல்லை.

தேதியைத் தவிர மற்ற எல்லாக் குறிப்புக்களும் 3–1–1653 ஆம் நாளுக்குப் பொருந்தி வருகிறது. அன்று தைமாதம் 6-ஆம் நாள் செப்பேட்டில் 15 என எழுதப்பட்டுள்ளது.

ஒரு பவுர்ணமி புண்ணிய நாள் அன்று இராமேசுவரம் இராமநாத சுவாமி சன்னதியில் இராமநாத சுவாமி கோயில் காரிய கர்த்தரான

இராமநாத பண்டாரம் அவர்களுக்குச் சேதுபதி அரசர் இச்செப் பேட்டை அளித்தார்.[1]

ஏற்கனவே ஆட்சிபுரிந்த சடைக்கத்தேவர் என்ற தளவாய் சேதுபதி இராமேசுவரத்திற்குச் சில கொடைகள் அளித்துச் செப்பேடு அளித்துள்ளார். திருமலை சேதுபதியும் சில கொடைகள் அளித்தார். அவைகள் குறையாமல் நடந்து வருகின்றன. கோயிலில் பிற உள்துறைக் கட்டளைகளும் நடந்து வருகின்றன.

அரசர்களாகிய தங்கள் பெயரில் நடந்துவரும் கட்டளைகட்குத் தேவைப்படும் செலவுகளுக்குத் தாங்கள் அளித்த மானியக் கிராம வருவாயிலிருந்தும், தம் கொடையிலிருந்தும், தாங்கள் கொடுக்கும் சொந்தப்பொருளிலிருந்தும் மட்டுமே பூசை வழிபாடு முதலியன செய்ய வேண்டும் என்று சேதுபதி அரசர் விரும்பினார்.

தம் ஆட்சிப் பகுதியிலிருந்தும், பிற நாட்டுப் பகுதியிலிருந்தும் வருகிற மற்றவர் அளிக்கும் காணிக்கை, உபையம் முதலான பணத் தைக்கொண்டு சேதுபதி அரசர்கள் பெயரில் கட்டளைகள் நடத்தக் கூடாது என்று கட்டளையிட்டார்.

இதனை அரண்மனைக் காரியக்காரரிடம் சேதுபதி அரசர் ஏற்கனவே கூறியிருந்தார். இதனைக் கேள்வியுற்ற இராமேசுவரம் கோயில் காரியக்காரர் இராமநாத பண்டாரம் அவர்களும் அரசருக்கு அக்கருத்தை நினைவூட்டினார் அரசரும் அவ்வண்ணமே இனிமேல் செய்ய வெண்டும் என ஆணை பிறப்பித்தார்.

ஏனெனில் வேறு நாட்டிலிருந்து வருகிற காணிக்கைகளும் உபையங்களும், உள்நாட்டிலிருந்து கிடைக்கிற பிறர் அளிப்பதால் வருகின்ற காணிக்கைகளும் உபையங்களும் நல்ல திரவியங்களாக இல்லாமல், பாவத்திரவியங்களாகவும் இருக்கலாம். அப்படிப்பட்ட பாவத்திரவியங்கள் வழங்கி சேதுபதி அரசர்கள் பெயரில் கோயில் வழிபாட்டுக் கட்டளை நடத்தினால் அதனால் புண்ணியம் எதுவும் அரசர்களுக்குக் கிடைக்காது.

மேற்படி செய்தியை அரண்மனைக் காரியக்காரருக்குக் கண்டிப் புடன் நடத்தவேண்டுமென்று ஆணையிடப்பட்டது. அரண்மனை அலுவலர்கள் பாளையக்காரர்கள் ஆகியோர் அளிக்கும் கொடைகள்

---

1. *ARE, A-36 of 1947.*

அவரவர் பெயரில் நடக்கும் கட்டளைக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

பிறர் கொடுக்கும் பொருளைக் கொண்டு கோயில் உள்துறைக் கட்டளை நடத்தலாம். சேதுபதி அரசர்கள் பட்டமேற்கும்போது அளிக்கும் பட்டக்கிராமக் கொடையும் அவ்வாறே நடக்கவேண்டும.

மேற்கண்டமுறை தவறாமல் என்றென்றும் நடக்க வேண்டும் என அரசர் தம் விருப்பத்தைத் தெரிவித்துள்ளார்.

இராமநாதசுவாமி துணை என்ற காப்புச் சொல்லுடன் இச்செப் பேடு முடிகிறது.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாத்தம் 1574 இதன் மேற் செல்லாநின்ற நந்தன வருடம் தை மாதம் 15 உ

2 சோமவாரமும் பவுற்ணமையும் பூச நட்செத்திரமும் சுகற்மநாம யோகமும் கிரச வாகர

3 ணமுங் கடின சுபதினத்தில் ஸ்ரீமன் ராசாதிராசன் ராசபரமேசுரன் ரா சமாத்தான்

4 டன் ராசகெம்பீரன் மகாமண்டலேசுரன் அரியராயிர தள விபாடன் பாஷைக்குத்

5 தப்புவார் கண்டன் மூவராயிர கண்டன் கண்ட நாடு கொண்டு கொண்ட நாடு கொடா

6 தான் பூறுவ தெக்ஷ்ணை பச்சிம உத்தர சமுத்திராதிபன் பட்டமானங் காத்தான் வீரகஞ்சு

7 கன் வீர வழநாடன் வேதியர் காவலன் அரச ராவண ராமன் இவுளி பாவடி மிதித்தே

8 றுவார் கண்டன் வீரவெண்பாமாலை யிளஞ்சிங்கந் தளசிங்கம் ஆத்தில் பாச்சி கட

9 லில் பாச்சி மதப்புலி அடைக்கலம் காத்தான் தாலிக்கு வேலி ஆரியர் மானங் காத்தான்

10 தேவை நகராதிபன் சேதுமூல ரட்சா துரந்தரன் ராமநாத சுவாமி காரிய துரந்த

11 ரன் பரராசசேகரன் சொரிமுத்து வன்னியன் அந்தம்பர கண்டன் சுவாமித் து

12 ரோகியள் முண்டன் வய்கை வழநாடன் வீரதண்டை

13 சேமத்தலை விளங்குமிரு தாழினான் சேதுங்கராய வங்கி

14 ஷாதிபன் துகவூர்க் கூத்தத்தில் காத்தூரான குலோத்துங்க சோள நல்லூர்க் கீள்பா

15 ல் விரையாத கண்டனிலிருக்குந் தளவாய் சேதுபதி காத்ததேவ ரவர்கள் புத்திரன்

16 திருமலைச் சேதுபதி காத்த தேவரவர்கள் ராமநாத சுவாமி காரிய கற்த்தரான ராம

17 நாத பண்டாரம் அவர்களுக்குத் தாம்பிரசாசனம் கொடுத்த பரிசாவது நம்முடைய பெரிய

18 அய்யா அவர்கள் அறைக்கட்டளை யுண்டுபண்ணி நடந்து வருகிற போது கோவிலுள்

19 த்துறைக் கட்டளையிலே நடந்து வருகிற காரியத்துக்கும் அய்யா அவர்கள் கட்டளையிலே

20 நடந்து வருகிற காரியத்துக்குந் தங்களுக்குத் தாம்பிர சாசன மெளுதித் தாராபூறுவ

21 மாகக் கொடுத்து நடந்து வந்தது சரியாமே அப்படி நடந்துவரு மிடத்தில் நம்முடைய ரா

22 ச்சியத்திலிருந்து வருகிற காணிக்கை உபைய முதலானதும் நம்முடைய கட்டளையிலே

23 வாங்கி நடப்பிக்க வேணுமென்று நம்முடைய அறைவாசலிலே யிருக்கிற காரியக்கா

24 றர் சொல்லிக்கொண்டிருக்கிறதாகத் தாங்கள் நம்முடனே சொன்ன படியினாலே நம்மு

25 டைய கட்டளைக்குப் பெரிய அய்யா அவர்கள் விட்டு நடந்து வருகிற கிராமங்களிலேயும்

26 னாம் விட்டு நடந்துவருகிற கிராமங்களிலேயும் உண்டாகிய ஆதாயங் கொண்டும் நாம் கொ

27 டுக்கிற திரவியங்கொண்டும் நம்முடைய அறைக்கட்டளை நடப்பித்து வருகிறதேய

28 ல்லாமல் மத்தப் பர ராட்டிரத்திலிருந்து வருகிற காணிக்கைகள் உடையங்களும் நம்மு

29 டைய ராச்சியத்திலேயிருந்து வருகிற காணிக்கை உபையங்களெல்லாம் நல்ல திரவிய

30 ங்களாக இருக்கிறதுமுண்டு பாவத் திரவியங்களாக இருக்கிறதுமுண்டு அப்படிக்கொடு

31 த்த திரவியம் வாங்கி நம்முடைய சொந்தக் கட்டளையிலே நடப்பித் தால் நமக்குப் பலனே

32 தென்கிறதைக் குறித்து நம்முடைய அறைவாசலிலே காரியக்காறரைக் கண்டிச்சி நடப்

33 பித்துக் காணிக்கை உபயங்கள் ஒன்றும் வாங்குவோமென்று நினைக்கத் தேவையில்

34 லையென்று நிலவரம் பண்ணிவிச்சு அனாதி பூறுவமாகக் கோவிலுள்த் துறைக் கட்டளை

35 யிலே வாங்கி நடந்துவந்த பிரகாரத்துக்குப் பெரிய அய்யா அவர்கள் கொடுத்த தாம்பிர சா

36 சனப்படிக்கு நடப்பித்துக்கொள்ளச் சொல்லியும் நம்முடைய ஆதீனத்திலுண்டாகிய

37 காரியக்காரர் பாளையக்காரர் முதலானபோர் உபையமாகக் கட்டளை யுண்டு பண்ணிப் பிறத்

38 தீகமாகக் கட்டளைவைத்து நடப்பித்து வருகிற பேருடைய உபயங் களுண்டானது மா

39 த்திரம் அவரவர் உண்டுபண்ணின அறைக்கட்டளையிலே தானே நடப்
பித்துக்கொள்ளச்

40 சொல்லியும் மத்தப் பர ராட்டிரத்திலிருந்து வருகிற காணிக்கையளும்
உபையங்களு

41 ம் நம்முடைய ராச்சியத்திலுண்டாகிய பேர் கொடுக்கிற காணிக்கை
உபையங்களும் பூறு

42 வாபூறுவம் நடந்துவந்த படிக்குக் கோவிலுள்த்துறைக் கட்டளையிலே
தானே வாங்கி

43 நடப்பித்துக் கொள்ளச் சொல்லியும் நம்முடைய ஆதினத்திலே
பட்டத்துக்கிருக்கிற பேர்

44 களும் ராமநாத சுவாமிக்குப் பட்டக் கிராமங்கொடுக்கிறது நீங்கலாக
நம்முடை

45 ய அறைக்கட்டளைக்கு விடுகிற கிராமங்களிலேயும் பெரிய அய்யா
அவர்களும் நாமும் விட்ட

46 கிராமங்களிலேயும் உண்டாகிய திரவியங்கொண்டு நம்முடைய அறைக்
கட்டளைப் பூசை முத

47 லாகியது நடப்பித்து அந்தச் சுகிற்தம் நம்முடைய ஆதினத்துக்கு வந்து
சேருகிற வளியாக நடப்

48 பித்துக் கொள்ளச் சொல்லியும் பிறருடைய திரவியங்கள் வாங்கி
நடப்பிக்கத் தேவை

49 யில்லையென்றும் நிலவரம் பண்ணிவித்துத் தமக்கு நாம் தாம்பிர
சாசனம் ராமநாத சுவா

50 மி சன்னதியிலே தாராபூறுவமாகக் கொடுத்தபடியினாலே ஆசந்திராற்
கம் யிந்த தாம்பிர

51 சாசனப்படிக்கு அனுபவித்துக்கொள்ளக் கடவாராகவும் ராமநாத
சுவாமி துணை

# 13

# கணக்கன்வயல் செப்பேடு

இருக்கும் இடம் : திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை

அரசர் : திருமலை சேதுபதி காத்த தேவர்

காலம் : 15—6—1654

அளவு : 21.5 செ.மீ × 11 செ.மீ

**அமைப்பும் செய்தியும் :** இது கைப்பிடி அமைக்கப் பெறாத நீண்ட சதுர வடிவில் அமைந்த சிறு செப்பேடாகும். கிரந்த எழுத்துக்கள் கலப்பில்லாத செப்பேடு. நிலத்தை விற்பனைக்கு வாங்கிக் கோயிலுக்குக் கொடையாகக் கொடுத்ததை இச்செப்பேடு கூறுகிறது. பண்டைய விற்பனை முறையையும் இச்செப்பேடு மூலம் அறிகின்றோம்.

அறந்தாங்கியிலிருக்கும் பிள்ளைகளில்கூன்காரித் தேவன், சிந்தான் புலியத் தேவன் ஆகிய இருவரும் தங்கள் காணியான கணக்கன் வயலைத் திருமலை சேதுபதி காத்த தேவரவர்களின் காரியத்துக்குக் கர்த்தரான மணலூரில் இருக்கும் அட்டவணை வேலப்ப பிள்ளை மகன் குமாரசுவாமிக்கு விலைக்கு விற்ற செய்தியையும், விலைக்கு வாங்கியவர் கோயிலுக்கு அளித்ததையும் இச்செப்பேடு விளக்கமாக கூறுகிறது.

கணக்கன் வயல், கிழக்கு எல்லலயாகப் பேசமங்கலம் குளத்தை யும், வடக்கு எல்லையாக ஆயித்தப்பட்டியையும், மேற்கு எல்லையாக நாவிலி வயலையும், தெற்கு எல்லையாக நெட்டி ஏம்பல் கருங்குழித் தாவையும் கொண்டது.

பழங்கல்வெட்டுக்களில் காணப்படும் விற்பனை முறையே 17 ஆம் நூற்றாண்டிலும் புதுக்கோட்டைப் பகுதியில் மாறாமல் நிலவி யதை இச்செப்பேடு சுட்டுகிறது.

நிலத்தை விற்கும் ஒருவர் நிலத்தின் நாற்பாங்கு எல்லை கூறி ஊர்ப்பொது இடத்தில் 'கொள்வார்உளரோ' என மூன்று முறை கூவ வேண்டும். 'விலைகுறித்தால் கொள்வேன்' என்று வாங்குபவர் அருகில் இருந்து எதிர்மொழி கொடுக்க வேண்டும். தனிப்பட்டவர் கொடுக்கல் வாங்கல் கூட ஊர் அறிந்து, ஊர் சம்மதத்தின் பேரிலேயே நடைபெற்றுள்ளதை இதன் மூலம் அறிகின்றோம்.

இந்நில விற்பனைக்கு அறந்தாங்கி நாட்டாரும், திருப்பெருந்துறை பல நடுவர்களும் முன்னிலை வகித்துள்ளனர்.

இச்செப்பேடு அறந்தாங்கி அரசு தொண்டைமான் மரபு பற்றி அரிய சில செய்திகளையும் தருகிறது. அறந்தாங்கி அரசு மரபினர் சேதுபதி அரசர் மரபினருக்கு உட்பட்டு அரசு புரிந்த செய்தியும், தனிப்பட்டவர் உழுது பயிரிட்டுவரும் காணி நிலங்கள் பல அறந்தாங்கி அரசு தொண்டைமான் மரபினருக்கு உரியதாக இருந்தது என்ற செய்தியும் இச்செப்பேடு மூலம் தெளிவாகிறது.

நிலத்தைக் காணியாகக் கொண்ட கூன்காரித் தேவனும், சிந்தான் புலியத்தேவனும் 26 பொன்னையே பெற, விற்பனையில் நேரடியாகத் தொடர்பில்லாத ஏகாம்பரத் தொண்டைமானவர் 50 பொன் பெறுவதன் மூலம் மேற்கண்ட செய்தி உறுதிப்படுகிறது. 17 ஆம் நூற்றாண்டின் நிலவுடைமை பற்றிய அரிய இச்செய்தி இச் செப்பேடு மூலம் தெளிவாகிறது.

நாட்டாரும் நடுவர்களும் விலை நிச்சயம் செய்து நிலத்தை முன்பு அனுபவித்தவர்களுக்கும், அரசர் ஏகாம்பர தொண்டைமானுக்கும் உரிய பொன்னை வாங்கித் தந்துள்ளனர். இதன் மூலம் நிலத்தின் கிரையம் 50 பொன் என்றும், அனுபவ உரிமைக்காக 26 பொன் தரப் பட்டது என்பதையும் அறிகின்றோம்.

பொருளை விற்கும்போது விற்பவர் கை கீழும் வாங்குபவர் கை மேலுமாக இருக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. தானம் அளிப் பதற்கும் பெரும்பாலும் இதே முறையை பின்பற்றப்பட்டுள்ளது என்பதைப் பிற செப்பேடுகள் உணர்த்துகின்றன.

மதுரை மின்னல் பொன் சேதுபதி, தொண்டைமானார் ஆளுகைப் பகுதியிலும் வழங்கப் பெற்றுள்ளது என்பதை அறிகின்றோம். சேதுபதி தொண்டைமான் ஆட்சிப் பகுதிகள் மதுரை நாயக்கர் ஆட்சிக்கு உட் பட்டிருந்ததை இதன் மூலம் அறிகின்றோம்.

இதுவரை அரசருக்குரியதான நிலம் தனிப்பட்டவருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. அவர்கள் அதனை ஆண்டு அனுபவித்து விற்க, ஒத்திவைக்க சீதனமாகக் கொடுக்க அனுமதிக்கப்பட்டுள்ளனர். நிலத்தை அனுபவிப்பதில் ஏதேனும் இடையூறு ஏற்பட்டால் நிலம் விற்பனை செய்தவர் தீர்த்துவைப்பதாக உறுதி கூறியுள்ளார்.

நிலத்தை 76 பொன் கொடுத்து வாங்கிய சேதுபதி அரசு அலு வலர் குமாரசுவாமியாபிள்ளை திருப்பெருந்துறைக் கோயிலுக்கு ஆடிய பாத பண்டாரத்தின் கட்டளைக்குக் காரிய கர்த்தரான இராவுத்த பண் டாரம் வசம் திருவனந்தல் (அதிகாலை) கட்டளைக்குக் கணக்கன் வயலைக் கொடையாக அளித்துள்ளார். ஆடியபாத பண்டாரம், இராவுத்த பண்டாரம் ஆகியோர் திருவாவடுதுறை ஆதீனக் கட்டளைத் தம்பிரான்களாக இருக்கலாம். அப்போது ஆதீனத் தலைவராக விளங்கியவர் ஸ்ரீ மாசிலாமணி தேசிகர் (1625-1658).

வீரப்பபிள்ளை என்பவர் இவ்விற்பனை, கொடைச் சாசனத்தை எழுதியுள்ளார். மலையந்தமுதலியார், அறந்தாங்கிக் காமாட்சித் தேவன், ஆவுடையார்கோயில் செல்லப்பெருமாளய்யன் ஆகியோர் சாட்சிக் கையொப்பமிட்டுள்ளனர். சாட்சிக் கையொப்பத்தில் பல சமூகத்தார் காணப்படுகின்றனர்.

இதற்கு வரும் இடையூறுகளைச் சேதுபதி அரசர் தம் அதிகாரி கள் ஆகிய அட்டவணைப் பிள்ளைமாரும், ரகுநாத தொண்டைமானார் அவர்கள் காரியத்துக்குக் கர்த்தரான பாண்டியத்தேவனும் காக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

ரகுநாதத் தொண்டைமான் புதுக்கோட்டை அரச மரபினரின் முன்னோர். 1686இல் தான் புதுக்கோட்டை அரச மரபு நிறுவப்பட்டது. ஆனால் அதற்கு முன்பே சேதுபதி அரசர் ஆதரவில் புதுக்கோட்டை மரபினர் 1654இலேயே அதிகாரம் செலுத்திய செய்தி இதன்மூலம் பெறப்படுகிறது.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 சகாப்த்தம் 1575 இதன்மேல் செல்லாநின்ற செய ஹ ஆனி மீ 17 உ
ஸ்ரீமது திரு

2 மலைச் சேதுபதி காத்த தேவரர்கள் காரியத்துக்கு சுத்தரான
மண்ணூரில்லிருக்கும் அட்டவணை

3 வேலப்ப பிள்ளை மகன் குமாரசுவாமிக்கு அறந்தாங்கியிலிருக்கும்
பிள்ளைப்பேரில்

4 கூன்காரித் தேவனும் சிந்தான் புலியத் தேவனும் இருவகைபேரும்
எங்கள் காணியாவது

5 கணக்கன் வயல் விலைப்பிறமானம் பண்ணிக்குடுத்த பரிசாவது ஊரது
புரவு பெருநா

6 ன்ங்கெல்லை பேசமங்கல குளத்துக்கு மேற்கு வடபாற்க்கெல்லை
ஆயித்தப்பட்டிக்கு தெற்கு மேற்பாக்

7 கெல்லை னாவிலி வயலுக்கு கிழக்கு தென்பாக்கெல்லை நெட்டி ஏம்பல்
கருங்குழி தாவுக்கு வடக்கு இந்த பெ

8 ருநான்ங்கெல்லைக் குள்ப்பட்ட நஞ்சை புஞ்சை உள்பட கொள் வாருளரோ கொள்வாருளரோவென்று

9 நான் முற்க்கூற அவர் பிற்க்கூற என்மொழிகேட்டு எதிர்மொழி மொழிந்து விற்பதுக் கிசைந்து

10 அறந்தாங்கி நாட்டார் முன்பாகவும் திருப்பெருந்துறை பல நடுவர் முன்பாகவும் விலை நிட்சம் பண்

11 ணின மதுரைமினல் பொன் 76 இந்த பொன் எழுபத்தாறு பொன்னும் ஏகாம்பர தொண்டமானார்

12 க்கு வாங்கி குடுத்தது பொன் 50 கூன்காரித் தேவனும் சிந்தான்புலிய னும் வாங்கினது பொன் 26 ஆக பொன்

13 76 பொன்னும் காட்டி ஏத்தி ஒருமுதலாக என் கய்கிலும் அவர் கை மேலாகவும் பத்திக் கொண்ட

14 படியினாலே யிதுவே ஓலையும் சாதனமாக ஆண்டும் அனுபவித்து வித்தும் ஒத்திவைய்

15 த்தும் சீதனப் பிறாத்தி கொடுத்தும் சந்திராதித்தவரைக்கும் ஆண்டு கொள்ளக் கடவதா

16 கவும் இதாளுமிடத்தில் தடையிடை வந்தால் நானே தடை தித்துக் குடுப்போமாகவும்

17 இந்தபடிக்கு ஆடியபாத பண்டாரத்தின் கட்டளைக்கு காரிய கத்தரான ராவுத்த பண்டாரத்தின்

18 பாரிசமாக திருவனந்த கட்டளைக்கு சேத்து கட்டளை யிட்டோம் இந்தபடிக்கு அட்டவணை வே

19 லப்பபிள்ளை மகன் குமாரசுவாமியா பிள்ளைக்கு கூங்காரித் தேவனும் சிந்தான் புலியத்

20 தேவனும் சம்மதித்து கிறாமம் சாதனம் பண்ணிக் குடுத்தேன் இந்த சாதனம் எழுதின

21 து வீரப்பப்பிள்ளை ஆவான் எழுத்து இந்தபடிக்கு சாஷ்ச்சி மலையந்த முதலியார் அறந்தா

22 ங்கியிலிருக்கும் காமாட்சித் தேவன் ஆவுடையார் கோயில் செல்லப் பெருமாளய்யன்

23 இந்த கிறாமத்துக்கு யாதாம் ஒருத்தர் தடை பண்ணினால் திருமலை சேதுபதி காத்த தேவர்

24 காரியத்துக்கு கத்தரான அட்டவணை பிள்ளைமாரும் ரெகுனாதத் தொண்டைமானாரவர்

25 கள் காரியத்துக்கு கத்தராள பாண்டித் தேவனும் தன்மத்துக்கு இடக் கடவதாகவும் இந்த தன்மம்

26 ஆவுடைய பரமசுவாமியார்க்கு திருவனந்தல் கட்டளைக்கு கட்டளை யிட்டோம்

## இரண்டாம் பக்கம்

27 இந்த தன்மம் யாதாம் ஒருவர் பரிபாலம் பண்ணினவர் நூறு லிங்கப் பிறதிட்டையும் நூறு

28 கண்ணியா தானமும் நூறு கோதானமும் நூறு பூதானமும் பண்ணின பலன் அடைவார்

29 கள் இந்த தன்மத்துக்கு யாதாம் ஒருவர் அகிதம் பண்ணின்வர்கள் கெங்கைச் கரையிலே

30 காராம்பசுவையும் மாதா பிதாவையும் குருவையும் கொண்ண தோஷத்திலே போக க

31 டவராகவும்

# 14

# இராமேசுவரம் செப்பேடு

இருக்கும் இடம் : 'தமிழ்-சமஸ்கிருதச் சாசனங்கள்' நூல்

அரசர் : சேதுபதி ரகுநாதச் சேதுபதி தேவர்

காலம் : 23–1–1658

**அமைப்பும் செய்தியும்** : இச்செப்பேட்டைப் பதிப்பித்த ஜேம்ஸ் பர்கஸ் அவர்களும் நடேச சாஸ்திரி அவர்களும் இச்செப்பேட்டைப் பற்றிய விவரங்கள் எதுவும் தெரிவிக்கவில்லை. [1]

இராமேசுவரத்தில் இந்தியாவின் பிறமாநிலங்களிலிருந்து வரும் பெரும்பாலான மொழியாருக்குத் தனித்தனிக் குருக்கள்மார் உள்ளனர். சங்கரக்குருக்கள் முதலானவர்கள் மராட்டர்கள் குருக்கள்மார் சபையைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கு முன்பு ஆட்சிபுரிந்த சேதுபதி அரசர்கள் கொடை எதுவும் அளிக்கவில்லை. இவர்கள் இராமநாத சுவாமி பர்வதவர்த்தினி அம்மனுக்குச் சுயம்பாகம், பரிசாரகம் செய்பவர்கள்.

---

1. *Tamil and Sanskrit Inscriptions No.5, pp 70-72.*

இவர்களின் அர்ச்சனா போகத்துக்குச் சேதுபதி அரசர் 'இராமீ சுவரம் சேது ஸ்தானழ் சுவாமி தெரிசனத்துக்கு வருகிற மாராஷ்டக ஸகலசாதி பரிசைகளுக்கும் நீங்களே தீர்த்தப் புரோகிதம் செய்து வருமானத்தை நீங்களே அனுபவித்துக் கொண்டு சுவாமி பூசை பரிசாரகம் சுயம்பாகம் நீங்களே சந்திராதித்திய சந்திரப் பிரவேசம் உள்ளவரைக்கும் ஆண்டு அனுபவித்துக் கொள்ளுஞ' என்று கட்டளை யிட்டு இச்செப்பேடு வெட்டித் தந்தார்.

பின்னர் வரும் சேதுபதி அரசர்கள் இம்முறையைக் காக்கவேண்டும் என்றும் கட்டளையிட்டார்.

இச்செப்பேட்டைக் கீளக்கொடுமளூரில் இருக்கும் இலங்கை மீட்டா பிள்ளை மகன் இராயசம் தாண்டவராயன் என்பவர் எழுதியுள்ளார்.

## செப்பேடு

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாஹந சகாப்தம் 1580 யிதிஞ்மேல்ச் செல்லாநின்ற யேவிளம்பி நாம ஸம்வத்ஸரத்து உத்தராயணத்து ஏமந்த ருதுவில் சுக்கிலபக்ஷத்து பூர்ணமாவாசையு மிந்து வாசரமு சுபயோக சுபகரணமும் கூடின சுபதினத்தில் தேவை

2 நகராதிபன் சேதுமூல ரெட்சா துரந்தரன் ராமனாதசுவாமி காரிய துரந்தரன் சிவபூசைத் துரந்தரன் பரராசசேகரன் பரராச கெச சிங்கம் ரவிகுல சேசரன் ரவிவர்மன் சொரிதுத்து வன்னியன் ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலேசுவரன்

3 அரியராயிர தளவிபாடன் பாசைக்குத் தப்புவராயிர கண்டன் மூவ ராயிர கண்டன் கண்டநாடு கொண்டு கொண்டனாடு கொடா தான் பட்டமானங் காத்தான் துட்டராயிர கண்டன் புவனேகவீரன் வீரவண்ணாபன் வேதியர்

4 காவலன் அரசராவண ராமன் அடியார் வேளைக்காரன் பரதள விபாடன் உரிகோல் சுரதானன் அந்தம்பிர கண்டன் சாடிக் காரர் கண்டன் சாமித்துரோகியள் முண்டன் பஞ்சவர்னன் ராய ராவுத்தன் பனுக்குவார் கண்டன் வைகை வளநாடன்

5 கொட்டமடக்கி வையாளி நாராயணன் இவுளிபாவடி மிதிக்தேறுவார் கண்டன் வீரவெண்பாமாலை இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகைமன்னர் சிங்கம் துரைராயன் ஆத்திற்பாச்சி கடலில் பாச்சி மதப்புலி அடைக்கலங்காத்தான் தாலிக்கு

6 வேலி சத்திராதியன் மிண்டன் வன்னியராட்டந் தவிர்த்தான் மேவலர்கள் கோளரி மேவலவர்கள் சிங்கம் மேவலர்கள் வணங்குமிரு தாளினான் வீரகெம்பீரன் கீர்த்திப் பிரதாபன் ஆரியர் மானங் காத்தான் தொண்டித்துரை காவலன் துர்க ரேவேந்தன்

7 அனும கேதனன் கருடக் கேதனன் பரதனாடகப் பிரவீரணன் கருணா கடாட்சன் குன்றினுயர் மேருவைக் குன்றாய்வளை குனில் பொறித்தவன் திலதநுதல் மடவார்கள் மடலெழுத வருசுமுகன் விசயலெட்சுமீ காந்தன் கலைதெரியும் விற்பனன் சத்தியபாஷா அரிச்

8 சந்திரன் சங்கீத வித்தியா சாகித்திய விநோதன் வீரதண்டை சேமத்தலை வளங்குமிரு தாளினான் சகலசாம்பிராச்சிய நிவாசன் லட்சுமி செயதுங்கராயன் வங்குசாதிபனான துகவூர் கூற்றத்துக் காத்தூரான குலோத்துங்க சோழநல்லூர் கீழ்பால் விரையாத கண்ட

9 னிலிருக்கும் ஸ்ரீ இரணியகருப்பயாஜி சேதுபதி ரகுநாகத் தேவரவர்கள் புத்திரன் சேது ரகுநாதச்சேதுபதித் தேவரவர்கள் இராமீச் சுரத்திலிருக்குஞ் சங்கரகுருக்கள் முதலான குருக்கண்மார் சவையாரனவோர்க்குஞ் சாதனம் பண்ணிக்கொடுத்தது சாதனமாவது இராமீச்சுரம்

10 இராமனாதசுவாமி பருவதவர்த்தினியம்மன் பூசை சுயம்பாகம் பரிசாரகம் செய்துவரப்பட்ட மாராட்ட காளகுருக்கள்மார் சவையாரனவோருக்கும் முன்னிருந்த ராசாக்கள் உங்களுக்கு அர்சனாபோகத்துக்கு கிராமம் பூமி விடாததினாலே இராமீசுரம் ஸேதுஸ்தானம் சுவாமி தெரி

11 சனத்துக்குவருகிற மாராஷ்டகம் ஸகலசாதி பரிசைகளுக்கும் நீங்களே தீர்த்தப் புரோகிதம் செய்து வருமானத்தை நீங்களே அனுபவித்துக்கொண்டு சுவாமிபூசை பரிசாரகம் சுவயம்பாகம் நீங்களே சந்திராதித்திய சந்திரப்பிரவேசம் உள்ளவரைக்கும் ஆண்டு

12 அனுபவித்துக்கொள்ளும்படிக்கு கட்டளையிட்டோம்..... இந்த மஹாதர்ம்ம சாசனத்தை நம்மிட வம்சத்திலுண்டான வர்கள் பரிபாலனம் பண்ணி} வருகிறவர்களுக்கு கெங்கைக் கரையிலும் சேது

13 க்கரையி கோடி சிவலிங்கப் பிரதிஷ்ட்டை பண்ணின பலத்தையும் கோடி அக்கிரகாரப் பிரதிஷ்ட்டை பண்ணின பலத்தையு மடைவார்கள் இந்த தற்மத்துக்கு அகிதம் நினைத்தவர் களுக்கு கெங்கைக்கரையிலேயும் சேதுக்கரை

14 யிலும் காராம்பசுவைக்கொன்ற தோஷமும் மாதா பிதா குருவைக் கொன்ற தோஷத்திலேயும் பொகக்கடவாறாகவும் இப்படிக்கு ஸஹிரண்யோதக தாறாபூர்வமாக மகாதற்ம சாதனம் பண்ணிக்கொடுத்தோம் மாராஷ்டக சங்கரகுருக்கள் முதலான குருக்கள்

15 மார்சவையார் அனவோருக்கும் சேதுபதி ரகுநாதத் தேவரவர்கள் இந்த தற்மசாதனபட்டயம் எழுதினேன் கீளக்கொடு மஞரிலிருக்கும் இலங்கமீட்டா பிள்ளை புத்திரன் இராயசம் தாண்டவராயன் கையெழுத்து

# 15

# இராமநாதபுரம் செப்பேடு

இருக்கும் இடம் : 'தமிழ் - சமஸ்கிருதச் சாசனங்கள்' - நூல்

அரசர் : ரகுநாத திருமலை சேதுபதி காத்த தேவர்

காலம் : 23—1—1658

**அமைப்பும் செய்தியும்** : இச்செப்பேட்டின் நகல் பதிப்பிக்கப்பட்ட நூலிலிருந்து இங்கு பதிப்பிக்கப்படுகிறது.[1] செப்பேட்டைப் பற்றிய பிற விபரங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

கௌதம கோத்திரம் ஆஸ்வலாயன சூத்திரம் ஆகியவற்றைச் சேர்ந்தவரும் ரிக்வேதம் கற்றவருமான சதாசிவ பட்டர் மகன் இராமேசுவரத்தில் இருக்கும் சங்கரக் குருக்களுக்கு நவராத்திரி விழாக் காலத்தில் பத்து நாட்களும் காப்புத் தரிச்சுக் கொண்டு இராமநாதபுரம் அரண்மனையில் உள்ள இராசராசேசுவரி அம்மனுக்குப் பூசை செய்து உற்சவம் நடத்தவும் அப்போது வருகின்ற ஊதியத்தை அனுபவித்துக் கொள்ளவும் காணியாட்சி கொடுத்ததை இச்செப்பேடு கூறுகிறது. அவரது சந்ததியாரும் பரம்பரையாக நவராத்திரிப் பூசை, உற்சவம் நடத்தலாம் என்றும் உரிமை அளிக்கப்பட்டது.

---

1. *Tamil and Sanskrit Inscriptions, No, 6, pp. 72-74,*

இராயசம் பணிபுரியும் அழகப்பன் என்பவர் இச்செப்பேட்டை எழுதியுள்ளார். 1658 இல் மைசூர்ப் படையெடுப்பிலிருந்து மதுரையை மறமன்னர் படை வீரத்தால் காப்பாற்றியதனால் மதுரைத் திருமலை நாயக்கரால் இந்த இராசராசேசுவரி பொற்சிலை சேதுபதி அரசர் கட்கு அளிக்கப்பட்டது மதுரை போல இராமநாதபுரத்திலும் நவராத்திரி விழாக் கொண்டாடும் அனுமதியையும் அளித்தனர். இன்றும் இராமநாதபுரம் சேதுபதி அரசர் அரண்மனையாகிய இராமலிங்க விலாசத்தில் நவராத்திரி விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலியாவாகன சகாற்தம் 1580 இதின்மேல் செல்லாநின்ற யேவிளம்பி நாம சம்வச்சரத்து உத்தராயணத்து யேமந்த ருதுவில் சுக்குலபட்சத்து பூரண அமாவாசையும் இந்துவா சரமும் சுபயோக சுபகறணமும் பெத்த சுபதினத்தில் சேதுக் கரையில் சிவகோத்திரத்தில் தேவைநகராதிபன்

2 சேதுமூல துரந்தரன் ராமனாத சுவாமி காரிய துரந்தரன் சிவபூசை துரந்தரன் பரறாச சேகரன் சந்திர சேகரன் பரறாச சிங்கம் பரறாச சேகரந் சகறாச சேகரன் றாசசிங்கம் இரவிகுல சேகரன் இரவிமார்த்தாண்டன் இரவிவர்ம்மன் சொரிமுத்து வன்னியன் சூரியன் ஸ்வஸ்ரீமன் மகாமண்டலேசுவரன்

3 பாசைக்கு தப்புவராகிய கண்டன் கண்டநாடு கொண்டு கொண்ட நாடு குடாதான் பட்டமானங்காத்தான் துட்டராகிய கண்டன் மூவராகிய கண்டன் புவனேக வீரன் வீரகஞ்சுகன் வேதியர் காவலன் அரசறாவண றாமன் அடியார் வேளைக்காறன் பர தள விபாடன் உரிகோல் சுரதானன்

4 அந்தம்பிற கண்டன் சாடிக்காரர் கண்டன் சாமித்துரோகியள் மிண்டன் பஞ்சவற்ன்னறாயன் ராவுத்தன் பனுக்குவார் கண்டன் கொட்டமடக்கிய வய்யாளிராயன் இவ்வுளி பாவடி மிதித் தேறுவார் கண்டன் வீரவெம்பாமலை இளஞ்சிங்கம் தளஞ் சிங்கம் பரமன்னியர் சிங்கம் சுரகாயல் ஆத்துப் பாச்சி

5 கடலில்பாச்சி மதப்புலி அடைக்கலம் காத்தான் தாலிக்குவேலி சத்தி ராதியள் மிண்டன் வன்னிய ராட்டந் தவிள்த்தான் மேவலர் கோளரி மேவலர் வணங்குமிரு தாளினான் வீரமா கெம்பீரன் கீற்திப் பிரதாபன் பரிக்கு நகுலன் குடைக்கி கருணன்

6 பரத நாடக பத்திப்பிறியன் கற்னாவுதாரன் கருணாகடாச்சன் குண்றணைய மேருவில் குண்றா வளைக்குனில்ப் பொறித்தவன் திலதனுதல் மடமாதர் மடலெளுது வரிசுமுகன் வீரலட்சுமி சம்பன்னன் விசையலட்சுமீ

7 காந்தன் கலை தெரியும் விற்பனன் கந்தர்ப்ப புறமாணன் சத்திய வாண்மையாகும் அரிச்சந்திரன் சங்கீத சாயுச்சிய வித்தியா வினோதன் வீரநண்டை சேமத்தலை விளங்குமிரு தாளினான் செயதுங்கராய வங்குஷன்

8 நாடுகலக்கிய வாகனபுருஷன் தொண்டித்துறை காவலன் துகவூர் கூத்தத்து காத்தூரான குலோத்துங்க சோளநல்லூர் கீள்பால் விரையாத கண்டனில் உடையனாயகன் ரவிகுல சேகரன் இரவிகுல சேகர தளவராயன் திருமலைச்

9 சேதுபதி காத்த தேவரவர்கள் புத்திரன் ரெகுநாத திருமலைச் சேதுபதி காத்த தேவரவர்கள் தானசாதன பட்டையம் தானசாதன பட்டையமாவது கௌதம கோத்ரத்தில் ஆசுவலாயின சூத்ரத் தில் ரிக் சாகாத்யா பகரான சதாசிவ பட்டர்புத்திரன்

10 இறாமீசுபரத்திலிருக்கும் சங்கரகுருக்களுக்கு தானசாசனம் பண்ணிக் குடுத்தது ராசராச ஈசுவரி அம்மன் நவராத்திரை உட்சொபத்துக்கு நமக்குக் காப்புதரிச

## இரண்டாம் பக்கம்

11 தாமும் காப்புத்தரிச்சுக்கொண்டு நவராத்திரை பத்துனாளை உட்சொபத்துக்கும் இராசராச ஈசுபரி அம்மனுக்கு பூசைபண்ணி உட்சொபம் செய்து அதில் வருகிற ஊதியமும் தாமே அனுபவிச்சு

12 க்கொண்டு தமக்கு காணியாட்சியாக தானம் பண்ணிக் குடுத்திருக்கிற படியினாலே ஆதிசந்திராதித்த சந்திரப்பிறவேசம் வரைக்கும் புத்திர பவுத்திர பாரம்பரியந்தரம் நவராத்திரை உட்

13 சொபம்செய்து தாமே அனுபவிச்சுக்கொள்வராகவும் இந்த சமஸ்த்தான

14 த்தில் நம்மிட வம்மிசத்திலுண்டானவர்கள் இந்த தற்மத்தை பரிபாலினம் பண்ணிக்கொண்டு வருகிறவர்களுக்கு றாமதனுக் கோடிக்கரையிலேயும் காசியிலேயும் ஆயிர சிவலிங்கப்பிற திட்டையும்

15 ஆயிரம் அக்கிறாகாரப் பிரதிட்டையும் கோடி கன்னிகாதானமும் னூத்தெட்டுச் சொட்ச மகாதானமும் பண்ணிய புண்ணியம் அனுபவிச்சுக் கொள்வார்கள இதற்கு அகிதம் நினைத்தவர் களுக்கு கெங்கைக்கரையிலே காராம்பசுவை

16 கொன்ற தோசமும் சேதுக்கரையிலே பிறாமணரைக் கொன்ற தோசத்திலேயும் மாதா பிதா குருவைக் கொன்ற தோசத் திலேயும் போகக்கடவாராகவும் இப்படிக்கி சகிரன்னி யோதக தாரா பூருவமாக காணியா ட்சியான தர்மசாதன பட்டையமாக

17 வும் பண்ணிக்குடுத்தோம் சங்கரகுருக்களுக்கு ரெகுநாத திருமலைச் சேதுபதி காத்ததேவரவர்கள் இந்த தர்ம்மசாதன பட்டையம் எழுதினேன் இராயசம் அளகப்பன் கையெழுத்து சுப்ரமண்ய திருமலைய தேவ சேதுபதி ரகுநாதன்

# 16

## அல்லிக்குளம் செப்பேடு

இருக்கும் இடம் : இராமநாதபுரம் தேவஸ்தான அலுவலகம்

அரசர் : ரகுநாத திருமலை சேதுபதி காத்த தேவர்

காலம் : 10—10—1659

**அமைப்பும் செய்தியும்** : இச்செப்பேடு இப்போது கிடைக்கப்பெற வில்லை. இராமநாதபுரம் அரண்மனை தேவஸ்தான அலுவலகக ஏடுகளின் குளப்பிரமானக் கணக்குப் பகுதியில் இச்செப்பேட்டின் நகல் உள்ளது.[1]

திருமலை சேதுபதி அரசர் அவர்கள் இராமநாதபுரத்தில் உள்ள மாரி துர்க்கை அம்மனுக்கு[2] அல்லிக்குளம் என்ற கிராமத்தைக் கொடையாக அளித்ததை இச்செப்பேடு விளக்குகிறது. கொடை அளிக்கப்பட்ட அல்லிக்குளத்திற்கு மேற்கு எல்லை நீலுக்கண்டி கோயில், சூரன்கோட்டை எல்லைப் பிரிவு; தெற்கு எல்லை காட்டுப்

---

1. இச்செப்பேட்டின் நகலை வழங்கியவர்கள் இராமநாதபுரம் டாக்டர் எஸ்.எம். கமால் அவர்களும், கோவை தமிழக அரசு தொல்பொருள் துறை அருங்காட்சியகக் காப்பாட்சியர் திரு.இரா.ப. கருணானந்தம் அவர்களும் ஆவர்.
2. இக்கோயில் இன்று மாரியம்மன் கோயில் என அழைக்கப்பெறுகிறது.

பிள்ளையார் கோயில், சேதுவழி; கிழக்கு எல்லை பேறா கண்மாய்த் தெற்குப் புறகரை ஆகியன கூறப்பட்டுள்ளன. வடக்கு எல்லை கூறப்படவில்லை. வடக்கு எல்லை அல்லிக்குளம் என்ற பெயருடைய குளமே போலும்.

இத்துடன் சூரன்கோட்டை, சக்கரைக் கோட்டை ஆகிய இடங்களிலும் உள்ள நிலங்களும் அளிக்கப்பட்டன. நீர்பாயும் ஒரு மடைக்கு ரகுநாதமடை என்று சேதுபதி அரசர் பெயர் வைக்கப்பட்டிருந்தது.

மாரியம்மன் கோயிலில் நித்தியக் கட்டளை, அபிடேகம், நைவேத்தியம், திருவிளக்கு, பரிவட்டம், சோடச உபசாரம் ஆகியவை நடத்துமாறு கோயில் பூசாரிக்குக் கட்டளையிடப்பட்டது.

பல்வேறு மகமை முறைகள் மாரியம்மன் கோயிலுக்குக் கீழ்க் கண்டவாறு அளிக்க நிர்ணயம் செய்யப்பட்டது.

**அ. இராமநாதபுரம் பட்டணத்தில்**

1. கடைகளில் காசெடுப்பு
2. உப்பு முதல் கற்பூரம்வரை விற்கவரும் பொருள் அனைத்திற்கும் கையெடுப்பு
3. அரண்மனைக் களஞ்சியத்தில் செலவாகும் நெல்லில் ஒரு கல நெல்லுக்கு ஒரு படி நெல்
4. உக்கிராணத்தில் நாள்தோறும் இரண்டுபடி அரிசி
5. கரை உக்கிராணத்தில் நாள்தோறும் ஒரு கோழி ஐந்து முட்டை திங்கட்கிழமை தோறும் ஒரு ஆட்டுக்கிடாய்

**ஆ. இராமநாதபுரம் சீமையில்**

1. குடி ஒன்றுக்கு வருடக்கட்டளை ஒரு பணம்
2. சாராயக்குடிகள் பானை இறக்கும்போது கால்பணம்
3. இடையர்கள் விளக்கெரிக்க அரைப்படி நெய்
4. வாணியர் ஆண்டுதோறும் ஒருபடி நல்லெண்ணெய்
5. கடைகளில் பூசாரி கையில் ஒரு கையெடுப்பு

6. சேது நாட்டில் தமிழ் இசுலாமியர், அராபியர், பட்டுநூல்காரர், இளம்பஞ்சுக்காரர், வள்ளுவர், பறையர் இவர்களில் யார் தறி போட்டு நெய்தாலும் நெசவன் ஒவ்வொருவனும் தறி ஒன்றுக்குப் பரிவட்டத்திற்கு ஒரு பணம்

7. பனையேறி சாணார் குடி ஒன்றுக்கு திருப்பணி வேலைக்கு 30 பலம் கருப்புக்கட்டி

8. பங்குனித் திருவிழா அரசருடையது; அரசு உள்ளவரை ஐம்பது பொன், ஐம்பது கல நெல், இரண்டு பட்டுப்புடவை, தீபத்துக்கு நாள்தோறும் பதக்கு எண்ணெய், பத்துக்கோழி, ஐந்து முட்டை, இரண்டு கிடாய்

**இ. சேதுநாட்டில்**

1. செம்பிநாடு, திருச்சிநாடு, அஞ்சுகோட்டை நாடு, குமாரணிப் பத்து, குண்டயன் கோட்டை, கீழக்கரை, மேல்க்கரை, கமுதிச் சீமை, சிவகங்கைச் சீமை, அறந்தாங்கிச்சீமை, பட்டுக்கோட்டைச் சீமை போன்ற சேதுபதி ஆளுகைக்குட்பட்ட சீமைகளில் எல்லாச்சாதியினரும் குடி ஒன்றுக்கு முத்திரைப் படியில் ஒருபடி தானியம்

2. கடல் துறைமுகத்தில் வலை, தோணி, இவை ஒன்றுக்கு ஆண்டு தோறும் இரண்டு பணம்.

3. முத்துச் சலாபத் துறையில் தோணி ஒன்றுக்குப் பத்துச் சிப்பி

4 உப்பளத்தில் குடி ஒன்றுக்கு இரண்டு பணம்

என இவைகள் மகமையாக மாரியம்மன் கோயிலுக்கு அளிக்க வேண்டும்

இச்செப்பேட்டின் மூலம் சேது நாட்டில் வணிகமும், வேளாண்மையும் சிறப்பாக நடைபெற்றதையும், சாராயக்குடிகள், வணியர், இடையர் ஆகியோர் தொழில் செய்ததையும், நெசவுத் தொழில் சிறப்பாக நடைபெற்றதையும், கடற்கரைப் பகுதியில் மீன் பிடித்தல், முத்துக்குளித்தல், உப்பெடுத்தல் போன்ற தொழில்கள் சிறப்புற நடைபெற்றதையும் அறிகின்றோம்.

17 ஆம் நூற்றாண்டில் 'நெசவன்' என்று நெசவு நெய்பவர் அழைக்கப்பட்டது சிறப்புக்குரியதாகும். மாரியம்மன் கோயிலில் உயிர்ப்பலி கொடுக்கப்பட்டுள்ளது இச்செப்பேடு மூலம் தெரிகிறது.

## செப்பேடு

1 சுவஸ்திஸ்ரீ சாலியவாகன சகாப்தம் 1581 இதன்மேல் செல்லாநின்ற

2 விகாரி வருஷம் அற்பிசி மாசம் 9ஊ மங்கள வாரமும் பஞ்சமியும்

3 மூல நட்சத்திரமும் கூடிய சுபதினத்தில் ஸ்ரீமன் தேவநகராதிபன் சேதுமூல ரட்

4 சா துரந்தரன் ராமநாதசுவாமி காரியா துரந்தரன் பரராசசேகரன் பரராச கெச

5 சிங்கம் இரவிகுல சேகரன் இரவி மார்த்தாண்டன் சொரிமுத்து வன்னியன்

6 ஸ்ரீமன் மகா மண்டலேசுவரன் அரியதள விபாடன் பாசைக்கு தப்புவ ராயிர கண்டன்

7 கண்டநாடு கொண்டு கொண்டநாடு கொடாதான் பாண்டியமண்டல சண்டப்

8 பிரசண்டன் ஈளமும் கொங்கும் யாழ்ப்பாண பட்டணமும் கெசவேட் டைகொண்

9 டருளிய ராசாதிராஜன் ராஜபரமேஸ்வரன் ராஜ மார்த்தாண்டன் ராஜ

10 கெம்பீரன் பரதள விபாடன் உரிகோல் சுரதானன் அந்தப்பிர சண்டன் சாமி

11 துரோகியள் மிண்டன் இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகைமன்னர் சிங்கம்

12 ராஜசிங்கம் ஆத்தில்பாச்சி கடலில்பாச்சி மதப்புலி அடைக்கலங் காத்தான்

13 தாலிக்கு வேலி சத்துராதியள் மிண்டன் வன்னியராட்டந் தவிர்த்தான்

14 மேவலர்கள் கோளரி மேவலர்கள் வணங்குமிரு தாளினான் வீரகெம்பீரன்

15 அசுபதி நரபதி கெசபதி தனபதி அறிவுக்கு அகத்தியன் சொல்லுக்கு அரிச்

16 சந்திரன் வில்லுக்கு விசயன் மல்லுக்கு வீமன் தாலிக்கு வேலி அன்ன சத்திர

17 சோமன் செம்பிவள நாடன் பூலோக தேவேந்திரன் செங்காவிக் குடையான்

18 ஸ்ரீமது ஹிரண்யகெர்ப்பயாஜி ஸ்ரீமது ரெகுநாத திருமலை சேதுபதி காத்த

19 தேவர் அவர்கள் இராமநாதபுரம் மாரி துர்க்கை அம்மனுக்கு நித்திய

20 கட்டளை அபிஷேக நைவேதனம் திருமாலை திருவிளக்கு பரிட்டம் சோடச

21 உபசாரமும் நடப்பிவிச்சுவரச்சொல்லி பூசாரிக்கு காணியாட்சியாக

22 கொடுத்து சேத்திர சுவாத்தியம் கிராமம் பூமிதானம் மகமை கடையில் கா

23 செடுப்பும் உப்பு முதல் கற்பூரம் வரைக்கும் பட்டணத்திலே விலை யாகின்ற

24 பதார்த்தங்கள் என்ன வந்தாலும் கையெடுப்பும் நம்மிட களஞ்சியத்தி

25 லே படிமுறை சிலவில் கலத்திற்கு ஒரு படி நெல்லும் உக்கிராணத்தில் தினம்

26 இரண்டுபடி அரிசியும் கரை உக்கிராணத்தில் நித்திய கட்டளை ஒரு கோழி

27 யும் அஞ்சு முட்டையும் மங்கள வாரத்திற்கு ஒரு கிடாயும் சீமையில்
28 குடி ஒன்றுக்கு வருஷக்கட்டளை ஒரு பணமும் சாராயக்குடிகள் பாளை

29 இறக்குகயில் கால்பணமும் துவசத்து இடைகுடி யானுக்கு திருவிளக்குக்கு

30 அரைப்படி நெய்யும் வாணியர் குடிகளுக்கு வருஷத்தில் நல்லெண்ணெய்

31 ஒரு படியும் கடையில் பூசாரி கையினாலே ஒரு கையெடுப்பும் சேது ராஜ்ஜிய

32 த்தில் துலுக்கர்கள் சோனகர்கள் பட்டுநூல்காரர்கள் இளம்பஞ்சுக்காரன் வள்ளுவன்

33 பறையன் எந்த சாதியிலே தறி போட்டாலும் நெசவன் தறி ஒன்னுக்கு

34 பரிவட்டத்துக்கு ஒரு பணமும் பனையேரி சாணான் குடி ஒன்னுக்கு

35 திருப்பணி வேலைக்கு முப்பது பல கருப்புக்கட்டியும் பங்குனித் திருவிழாவுக்கு அர

36 மனையில் சொந்தமாக நம்முட வசமிருக்கும் குடைமேற் சல்லியும்

37 உள்ளவரைக்கும் அன்பது பொன்னும் அன்பதிங்கல நெல்லும் பட்டுப் புடவை

38 இரண்டும் தீபத்துக்கு தினம் ஒன்றுக்கு பதக்கு யெண்ணெயும் பத்துக் கோழியும்

39 அஞ்சு முட்டையும் இரண்டு கிடாயும் கொடுத்து திருவிழா நடப்பி விக்கிறது

40 செம்பிநாடு குருச்சிதாடு அஞ்சு கோட்டைநாடு குமாரணிபத்து குண் டயன் கோட்டை கீழக்கரை மேல்கரை குழுதசீமை சிவகங்கை சீமை அரந்தாங்கி

41 பட்டுக்கோட்டை சீமை நம்மிட சிமையிலிருக்கப்பட்ட குடிகள் பதினெண்

42 சாதியும் குடி ஒன்றுக்கு முத்திரை படியில் ஒரு படி தவசமும்

43 கடல் துறைமுகத்தில் வலை தோணி ஒன்னுக்கு வருஷசத்தில் இரண்டு

44 பணமும் சலாபத் துறையில் தோணி ஒன்னுக்கு பத்து சிப்பியும் உப்பளத்தில்

45 குடி ஒன்னுக்கு ரெண்டு பணமும் வாங்கிக்கொள்கிறது சர்வ மானியம் தர்மசாதனம்

46 பண்ணிக்கொடுத்த கிராமமாவது அல்லிக்குளத்திற்கு எல்லையாவது

47 மேற்கு எல்லை நீலுகண்டி கோவிலுக்கும் சூரன்கோட்டை எல்லை பிரிவிற்கும் கிழக்கு

48 தெற்கு எல்லையாவது காட்டு பிள்ளையார் கோவிலுக்கும் சேது மார்க்கத்

49 துக்கும் வடக்கு கிழக்கு எல்லையாவது பேறா கண்மாய் தெற்கு புறகரைக்கும்

50 மேற்கு இந்நான்கெல்லைக்குட்பட்ட நன்சை புஞ்சை மாவிடை மரவிடை திட்டுத் திடல்

51 கீழ்நோக்கிய கிணறும் மேல் நோக்கிய மரமும் சர்வ மானியமும் சூரன்கோட்டை

52 சக்கரக்கோட்டை கிராமத்தில் கல விரைப்பாட்டுக்கு அரைமரக்கால் நெல்லும் விறை கலத்துக்கு ஒன்னறைபடி நெல்லும் சூரங் கோட்டையில் சர்வ மானியம்

53 இருகல விரையடியும் தேவதான தானமாக ஆண்டுகொள்வீராகவும்

54 இதில் யாதாமொருவர் விக்கினம் பண்ணினால் கெங்கை கரையிலே யும் சேது கரையிலேயும்

55 காராம்பசுவைக் கொன்ற தோஷத்திலேயும் பிருமஹத்தி பண்ணின

56 தோஷத்திலேயும் போகக்கடவாராகவும்

# 17

# ஆனையேறிவயல் செப்பேடு

இருக்கும் இடம் : அரசு அருங்காட்சியகம், எழும்பூர் சென்னை

அரசர் : திருமலை தளவாய் சேதுபதி காத்த தேவர்

காலம் : 25—1—1658

அளவு : 23 செ.மீ. × 16.5 செ.மீ.

**அமைப்பும் செய்தியும் :** சேதுபதி அரசர் அவர்கள் கௌண்டிண்ய கோத்ரம் ஆபஸ்தம்ப சூத்திரத்தைச்சேர்ந்த செவிய்யம் ராமய்யன் மகன் அஹோபலய்யனுக்கு காளையார் கோயில் சீமையில் விறிசிலையாத் துப்பாய்ச்சலில் சில ஊர்களைக் கொடையாகக் கொடுத்ததை இச் செப்பேடு கூறுகிறது. கொடை பெற்றவர் கற்றறிந்த சான்றோராக இருந்திருக்க வேண்டும்.

ஒரு அமாவாசைப் புண்ணிய காலத்தில் தனுஷ்கோடிக் கரையில் இக்கொடை அளிக்கப்பட்டது. கொடையளிக்கப்பட்ட ஊர்களுக்கு ஆனையேறிவயல், சூரநேம்பல், கீழைச் சூரநேம்பல், மாவூரணி, திருப்பராதியான் ஊரணி, பெரியநேந்தல் எனப் பெயர்கள் கூறப் படுகின்றன. இராயசம் சொக்கனாதபிள்ளை எழுதிய ஆணையை திருப்புல்லாணி தெய்வச் சிலை ஆசாரி மகன் வெத்தி வேலாயுதன் ஆசாரி என்பவர் இச்செப்பேட்டை வெட்டியுள்ளார். திருப்புல்லாணி

தெய்வச்சிலைப் பெருமாள் பெயரை ஆசாரி வைத்துக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

கொடையளிக்கப்பட்ட ஊர்களுக்கு மேற்கு எல்லை சோசியன் திடல், வடக்கு எல்லை விரிசிலையாறு, கிழக்கு எல்லை பனஞ்செய், பொற்கோட்டை, தெற்கு எல்லை திருமண்குளக்கால் என்பவை கூறப் படுகின்றன.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாஹன சகாப்தம் 1579 இதன்மேல் செல்

2 லாநின்ற விளம்பிநாம ஸம்வத்ஸரத்து உத்திராயணத்தில் ஹே

3 மந்த ரிதுவில் புஷ்ய மாஸத்தில் கிருஷ்ண பக்ஷமும் ஸோமவாரமும் பமா

4 வாஸ்யையும் ஸ்ரீரவண நக்ஷத்திரமும் ஸுகர்மநாம யோகமும் பாலவா

5 கரணமும் பெத்த சுபதினத்தில் தேலைவ நகராதிபன் சேதுமூலா துரந் தரன்

6 ராமனாதசுவாமி காரிய துரந்திரன் சிவபூசா துரந்திரன் பரராச கெ

7 ச சிங்கம் ரவிகுல சேகரன் ரவிம்மன் சொரிமுத்து வன்னியன் ஸ்வஸ்திஸ்ரீ ம

8 ன் மகாமண்டலேசுரன் அரியராய தள விபாடன் பாஷைக்கு தப்பு வராக்

9 ள் கண்டன் மூவராய கண்டன் பதினெட்டு பாளையகாரர் மிண்டன் கண்ட

10 னாடு கொண்டு கொண்ட னாடு கொடாதான் பட்டமானங் காத்தான் பரதேசி கா

11 வலன் துட்டராய மிண்டன் புவனேகவீரன் வீரகஞ்சுகன் வீரவ

12 ளனாடன் வேதியர்கள் காவலன் அரசராவணராமன் அடியார் வேளைக்காற

13 ன் பரதள விபாடன் உரிகோல் சுந்தரன் அண்டம்பர கண்டன் சாமி துரோகி

14 யன் மிண்டன் பஞ்சவற்ண ராயராவுத்தன் வையிகை வளநாடன் கொட்ட ம

15 டக்கி வய்யாளி நாறாயணன் இவுளிபாவடி மெதித்து யேறுவார்கள் கண்டன்

16 வீரவெண்பாமாலை இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பதைமன்னர்சிங்கம் துர்

17 க ரேவேந்தன் அனுமகேதனன் கொடைக்கு கற்னன் குதிரைக்குநகுலன்

18 மல்லுக்கு வீமன் சொல்லுக்கு அரிசந்திரன் ஆனெக்கு தேவேந்திரன் பர

19 த நாடக பிறவீணன் கருணாகடாட்சன் கலைதெரியும் விற்பன்னன் காமினி கந்தற்

20 பன் வீரதண்டை சேமத்தலை விளங்கும்மிரு தாளினான் ஸகல சாம்பராச்சிய

21 லக்ஷமிநிவாஸன் தொண்டிய துரை காவலன் அன்னதாந தநதாந ஸ்வர்னதாந ஷோ

22 டசமஹாதாந ஸ்ரீமன் செயதுங்கராயன் வம்சாதிபநாந துகவூர் கூத்தத்து காத்

23 தூரான குலோத்துங்க சோழநல்லூர் கீழ்பால் விரையாதகண்டனி லிருக்கும் ஸ்ரீ

24 திருமலை தளவாய் சேதுபதி காத்த தேவரவர்கள் புத்ரன் காஸ்யப கோத்ரத்து ஸ்ரீ ஹிர

25 ண்ய கர்ப்பயாஜி திருமலை ரெகுனாத சேதுபதி காத்த தேவரவர்கள் கௌண்டி

26 ண்ய கோத்ரத்து ஆபஸ்தம்ப ஸூத்ரத்து செவிய்யம் ராமய்யன் புத்ரன் அஹோப

27 லய்யனுக்கு பூமிதாந தர்ம்ம சாஸநம் பட்டயம் கொடுத்தபடி பூதாநம் பண்

## இரண்டாம் பக்கம்

28 ணி கொடுத்த கிறாமமாவது காளையார் கோவில்ச் சீமையில் விறிசிலையாத்துப் பாச்சலில்

29 இக்கறைப் புரவில் சொரியன்திடலுக்கு கிளக்க விறிசிலையாத்துக்குத் தெற்கு பணஞ் செய்க்கும்

30 பொற்க் கோட்டைக்கு மேற்கு திருமண் குளக்காலுக்கு வடக்கு இந்தப்பெருனாங் கெல்லைக்கு

31 ள்ப்பட்ட ஆனையேற்வயல் சூரநேம்பல் கீளைச்சூரநேம்பல் மாவூரணி திருப்பராதியான் வூர

32 ணி பெரியநேந்தல் இதுக்கு உள்பட்ட ஊறணி உடப்பு நஞ்சை புஞ்சை திட்டு திடல் பள்ள

33 ம் படுகை மாவிடை மரவிடை தோப்பு துரவு ஆத்துக்கால் ஊத்துக் கால் மடகுளி

34 யேந்தல் மேல்நோக்கிய மரம் கீள்நோக்கிய கிணறு கால்ப்புரவு மத்து மே

35 ல்ப்பட்ட லகல சமூதாய பிராப்தியும் நிதி நிக்ஷேப ஜல தரு பாஷாண ரக்ஷிண்யாகாம்ய ஸித்த ஸா

36 த்யமென்று சொல்லப்பட்ட அஷ்ட போக தேஜ ஸ்வாம்யங்களும் தமக்கு தை அமாவாஸ்யை

37 புண்ணிய காலத்தில் தனுஷ்கோடிக் கரையில் ஸஹிரண்யோதக தாராபூறுவமாக

38 பூதானம் பண்ணிக்குடுத்தபடியினாலே தாநாதி விநிமிய விக்கிறயங் களுக்கு யோ

39 க்கியமாக ஆசந்த்ரார்க்கமும் புத்ர பௌத்ர பாரம்பரியமாக சந்த்ராதித் ஞிய சந்திரப்

40 பிறவேசமாக சறுவமான்னியமாக ஆண்டு அனுபவித்துக்கொள்வாறா கவும் இந்

41 த தற்மத்தை யாதாமொருத்தர் பரிபாலனம் பண்ணினவர்கள் தலுக் கோடிக்கரையிலே

42 யும் கெங்கைக்கரையிலேயும் கோடி பிரம்ம பிரதிஷ்டையும் கோடி சிவலிங்கம் பிரதிஷ்டையு

43 ம் பண்ணின பலத்தையும் அடவாறாகவும் இந்த தற்மத்துக்கு அகிதம் பண்ணினவர்கள் கெங்

44 கைக்கரையிலையும் தனுக்கோடிக்கரையிலையும் கோடி பிறம அத் தெயும் காறாம்பசுவை

45 யும் கொண்ண தோஷத்திலே போகக்கடவாறாகவும் தாநபாலந யோர்ம்மத்யே தாநா

46 த் ஸ்ரெயோநு பாலநம் தாநா ஸ்வர்க மவாப்நோதி பாலநாச்சுதம் பதம்: ஸ்வதத்தா

47 த்வி குணம் புண்யம் பரதத்தாநு பாலநம் பரதத்தாப ஹாரேண ஸ்வதத்தம் நிஷ்பலம்

48 பவேத் : ஸ்வதத்தா பரதத்தாம் வாயே ஹரேந்தி வஸுந்திரா ஸஷ்டி வர்ஷ ஸஹஸ்ரா

49 ணாம் விஷ்டாயாம் ஜாயதே கிருமி : யேகைவ பூமீ நீ லோகே ஸர்வேஷா மேவ பூபு

50 ஜா நகோஜ்யா நகரக் ராஹ்யா விப்ர தத்தா வஸுந்த்ரா ; இந்த தான சாஸநம் யெளுதினே

51 ன் ராயசம் சொக்கனாத பிள்ளை சவாதுபடிக்கு திருப்புல்லாணியிலே இருக்கும்

52 தெய்வச்சிலை ஆசாரி மகன் வெத்திவேலாயுதனாசாரி எழுத்து உ

# 18

## திருப்பெருந்துறைச் செப்பேடு

இருக்கும் இடம் : திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை

அரசர் : திருமலை சேதுபதி ரகுநாதத் தேவர்

காலம் : 21—1—1661

அளவு : 9 செ.மீ. × 40 செ.மீ.

**அமைப்பும் செய்தியும் :** இச்செப்பேடு நீண்ட வடிவில் அமைந்து இரண்டு ஏடுகளில் மூன்று பக்கங்களில் எழுதப்பட்டுள்ளது. கைப்பிடி இன்றிப் பழைய செப்பேடுகளின் வடிவில் அமைந்தது இச்செப்பேடு. முதற் செப்பேட்டின் வலப்புற ஓரத்தில் மேல் பகுதியில் குருந்த மரமும் கீழ்ப்பகுதியில் சிறிய திரிசூலமும் இடையில் உ மங்கலக் குறியும் வரையப்பட்டுள்ளது. மூன்றாம் பக்கத்தில் 'ஸ்ரீ சுப்பிரமணிய திருமலைய சேதுபதி ரகுநாதன்' என்று தெலுங்கில் ஒரு வரியில் எழுதப் பட்டுள்ளது.

திருமலை சேதுபதி ரகுநாதத் தேவர் அவர்கள் மதுரை நாயக்க மன்னர் திருமலை நாயக்கர் (1623-1659) புண்ணியத்திற்காகவும் தம் தந்தை தளவாய் சேதுபதி காத்த தேவர் அவர்கள் (1635-1645) புண்ணியத்திற்காகவும், தங்கள் மாதா பிதா ஆகியோரின் பற்றகத் துக்குப் புண்ணியமாகவும் திருப்பெருந்துறையில் ஆவுடைய பரம சுவாமியாருக்கு உஷாக்காலப் பூசை நடத்துவதற்காக அக்கட்டளை நடத்தும் பரதேசி முத்திரை அம்பலத்தாடும் பண்டாரம் அவர்கள்

வசம் பரதேசிக் கட்டளையாக நடக்கின்ற பல கிராமங்களைக் கொடையாக அளித்ததை இச்சேப்பேடு கூறுகிறது. இக்கொடை அளிக்கப்பட்டபோது திருவாவடுதுறை ஆதீனத் தலைவராக விளங்கியவர் ஸ்ரீ இராமலிங்க தேசிகர் (1658-1678).

அக்கிராமங்கள் வெள்ளாம்பற்றுச் சீமை, அஞ்சிரண்டு சீமை, அறந்தாங்கிச் சீமை, பட்டுக்கோட்டைச் சீமை, புதுக்கோட்டைச் சீமை, திருப்புத்தூர்ச் சீமை, சூரைக்குடிச் சீமை, தேர்போகி நாட்டுச்சீமை, முத்துநாட்டுச் சீமை ஆகிய சீமைகளில் உள்ள கொடைக் கிராமங்கள் ஏந்தல், உள்க்கிடை உட்பட அளித்தார்.

பள்வரி முதலாகிய பலவரிகள், கோசாலை வரி, நன்மாட்டுவரி, நவமிக்கிடாய் ஓட்டுகிறது உட்பட பல சில்லறை வரிகளும் அளிக்க வேண்டாம் என்று சேதுபதி அரசர் கட்டளையிட்டார்.

பிற்காலச் சந்ததியார்களும் இக்கொடையை என்றும் அழியாமல் காக்கவேண்டும் என்று வேண்டுகோளும் விடுத்துள்ளார்.

இறுதியில் தானத்தைக் காப்பதன் பெருமை கூறும் வடமொழிச் சுலோகம் ஒன்று கிரந்த எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளது.

இச்செப்பேட்டுக்கு இரண்டு ஏடுகளில் நான்கு பக்கங்களிலும் எழுதப்பெற்ற வேறு செப்பேடு நகலும் திருவாவடுதுறை ஆதினத்தில் உள்ளது.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 ஸ்வஸ்திஸ்ரீ சகாப்தம் 1582 மேல் செல்லாநின்ற சார்வரி நாம சம்வத்சரத்து உத்தரா

2 யணத்து மாக மாசத்து அபர பட்சத்து ஏகாதசியும் ஆதித்ய வாரமும் அவிட்ட நட்சத்திரமும் சிவநா

3 ம யோகமும் பெற்ற புண்ய காலத்து திருப்பெருந்துறையில் ஆவுடையப் பரம சுவாமியார்க்கு உஷா கா

4 ல பூசைக் கட்டளை நடத்தும் பரதேசி முத்திரையரன அம்பலத் தாடும் பண்டாரம் அவர்களுக்கு தே

5 தவை நகராதிபன் சேதுமூல ரக்ஷா துரந்தரன் இராமநாத சுவாமி பறுவத வத்தனியம்மை காரிய து

6 ரந்திரன் சுப்பிரமணிய பாதாரவிந்த சேவிதன் பரராச சிங்கம் பரராச சூரியன் பரராச சேகரன் இரவி

7 குல சேகரன் சொரிமுத்து வன்னியன் துட்ட ராயிர கண்டன் சாடிக் காறர் கண்டன் சாமித்துரோ

8 கியள் மிண்டன் அந்தம்பர கண்டன் அடியார் வேளைக்காறன் அரைச ராவண ராமன் பஞ்சத்து மாரி பனு

9 க்குவார் கண்டன் பட்டமானங் காத்தான் பட்டம் பரம்பிடித்தான் தாலிக்கு வேலி ஐவா

10 ய்ப் புலி இளஞ்சிங்கம் தளஞ்சிங்க —ம் வீரவெண்பாமாலை வைகை வளநாடன் பரதள விபாடன் பஞ்சவன்ன ர

11 ாய ராவுத்தன் புவனேக வீரன் வேதியர் காவலன் கொட்டமடக்கி வய்யாளி நாராயண

12 ன் இவ்வுளி பாவடி மிதிதேறுவார் கண்டன் பகைமன்னர் சிங்கம் ஆத்தில் பாச்சி கடலிற்ப் பாச்சி

13 சத்துருக்கள் மிண்டன் மேவலர் கோளரி வீரகெம்பீரன் கீர்த்திப் பிறதாபன் பகைநாட

## இரண்டாம் பக்கம்

14 க சூத்திரப் பிறதாபன் பத்தி முத்திப் பிறியன் வீர லட்சுமி விசைய லட்சுமி சூரிய்க்கிய லட்சுமி காந்தன் ச

15 ர்ப்பன்ன பாஷா விசஷ்சணன் சகல குணசம்பண்ணன் சங்கீத சாகித்ய வித்யா விநோதன் திருமலை நரே

16 ந்திரன் மெச்சிய சாமித் துரோகியள் மிண்டன் வீரை வளநாடன் தொண்டியந் துறைவன் அடைக்கல

17 ங் காத்தான் வன்னியராட்டந் தவிழ்த்தான் மூவராயிர கண்டன் சாமித்துரோக வெண்டைய காவ

18 லன் வீரதண்டை சேமத்தலை விளங்கிய தாளின்னான் துரை ராயன் செயதுங்க ராயன் வம்சாதிபனா

19 ன துகவூர்க் கூற்றத்துக் காத்தூரான குலோத்துங்க சோழ நல்லூரீ கீழ்பால் விரையாத கண்டனிலிருக்

20 கும் தளவாய் சேதுபதி புத்ரன் ஸ்ரீ திருமலைய சேதுபதி ரகுநாதத் தேவர் கத்தாக்கள் திருமலை நாயக்கள

21 ரயனவர்களுக்கும் தளவாய் சேதுபதி காத்த தேவரவர்களுக்கும் எங்கள் மாதா பிதாவினுடைய பற்ற

22 கத்துக்கும் புண்ணியமாகத் தன்ம சாதனப் பட்டையங் குடுத்தபடி யிந்தப் பரதேசிக் கட்டளையி

23 ல் சேந்து நடக்கிற கிறாமங்கள் வெள்ளாம்பற்றுச் சீமை அஞ்சிரண்டுச் சீமை அறந்தாங்கிச் சீமை பட்டுக்கோட்

24 டைச் சீமை புதுக்கோட்டைச் சீமை திருப்பத்தூர் சூரைக்குடிச் சீமை தேர்போகிநாடு மூத்துநாடு இந்தச் சீமைக

25 ளிலே நடக்கிற கிறாமங்கள் ஏந்தல் உள்க்கிடை முதலாகியதுக் கெல்லாம் பள்வரி முதலாகிய சகல பலவரியளும் கட்டளை யிலே சேர்ந்த மனுஷர் உள்பட கோசாலை

26 வரி நன்மாட்டுவரி மகாநவமி கிடாய் ஓட்டுகிறது உரமிறியில் மற்று முண்டாகிய பல சில்லறை வரியளும் வேண்டாமென்று

27 நாம் அபிமானித்துச் சறுவ மானியமாகக் கட்டளையிட்ட படியினாலே நம்மை அடைந்த மனுஷரெல்லாம் இந்தத் தன்மசா

28 தனப் பட்டையப்படிக்கு ஒரு சில்லறைகளும் வாராமல் இந்தப் புண்ணியத்தை பரிபாலனம் ப

29 ண்ணிப் பூறுவா பூறுவம் நடந்தபடியே உத்தரோத்தரமாக நடப்பிக்கக் கடவோராகவும் இந்தத் த

30 ன்மத்தை யாதாமொருத்தர் பரிபாலனம் பண்ணின பேர்கள் கெங்கைக் கரையிலும் சேதுக் கரையிலும் ஆ

31 யிரங் கயிலைப் பசுவும் ஆயிரம் பிராமணர் குடும்பப் பிறதிட்டை யும் அனேக கோடி பூதான கன்னி

32 யாதானமும் பண்ணின புண்ணியத்தை அடையக்கடவாராகவும் அநேக கோடி சிவலிங்க பிறதிட்டை

33 பண்ணின புண்ணியத்தையும் அடையக் கடவராகவும் இந்தத் தன்மத்துக்கு யாதொருத்தரி அகிதம் பண்

34 ணின பேர்கள் கெங்கைக் கரையிலும் சேதுக்கரையிலும் காராம்
பசுவையும் குருவையும் மாதா

35 பிதாவையும் கொன்ற தோஷத்திலே போகக்கடவாராகவும் இப்படி
சம்மதித்து ஸ்ரீதிருமலைய சேதுபதி ரகுநா

36 த தேவர் ஆவுடைய பரம சுவாமியார்க்கு உஷா கால பூசைக்
கட்டளை நடத்தும் அம்பலத்தாடும் பண்டாரம் அவ

37 ர் களுக்கு தம்ம சாசனப் பட்டையம் குடுத்தோம் இப்படிக்கு உ

38 ஸ்வஸ்திரஸ்து உ தாந பாலந யோர்மத்யே தாநாத் ஸ்ரயோநு பாலநம்
தாநாத் ஸ்வர்க்க மவா

39 ப்நோதி பால்நாத் அச்சுதம் பதம் : உ

ஸ்ரீசுப்ரமணிய திருமலைய சேதுபதி ரகுநாதன்

# 19

# நாட்டிசேரிச் செப்பேடு

| | | |
|---|---|---|
| இருக்கும் இடம் | : | திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை |
| அரசர் | : | திருமலை சேதுபதி காத்த தேவர் |
| காலம் | : | 4–2–1661 |
| அளவு | : | 33.5 செ.மீ × 17.5 செ.மீ |

**அமைப்பும் செய்தியும் :** இச்செப்பேடு வேலைப்பாடு எதுவும் இல்லாமல் நீண்டதும் துளையுடையதுமான கைப்பிடியை உடையது. கைப்பிடியின் தலைப்பில் உ மங்கலக் குறியுள்ளது. செப்பேட்டின் முதல் பக்கம் முகப்பில் அழகிய பீடத்தின்மேல் வேலைப்பாடு மிக்க திரிசூலம் ஒன்று நின்ற நிலையில் வரையப்பட்டுள்ளது. சூலத்தின் கீழ் கைப்பிடியின் மையப்பகுதியின் அடிப்பக்கம் தமிழிசை பாடுவோர் கையில் வைத்திருக்கும் 'தாளம்' வரையப்பட்டு அதன் இடையில் அதன் பெயரும் 'தாளம்' எனப் பொறிக்கப்பட்டுள்ளது. அதன் கீழ் மற்றுமொரு உ மங்கலக்குறி உள்ளது.

இரண்டாம் பக்கம் செப்பேட்டின் இறுதிப் பகுதியில் அழகிய இணைக்கவரி வரையப்பட்டு அதன் தலைப்பில் 'குருநமசிவாயம்' என எழுதப்பட்டுள்ளது. அதனையடுத்து முனிவர்கள் பயன்படுத்தும் ஞானத்

தண்டின் மேல் படுத்திருக்கும் நந்தி உருவம் வரையப்பட்டுள்ளது. அருகில் முன்பக்கம் இருப்பது போன்றே சூலம்வரைந்து அதன் அருகில் பெயருடன் தாளமும் மீண்டும் வரையப்பட்டுள்ளது. செப்பேட்டில் கண்ட காலத்தில் திருவாவடுதுறை ஆதீனத்தலைவராக விளங்கியவர் ஸ்ரீ இராமலிங்க தேசிகர் ஆவார் (1658-1678). அம்பலவாண பண்டாரம் அவருக்கும் கீழ் இருந்தவர் போலும்.

இரண்டாம் பக்கம் ஒரே தொடரில் தெலுங்கில் 'ஸ்ரீ சுப்ரமண்ய திருமலைய சேதுபதி ரகுநாத்' என எழுதப்பட்டுள்ளது. செப்பேட்டின் கீழ்ப்பகுதி இரு ஓரங்களும் சிறிது சிதைந்துள்ளன. அதனால் ஓரிரு எழுத்துக்கள் மறைந்துள்ளன.

திருமலை சேதுபதி இரகுநாதத் தேவரவர்கள் மதுரை நாயக்க மன்னர் கர்த்தாக்கள் திருமலை நாயக்கரய்யன் அவர்கட்கும் தன் தந்தை தளவாய் சேதுபதி காத்த தேவர் அவர்கட்கும் தம் தாய் தந்தை வர்க்கத்தார்கட்கும் புண்ணியமாக சுவாமி சிதம்பரேசுவரர் சன்னிதியிலே நாள்தோறும் மகேசுவர பூசை நடைபெற மடப்புறமாக முத்தத்து நாட்டுச் சேர்வையில் கட்டியேரி, கங்கணி; தேர்போக்கி நாட்டுச்சேர்வையில் நாஞ் சிவயல்; அருகாதங்குடிச் சேர்வையில் நாணாக்குடி ஆகிய நான்கு ஏந்தல்களைக்கொடையாக ஏற்கெனவே விட்டிருந்தார்.

இவைகட்கு பள்வரி முதலான பலவரிகளும், ஆள்அமஞ்சி உலுப்பை ஊழியம் முதலான எதுவும் அளிக்கவேண்டாம் என்றும் கட்டளையிட்டிருந்தார்.

4 -2 –1631 பௌர்ணமிப் புனித நாள் அன்று அருகாதங்குடிச் சேர்வையில் அளிக்கப் பெற்றிருந்த நாணாக்குடிக்குப் பதிலாக நாட்டிசேரி என்ற ஊரைக் கொடையாக அளித்ததை இச்செப்பேடு கூறுகிறது.

இச்செப்பேட்டின் இடையில் தர்மத்தின் பெருமையை விளக்கும் சிவஞான சித்தியார் சுபக்கத்திலுள்ள பாடல் ஒன்றைப் பொறித்துள்ளது, (சூத்திரம் 8-திருவிருத்தம்) மிகச் சிறப்பான தொன்றாகும்.

அப்பாடல்

சிவஞானச் செயலுடையோர் கையில்த் தானம்
திலபிளவே செய்திடினும் நிலமலையோற் றிகழ்ந்து
பவமாயக் கடலிலழுந் தாதவகை யெடுத்துப்
பரபோகந் துய்ப்பித்துப் பாசத்தை யறுத்துத்
தவமாரும் பிறப்பொன்றிற் சாரப் பண்ணிச்
சரியைகிரி யாயோக தன்னிலுஞ்சா ராமல்
நவமாரும் தந்துவளா னத்தை நல்கி
நாதனடிக் கமலங்கள் நணுகுவிக்கும் தானே

என்பதாகும். இப்பாடலுக்குச் சில அரிய பாடபேதங்கள் இச்செப் பேட்டின் மூலம் கிடைக்கின்றன. **'திலமளவே' 'பாசத்தை யறுக்க' 'நவமாகும்'** என்பவை நூலிற் காணும் பாடமாகும். இச் செப்பேட்டில் காணும் 'திலபிளவே' 'பாசத்தை யறுத்து' 'நவமாரும்' என்னும் பாடங் கள் அச்சுநூல்களைவிடச் சிறந்த பாடங்களாகும்.

1659 இல் திருமலை நாயக்கர் மரணமடைந்தார். அவருடைய புண்ணியத்திற்காக 1661 இல் சேதுபதி அரசர் கொடை கொடுத்தது திருமலை நாயக்கர் மீது சேதுபதி அரசருக்குள்ள பற்றினைக் காட்டு கிறது. தன் பெற்றோருக்கு இணையாகத் திருமலை நாயக்கரைச் செப்பேட்டில் சேதுபதியரசர் குறிப்பிட்டுள்ளார். திருமலை நாயக்கர் அளித்த திருமலை என்னும் பெயரையே சேதுபதி சூடியிருந்தார்.

கொடைநிலம் மாற்றப்பெற்றதற்கான காரணம் செப்பேட்டில் கூறப்பெறவில்லை.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 *ஸ்வஸ்திஸ்ரீ சகாப்தம் 1582 மேல்ச் செல்லாநின்ற சார்வரி நாம சம்வ*

2 *த்சரத்து உத்தராயணத்து மாக மாசத்து அமர பட்சத்து சதுற்தெசியும் ஆதித்ய*

3 வாரமும் அவிட்ட நட்சத்திரமும் சிவநாம யோகமும் பெற்ற புண்ணிய காலத்து திருவாவடுதுறை

4 ற அப்பலவாண பண்டாரம் அவர்களுக்கு தேவை நகராதிபன் சேது மூல ரட்சா துரந்தரன்

5 இராமநாத சுவாமி பறுவதவற்தனியப்மை காரிய துரந்தரன் சுப்பீர மணிய பாதாரவிந்த தே

6 சவிதன் பரராச சிங்கம் பரராச சூரியன் பரராச சேகரன் இரவிகுல சேகரன் சொரிமுத்து

7 வன்னியன் துட்ட ராயிர கண்டன் சாடிக்காறர் கண்டன் சாமித் துரோகியள் மிண்

8 டன் அந்தம்பர கண்டன் அடியார் வேளைக்காறன் அரசராவண ராமன் பஞ்சத்து மாரி ப

9 னுக்குவார் கண்டன் பட்டமானங் காத்தான் பட்டம் பரம் படித்தான் தாலிக்கு வேலி ஐவா

10 ய்ப்புலி இளஞ்சிங்கந் தளஞ்சிங்கம் வீரவெண்பா மாலை வைகை வள நாடன் பரதள விபா

11 டன் பஞ்சவன்ன ராய ராவுத்தன் புவலேக வீரன் வேதியர் காவலன் கொட்ட மடக்கி ை

12 வ்ய்யாளி நாராயணன் இவுளி பாவடி மிதித்தேறுவார் கண்டன் பகை மன்னர் சிங்கள் ஆத்திப் பாச்சி

13 கடலிற் பாச்சி சத்துருக்கள் மிண்டன் மேவலர் கோவரி வீர கெப்பீரன் கீர்த்திப் பிரதாபன் கபட நாட

14 க சூத்திரப் பிரதாபன் பத்தி மூத்திப் பிறியன் வீரலெக்ஷமி விசைய லெக்ஷமி பாய்க்கிய லெட்சுமி காந்தன் சற்பன்ன ப

15 ராஷா விச்சணன் சகல குண சாம்பன்னன் சங்கீத சாகித்ய வித்யா வினோதன் திருமலை நரேந்திரன் மெச்சிய சாமித்துரோ

16 கியள் மிண்டன் வீரைவள நாடன் தொண்டியந்துறை காவலன் அடைக்கலங் காத்தான் வன்னியரா

17 ட்டந் தவிழ்த்தான் மூவராய கண்டயம் சாமித்துரோக வெண்டைய காவலன் வீரதண்டை சேம

18 த்தலை விளங்கிய தாளினான் துரை ராயன் செயதுங்க ராயன் வம் சாதிபுனான துகலூர்க் கூற்றத்துக் காத்தூ

19 ரான குலோத்துங்க சோழ நல்லூர் கீழ்பால் விரையாத கண்டனிலிருக் கும் தளவாய்ச் சே

20 தூபதி புத்திரன் ஸ்ரீதிருமலைய சேதுபதி ரகுநாதத் தேவர் கத்தாக்கள் திருமலை நாயக்கரைய்ய

21 னவர்களுக்கும் தளவாய்ச் சேதுபதி காத்த தேவரவர்களுக்கும் எங்கள் மாதா பிதாவினுடை

22 ய வற்கத்துக்கும் புண்ணியமாக தற்மசாதனப் பட்டயங் கொடுத்தபடி சுவாமி சிதம்பரேசு

23 ர சுவாமியார் சன்னதியிலே நித்தியம் மாயேசுர பூசை நடக்கவேணு மென்று மடப்புறம்

24 ாகக் கட்டளையிட்டது முத்தத்து நாட்டுச் சேர்வையில் கட்டியேரி கங் கனி தேர்போக்கி

25 நாட்டுச் சேர்வையில் நாஞ்சிவயல் அருகாதங்குடிச் சேர்வையில் நாணாக்குடி இந்த நாலே

26 ந்தலும் சுருபம் பண்ணிக்கொள்ளச் சொல்லிக் கட்டளையிட்டபடியி னாலே நாலேந்

27 தலும் சுருபம்பண்ணிக் கண்டது கபீ சுவாமி சன்னதியிலே பண்டார மயேசுர பூசை நம்

28 முடைய மயேசுர பூசையாகச் சந்திராதித்யவரையும் நடத்திக் கொண்டு நாலேந்தலும்

29 அனுபவித்துக் கொள்ளவும் இந்த ஏந்தலுகளுக்கு பள்வரி முதலாயுள்ள சகல பலவரியளும்

30 ஆள்அமஞ்சி உலுப்பை ஊழிய முதலானதும் வேண்டாமென்று சறுவ மானியமாக

31 க் கட்டளையிட்டோம் ஆகையினாலே நம்முடைய ஆதியே பாரம் பரையாக உள்ளசெ . . . . ,

## இரண்டரம் பக்கம்

32 இந்தத் தற்ம சாதனப் பட்டயப் படிக்கு ஒரு சில்லறையளும் வராமல் இந்தப் புண்

33 ணியத்தை பரிபாலனம் செய்து நடத்திவரக் கடவராகவும் இந்தத் தற்மத்தை யாதாமொரு

34 வர் பரிபாலனம் செய்து நடத்தின பேர்கள் கெங்கைக் கரையிலும் சேதுக்கரையிலும் ஆ

35 யிரம் கபிலைப் பசுவும் ஆயிரம் பிரம்மப் பிரதிட்டையும் அனேக கோடி பூதான கன்னிக

36 ா தானமும் அனேக சிவலிங்கப் பிரதிட்டையும் அனேக சிவத் தலங் களிலே அன்னதா

37 னங்கள் பண்ணின பலங்களையும் பெற்று மகாராசாக்களாக இருக்கக் கடவராகவும் இந்த

38 தற்மத்தின் பெருமை சிவஞானச் செயலுடையோர் கையில்த் தாணம் திலபிளவே செய்தி

39 டினும் நிலமலைபோற் றிகழ்ந்து பவமாயக் கடலிலழுந் தாதவகை யெடுத்துப் பரபோகந் து

40 ய்ப்பித்துப் பாசத்தை யறுத்துத் தவமாரும் பிறப்பொன்றிற் சாரப் பண்ணிச் சரியைகிரி யை

41 ாயோகந் தன்னிலுஞ்சா ராமல் நவமாரும் தத்துவ ஞா னத்தை நல்கி நாதனடிக் கமலங்

42 கள் நணுகுவிக்குந் தானே இந்தத் தற்மத்துக்கு யாதொருத்தர் அகிதம் செய்தவர்கள் கெங்கை

43 க்கரையிலும் சேதுக் கரையிலும் காராம் பசுவையும் பிராமணரையும் குருவையும் மாதாபிதா

44 வையும் கொன்ற தோஷத்திலேயும் அனேக சிவத்தலங்களிலே சிவத்து ரோகம் பண்ணின நர

45 கத்திலேயும் போகக் கடவராகவும் இப்படிக்கு ஸ்ரீ திருமலைய சேது பதி ரகுநாத தேவர் திருவா

46 வடுதுறை அம்பலவாண பண்டாரம் அவர்களுக்குத் தாம்பிர சாதனம் கொடுத்தோம் இப்படிக்கு

47 நாணாக்குடிக்குப் பதில் நாட்டிசேரியைக் கட்டளையிட்டோம்

48 ஸ்ரீ சுப்ரமண்ய திருமலைய சேதுபதி ரகுநாத

49 ஸ்வஸ்திரஸ்து தாந பாலந யோர்மத்யே தாநா ஸ்ரயோது பாலநம் தாநாத் ஸ்வர்க்க

50 மவாப்நோதி பாலநாத் அச்சுதம் பதம்

51 குருநமசிவாயம் தாளம்

# 20

# ஆனாந்தூர்ச் செப்பேடு

இருக்கும் இடம் : இரகுநாதக் குருக்கள், இராமேசுவரம்

அரசன் : திருமலை சேதுபதி ரகுனாத தேவர்

காலம் : 16-5—1667

**அமைப்பும் செய்தியும்** : இச்செப்பேட்டின் மூலப்படி கிடைக்க வில்லை. ஜேம்ஸ் பர்கஸ் அவர்கள் கொண்ட பாடமே இங்கு தரப் பட்டுள்ளது.[1] அகலம் குறைவாக நீளவாக்கில் அமைந்த செப்பேடாக இது இருந்திருக்க வேண்டும். மூன்றுசெப்பேட்டில் இக்கொடைச்செய்தி எழுதப்பட்டுள்ளது. மூன்றாம் ஏட்டின் இரண்டாம் பக்கமாகிய ஆறாம் பக்கம் எழுத்துக்கள் எதுவுமின்றியுள்ளது கிரந்தக் கலப்பு மிகவும் அதிகமாக உள்ள சேதுபதி செப்பேடு இது ஒன்றேயாகும்.

ஸ்ரீ சுப்ரமண்யஹ் ஸ்ரீ திருமலைய ஹிரண்யகெர்ப்பயாஜி

சேதுபதி ரகுநாதந் உ

என்ற தொடர் மூன்று ஏடுகளிலும் எழுதப்பட்டுள்ளது. இரண்டாம் ஏட்டில் தெலுங்கிலும், முதல் மற்றும் மூன்றாம் ஏடுகளில் இத்தொடர் கிரந்தஎழுத்துக்களிலும் எழுதப்பட்டுள்ளது,

---

1. *Tamil and Sanskrit Inscriptions, No. 7. pp. 75-78.*

திருமலை சேதுபதி அரசர் அவர்களின் புண்ணியத்தின் பொருட்டு பாண்டியூர் சொக்கப்பன் சேருவைகாரன் மகன் பெருமாள் சேருவைகாரன் இராமேசுவரம் இராமநாத சுவாமிக்கு அன்னதானக் கட்டளைக்காக ஆனாந்தூர்க் கிராமத்தையும், பாப்பாகுடி ஏந்தல் எனற கிராமத்தையும் கொடையாக அளித்த செய்தியை முதற்கண் இச்செப் பேடு தெரிவிக்கிறது.

கொடையாகக் கொடுக்கப்பட்ட இரண்டு ஊர்களுக்கும் நாற் பாங்கு எல்லைகள் மட்டும் கூறாமல் மிக பிரிவாகச் சுற்று எல்லை கள் கூறப்பட்டுள்ளன.

கிராமங்களின் எல்லையில் சேந்தமங்கலம், ஊடுபிலாறு, சிறுநாகுடி, வடக்குளக்கால், சிறுநாகுடிக் குமரர் கோயில், புஞ்சை, பொந்தியன் ஏந்தல். வாணாடர் ஊரணி, கண்ணாற்றுக்கரை, எல்லைக்கல், படையன் வயக்கல், ஊரணி, எல்லைக்கல், குருகூரணி துவார் குளம், துவார் குளக்கால், எலிக்குளத்து வயல், நீலனேந்தல், மேலைவயல் குடியிருப்பு, மடல், காட்டுக்குளம், பெருமாள் ஊரணி என்பன உள்ளவனவாகக் குறிக்கப்பட்டுள்ளன.

இவ்வூர் எல்லைக்குள் இருந்த திருமதிச் சடையார் காட்டுக்குளம் நீங்கலாகக் கிராமத்தின் எல்லா வகை நிலங்களும் இராமேசுரம் கோயிலுக்கு அளிக்கப்பட்டன.

இச்செப்பேட்டை விசுவநாதன் ஆசாரி மகன் ரெகுநாதன் எழுதியுள்ளார்.

1672 ஆம் ஆண்டில் மேற்படி ஆனாந்துர், பாப்பாக்குடி என்ற இரு ஊர்களும் இராமநாதசுவாமி அபிஷேக நெய்வேத்தியத்துக்குப் போதவில்லை, அதற்காக உரசூர் என்ற ஊர் கொடையாக அளிக்கப் பட்டன.

அவ்வூர் கிழக்கில் ஆந்தைகுடிக் கண்மாயும், தெற்கில் இரவி மங்கலத்துக்கண்மாய் உள்வாயும், மேற்கில் ஏகாம்பரநாதர் சுவாமி சன்னதி அரசமரமும், வடக்கில் கெங்கைக்குடி வயல், கண்மாய்க் கரை, வெள்ளூர் ஆகியனவும் எல்லைகளாக அமைந்து இருந்தன.

இக்கொடை இராமேசுவரம் கோயிலில் உள்ள மணியன் அய்யன் ஆரிய மகாசனங்களில் தெய்வங்கள் பெருமாள் இராமநாதர் ஆகியோர் வசம் என்றென்றைக்கும் நடத்தும்படி ஒப்படைக்கப்பட்டது.

சேதுபதி அரசர் புண்ணியத்துக்காகச் சொக்கப்பன் சேருவைகாரர் கொடை கொடுத்தது அல்லாமல் இராமேசுவரம் கோயிலில் உள்ள ஆரிய மகா ஜனங்களில் ஒருவராகிய இக்கொடையை முன்னின்று நடத்தும் தெய்வங்கள் பெருமாள் அவர்கட்குப் பாப்பாக்குடிக் கிராமத்தில் ஆறுகல நெல் விதைக்கக் கூடிய நிலத்தைக் கொடையாக அளித்தார்.

## செப்பேடு

### முதல் ஏடு

### முதல் பக்கம்

1 உ ஸ்வஸ்திஸ்ரீ சாலியவாஹந சகாப்தம் 1589 மேல் செல்லாநின்ற
பினவங்க நாம சம்வத்சரம் உத்திராயண

2 த்து வசந்த ரிதுவில் வைகாசி மாதத்தில் சுக்கிலபட்ஷதில் வியாழக்
கிழமையும் திரிதிகையும் புணர்பூச நட்ஷெத்திரமும் கெ

3 ண்ட நாம யோகமும் கொசவாகரணமும் பெத்த புண்ணியகாலத்தில்
தேவைநகராதிபன் சேதுமூல ரட்சா துர

4 ந்தரந் ராமநாத ஸ்வாமி காரியா துரந்தரந் சிவபூஜா துரந்தரந்
பரராச சேகரந் பரராஜ கெஜ சிங்கம்

5 ரவிகுல சேகரந் ரவிவர்மன் கொரிமுத்து வன்னியன் ஸ்வஸ்திஸ்ரீமந்
மஹாமண்டலேஸ்வர அரியராயிர தள

6 விபாடன் பாஷைக்கு தப்புவராயிர கண்டந் மூவராயிர கண்டன்
கண்டநாடு கொண்டு கொண்டநாடு

7 குடாதான் பட்டமானங் காத்தான் துட்டராயிர கண்டன் புவ நேக
வீரந் வீரகஞ்சுகந் வீரவள நாட

8 ந் வேதியர் காவலன் அந்தம்பர கண்டந் சாடிக்காரர் கண்டந் ஸ்வாமி
துரோகியள் மிண்டன் பஞ்சவன்னராய

9 ராகுத்தன்

10 பனுக்குவார் கண்டன் வைகை வளநாடக் கொட்டமடக்கி வையாளி
நாராயணன்

11 இவுளி பாவடி மிதித்தேறுவார் கண்டன் வீரவெண்பாமாலை இளஞ்
சிங்கம் தளஞ்சிங்கம் பகை

12 மன்னர் சிங்கம் துரைராயன் ஆத்தில்பாச்சி கடலில்பாச்சி மதப்புலி
அடைக்கலங்காத்தான் தாலிக்கு

13 வேலி சத்துருவாதியன் மிண்டன் வன்னியராட்டந் தவிழ்த்தான்
மேவலர்கள் கோளரி மேவலர்

14 வணங்குமிரு தாளினான் வீரமகா கெம்பீரன் கீர்த்திப் பிரதாபன்
அரியமானங் காத்தான் தொண்டியந்து

15 ரை காவலன் துர்க ரேவந்தன் குடைக்கு கர்ணன் பரதநாடகப்
ரவீணன் கருணகடாக்ஷந் குன்றினுயர்மேறுவிற்

16 குன்றாய் வளைகுணில் பொரித்தவன் திலதனுதல் மடமாதர் மடலெழு
வருசுமுகன் விஜய லெட்சுமி காந்தன் கலை

17 தெரியும் காமுகா விற்பன்னன் காமினீகந்தரீபனன் சத்ய அரிச்சந்திரந்
சங்கீத சாகித்ய வித்யா விநோதன்

18 வீரதண்டை சேமத்தலை விளங்கிய தாளினான் ஸகல ஸாம்ராஜ்ய
லெட்சுமி நிவாசன் சேதுங்க ராய

## இரண்டாம் பக்கம்

19 ன் வங்கிஷாதிபனான துகலூர்கூற்றத்தில் காத்தூரான குலோத்துங்க
சோழநல்லூர் கீழ்பால் விரை

20 யாத கண்டனிலிருக்கும் தளவாய் சேதுபதி காத்த தேவர் புத்திரர் ஸ்ரீ திருமலைய இரணியகெர்பயாசி சேது

21 பதி ரகுனாத தேவர்ரவர்களுக்குப் புண்ணியமாகப் பாண்டி ஊரிலிருக் கும் சொக்கப்பன் சேருவை

22 காரன் புத்திரன் பெருமாள் சேருவைகாரன் றாமீசுரத்தில் றாபனாத சுவாமிக்கு அரைகட்டளை தன்மத்துக்கு

23 கட்டளையிட்ட கிறாமத்துக்கு தானதன்மசாதனங் குடுத்தபடி இப்போது மேலைமகானிச் சீர்மை றாதா

24 நல்லூர் த்தட்டில் ஆனந்தூராகிய கிறாமமும் பாப்பாகுடி ஏந்தலும் தன்னுடைய அரைக்கட்டளைக்கு

25 சயிராணியோதக தராதரபூறுவமாக ஆசந்திரார்கயாக கட்டளையிட்ட படியினாலே எல்கை சேந்தமங்

26 கலத்துக்கு ஊடுபிலாறுக்கு மேற்கு சிறுநாகுடி வடகுளக்காலுக்கு மேற்கு ஊடுபிலாறுக்கு தெற்கு

27 தென்கிழக்கு சிறுநாகுபடி குமரர்கோவிலுக்கு வடக்கு எல்லைப் புஞ்சைக்கு வடக்கு பொந்தியன் யேந்தல்

28 உள்பட எல்கை இதனில்விட்டுத் தெற்குப் பொந்து சிவநாகுடி தெற்குப் பிலாறுக்கு மேற்கு வாலாடர் ஊ

29 றணிக்கு வடக்கு கண்ணாற்றுக்கரையில் எல்லைக்கல்லுக்கு கிழக்கு படையன் வயலுக் ஊரணி

30 எல்லைக்கல்லுக்கு வடக்கு இதனிடைவிட்டுத் தென்மேற்குப் போந்து துவார எல்லைக்கல்லுக்கு வடக்

31 கு குருகூறணிக்கும் துவாரகுழத்துக் கரைக்கும் வடக்கு இதன்விட்டு மேற்கு துவாரகுளக் காலுக்கு கிழக்கு

## இரண்டாம் ஏடு

### முதல் பக்கம்

32 வடக்கு எனிக்குளத்து வயலுக்குத்தெற்கு நீலனேந்தலும் மேலைவயல் குடியிருப்பு மடத்துக்குக்

33 கிழக்கு இந்தநிலம்விட்டு வடகிழக்கு காட்டுக்குளம் பெர்ருந்துக் கரைக்கும் பெருமாள் ஊரணி

34 க்கும்தெற்கு பெரியகுழத்து கீழ்மடைக்கண் ணாகவயலுக்கும் காட்டுக் குளத்து வயலுக்கு தெ

35 ற்கு இந்தப்படிக்கு திருமதிச்சடையார் காட்டுக்குளம் நீங்கலாக ஆனாந்தூர் நான்கெல்லையும் பாப்பா

36 குடி நான்கெல்லையும் இந்தரண்டு கிறாமத்திலுண்டாகிய ஊரதுபுரவு நஞ்சை புஞ்சை ஏந்தல் குட்ட

37 ம் மாவடை மரவடை பட்டம் படுகை திட்டு திடல் மேல்நோக்கிய மரமும் கீழ்நோக்கிய கிணறு

38 நீரும் பாசியும் குடி பள்ளுப்பறை இது முதலாகிய நிதி நிட்சேப ஜல பாஷான சித்த

39 போக தேஜ ஸ்வாமியங்களும் ஆண்டு அனுபவித்துக்கொண்டு அரைக் கட்டளையுடனே கூடின தர்

40 மம் சந்திறாதித்தவரை சந்திரப்பிரவேசவரை உத்திரோத்திராமாக நடத்திவிச்சுக் கொள்ளுவா

41 ராகவும் இந்த தன்மத்துக்கு யாதாமொருவர் பரிபாலனம் பண்ணி நடத்திவிச்சவர்கள் கோ

42 டி லிங்கப் பிறதிட்டையும்ங்கோடி விறும்மப் பிறதிட்டையும் பண்ணி ன சுகர்தத்தை

43 அடைவாராகவும் இந்தத் தன்மத்துக்கு யாதாமொருதர் அகுதம் பண்ணினபோ் கெங்கையி

44 லும் சேதுவிலும் மாதாபிதாவையும் குருக்களையும் காராம்பசுவையும் பிராம்மணரையும்

45 வதைபண்ணினள தோஷத்தில் போகக்கடவாராகவும் இந்தப்படிக்குச் சம்மதித்து ஸ்ரீதிருமலைய

46 இரனிய கற்பயாசி சேதுபதி ரகுனாத தேவர்பெருமாள் ராமேசுரத் தில்

47 ராமனாதசுவாமி அறைக்கட்டளைக்கு நடத்திவிக்கிற தன்மத்துக்கு கட்டளையிட்ட ஆனாந்தூரும் பாப்பாகுடி

48 யும் தன்மசாதனங் கொடுத்தோம் உ தாநபாலந யோர்மத்யே தா நாச்ரயோநு பாலநம் தாநா

49 ஸ்வர்க்க மவாப்நோதி பாலநாத் அச்சுதம் பதம் உ ஸ்வத்தாத்வி குணம் புண்யம் ப

## இரண்டாம் ஏடு

### இரண்டாம் பக்கம்

50 தத்தாது பாலநம் பரதத்தாப ஹாரேண நிஷ்பலம் பவேது உ விசுவனாத

51 ஆசாரிபுத்திரன் ரெகுநாதன் விகிதம் பரீதாபி ஹு அற்பிசிமீ 17 உ ராமலிங்கசுவாமிக்கு

52 பெருமாள் சேர்வைகாரன் அரைகட்டளைக்கு முதலே கட்டளை யிட்ட ஆனாந்தூர் பாப்பாகுடி சுவாமி

53 க்கு அவிஷெக நெய்வேத்தியத்துக்கு போதாதபடியிலே கர்த்தாக்களுக்குப் புண்ணியமாக உரசூர் கட்ட

54 ளையிட்டபடியினாலே உரசூருக்கு எல்லை ஆந்தைகுடிக் கண்மாய்க்கு மேற்கு இரவி

55 மங்கலத்துக் கண்மாயுள்வாய்க்கு வடக்கு மேற்கு ஏகாம்பரனாதர் சுவாமி சன்னதி அரசுக்கு

56 க் கிழக்கு கெங்கைக்குடி வயலுக்கும் கண்மாய் பொருத்துக்கரைக்கும் தெற்கு இதனடுத்த

57 வெள்ளூருக்குத் தெற்கு இந்த நான்கெல்லைக் குள்பட்ட நஞ்சை புஞ்சை மாவடை மரவடை குடி

58 பள்ளு பள்ளுப்பறையிதுமுதலாகிய நிதி நிஷேப ஜல தரு பாஷாண அஷ்டபோக தேஜ

59 ஸ்வாமியங்களும் ஆண்டு அனுபவித்துக்கொண்டு அரைகட்டளையுடனே கூடின தன்மம்

60 சந்திராதித்தவரை சந்ததிப்பிறவேசவரை உத்தரோத்தரமாக நட்த்தி விச்சுக் கொள்ளு

61 வாராகவும் இந்த தன்மத்துக்கு யாதாமொருதர் அகுதம் பண்ணின பேர் கெங்கையிலும் சேது

62 விலும் மாதாபிதாவையும் குருவையும் வதைத்த தோஷத்திலே பொகக் கடவறாகவும் உ

## மூன்றாம் ஏடு

### முதல் பக்கம்

63 யிந்த அரைகட்டளை தன்மத்தை மணிய . . . . ர் . . . . . அய்யன் பாரிசமாகவும் றாமீசுரம் ஆரி

64 ய மகாசனங்களில் தெய்வங்கள் பெருமாள் ராமநாதர் பாரிசமாகவும் கட்டளையிட்டபடியினா

65. லே உத்ரோத்தமாக நடத்திவிச்சுக் கொள்ளக்கடவாராகவும் தெய்வங்க பெருமாள் ராமனாதருக்கு

66. பாப்பாகுடிலெ அறுகல விரைப்பாடு சொக்கப்பஞ் சேருவை காரனனாள் தானபூறுவமாக

67. கட்டளையிட்டபடியிநாயிலே ஆண்டு அனுபவிச்சுக்கொண்டு அறக் கட்டளை தன்மத்தை

68. பரிபாலநம் பண்ணி நடத்திவிச்சுக்கொள்ளுவாராகவும் ஸ்ரீ ஸுப்ர மண்யந் ஸ்ரீதிருமலைய உறிரணியகெர்ப்பயாஜி சேதுபதி ரகுநாதந் உ

# 21

# பெருங்காட்டுச் செப்பேடு

இருக்கும் இடம் : திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை

அரசர் : திருமலை சேதுபதி ரகுநாதத் தேவர்

காலம் : 18—1—1668

அளவு : 24 செ.மீ. × 13.5 செ.மீ.

**அமைப்பும் செய்தியும் :** இச்செப்பேடு அகன்ற அடிப்பகுதியினையும், நீள்வட்ட அரை வடிவில் அமைந்த துளையில்லாத சிறு கைப்பிடியையும் உடையது. திருப்புருந்துறைச் செப்பேடு ஆதலின் கைப்பிடியில் நடுவே குருந்த மரம் வரை கோட்டு ஓவியத்தில் வரையப்பட்டுள்ளது. குருந்தமரத்தின் இரு பக்கங்களிலும் இரண்டு சிறு சூலங்குறிகள் வரையப்பட்டுள்ளன.

ஸ்ரீ சுப்ரமண்ய திருமலை

ய சேதுபதி ரகுநாதந்

என்று தெலுங்கில் இருவரிகளாக எழுதப்பட்டுள்ளது.

திருப்பெருந்துறை ஆவுடைய பரமசுவாமிகளுக்குச் சேதுபதியரசர் அவர்கள் உஷாக்காலம் எனப்படும் விடியல் காலை நேர்ப் பூசைக்கு அதனை முன்னின்று நடத்தும் பரதேசி முத்திரை அம்பலத்தாடும் பண்டாரம் அவர்களின் கட்டளைக்கு சோத்துக் கரையூர்ச் செல்லப் பன் அவர்கள் தர்மமாகப் பெருங்காடு என்னும் ஊரைக் கொடையாகக் கொடுத்ததை இச்செப்பேடு கூறுகிறது. இக்கொடை அளிக்கப்பட்ட போது திருவாவடுதுறை ஆதீனத்தலைவராக விளங்கியவர் ஸ்ரீ இராமலிங்க தேசிகர் (1658-1678).

பெருங்காட்டின் எல்லையாவன : கிழக்கு எல்லை இடையன் கோட்டை உள்வெளியும், மேன்மங்கலத்து உள்வெளியும், தெற்கு எல்லை வேங்கூர் எல்லையும், மேற்கு எல்லை கீழ்வயலும், வடக்கு எல்லை கோயிற்காடும், நாகமங்கலத்து உள்வெளியும் ஆகும்.

தானத்தின் பயனைக்கூறும் ஒரு வடமொழிச் சுலோகம் கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளது. சுபமஸ்து என்ற மங்கலச் சொல்லுடன் இச்செப்பேடு முடிகிறது.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகந சகாப்தம் 15

2 89 இதன்மேல் செல்லாநின்ற

3 கீலக ஸ்ரீ தைய் மாதமும் பவுற்னை

4 மையும் பூச நட்செத்திரமும் சுபயோ

5 க சுபகரணமும் கூடிய புண்ணிய தினத்

6 த்தில் தேவை நகராதிபன் சேது மூல

7 ரெக்ஷா துரந்தரன் ராமனாத சுவாமி ப

8 ாத சேகரன் சொரிமுத்து வன்னியன்

9 சாமித் துரோகிகள் மிண்டன் அடிய

10 ார் வேளைக்காறல் அரச ராவண ராம

11 ன் பஞ்சத்து மாரி பட்டமானங் காத்தான்

12 தாலிக்கு வேலி தனஞ்சிங்கம் வை

13 ய்கை வளநாடன் பரதள விபாடன்

14 வேதியர் காலவன் வீரை வளநாட

15 ன் தொண்டியந் துறைவன் அடைக்க

16 லங் காத்தான் துரை ராயன் செயது

17 ங்க ராயன் வங்கிசாதிபன் துகவூர்க்

18 கூற்றத்து காத்துரான குலோத்துங்

19 க சோழவநல்லூர் கீழ்பால் விரைய

20 ாத கண்டனிலிருந்து தளவாய் சே

21 துபதி புத்திரன் திருமலைய சேது

22 பதி ரெகுனாதத் தேவரவர்கள் திருப்பெ

23 பருந்துறை ஆவுடைய பரமசுவாமிய

24 ார்க்கு உஷாகாலப் பூசை நடத்தும் ப

25 ரசித முத்திரை அம்பலத்தாடும் பண்

26 டாரத்தின் கட்டளைப் பாரிசமாகச் சோ

27 த்துக்கலையூர்ச் செல்லப்பன் தற்மத்துக்

28 கு பெருங்காடு கட்டளையிட்டுத் தற்மச் சா

29 தனப் பட்டயங் கொடுத்தோம் அந்தப்பெ

30 ருங் காட்டுக்கு எல்லை புரவாவது கீழ்பாற்

31 கெல்லை இடையன் கோட்டைக் குள்வெ

32 ளிக்கும் மேன்மங்கலத்துக் குள்வெளிக்
33 கு மேற்குத் தென்பாற்கெல்லை வேங்கூ
34 ர் எல்லைக்கு வடக்கு மேற்பாற்கெல்லை
35 கீழ்வயல் வயலுக்குக் கிழக்கு வடபாற்
36 கெல்லை கோயிற்காட்டுக்கும் நாகம

## இரண்டாம் பக்கம்

37 ங்கலத்துக் குள்வெளிக்குந் தெற்கு ஆ
38 க இசைந்த பெருநான்கெல்லைக் குள்ப
39 ட்ட புஞ்சை உள்பட சகல சமுதாய
40 ப் பிராத்திகளும் சந்திராதித்தவரையும்
41 ஆவுடைய பரம சுவாமியார் உஷாகா
42 ல அபிஷேக கட்டளைக்கு ஆண்டுமனுப
43 வித்தும் கொள்ளக் கடவாராகவும்
44 இந்தபடிக்குத் திருமலைய சேதுபதி காத்
45 த தேவரவர்கள் பெருங்காட்டுக்கு தற்மசா
46 தனப் பட்டயங் கொடுத்தோம் இந்த தற்ம
47 த்தை யாதாமொருவர் பரிபாலனம் பண்
48 ணின பேர்கள் சேதுக்கரையிலும் கெங்கை
49 கரையிலும் அநேக சிவலிங்கப் பிறதிட்டை
50 யும் கோதான பூதானங்களையும் பண்ணின

51 புண்ணியத்தை யடையக்கடவாராகவும்

52 இந்தத் தர்மத்துக்கு அகிதம் பண்ணின பேர்

53 கள் மாதா பிதாவையும் குருவையும் காரா

54 ம் பசுவையும் கொன்ற தோஷத்திலே பே

55 ாகக் கடவாராகவும் உ

56 தாந பாலந யோர்மத்யே தாநா

57 த் ஸ்ரயோநு பாலநம் தகநாத் ஸ்வ

58 ர்க்க மவாப்நோதி பாலநாத் அச்சுத்

59 ம் பதம் உ சுபமஸ்து

ஸ்ரீ சுப்ரண்ய திருமலை

ய சேதுபதி ரகுநாதத்

# 22

# சென்னீலக்குடிச் செப்பேடு

இருக்கும் இடம் : பைரவசுந்தரக் குருக்கள், திருப்பத்தூர்.

அரசர் : திருமலை சேதுபதி இரகுநாதத் தேவர்

காலம் : 18–3–1668

அளவு : 21 செ.மீ. × 9 செ.மீ.

**அமைப்பும் செய்தியும்** : திருமலை சேதுபதி இரகுநாதத் தேவர் ஆட்சிக் காலத்தில் அவர் அலுவலர் கொளுந்துறையிலிருக்கும் சிதம்பரன் சேருவைகாரன் மகன் மதவடைச்சியான் கூறிச்சாத்தன் சேருவைகாரன் இராமீசுரம் இராமநாத சுவாமி அறைக்கட்டளைக்கு பருதிக்குடி நாட்டில் திசகுருழி தட்டில் சென்னீலக்குடியைக் கொடையாக அளித்தார். இக்கிராமத்தின் உள்ளே உள்ள அய்யனார் ஏந்தலும் அதனுடன் சேர்ந்த எல்லா நிலங்களும் கொடையாக அளிக்கப்பட்டன. கொளுந்துறை முதுகுளத்தூர் வட்டத்தில் அமைந்துள்ள ஊராகும். சென்னீலக்குடி காமராசர் மாவட்டம் திருச்சுழி வட்டத்தில் உள்ளது.

சேருவைகாரர் என்பது மறவர்சீமை முக்குலத்தோருள் ஒரு வராகிய அகம்படியரைக் குறிக்கும். இச்செப்பேடு முற்றுப்பெறாத நிலையில் உள்ளது.

சென்னீலக்குடியின் எல்லைகளில் கம்பான் அக்கிரகாரம், கூடல் அழகிய பெருமாள் கோவில் கிராமம் இடையன் குளம், தேவேந்திரப் பட்டர் கிராமம் அஞ்சானைக்குத்தி, திருக்குளத்துக்கால், பள்ளிமடைப் படுகை, உடையினான்பட்டிச் சிறு குளம், சீராமனேந்தல் வாலிப்புலி, கள்ளிக்குளம் ஆகிய பகுதிகள் உள்ளன.

## செப்பேடு *

### முதல் பக்கம்

1 ஸ்வஸ்தி ஸ்ரீ சாலிவாஹந சகாப்தம் 1589 யிதின்மேற் செல்லாநின்ற பிலவங்க சம்வத்

2 ஸ்ரத்து உத்தராயணத்து சிசிர ரீதுவில் பால்குண மாஸத்தில் சுக்ல பக்ஷத்தில்

3 குருவாஸரமும் அஸ்த நக்ஷத்ரமும் மாஹேந்த்ர நாம யோகமும் தை துலாகரணமும் கூடிய

4 புண்யகாலத்தில் தேவைநகராதிபந் சேதுமூலரக்ஷா துரந்தரந் ராம நாத

5 காரியா துரந்தரன் சிவபூசாதுரந்தரன் பரராசசேகரன் பரராசகஜ சிங்கம் ரவிகுல

6 சேகரன் ரவிவம்மந் சொரிமுத்து வன்னியன் ஸ்வஸ்திஸ்ரீமந் மகா மண்டலேஸ்வ

7 ரன் அரியராயதள விபாடன் பாஷைக்கு தப்புவார் கண்டன் மூவராய

8 கண்டன் கண்ட நாடு கொண்டு கொண்ட நாடு குடாதான் பட்டமான

9 ங் காத்தான் துட்டராயிர கண்டன் புவநேகவீரன் வீரகஞ்சுகன் வீர வளனாடன்

10 வேதியர் காவலன் அரசராவண ராமன் அடியார் வேளைக்காறன் பரதளவிபாடன்

---

* *ARE 12 of 1936*

11 உரிகோல் சுரதாநன் அந்தம்பரகண்டன் சாடிக்காறர் கண்டன் சுவாமித்து

12 ரோகியள் மிண்டன் பஞ்சவண்ண ராயராகுத்தன் பனுக்குவார் கண்டன் வைகை வ

1 ளநாடன் கொட்டமடக்கி வையாளி நாராயணன் இவுளி பாவடி துதித்தேறுவார் க

14 ண்டன் வீரவெண்பாமாலை இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகைமன்னர் சிங்கம் கை

15 ராயன் ஆற்றில்பாச்சி கடலில் பாச்சி மதப்புலி அடைக்கலங்காத்தான் தாலிக்கு வே

16 லி சத்துருவாதியள் மிண்டன் வன்னியராட்டந் தவிழ்த்தான் மேவலர் கள் கோளரி மேவ

17 லவர்கள் வணங்குமிரு தாளினான் வீரமகா சுப்பீரன் கீர்த்திப் பிரதா பன் ஆரியர் மானங்கா

18 த்தான் தொண்டியந்துறை காவலன் துர்க ரேவந்தன் கொடைக்கு கன்னன் பர்த நாடக

19 பிறவீணன் கருணா கடாட்சன் குன்றினுயர் மேருவிற் குன்றா வளைகுணில் பொறித்

20 தோன் திலகநுதல் மடவார்கள் மடலெழுத வருசுமுகன் விசையலட்சுமி காந்தன்

21 கலை தெரியும் விற்பன்னன் காமினி கந்தப்பன் சத்திய அரிச்சந்திரன் சங்கீத சா

## இரண்டாம் பக்கம்

22 யித்ய வித்தியாவிநோதன் வீரதண்டை சேமத்தலை விளங்கிய தாளி னான் சகலசாம்ப்

23 ராச்சிய லெக்ஷ்மிவாசன் சேதுங்கராயன் வங்கிஷாதிப நாந துகலூர்க் கூத்தத்து

24 குலோத்துங்க சோழநல்லூர் கிழ்பால் விரையாத கண்டனில் இருக்கும் தளவாய்

25 சேதுபதி காத்ததேவர் புத்திரன் ஸ்ரீ திருமலையரியணிய கெற்பயாசி சேதுபதி ரெகுனாததே

26 வர் கொளுந்துறையிலிருக்கும் சிதம்பரன் சேருவை காரன் புத்திரன் மதவடைச்சியான்

27 கூறிச்சாத்தன் சேருவகாரன் ராமீசுரத்தில் ராமநாத சுவாமிக்கும் அறைக்கட்டளை தன்மத்துக்கு

28 க் கட்டளையிட்ட் கிராமத்துக்கு தாநதன்மம் சாசநம் குடுத்தபடி யிப் போது பருத்திகுடி நாட்டி

29 ல் திசை குருழி தட்டில் சென்னீலகுடியாகிய கிறாமத்தை தன்னுடைய அறை கட்டளை தன்

30 மத்துக்கு ஸஹிரண்யோதக தாராபூர்வமாக ஆசந்திராற்கமாக கட்டளையிட்ட படியினா

31 லே கம்பான் அக்கிரகாரத்துக்கும் யிதின் தெற்கு கூடலழகிய பெரு மாள் கோவில் கிராம

32 ம இடையன் குளத்துக்கும் யிதன் கௌக்கும் யிலிருக்கும் யிதன் தெற்கு தேவேந்திர

33 பட்டர் கிராமம் அஞ்சானைக்குத்திக்கும் யிதன் தெற்கு திரு

34 க் குளத்துக்கு காலுக்கு வடக்கு பள்ளிமடை படுகைக்கும் உடையி னான்பட்டி. சிறுகுளத்

35 துக்கும் சீராமனேந்தலுக்கும் வாலிலாப்புலிக்கும் காரைக்குளத்துக்கும் யிந்த அஞ்

36 சு கிறாமத்துக்கும் கிழக்கு கள்ளிக் குளத்துக்குத் தெற்கு இன்னான் கெல்லைக்கு குள்ளான சென்

37 னீலகுடியாகிய கிராமமும் அதனுடனே சேந்த அய்யனா ரேந்தலும் அதிலுண்

38 டாகிய ஊத்து புரவு நஞ்சை புஞ்சை ஏந்தல் குட்டம் மாவடை மரவடை பட்டம் படு

39 கை திட்டுத் திடர் மேல் நோக்கிய மரம் கீள் நோக்கிய கிணறு நீரும் பாசியும் பள்ளு

40 ப் பறையும் முதலான அட்டபோக தேச சுவாமியங்களும் ஆண்டு அனுபவித்துக்

41 கொண்டு அறைக்கட்டளையுடனே கூடின தன்மம் சந்திராத்திய சந்ததிப் பிரவேச

# 23

# கொத்தங்குளம் செப்பேடு

இருக்கும் இடம் : தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை அருங்காட்சியகம் இராமநாதபுரம்

அரசர் : திருமலை சேதுபதி ரகுநாதத் தேவர்

காலம் : 19—1—1671

அளவு : 29.5 செ.மீ. × 8.5 செ.மீ.

**அமைப்பும் செய்தியும்** : இச்செப்பேடு துளையுடன் கூடிய சிறிய கைப்பிடியை உடையது[1]. கைப்பிடியில் உ மங்கல அடையாளக் குறி மட்டும் உள்ளது. அகலம் குறைந்து நீளம் அதிகம் உள்ள செப்பேடு. செப்பேட்டின் இறுதிப் பகுதியில் 'ஸ்ரீ திருமலை சேதுபதி ஹிரண்ய கர்ப்பயாஜி ரகுநாத' என்று தெலுங்கில் எழுதப்பட்டுள்ளது.

பெருங்கரை என்னும் ஊர் சேதுபதி அரசர் பெயரால் 'ரகுநாத சமுத்திரம்' என்று அழைக்கப்பட்டது. அவ்வூரில் உள்ள அட்டாலைச் சொக்கநாத சுவாமி கோயிலுக்கும், அவ்வூரில் தெய்வராயன் என்பவர் கட்டி வைத்த மடத்துக்கும் புனய் பரளைநாட்டில் கொத்தங் குளமாகிய

---

*ARE., A.33 of 1947*

ஏந்தலைச் சேதுபதி அரசர் கொடையாக அளித்தார். இராமநாதபுரத்திலிருந்து மதுரை செல்லும் வழியில் உள்ள பார்த்திபனூருக்குக் கிழக்கே 5 கி.மீ. தொலைவில் பெருங்கரை உள்ளது.

கோயிலுக்கும், மடத்துக்கும் ஊரைப் பாதி பாதியாகப் பிரித்து அரசர் கொடையாக அளித்தார்.

கொத்தங் குளத்தின் எல்லையாவன: கிழக்கு எல்லை பொன்னரியான் ஏந்தல், கொம்பூதி; தெற்கு எல்லை அருங்குளத்துக் குளத்துள் வாய்; மேற்கு எல்லை கீழைச் சீகன் குளமும் சொக்கநாத ஊரணியும்; வடக்கு எல்லை பாத்திப சேகரநல்லூர் இருளப்பன் கோயில், முட்டுக் குளம் நீர்வாங்கி, இக்கொத்தங்குளம் பரமக்குடி வட்டத்தில் உள்ளது.

கொத்தங்குளத்தில் உள்ள ஊரது புரவு, நன்செய், புன்செய், ஏந்தல், குட்டம், மாவடை, மரவடை, பட்டம், படுகை, திட்டு, திடர், மரம், கிணறு, பாசி, பள்ளு, பறை போன்ற அனைத்து உரிமைகளையும் கோயிலுக்கும் மடத்துக்கும் அளித்தார்.

இறுதிப் பகுதியில் கொடையைக் காப்பதன் சிறப்பைக் கூறும் இரண்டு வடமொழிச் சுலோகங்கள் கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளன.

இச்செப்பேட்டை கடம்பவனம் ஆன விசுவநாத ஆசாரி மகன் ரகுநாதன் என்பவர் எழுதியுள்ளார். சுபமஸ்து என்ற மங்கலச் சொல்லுடன் இச்செப்பேடு முடிவடைகிறது.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 *ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாஹந சகாப்தம் 1592 இதன்மேற் செல்லாநின்ற ஸாதாரண நாம ஸம்வத்ஸரத்து உத்தராய*

2 *நத்து சிசிர ரிதுவில் மாக மாஸத்து கிருஷ்ண பக்ஷத்தில் திரிதிகையும் குரு வாரமும் ஹஸ்த நக்ஷத்ரமும் ஸுகர்ம நாம யோகமும் வ*

3 ஜிஜ வாகரணமும் பெற்ற புண்ய காலத்தில் தேவை நகராதிபன்
ஸேதுமூல ரக்ஷா துரந்தரன் ராமநாத ஸ்வாமி கா

4 ர்ய துரந்தரர் சிவபூஜா துரந்தரன் பரராஜ சேகரன் பரராஜ கெஜ
சிங்கம் ரவிகுல சேகரன் ரவிவர்ம்ம

5 ந் சொரிமுத்து வன்னியன் ஸ்வஸ்தி ஸ்ரீமந் மஹாமண்டலேசுபரன்
அரியராய தளவிபாடன் பாஷைக்குத் தப்புவார்

6 கண்டன் கண்டனாடு கொண்டு கொண்டநாடு குடாதான் பட்டமானங்
காத்தான் துட்டராயிர கண்டன் புவ

7 நேக வீரன் வீர கஞ்சுகன் வீர வளநாடன் வேதியர் காவலன் அரச
ராவண ராமன் அடியார் வேளைக்காற

8 ன் பரதவ விபாடன் உரிகோல் சுரதாநன் அந்தம்பர கண்டன் சாடிக்
காறர் கண்ட ஸ்வாமி துரோஹியள்

9 மிண்டன் பஞ்சவன்ன ராய ராகுத்தன் பனுக்குவார் கண்டன் வைகை
வளநாடன் கொட்டமடக்கி வையா

10 னி நாராயணன் யிவுளி பாவடி மிதித் தேறுவார் கண்டன் வீரவெண்
பா மாலை இளஞ்சிங்கம் தளஞ்சிங்க

11 ம் பகைமன்னர் சிங்கம் துரைராயன் ஆற்றில் பாச்சி கடலில்ப் பாச்சி
மதப்புலி அடைக்கலங் காத்தான்

12 தாலிக்கு வேலி சத்துருவாதியள் மிண்டன் வன்னிய ராட்டந் தவிழ்த்
தான் மேவலர்கள் கோளரி மேவலர்கள் வ

13 ணங்குமிரு தாழினான் வீரமஹா கம்பீரன் கீர்த்திப் பிறதாபன் ஆரிய
மானங் காத்தான் தொண்டியந்துறை

14 காவலன் துர்க ரேவந்தன் ஹனும கேதனன் கருட கேதனன் கொடை
க்குக் கர்ணந் பரததாடகப் பிறவீண

15 ன் கருணா கடாக்ஷன் குன்றினுயர் மேருவிற் குன்றா வளை ஞணில்
பொறித்தவன் திலகநுதல் மடமாதர் மடலெ

16 ழுதவரு சுமுகன் விஜயலட்சுமி காந்தன் கலைதெரியும் விற்பன்னன்
காமினி கந்தற்பனன் ஸத்ய ஹரிச்சந்திரன்

17 ஸ்ங்கீத ஸாஹித்ய வித்யுரஹிநோதன் வீரதண்டை சேமத்தலை விளங் கிய தாழினாள் ஸகல ஸாம்பிறாச்சிய ஒஷ்மீ நி

18 வாஸன் சேதுங்கரூராயன் வம்சாதிபநாத துதவூர் கூற்றத்துக் காத்தூ ரான குலோத்துங்க சோழநல்லூர்

19 கிழ்பால் விரையாத கண்டனிலிருக்கும் தளவாய் ஸேதுபதித் தேவர் ஸ்ரீ மத் புத்திரன் திருமலய ஹிரண்ய கர்ப்ப

20 யாசி சேதுபதி ரகுநாததேவர் பெருங்கரைக்குப் பிறிதி நாமமான ராம நாத சமுத்திரம் அட்டாலைச் சொ

21 க்கநாதசுவாமி கோவிலுக்கும் மேற்படியூரில் தெய்வராயன் கட்டி விச்ச மட தர்மத்துக்கும் கட்டளையிட்ட

22 கிராமத்துக்கு தானதர்ம சாஸநம் குடுத்தபடி இப்போது புனய் பரளை நாட்டில் கொத்தங்குளமாகிய ஏந்தல்

23 கோயிலுக்குப் பாதியும் தெய்வராயன் கட்டிவிச்ச மடத்தன்மத்துக்குப் பாதியுமாக ஸ்ஹிரண்யோதக தா

24 ராபூர்வமாக கட்டளையிட்ட படியினரலே பொன்னரியா னேந்தலுக் கும் கொம்பூதிக்கும் மேற்கு

## இரண்டாம் பக்கம்

25 அருங்குளத்துக் குளத்துள்வாய்க்கு வடக்கு கீழைச் சீகன்குளத்துக்கும் சொத்தநாத யூரணிக்கும் கிழக்குப் பாத்திப சேக

26 ர நல்லூர் இருளப்பன் கோயிலுக்கும் முட்டுக்குளம் நீருவாங்கிக்கும் தெற்கு இன்னான்கெல்லைக் குள்ளாகிய கொ

27 த்தங் குளமாகிய நிறாமமும் அதிலுண்டாகிய ஊரது புரவு நஞ்சை புஞ்சை ஏந்தல் குட்டம் மாவுடை மரவ

28 டை பட்டம் படுகை திட்டுத் திடர் மேல்நோக்கிய மரம் கீழ்நோக்கிய இணறு நீரும் பாசியும் பள்ளுப் பறை இதுமு

29 தலான அஷ்டபோக தேஜ ஸ்வாமியங்களும் அட்டாலைச் சொக்கநாத சுவாமி கோயிலுக்கு பாதியும் தெய்வராய

30 ன் மட தர்ம்மத்துக்குப் பாதியும் சந்திராதித்தவத் ஸ்ந்திரப் பிறவேச சம் உத்தரோத்தமாக ஸ்ர்வமானியமாக அனு

31 பவித்துக் கொள்ளுவாராகவும் இந்த தர்ம்மம் யாதாமொருவர் பரி பாலனம் பண்ணினவர்கள் கோ

32 டி பிரம்ம பிரதிஷ்டையும் கோடி சிவலிங்கப் பிரதிஷ்டையும் பண்ணின சுகுர்தத்தை யடைவாராகவும்

33 இந்த தர்மத்துக்கு யாதாமொருதர் அஹிதம் பண்ணினவர்கள் கங்கைக் கரையிலேயும் ஸேதுவிலே

34 யும் மாதா பிதாவையும் குருக்களையும் காராம் பசுவையும் பிரா மணரையும் வதைபண்ணின தோ

35 ஷத்திலே போகக் கடவராகவும் இப்படி ஸ்ம்மதித்து ஸ்ரீ திருமலய் ஹிரண்ய கர்ப்பயாஜி ஸேதுபதி ரகு

36 நாததேவர் பெருங்கரைக்குப் பிறிதிநாமமான ரகுநாத சமுத்திரம் அட்டாலை சொக்கநாத சுவாமி கோ

37 யிலுக்கும் தெய்வராயன் மட தர்ம்மத்துக்கும் கட்டளையிட்ட கிறாம தாந தர்ம்ம சாஸனம் குடுத்தோம் ஊ

38 தாந பாலந யோர்ம்மத்யே தாநாத் ச்ரேயோநு பாலநம் தாநாத் ஸ்வர்க்க மவாப்நோதி பாலநாத் அச்சுதம் ப

39 தம்: உ ஸ்வதத் தாத்வி குணம் புண்யம் பரதத்தாநு பாலநம் பரதத் தாப ஹாரேண ஸ்வதத்தம் நிஷ்பலம்

40 பவேத்: உ இந்த சாஸநம் எழுதினேன் கடம்பவனமான விசுவனாத ஆசாரி புத்திரன் ரகுநாதன்

41 லிஹிதம் உ சுபமஸ்து

# 24

# தச்சமல்லிச் செப்பேடு

இருக்கும் இடம் : தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை அருங்காட்சியகம், இராமநாதபுரம்

அரசர் : திருமலை சேதுபதி காத்த ரகுநாத தேவர்

காலம் : 12–5–1673

அளவு : 25.5 செ.மீ. x 18 செ.மீ.

**அமைப்பும் செய்தியும் :** இந்தச் செப்பேட்டின் கைப்பிடி தாமரை மொட்டுப் போன்ற வடிவத்தில்அமைக்கப்பெற்றுள்ளது.துளை இல்லை. பல இடங்களில் தேய்ந்து சில எழுத்துக்கள் மறைந்துள்ளன.

திருப்பெருந்துறையான ஆவுடையார் கோயிலுக்குரிய இச்செப் பேட்டின் முதல் பக்கத்தில் கைப்பிடியின் கீழ் தலத்துக்குரிய வர லாற்று நிகழ்ச்சியொன்று அழகிய வரைகோட்டு ஓவியமாகத் தீட்டப் பெற்றுள்ளது.

பாண்டிய மன்னனின் முதலமைச்சராகிய மாணிக்கவாசகர் குதிரை வாங்கும் பொருட்டுப் பெரும் பொருளுடன் திருப்பெருந்துறை வந்தார். அங்குள்ள ஆவுடையபரமசுவாமிகளால் ஆட்கொள்ளப்

பெற்றுச் சிவஞானம் பெற்று ஆலயத் திருப்பணியை மேற்கொண்டார். குதிரைவாங்கக் கொண்டுவந்த பொருளில் கோயில் கட்டினார்.

செப்பேட்டு வரைகோட்டு ஓவியத்தில் தலவிருட்சமாகிய குருந்த மரத்தின் அடியில் சிவபெருமான் அமர்ந்துள்ளார். குரு வடிவில் உயர்ந்த இருக்கை ஒன்றில் உபதேசம் செய்யும் நிலையில் சிவபெருமான் வீற்றிருக்கின்றார். அவரால் ஆட்கொள்ளப்பெற்ற மாணிக்கவாசகர் நின்ற நிலையில் சீடராகப் பயபக்தியுடன் சைவத் திருக்கோலத்தில் நின்றுகொண்டுள்ளார்.

அவருக்குப் பின்னால் குதிரை வாங்க வந்த மாணிக்கவாசகரை அழைத்துச் செல்லவந்த பாண்டிய நாட்டு அமைச்சரும் வேறு இரண்டு உயர் அலுவலர்களும் நிற்கின்றனர். மாணிக்கவாசகரை அழைக்க வந்த அவர்கள் தம்மை மறந்த நிலையில் நின்று குருவாகிய சிவபெரு மானைக் கைகூப்பி வணங்கி நிற்கின்றனர். அடியாரை அழைக்க வந்த அவர்களும் அடியார் ஆயினர். இக்காட்சியை அழகொழுகும் வண்ணம் செப்பேட்டைச் செய்த சிற்பி வரைகோட்டு ஓவியமாக வரைந்துள்ளான்.

குருந்த மரத்தடியில் ஆவுடையாரும் எதிரில் சீடராக மாணிக்க வாசகரும் உள்ளனர் என்று பிற்காலத்தவர்கள் அறியாவிட்டால் என்ன செய்வது என்று எண்ணிய செப்பேட்டை வடித்த சிற்பி இருவர் உருவ அமைப்பிற்கு மேல் 'ஸ்ரீ ஆவுடையார்' 'மாணிக்கவாசகர்' என்று பெயரையும் பொறித்து வைத்துள்ளான்.

சேதுபதியரசர் திருப்பெருந்துறை ஆளுடைய பரம சுவாமிகளுக்கு உச்சிக்காலக் கட்டளை சிறப்பாக நடத்தக் கொடையளித்தார். அக் கொடைப் பொருளில் அங்கு மடம் ஒன்று கட்டப்பட்டது. அத் தர்மத்தைக் குறைவில்லாமல் நடத்த மருதபண்டாரம் என்பவரை நியமித்தார்.

இவ்வறச் செயல்கள் என்றென்றும் தொடர்ந்து நடைபெற அமரடக்கிப் பற்றில் வீரானூர்க்கு கீழ் உள்க்கிடை ஊராக உள்ள தச்சமல்லி என்ற ஊரைக் கொடையாக அளித்தார். அவ்வூரில் உள்ள ஏந்தல்களையும் அளித்தார்.

தச்சமல்லி ஊரின் எல்லை: மேற்கு எல்லை துர்க்கை வன தாழங்குடியும், சமணப்பள்ளியும்; வடக்கு எல்லை மேலைப்பிராந்தனி மயிலுமரி ஊர்; அதன் கிழக்கு கீழைப் பிராந்தனி குமுறூர், கிழக்கு எல்லை வீழி மங்கலம், அடப்பந் தாழ்வு, வங்கனூர், சீவனூர், நீருகுடி; தெற்கு எல்லை அமரடக்கி வட்டம் வயல் ஈழத்தான் என்பன ஆகும்.

தச்சமல்லி ஊரின் உள்க்கிடையாகிய தச்சமல்லி ஏந்தலின் எல்லை; மேற்கு எல்லை குணத்திரான் வயல்; வடக்கு எல்லை பந்தலாரூருணி, சின்ன ஊருணி; கிழக்கு எல்லை இத்தியடிக்காடு, பஞ்சந்தாங்கி வயல்; தெற்கு எல்லை சன்னவெட்டி வயல் சிவனேரி.

தச்சமல்லியில் இருந்த கூபம், தடாகங்கள் யாவும் கொடையாக அளிக்கப்பட்டன. கோயிலில் அபிடேகம், நிவேதனம், திருமாலை திருவிளக்கு, திருப்பணி, திருநந்தவனம், திருமடம் போன்ற சிவகைங் கரியங்கள் எல்லாம் குறைவின்றிச் சந்திர சூரியர் உள்ளவரை நடை பெற வேண்டும் என்று செப்பேட்டில் எழுதப்பட்டுள்ளது.

இச்செப்பேட்டை அட்டவணை சேதுராமலிங்கம் பிள்ளை எழுதியுள்ளார். இந்தச் செப்பேட்டை கல்வெட்டாக வெட்டிக் கொள் ளலாம் என்ற அனுமதியும் அளிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே திருப்பெருந்துறை கல்வெட்டுக்கள் சில செப்பேடுகளில் எழுதப்பட் டவை கிடைத்துள்ளன.

மருதபண்டாரம், ஏகப்பண்டாரம் என்ற இருவரும் இக்கொடை யைப் பரிபாலனம் செய்து காணியாட்சியாக அனுபவிக்கவேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இறுதியில் ராமலிங்கம் துணை என்று கிரந்த எழுத்தில் எழுதப்பெற்றுள்ளது.

தச்சமல்லியின் மேற்கில் துர்க்கை வனம் தாழங்குடி அருகில் ஒரு சமணப் பள்ளி இருந்தமை இச்செப்பேடு மூலம் தெரிகிறது. பஞ்சந் தாங்கி வயல் என ஒரு வயலுக்குப் பெயரிட்டிருப்பது நோக்கத் தக்கது.

# செப்பேடு

## முதல் பக்கம்

ஸ்ரீ ஆவுடையார் மாணிக்கவாசகர்

1 ஸ்ரீமன் ஸ்வஸ்திஸ்ரீ மன் மஹாமண்டலேஸ்வரன் அரியராய தளவிபா

2 டன் பாசைக்குத் தப்புவராயகண்டன் மூவராய கண்டன் கண்டநா

3 டு கொண்டு கொண்டநாடு கொடாதரான் தெக்ஷண பச்சிம உத்த

4 ர சப்த சமுத்திராதிபதி எப்மண்டலமுங் கொண்டு ஈழமுந் திறை கொ

5 காண்டருளிய ராஜாதிராஜந் ராஜபரமேஸ்வரந் ராஜமாத்தாண்ட

6 ந் ராஜகம்பீரந் ராஜாக்கள் தம்பிரான் ஸகலகுண ஸம்பன்ன

7 ன் சர்வ மஹாராயன் ஸகல கலாப்ரவீணன் ஸம்கீத ஸாயுச்சியன்

8 யிராய கெடி கோட்டு மல்லன் கெடி கோட்டு ராயன் துலுக்கர் தள
விபாடன்

9 துலுக்கர் மோகந் தவிழ்த்தான் வடவரசர் மணவாளர் இளவரசர்
குலைகா

10 ரன் ராஜாதிராஜன் ராஜ்பரமேஸ்வரன் ராஜகெம்பீரன் கோக்கண்
டன் க

11 ட்டாரி சாளுவன் ஒட்டியர் தள விபாடன் ஒட்டியர் மோகந் தவிழ்த்

12 தான் வீரபிரதாபன் அதல பதல ஸுதல ரிதல ரஸாதல மஹாதல பாத

13 ள லோகப் பிறகண்டன் பாண்டிமண்டல பத்மநாசாரியன்

14 சோழமண்டல ஸ்தாபனாசாரியன் தொண்டைமண்டலப் பிறதிஷ்ட

15 ாபநாசாரியன் மதப்புலி பரிக்கு நகுலன் அஷ்டைஸ்வர்யன்

16 பரராஜசேகரன் அசுவபதி கெசபதி தளபதி நரபதியான குமா

17 ர மல்லிகாற்சுனராயர் விருபாக்ஷிராயர் குமாரமகாரா

18 யர் அதபலராயர் ஸ்ரீ விவணராயர் தேவராயர் அச்சுததேவ

19 மகாராயர் தர்மராயர் ஸதாசிவராயர் கிருஷ்ணதேவ மஹாராய

20 ர் ராமதேவ மஹாராயர் ப்ருத்விராஜ்யம் பண்ணி அருளாநி

21 ன்ற ஸகாப்தம் 1595க்கு மேல்ச் செல்லாநின்ற பிறம

22 ாதீச ஹு வைகாசி மீ 15உ சோமவாரமும் திசமியும் புனர்பூச ந

23 ட்சத்திரமும் சுகர்மநாம யோகமும் ததுல வாகரணமும்

24 க்ரஹண புண்ய காலமும் கூடிய சுபதினத்தில் ஸேதுமூல ரட்ச

25 ர துரந்தரரான ராசாதிராசன் ராயபரமேசுரன் ராமநாத

26 ஸ்வாமி கார்யா துரந்தரன் இரவிகுல சேகரன் இ

27 ரவிகுல மாற்தாண்டன் சொரிமுத்து வன்னியன் தொண்டிய

28 ந்துறை காவலன் வைகை வளநாடன் வழியிற் கால் நீட்டி

29 வலியச் சருவி தாலிக்கு வேலி சாடிக்காறர் கண்டன் வீர

30 வெண்பாமாலை பனுக்குவார் கண்டன் பகைமன்னர் சிங்

31 கம் ஆத்தில் பாச்சி கடலில்ப் பாச்சி வீரலட்சுமி விஜயலெட்சுமி

32 சௌபாக்ய லட்சுமிகாந்தன் ஸத்ய ஹரிச்சந்திரன் ஸகல கு

33 ண ஸம்பன்னன் சங்கீத சாயுச்சிய பரத நாடகப் பிரவீணன் வீரத

34 ண்டைச் சேமன் இரணியகர்ப்ப சுதாகரனாகிய திருமலைச்

35 சேதுபதி காத்த ரகுனாத தேவரவர்கள் தற்ம சாஸந

36 ங் கொடுத்தபடி நம்முடைய தர்மம் திருப்பெருந்துறை

37 ஆளுடைய பரமசுவாமி யருக்கு உச்சிக் காலக் கட்டளை

38 யு மிந்த ஸம்பத்தில் மடமுங் கட்டி தர்மத்துக்கு மருத பண்டார

39 த்தையும் கட்டளையிட்டு இதுக்கு ஸாத்தியம்க்கு அமரடக்கிப் ப

40 ற்றில் வீரானூர்க்கீள் உள்க்கிடை தச்சமல்லி யிந்தக் கிறா

41 மத்துக்கும் ஏந்தலுக்கும் எல்லையாவது மேற்பாற் கெ

42 கல்கையாவது தற்கைவன தாழங்குடிக்கு சமனப்பள்ளிக
43 கு கிழக்கு வடபாற்கெல்கை மேலைப் பிராந்தனீ மயிலூமரி
44 ஊருக்குக் கிழக்கு கீழைப் பிராந்தனி குமுறூருக்கு
45 தெற்குக் கீழ்பாற் கெல்கையாவது வீழி மங்கலத்துக்கு

## இரண்டாம் பக்கம்

46 மேற்கு அடப்பந் தாழ்வுக்கு வங்கநூர்க்கு சீவனூறு நீ
47 ருகுடி மேற்கு தென்பாற் கெல்கையாவது அமரடக்
48 கி வட்டம் வயல் ஈழத்தானுக்கு வடக்கு இதுவும்
49 மேற்படி ஒளக்குடை தச்சமல்லி யேந்தலுக்கு எ
50 ல்கையாவது மேற்பாற் கெல்கை குணத்திரான் வய
51 லுக்கு கிழக்கு வடபார்க் கெல்கை பந்தலாரூறணி சின்ன ஊ
52 றணிக்குத் தெற்கு கீழ்பார்க் கெல்கை இத்தியடிக்
53 காடு பஞ்சந்தாங்கி வயலுக்கு மேற்கு தென்பார்க்கெ
54 கல்கை சன்னவட்டி வயல் சிவனேரிக்கும் வடக்கு இ
55 ந்த நான்கெல்லைக் குள்பட்ட நஞ்சை புஞ்சை நிதி நிட்
56 சேபம் சில தரு பாஷாணம் கூப தடாகங்களும் சறு
57 வமானியமாக ஆளுடைய பரமசுவாமியாருக்கு அபி
58 ஷேகம் நிவேதனம் திருமாலை திருவிளக்குத் திருப்ப
59 ணி திருநந்தவனம் திருமடம் இது முதலாகிய சிவ னை
60 கயிங்கல்லிய மெல்லாம் ஆதி சந்திராற்கமாய்த் த
61 ற்ம்ம பரிபாலனம் பண்ணிக் கொள்ளக் கடவாராக
62 வும் இந்த தற்மத்தை யாதாமொரு வாக்கற்தஸ
63 ஹாயத்தினாலும் பரிபாலனம் பண்ணினவர்கள் வங்

64 கிச பாரம்பரையாய் ஸ்ளபாக்கிய ஸந்தாநமும் அஜே

65 க சொற்காதி போகங்களையும் அனுபவிப்பார்கள்

66 இந்த தற்மத்துக்கு விகாதம் பண்ணின பேர்கள் ம

67 ாதா பிதா குருத் துரோகிகளாய்க் கெங்கைக் கரை

68 யில்ப் பிராமணரையும் காராம்பசுவையும் கொன்ற

69 தோஷத்திலேயே போகக் கடவராகவும் இந்தச் சாஸ்

70 னம் அட்டவணை சேதுராமலிங்க பிள்ளை யெழு

71 த்து இந்தச் சாசனம் கல்லினும் வெட்டிக் கொ

72 ள்ளவும் இந்தத் தற்மத்தை மருதப் பண்டாரமும் ஏகப

73 ண்டாரமும் தற்மத்தைப் பரிபாலனம் பண்ணிக் கா

74 ணியாட்சியா யனுபவிச்சுக் கொள்ளவும் ராமலி

75 ங்கம் துணை

# 25

# புளியங்குடிச் செப்பேடு

இருக்கும் இடம் : டாக்டர் எஸ். எம். கமால் அவர்கள் இல்லம்.
இராமநாதபரம்

அரசர் : திருமலை சேதுபதி காத்த தேவர்

காலம் : 27–1–1674

**அமைப்பும் செய்தியும்** : இராமேசுவரம் இராமநாதசுவாமி திருக் கோயிலில் பல விழாக்கள் நடைபெற்றன. அவற்றுள் ஒன்று ஆவணி மூலநாள் விழாவாகும். திருக்கோயில் நெய்வேத்தியத்திற்கும், ஆவணி விழாவிற்குமாக சேதுபதி மன்னரால் புளியங்குடி, கருமல், குமாரக் குறிச்சி ஆகிய ஊர்கள் கொடையாக அளிக்கப்பட்டன. இக் கட்டளைகள் அரசர் பெயராலேயே நடைபெற்றன. இக்கிராமங்கட்கு உட்பட்ட உள்கடை, ஏந்தல்கள் ஆகியவைகளும் கொடையாக அளிக்கப்பட்டன.

இவ்வூர்களிலிருந்து வரும் சகல வருமானமும் கோயிலுக்கு அளிக்கப்பட்டன. சேதுபதி அரசர் ஆவணி மூல விழாவிற்கு ஏற்கனவே முகிழ்த்தகம் என்ற ஊரைத்தானமாக அளித்ததை கி.பி, 1648 ஆம் ஆண்டு அளிக்கப்பட்ட மற்றொரு செப்பேடு குறிக் கிறது. இக் கொடை இராமநாத பண்டாரம் வசம் அளிக்கப்பட்டது.

நாற்பாங்கு எல்லைகள் கூறப்படவில்லை. எல்லைக்குட்பட்ட குட்டம், குளம், நன்செய், புன்செய், திட்டு, திடல், பலவரி, சொர்னா தாயம். செம்புவரி. களஞ்சியவரி உட்படச் சகலமும் அளிக்கபபட்டது.

## செப்பேடு

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1591ம் வருஷம் இதன் மேல் செல்

2 லாநின்ற பிரமாதிச வருஷம் தை மாதம் மங்கள வாரமும் திரையோத

3 சியும் திருவாதிரை நட்சத்திரமும் சௌபாக்கிய நாம யோகமும் பத்திர

4 வாகரணமும் கூடிய சுபயோக தினத்தில் தேவை நகராதிபன் சேதுமூல ரட்சா துர

5 ந்தரன் இராமநாதசுவாமி காரிய துரந்தரன் பரராஜ சிங்கம், சொரிமுத்து

6 வன்னியன் மகர மண்டலேசுரன் மூவராய கண்டன் கண்டநாடு கொண்டு

7 கொண்டநாடு கொடாதான் பட்ட மாலங் காத்தான் துட்டராயிர கண்டன் புவனேக

8 வீர கஞ்சுகன் வீரவள நாடன் அரச ராவணராமன் பரதள விபாடன் அந்தம்பிற

9 கண்டன் சாமித் துரோகியள் முண்டன் பஞ்சவர்ணராய ராவுத்தன் பணுக்குவார் கண்டன்

10 வைகை வளநாடன் கொட்டமடக்கி இவுளி பாவடி மிதித்து ஏறுவார் கண்டன் வீர வெண்பா

11 மாலை இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகை மன்னர் சிங்கம் மதுரை ராயன் ஆற்றில்

12 பாய்ச்சி கடலில் பாய்ச்சி மதப்புலி அடைக்கலங் காத்தான் தாலி க்குவேலி சத்ருவாதியள் முண்

13 டன் வன்னியராட்டம் தவிழ்த்தான் மேவலர்கள் வணங்கும் இரு தாளினான் வீர மகா

14 கெம்பீரன் கீர்த்திப் பிரதாபன் தொண்டியந்துறை காவலன் துர்க ரேபந்தன் அனும

15 கேதனன் கொடைக்குக் கர்ணன் பரிக்கு நகுலன் பரத நாடக பிரவீணன் கருணா கடாட்சன்

16 குன்றிலுயர் மேருவை குன்றாய் வளைத்து பொசித்தவன் திலதநுதல் மடவார் மடல் எழுதவரு

17 சுமுகன் விசயலட்சுமி காந்தன் கலை தெரியும் விற்பனன் காமினி கந்தப்பன் சத்திய பாஷா அரிச்

18 சந்திரன் சங்கீத சாகித்ய வித்யா வினோதன் வீரத்தண்டை சேமத் தலை விளங்கு

19 மிருதாளினான் சகல சாம்பிராட்சிய லெட்சுமி வாசன் செயதுங்க வங்கிசதிபன் துக

20 வூர் கூற்றத்தில் காத்தூரான குலோத்துங்க சோழநல்லூர் கீழ்பால் விரையாத கண்ட

21 னிலிருக்கும் ஸ்ரீ திருமலை சேதுபதி காத்த தேவர் அவர்கள் ஸ்ரீ இராமநாத சுவாமி பர்வதவர்த்தினி

22 அம்மன் பூசை நெய்வேத்தியத்திற்கும் ஆவணி திருவிழா உச்சவத் திற்கும் இராமநாத பண்டார

23 மவர்கள் பாரிசம் நம்முடைய கட்டளைக்கு தானபூர்வமாக கட்டடையிட்ட புளியங்குடி

24 கருமல் குமாரக்குறிச்சியும் மேற்படி உள்கடை யேந்தல்களும் மேல்படி பரிநான்

25 கெல்கைக்பட்ட குட்டம் குளம் நஞ்சை புஞ்சை திட்டு திடல் பலவரி சொர்ணாதாயம்

26 செம்புவரி களஞ்சியவரி சகலமும் இராமநாதசுவாமி பூசைக்கு தாம்பர சாதன கட்டளை

27 இட்டோம் இந்தக் கிராமம் சந்திராதித்தாள் சந்ததிப்பிரவேசம் உள்ள வரைக்கும் ஆண்டு

28 அனுபவித்துக்கொள்ள கடவாராகவும் இந்த தர்மத்தை யாதொருவர் அபிமானித்து பரிபாலனம்

29 பண்ணிக் கொண்டவர் கோடி கெங்காஸ்நானம் பண்ணின சுகிர்தமும் கோடி தனுஷ்கோடி

30 தீர்த்தமாடின சுகிர்தமும் கோடி கன்னிகாதான பலமும் கோடி பூதான பலமும் அடை

31 வாராகவும் இதற்கு யாராகிலும் அகிதம் பண்ணின பேர்கள் கெங்கைக்கரையிலே காராம் பசுவைக்

32 கொன்ற தோசத்திலும் பிரமகத்தி பண்ணின தோஷத்திலும் மாதாபிதாவை கொன்ற தோஷத்திலும் போவாராகவும்

# 26

## இராமேசுவரம் செப்பேடு

| | | |
|---|---|---|
| இருக்கும் இடம் | : | தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை அருங்காட்சியகம் இராமநாதபுரம் |
| அரசர் | : | இராமலிங்க துரை |
| காலம் | : | 15 - 8–1674 |
| அளவு | : | 17.5 செ.மீ × 14. செ.மீ |

**அமைப்பும் செய்தியும்** : இச்செப்பேடு அதிக வேலைப்பாடு இல்லாத துளையுடைய எளிமையான கைப்பிடியை உடையது கைப் பிடியின் அடிப்பகுதியில் ' றாமசெயம்' என எழுதப்பட்டுள்ளது.[1] ஒரு பக்கத்தில் மட்டுமே எழுதப்பட்டுள்ளது.

இச்செப்பேட்டில் ஆனந்த வருடம் ஆவணி மாதம் 15 ஆம் நாள் மட்டும் கூறப்பட்டுள்ளது. கலியுக ஆண்டோ சாலிவாகன ஆண்டோ குறிக்கப் பெறவில்லை. எழுத்தமைதி நோக்கி 15 8–1674 எனக் கால நிர்ணயம் செய்யப்பட்டது அப்போது கிழவன் சேதுபதி ஆட்சிக் காலம்.செப்பேட்டில் இராமலிங்க துரை என்ற பெயர் மட்டும் குறிக்கப் பட்டுள்ளது.

---

1. *ARE., A.43 of 1947*

1659 இல் மறைந்த மதுரை நாயக்கமன்னர் திருமலை நாயக்கர் பெயரும் இதில் காணப்படுகிறது. 1674ல் சொக்கநாத நாயக்கர் ஆட்சி மதுரையில் நடைபெற்றுள்ளது இச்செப்பேட்டில் காணப்படும் பெயரும் கூலமும் ஐயத்திற்கிடமாக உள்ளது. சேதுபதி மரபில் யாரேனும் அரச குமாரராக இந்த இராமலிங்க துரை இருந்திருக்கக் கூடும்.

திருமலை நாயக்கர் அவர்கள் பள்ளிமடத்தில் வந்து இறங்கி யிருந்தபோது இராமநாதபுரம் இராமலிங்க துரை அவர்கள் இராமேசுவரம் இராமலிங்க சுவாமிக்குக் கடற்கரையில் 18 வகையான கொடிகள் கட்டி இராமேசுவரம் தீர்த்தமாடித் தரையில் நடந்தால் பசும் புல்லுக்குத் துன்பம் வருமென்று எண்ணி அதை மிதிக்காமல் ஆற்றுத் தண்ணீர் வழியாகச் சென்று சுவாமி தரிசனம் செய்தார்.

தீர்த்தம் அளிக்கும்போது, தீர்த்தம் பிரசாதம், திருமாலை இவை களுக்காக 61 ஆம் ஆண்டு ஆனந்த வருடம் 40 மொகர் போட்டுக் கொடுக்கப்பட்டுள்ளது இந்த 40 மொகர் யாருக்கு ஏன் அளிக்க வேண்டும் என்று தெளிவாகக் குறிக்கப்பெறவில்லை.

இச்செப்பேட்டு ஆணையில் திருமலை நாயக்கர் திருக்கரத்தால் கையொப்பமிட்டுள்ளார். இராமலிங்க துரையும் கையொப்பமிட்டுள்ளார். திருமலை நாயக்கர் எதற்காகத் திருக்கரத்தால் கையெழுத்திட்டார் என்பதும் தெளிவாகப் புரியவில்லை.

இந்தப்பட்டயத்தை மதுராபுரி வடக்கு வாயில் பொன்னம்பலம் பிள்ளை செய்துள்ளார். இத்தர்மத்தை யாராவது 'அடிஅளிவு' செய்தால் அவர்களை 'இராமநாதபுரம் இராமேசுவரன்' கேட்பார் என எழுதப் பட்டுள்ளது. இத்தொடர் 'இராமேசுவரம் இராமநாதன்' என இருக்க வேண்டும். யாராவது 40 மொகர் பெற இச்செப்பேட்டைப் போலி யாகத் தயாரித்தார்களோ என்று எண்ணவேண்டியுள்ளது.

## செப்பேடு

1 உ றாமசெயம்

2 ஆனந்தா வருடம் ஆவணி மீ 15 மதுறாபுரித் த

3 லத்திலிறுக்கும் றாசமாநிய றாயர்ஷ்த்திரி

4 திறுமலை நாயக்கறவற்கள் பள்ளிமடந் த

5 ாலுக்காவில் வந்து யெறங்கி யிறுக்கும்
6 போது றாமநாதபுரம் றாமலிங்க தொை
7 ரயவற்கள் அலவாக் கரையிலிக்கும் றா
8 மயீசுபறன் கோயில் சாமிக்கி 18 வை
9 க கொடிக்கட்டி றாமேசுபறன் தீர்த்தம் ஆ
10 டி பச்சை புல்லை மிதியாமல் தன்னீற் ஆ
11 த்து வளியே போயி சாமி தெரிசனம் ப
12 ண்ணி தீற்த்தம் குதிக்கும்போது சாமி வறு
13 ம்படி தீற்த்தம் திருமாலை பிறசாதம் வாங்
14 கி வாறது யிந்தப்படிக்கி 61 மாண்
15 டு ஆனந்தா வருடம் தாம்பூற சாதிநப் பட்டயம்
16 40 மொகற் போட்டுக்குடுத்தாற் யிந்தப்
17 படிக்கி திறுமலை நாயக்கறவற்கள் திறுச்கர
18 றத்தால் கயி ஒப்பம் யிந்தப்படிக்கி றாம
19 லிங்க தொறையவற்கள் கயி ஒப்பம்
20 யிந்தப் பட்டயம் செயிதவன் மதுறாபுரி
21 வடக்கு வாசல் பொன்னம்பலம் பின்
22 ளை யிதை ஆறாமொறுதன் அடி அளிவு
23 செயிதால் றாமநாதபுரம் றாமயீசுபற
24 ன் கேள்ப்பாற் உ

# 27

# திருக்காணூர்ச் செப்பேடு

இருக்கும் இடம் : தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை அருங்காட்சியகம், இராமநாதபுரம்

அரசர் : திருமலை சேதுபதி காத்த தேவர்

காலம் : 10–12–1676

அளவு : 18 செ.மீ. × 14 செ.மீ.

**அமைப்பும் செய்தியும்** : அளவில் சிறியதான இச்செப்பேட்டின் கைப்பிடி உடைந்துள்ளது.[1] கைப்பிடியில் வரைகோட்டு ஓவியம் வரையப்பட்டுள்ளது. உடைந்துள்ள கைப்பிடியின் கீழ்ப்பகுதியில் வரைகோட்டு ஓவியத்தின் ஒரு பகுதி தெரிகிறது. அவ்வோவியம் எதைக்குறிக்கிறது என்பது தெரியவில்லை. இச்செப்பேட்டில் பிழைகள் அதிகமாக உள்ளன.

இச்செப்பேட்டின் காலக்குறிப்புப்படி இக்காலம் கிழவன் சேதுபதியின் ஆட்சிக்காலம் ஆகும். ஆனால் கொடை அளித்தவர் பெயர் திருமலை சேதுபதி என்று காணப்படுகிறது.

இரணியகெர்ப்ப சுதாகரனாகிய திருமலை சேதுபதி அரசர் திருக்காணூர், புதுக்குடி ஆகிய இரண்டு ஊர்களை ஒரு கோயிலுக்குக் கொடையாக அளித்தார். கொடை அளிக்கப்பெற்ற கோயில் எது?

---

1. *ARE., A. 25 of 1947.*

அது எந்த ஊரைச் சேர்ந்தது? என்ற குறிப்பு எதுவும் செப்பேட்டில் இல்லை. செப்பேட்டின் இறுதிப் பகுதியில் 'ராமலிங்கந் துணை' என்ற காப்புச் சொல் இருப்பதைக்கொண்டு கொடை அளிக்கப்பெற்ற கோயில் இராமேசுவரம் என்பதை அறியலாம்.

**திருக்கானூரின் எல்லைகள்**

கிழக்கு எல்லை கோடிக்குளம்; தெற்கு எல்லை பாம்பாறு; மேற்கு எல்லை புதுக்குடி, பீமா ஊருணி; வடக்கு எல்லை கோடிக் குளத்து ஆறு, எச்சிக் கோட்டை.

**புதுக்குடி எல்லை**

கிழக்கு எல்லை திருக்கானூர்க் கண்மாய்; தெற்கு எல்லை பாம்பாறு; மேற்கு எல்லை திருத்தங்கல் கீழ்வயல், பகையணி வயல்; வடக்கு எல்லை எச்சிக் கோட்டைக் கண்மாய் தென்கால்.

இவ்விரண்டு ஊர்களிலும் முறையே 70 கலம், 50 கலம் ஆக மொத்தம் 120 கலம் விரையடி விடக்கூடிய நிலம் கொடையாக அளிக்கப்பெற்றது. இவ்வூர்களில் புதுக்குளம், உள்க்கிடை ஏந்தல், ஏயணி சிங்கன் ஏந்தல், கள்ளகுடி ஏந்தல் ஆகியவை கொடையாக அளிக்கப்பெற்றன.

இந்நிலங்களிலிருந்து கிடைக்கும் வருவாயைக் கொண்டு சுவாமிக்கு உச்சிக்காலக் கட்டளை நடத்த ஆணையிடப்பட்டது. கொடையைப் பெற்றவர்கள் நிலத்தை வெட்டித் திருத்திச் சமப்படுத்தி உச்சிக்காலக் கட்டளைக்கு எந்தவொரு குறையும் வராமல் நடத்த வேண்டும் என்று கூறி இச்செப்பேடு அளிக்கப்பட்டது.

இந்தப் பட்டையம் அட்டவணை சேதுராமலிங்கம் பிள்ளை என்னும் அரசு அலுவலரால் எழுதப்பட்டது. இறுதியில் 'ராமலிங்கந் துணை' எனக் கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளது.

# செப்பேடு

## முதல் பக்கம்

1 சுபதஸ்ரீ தறி விசையாபுதைய சாலியவாகன ச
2 கார்த்தம் 1599க்கு மேல் செல்லாநி
3 ன்ற நள வருடம் மார்களி மீ 21 ன் ஆதித்த வாரமும் சு
4 க்லபச்ச திரயோதெசியும் மக நச்செத்திரமும் கிறகண புண்
5 ணிய காலமும் கூடின சுபதினத்தில் திருப்பெருந்து
6 றை ஆளுடைய பரமசுவாமியாருக்கு உச்சிக்கால கட்டளை அ
7 பிஷேக நெயிவேத்தியத்துக்கு திருமாலை திருவிளக்குமா
8 க சேது துரந்தரன் ராசாதிராசன் ராசபரமேசுரன்
9 ராசமாத்தாண்டன் ராசகெம்பீரன் ராமனாதசுவாமி ப
10 றுவதவற்த்தனி பாதசேவிகன் இரவி
11 குலசேகரன் இரவி மாத்தாண்டன் சொரிமுத்து
12 வன்னியன் தொண்டியந்துறை காவலன் வை
13 கை வளனாடன் வலியச் சருவி வழியிற்க்கா
14 ல் னீட்டி தாலிக்கு வேலி சாடிக்காறர் கண்
15 டன் வீரவெண்ம்பா மாலை பனுக்குவார் க
16 ண்டன் இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகைமன்
17 னர் சிங்கம் மன்னரில் மன்னன் மன்னியராட்டந்
18 தவிள்த்தான் ஆற்றில் பாச்சி கடலில் பாச்சி அஷ்ட்ட
19 லெட்சுமி நிவாசன் கனவித்தியா வினோதன் வீரத்தண்
20 டை சேமத்தலையுடையவன் சத்திய அரிச்சந்திரன் இர
21 ணிய கெற்ப்ப சுதாகரனாகிய திருமலைச் சேதுபதி காத்த தே

22 தவரவர்கள் தற்ம சாதனப் பட்டையம் குடுத்தபடி நம்மு
23 டைய தற்மத்துக்கு கிறாமம் திருகானூர் புது குடியும் புது
24 க்குளமும் உள்கிடை ஏந்தல் ஏயணி சிங்கன் ஏந்தல்
25 கள்ளகுடி ஏந்தல் இம்மானியம் தானசாதனம் பண்
26 ணிக் குடுத்தபடி இந்தக் கிறாமத்துக்கு எல்கையாவது
27 திறுகாணூருக்குகீள்பாற் கெல்லை கோடிக்குளம் தே
28 ாறோருக்கு மேற்கு தென்பாற்க் கெல்லை பாம்பாத்து
29 க்கு வடக்கு மேற்பாற்க் கெல்கை புதுகுடிக்கும் பீ
30 மா ஊறணிக்கும் கிளக்கு வடபாற் கெல்கை கோடி
31 க்குளத்து ஆத்துக்கும் எச்சிக் கோட்டைக்கும் தெற்கு இந்
32 த எல்கைக்குள்ப்பட்ட கலம் 70 விரையடியும் புதுக்குடிக்கு கீள்
33 பாற்கெல்லை திறுகானூர்க் கண்மாயிக்கு மேற்
34 கு தென்பாற் கெல்கையாவது பாம்பாற்றுக்கு வடக்கு
35 மேல்பாற் கெல்கையாவது திருத்தங்கல்க் கீள்வ
36 யலுக்கும் பகையஸ்ரி வயலுக்கும் கிளக்கு வடபாற்க்
37 கெல்லையாவது எச்சிக்கோட்டைக் கண்வாயில் தென்காலுக்கு

## இரண்டாம் பக்கம்

38 தெற்கு இந்த எல்லைக்குள்ப்பட்ட நிலம் 50 விரையடியும் கிராம
39 ம் ரெண்டுக்கு ஏந்தலுள்பட கலம் 12விரையடி உச்சிக்கா
40 ல கட்டளைக்கு வெட்டித் திருத்தி சரிப்படுத்தி சுவாமி கா
41 ரியம் தாச்சி வராமல் நடப்பிக்கச் சொல்லி சாதனம் ப
42 ண்ணிக் குடுத்தோம் இந்த எல்லைக்குள்ப்பட்ட கூப தி
43 டாகம் சில தரு பாசான நிதிநிசபயாக நாம் அனு
44 பவித்துக் கொள்ளவும் இந்த தற்மத்தை யாதாமொ

45 ருதர் வாக்குச்சகாயம் அற்த சகாயம் சரீர சகா

46 யத்தினாலேயும் பரிபாலினம் பண்ணினபேர் அனேக

47 சிவலிங்கப் பிறதிஷ்டை பலனும் மாணிக்க

48 வாசகர் பெற்ற பேறும் பெற்று சோடிமகாவிரத போக

49 ங்களையம் அனுபவித்து புத்திர மித்திர களத்திரா

50 திகளுடனே சுகமே யிருப்பார்கள் இந்த தற்மத்து

51 க்கு யாதாமொருதர் விகாதம் பண்ணினபேர் மாதா

52 பிதாவையும் கெங்கைக் கரையிலே பிராமணாளையும்

53 காராம் பசுவையும் கொன்ற தோசத்திலே போவார்கள்

54 இந்த பட்டையம் எழுதினது அட்டவணை சேதுராமலிங்

55 கம் பிள்ளை கை எழுத்து

56 ராமலிங்சுந் துணை

# 28

# புல்லுக்குடிச் செப்பேடு

இருக்கும் இடம் : திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை

அரசர் : திருமலை சேதுபதி காத்த ரகுநாதத் தேவர்

காலம் : 2—1—1678

அளவு : 21 செ.மீ. x 15 செ.மீ.

**அமைப்பும் செய்தியும் :** இச்செப்பேடு அரைவட்ட வடிவிலான அகன்ற அடிப்பகுதியினைத் துளையில்லாத சிறு கைப்பிடியையுடன் பெற்றுள்ளது. செப்பேட்டின் முதல் பக்கத்தில் குருந்த மரத்தின் அடியில் உயர்ந்த அழகிய பீடத்தில் குருவடிவில் சிவபெருமான் அமர்ந்திருக்கும் கோலமும், இடக்கையில் ஓலைச்சுவடியுடன் வலக் கையில் சின்முத்திரை வடிவில் அவர் எதிரில் பயபக்தியுடன் கும்பிட்டு நிற்கும் மாணிக்கவாசகருக்கு உபதேசிக்கும் கோலமும் மிக அழகிய வடிவில் வரைகோட்டு ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது. கோடானாக வந்த பாண்டியனின் முதலமைச்சர் மாணிக்கவாசகர் கோவனாண்டி வடிவில் கைகூப்பி வணங்கும் நிலையில் நிற்கும் காட்சி அழகு பொலிய வரையப் பட்டுள்ளது.

குருவாகிய சிவபெருமானுக்குப் பின்னர் இரு சீடர்கள் இருவரும் கைகளில் ஓலைச் சுவடியுடன கற்றுச் சொல்லிகள் போல் அமர்ந் துள்ளனர். உருவங்கள் அனைத்தும் பெரிய அளவுகளிலேயே வரை யப்பட்டுள்ளன. கைப்பிடியில் இடையில் ' தம்ம ( ம் ' ) என எழுதப் பட்டுள்ளது.

இச்செப்பேட்டில் கண்ட கொடை கோபாலர் எனப்படும் இடையர் சமூகக் கட்டளையின் பொருட்டுக் கொடுக்கப்பட்டதாதலின் அவர்கள் குலமரபுக்கேற்ப வழிபடு கடவுளான கிருஷ்ணன் டல்லாங் குழல் ஊதும் காட்சி மிகவும் கைதேர்ந்த முறையில் இரண்டாம் பக்கம் வரையப்பட்டுள்ளது. நான்கு திருக்கரங்களுடன் கிருஷ்ணன் காணப்படுகின்றார். கீழ் வலக்கையில் சக்கரமும், கீழ் இடக்கையில் சங்கும் உள்ளன. மற்ற மேல் இரண்டு கரங்களிலும் புல்லாங்குழலை ஏந்தி மிகவும் இலாவகமாக வாசிக்கின்றார். இடையில் துண்டு ஒன்றை வரிந்து கட்டியுள்ளார். துணி இடுப்பின் இருபுறமும் குஞ்சம்போல் தொங்குகிறது. கிருஷ்ணனின் இருபுறமும் இரு பசக்கள் நிற்கின்றன. கோவிந்தன் குழல்கொண்டு ஊதினபோது கால்பரப்பிக் கவிழ்ந்திரங்கிச் செவிகளை ஆட்டாமல் பசுக்கூட்டங்கள் நின்றதாக ஆழ்வார் பாடலாகிய இலக்கணத்துக்கு இலக்கியமாக இவ்வரை கோட்டு ஓவியம் தீட்டப்பட்டுள்ளது. தலை நிமிர்த்தி இசை கேட்கும் நிலையில் அவை நிற்கும் நிலையைச் சிற்பி எளிய கோடுகளில் எழிலாகச் செதுக்கியுள்ளான்.

இச்செப்பேட்டின் காலக் குறிப்பில் தவறு உள்ளது. திருமலை சேதுபதி ஆட்சிக்காலம் 1672 ஆம் ஆண்டுடன் முடிவடைகிறது. இச்செப்பேட்டின் காலம் கி.பி. 1678. பஞ்சாங்கக் குறிப்புக்களும் முற்றிலும் பொருந்திவரவில்லை. கிழவன் சேதுபதிக்கும் திருமலை சேதுபதி என்ற பெயர் உள்ளது ஒரு செப்பேட்டின் மூலம் தெளி வாகிறது. அதன்படி இச்செப்பேட்டைக் காலம் நோக்கிக் கிழவன் சேதுபதி செப்பேடு என்றும் எடுத்துக்கொள்ளலாம்.

சேதுபதி அரசர் அவர்கள் திருப்பெருந்துறை ஆளுடைய பரம சுவாமிகளுக்குக் கோபாலர் கட்டளையாக உச்சிக்காலக் கட்டளை நடத்தும் பண்டாரப் பாதத்துக்கு கீதார ஊழியம் செய்யும் செகுட்டக் கோன் மகன் உலகன், ஸ்ரீ பாதம் தாங்கிய கோவுண்டமாரில்

ராமகோவுண்டன் இவர்கள் கையில் அஞ்சு கோட்டைப் பத்தில் புல்லுக்குடி ஏந்தல் என்னும் ஊரைக் கொடையாக அளித்த செய்தி இச்செப்பேட்டில் கூறப்பட்டுள்ளது.

புல்லுக்குடி ஏந்தலுக்கு எல்லை விபரம்: மேற்கு எல்லை வெண்ணத்தூர் எடுத்தணி எல்லை; வடக்கு எல்லை விளாங்காட்டூர் எல்லை; கிழக்கு எல்லை நல்லுக்குடி எல்லை; தெற்கு எல்லை சடையாமங்கலம் எல்லை என்பனவாகும்.

செப்பேட்டில் கோபாலர் பெயரில் நந்தவனம், திருமடம் ஆகியன இருந்த விபரமும் கூறப்படுகிறது. புல்லுக்குடி ஏந்தல் வருவாயைக் கொண்டு மேற்கண்ட நந்தவனம், திருமடம் பராமரிப்புடன் இறைவனுக்கு அபிடேகம், நைவேதனம், திருமாலை, திருவிளக்கு, திருப்பணிகள் எல்லாம் செய்யவேண்டும் என்றும் எழுதப்பட்டுள்ளது.

இந்தச் செப்பேட்டை அட்டவணை சேதுராமலிங்கம் பிள்ளை எழுதியுள்ளார். இந்தச் செப்பேட்டைக் கல்வெட்டில் பொறித்துக் கொள்ளவும் கட்டளையிடப்பட்டுள்ளது. திருப்பெருந்துறையில் சில கல்வெட்டுக்களைச் செப்பேட்டிலும் பொறித்துக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டு அவ்வாறு வெட்டப்பட்ட கல்வெட்டுப்படிச் செப்பேடுகள் பலவும் கிடைத்துள்ளன. இச்செப்பேடு 'ராமலிங்கம்' துணை என்ற கிரந்தத் தொடருடன் முடிவடைகிறது.

இக்கொடை அளிக்கப்பட்ட போது திருவாவடுதுறை ஆதீனத் தலைவராக விளங்கியவர் ஸ்ரீ இராமலிங்கதேசிகர் (1558-1578).

## செப்பேடு

### முதல் பக்கம்

1 ஸவஸ்திஸ்ரீமந் மகாமண்டலேஸ்வரன் அரியரா

2 ய தள விபாடந் பாஷைக்குத் தப்புவ ராயிர கண்ட

3 ன் மூவராயர் கண்டன் கண்டநாடு கொண்டு கொண்டந

4 ாடு குடாதான் பூர்வ தட்சண பச்சிம உத்திர சத்த சமுத்ர

5 ாதிபதி எம்மண்டலங் கொண்டு ஈழந் திறகொண்டரு

6 ளிய ராஜாதி ராஜந் ராஜபரமேஸ்வரன் ராஜமாத்த
7 ாண்டந் ராஜகெம்பீரந் ராஜாக்கள் தம்பிரான் ச
8 கலகுண சம்பந்த சர்வபாசா ராயன் சகல கலாபிரவீ
9 ணன் சங்கீத சாயுஜ்ய வித்யா வினோதன் கெடிகோட்
10 டு மல்லன் கெடிகோட்டு ராயந் துலுக்கர் தள விபாட
11 ன் துலுக்கர் மோகந் தவிழ்த்தான் வடவரசர் மணவாள
12 ர் இளவரசர் குலைகாறன் ராஜாதிராசன் ராஜபரமேஸ்வர
13 ந் மேதினி ஈஸ்வர கண்டந் கட்டாரிச் சாளுவன் ஒட்டியர்
14 தள விபாடன் ஓட்டியர் மோகந் தவிழ்த்தான் வீரப் பிரதா
15 பந் அதல விதல சுதல நிதல ரசாதல மசாதல
16 பாதாள வேழுலோக பிரகண்டன் பாண்டிமண்டல ப
17 த்மாசனத்தோன் சோழமண்டல ஸ்தாபநாசாரியந் தொ
18 ண்டமண்டல பிரதிஷ்டனாசாரியன் மத்த கெஜ பரிகு
19 ல நகுலன் கிரி துர்க்கண் வன துர்க்கன் ஜல துர்க்கன் பரராசகேசரி
20 அசுவபதி கெசபதி தனபதி நரபதியான குமார மல்லி
21 காற்சுனராயர் விருபாக்ஷிராயர் குமாரகாராயர் அதி
22 பலராயர் ஸ்ரீ விபணராயர் தேவராயர் அச்சுததேவ
23 மகாராயர் தம்மராயர் சதாசிவராயர் கிருஷ்ணதே
24 தவ மகாராயர் ராபதேவமகாராயர் பிருத்வி ராஜ்யம் டண்
25 ணி அருளாநின்ற சகாப்தம் உ 1600 இதன்மேல்ச் செ
26 ல்லாநின்ற பிங்கள வருடம் தைய் மீ 5 உ சோமவா
27 ரமும் திசமியும் புணர்பூச நட்சத்திரமும் சுபநா
28 ம யோகமும் தைதுல வாகரணமும் கூடின சுப
29 திநத்தில் சேதுமூலா துரந்தரந்தரரான ராசாதிரா
30 சன் ராச பரமேசுரன் ராமநாத பர்வத வர்த்தனி பாத
31 சேவிகன் ரவிகுல சேகரன் இரவி மாத்தாண்டந்
32 சொரிமுத்து வன்னியன் தொண்டியந்துறை காவல
33 ன் வைய்கை வளநாடன் வழியிற்கால் நாட்டி வலி

34 யச் செருனி தாலிக்கு வேலி சாடிக்காற கண்டன் வீர
35 வெண்பா மாலை பனுக்குவார் கண்டன் பகைமன்ன
36 ர் சிங்கம் ஆத்தில்ப் பாச்சி கடலில்ப் பாச்சி

## இரண்டாம் பக்கம்

37 வீர லட்சுமி விஜைய லட்சுமி சவுபாக்ய லட்சுமி
38 காந்தந் சத்தியரிச்சந்திரன் சகல குண சம்ப
39 னன் சங்கீத சாயிச்சிய வித்யா விநோதந் வீரத
40 ளைய்ச் சேயன் இரணிய கெற்ப சுதாகரனாகிய திரும
41 லைச் சேதுபதி காத்த றகுநாத தேவரவர்கள் தற்ம
42 சாதனங் கொடுத்தபடி திருப்பெருந்துரை ஆளுடைய பர
43 ம சுவாமியாருக்கு உச்சிக்காலக் கட்டளை நடத்தும் கோபா
44 லர் கட்டளைக்கு ராஜஸ்ரீ பண்டாரப் பாதத்துக்கு கீதார ஊ
45 ழியம் செகுட்டக்கோன் புத்திரன் உலகனும் ஸ்ரீபாதம் த
46 ாங்கிய கோபுண்டமாரில் ராம கோவுண்டனும் ராஜஸ்ரீகற்
47 த்தாக்களவர்கள் கையில் தானபூறுவமாக வாங்கிக் கொடுத்த
48 ஏந்தல் அஞ்சுகோட்டைப் பத்தில் புல்லுக்குடி ஏந்தல் இந்த
49 ஏந்தலுக்கு நான்கெல்லையாவது மேல்பாற்கெல்லை வெ
50 ண்ணத்தூர் எடுத்தணி எல்லைக்கு கிழக்கு வடபாற்கெல்லை
51 விளாங்காட்டூர் எல்லைக்குத் தெற்கு கீழ்பாற் கெல்லை நல்லு
52 க்குபடி எல்லைக்கு மேற்கு தென்பாற்கெல்லை சடையாமங்கல
53 த்து எல்லைக்கு வடக்கு இந்தனான்கெல்லைக்குள்ப்பட்ட நஞ்சை புஞ்
54 சை நிதி நிட்சேப செல தரு பாஷாண கூப தடாகங்களும் சறு
55 வமானியமாக ஆளுடைய பரம சுவாமியாருக்கு அபிஷேகம் நை
56 வேதனம் திருமாலை திருவிளக்கு திருப்பணி திருநந்தவனம் திரு
57 மடம் யிது முதலாகிய கங்கிலிய மெல்லாமாதிச் சந்திராற்க்கமா

58 ய்த் தற்மம் பரிபாலனம் பண்ணிக் கொள்ளக் கடவாராகவும் இந்தத் த
59 ற்மத்தை யாதாமொருவர் திறிவித சகாயத்தினாலும் பரிபாலன
60 ம் பண்ணியவர்கள் வங்கிஷ பாரம்பரையாய் சவுபாக்கிய சந்
61 தானமு மனேக சொற்காதி போகங்களையு மனுபவிப்பார்கள்
62 இந்த தற்மத்துக்கு விகாதம் பண்ணின பேர்கள் மாதா பிதா குருத்
63 துரோகிகளாய் கெங்கைக் கரையில் பிராமணரையும்
64 காராம்பசுவையும் கொன்ற தோஷத்திலே போகக்கட
65 வராகவும் இந்தச் சாதனம் அட்டவணைச் சேதுராம லி
66 ங்கம் பிள்ளை எழுத்து இந்தச் சாதனம் கல்லினும்
67 வெட்டிக் கொள்ளவும்

ராமலிங்கம் துணை

# 29

# உத்தரகோசமங்கைச் செப்பேடு

இருக்கும் இடம் : தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை அருங்காட்சியகம், இராமநாதபுரம்.

அரசர் : ரகுநாத திருமலைச் சேதுபதி காத்த தேவர்

காலம் : 25—4—1678

அளவு : 27 செ.மீ. × 26 செ.மீ.

**அமைப்பும் செய்தியும்** : மேல்பகுதியில் சிறு துளையுடன் கூடிய பெரிய கைப்பிடியை உடையது[1]. கைப்பிடியில் நீண்டுள்ளதும் அழகான கோடுகளால் வரையப்பெற்றதுமான சூலக்குறி உள்ளது. சூலத்தின் இருபுறமும் 'ம' போன்று பெரிய எழுத்தில் எழுதப்பட்டுள்ளது இக் கொடைக்குரிய இறைவனான திரு உத்தர கோசமங்கை மங்கை நாதரைக் குறிக்கும் முதல் எழுத்தாக இருக்கலாம். இவ்வாறு செப் பேடுகளில் அத்தலப் பெயரின் முதல் எழுத்தைக் குறிப்பது வழக்கம். திருச்சி மலைனத்தம்பிரான் செப்பேட்டில் 'ம' என்றும், புள்ளிருக்கு வேளூராகிய வைத்தீசுவரன்கோயில் செப்பேட்டில் 'பு' என்றும், கரந்தைச் செப்பேடுகளில் திரிபுவன மாதேவிச் சதுர்வேதி மங்கலத் திற்குரியது என்பதைக் குறிக்கத் 'திரிபு' என்றும் பொறிக்கப்பட்டுள்ளது.

---

*1. ARE., A. 48 of 1947.*

இச்செப்பேடு ஒரு பக்கத்தில் மட்டும் எழுதப்பெற்றுள்ளது. எழுத்துக்கள் தொடங்கி எழுதப்பட்ட 5 வரிகளுக்குக்கீழ் 'சேதுபதி' என்ற பெயர் பெரிய தெலுங்கு எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளது.

செப்பேட்டின் காலம் கிழவன் சேதுபதிக்குரியது. ஆனால் செப்பேட்டில் ரகுநாத திருமலைச் சேதுபதி மகன் ரகுநாத திருமலைச் சேதுபதி என்று எழுதப்பட்டுள்ளது. காலமும் தெலுங்கு எழுத்தும் செப்பேடு கிழவன் சேதுபதிக்கு உரியது என்று தெளிவாகத் தெரிவிக்கிறது. கிழவன் சேதுபதி இராசசூர்ய சேதுபதியின் ஐந்தாம் மனைவிக்குப் பிறந்தவர் என்று சிலர் கருதுவர்.[2] வேறு சிலர் இராசசூர்ய சேதுபதிக்கு நேரிடையான சந்ததிகள் இல்லை. கிழவன சேதுபதி முந்தைய சேதுபதியின் சோரபுத்திரர் என்று குறிப்பர்.[3], எனவே இதுவரை கிழவன் சேதுபதியின் பிறப்புப்பற்றிச் சரியான சான்று கிடைக்கவில்லை.

திருமலை ரகுநாத சேதுபதியின் மகனே கிழவன் சேதுபதி. கிழவன் சேதுபதிக்கும் திருமலை ரகுநாதன் என்ற பெயர் உண்டு என்பது இச்செப்பேடு மூலம் நன்கு தெளிவாகிறது.

சேதுபதி அரசர் தம் தாய், தந்தை, பெண்மக்கள் ஆகியோரின் புண்ணியத்திற்காக திரு உத்தர கோசமங்கைக் கிராமத்தைக் கொடையாக அவ்வூர் மங்கை நாதர்க்கு அளித்தார். அதன்மூலம் அவ்வூரில் நடைமுறையில் இருந்த வரிகள் அனைத்தும் மங்கை நாதருக்கு அளிக்கப்பட்டன. கடவுளுக்கு ஊர் எது? என்று கேட்டு உத்தரகோச மங்கையே என்று மணிவாசகப் பெருமான் கூறுகின்றார். மாணிக்கவாசகர் உபதேச தலம் ஆதி சிதம்பரம் என்று பெயருடையது. சிறந்த சிவத்தலம். அவ்வூரில் கீழ்க்கண்ட வரிகள் இருந்தனவாகச் செப்பேடு விரிவாகக் கூறுகிறது.

மடத்துவரி, சோடிவரி, ஆயம், சுங்கம், கூரைவரி, பேர்வாரிக்கம் பள்வரி, களஞ்சியவரி, பட்டண ஸ்வாமி வலங்கை வரி, எழுத்தாணி வரி, கீதாரம், நன்மாடு, சுரபிக்கத்தர்வரி, கல்வரி, ஈழம்புஞ்சை வரி, மானோன்புக்கிடாய்வரி, கொல்லர்வரி, தச்சர்வரி, திருகைவரி,

---

2. *S. Kathirval*, A History of Maravas, *p.33*;
*ந. சுப்பிரமண்யன்*, தமிழகவரலாறு (1565-1982), பக் 46;
3. சிரஞ்சீவி, சேதுபதிகள் வரலாறு. பக் 61.

சாணார்வரி, பாசிவரி, பனங்கடமை, கத்திக்கடமை, பலபட்டடைவரி போன்ற பல வரிகளைச் செப்பேட்டில் காணுகின்றோம்.

இவையன்றி ஊழியம், உலுப்பை ஆகியவைகளையும் கோயிலுக்கே அளிக்குமாறு செய்தார்.

கிழவன் சேதுபதியாகிய கர்த்தாக்களிடமிருந்து பரதேசி முத்திரை புழுகுவனச் சொக்கனாத பண்டாரம் இச்செப்பேட்டை வாங்கினார் என இறுதியில் எழுதப்பட்டுள்ளது.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 ஸ்வஸ்திஸ்ரீ சகாப்தம் 1600 இதின்மேல் செல்லாநின்ற காலயுக்தி நாம சம்வசெரம் உ

2 த்தராயணத்தில் வசந்த ரிதுவில் வைகாசி மாதத்து சுக்கில பட்சத்துப் பவநி

3 அம்மாசியும் சுக்கிற வாரமும் விசாக நட்செத்திரமும் சுபயோக சுப கரணமும்

4 பெற்ற புண்ய காலத்தில் தேவை நகராதிபன் சேது மூலரக்ஷா துரந் தரந்

5 சிவகார்ய துரந்தரனான துகவூற் கூற்றத்துக் காத்தூரான குலோத் துங்க

6 சோழநல்லூர் கீழ்பால் விரையாத கண்டனிலிருக்கும் ஹிரண்ய கர்பயாஜி

7 யான ரகுனாத திருமலைச் சேதுபதி காத்ததேவர் புத்திரந் ரகுனாத திரு

8 மலைச் சேதுபதி காத்த தேவர் தங்கள் மாத்ரு வர்க்கத்துக்கும் பித்ரு வர்க்கத்துக்கும் புத்திரி

9 களுக்கும் புண்ணியமாக திருவுத்தரகோச மங்கை ஸ்வாமி மங்கைநாத ஸ்வாமி தி

10 ருவிளையாட்டமான திருவுத்தரகோச மங்கை முதலான கிராமங்
களுக் கெல்
11 லாம் ஸற்வ மானியமாக தாம்புர சாசனம் பட்டையங் கொடுத்தபடி
மடத்துவரி
12 சோடிவரி ஆயம் சுங்கம் கூரைவரி போர்வாரிக்கம் பள்வரி களஞ்சியவரி
பட்டண
13 சுவாமி வலங்கைவரி எழுத்தாணிவரி கீதாரம் நன்மாடு சுரபிக்கத்தர்
வரி கல்வ
14 ரி ஈழம் புஞ்சைவரி மானோன்புக்கிடாய்வரி கொல்லர் தச்சர்வரி திரு
கைவரி சா
15 னார்வரி பாசிவரி பனைங்கடனக கத்திக்கடமை பலபட்டடைவரி இது
முதலா
16 ன் பலவரி உண்டான்னது ஊழியம் உலுப்பையும் சகல சமுத்தாயமும் ச
17 றுவமானிபமாக ஸ்வாமி மங்கைநாத ஸ்வாமிக்குக் கட்டளையிட்டு
தாம்புர ஸாஸ்ந
18 மாய் பட்டயங் கொடுத்தோம் இந்தப்படிக்கு ஆதி சந்திராதித்த வரை
சந்திரப்ர
19 வேசம் ஆண்டு அனுபவித்துக் கொள்ள கடவாராகவும் இந்த தர்மத்
20 தை யாதாமொருவன் பரிபாலநம் பண்ணினவர்கள் கெங்கைக் கரையி
21 லும் கோடி சிவலிங்க ப்ரதிஷ்டையும் கோடி பிரம்ம ப்ரதிஷ்டையும்
பண்ணின
22 பலத்தை அடைவாராகவும் இதுக்கு யாதாமொருவன் அகுதம் ப
23 ண்ணினவர்கள் கெங்கைக் கரையிலும் சேதுக் கரையிலும் மாதா
பிதாவை
24 யும் குருவையும் காராம் பசுவையும் பிராமணாளையும் கொன்ற
தோஷத்திலே
25 போகக் கடவாராகவும் உ ஸ்வதத் தாத்வி குணம் புண்யம் பரதத்தா
26 நு பாலநம் பரதத்தாப ஹாரேண ஸ்வதத்தம் நிஷ்பலம் பவேது:
27 உ பரதேசி முத்திரை புழுகுவனச் சொக்கனாத பண்டாரம் கர்த்த
28 ாக்கள் கிட்ட வாங்கின செப்பேடு உ

# 30

# கீழக்கரைச் செப்பேடு

| | | |
|---|---|---|
| இருக்கும் இடம் | : | உத்தரகோசமங்கை ம. ஆதி சிதம்பரீக் குருக்கள் |
| அரசர் | : | இரகுநாதத் திருமலை சேதுபதி காத்த தேவர் |
| காலம் | : | 24–5–1678 |
| அளவு | : | 26.5 செ.மீ. × 15 செ.மீ. |

**அமைப்பும் செய்தியும்** : நீண்ட சதுர வடிவில் அமைந்த இச் செப்பேடு அனுத்தொகை மங்கலம்[1] என்றும், நினைத்தது முடித்த வினாயகர்பட்டினம் என்றும்[2], கீழைக்கரை என்றும்[3] அழைக்கப்படும் கீழக்கரை மீனாட்சி உடனமர் சொக்கநாத ஈசுவரன் கோயிலுக்கு உரியது. இச்செப்பேடு இப்பொழுது உத்தரகோசமங்கை தெற்குத் தெருவில் உள்ள ம. ஆதி சிதம்பரக் குருக்கள் வசம் உள்ளது.

கீழைக்கரை மிகச்சிறந்த துறைமுக நகரமாக விளங்கிற்று. துறைமுகம் அருகில் பெரிய வணிகத்தலம் இருந்தது. அங்கு

---

1. *A.R. E,A. 396 of 1907*; *S.I.I. XXIII 396.*
2. *A.R. E,A. 398 of 1907*; *S.I.I. XXIII 398*,(பட்டணம் - *A.R. E,A. 396, 397 of 1907*)
3. *A.R. E,A. 397 of 1907*; *S.I.I. XXIII 397.*

பதினெண்விஷயத்தார்[4] என்னும் வணிகக் குழுவினர் இருந்தமை பற்றியும், முத்து விற்பனை பற்றியும் கல்வெட்டுக்கள் கூறுகின்றன அங்குள்ள வணிகத்தலம் 'பேட்டை' எனப்பட்டது.

24–5–1678 ஆம் நாள் கிழவன் சேதுபதி என்னும் இரகுநாதத் திருமலை சேதுபதி காத்த தேவர் தன் தாய் தந்தையர் அவர்களின் முன்னோர்கள் புண்ணியத்தின் பொருட்டுக் கீழைக்கரை மீனாட்சி உடனமர் சொக்கநாத சுவாமி கோயில் காரியங்களைக் கவனித்துப் பூசை நடத்தும் ஸ்தானிகர் கௌதம கோத்திரம் தேவேந்திர பட்டர் மகன் இராமலிங்கக் குருக்களுக்குக் கீழைக்கரைப்பட்டினம் துறை முகம் பேட்டையில் விற்பனையாகும் பொருள்கட்கு மகமை நிர்ணயம் செய்து அதனைத் தானமாக அளிக்குமாறு செய்தார். தேவேந்திர பட்டர் மகன் இராமலிங்கக் குருக்களுக்குக் கீழைக்கரைப் பட்டினம் துறைமுகம் பேட்டையில் விற்பனையாகும் பொருள்கட்கு மகமை நிர்ணயம் செய்து அதனைத் தானமாக அளிக்குமாறு செய்தார்.

நெல், அரிசியும் பிற தானியங்களும் நடை (வண்டி), சுமை, பொதி போன்ற அளவுகளில் பேட்டைக்கு வந்தன. கோயில் தானி கருக்குக் கொடுக்கப் பட்டவை 'மகமை' என்றும் அக்கோயிலில் உள்ள பிற ஊழியர்களின் உணவுக்காகக் கொடுக்கப் பெற்றவை சுவந்திரம்' என்றும் குறிக்கப்படுகிறது. மகமை பொன்னாகவும், 'சுவந்திரம் பொருளாகவும் அளிக்கப்பட்டுள்ளது.

கீழைக்கரைப் பட்டினம் துறைமுகம் பேட்டையில் நெல், அரிசி, பிற தானியங்கள், பாக்கு, மிளகு, சவுளி, காய், பலசரக்கு, செம்பு, துத்தநாகம், பட்டுப்புடவை, பன்னீர், கிராம்பு சாதிக்காய், பத்திரி, பட்டுநூல், கருப்புக் கட்டி, பினாட்டு, புளி, கருப்புக்கொட்டான், கொட்டப்பாக்கு, தேங்காய் முதலியவை விற்கப்பட்டன. இவற்றுள் சில பொருட்கள் ஏற்றுமதியானவை. சில இறக்கு மதியானவை. இரண்டுக்கும் மகமை சுவந்திரம் உண்டு.

விற்பனையின் போது மட்டும் அன்றி புதுப்படகைக் கடலில் போக்கு வரத்துக்கென இறக்கினாலும், வீட்டில் திருமணம் நடந்தா லும், தீமை ஏற்பட்டாலும் மகமை அளிக்க வேண்டும். கோயிலில்

---

4. சிங்களம், சோனகம், சாவகம், சீனம், துளுவம், குடகம், கொங்கணம், கன்னடம் கொல்லம், தெலிங்கம், கலிங்கம், வங்கம், கங்கம், மகதம், கடாரம், கவுடம், கோசலம், தமிழகம் ஆகிய 18 நாடுகளில் வணிகம் செய்வார்.

நடைபெறும் சங்கராந்தி, சரசுவதி பூசை போன்றவைகட்கும் முகமை அளிக்க வேண்டும். வாணியன் செக்கு ஆட்டினால் எண்ணெய் அளிக்க வேண்டும்.

இச்செப்பேட்டைத் திருப்புல்லாணியிலிருக்கும் பண்டாரம் மகன் வங்காரு பண்டாரம் எழுதியுள்ளார். இடையில் சேதுபதி என்று தெலுங்கில் எழுதப்பட்டுள்ளது.

கீழக்கரைத் துறைமுகத்தின் வாணிகச் சிறப்பு இச்செப்பேட்டின் மூலம் நன்கு தெரிகிறது. விற்பனையான பல பொருள்கள் மூலம் அக்காலத்தின் செல்வச் செழிப்பையும், மக்களின் உயர்ந்த வாழ்க்கை நிலையையும் நாம் தெரிந்து கொள்ளுகின்றோம்.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 ஸ்வஸ்தி ஸ்ரீ சாலிவாஹந சகாப்தம் 1600 யிதின்மேல்ச் சென்ற கா

2 லையுத்தி நாமசம்வத்சரத்தில் உத்தராயணத்தில் வசந்த ரிதுவில் வை
சாக ம

3 ாசத்தில் சுக்கில பட்சத்தில் பவுர்ணமாவாசையும் சுக்கிர வாரமும்

4 விசாக நட்செத்திரமும் சுபயோக சுபகரணமும் பெற்ற புண்ணிய

5 காலத்தில் தேவை நகராதிபன் சேதுமூலரட்சர் துரந்தரன் ராமனாத சு

6 வாமி காரியா துரந்தரன் சிவபூசா துரந்தரன் பரராசசிங்கம் ரவிகுல

7 சேகரன் சொரிமுத்து வன்னியன் ஸ்வஸ்திஸ்ரீ மஹா மண்டலேசுரன்

8 வன்னியன்அரியதள விபாடன் பாசைக்குத் தப்புவராயிர கண்ட

9 ன் கண்டனாடு கொண்டு கொண்டனாடு குடாதான் பட்டமானங்
காத்தா

10 ன் துட்டராயிர கண்டன் புவனேக வீரன் மஹா கஞ்சுகன் வீரவளனா

டன் வேதியர் காவலன் அரசராவண ராமன் அடியாற்கள் வேளைக்கா
றன் பரதள விபாடன் அந்தம்பிற கண்டன் சாடிக்காறர் கண்டன்
சாமித்துரோகியள் முண்டன் பஞ்சபாணாவதாரன் பஞ்சவற்ண ரா
யன் பனுக்குவாற் கண்டன் வைய்கை வளனாடன் கொட்டமடக்கி
வையாளி னாறாயணன் இவுளிபாவடி மிதித்தேறுவாற் கண்ட
ன் வீரவெண்பாமாலை யிளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகை மன்னற்
சிங்கம் துரைராசன் ஆத்தில்ப் பாச்சி கடலில்ப்பாச்சி மதப்புலி அடக்கி
லங்காத்தான் தாலிக்கிவேலி சத்துருவாதிமுண்டன் வன்னியராட்ட
மேவலர் கோளரி மேவலர் வணங்குமிரு தாளினான் வீரமத கெ
ம்பீரன் கீர்த்திப்பிரதாபன் அரியமானம் காத்தான் தொண்டிய
ன் துறை காவலன் துற்க ரேபந்தன் அனுமகேதனன் கொடைக்கி
க் கற்னன் பரிக்கு நகுலன் பரதநாடகப் பிறவீணன் கருணாகடாச்சன்
மடவார்கள் மடலெழுது சுமுகன் விசைய லெட்சுமி காந்தன் கலை
தெரியும் விற்ப்பன்னன் காமினி கந்தற்ப்பன் சத்திய அரிச்சந்திரன்
சங்கீத சாகித்திய வித்தியாவினோதன் வீர தண்டை சேமத்
தலை விளங்குமிரு தாளினான் செயதுங்க ராசன் சகலசாம்பிறா
ச்சியு லெட்சுமிநிவாசன் தவவாய் சேதுபதி வங்கிசாதிபதியான்
துகவூர்க் கூத்தத்து காத்தூரான குலோத்துங்க சோள நல்லூர்கிள்பா

## இரண்டாம் பக்கம்

ல் விரையாத கண்டனிலிருக்கும் இரணிய கர்ப்பயாசியான
ரெகுனாதத் திருமலைச் சேதுபதி காத்ததேவறவற்கள் புத்திரரான ரெ
குனாதத் திருமலை சேதுபதி காத்த தேவரவர்கள் மாதுற் வங்கிசத்

32 துக்கும் பிதுற் வங்கிசத்துக்கும் புண்ணியமாக கீளக்கரை

33 மீனாட்சி சொக்கனாத சுவாமி கோவில்த் தானிகற் கெவு

34 தம கோத்திரத்தில் போதாயன சூத்திரத்தில் யேசுச்சாகாத்தி

35 யாபகரான தேவேந்திரபட்டற் ராமலிங்கக் குருக்களுக்கு

36 சகிரணியோதக தாரா பூற்வமாகத் தானம் பண்ணிக்குடுத்தது கீளக்க

37 ரை பட்டணம் துறைமுகம் பேட்டையில் தீற்வை படுகிறதில் மக

38 மை ஊதியம் வரப்பட்டது தவசம் நெல் அரிசி நடை 1க்கு மகமை பணம்

39 மாகாணி 3 மா சிமை 1க்கு பணம் 4 மா ம நல் அரிசி தவசம் பொதி 1க்கு சுவந்திரம் படி மாகாணி

40 னாள் 1க்கு அஞ்சு பொதிக்கிமேல் யெத்தினை பொதி வந்தாலும் னாள் 1

41 க்கு படி 1½ பாக்கு முளகு சவளி காயி தானியம் நடை 1க்கு மகமை பணம் 1 மா யே

42 த்துமதி யிறக்குமதி பாக்கு முளகு பலசறுக்கு செம்பு துத்தனாகம் ப

43 ட்டுப்புடவை பண்ணீற் மெரு கிறாம்பு சாதிக்காயி பத்திரி பட்டுநூல்

44 யேதொரு சறக்கு வந்தாலும் அரமனைத்தீற்வை படி 1க்கு முகமை பணம் 4 மா

45 வீதம் வாங்கிக் கொள்கிரது கருப்புக்கட்டி பினாட்டு புளி பொதி

46 1க்கு பணம் 1 கருப்புக்கொட்டான் சூறா 1000க்கு சுவந்திரம் 1 கொ ட்டபாக்கு

47 1000 செவந்திரம் 1 தேங்காயி 1000க்கு சுவந்திரம் மூக்காணி ஒரு புதுப்படகு னீர் கீ

48 லெறக்கினால் படகு 1க்கு பணம் 1 கலியாண வீட்டுக்கு பணம் 1 தின்மைக்கு பணம் ½

49 சங்கராந்திக் கட்டளை பணம் 5 சரசுவதி பூசைக்கட்டளை பணம் 5 நெல் அரிசி பொ

50 தி வந்தால் னாள் 1க்கு அரமனைத்தீற்வை குடுக்குரதில் னாள் 1 க்கு மகமை பணம்

51 3 வீசம் வாணியன் செக்காட்டினால் ஆடம் 1க்கு எண்ணை படி 4 மா மகமை

52 இவ்வளவு கீளக்கரை மீணாட்சி சொக்கநாதர் சுவாமிகோயில்

53 தானிகற் ஆசந்திறாக்க புத்திர பவுத்திர பாரம்பரியமாயி ஆண்டநு

54 பவித்துக் கொள்வாராகவும் இந்தப்படிக்குத் தாம்பிற சாதனம் கட்

55 டளையிட்டோம் யிந்த தற்மத்தைப் பரிபாலனம் பண்ணின பேரிகள்

56 தனுக்கோடிக் கரையில் சிவலிங்கப் பிரதிட்டையும்ப் பிரமபிரதிட்டை யும்

57 தடாகப் பிரதிட்டையும் பண்ணின பலன் அடைவாற்கள் யிந்த தற்மத்துக்கு விகா

58 தம் பண்ணின பேர்கள் கெங்கைக்கரையில் காறாம். பசுவையும் பிறா மணாளையும் வதைபண்

59 ணின தோஷத்திலே போவாற்கள் ஸ்வதத் தாத்வி குணம் புண்யம் பரதத்தாநு பால

60 நம் பரதத்தாப ஹாரேன ஸ்வதத்தம் நிஷ்பலம் பவேது: உ யிந்த செப்பே

61 டு எளுதினேன் திருப்புல்லாணியிலிருக்கும் பண்டாரம் புத்திரன்

62 வங்காரு பண்டாரம் உ

சேதுபதி

# 31

# சேமனூர்ச் செப்பேடு

இருக்கும் இடம் : இரகுநாதக் குருக்கள், இராமேசுவரம்

அரசர் : இரகுநாத சேதுபதி காத்த தேவர்

காலம் : 23–1–1680

**அமைப்பும் செய்தியும்** : இச்சேப்பேட்டு மூலப்படி கிடைக்கவில்லை. 1886 இல் ஜேம்ஸ் பர்கஸ் அவர்கள் வெளியிட்ட செப்பேட்டு நகல் இங்கு பதிப்பிக்கப்படுகிறது.[1] கிரந்தக் கலப்பு அதிகம் இல்லாத செப்பேடு. செப்பேட்டில் வியாழக்கிழமை எனக் குறிக்கப்பட்டுள்ளது. அது வெள்ளிக்கிழமையாக இருக்க வேண்டும்.

23—1—1680 அன்று கிழவன் சேதுபதி என்னும் இரகுநாத சேதுபதி அவர்கள் தம் குலதெய்வமான இராமேசுவரம் இராமநாதசுவாமிக்கு உச்சிக்காலத் திருவனந்தல் அபிடேகம் பூசை நெய்வேத்தியத்துக்காகத் தமது பெயரில் கட்டளை ஏற்படுத்தி அதற்குச் சேமனூர்; முகிள்த்தகம், நிலமழகிய மங்கலம், சின்னத் தொண்டி ஆகிய நான்கு கிராமங்களை அளித்த விபரத்தை இச்சேப்பேடு கூறுகிறது.

இக்கொடையை ஏற்று நடத்தும் பொறுப்பை இராமேசுவரம் குருக்களில் சங்கரக் குருக்கள் மகன் காசிப கோத்திரம் ஆபஸ்தம்ப

---

1. *Tamil and Sanskrit Inscriptions, No. 8. pp. 79-80.*

ஆத்திரம் ரிக் வேதம் பயின்ற இரகுநாதக் குருக்களிடம் அளித்தார்.

இவ்வூர்கள் இல்லாமல் இக்கொடை கொடுக்கும்போது திரு ஆபரணம், பட்டு, பருத்தி ஆடைகள், வெள்ளி வாகனங்கள், வெள்ளிப் பாத்திரங்கள் முதலியவற்றையும் இரகுநாதக் குருக்கள்வசம் அளித் தார்.

சேதுபதி அரசர் இரகுநாதக் குருக்களை இராமேசுவரம் கோயி லில் தலைமைக் குருக்களாக நியமனமும் செய்தார். இரகுநாதக் குருக் களுக்குக் கிராமங்களுக்குச் செல்லப் பல்லக்கு, பட்டுக்குடை, இரட் டைத் தீவட்டி, உபய சாமரம், முதல் தாம்பூலம் பெறும் உரிமை முதலிய பற்பல மரியாதைகளையும் பெறுமாறு செய்தார்.

இராமநாதசுவாமி, பர்வத வர்த்தனியம்மன் திருக்கலியாண உற்சவம், மாசி, ஆனி, ஆடி, ஆவணி மாதங்களில் நடைபெறுகின்ற விழாக்கள் ஆகியவைகளுக்கு ரெட்சா பந்தனம் பண்ணிக்கொண்டு கொடியேற்றம் முதல் எல்லாச் சடங்குகளையும் செய்து அவ்விழாக் களில் வருகின்ற வருமானத்தையும் இரகுநாதக் குருக்களே பெறுமாறு ஏற்பாடு செய்தார்.

இவைகள் இல்லாமல் இரகுநாதக் குருக்களுக்கு கிராம வருவா யிலிருந்தும் கோயில் வருவாயிலிருந்தும் வரும் எண்ணூறு பொன் அளிக்க வேண்டும் என்றும் அரசர் உத்தரவிட்டார்.

கோயில் படைப்பு வகையில் ஒரு காலத்துக்கு ஐந்து சாதம், ஐந்து உருப்படி, இரண்டு கால நெய்வேத்தியப்படி, இரண்டு காலத்து காளாஞ்சி, சந்தனம் வகையறாவையும் அளிக்கச் செய்தார். மேற்படி கட்டளைகளின்போது வரும் வருமானம் முழுவதையும் இரகுநாதக் குருக்களே பெறுமாறு அரசர் செய்தார்.

இரகுநாதக் குருக்களின் பரம்பரையினரும் மேற்கண்ட உரிமைகள் அனைத்தையும் தொடர்ந்து அனுபவிக்கலாம் என்றும் அனுமதி அளிக் கப்பட்டது.

இராயசம் இராமசர்மி என்பவர் இச்செப்பேட்டை எழுதியுள்ளார்.

# செப்பேடு

1 சுஷ்திஸ்ரீ சாலியவாகன சகாற்தம் 1601 இதின்மேல் செல்லாநின்ற
சித்திராத்தி நாம சம்பச்சற

2 த்தில் உத்திராயணத்தில் யேமந்த ரிதுவில் மகர மாசத்து பூர்வபக்ஷத்து
துதிகையும் குருவாசரமும் சதை

3 ய நச்செத்திறமும் சவுபாக்கிய நாமயோகமும் பிலா வாகறணமும்
பெத்த சுபதினத்தில் தேவ நகராதிபன்

4 சேதுமூல ரெட்சக துரந்திரன் இராமநாதசுவாமி காரிய துரந்திரன்
பரராச சேகரன் பரராஜ சிங்

5 கன் ரவிகுல சேகரன் சிவபூசா துரந்தரன் சொரிமுத்து வன்னியன்
செகதல கீர்த்திப் பிரதாபன் மஹா

6 மண்டலேசுரன் அரியதள விபாடன் பாசைக்குத் தப்புவராத கண்டன்
கண்டநாடு கொண்டு கொ

7 ண்டனாடு குடாதான் பட்டமானங் காத்தான் துட்டராதிவ கண்டன்
புவனேக வீரன் வீரசுண்டீசுன்

8 வேதியர் காவலன் அறசராவண றாமன் அடியார் வேலைக்காரன்
வழநாடன் கொட்டமடக்

9 கிய வையாளி நாராயணன் இவுளி பாவடி மிதித்தேறுவார் கண்டன்
வீரதலை சேமத்தலை வெண்டயம்

10 இலங்கும் இருதாளினான் இளஞ்சிங்கந் தளங்சிங்கம் பகைமண்ணற்
சிங்கம் தொண்டித்து

11 ரை காவலன் ஆத்தில்பாச்சி கடலில்பாச்சி மதப்புலி அடக்கலங்
காத்தான் தாலிக்குவேலி சத்திரா

12 திகள் முண்டன் ராசாதிராசன் ராசமார்த்தாண்டன் ராசகெம்பீரன்
கீர்த்திப்பிரதாபன் ஆறியமா

13 னங் காத்தான் அணுமகேதனன் குடைக்கி ஸ்ணன் கருணாகடாட்சன்
வீரலட்சுமி பிரதாபன் விஜை

14 யலட்சுமி பிரசண்ணன் சத்திய அபிச்சந்திரன் சகல வித்தியா வினோதன் சகல சாம்பிராச்சிய லெட்சுமி

15 விலாசன் செயதுங்க றாடன் துகலூர் கூத்தத்துக் காத்தூறாணை குலோத்துங்க சோழதல்லூர் கீழ்பாஸ் விரை

16 யாதகண்டனிலிருக்கும் ஸ்ரீ பிரணிய கெற்பயாகி ரெகுநாத திருமலை சேதுபதி காத்த தேவரவர்கள் புத்தி

17 ரன் ரெகுநாத சேதுபதி காத்த தேவரவர்கள் இராமீசுவரத்திலிருக்கும் இராமனாதசுவாமி பூசாபறாக

18 ரான சங்கரகுருக்கள் மகன் காசிபகோத்திரத்தில் ஆபஸ்தம்ப சூத்திரத்தில் ரிக் சாகாத்தியாபகரான ரெகு

19 நாத குருக்களுக்கு தானசாசனம் பண்ணிக்கொடுத்த சாதனமாவது இராமீசுரத்தில் நம்முடைய

20 குலதெய்வமான இராமனாதசுவாமிக்கு உச்சிக்காலத் திருவனந்தல் அபிஷேகம் பூசை நெய்வேத்தியத்

21 துக்காக தேவர் கட்டளை உண்டுபண்ணி சேமலூர் முதின்த்தகும் நிலமனகிலமங்கலம் சின்னத்தொ

22 ண்டி வசையிறா கிராமங்களும் அந்தக் கிராமங்களுக்கு நாம் தனித் தனியாயி பண்ணிகொடுத்திருக்கிற

23 தானசாசன பட்டயங்களும் திருவாபரணம் பட்டு பருத்தி வெள்ளி வாகனங்கள் வெள்வி பாத்திரம்

24 வகையறா சகல சம்பத்தை தம்முடைய வசமாகக் கொடுத்து மேற்படி இராமனாதசுவாமி கோவிலுக்கு

25 தம்மை முதன்மையான குருக்களாக யேர்ப்படுத்தி தமக்கு ராம்மத் தண்டிகை பட்டுக்குடை ரெட்

26 டைத் தீவட்டி உபயசாமறம் அக்கிர தாம்பூலம் முதலான சகல மரியாதிகளும் குடுத்து மேற்படி கட்டளை

27 விசாறணை மிராசையும் நம்முடைய நாமாங்கித்மால தேவற் முத்திரை மிறாசையும் இராமனாத

28 சுவாமி பருவதவர்த்தினி அம்மன் திருக்கலியாண உற்சபம் மாசி ஆனி ஆடி ஆவணி மாசங்க

29 வில் நடக்கின்ற உற்சவாதிகளுக்கு ரெட்சாபந்தனம் பண்ணிக் கொண்டு துவசாரோகணம் முதலிய

30 உற்சப காரியங்களையும் அதர்க்குச் சேர்ந்த வருமானங்களையும் தமக்கு சகிரண்ணியயோதக தாரா

31 பூர்வமாக தானசாசனம் பண்ணிக்குடுத்திருப்பதினாலே மேற்படி கட்டளை விசாறணை முத்திரை உற்சவா

32 திகள் இவ்வகை மிறாசுகளையும் தமக்கு நாம் சொந்தத்துக்காக குடுத்திருக்கிர கிராமத்தையும் காணி

33 யாச்சியாகவும் பரம்பரையாகவும் அனுபவித்துக் கொள்ளுகிறதுடன் மேற்படி கட்டளை கிராமங்களின்

34 வருமானத்திலும் சன்னதி திருமுன் காணிக்கை ஆதாய வரும்படியிலும் வருசம் 1க்கு யெண்ணூரு

35 பொன்னு வீதம் சுவந்திரமாக யெடுத்துக் கொள்கிறது நெய்வேத்திய பிரசாதம் வகையில் காலம் ஒன்றுக்கு

36 அஞ்சு சாதமும் அஞ்சு உருப்படியும் ரெண்டு காலத்து நெய்வேத்திய படிகளையும் ரெண்டுகாலத்து காலா

37 ஞ்சி சந்தனம் வகையறாவும் மேற்படி கட்டளை முத்திரை உச்சபம் வகையறாவுக்குள்ள வருமான சுவந்திர

38 முழுமையும் தாமே புத்திர பவுத்திர பரம்பரையாகவும் ஆசந்திராக்க ஸ்தாயி ஆகவும் பரம்பறா பிரவே

39 சமாகவும் ஆண்டனுபவிச்சுக் கொள்ளக் கட்டளையிட்டோம் இந்த தற்மத்தை இந்த சமஸ்தானத்

40 இல் நம்முடைய வம்மிசத்தில் உள்ளவர்கள் பரிபாலினம் பண்ணின வர்களுக்கு கெங்கைக் கரையிலும்

41 சேதுக்கரையிலும் கோடி சிவலிங்கப் பிரதிஷ்டை பண்ணினபலனும் கோடி கன்னிகா தானம்

42 பண்ணினபலனும் கோடி அக்கிர காரப் பிரதிஷ்டை பண்ணினபலனும் அடைவார்கள் இந்த தற்ம த்

43 துக்கு அகிதம் நினைத்தவர்கள் கெங்கைக்கரையில் காராம்பசுவை கொன்ற தோஷமும் சேதுக்கரையில்

44 மாதா பிதாவையும் குருவையும் கொன்ற தோஷத்தை அடைவார் களாகவும் இந்தப்படிக்கி சகிரண்

45 ணி யோதக தாறாபூர்வமாக கோவில் காணியாச்சி ஆன தர்ம்ம சாசன பட்டையம் பண்ணி கொடு

46 த்தோம் ரெகுநாத குருக்களுக்கு ரெகுனாத சேதுபதி காத்த தேவரவர்கள் இந்த சாசன பட்டையம்

47 எழுதினேன் ராயசம் ராமசாமி கையெளுத்து

# 32

# புதுவைக்கோட்டைச் செப்பேடு

இருக்கும் இடம் : திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை

அரசர் : சேதுபதி ரகுநாதத் தேவர்

காலம் : 22—11—1680

அளவு : 24 செ.மீ. × 12 செ.மீ.

**அமைப்பும் செய்தியும்** : இச்செப்பேடு துளைகளில்லாத உயரம் குறைந்த கைப்பிடியை உடையது. கைப்பிடியின் நடுவே திருப்பெருந்துறையில் மாணிக்க வாசகருக்கு உபதேசித்து அருள்செய்த சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் குருந்த மரம் முழுமையாக வரையப்பட்டுள்ளது. குருந்த மரத்தை ஒட்டியே திரிசூலம் ஒன்றும் சிறியதாக வரையப்பட்டுள்ளது. குருந்த மரம், சூலம் ஆகியவற்றின் இடப்புறம் சிறு வடிவில் சிவலிங்கம் ஒன்று வரையப்பட்டுள்ளது. வலப்புறம் மாணிக்க வாசகருக்கு அருள் உபதேசம் செய்யும் நிலையில் சிவபெருமான் குரு வடிவில் அமர்ந்துள்ளார். வேறு சில செப்பேடுகளில் நின்ற நிலையில் உபதேசம் பெறும் மாணிக்கவாசகர் இங்கு சிவபெருமான் முன் அமர்ந்த நிலையில் காட்சியளிக்கின்றார். ஆனாலும் அவர் கைகள் வணங்கிய நிலையில் உள்ளன.

செப்பேட்டின் முதல் பக்கத்தில் முழுவதும் பெரிய அளவில் எழுத்துக்களின் இடையில் சில வரைகோடுகள் வரையப்பட்டுள்ளன. ஓம் என் எழுதப்பட்டுள்ளதுபோல் தோன்றுகிறது.

இச்செப்பேடு கிழவன் சேதுபதி காலத்திற்கு உரியது. திருமலை சேதுபதி காத்த தேவர் புண்ணியமாகவும், சாத்தக்காள் ஆயி, தம்பியாயி இவர்கள் புண்ணியமாகவும் திருப்பெருந்துறை ஆவுடைய பரமசுவாமிகள் குருபூசைக் கட்டளை, வாமதேவன் அறக்கட்டளை, தம்பாபண்டாரத்தின் கட்டளை இவைகளை ஒன்றாக நடத்தும்படியும் அரசர் கட்டளையிட்டார். இக்கொடை அளிக்கப்பட்ட போது திருவாவடுதுறை ஆதீனத் தலைவராக விளங்கியவர் ஸ்ரீவேலப்ப தேசிகர் (1678-1700).

சின்னவன் கையில் அழகப்ப தொண்டமானார் கட்டளைக்குக் கிராமமும், தன்மமும் புண்ணியமாகக் கொடுக்கப்பட்டது.

அளிக்கப்பட்ட கிராமங்கள் புதுவைக்கோட்டை, புல்லங்குடி, காடுகுடி, நரிக்குடி, எட்டிசேரி, உள்ளூர் உள்க்கிடை, பிறவூர் உள்க்கிடை, ஏந்தல் இவைகள் கட்டளையிடப்பட்டன. இக்கட்டளையுடனே கூடிய பசு, அணை, மண்டபம், தோப்பு உள்பட அனைத்தும் அளிக்கப்பட்டது.

கொடையளிக்கப்பட்ட கிராமங்கள் அரசுக்கு எந்தவரியும் அளிக்கத் தேவையில்லை என்று கூறப்பட்டுள்ளது. செப்பேட்டின் இறுதிப் பகுதியில் 'சி' என்று மட்டும் எழுதப்பட்டுள்ளது. சிவமயம் என வெட்டத் தொடங்கி ஒரு எழுத்துடன் நிறுத்திவிட்டனர் போலும். அதனால் இச்செப்பேட்டை ஒரு குறையுடைய செப்பேடு என்றே சொல்லலாம்.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 ஸ்வஸ்தி ஸ்ரீ சகாப்தம் 1602 மேல் செல்லாநின்ற ரௌத்ரீ ஞ்ரு தக்ஷிணாய

2 ணத்து வருஷரிதுவில் காத்திகை மீ உ 23 சோமவாரமும் திறியோ தெசியும்

3 அசுபதியும் பெத்த புண்ணிய காலத்தில் தேவைநகராதிபன் சேதுமூல ர

4 க்ஷாதுரந்தரன் ராமநாதசுவாமி காரியதுரந்தரன் சிவபூசா துரந்தர

5 ன் பரராசசேகரன் ரவிகுலசேகரன் மூவராயிர கண்டன் கண்ட

6 னாடு கொண்டு கொண்டனாடு குடாதான் வீரவளனாடன் வேதியர்

7 காவலன் அந்தம்பிற கண்டன் சுவாமித்துரோகி மிண்டன் பஞ்சவண்ண

8 ராய ராவுத்தன் வைகை வளநாடன் அடைக்கலங்காத்தான் வன்னிய ராட்டந் தவி

9 ர்த்தான் கீர்த்திப்பிறதாபன் தொண்டியந்துறை காவலன் விசையலெ

10 ட்சுமி காந்தன் சத்திய அரிச்சந்திரன் சேதுங்கராயன் வங்கிஷாதி பனான துக

11 வூர்க்கூத்தத்தில் காத்தூரான குலோத்துங்கச்

12 சோழநல்லூர் கீழ்பால் விரையாத கண்டநிலிருக்கும் தளவா

13 ய் சேதுபதி புத்திரன் ஸ்ரீ திருமலை யிரணியகெற்பயாதி சேது

14 பதி ரகுநாதத் தேவரவர்களுக்குப் புண்ணியமாகச் சாத்தக்காளாயி

15 தப்பியாயி அவர்கள் புண்ணியமாக ஆவுடைய பரம சுவாமிக்கு குரு பூசைக் கட்ட

16 ளை வாமதேவன் அறைக்கட்டளை தம்பாபண்டாரத்தின் கட்டளை

17 யும் ஒருசேகரமாகக் கட்டளையிட்டோம் சின்னவன் கய்யில்

## இரண்டாம் பக்கம்

18 அழகப்ப தொண்டமானார் கட்டளையும் கிறாமமும் தன்மமும்

19 நம்முட புண்ணியமாகக் கட்டளையிட்ட கிறாமமாவது புதுவை

20 க்கோட்டை புல்லங்குடி காடுகுடி நரிக்குடி எட்டிச்சேரி உள்ளூரில்
உள்க்கிடையும்

21 பிறவூர் உள்க்கிடை ஏந்தலும் தாராபூறுண்யமாகக் கட்டளையிட்
டோம்

22 யிதுவும் கட்டளையுடனே சேந்த பசு அனை மண்டகம் தோப்பு உள்
படக் கட்

23 டளையிட்டோம் யிந்த தன்மத்துக்கு யாதாமொருத்தர் பரிபாலனம்
பண்ணி

24 நடத்திநோர்கள் கோடி சிவலிங்கப் பிறதிட்டை பண்ணின

25 சுகிற்தத்தை அடைவாராகவும் யிந்த தன்மத்துக்கு யாதாமொ

26 ருத்தர் அகிதம் பண்ணினபோர் கெங்கைக் கரையிலும் சேது

27 விலும் மாதாபிதாவையும் குருக்களையும் காராம்பசுவையும்

28 கொண்ண தோஷத்திலே போகக்கடவராகவும் பலவரி முதலாகி

29 ய சறுவவரியும் வேண்டாமென்று கட்டளையிட்டோம் உ

30 சி . . . . .

# 33

# சுந்தரபாண்டியன் பட்டணம் செப்பேடு

இருக்கும் இடம் : அரசு அருங்காட்சியகம், எழும்பூர், சென்னை

அரசர் : சேதுபதி இரகுநாத தேவர்

காலம் : 6–1–1684

**அமைப்பும் செய்தியும்** : பிற்காலப் பாண்டிய மன்னர்களில் ஒருவரான் சுந்தரபாண்டியன் பெயரில் இவ்வூர் அமைந்துள்ளது. சேதுநாட்டின் வட பகுதியில் கடற்கரையில் உள்ள ஊர். இப்பொழுது இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை வட்டத்தில் அமைந்துள்ளது.

சேதுபதி அரசரால் சுந்தரபாண்டியன் பட்டணத்தில் உள்ள அக்கிரகாரம், மடம், ஏகாம்பரநாதர்கோயில் பூசை ஆகியவற்றிற்காக எட்டுக் கிராமங்களைக் கொடையாக அளிக்கப்பட்ட செய்தி செப்பேட்டில் பொறிக்கப்பட்டுள்ளது. அவை சுந்தரபாண்டியன் பட்டணம், கொந்தளன் கோட்டை. பொன்னுக்கு மீண்டான். சிறுகவயல். கரிசல்குளம், எட்டிசேரி, மருங்கூர், உடையநாத சமுத்திரம் என்பன. அவ்வூர்கள் அஞ்சு கோட்டைப்பற்றில் இருந்தன. புல்லூர், மருதூர் என்ற இரு ஊர்கள் அக்கிரகாரத்திற்கு வழங்கப்பட்டன. இரு ஊர்களுக்கும் விரிவாக எல்லைகள் கூறப்பட்டுள்ளன.

# செப்பேடு

1 ஸ்வஸ்தி ஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1605 இதின்மேல் செல்லாநின்ற ரூத்ரோத்காரி நாம சம்வச்சரத்து உத்தராயண

2 ஹேமந்த ரிதுவில் புஸ்ய மாசத்தில் கிருஷ்ண பட்சத்து அமாவாஸையும் ஹஸ்த நட்சத்திரமும்

3 சுபயோக சுபகரணமும் கூடிய சூரிய கிரகண புண்ணிய காலத்தில் தேவை நகராதிபன் சேதுமூல

4 ரட்சா துரந்தரன் இராமநாதசுவாமி காரிய துரந்தரன் இரவிகுல சேகரன் வீரவள நாடன் வேதியர் காவலன்

5 வைகை வள நாடன் வன்னியராட்டம் தவிழ்த்தான் அனுமகேதனன் குன்றிஞயர் மேருவினில் குன்றா

6 வளை பொறித்தவன் சுவாமி துரோகியள் மிண்டன் வீர கஞ்சுகன் சகல சாகித்ய வித்யா வினோதன் அந்தம்பர

7 ராயன் துகவூர் கூத்தத்தில் குலோத்துங்க சோழநல்லூர் கீள்பால் விரையாத கண்டனிலிருக்கும் திருமலைய இரண்

8 ய கெற்பயாசி சேதுபதி ரெகுநாத தேவர் அவர்கள் புத்திரன் ஸ்ரீ ரெகுநாததேவர் தம்முடைய கனிஷ்டர் வங்கிசத்தில் சுந்தர

9 பாண்டியன் பட்டணத்தில் அக்கிரகாரத்திற்கும் ஏகாம்பரநாத சுவாமி பூசைக்கும் நாம் சேதுமூலத்தில்

10 தானமாகக் குடுத்த கிராமங்கள் அஞ்சுக்கோட்டை பற்றில் மடதர் மத்துக்குக் குடுத்த கிராமமாவது சுந்தரபாண்டியன்

11 பட்டணம் கொந்தளன் கோட்டை பொன்னுக்கு மீண்டான் சிறுக வயல் கரிசல்குளம் எட்டிசேரி மருங்கூர்

12 உடையநாத சமுத்திரம் இந்தவகை கிராமங்களுக் கெல்கையாவது கீழ்பாற் கெல்கை சமுத்திரத்திற்கு மேற்கு தென்

13 பாற்க் கெல்லை வல்லம் பொருந்துக்கும் இடையன் மடத்துக்கும் நடக்கிற இடையன் வயலுக்கும் சமுத்திர முடையார் திரு விடை

14 ஆட்டமான புல்லு வயலுக்கும் மேற்படி தானத்தார் வயலுக்கும் மாதவனேரிக்கும் பழம்பதிநாதர் திருவிடையாட்டமான பட்டமங்கலத்துக்கும் அய்யனாரேந்த

15 லுக்கும் வடக்கு மேல்பாற்க் கெல்லை ஒருர் குழிக்கல் கிழக்கெல்கை யாவது இடையன் செய்க்கும் பழம்பதி வாய்க்காலுக்கும் வெட்டுச் செய்க்கும் பண்ண

16 செய்க்கும் கோவலன் கிடங்குக்கும் கோட்டை வாசல் செய்க்கும் வெட்டுக்கு... ..... வீரனுக்கும் வளையன்

17 கிழக்கு வடபாற்க்கெல்கை விருசிலை நதிக்குத் தெற்கு இந்த நான் கெல்கைக் குட்பட்ட நஞ்சை புஞ்சை திட்டு

18 திடல் உப்பளமும் ஏகாம்பரநாத சாமிக்கு கொடுத்த பனஞ்சாயல் பள்ளித் தம்மத்தைச் சேர்ந்த புறவுக்குக் கீழ்பாற்க்கெல்கை புதுக்குடிக் குளத்துக்கும் மணக்குளத்திற்

19 கும் நடுகிராமத்துக்கும் மேம்பாற்க் கெல்கை மச்சூருக்கும் விரிசிலை யாத்துக்கும் வட்டாணத்துக்கும் மச்சூருக்கு வருகின்ற குளக் காலுக்கும் வடக்கு மேற்பாற்க் கெல்லை

20 மருதூர்க்கும் கிழக்கு வடபாற்க் கெல்லை கப்பலூர் புரவுக்குத் தெற்கு ஆக இந்த நான்கெல்கைக் குட்பட்ட நஞ்சை புஞ்சை திட்டுத் திடலும் சுந்தரபாண்டியன்

21 பட்டணத்தில் அக்கிரகாரத்துக்கு விட்டுக் கொடுத்த புல்லூர் மருதூ ருக்கு எல்லையாவது கீழ்ப்பாற்க் கெல்கை நாவலூர் குளத் துக்கும் பள்ளத்தூர் குளத்துக்கும் கிழக்கு

22 மடக்குளத்துக்கும் மேற்கு தெற்கு எல்கை விரிசிலையாத்துக்கு வடக்கு மேல்பாற்க் கெல்கை மல்லனூருக்கும்

23 ஆக்கலூருக்கும் வீரத்தேவன் பட்ட பெருமாள் திருவிடையாட்டமான வெள்ளமுடையானுக்கும் கிழக்கு வடபாற்க்

24 கெல்கை புலியூருக்கும் மண்டலக்கோட்டைக்கும் தெற்குமாக இந்த நான்கெல்கைக் குட்பட்ட நஞ்சை புஞ்சை

25 திட்டுத் திடலும் ஆக இந்த வகை கிராமங்களில் உண்டான நிதி நிட்சேபனங்கள் செல தரு பாசன மென்கிற ..... அஷ்ட போக சுவாமியங்களும்

26 இவ்விதமாக நடந்துவரக் கடவராகவும் இந்தப் படிக்கு தான சாசனத் தில் கண்டதைச் சேர்ந்த தர்மத்துக்கு

27 நடக்கிற கிராமங்களையும் ஏகாம்பரநாதர் சுவாமிக்கு நடக்கிற தர் மத்தையும் அந்த தர்மத்திற்கு நடக்கிற

28 கிராமத்தையும் பரிபாலனம் பண்ணின பேர்கள் காசியிலும் இராமேசு வரத்திலேயும் அநேக சிவலிங்க பிரதிஷ்டை பிரம்ம பிரதி ஷ்டை பண்ணின மேன்மைகளை

29 அடையக் கடவாராகவும் இந்த தர்மத்துக்கு அகிதம் பண்ணினவர்கள் பெரும்பாதகத்தைப் பண்ணின பாவத்

30 தில் போகக்கடவாராகவும்..... தர்மம் அன்னதானம் சத்திர மட தர்மத்திற்கு கட்டளையிட்ட கிராமங்களும் ஏகாம்பர நாத

31 சுவாமிக்கு நாம் கொடுத்த திருவிளையாட்டத்துக்கும் சுந்தர பாண்டியன் பட்டணத்தில் விட்டுக்கொடுத்த அக்கிரகார

32 தர்மத்துக்கும் பலவரி முதலியன சிலவரி பெருவரி உண்டான சகல வரியும் நாம் வேண்டாமென கட்டளையிட்ட

33 படியினாலேயே இந்தப்படிக்கு சர்வமானியமாக நடப்பித்துக் கொள் ளக் கடவராகவும்

# 34

# புதுக்கோட்டைச் செப்பேடு

இருக்கும் இடம் : மதுரை மாவட்ட நீதிமன்றம்

அரசர் : இரகுநாத சேதுபதி காத்த தேவர்

காலம் : 18—5—1684

அளவு : 26.5 செ.மீ. × 21.5 செ.மீ.

**அமைப்பும் செய்தியும்** : இச்செப்பேட்டின் மூலப்படி கிடைக்கவில்லை.[1] எழுத்துக்கள் சரியாக எழுதப்பெறவில்லை என்று இதன் பதிப்பாசிரியர் கூறியுள்ளார்.

இரகுநாத சேதுபதி 18—5—1684 அன்று அமாவாசைப் புண்ணிய நாளன்று தென்னாலை நாட்டில் வளுவாபுரி விசுவேசுவரருக்கும் அகிலாண்ட ஈசுவரி அம்மனுக்கும் காளையார் கோயில் சீமையில் தென்னாலை நாட்டில் அரிசிலையாற்றுப் பாய்ச்சலில் புதுக்கோட்டை, கள்ளிகுடி, எடையன் வயல் ஆகிய மூன்று கிராமங்களைக் கொடையாகக் கொடுத்ததை இச்செப்பேடு கூறுகிறது.

புதுக்கோட்டையின் எல்லை : கிழக்கு எல்லை கள்ளன்குடிக் கண்மாய்; தெற்கு எல்லை கோங்கிவயல் கண்மாய் தென்கரை; மேற்கு எல்லை ஈகரை ஆங்கல் : வடக்கு எல்லை திருமணக் குளக்கால்.

---

1. *Tamil and Sanskrit Inscriptions, No. 9. pp. 81-83.*

கள்ளிக்குடி எல்லை : கிழக்கு எல்லை திருமணக் கண்மாய் காஞ்சிரயடிப் பொட்டல் ; தெற்கு எல்லை கொரேம்பல்; மேற்கு எல்லை புதுக்கோட்டைப்புரவு ; வடக்கு எல்லை திருமணக் குளக்கால்.

எடையன் வயல் எல்லை : கிழக்கு எல்லை சிலம்பன்; தெற்கு எல்லை நொண்டிநாயன் ஊரணி; மேற்கு எல்லை மல்லாரி ஊத்து; வடக்கு எல்லை கல்லுக்குளக்கால்.

இச்செப்பேட்டு வாசகம் எழுதியவர் தர்மராசப் பிள்ளை மகன் இராயசம் சொக்குப் பிள்ளை. அந்நகல்படி செப்பேட்டு வாசகம் பொறித்தவர் உத்தரகோசமங்கையிலிருக்கும் வீரனாசாரி மகன் அதி வீரனாசாரி என்பவராவார்.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகார்த்தம் 1606 கலியற்தம்

2 4785 இதின்மேல் செல்லானின்ற ரத்தாட்சி நாம

3 சம்வச்சரத்தில் உத்திராயணத்தில் வசந்த ருதுவாகிய வையா

4 சி மாசத்தில் சுக்குல பட்சத்தில் பௌர்ண அமாவாசையில் பானு

5 வாசரமும் விசாக நட்சத்திரமும் சுபநாம யோகமும் வாத்தி

6 வாகரமும் பெத்த சுபதினத்தில் ஸ்ரீமகாமண்டலேசுபரன் அ

7 ரிய தளவிபாடன் பாசைக்குத் தப்புவராத கண்டன் கண்டநா

8 டு கொண்டு கொண்டநாடு கொடாதான் பாண்டிமன்

9 டலத் தாபனாசாரியன் சோளமண்டல பிறதிழ்பனாசாரி

10 யன் தொண்டமண்டல சண்டப்பிரசண்டன் ஈளமுங் கெ

11 ாங்கும் யாப்பாண பட்டணமு இம்மண்டலமு மளித்து

12 கெசவேட்டை கொண்டருளிய ராசாதிராசன் ராசபர

13 மேசுபரன் ராசமாற்தாண்டன் ராயராவுத்த முண்டன்
14 மன்னரில் மன்னன் மருவலர்கள் கேசரி துஷ்டரில் து
15 ஷ்டன் துஷ்டநெட்டுரன் சிஷ்ட பரிபாலனன் ஒட்டிய தளவி
16 பாடன் ஒட்டியர் மோகந் தவிள்த்தான் துலுக்கர் தளவிப
17 ாடன் துலுக்கர் மோகந் தவிள்த்தான் துலுக்கர் தளவிப
18 ன் சாடிக்காற கண்டன் சாமிதுரோகியள் மிண்டன் தாலி
19 க்குவேலி தளங்கண்டு தத்தளிப்பார்கள் மிண்டன் இளஞ்சிங்கம்
20 தளஞ்சிங்கம் வைகை வளநாடன் ஆத்துப்பாட்சி கடலில் பாச்
21 சி சேதுநகர் காவலன் சேதுமூலா துரந்தரன் ராமனாதசுவாமி காரி
22 யாதுரந்தரன் சிவபூசா துரந்தரன் அட்டலெட்சுமீ வாசன் கா
23 மினி கந்தப்பன் கலைதெரியும் விற்பன்னன் சோடசமகாத
24 ான கூசுவதாரன் குடைக்கு கற்னன் பொறுமைக்கு தற்மன் மல்லு
25 க்கு வீமன் வில்லுக்கு விசையன் பரிக்கு நகுலன் அறிவுக்கு
26 சகாதேவன் ஆனைக்குத் தெய்வேந்திரன் சத்தியபாசா அரிச்சந்திரன்
27 சூரன் மெச்சிய சூரன் பட்டமானங் காத்தான் பரதேசி காவலன்
28 சங்கீத சாகித்திய வித்தியா வினோதன் சேமத்தலை விளங்கு
29 மிரு தாளினான் சொரிமுத்து வன்னியன் அனுமக்கொடி கெ
30 ருடக்கொடி விளங்குமிரு தாளினான் இந்துகுல சற்ப கெருட
31 ன் புவனேக வீரன் இரவிகுல சேகரன் அசுவபதி நரபதி கெ
32 சபதி சேதுபதி பிறதிவீராச்சிய பரிபாலினம் பண்ணிக்கெ
33 ாண்டருளாநின்ற தேவை நகராதிபன் ஸ்ரீமது இரவி
34 யதெற்பயாசி ரெகுனாத சேதுபதி காத்த தேவரவர்கள்
35 தென்னாலை நாட்டில் வளுவாபுரி விசுவேசுபரருக்கு
36 ம் அம்மன் அகிலாண்டீசுபரிக்கும் பூதான சாதனம்

37 பண்ணிக்கொடுத்தபடி பூதான தற்ம சாதனமாவது கா

38 ளையார்கோவில் சீமையில் தென்னாலை நாட்டில் அ

39 ரிசிலையர்த்துப் பாச்சிலில் ஈகரைப்புரவில் கள்ள

40 ன்குடிக் கண்மாய்க்கு மேற்கு கோங்கிவயல் கண்

41 மாய் தென்கரைக்கு வடக்கு ஈகரை ஆங்கலு

42 க்கு கிளக்கு திருமணக் குளக்காலுக்குத் தெக்கு

## இரண்டாம் பக்கம்

43 இன்னாங்கெல்லைக் குள்ப்பட்ட புதுக்கோட்டை

44 யும் திருமணக் கண்மாய் காஞ்சிரயடி பொட்டலுக்கு

45 மேற்கு கோரம்பலுக்கு வடக்கு புதுக்கோட்டைப்

46 புரவுக்கு கிளக்கு திருமணக் குளக்காலுக்கு தெக்கு இன்

47 னாங்கெல்லைக் குள்பட்ட கள்ளிக்குடியும் சிலம்பனு

48 க்கு மேற்கு நொண்டி நாயனூரணிக்கு வடக்கு மல்லாரி

49 ஊத்துக்கு கிளக்கு கல்லுக்குளக்காலுக்கு தெக்கு இன்னா

50 ங்கெல்லைக் குள்ப்பட்ட எடையன் வயலும் இந்த மூனு

51 கிறாமத்து பெருங்கெல்கைக் குள்ப்பட்ட ஏந்தல் பிற

52 வடை திட்டுத் திடல் மாவடை மரவடை நிதி நிக்ஷே

53 ப ஜல தரு பாஷாணாத்யாஸ்தசாரம் ஸித்த ஸாத்ய

54 மென்று சொல்லப்பட்ட அஷ்டபோக தசஸ்வாம்ய

55 ம்களும் தானாதி வினிமிய விக்கிறையங்களுக்கும்

56 யோக்கியமாக ஆண்டனுபவித்துக் கொள்ளக் கட

57 வராகவும் இந்ததற்மத்தை பரிபாலினம் பண்ணின
58 பேர் அனேகம் சிவப் பிறதிஷ்டையும் அனேகம் வி
59 ற்மப் பிறதிஷ்ட்டையும் பண்ணின பலனை அடைவா
60 ர்கள் இந்த தர்மத்துக்கு அயிதம் பண்ணின பேர்க
61 ள் கெங்கைக்கரையில் காராம்பசுவைக் கொன்ற
62 தோஷத்திலும் பிராமணனைக் கொன்ற தோசத்
63 திலும் போகக்கடவாராகவும் இந்த தற்ம சாதன
64 மெளுதினேன் றாயசம் தற்மராசப் பிள்ளை புத்திரன்
65 சொக்குபிள்ளை சவாதுபடிக்கு உத்தரகோச
66 மங்கையிலிருக்கும் வீரணாசாரி மகன் அதிவீ
67 ரணாசாரி கையெழுத்து

# 35

# இளமனூர்ச் செப்பேடு

இருக்கும் இடம் : இளமனூரில் ஊர்ப்பொதுவாக இச்செப்பேடு உள்ளது

அரசர் : இரகுநாத சேதுபதி

காலம் : 15–6–1687

**அமைப்பும் செய்தியும்** : பெரும்பான்மையான கிரந்தத் தொடரோ தெலுங்கோ பொறிக்கப் பெறாத செப்பேடு. செப்பேட்டில் சாலிவாகன ஆண்டு பிழையாகக் குறிக்கப்பட்டுள்ளது. வெட்டுந்தலை காலிலே கட்டும் கலங்காத கண்டன் என்ற எட்டயபுர அரசனை வெற்றி கொண்ட நிகழ்ச்சியை வைத்து கிழவன் சேதுபதியாகிய இரகுநாத சேதுபதியின் காலத்தை இச்செப்பேடு சேர்ந்தது என்று கொள்ளப் பட்டது. செப்பேட்டில் குறிக்கப்பட்ட தமிழ் ஆண்டு கிழவன் சேதுபதி ஆட்சியாண்டுக்குப் பொருந்தி வருவதால் அதை வைத்துக் காலம் கணிக்கப்பட்டது.

மதுரை நாயக்கர் ஆட்சிப் பகுதியாக இருந்த சில பகுதிகள், சேதுபதிகள் மதுரைக்குச் செய்த உதவிகள் காரணமாக சேதுபதிக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டன. அப்பகுதியிலிருக்கும் ஊர்களிலொன்று இளமனூர். அவ்வூர் சின்ன இளமனூர் என்றும் அழைக்கப்படும்.

அவ்வூரைச் சேர்ந்த சோளகை சேருவைகாரன் அவன் மனைவி கொண்டொடிக்காரி இருவரும் இராமநாதபுரம் வந்து சில நாட்கள் காத்திருந்து இரகுநாத சேதுபதியைக் கண்டனர்.

இரகுநாத சேதுபதி சோளகை சேருவைகாரனைப் படையிலும் கொண்டொடிக்காரியை அரண்மனைத் தூதுப் பணிப்பெண்ணாகவும் பணியில் அமர்த்தினார். சோளகை சேருவைகாரன் சிறுபடைக்குத் தலைவனாகிய சேர்வை என்னும் பதவியைப் பெற்றான்.

சோளகை சேருவைகாரனுக்கு வெகுமதியும் குதிரையும் அளித்து கள்ளப்பக்தி நாடனை அடக்கவும் சேதுமார்க்கம் எனப்படும் இராமேசுவர வழியில் உள்ள கள்ளர்களை ஒழிக்கவும் ஆணையிட்டார்.

தன்னைவந்துகண்ட சோளகை சேருவைகாரன், கொண்டொடிக்காரி தம்பதியருக்கு வேலை அளித்ததுடன் அவர்களுக்கு இளமநேரியில் காடுகரை வெட்டிக் காணி யுண்டுபண்ணிக் குடியேற்றி அங்கு கைக்கோளர், சாணார் முதலிய சில குடிமக்களையும் குடியேறச்செய்தார். அங்கு கண்மாய், ஊருணி முதலியவைகளையும் ஏற்படுத்த அனுமதித்தார். அம்பலம் கொத்து கணக்கு மானிபம் மடைப்போக்கு உம்பளம் சம்பளம் போன்ற அனைத்தையும் அனுபவிக்கும் உரிமைகளையும் அத்தம்பதியர்க்கு அளித்தார்.

அவர்கள் கைக்கொண்ட நிலத்துக்கு வடக்கு எல்லை திருஅக்கிய நலகளிட ஓனாய்ப்புளியும் மஞ்சக்காடு ஒத்தக்காலும், கிழக்கு எல்லை கொட்ட மடைக்கி தோட்டமும் சேது ஆண்டான் தோட்டமும், தெற்கு எல்லை அரங்கமுப்பன் காஞ்சரமருங்கன் தோட்டமும் மல்லம்மா தோட்டமும், மேற்கு எல்லை காட்டுப்பிள்ளையார் கோயிலும் வடக்கு தன்னரசு தேவன் தோட்டமும் வைகை ஓடையும் சுங்கிறாய்ப் பற்றும் ஆகும்

மேற்கண்ட எல்லைக்குட்பட்ட கிராமமும் மலைச் சாரலும் அவர்கள் அனுபோகத்துக்கு விடப்பட்டது.

# செப்பேடு

## முதல் பக்கம்

இராம செயம்

1 சொபத்திஸ்ரீ மகாமண்டலஷ்பறி ஆறிதி பாடனுத்திரன் பாசை
2 க்குத்தப்பாத கண்டன் கண்டனாடு கொண்டு கொண்டனா
3 டு குடாதான் பாண்டிமண்டல்ப் பிறதாசாறியான் சொரீமு
4 த்து வன்னியன் சேதுகாவலன் அடைக்கலங் காத்தா
5 ன் சேதுமூலதுரந்திரன் சேதுகாவலன் செம்பி வளனா
6 டன் ஈளமுங் கொங்கமு ஆளுச்சுக் கெசை போட்டக்
7 கொண்டருளிய றாசாதி றாசன் றாச மாத்தாண்டன்
8 றாச கெம்பீரன் றாமனாதசுவாமி காரியதுறந்திரன் ரவிகு
9 ல திலகன் தொட்டியர் முகந்தவுத்தான் துலுக்கர் முகந்தவு
10 த்தான் வெட்டுந்தலை காலிலேகட்டுங் கலங்காத கண்டன்
11 சேவக் கொடியுடையோன் அனுமக் கொடியு
12 டையோன் அஞ்சாத கண்டன் அஸ்ட்ட லெ
13 ச்சிமி தனலெச்சிமி சம்புக லெச்சிமி வீர
14 லெச்சிமி விசையலெச்சிமி காந்தன் சொல்
15 லுக்கு அரிச்சந்திரன் வீல்லுக்கு விசையன்
16 குடைக்கி கற்னன் பரிக்கு நகுலன் சாஹ்த்தி
17 ர சம்பறம் சகாதேவகுழணன் அசுபதி கெ
18 சபதி நறபதி ரெகுனாதச் சேதுபதி றாச்சிய பரி
19 பாலினஞ் செலுத்தி வருகையில் சாலிவ்வ
20 ாகன சகாற்த்தம் 1500 க்குமேல்ச் செலானி

21 ன்றை பிறபவ வருடம் ஆனி மாதம் மதுரை சே
22 கரமாகிற சின்ன இளமனூரிலிருக்கும் சோள
23 கை சேருவைகாறன் பெண்ஞ்சாதி கொண்
24 டொடிகாரி இருவகைப் பேரும் ஷி இளமனூர
25 ரிலிருந்து சேது ஆதிக்கம் மகா றாசா றாயஸ்த்தி
26 ரி துரையவர்கள் சம்ச்செபத்தில் வந்
27 துகண்டு வெகுனாள் வரைக்கும் சோள
28 க சேருவைகாறன் ஷி பெண்ஞ்சாதி கொ
29 ண்டொடிக்காரியும் காத்திருந்ததில் ஷி
30 யாளுக்கு அரமணை வாசலூளிய தானாபதிக்க
31 மும் சோளக சேருவைகாறனுக்கு பாளை
32 யப்பட்டு சேருவையுங் குடுத்து ஷி சோ
33 ளக சேருவைகாறனை கள்ள பக்தி நாட
34 னை ஒடுக்கிவரச் சொல்லியும் சேதுமா
35 ற்க்கங்கள் அசோத்தியும் ஒடிக்கிவரச்செ
36 ல்லியும் உத்தரவு கட்டளையிட்டு வெகுமதியும் கு
37 திரையும் குடுத்து ஷியாருக்கு சீவன காரியத்துக்
38 கு இளமனேரியில் காடுகரை வெட்டிகு

## இரண்டாம் பக்கம்

39 டியேத்திவிச்சி கைய்க்களக்குடி சானார்குடி
40 யுடனே சிறுதுகுடியும் யேத்திவிச்சு கண்மா
41 ய்கரை ஊறிணியும் வெட்டி பறாதனமாக அம்
42 பலம் கொத்துக் கணக்கு மானிபம் மடைப்போக்கு

43 உப்பள சம்பளமாயிருந்து கையா

44 டிக் கொண்டு வரச்சொல்லி சமத்செபத்தி

45 ல் உத்தரவுக் கட்டளையிட்ட புத்திபடிக்கி ஷ்டியார் க

46 ாடுகரை வெட்டி கண்மாய் கரை ஊறணியும்

47 வெட்டி குடியும் யேத்திவிச்சதினாலே அம்பலம்

48 கொத்துக் கணக்கு மானிப மடைப்போக்கு உ

49 ம்பளம் சம்பளம் நிலங்கரை சகலமும் ஆதி

50 சந்திராதித்தாள் புல்லும் பூமியும் கல்லுங் காவே

51 ரியும் உள்ள வரைக்கும் பூறுவீகமாக கையா

52 டிக்கொள்வாறாகவும் இந்தப்படிக்கு சமூகத்தில்

53 கட்டளையிட்டுத் திரு அக்கிய நலகளிட ஓனாய்ப் புளிக்கும்

54 மஞ்சக்காடு ஒத்தக் காலுக்கும் தெற்கு கொட்டம

55 டைக்கி தோட்டத்துக்கும் சேது ஆண்டான் தோ

56 ட்டத்துக்கும் மேற்கு அரங்க மூப்பன் காஞ்சர மரு

57 ங்கன் தோட்டத்துக்கும் மல்லம்மா தோட்டத்து

58 க்கும் வடக்கு காட்டுப் பிள்ளையார் கோவிலுக்கும் வ

59 டக்கு தன்னரசுதேவன் தோட்டத்துக்கும் வை

60 ய்கை ஓடைக்கும் சுங்கிறாய்ப்புத்துக்கும் கிளை

61 க்கு இந்த நான்ங்கெல்கைக்கி உள்பட்ட கிறாம

62 ம் மலங்கரை சகலமும் கையாடிக்

63 கொள்ளச் சொல்லி உத்தரவு கட்டளையிட்டோ

64 ம் றாமசெயம் இதற்கு யாதாமொருவர் அடி

65 அளிவு செய்தால் மாதா பிறாமணனை

66 கொன்ற தோசத்திலே கெங்கைக்கரை

67 யில் தனுக்கோடிக் கரையில் வதை செயித

68 தோசத்திலும் குருவை அடித்துக் கொண்ட

69 தோசத்திலும் போகக் கடவாராகவும் றாமனாத

70 ன்ந்துணை

# 36

# இராசசிங்கமங்கலம் செப்பேடு

இருக்கும் இடம் : தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை அருங்காட்சியகம், இராமநாதபுரம்

அரசர் : இரகுநாத தேவர்

காலம் : 2—1—1688

அளவு : 23 செ.மீ. x 13 செ.மீ.

**அமைப்பும் செய்தியும்** : இச்செப்பேட்டில் உள்ள துளையில்லாத அழகிய கைப்பிடியில் பீடமொன்றில் திரிசூலம் வரையப்பட்டுள்ளது. அதன்கீழ் உ மங்கலக் குறியுள்ளது.[1] இரண்டாம் பக்கத்தில் 'சேதுபதி' என்று தெலுங்கில் எழுதப்பட்டுள்ளது.

கிழவன் சேதுபதி என்னும் ரகுநாத தேவர் இராசசிங்க மங்கலம் என்னும் இராசசிங்க மங்கலத்தில் சிலுக வயல் என்னும் பகுதியை இராமேசுவரம் இராமநாதசுவாமிக்குக் கொடையாக அளித்தார். இராச சிங்க மங்கலம் குளப்பாசனத்தில் வடக்கு எல்லை புல்லமடை, மேற்கு எல்லை குளம், கிழக்கு எல்லை நாலுமடை இவற்றிற்குட்பட்ட நிலம்

1. *ARE, A. 27 of 1947.*

எவ்வளவு உண்டோ அவ்வளவையும் அளித்தார். இக்கொடை நிலத்திற்கு நீர்பாயும் மடைகளுக்கு 'இராமநாதமடை' என்று பெயர் வைத்திருப்பது சிறப்புமிக்கதாகும்.

இந்நிலத்திற்கு இப்போது உள்ள பள்வரி, பலவரி, செம்புவரி, களஞ்சியவரி, வண்டிக்கிடாய், கொட்டிய எருது போன்ற வரிகளையும், எதிர் காலத்தில் உண்டாகும் வரிகளையும் அளிக்கத் தேவையில்லை என்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இக்கொடை இராமேசுவரம் கோயில் காரியக்காரர் இராமநாத பண்டாரம் அவர்கள் வசம் அளிக்கப்பட்டது. இந்நிலத்தின் வருவாயிலிருந்து இராமேசுவரம் இராமநாத சுவாமிக்கு அபிடேகம் செய்ய வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

## செப்பேடு

### முதல் பக்கம்

உ

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாத்தம் 1609 இதின் மேல் செல்லாநின்

2 றப் பறபவ னாம ஸம்வத்ஸரத்து உத்தராயணத்து ஹேமந்த ரீதுவில்
புஷ்ய

3 நாயத்து புஷ்ய நக்ஷத்திரத்து தசமியும்சோமவாரமும் பாலவாகரணமும்

4 சுகற்மனாம யோகமும் பெற்ற புண்ய காலத்தில் தேவநகராதிபன் ஸேது

5 மூல ரட்சா துரந்தரந் ராமநாத ஸ்வாமி கார்யா துரந்தரன் சிவபூஜா

6 துரந்தரன் பரராஜசேகரன் பரராஜ கஜ சிங்கம் ரவிகுல சேகர

7 ன் ரவிவம்மந் சொரிமுத்து வன்னியன் ஸ்வஸ்திஸ்ரீ பந் மஹா
மண்டலேஸ்வரந்

8 அரியராய தளவிபாடன் பாஷைக்குத் தப்புவராய கண்டன் மூவராயர்

9 கண்டன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு கொடாதான் பட்ட
மானங் காத்தான் து

10 ட்ட ராயிர கண்டன் புவனேக வீரன் வீரகஞ்சுகன் வேதியர் க

11 ாவலன் அரசராவண ராமன் அடியார் வேளைக்காறன் பரதள விபாடன் உரி

12 கோல் ஸுரதாநன் அந்தம்பர கண்டன் சாடிக்காறர் கண்டன் ஸ்வாமி துரோஹி

13 ள் மிண்டன் வந்நியராய ராகுத்தன் பனுக்குவார் கண்டன் வைய்கை வழ

14 நாடன் கொட்டமடக்கிவையாழி நாராயணன் இவுழிபாவடி மிதித்தேறு

15 வார்கண்டன் வீரவெண்பாமாலை இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகை மன்னர்

16 சிங்கம் துரைராயந் ஆத்தில்பாச்சி கடலில்பாச்சி மதப்புலி அடைக்கல

17 ங்காத்தான் தாலிக்கு வேலி சத்ருவாதியள் மிண்டன் வன்னியராட் டந் தவி

18 ழ்த்தான் மேவலர்கள் கோளரி மேவலர்கள் வணங்குமிரு தாளினான் வீரமஹா

19 கெம்பீரன் கீற்திப் பிரதாபன் அரியமானங் காத்தான் தொண்டிய ந்துறை காவ

20 லன் துர்க ரேபந்தன் ஹநுமகேதனன் குடைக்குக் கர்ணந் பரிக்கு நகுலன் ப

21 ரத நாடகப் பிறவீணன் கருணா கடாட்சந் குன்றினுயர் மேருவிற் குன்றாய் வளை

22 க்குணில் பொறித்தவன் திலக நுதல் மடமாதர் மடலெழுத வருசுமூகன் விஜயலட்

23 சுமி காந்தன் கலை தெரியும் விற்பன்னன் காமிநீ கந்தப்பன் ஸகலாபாஷா ஹரிச்சந்

24 திரன் ஸங்கீத ஸாஹித்ய வித்யா விநோதன் வீரதண்டை சேமத்தலை விழங்குமிரு

25 தாழிண்ணா ஸகலஸாம்பிராச்சிய லட்சுமி நிவாஸந் சேதுங்கராய வம்சா

26 திபநான துகவ்வூர்க் கூற்றத்தில் காத்தூரான குலோத்துங்க சோழ நல்லூர்

27 கிழ்பால் விரையாத கண்டனிலிருக்கும் ஸ்ரீ திருமலைச் சேதுபதி ஹிரண்யகர்ப்ப ய

28 ாஜி ரகுனாத தேவர் புத்திரன் ராஜஸ்ரீ ஹிரண்ய கர்பயாஜி ரகுநாத தே

29 வர் ராமநாத ஸ்வாமிக்கு

## இரண்டாம் பக்கம்

30 இர்ாசிங்க மங்கலத்தில் சிலுக வயலுக்கு வடக்கு புல்லமடைக்குத் தெற்

31 கு மேற்கு எல்லை குளத்துக்கு கிளக்கு கிளக்கெல்லை நாலுமடைக்கும் எவ்வளவு

32 நிலமுண்டோ அவ்வளவு நிலம் இராமநாத மடைக்கு உண்டானது அதுக்குப் ப

33 ள்வரிப் பலவரி செம்புவரி களஞ்சிய வரி வண்டிக்கிடாக் கொட்டிய எ

34 ருது ஏதுவரிப் பிறந்துதோ அந்த வரிஎல்லாம் ஒன்றுந் தேவையில்லை என்று சறு

35 வ மானியமாக கட்டளையிட்டு சந்திராதித்த சந்ததிப் பிறவேஷம் நிதிநிட்ஷயும் சிலத

36 ரு பாஷாணம் உள்பட ஆண்டு அனுபவிச்சுக் கொள்ளக் கடவராகவும் இந்த தற்மத்தை

37 ஆராகிலும் பரிபாலனம் பண்ணுகிறார்கள் அவர்கள் சேதுவிலும் கெங்கையிலும்

38 ஆயிரம் கோதானம் பண்ணிய பலம் அடைவராகவும் ஆயிரம் கன்னியாத

39 ானம் பண்ணின பலன் அடைவராகவும் பதினாயிரம் சிவப்பிறதிட்டை பண்ணி

40 ன பலன் அடைவராகவும் அய்யாயிரம் பிறும பிறதிட்டை பண்ணின பலன் அ

41 டைவராகவும் இந்தப்படிக்கு இராமநாத சுவாமிக்கு இராமநாத பண்டாரமவர்

42 கள் பாரிஷமாக அபிசேககட்டளையிட்ட படியினாலே ஆண்டுஅனுபவிச்

43 சுவரக் கடவராகவும் இந்த தற்மத்துக்கு யாதாமொருத்தர் அகிற்தம் பண்ணினாரிகள் சேதுவி

44 லேயும் கெங்கையிலேயும் பதினாயிரம் பிறமகஷ்த்தி பண்ணின தோஷத்திலேயும் போக

45 கடவராகவும் அய்யாயிரம் கோகத்தி பண்ணின தோஷத்திலேயும் போக கடவா

46 ராகவும் ஆயிரம் திறிகஷ்த்தி பண்ணின தோஷத்திலேயும் ஹோக கடவராகவும் மாத

47 ர பிதாவைப் பேதம் பண்ணின தோஷத்திலேயும் போக கடவராகவும் உ சேதுபதி

# 37

# இராமானுசப்பேரிச் செப்பேடு

இருக்கும் இடம் : தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை அருங்காட்சியகம், இராமநாதபுரம்

அரசர் : விசய ரகுநாதச் சேதுபதி காத்த தேவர்

காலம் : 20—4—1688

அளவு : 21 செ.மீ. × 13 செ.மீ.

**அமைப்பும் செய்தியும்** : துளையில்லாத கைப்பிடியில் கீழ்ப்பகுதியில் குறியீட்டுடன்,

'விசுவனாத ஆசா
ரி முத்தப்பன் கயி
எளுத்து'

என்ற மூன்று வரிகள் எழுதப்பட்டுள்ளன. இத்தொடர் செப்பேட்டின் இறுதியில் எழுதவேண்டிய பகுதி. இடம் இன்மையால் கைப்பிடியில் எழுதப்பட்டுள்ளது. சேதுபதி என்று தெலுங்கில் செப்பேட்டின் முதல் பக்க நடுப்பகுதியில் எழுதப்பட்டுள்ளது.

சேதுபதி அரசர் ஓர் அமாவாசைப் புண்ணிய காலத்தில் திருப் புல்லாணி தற்பசயன்மழகியரான தெய்வச்சிலைப் பெருமாளுக்குத் திருப்புல்லாணி அருகில் உள்ள பாறனூரையும் அதனுடன் சேர்ந்த பல்வேறு நிலங்களையும் கொடையாக அளித்த செய்தி இச்செப்பேடு மூலம் தெரிகிறது.

இராமானுசப்பேரி உள்வாய் புறவாய் நிலம், காவல் பற்று, முப் பனை, முருக்கடிப் பற்று, மனையனேந்தல், கோரைக்குளம், காவேரி ஏந்தல், கோவிந்தனேந்தல், காரையடி முறிவு, வெள்ளாம்பற்று குதக் கோட்டைத் தரவை, மேதலை ஓடை, சாமநத்தம், தினைக் குளம், தம்பிராட்டி தரவை, இருவரை வென்றான் பட்டணம், முன் திருவாழிக் கல், இங்நான்கெல்லைக்கு உட்பட்ட ஏந்தல், பிறவடை, நல்லாங்குடி, கடம்பங்குடி அதற்குட்பட்ட, நன்செய், புன்செய், இலங்கைவழி ஏந்தல், ஆதனகொற்றங்குடி, மாறந்தை அதனுடன் சேர்ந்த திட்டக்குளம், கொன்னையனேந்தல். ஆமணக்கம்பற்றி ஏந்தல், பள்வலசை ஏந்தல், விளல்பத்தி ஏந்தல், இதனுடன்சேர்ந்த நிலங்கள், இலந்தை மரம், அதனுடனே சேர்ந்த நிலம் ஆகியவைகளையும், சேதுபதி அவர் களின் பட்டாபிசேகத்தில் கையக்கு நாட்டுப்பற்றில் பாறனூரும் அத னுடனே சேர்ந்த மறிச்சுக் கட்டி பணிக்கனேந்தல், பண்ணிகுத்தி ஏந்தல், அதனுடனே சேர்ந்த ஊருணித் தன்மங்கள், இதனுடனே சேர்ந்த நிலங்களும் தாமிரபரணிக் கரையில் சவராமங்கலம் உள்க் கிடையில் ஆயன்பற்றுத் திருவாழிக்கல்லுக்குட்பட்ட பலபட்டடைக் குடியும் நிலங்களும் அளிக்கப்பட்டன.

நாற்பாங்கு எல்லைகள் கூறாமல் கொடைப் பகுதியில் உள்ள பல்வேறு பகுதிகள் தனித்தனியாகக் கூறப்பட்டுள்ளன.

இவ்வூர்ப் பகுதிகளில் வழங்கும் பள்வரி, பலவரி, திருகைவரி, கல்வரி, இடைவரி, மனைவரி, கூரைவரி, பாசிவரி, கொல்லன்வரி, தச்சன்வரி, ஈழம்புஞ்சைவரி, தட்டுவரி, நன்மாட்டுவரி, பனைங்கடமை வரி, கத்திப்பெட்டிவரி, சாணார்வரி, நிலவரி, செக்குவரி, மகமை, ஆயம், கடைவரி, களஞ்சியவரி, உழக்குவரி, பலபட்டடைவரி, கம்பட்டவரி, கொத்துக் கணக்குவரி, வேண்டுகோள் வரி, கொடிக்கால்வரி, புகை யிலை வரி போன்ற எல்லாவகை வரிகளையும் ஆடித்திருநாள் கட்ட ளைக்கும், நாள் பூசைக்கும், திருநந்தாவிளக்குக்கும், திருநந்தவனத் திற்கும் அரசர் அளித்தார்.

மேற்கண்ட வரிக்கோவைகள் எல்லாம் அரசன் பெயரில் உபைய மாகநடக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

இந்தச் செப்பேடு விசுவநாத ஆசாரி மகன் முத்தப்பன் என்பவ ரால் எழுதப்பட்டது.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலியவாஹன சகாப்தம் 1611 இதன் மேற் செல்லாநின்ற வி

2 ப நாம ஸம்வக்ஸரத்து உத்தராயணத்தில் அமரபக்ஷத்தில் வசந்த ரீது வில்

3 அமாவாசியும் பரணி நக்ஷத்திரமும் சுபயோக சுபகரணமும் பெற்ற சூரிய

4 கிராண புண்ணிய காலத்தில் தேவை நகராதிபன் ஸேது மூல ரக்ஷா துர

5 ந்தரன் ராமநாதசுவாமி காரியா துரந்தரன் சிவபூசா துரந்தரன் பர ரர்சசேகரன் பரராச கெச சிங்க

6 ம் இரவிகுல சேகரன் சொரிமுத்து வன்னியன் பட்ட மானங் காத்தான் ஸ்வஸ்தி ஸ்ரீமந் மகா

7 மண்டலேசுரன் அரியரா தளவிபாடன் பாஷைக்குத் தப்புவராயிர கண்டன் மூவராயி

8 ர கண்டன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு குடாதான் துட்ட ராயிர கண்டன் புவனேகவீர

9 ன் வீரகஞ்சுகன் வீரவளநாடன் வேதியர் காவலன் அரசராவண ராமன் பரதள விபா

10 டன் அந்தம்பர கண்டன் சாடிக்காறர் கண்டன் சாமித்துரோகியன் மிண்டன் பஞ்சவன்ன

11 ராய ராகுத்தன் பனுக்குவார் கண்டன் வைகை வளநாடன் கொட்ட மடக்கிய வையாழி நாரா

12 யணன் இவுழி பாவடி மிதித்தேறுவார் கண்டன் வீரவெண்பாமாலை இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம்

13 ம் பகைமன்னர் சிங்கம் துரைராயன் ஆத்திவ்ப்பாச்சி கடலில்ப்பாச்சி மதப்புலி அடை

14 க்கலங் காத்தான் தாலிக்குவேலி சத்துராதிகள் மிண்டன் வன்னிய ராட்டந் தவிர்த்தான் மேவ

15 லர்கள் கோளரி மேவலர்கள் வணங்குமிரு தாழினான் வீரகெம்பீரன் கீர்த்திப் பிறதாபன் ஆரிய

16 மானங் காத்தான் தொண்டியந்துறை காவலன் துரங்கரேபந்தன் அனும கேதனன்

17 கொடைக்குக் கன்னன் பரதநாடகப் பிறவீணன் கருணாகட்டாஷந் குன்றினுயர் மேருவிற்

18 குன்றாய் வளைகுணில் பொறித்தோன் திலகநுதல் மட்மாதர் மடலெ ழுத வருசுமுகன் விசைய

19 லட்சுமி காந்தன் கலைதெரியும் விற்பன்னன் காமினி கந்தப்பன் சத்திய வாசக அரிச்ச

20 ந்திரன் சங்கீத சாயித்திய வித்தியா விநோதன் வீரதண்டை சேமத் தலை விழங்குமிரு தா

21 ழினான் சகல சாம்பிறாட்சிய லட்சிமீவாசன் செயதுங்க ராய வங்கி சாதிபனான துக

22 வூர்க் கூற்றத்து குலோத்துங்க சோழநல்லூர் கீள்பால் விரையாத கண்டனிலிருக்கு

23 ம் ஸ்ரீமது திருமலைய இரணிய கெற்பயாசி ரகுநாதச் சேதுபதி காத்த தேவரவர்கள் புத்

24 திறன் ரகுநாதச் சேதுபதி காத்த தேவரவர்கள் புண்ணியமாகக் கீள் செம்பி நாட்டில்

25 புல்லாராண்ணியச் சேத்திரத்தில் சேதுமூல மூலத்தில் தெற்பாசனமழ கியரான தெய்வச்சி

25 லைப் பெருமாள் நயினாருக்கு சறுவ மானிபமாகக் கட்டளையிட்ட கிராமமா

27 வது திருப்புல்லாணியுடனே சேந்த இராமானுஷப்பேரி உள்வாய் பிறவாய் நி

28 லமும் காவல்ப் பற்று முப்பளை முருக்கடிப்பற்று மனையனேந்தல் கோரைக்கு

## இரண்டாம் பக்கம்

29 ளம் காவேரி ஏந்தல் கோவிந்தனேந்தல் கார்யடி முறிவு வெள்ளா பற்று

30 குதக்கோட்டைத்தரவை மேதலை ஓடை சாமநத்தம் தினைக்குளம் தம்பிராட்

31 டி தரவை இருவரை வென்றான் பட்டணம் முன் திருவாழிக் கல்லு க்கு இன்

32 னான் கெல்லைகுள்ப்பட்ட யேந்தல் பிறவடையளும் இதுக்குள்ப்பட்ட நஞ்சை

33 புஞ்சையளும் நல்லாங்குடி கடம்பங்குடி நான்கெல்லைக்குள் பட்ட நஞ்

34 சை புஞ்சையளும் இலங்கை வழி ஏந்தல் ஆதன கொற்றங்குடியும் மாறந்தை அதினு

35 டனே சேந்த திட்டகுளம் கொன்னையனேந்தல் ஆமணக்கம் பற்றி ஏந்தல் பள்வல

36 சை ஏந்தல் விளல்ப்பத்தி ஏந்தல் இன்னான்கெல்லைக்குள் பட்ட நஞ் சை புஞ்சையும் இலந்தை

37 மரம் அதினுடனே சேந்த நஞ்சை புஞ்சையளும் இரணிய கெற்பயாசி விசைய ரகுனாதச் சேதுபதி

38 காத்த தேவரவர்கள் பட்டாவிஷேகத்தில் தான பூறுவமாகக் கட்டளை யிட்ட கைக்கு நாட்டுப்பத்தில்

39 பாறனூரும் அதினுடனே சேந்த மறிச்சுக்கட்டி பணிக்கனேந்தலும் பண்ணிகுத்தி ஏந்தல் இதுனு

40 டனே சேந்த ஊறணித் தன்மங்களும் இதனுடனே சேந்த நஞ்சை புஞ்சை திட்டுத் திடல் மாவடை

41 மரவிடைகளும் தாம்பிரவேணி தீரத்தில் சவராமங்கலம் உள்க்கிடை
யில் ஆயன் பற்றுத் திருவாழிக்

42 கல்லுக்குள்பட்ட பலபட்டடைக்குடி யும் நஞ்சை புஞ்சை திட்டுத் திடல்
மாவடை மரவிடையும்

43 இந்தக் கிராமங்களுக்குண்டாகிய பள்வரிப் பலவரி திருணைவரி கல்வரி
இடைவரி மனைவரி கூரைவ

44 ரி பாசிவரி கொல்லன் தச்சன்வரி ஈளம்புஞ்சைவரி தட்டுவரி நன்மாட்டு
வரி பனைங்கடமைவரி கத்திப்

45 பெட்டிவரி சானார்வரி நிலவரி செக்குவரி மசுமை ஆயம் கடைவரி
களஞ்சியவரி உளக்குவரி பல

46 பட்டடைவரி கப்பட்டவரி கொத்துக் கணக்குவரி வேண்டுகோல்வரி
கொடிக்கால்வரி புகை

47 யிலைவரி இது முதலாகிய பலவரியும் சறுவமானியமாக ஆடித்திரு
நாள்க் கட்டளைக்கும் நித்த

48 ப்படி பூசைக்கும் திருநந்தா விளக்குத் திருநந்தவனம் திருத்தோப்பு
திருப்பணி இது முதலாகிய தன்

49 மங்களெல்லாம் நம்முட உபையமாக நடக்க வேணுமென இதுமுதலான
வரிக் கோர்வை யெ

50 ல்லாம் நயினார் தெய்ச்சிலைப் பெருமாள் சுவாமிக்கு சறுவ மானிய
மாகக் கட்டளையிட்டோம் இந்த

51 த் தன்மத்தை யாதாமொருத்தர் பரிபாலனம் பண்ணினவர்கள் கோடி
விஷ்ட்ணுப் பிறதிட்டையும்

52 கோடி சிவலிங்கப் பிறதிட்டையும் கோடி பிரம்மப் பிறதிட்டையும்
பண்ணின சுகுர்தத்தை யடை

53 வாராகவும் இந்தத் தன்மத்துக்கு யாதாமொருத்தர் அகுதம் பண்ணிக்
கட்டிக் கொண்டவர்கள் கெ

54 ங்கைக் கரையிலேயும் சேதுவிலேயும் காராம் பசுவையும் பிராமணரை
யும் மாதா பிதாவையும் குரு

55 லையும் கொன்ற தோஷத்திலே போகக் கடவார்காகவும் உ இந்தத்
தாம்பிர சாதனம்

56 விசுவனாத ஆசா

57 ரி முத்தப்பன் கய்

58 எளுத்து

# 38

# பலிசாதனச் செப்பேடு

இருக்கும் இடம் : இராமநாதபுரம் சீமை மூப்பன்மார்கள்

அரசர் : இரகுநாத சேதுபதி

காலம் : 15—5—1691

**அமைப்பும் செய்தியும்** : இது மிகுதியும் கிரந்த எழுத்துக்களோ அல்லது தெலுங்குத் தொடரோ பொறிக்காத செப்பேடு. மதுரை நாயக்கருக்கு எதிர்ப்பாக எட்டயபுரத்து நாயக்கர் போருக்குக் கிளம்பியபோது புதுக்கோட்டைத் தொண்டைமானைக் கொண்டு எட்டயபுரத்தாரை அடக்கியது திருமலை சேதுபதி (1647-1672) என்பர்.[1] ஆனால் கிழவன் சேதுபதி என்னும் இரகுநாத சேதுபதியே எட்டய புரத்தாரை அடக்கியவர் என்பது இச்செப்பேடு மூலம் பெறப்படுகிறது. எட்டயபுரத்து நாயக்கரைக் கொன்று அவர் தலையில் அணியும் அணியைச்சேதுபதி காலில் அணிந்தார் என்பர். அதனை இச்செப்பேடு 'எட்டன்தலையில் கட்டும் விருதைக் காலிலே கட்டுங் கலங்காத கண்டன்' என்ற தொடரால் விளக்குகிறது.[2]

---

1. சுப்ரமணியன், ந. 'தமிழக வரலாறு (1565-1982)', என்னெஸ் பப்ளிகேசன்ஸ், மதுரை, 1983, பக். 44.

2. எட்டப்ப நாயக்கரது தலை உருவம் கொண்ட வீரக்கழலை இடக்காலில் அணிந்தார் என்பர். மிதிலைப்பட்டி அழகிய சிற்றம்பலக் கவிராயா பாடிய தள்சிங்கமாலையில் ''காலில் வன்கல்லைப் பெண்ணாக்கிய காலில், எட்டன் தலையார் விஜய ரகுநாத தள்சிங்கமே'' என்று பாடியுள்ளார். செந்தமிழ் தொகுதி 6, பக். 44-50,

இர்குநாத சேதுபதியின் இச்செப்பேடு மிகவும் அரிய செய்தி ஒன்றைக் கூறி அக்காலச் சமுதாய வாழ்க்கையின் நிலையைவிளக்கு கிறது.

சேதுபதியின் ஆட்சிப் பகுதியில் வலையர் என்பப்படும் சமூகத் தினர் வாழ்ந்துவந்தனர். காட்டில் விலங்குகளைப் பிடிக்கவும் கடலில் மீன்களைப் பிடிக்கவும் வலை வீசுவது இவர்களது தொழில். இவர்கள் திருச்சி, தஞ்சை, இராமநாதபுரம், மதுரை மாவட்டப் பகுதியில் பெரும் பாலும் வாழ்வதை மக்கள் தொகைக் கணக்கெடுப்புகள் அறிவிக் கின்றன.

வேலாந்தரவை என்னும் ஊரில் வீரமூப்பன் என்னும் வலையர் குலப் பெருமகன் வாழ்ந்துவந்தான். அவனுடைய மகன் வழிவந்த பேத்தி வீராயி மூப்பமார் வீட்டில் வளர்ந்துவந்தாள். வீராயிக்கும் இளம நேரி நயினுக்குட்டிச் சேருவைகாரனுக்கும் ஏற்பட்ட களவுமணத்தால் வீராயி கர்ப்பம் தரித்தாள். நெருங்கிய உறவினர் அனைவரும் கண்டித் ததில் வீராயி இறந்து விட்டாள்.

வலையர் சமூகத்தின் பெருமக்கள் நயினுக்குட்டிச் சேருவை காரனை அழைத்துக் கொண்டு சென்று சேதுபதி அரசரிடம் முறை யிட்டனர். அரசர் நயினுக்குட்டிச் சேருவைகாரனைப் பலிக்குப்பலி கொடுக்குமாறு தீர்ப்பளித்தார். நயினுக்குட்டிச் சேருவைகாரன் பலிக்குப் பலி தர தன் தங்கை உடையக்காளை வலையர் சமூகத்திடம் ஒப்படைத் தான்.

வீராயியின் பிணத்தை ஒரு சிதையிலும், உடையக்காளை உயிரு டன் ஒரு சிதையிலும் வைத்துத் தீ வைத்தனர்.

அப்போது மூப்பமார்கள் உடையக்காளைச் சிதையிலிருந்து அகற்றி நமக்குப் பிள்ளை வந்தது என்று கூறி உடையக்காளுக்குச் சாதிப்பிள்ளை என்று பெயரும் கொடுத்தனர்.

திருமணத்தின் போதும், மறுமணத்தின் போதும், இறுதிச் சடங் கின் போதும் குறிப்பிட்ட அளவு பணம், பாக்கு, அரிசி, கிடாய் ஆகிய வைகளைச் சாதிப் பிள்ளையாகிய உடையக்காளுக்கு அனைவரும் கொடுக்க வேண்டும் என்ற நியதியை ஏற்படுத்தினர். வலையர் சமூகத்

தார் அனைவரும் ஆண்டு தோறும் குடி ஒன்றுக்கு 2 பணமும் 3 படி தானியமும் கொடுக்க வேண்டும் என்றும் கைம்பெண்கள் குடியினர் 1 பணமும் 1 படி தானியமும் கொடுக்க வேண்டும் என்றும் வரையறை செய்தனர்.

வலையர் சமூகத்தில் ஏற்படும் வழக்குகளை மூப்பமார் உடையக் காள் முன்னிலையில் விசாரிக்க வேண்டும் என்றும் அப்போது விதிக் கப்படும் அபராதம் சாதிப்பிள்ளையாகிய உடையக்காளைச் சேர வேண்டும் என்றும் நிர்ணயம் செய்தனர்.

வலையரில் எவரேனும் பிள்ளையில்லாமல் இறந்தாலும் நெருங் கிய பங்காளிகளோ அல்லது வாரிசோ இல்லாமலிருந்தாலும் அவர் களுக்குச் சாதிப்பிள்ளை (உடையக்காள்) முன்கை சிரைத்து இறுதிச் சடங்கு செய்ய வேண்டும். இறந்தவர் சொத்து சாதிப்பிள்ளையைச் சேர்ந்தது.

சிறப்புமிகு இச்செப்பேட்டில் அந்நாளில் வலையரில் இருந்த ராதான்கிளை, பூச்சிக்கிளை, பட்டங்கட்டிக்கிளை, வீரப்பிள்ளை கிளை, படையன் கிளை, அய்வன் கிளை, கோணாண்டி கிளை, வதிபிடிங்கி கிளை என்ற எட்டுக் கிளைகள் கூறப்படுகின்றன.

வலையர் வாழ்ந்த வேளாந்தரவை, குசவன்குளி, சக்கரைக் கோட்டை, காஞ்சானூரணி, பெருவயல், கிட்டாருகோட்டை, அத்தி னூத்து, அளகாங்குளம், ஆத்தங்கரை, எம்மண்டலம் கொண்டான், தாமரைக்குளம், இருட்டூரணி, நாகாச்சி, வேதாளை, சுந்தரதாசி மடம், ராமீசுரம், தினைக்குளம், மோருக்குளம், ஏறுபடி, வேம்பாறு, திருப் பாலைக்குடி, ஏனாதி, மங்கலக்குடி, சுந்தரபாண்டியன் பட்டணம் ஆகிய ஊர்கள் குறிக்கப்படுகின்றன

17 ஆம் நூற்றாண்டில் ஒரு பெண்ணுக்கு அதுவும் வேற்றுச் சாதி யிலிருந்து வந்த பெண்ணுக்கு ஒரு சமூகத்தார் அளித்த மிகவும் உயரிய மரியாதைகளை இச்செப்பேட்டின்மூலம் காணுகின்றோம். இன்றும் பல சமூகத்தாரிடையே ஆண்கள் முன்கை சிரைத்து இறுதிச் சடங்கு செய்யும் வழக்கம் உள்ளது. ஒரு பெண்ணை அவ்வாறு சடங்கு செய்ய அனுமதித்திருப்பது வியப்பான செய்தியாகும்.

## செப்பேடு

### முதல் பக்கம்

இராம ஜெயம்

1 சுபஸ்ரீ ஸ்ரீமது மகாமண்டலேசுபரன் அரியராயிர தளவிபாடன் பாசை

2 க்கு தப்புவராத கண்டன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு குடா
3 தான் பாண்டிமண்டலப் பிரதாபனாச்சாரியான் சோளமண்டலப் பிறதி
4 ஷ்டாச்சாரியான் தொண்டமண்டலப் பிறகண்டன் ஈளமுங் கொ
5 ங்கும் யாள்ப்பாணமும் அழித்து கெசவேட்டை கொண்டருளீ
6 ய ராசாதிராசன் ராசபரமேசுரன் ராசமார்த்தாண்டன் ராசகெம்பீ
7 ரன் இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் தொட்டியர்மோகந் தவிர்த்தான் துலு
8 க்கர்மோகந் தவிர்த்தான் எட்டன் தலையில் கட்டும் விருதைக் கா
9 லிலே கட்டுங் கலங்காத கண்டன் தாலிக்கு வேலி சத்திராதிகள் மூ
10 ண்டன் சொரிமுத்து வன்னியன் சேதுகாவலன் அடைக்கலங்
11 காத்தான் சேதுமூலா துரந்தரன் இராமநாதசுவாமி காரியா துரந்தர
12 ன் சிவபூசா துரந்தரன் இரணியகெற்ப ரவிகுல திலகன் சாமித்துரோ
13 கர் வெண்டயம் விளங்குமிரு தாளினான் அனுமக்கொடி கெரு
14 டக்கொடி சேவல்க்கொடி உடையான் தொண்டியந்துறை கா
15 வலன் செம்பிவளநாடாதிபன் பூலோக தேவேந்திர வில்லு
16 க்கு விசையன் சொல்லுக்கு அரிச்சந்திரன் குடைக்கு கர்ணன் பஞ்
17 ச பாணாவதாரன் வீரலெட்சுமி விசையலெட்சுமி ராசலட்சுமி சா
18 ம்பிராச்சியலட்சுமி அஷ்ட்டலட்சமிவாசன் பஞ்சவர்ணப் பாவாடை
19 விருதினான் செங்காவிக்கொடி உடையோன் மலைகலங்கினும்
20 மனங்கலங்காத கண்டன் சிவமய பரிபாலநன் அசுபதி கசபதி நரபதி
21 தேவை நகராதிபதியான் ரகுநாத சேதுபதி ராச்சிய பரிபாலனை
22 ம் பண்ணியருளாநின்ற கலியுகம் 4792 சாலியவாக
23 ன சகாப்தம் வருடம் 1613 மேல் செல்லாநின்ற பிரசோத்பத்தி
24 வருடம் வைகாசி மாதம் 17 தீ இளமநேறியிலிருக்கும் நயினுகுட்டி
சேருவைகாரர

25 ணுக்கு வலையரில் ராதான்கிளை பூச்சிக்கிளை பட்டங்கட்டிகிளை வீரப்பிள்ளைகிளை படை

26 யன்கிளை அய்வன்கிளை கோணாண்டிகிளை வதிபிடிங்கிகிளை இந்த எட்டு

27 க் கிளையிலுஞ் சேர்ந்த மூப்பமார் வேளாந்தரவை பெரிய வீரமூப்பன் சி

28 ன்னமூப்பன் குசவன்குளி அரங்கக்கிளவன் மடத்துடையான் மூப்பன் நெ

29 டு உடையான்மூப்பன் சக்கரைக்கோட்டை வீராண்டிமூப்பன் கருப்ப

30 ட்டிக்கிளவன் காஞ்சானூரணி காஞ்சான் மருங்கன் பெருவயல் பிச்

31 சமூப்பன் கிட்டாருகோட்டை வீரமூப்பன் அத்தினூத்து பெரியகுப்பன்

32 மூப்பன் சின்னக்குப்பாமூப்பன் ஆண்டிக்கறுப்பமூப்பன் அளகாங்

33 குளம் நொண்டிமூப்பக் கிளவன் ராமமூப்பன் மெய்ய மூப்பன் ஆத்தங் கரை

34 ச் சின்னச்சருக்கான் பெரிய சருக்கான் கறுத்தப்பயல் மாகாளி எம்மண்ட

35 லத்தொண்டான் தில்லாமூப்பன் கோடிக்காத்கிளவன் கறுப்பு மூப்பன்

36 தாமரைக்குளம் நம்பியாமூப்பன் கறிதின்னி குப்பாமூப்பன் இருட்டுரனி

37 ஒச்சிமூப்பன் ஓய்யாமூப்பன் பண்ணியமூப்பன் பிலிச்சான் மூப்

38 பன் வெள்ளையமூப்பன் நாகாச்சிக் கறுப்புமூப்பன் கோனுடையா மூப்ப

39 ன் வேதாளை தூங்கமூப்பன் சுந்தரதாசிமடம் சடையமூப்பன் ராமீ சுரம்

40 மாகாளிமூப்பன் ராமமூப்பன் தினைக்குளம் ராக்கமூப்பன் மோருக்குள

41 ம் வலைக் காவல்க்காரமூப்பன் ஏறுபடி அனகமூப்பன் மடத்துடையா மூப்ப

42 ன் வேம்பாறு மாரிமூப்பன் திருப்பாலைக்குடி கூத்தமூப்பன் ஏனாதி கறுப்புமூ

43 ப்பன் மங்கலக்குடி சின்னமெய்யமூப்பன் சுந்தரபாண்டியன் பட்டண

44 ம் துள்ளுக்குட்டிமூப்பன் நாங்களனவோருந் தங்களுக்கு பளிக்ரணி

45 க்கு எழுதிக்குடுத்த பட்டைய சாதனமாவது வேளாந்தரவை வீரமூ

46 ப்பன் மகன் பிள்ளை வீராயி தங்கள் வளவில் சிறுபிள்ளையிலிருந்து

## இரண்டாம் பக்கம்

47 சேந்திருந்தது அந்தப் பெண்பிள்ளை பெரிய பிள்ளையாய் ருதுவ

48 ாகி சாதியில் கட்டிக்குடாமலிருக்கையில் வயத்தில் கெற்பமாயி

49 ருந்தது அதுகாரியம் தாய் தகப்பன் அண்ணன் தம்பி சாதியார்

50 அரிந்து அந்தப் பெண்பிள்ளையைக் கண்டிச்சு கேள்க்குமிட

51 த்தில் அந்தப் பெண்பிள்ளை சாதியாரிடத்தில் சொன்னது நயினுக் குட்டி

52 சேருவைகாரனுடனே கூடி வயத்திலே கெற்பம் வந்ததென்று ருசுவுட

53 னே சொன்னாள் அவளைச் சாதியார் தெண்டினை பண்ணி உடனே உயிர்வ

54 தை பண்ணிப்போட்டு நயினுக்குட்டி சேருவைகாரனை பலிக்குப்பலி குடு

55 வென்று துரையவர்களது சமூகத்தில் கொண்டுபோய்விட்டு துரையவர்

56 களும் ஞாயத்தை விளக்கி நயினுக்குட்டி சேருவைகாரனை பலிக்குப் பலி குடுக்கச்

57 சொல்லி உத்தரவாகி அந்தப்படிக்கு மரணமான வலைப்பிள்ளை ஒரு கட்

58 டையிலும் நயினுக்குட்டி சேருவைகாரன் தங்கச்சி உடையக்காளை ஒ

59 ரு கட்டையிலும் வைத்து தீய் வைத்தார்கள் கட்டையும் மெரிதீயும் வய்த்தே

60 பாதே எங்களுக்கு பலிக்குப்பலி வந்ததென்று உடையக்காளைக் கட் டையை

61 விட்டுக் கீளே இறக்கிவிட்டு நம்மட பிள்ளைக்குப்பிள்ளை வந்ததென்று மூ

62 ப்பமார் ஒப்புக்கொண்டு வலையர் எட்டுக்கிளைக்கு சாதிப்பிள்ளை யென்று

63 பேருங்கொடுத்து எட்டுக்கிளை மூப்பமாருங்கூடி சாதிப்பிள்ளையாகிய உ

64 டயக்காளுக்கு பலிக்கு எழுதிக்குடுத்த சாதனப்பட்டையமாவது யெ

65 ங்கள் சாதியில் கலியாணத்துக்கு ஏழு பணமும் அன்பது பாக்கு குறுணி

66 அரிசியும் ஒருகிடாய் குரங்கும் கட்டு தாலிக்கு அஞ்சுபணமும் முப்பது பாக்கு மூணு

67 படியரிசியும் ஒருகிடாய் குரங்கும் சடங்குக்கு மூணு பணமும் பதினஞ் சு பாக்கு

68 ம் மூணுபடி அரிசியும் ஒரு கோளியும் குடுக்கிறது அதுவும் வலையர் குடி ஒன்

69 னுக்கு வருஷக் கட்டளை ரெண்டு பணமும் மூணுபடி தவசமும் கைம் பெண் குடி ஒன்

70 னுக்கு ஒரு பணமும் ஒருபடி தவசமும் யிந்தப்படி குடுக்கிறது எங்கள் சாதியி

71 ல் விவகாரம் வியாச்சியங்கள் வந்தால் சாதிப்பிள்ளையை வைத்துக் கொ

72 ண்டு மூப்பமாரும் கூடயிருந்து விபகாரங்கேட்டு குத்தஞ் சுமதியான யிடத்தில் அ

73 பராதம் வாங்கிற பணம் சாதிப்பிள்ளையைச் சாருகிறது புருஷன் பெண் சாதி சே

74 ராச் சேர்க்கையாயிருந்து நீந்து போடுகிறதாயிருந்தால் முதல் தீருவை 60 பணம்

75 ரண்டாம் தீருவை மூப்பதுபணமும் தீருவை சார்ந்த பேருக்கு குடுத்து விடுகிறது

76 அபராதப்பணம் சாதிப்பிள்ளையைச் சாருகிறது வலையரில் பிள்ளையில்

77 லாமல் போனாலும் தாயாதி பங்காளிகளில்லாமல் போனாலும் உரு

78 மைக்காரர் ஒருவருமில்லாதவர்கள் மரணமானால் சாதிப்பிள்ளை யை முன்

79 கை சிரைத்துக் கருமம் பண்ணுகிறது அவனுடைய ஆஷ்தி சாதிப்பிள் ளையைச்

80 சாருகிறது யிந்தப்படிக்கு நாங்கள் எட்டுக்கிளை வங்கிஷ மூப்பமாருங் கூடிச் சா

81 திப்பிள்ளைக்கு பவிச்சாதனப்பட்டய மெழுதிக்கொடுத்தபடி யினாலே பட்

82 டையத்திலெளுதியிருக்கிற பிரகாரமாய் ஆதித்த சந்திர பிரபையுள்ள வரைக்கு

83 ஆண்டனுபவித்துக் கொள்வாராகவும் இதற்கு யாதாமொருவர் தடங் கல்

84 பண்ணுவார்களேயானால் அவர்கள் கங்கைக் கரையிலே காராம்பசு

85 வைக்கொன்ற தோஷத்திலும் தனுக்கோடிக் கரையிலே பிராமணவதை

86 பண்ணின தோஷத்திலும் மாதா பிதாவைக் கொன்ற தோஷத்திலும் போக

87 க்கடவாராகவும் உ இராமனாதசுவாமி துணை

# 39

# நல்லுக்குறிச்சிச் செப்பேடு

| | | |
|---|---|---|
| இருக்கும் இடம் | : | தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை அருங்காட்சியகம், இராமநாதபுரம் |
| அரசர் | : | இரகுநாத சேதுபதி காத்த தேவர் |
| காலம் | : | 13—7—1691 |
| அளவு | : | 25 செ.மீ. × 13.5 செ மீ |

**அமைப்பும் செய்தியும்** : இச்செப்பேடு துளையையுடைய தாமரை மொட்டுப் போன்ற கைப்பிடியை உடையது.[1] கைப்பிடியின் முன் பக்கத் தில் உ குறி இடப்பட்டுள்ளது. இச்செப்பட்டில் கண்ட கொடையை அளித்தவர் கிழவன் சேதுபதியான இரகுநாத சேதுபதி காத்த தேவர் என்றாலும் இச்செப்பேட்டில் அவர் தந்தையார் தளவாயான திருமலைச் சேதுபதி காத்த தேவர் பெயரும் குறிக்கப்பட்டுள்ளது.

இராமேசுவரத்தில் உள்ள ஓர் அன்னதான மடத்துக்கு நல்லுக் குறிச்சி என்ற ஊரையும் அவ்வூரிலுள்ள ஏந்தல்கள், அனைத்து நிலங் கள், அவ்வூரின் எல்லாவகையான வருவாய் ஆகியவற்றை யெல்லாம் கொடையாக அளித்ததை இச்செப்பேடு கூறுகிறது. சந்திர சூரியர் உள் ளவரை இவ்வூரைத் திருமடத்தார் அனுபவித்துக் கொள்ள வேண்டும்

---

*1. ARE, A. 32 of 1947.*

என்றும் செப்பேட்டில் எழுதப்பட்டுள்ளது. இக்கொடை இராமேசுவரம் இராமநாதசுவாமி சன்னதியில் அளிக்கப்பட்டது.

இந்தச் செப்பேட்டை திரு உத்தரகோசமங்கையிலிருக்கும் சிற்பாசாரிகளில் வீரப்பாசாரி மகன் அதிவீரன் என்பவர் எழுதியுள்ளார். சுபமஸ்து என்ற தொடருடன் இச்செப்பேடு முடிவடைகிறது. தெலுங்கில் 'சேதுபதி' எனச் செப்பேட்டின் இறுதிப் பகுதியில் எழுதப்பட்டுள்ளது.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 ஸ்வஸ்திஸ்ரீ ஸகாப்தம் 1613க்கு மேல்ச் செல்லாநின்ற கொல்லம் 931 க்கு மேல்

2 ச் செல்லாநின்ற பிரஜோத்பதி நாம ஸம்வத்ஸரத்து தெட்சணாயணத் தில் கிரீஷ்மரி

3 துவில் ஆஷாட மாஸத்தில் சுக்லபட்சத்தில் பௌர்ணமாவாஸியும் ஆதித்தவாரமும் தி

4 ருவோண நக்ஷசத்ரமும் ஸௌபாக்ய நாடியோகமும் சுபயோக சுப கரணமும் பெற்

5 ற புண்ய காலத்தில் ராமனாத சுவாமி சன்னதியில் ஸேதுக்கரையில் அன்னதான

6 மடத்துக்குக் தேவை நகராதிபன் சேதுமூல ரட்சா துரந்தரன் ராம னாத சுவாமி

7 காரியா துரந்தரன் சிவபூஜா துரந்தரன் பரராஜ சேகரன் அசசேகரன் பர

8 ராசசிங்கம் பரராசகேசரி ரவிகுலசேகரன் ரவிவர்மன் ரவிமாத்தாண் டன் சொரி

9 மூத்து வன்னியன் சொரிவன்னிய சூர்யன் ஸ்வஸ்திஸ்ரீ மந் மஹாமண்ட லேஸ்வரந்

10 பாஷைக்குத் தப்புவராயர் கண்டன் கண்டநாடு கொண்டு கொண்ட நாடு

11 குடாதான் பட்டமானங் காத்தான் துட்டராயர்க்கண்டன் மூவ

12 ராயர் கண்டன் பஞ்சவன்னராய ராவுத்தன் புவனேக வீரன் வீர

13 கஞ்சுகன் வேதியர் காவலன் அரசராவண ராமன் அடியார் வேளைக்கா

14 றன் பரதளவிபாடன் உரிகோல் சுரதான் அந்தம்பிர கண்டன் சாடிக்கா

15 றர் கண்டன் ஸ்வாமித் துரோஹியள் மிண்டன் பனுக்குவார் கண்டன் கொட்டம

16 டக்கி வய்யாளி நாறாயணன் இவுளி பாவடி மிதித்தேறுவார் கண்டன் கலங்காத

17 கண்டன் வீரவெண்பாமாலை இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் படைமன்

18 னர் சிங்கம் பரமன்னர்சிங்கம் துரைராயராமன் ஆத்திற்ப்பாச்சி கடலிற்

19 ப்பாச்சி மதப்புலி அரசு நிலையிட்டான் அடைக்கலங்காத்தான் தாலிக்கு

20 வேலி துர்காதிபதிகள் மிண்டன் மந்நிய ராட்டந் தவீர்த்தாள் மேவ லர்கள்

21 கோளரி மேவலர்கள் வணங்குமிரு தாளினான் வீரமாருத கெம்பிரன்

22 கிற்திப் பிறதாபன் பரிக்கு நகுலன் குடைக்கு கர்ணன் பரதநாடக ப

23 த்திப் பிரியன் துரைபிரதாப கருணா கடாக்ஷன் வீரசேமன் குன்ற னைய மேரு

24 வில்ப் பொன்றா வழரி பொறித்தவன் திலத நுதல் மடவார்கள் மட

25 லெழுத வரு சுமுகன் வீரலட்சிமி காந்தன் விஜய லக்ஷிமி வாஸ ஸம்ப

26 ந்நன் கலைக்கு விற்பன்னன் கந்தர்வ புஷ்ப பர்ணன் ஸத்யபாஷா ஹரிச்சந்திரன்

27 அனபத்தர் அமன்னிய கண்டன் மலைகலங்கினும் மனங்

28 கலங்காதான் சிந்தித்த கார்யம் பண்ணும் மனோகரன்

## இரண்டாம் பக்கம்

29 ஸங்கீத ஸ்ாயித்ய வித்யா வினோதன் வீரதண்டை சேமத்தலை விளங்குமிரு

30 தாளிநான் சேதுங்கராயன் வங்கிஷாதிபஸான துகவூர்க் கூத்தத்து

31 க் காத்தூரான குலோத்துங்க சோழநல்லூர் கீழ்பால் விரையாத க

32 ண்டனிலிருக்கும் உடைய நாயனான ரவிகுலசேகரத் தளவாயா

33 ன திருமலைச் சேதுபதி காத்த தேவர் ஸ்ரீ ஹிரண்ய கற்பயாஜி ஸோடஷ

34 மஹாதாந அகண்ட துரியமண்டலம் பிரதாபதி விப்ரந்த கீத்திப்ரகாஸ அக்ர

35 ஷஷ்டிகலாவித்யநாந ஸ்ரீலட்சுமி காந்த சேதுமூல ரகூஷா துரந்தரன் ரெகு

36 நாதச் சேதுபதி காத்த தேவரவர்கள் ராமனாத சுவாமி சன்னதியில்

37 அன்னதான மடத்துக்கு கொடுத்த பூதானப் பட்டையமாவது நாம்

38 கட்டளை இட்ட கிராமமாவது நல்லுக்குறிச்சியும் அதுடனே சேந்த ஏந்

39 தல் பிறவடை ஊரது புரவுள்பட கட்டளை இட்ட படியினாலே அதுக்

40 குண்டாகிய மாவடை மரவடை திட்டுத் திடல் குடிபடை பள்ளுப் ப

41 றை இடை ஊறணி மேல்நோக்கிய மரம் கீள்நோக்கிய னிறு நீரும் பாசியும் இ

42 ன்னான் கெல்கைக்குண்டாகிய தெல்லாம் யோக்கியமாக ஆசந்திராற்கம்

43 சந்ததிப்ரவேசமே சர்வமாணியமாக அனுபவித்து வருவாராகவும் தானப்பிறமா

44 ணம் பண்ணி நிதி நிக்ஷேப ஜல தரு பாஷாணம் ஸித்த ஸாத்யமென்று

45 சொல்லப்பட்ட சகல சமுதாய பிறாத்தியும் அஷ்டபோக தேஜ ஸ்வாமி யங்களுக்கும் த

46 ாநாதி விக்ரயங்களுக்கும் ஆசந்திராக்கமாக சந்திரப்பிரவேசமே சறுவ மான்ய

47 மாக அனுபவித்து வருவாராகவும் இந்த தர்மத்துக்கு யாதா மொரு வர்

48 அகுதம் பண்ணின பேர்கள் கெங்கைக் கரையீலும் சேதுக்கரையிலும் காராம்

49 பசுவையும் பிராமணரையும் மாதா பிதாவையும் கொன்ற தோஷத்தி லே போககட

50 வாராகவும் இந்த தாம்பிர சாதனம் எழுதினேன் திருவுத்தரகோச மங்கை

51 யிலிருக்கும் சில்பாசாரியளில் வீரப்

52 பாசாரி புத்ரந் அதிவீரன் லிகிதம்

53 சுபமஸ்து

54 உ

# 40

# திருப்பொற்கோட்டைச் செப்பேடு

இருக்கும் இடம் : திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை

அரசர் : இரகுநாத சேதுபதி காத்த தேவர்

காலம் : 13 -1–1692

அளவு : 30.5 செ.மீ × 20 செ.மீ.

**அமைப்பும் செய்தியும்** : இச்செப்பேட்டின் கைப்பிடி முழுவதும் உடைந்துள்ளது. சேதுபதி அரசர் செப்பேடுகளில் நாகரி எழுத்துப் பொறிக்கப்பட்டுள்ள செப்பேடு இது ஒன்றேயாகும். 'ரகுனாயக சேதோபதே' என நாகரியில் எழுதப்பட்டுள்ளது.[1] சேதுபதி என்ற சொல்லே சேதோபதே என எழுதப்பட்டுள்ளது. கிரந்த எழுத்தின் பயன்பாடு மிகவும் குறைவாகவே காணப்படுகிறது.

13–1–1682 அன்று சேதுபதியரசர் முருகப்பன் மட தர்மத்திற்கும், அக்கிரகாரத்திற்கும் கொடையாகத் திருப்பொற்கோட்டை, பகையனி பிராந்தனி என்ற இரண்டு ஊர்களைக் கொடையாகக் கொடுத்த செய்தி இச்செப்பேட்டில் கூறப்பட்டுள்ளது.

---

1. நாகரி எழுத்தின் இடையே மோடி எழுத்துக்களும் கலந்துள்ளன.

திருப்பொற்கோட்டையின் எல்லை. கிழக்கு எல்லை வலையன் சோழியன் கண்மாய், ஏறணிக்கோட்டைக் கண்மாய்; தெற்கு எல்லை சிறுகைக் கண்மாய் வடகீழ்க் கொம்பு; மேற்கு எல்லை ஆம்பட்டன் கோட்டை செட்டி ஏந்தல் புளியாண்டான் கரிசல்; வடக்கு எல்லை துக்காக்குடி ஆறு ஆகியனவாகும்.

பிரமதாயக் கிராமமான பகையனி பிராந்தனி எல்லை: கிழக்கு எல்லை பாப்பான் கோட்டை அமனிப்புளி பாலக் கண்மாய்; தெற்கு எல்லை திடக்கோட்டை வடவயல்; மேற்கு எல்லை சாணானேந்தல் கொள்ளுடையார் தன்மத்து நெய்மேனி; வடக்கு எல்லை அரையேனித் தென்வயல் நவதேவ தேவன் ஊருணி ஆகியவையாகும்.

பகையனி பிராந்தனி நான்கெல்லைக்குட்பட்ட மாவடை, மரவடை, திட்டு, திடல் பாம்பாடு பனை, வடலி, ஆவிரை, கொழுஞ்சி. கிணறு போன்றவற்றின் மூலம் வரும் எல்லா வருவாயுடனும் சேதுபதியரசர் அக்கிரகாரம் அமைத்துக்கொள்ள அனுமதித்தார். இதற்கேற்பச் செப் பேட்டில் இவ்வூர் பிரமதாயக் கிராமம் என்றே அழைக்கப்படுகிறது.

1692 இல் முருகப்பன் மட தர்மத்துக்காக அளிக்கப்பெற்ற இத் திருப்பொற்கோட்டை மீண்டும் மற்றொரு செப்பேட்டில் திருவாவடு துறை ஆதீனத்திற்குக் கொடை அளிக்கப்பட்டதாக 10—11—1733 அன்று அளிக்கப்பெற்ற மற்றொரு செப்பேடு கூறுகிறது இடைக்காலத் தில் முருகப்பன் மடம் திருப்பொற்கோட்டையில் இயங்கவில்லை என் பது இதன் மூலம் தெரிகிறது. இக்கொடை அளிக்கப்பட்டபோது திரு வாவடுதுறை ஆதீனத் தலைவராக விளங்கியவர் ஸ்ரீவேலப்பதேசிகர் (1678-1700).

## செப்பேடு

### முதல் பக்கம்

1 *ஸ்வஸ்திஸ்ரீ மகாமண்டலேசுபரன் அரியராய தளவிபாடன் பாசைக்குத் தப்புவரா*

2 *யிர கண்டன் மூவராய கண்டன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு குடாதா*

3 ன் பாண்டிமண்டல ஸ்தாபனாசாரியன் சோழமண்டல பிறதிஷ்டா
சாரியந்
4 தொண்டமண்டலச் சண்டப்பிறசண்டன் ஈழமும் கொங்கும் யாள்ப்பா
5 ணபட்டணமும் கெசவேட்டை கண்டருளிய ராசாதிராசன் ராசபரமே
6 சுரன் ராசமாற்த்தாண்டன் ராசகெம்பீரன் ராசகுலதிலகன் ராசசமே
7 ளன் மன்னரில் மன்னன் மருவலர் கேசரி துட்டரில் துட்டன்
8 சிட்ட பரிபாலன் ஒட்டியர் மோகந் தவுள்த்தான் துலுக்கர் தலவிபா
9 டன் கட்டாரிச் சாளுவன் மலைக்கலங்கினு மனங்கலங்காதான்
10 வங்கி நாராயணன் வனுதையர்கள் மடலெழுது வருசுமுகன்
11 வச்ராயுதன் புனிதன் தேவர் காலாந்தகன் தத்துபரி நகுலன் தளங்கண்
12 டு தத்தளிப்பார் முண்டன் பஞ்சவற்ன்ன ராயர் பனுக்குவார் கண்டன்
13 பரதள விபாடன் பரிமள சுகந்தன் பட்டமானங் காத்தான் தொட்ட
வராத்தவ
14 னாதான் சொரிமுத்து வன்னியன் சொன்னமொளி தவறாதான் அன்னச
15 த்திர சோமந் அந்தம்பர கண்டன் அரசராவண ராமன் அடைக்
16 கலங் காத்தவன் அரசுநிலையிட்டு அரசராட்டந் தவுள்த்தான் அச்சந்
17 தவிள்த்தான் பரராச மனோகரன் பஞ்சகால பயங்கரன் பரிக்கு நகுலன்
18 வில்லுக்கு விசையன் சொல்லுக்கு அரிச்சந்திரன் ஆளுக்கு மன்மதன்
வாளுக்கு
19 அபிமன் விருது மன்னிய குடாரன் வீரப்பிறதாபன் வீரவெண்ம
பாமாலை
20 யான் வீரவெம் பரியான் வெத்தி மணவாளன் வேற்றரச தம்பிரான்
21 சத்துருக்கள் கண்டன் சமைய நாராயணன் சாடிக்காறர் கண்டன் சாமு
22 த்துரோகியள் முண்டன் சங்கித சாயித்திய வித்தியா வினோதன் அட்ட
23 லெட்சுமி பிறசன்னன் இரவிகுல சேகரன் தாலிக்கு வேலி தவஞ்சிங்
24 கம் இலங்சிங்கம் ஆத்துப் பாச்சி கடலில்பாச்சி தொண்டிய
25 ன்துறை காவலன் தேவை நகராதிபன் செங்காவிக் குடையான் சே

26 துக்கரைப் புலி சிவபூசா துரந்தரன் தனுக்கோடிக் காலலன் ராமனாத

27 சுவாமி காரியா துரந்தரன் வேதியர் காவலன் இந்து வதன இர

## இரண்டாம் பக்கம்

28 னியகெற்ப இரவிகுல சேகர சோமாதிபதி ரெகுநாதச் சேதுபதி கா

29 த்த தேவரவர்கள் பிறிதிக்கனையாக ராச்சிய பரிபாலனம் பண்ணி அரு

30 ளாநின்ற சாலிவாகனச் சகாற்த்தம் 1613ன் மேற் செல்லா

31 நின்ற பிறசோற்பத்தி வருடம் தையி மீ 15 தீ முருகப்பன் மடதற்ம

32 த்துக்கும் அக்கிரகாரத்துக்கும் கட்டளையிட்ட கிறாம்மாவது திருப்

33 பொற்கோட்டை பகையனி பிராந்தனி இந்தக் கிராம்ங்களில்

34 தற்மக் கிறாமம் திருப்பொற்கோட்டைக்கு எல்கையாவது கீள்பாற்

35 கெல்லை வலையன் சோளியன் கண்மாய்க்கும் ஏறணிக்கோட்

36 டைக் கண்மாய்க்கும் மேற்கு தென்பாற் கெல்லையாவது சிறுகைக்க

37 ண்மாய் வடக்கீட்க் கொம்பு வடக்கு மேற்பாற் கெல்லையாவது

38 ஆம்பட்டன்கோட்டை செட்டி ஏந்தல் புளியாண்டான் கரிசலுக்குக் கிள

39 க்கு வடபாற் கெல்லையாவது துக்காக்குடி ஆத்துக்கு தெற்கு பிரமதா

40 யக் கிறாமம் பகையெனி பிராந்தினிக்கு எல்கையாவது கீள்

41 பாக்கெல்லை பாப்பான்கோட்டை அமனிப்புளி யாலக்கண்மாயரு

42 க்கு மேற்கு தென்பாற்கெல்லை திடக்கோட்டை வடவயலுக்கு வ

43 டக்கு மேற்பாற்கெல்லை சாணானேந்தல் கொள்ளுடையார் தன்மத்து

44 நெய்மேனிக்கும் கிளக்கு வடபாற்கெல்லை அரையேனித் தென்வடல்
நவதே

45 வதேவன் ஊறணிக்கும் தெற்கு இன்னான் கெல்கைக்குள்பட்ட மா
வடை

46 மரவடை திட்டுத் திடல் பாம்பாடுபனை வடலி ஆவிரை கொழுஞ்சி
கீள்நோக்

47 க்கிய கிணறு நிதி நிட்சேபம் சகலமும் தற்மத்துக்கு அக்கிரகாரத்துக்கு சறு

48 வமானிபமாக கட்டளையிட்டபடியினாலே இதுவே தாம்புரதானப் பட்டயமா

49 க சந்திராதித்தவரை சந்திரப் பிறவேசம் மடதற்மமும்

50 அக்கிரகாரமும் உத்திரோத்திரமாக நடப்பிச்சுக் கொள்ளவும் இந்த தற்மத்

51 தை யாதாமொருத்தன் பரிபாலனம் பண்ணினவன் கோடிலிங்கப் பிற

52 திட்டை கோடிவிறுமப் பிறதிட்டையும் அசுவமேதை யாகம் பண்ணின ப

53 லத்தை அடைவராகவும் இந்த தற்மத்துக்கு அகிதம் பண்ணினவன் குருவை

54 கெங்கைகரையில் காராம்பசுவைக் கொண்ண பாவத்திலே போவா ராகவும்

# 41

# மேலச்சீத்தைச் செப்பேடு

| | | |
|---|---|---|
| இருக்கும் இடம் | : | டாக்டர் எஸ்.எம். கமால் அவர்கள் தொகுப்பு, இராமநாதபுரம் |
| அரசர் | : | இரகுநாத சேதுபதி காத்த தேவர் |
| செப்பேடு அளித்தவர் | : | அரசரின் தர்மபத்தினி காதலி நாச்சியார் |
| காலம் | : | 15—1—1694 |

**அமைப்பும் செய்தியும் :** இரகுநாத சேதுபதியாகிய கிழவன் சேதுபதியின் இரண்டாவது மனைவி காதலி நாச்சியார். இவரைப் பற்றிய வரலாற்றுச் செய்திகள் களத்தூர்ச் செப்பேட்டில் கூறப்பட்டுள்ளன.

இராமேசுவரம் கோயிலுக்கு மேலச்சீத்தைச் கிராமத்தைக் கொடையாக அளித்த செய்தி இச்செப்பேட்டில் கூறப்பட்டுள்ளது. மேலச்சீத்தை செம்பிய நாட்டில் உள்ளது. இதன் மேற்குஎல்லை குவளஞ்சாத்தான், தெற்கு எல்லை நொச்சிப் பொருத்து கிழக்கு எல்லை தெய்வச்ச நல்லூர்க்கால், வடக்கு எல்லை கடம்பன் குடியும் குடவேலியும் ஆகும்.

மேலச்சீத்தையிலிருந்துவரும் அனைத்து வருமானங்களையும் இராமேசுவரத்துக்குக் காதலி நாச்சியார் அளித்துள்ளார். கொடையாக

வழங்கப்பட்ட மேலச்சீத்தை இராமநாதபுரம் மாவட்டம் இராமநாதபுரம் வட்டத்தில் இராமநாதபுரம்-உத்தரகோசமங்கை வழியில் உள்ளது.

1710 ஆம் ஆண்டு கிழவன் சேதுபதி இறந்தவுடன் இச்செப்பேடு வழங்கிய காதலிநாச்சியார் தீப்பாய்ந்து உயிர்துறந்தார்.

## செப்பேடு

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1615 இதன்மேல் செல்லாநின்ற

2 ஸ்ரீமுக வருஷம் உத்திராயணத்து ஏமந்த ருதுவில் தை மாதம் கிருஷ்ண பட்சத்தில்

3 அமாவாசையும் திங்கட்கிழமையும் திருவோண நட்சத்திரமும் யித் யாதி யோகமும்

4 சகனி கரணமும் இப்படிக்கொத்த சுபதினமான மகோதய புண்ணிய காலத்தில் தேவை

5 நகராதிபன் சேதுமூலரட்சா துரந்தரன் வீரதண்டை

6 சேமத்தலை விளங்கிய தாலினான் சிவபூஜா துரந்தரன் சேதுகாவலன் வங்கிஷாபதியான

7 துகவூர் கூத்தம் காத்தூரான குலோத்துங்க சோழநல்லூர் விரையாத கண்டனிலிருக்கும்

8 இரண்ய கெர்ப்பயாஜி ரெகுநாத தேவர் புத்திரன் ரெகுநாத தேவர் பத்தினியாகிய

9 காதலிநாச்சியார் பண்ணின தன்மம் ராமேசுவரத்தில் ராமநாதசுவாமி அறக்கட்டளைக்

10 குத் தான சாசன பட்டையம் குடுத்தபடி இந்த தர்மத்திற்கு விட்ட கிராமமாவது

11 செம்பிய நாட்டில் குவளஞ்சாத்தானுக்குக் கிழக்கு நொச்சிப் பொருத் துக்கு வடக்கு

12 கிழக்கு தெய்வச்சநல்லூர் காலுக்கும் மேற்கு கடம்பன்குடிக்கும் குடவேலிக்கும்

13 தெற்கு இன்னான்கு எல்கைக்குட்பட்ட மேலச்சீத்தையும் அது உண்டாகிய நஞ்சை புஞ்சை

14 மாவடை மரவடை மேல்நோக்கிய மரம் கீழ்நோக்கிய கிணறும் குடி படை

15 பள்ளு பறை சகலமும் சர்வமானியாக இராமநாத பண்டாரம் பாரிச மாக கட்டளை

16 யிட்டபடியினாலே சந்திராதித்த காலம் வரையிலும் ஆண்டனுபவித்துக் கொண்டு தர்மம் நடத்தி

17 வரக்கடவோமாகவும் இந்த தர்மம் யாதாமொருத்தர் பரிபாலனம் பண்ணினபேர்

18 சிவலிங்கப் பிரதிட்டை பண்ணின தர்மத்தை அடைவாராகவும் இந்த தர்மத்திற்கு

19 அகிதம் பண்ணினபேர் கெங்கையிலும் சேதுவிலும் காராம் பசுவையும்

20 மாதா பிதாவையும் பிராமணரையும் வதை பண்ணின தோஷத்திலே போகக் கடவாராகவும்

21 இப்படி சம்மதித்து ரெகுநாதத் தேவர் பத்தினியாகிய காதலிநாச்சி யார் பண்ணின

22 தர்மத்துக்கு தான சாசனப் பட்டயம் கொடுத்தோம் ராமலிங்கம் துணை

# 42

# இளமனூர்ச் செப்பேடு

இருக்கும் இடம் : இளமனூரில் ஊர்ப்பொதுவாக இச்செப் பேடு உள்ளது

அரசர் : இரகுநாத சேதுபதி

காலம் : 21–5–1696

**அமைப்பும் செய்தியும்** : இளமனூர் முதல் செப்பேட்டைப்போலவே கிரந்தத் தொடர்களோ தெலுங்குத் தொடரோ இல்லாத செப்பேடு. முன் செப்பேட்டைப் போலவே இதிலும் சாலிவாகன சக ஆண்டு பிழையாகவே எழுதப்பட்டுள்ளது. முதல் செப்பேடு போலவே இச் செப்பேட்டிற்கும் காலம் கணிக்கப்பட்டது

இளமநேரியில் நிலம் பெற்ற சோளக சேருவைகாரன் மனைவி கொண்டொடிக்காரிக்குப் புல்லங்குடியில் உள்ள பள்ளர்களில் பெரிய கூத்தன் சின்னக் கூத்தன் ஆகிய இருவரும் அவர்களின் பங்காளிராக்கக் குடும்பன் ஆகியோரும் இரகுநாத சேதுபதி அவர்களின் ஆணைப் படி ஊரம்பலம் பகுதியை விலைக்கு விற்ற செய்தியை இச்செப்பேடு கூறுகிறது.

அம்பலம் விலைக்கிரையம் 50 பணம்; கண்மாய் வெட்டிக்கட்ட 100 பணம்; குடியேறும் கைக்கோளக்குடி மூன்றுக்கு குடி ஒன்றுக்கு 5

பணம் வீதம் 15 பணம்; குடியேறும் பள்ளர் குடி ஐந்துக்குக் குடி ஒன்றுக்கு மூன்று பணம் வீதம் 15 பணம் ஆக மொத்தம் 180 பணம் புல்லங்குடிப் பள்ளர் மூவரால் பெற்றுக் கொள்ளப்பட்டது.

100 பணத்துக்கு காடுகரை வெட்டிக் கண்மாய் வெட்டிக் கைக் கோளர், பள்ளர் ஆகியவர்களைக் குடியேற்றி மடைப்போக்கும் செய் கரையும் உண்டாக்கப்பட்டது. ஐந்துகலம் விதையளவுள்ள நன்செய், புன்செய் நிலமும் சோளக சேருவைகாரன் மனைவி கொண்டொடிக் காரி பெற்றாள்.

இதற்குத் திருவிடையாபிள்ளை, தம்பி மரைக்காயர், ஆவிலுக் கான், கைக்கோளர் ராமு, வனசங்கரி அம்மன் கோயில் பூசாரி புன மூப்பன், புள்ளாரு முக்குந்தன், கொட்டமடக்கி, காட்டுப்பிள்ளையார் கோயில் பூசாரி சேவுகப் பெருமாள் முக்குந்தன் ஆகியோர் சாட்சிக் கையெழுத்திட்டுள்ளனர்.

இச்சாதன முறி முதலில் ஓலையில் எழுதப்பட்டது என்பது முறியெழுதினேன் என்ற தொடராலும், பெரிய கூத்தன் கீறல், சின்னக் கூத்தன் கீறல், ராக்கக் குடும்பன் கீறல் என்ற தொடர்களாலும் அறி கின்றோம்.

இதை ஓலையில் எழுதியவன் கொத்துக் கணக்கு சுந்தரமய்யன், செப்பேட்டை வெட்டியவன் சேதுராம ஆசாரி.

கல்லும் காவேரியும் புல்லும் பூமியுமுள்ளவரைக்கும் ஆண்டனுப விக்கொள்ளக் கடவாராகவும் என்ற தொடரால் காவிரியாறு பாயாத நெடுந் தொலைவில் காவிரிபற்றிக் குறிப்பிடுவதால் கங்கை யைப் பொதுவாகக் குறிப்பதுபோல் தமிழகத்தில் காவிரி பொது புண்ணிய ஆறாகக் கருதிய தன்மை பெறப்படுகிறது. சேதுபதிகள் உருவாக்கிய ஒரு வாய்க்காலுக்கு இரகுநாதக் காவேரி என்று பெயரிட் டமை மற்றொரு செப்பேடு மூலம் தெரிகிறது.

சேதுபதி மன்னர்கள் புது ஊர்கள் ஏற்படுத்தி மக்களைக் குடி யேற்றிய தன்மை இவ்விரண்டு செப்பேடுகளால் நன்கு புலப்படுகிறது.

# செய்யுள்

## முதல் பக்கம்

### இராமசெயம்

1 செபத்திஸ்ரீ மகாமண்டலஷ்பறி ஆறிதிபாடனுத்தி
2 றன் பாசைக்குத் தப்பாத கண்டன் கொண்டனாடு கெ
3 காண்டு கொண்டாடு கொடாதான் பாண்
4 டிமண்டலப் பிறதாபசாறியான் சொறிமுத்து வ
5 ன்னியன் சேதுகாவலன் அடைக்கலங் காத்த
6 ான் சேதுமூல துரந்தரன் சேதுகாவலன் செம்
7 பி வளனாடன் ஈளமுங் கொங்கமும் ஆளுச்சுக் கெ
8 சை போட்டக் கொண்டறிளிய ராசாதிராசன் ரா
9 ச மாத்தாண்டன் ராச கெம்பீரன் ராமனாத
10 சுவாமி காரிய துறந்திரன் ரவிகுலத்திலகன்
11 தொட்டியர் முகந்தவுத்தான் துலுக்கர் முகந்தவுத்தான்
12 வெட்டுந்தலை காலிலே கட்டுங் கலங்காத கண்டன்
13 சேவல்க் கொடியுடையன் அனுமக் கொடியு
14 டையோன் அஞ்சாத கண்டன் அஸ்ட்ட லெ
15 ச்சிமி தனலெச்சிமி சாம்புக லெச்சிமி வீ
16 ரலெச்சிமி விசைய லெச்சிமி காந்தன் சொ
17 ல்லுக்கு அரிச்சந்திரன் வில்லுக்கு விசையன்
18 குடைக்கி கற்னன் பரிக்கு நகுலன் சாஸ்திர ச
19 ம்பிறம சகாதேவ குமணன் அசுபதி கெச
20 பதி நறபதி ரெகுனாதச் சேதுபதி ராச்சிய ப
21 ரிபாலனம் செலித்தி வருகையில் சாலிகவாக

22 ன சகாற்த்தம் 1523 மேல்ச் செல்ல

23 ானின்ற தாது ஹு வைய்காசி மீ 23 உ

24 இளமனேரியிலிருக்கும் சோளக சேருவை

25 காறன் பெண்ஞ்சாதி கொண்டொடிகாரிகி பு

26 ல்லங்குடியிலிருக்கும் பிரதனம் காறணம்பலம்

27 பாத்துசெழுத்தி வருகுறப் பள்ளரில் பெரிய கூத்த

28 ன் சின்னக் கூத்தன் ஷியான் பங்காளி ராக்கக்

29 குடும்பன் உள்ளிட்டார் அம்பலம் விலைகிறை

30 ய சாதன பண்ணிக்குடுத்த பரிசாவது ஷி புல்லங்

31 குடி கிறாமம் அம்பலம் கண்மாய் மடைப்போக்கு நஞ்சை

32 பிஞ்சை சகலமும் செய்விக்குறதற்கு பாங்கு கிறாம

33 மாயிருந்ததனாலேயும் தனாதிகாடு பத்தியிருப்பதினாலே

34 யும் பலபட்டடை குடியளில்லாமல் பள்ளர் குடியளி

35 ல் யேளுகுடியும் கைய்குளக்குடி மூணுகுடியும் இ

36 ருந்ததினாலேயும் மகாராச ராயஸ்த்திரி துரையவ

37 ர்கள் சம்ச்சேபதில் உத்தரவான புத்திப் பிறக்காரம்

38 கொண்டொடிகாரிக்கு நாங்களனவோரும் அறி

39 திவிலை கிறைய சாதனம் பண்ணிக் குடுத்து நா

## இரண்டாம் பக்கம்

40 ங்கள் றொக்கமாக வாங்கிக் கொண்டது வீரரா

41 யன் பொன் 50 பணம் ஷியூர்ச் சுண்மாய் வெட்டிக்கட்ட

42 பொன் 100 பணம் கைகுளக்குடி 1க்கு பொன் 5 பணம் வீதம்

43 குடி 3க்கு பொன் 15 பணம் பள்ளர்க்குடி 1க்கு பொன் 3 பணம்

44 வீதம் குடி 5க்கு பொன் 15 பணம் ஆக குடி 8க்கு வீரராயன்

45 பொன் 180 பணம் யிந்த னூற்றென்பது பொன்னும்
46 றொக்கமாக வாங்கிக் கொண்டதினாலே னூ
47 று பொன்னுக்கும் காடுகரை வெட்டிக் கண்மாயும்
48 வெட்டிக்கட்டி குடியளும் யேத்திவிச்சு மடைப்
49 போக்கும் செய்கரையும் உண்டுபண்ணித் தரச்
50 சொல்லியும் சறுவமானியம் அங்கல விரை
51 ப்பாடு மானிபம் சுபந்திர அம்பலம் சுபந்திர
52 ம் நஞ்சை புஞ்சை சகலமும் ஆதிசந்தரப்பிற
53 வேசம் கல்லுங்காவேரியும் புல்லும் பூமியுள்ள
54 வரைக்கும் ஆண்டனுபவித்துக் கொள்ளக் கடவா
55 றாகவும் இந்த அம்பலம் நஞ்சை புஞ்சை குலகரை
56 ஆளுமிடத்தில் தடையிடை நீக்கி நாங்களே சன
57 நீத்து குடுப்போமாகவும் இப்படிக்கு யெங்கள் ராசி
58 யம் அறிதி சாதனம் பண்ணிக்குடுத்தேன் சோளக
59 சேருவைகாறன் பெண்ஞ்சாதி கொண்டொடி
60 க்காறிக்கி பெரிய கூத்தன் சின்னக் கூத்தன் ராக்கத் குடு
61 ம்பன் இதற்கு சாட்சித் திருவிடையா பிள்ளை தம்பி
62 மரைக்கான் ஆவிலுகான் கைய்க்களர் ராமு வனசங்கரி
63 அம்மன் கோவில் பூசாரி புணமூப்பன் புள்ளா
64 ருழுத்தந்தன் தொட்டமடைக்கி காட்டுப் பிள்ளை
65 யார் தோவில் பூசாரி சேவுகப் பெருமாள் முக்க
66 ந்தன் இவர்களறிய யிந்த அம்பலசாதன முறியெ
67 ளுதினேன் கொத்துக் கணக்கு சுந்தரம்மய்யன் கைய்
68 யெளுத்து பெரிய கூத்தன் கீறல் சின்ன கூத்தன் கீறல்
69 ராக்க குடும்பன் கீறல் இந்த தாம்பிரசாதனம் வெ
70 ட்டினது சேதுராமு ஆசாரி உ

# 43

# திருப்புல்லாணிச் செப்பேடு

| | | |
|---|---|---|
| இருக்கும் இடம் | : | தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை அருங்காட்சியகம், இராமநாதபுரம் |
| அரசர் | : | இரகுநாத சேதுபதி கர்த்த தேவர் |
| காலம் | : | 20—3—1699 |
| அளவு | : | 28 செ.மீ. × 20 செ.மீ. |

**அமைப்பும் செய்தியும்** : துளையுடன் கூடிய பெரிய கைப்பிடியை உடைய செப்பேடு. கைப்படியில் இடையில் திருநாமமும் அதன் வலப் பக்கம் சக்கரமும் இடப்பக்கம் சங்கும் அழகிய வரைகோட்டுச் சிற்ப மாக வரையப்பட்டுள்ளன. முதல் பக்கம் நடுப்பகுதியில் உகுறி உள்ளது. தமிழ்த்தேதி தவறாக எழுதப்பட்டுள்ளது.

இது மன்னார் சலாபத்தில் முத்துக்குளிப்பவர்கள் திருப்புல்லாணி தெய்வச்சிலைப் பெருமாளுக்கும், தெற்பசயனம் (திருப்புல்லணை-திருப்புல்லாணி) இராமசுவாமிக்கும் ஒரு தோணி 5 கல்[1] நிபந்தமாக அளிக்கவேண்டும் என ஆணை வழங்கிய செப்பேடாகும். எனவே இக் கொடை சருவ முத்து மானியம் என்று அழைக்கப்படுகிறது ஒரு அமாவாசைப் புண்ணிய நாளில் இச்செப்பேடு அளிக்கப்பட்டது.

---

1) கல் என்பதுமுத்தைக் குறிக்கும்– 'கற்குளி மாக்கள்' (கல்லாடம், 42-2)

மன்னார் வளைகுடா பாண்டிநாட்டில் முத்துக் குளிப்பதற்கு மிகவும் ஏற்ற இடமாகும்.[2] சேதுபதி அரசர்கட்கு முத்துக்குளித்தலில் மிகவும் அதிகமான வருவாய் வந்தது.

திருநெல்வேலி, இராமநாதபுரம் கடற்கரைப் பகுதிகளில் உள்ள முத்துச் சலாபங்கள் மதுரை நாயக்கர் வசம் இருந்தன. மதுரை நாயக்கர்களால் அவைகளைச் சரியாக நிர்வகிக்க முடியவில்லை. இலங்கையிலிருந்து வந்த டச்சுக்காரர்கள் பாண்டி நாட்டுக் கடற் கரையில் முத்துக்குளிப்பதை மேற்கொள்ள முனைந்தனர். சேதுபதி அரசர்களை மதுரை நாயக்கர்கள் அங்கீகரித்து இராமநாதபுரம் மறவர் குல அரசமரபை ஏற்படுத்திய காரணங்களில் முத்துக்குளிப்பதைக் காப்பதும் ஒன்றாகும்.

முத்துக்குளிக்கும் உரிமையை மதுரை நாயக்கரிடமிருந்து சேது பதிகள் பெற்றனர். சேதுநாட்டுக் கடலில் உள்ள முத்துச் சலாபங்களில் முத்துக்குளிப்போர் முதல் நாள் கிடைக்கும் முத்துக்களைச் சேதுபதி கட்குக் காணிக்கையாகச் செலுத்த வேண்டும். இது மதுரை நாயக்கர் காலத்திலும் இருந்த விதியாகும்.

8–5–1694 ஆம் ஆண்டு கிழவன் சேதுபதிக்கும் டச்சுக்காரர் களுக்கும் முத்துக்குளிப்பது பற்றி ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி டச்சுக்காரர்களும் முத்துச் சலாபத்தில் முத்துக்குளிக்க அனுமதிக்கப் பட்டனர். சேதுபதிகளின் அரண்மனையான இராமநாதபுரம் இராமலிங்க விலாசத்தில் உள்ள ஒரு ஓவியம் கிழவன் சேதுபதி டச்சுக்காரர் களுடன் சேதுநாட்டுக்கடற்கரையைச் சேர்ந்த முத்துச் சலாபத்தில் அவர்கள் கோரும் சலுகைகள் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்து வதைச் சித்தரிக்கிறது. சேதுபதி அரசரிடமிருந்து முத்துச் சலாபங் களை டச்சுக்காரர்கள் விலைக்குப் பெற முயற்சி செய்தனர். சேதுபதி ஒப்புக்கொள்ளாததால் அவர்கள் முதல் நாள் குளித்தெடுக்கும் முத்துக் களைச் சேதுபதிக்கு மற்றவர்கள் போலவே அளிக்க முன்வந்தனர்.

சேதுபதி நாணயங்களில் ஒரு பக்கம் உள்ள மூன்று புள்ளிகள் முத்துச்சலாபங்களைக் குறிக்கின்றன என்பர். பாண்டிய நாட்டில் கொற்கையில் முத்துக் கிடைப்பது

---

2) பாரதியாரும் 'முத்துக்குளிப்பதொரு தென்கடலிலே' என்று பாடினார். தேசிய கீதங்கள்-பாரததேசம் என்னும் பாட்டு, எண் 4.

இப்பியீன் றிட்ட எறிகதிர் நித்திலம்
கொற்கையே அல்ல படுவது - கொற்கைக்
குருதிவேல் மாறன் குளிர்சாந் தகலம்
கருதியார் கண்ணும் படும்

என்ற முத்தொள்ளாயிரப் பாடலால் அறியவரும் செய்தியாகும். பாண்டிய நாட்டில் பழங்காலத்திலிருந்தே முத்துச் சலாபங்களில் முத்துக்குளித்தல் நடைபெற்றுள்ளது. அதிக வருவாய் உள்ள காரணத்தால் முதல் குலோத்துங்க சோழன் (1070-1120) பாண்டிய நாட்டு முத்துச் சலாபங்களைக் கைப்பற்றினான் என்று மெய்க்கீர்த்தி கூறுகிறது.

'முத்தின் சலாபமும் முத்தமிழ்ப் பொதியிலும்
மத்தவெங் கரிபடு மய்யச் சையமும்
கன்னியுங் கைக்கொண் டருளித் தென்னாட்டு
எல்லை காட்டி'

என்பது முதலாம் குலோத்துங்க சோழன் மெய்க்கீர்த்திப்பகுதியாகும்

முத்துக்குளியலுடன் சங்குகள் சேகரித்தும் வாணிகம் நடத்தப் பட்டது. முத்துராமலிங்க சேதுபதி அவர்கள் காலத்தில் சேதுநாட்டின் சங்குகளை விற்பதற்கென்றே கல்கத்தாவில் ஒரு அலுவலகம் இருந்தது. அதை தருமப் பிள்ளை என்பவர் கவனித்துவந்தார். 1794 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் 22000 சங்குகள் தேவிப்பட்டணம் வழியாகக் கல்கத்தாவிற்குக் கப்பலில் அனுப்பப்பட்டன. அவை அங்கு செல்ல 40 நாட்கள் ஆயின.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 ஸ்வஸ்தி ஸ்ரீ சாலிவாஹன சகாப்தம் 1619க்கு மேல் செல்லாநின்ற வெகுதானி

2 ய நாம ஸம்வத்யஸ்ரத்தில் உத்தராயணத்தில் சிசிர ருதிவில் பைங்கூனி மீ 25 உ

3 பூறுவ பட்சத்தில் பவுற்ண அம்மாவாசையும் ஆதித்த வாரமும் உத்திர நட்செத்திரமும்

4 சவுபாக்கிய நாம யோகமும் பத்திரவாகறணமும் பெத்த சுபதினத்தில் தேவை ந

5 கராதிபன் சேது மூலா துரந்தரன் ராமனாத சுவாமி காரியா துரந் தரன் சிவபூசா

6 துரந்தரன் பரராஜ சேகரன் பரராஜ போஜசிங்கம் இரவிகுல சேகரன் இரவி

7 மாற்த்தாண்டன் சொரிமுத்து வன்னியன் ஸ்வஸ்ரீமன் மஹாமண்ட லேசுவரன் அ

8 ரியராயிர தளவிபாடன் பாஷைத்தப்புவராயிர கண்டன் மூவராயிர கண்ட

9 ன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு கொடாதான் பாண்டிமண்டல ஸ்த

10 ாபனாசாரியன் சோளமண்டலப் பிறதிஷ்ட்டாபனாசாரியன் தொண்ட மண்

11 டல சண்டப் பிறசண்டன் ஈளமும் கொங்கும் யாள்ப்பாணராயன் பட்ட

12 ணமும் கெசவேட்டை கொண்டருளிய ராசாதிராசன் ராசபரமேசுவரன்

13 ராசமாற்த்தாண்டன் ராசகெம்பீரன் பரதளவிபாடன் உரிகோல் சுர தாணன்

14 அந்தம்பிற கண்டன் சாடிக்காறர் கண்டன் சாமித்துறோகிய மிண்டன்

15 இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகைமன்னர் சிங்கம் துரைராசர் பரசிங்கம்

16 ஆத்தில்பாச்சி கடலில்பாச்சி மதப்புலி அடைக்கலங்காத்தான் தாலிக்கி

17 வேலி சத்துருவாதியள் மிண்டன் வன்னியராட்டந் தவிழ்த்தான் மேவ

18 லர்கள் கோளரி மேவலர்கள் வணங்கும் இருதாளினான் வீரமகா கெம்

19 பீரன் கீர்த்திப் பிரதாபன் அரியமானங் காத்தான் தொண்டியன்து

20 றை காவலன் துர்கைவேந்தன் அனுமகேதனன் கொடைக்கு கற்ன

21 ன் பரிக்கு நகுலன் கருணா கடாச்சன் குன்றினுயர் மேருவிற்க் குன்றா

22 ய் வளைக்குனுல் பொரித்தவன் திலகனுதல் மடமாதர் மடலெழுத வரு

23 சுமுகன் விசையலெட்சுமி காந்தன் கலை தெரியும் விற்பன்னன் காமிநி கந்த

24 ற்ப்பன் வீரதண்டை சேமத்தலை விளங்குமிரு தாளினான்ராசகுலதிலகன்

25 ராசமனோ பயங்கரன் மன்னரில் மன்னன் மதடவற்நன வேந்தன் மன்

26 னர் சூடாமணி துட்டரில் துட்டன் துட்ட நெட்டூரன் அஷ்ட்ட திக்கு

27 மினாபயங்கரன் கட்டாரிசாளுவன் நவகோடி நாறாயணன் துலுக்கர் தள

28 விபாடன் துலுக்கர் மோகம்ந் தவிள்த்தான் ஒட்டியர் தளவிபாடன்

29 ஒட்டியர் மோகந் தவிள்த்தான் மலைகலங்கினும் மனம் கலங்காதான் அறி

30 வுக்கு அகஸ்தியன் அழகுக்கு வாலசீவகன் சொல்லுக்கு அரிச்சந்திரன் வி

31 ல்லுக்கு விசையன் மல்லுக்கு வீமசேனன் தாலிக்கி வேலி அன்னசத்திர

32 சோமன் அடியார் வேளைக்காறன் செம்பிவளநாடன் பூலோக தெய்வே

33 ந்திரன் செங்காவிக் கொடையான் தனுக்கோடி காவலன் கந்தமாதன கிரி

34 யான் அனுமக்கொடி கெருடக்கொடி நீலக்கொடி புலிக்கொடி சிங்கக் கொடி

35 செங்காவிக் கொடையும் அதின்மேல் விருது ஜெல்லியும் உடையவன் அ

36 சுபதி கெசபதி நரபதி சேதுபதி துகலூர்க் கூற்றத்துக் காத்தூரான குலோ

## இரண்டாம் பக்கம்

37 த்துங்க சோளநல்லூர் கீள்பால் விரையாத கண்டநிலிருக்கும் ஸ்ரீ

38 யிரண்ணியர் கெற்பயாதி ரெகுனாதச் சேதுபதி காத்த தேவரவர்கள் நம்

காணீயாட்சியான திருப்புல்லாணி தெய்வச்சிலைப் பெருமாள் நயி

ணாருக்தம தெற்பசயனம் ராமசுவாமிக்கும் மன்னார் சலாபத்தில் நம் முட

கல்லில் ஓரு தோணியும் அஞ்சு கல்லும் நிபந்தமாக முத்துக்குழித்துக் கொ

ள்ளக் சொல்லி சறுவமுத்து மான்னியமாக பங்கூனி உத்திரமான ரத உச்ஸ

வத்தில் சந்திரகிறண[1] புண்ணிய காலத்தில் ஆதி சேதுவில் தான பூர்வ மாக தாம்

பிரச்சாதனப் பட்டயம் பண்ணிக் குடுத்தபடியினாலே ஆதி சந்தராதித் தியருள்ள

வரைக்கும் தோணிபும் அஞ்சு கல்லும் நிபந்தமாக முத்துக் குழித்துக் கொ

ள்வார்களவும் இந்தப்பட்டையப் படிக்கி பரிபாலனம் பண்ணிக் கொண் டவர்

கள் காசியில் கெங்கையிலே கோடி சிவலிங்கப் பிறதிஷ்ட்டையும்

கோடி விஷ்ணுப் பிறதிஷ்ட்டையும் கோடி பிறம பிறதிஷ்ட்டையும் செய்

த புண்ணிய பலங்களை பெறுவார்கள் இதற்கு யாதொருவர் தோஷ மும் செய்

பவர்கள் கெங்கைக்கரையிலே காரம்பசுவைக் கொன்ற தோஷமும் பிற

மஹத்தியும் ஸ்ரீஹத்தியும் சிசுஹத்தியும் மாதுரு துரோகமும் பண்ணின தோ

ஷத்திலே போகக் கடவாராகவும் உ ஸ்வதத் தாத்வி குணம் புண்யம் பரதத்த

ாறு பாலநம் பரதத்தாப ஹாரேண் ஸ்வதத்தம் நிஸ்பலம் பவேது: தா

ந பாலந யோர்மத்யே தாநாத் ச்ரெயோறு பாலநம் தர்நாத் ஸ்வர்க்க மவா

ப்நோதி பாலநாத் அச்சுதம் பதம்: உ

---

படிக்க : 1. சூரிய கிரகண

# 44

# பட்டுக்கோட்டைச் செப்பேடு

| | | |
|---|---|---|
| இருக்கும் இடம் | : | தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை அருங்காட்சியகம், இராமநாதபுரம் |
| அரசர் | : | சேதுபதி காத்த தேவர் |
| காலம் | : | 13–11–1706 |
| அளவு | : | 24 செ.மீ × 16 செ.மீ |

**அமைப்பும் செய்தியும் :** இச்செப்பேடு துளையில்லாத கூர்மையான கைப்பிடியை உடையது.[1] ஆவுடையார் கோயிலுக்கான வரைகோட்டு ஓவியங்களைப் பெற்றுள்ளது. செப்பேட்டின் முதலிரு வரிகள் முகப்புப் பக்கத்திலுள்ள வரைகோட்டு ஓவியத்தின் மேலும் பக்கவாட்டிலும் எழுதப்பெற்றுள்ளன. பெரும்பாலும் கிரந்த எழுத்துக்கள் கலப்பில்லாத செப்பேடு.

கிழவன் சேதுபதி என்றும் இரகுநாத தேவர் பட்டுக்கோட்டை சுபாவைச் சேர்ந்த பகுதிகளில் வரும் வருவாயில் ஒரு பகுதியைத் திருப்பெருந்துறை ஆவுடைய பரமசுவாமிக்கும், சிவயோக நாயகியம்மனுக்கும் நந்தவனம், மடம் ஆகிய அறங்களுக்காக அளித்த செய்தியை இச்செப்பேடு கூறுகிறது.

---

*1. ARE, A. 40 of 1947.*

ஆவுடையார் கோவில், அறந்தாங்கி, கிளாறாநல்லி, நேப்பவத் தம், கட்டுமாவடி, சம்பை, சாளுவநாயக்கன் பட்டினம், பழங்கரை, தெட்சண ராச்சியம் உட்பட மேற்கண்ட பட்டுக்கோட்டைச் சுபாவைச் சேர்ந்த ஊர்களில் உள்ள ஆயத்துறை ஊழியர்கள், மணியகாரர், கணக்கப்பிள்ளைகள், வழிமுறைகாரர், தண்டல்காரர் தரகர், நகரத் தார் ஆகியோர் உச்சிக்காலக் கட்டளைக்குத் திருப்பெருந்துறைக் கோயிலுக்கு அவர்கள் சம்பளத்தில் மாதம் ஒன்றுக்கு ஒருநாள் சம்பள மும், மண்டபக் கட்டளைக்கு அரைவீசமும், பொதி ஒன்றுக்கு மகமை மாகாணிப் பணமும் அளிப்பதாகச் செப்பேடு எழுதித் தந்தனர்.

மாதாமாதம் கொடைமூலம் சேரும் பணத்தை வாங்கிக் கொண்டு பூசை கட்டளை நடத்தவேண்டும் என்று செப்பேட்டில் கூறப்பட் டுள்ளது. ஆயத்துறையில் புதியதாகப் பதவிக்கு வருபவர்கள் அனை வரும் இந்தத் தர்மத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்றும் அதனால் வரும் புண்ணியத்தைப் பெறவேண்டும் என்றும் செப்பேட் டில் எழுதப்பட்டது.

இந்த அறச்செயலைச் செய்தவர்கள் சிதம்பரத்தில் பதஞ்சலி வியாக்கிரபாதர் பெற்றபேறு பெறுவர் என்று கூறப்பட்டுள்ளது. மருத பண்டாரம் என்பவர் மகன் சின்னத் தம்பியாபிள்ளைவசம் சேதுபதியரச ரால் இச்செப்பேடு எழுதித் தரப்பட்டது.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 சேதுபதி காத்த தேவர் அவர்கள் உச்சிக் கட்டளைக்கு சின்னத்

2 தம்பியாபுள்ளை பாரிசமாக குடுத்தோம் தாம்பர சாதனம்

3 சுபஸ்ரீ விசையாப்புதைய சாலிவாகனச்

4 சகாத்தம் 1628 கலியுகம் 4807 இதின்மேல்

5 ச் செல்லாநின்ற விய ஹ தெட்சிணாயணத்தில் கார்த்திகை

6 மீ 13உ புதன் வாரணாள் பூசநட்செத்திரமும் பஞ்சமி

7 யும் கூடின சுபெதினத்திலே பட்டுக்கோட்டை

8 சுபெ ஆயத்தில் னாட்டாயத்தில்த் திருப்பெருந்துறை ஆ
9 விடைய பரமசுவாமிக்கும் சிவயோக னாயகிய
10 ம்மனுக்கும் நந்தவனத்துக்கும் மடத்துக்கும் தி
11 ற்ம சாசனப் பட்டையம் எழுதிக் குடுத்
12 தபடி தற்மசாசன பட்டையமாவது
13 ஆவிடையார் கோவில் அறந்தாங்கி
14 கிளாறாநல்லி நேப்பவத்தம் கட்டுமாவ
15 டி சம்பை சாழுவனாயக்கன் பட்டண
16 ம் பழங்கரை தெட்சண ராச்சியம்
17 உள்பட இதிலுண்டாகிய ஆயத்துை
18 ற மணியக்காறர் கணக்கப் பிள்ளைய
19 ள் வழிமறிகாறர் தண்டல்காறர் தரகர்
20 சகல சனங்களும் நகரத்தார் அன
21 வோரும் சம்மதிச்சு உச்சிக் காலக் க
22 ட்டளைக்கு எங்களுட சம்பளத்தில்
23 மாதம் ஒண்ணுக்கு ஒருனாளைச் சம்ப
24 ளமு மண்டபக் கட்டுக்கு அரை வீசமும்
25 பொதி ஒண்ணுக்கு மகமை மாகாணி
26 பணமும் குடுத்து சந்திராதித்தவ
27 ரைக்கும் இந்த தற்மப் பட்டையம்
28 குடுத்தபடி இந்தப்படிக்கு மாதாமாதம்
29 உண்டாகிய பணம் வாங்கிக் கொண்டு
30 தர்ம பரிபாலனம்மாக நடப்பித்து
31 வரக்கடாவோமாகவும் ஆயத்துறை

## இரண்டாம் பக்கம்

32 யாதாமொருவர் உத்தியோகத்துக்கு வந்த
33 வர்கள் இந்ததர்மத்தை யேத்துக்கொ
34 ண்டு முனச்சி பண்ணி இந்த திரவியம் விளா
35 மல் குடுப்பிச்சி அந்த சிவபுண்ணியத்தில் முத்தி
36 மோச்ச மனுவிப்பராகவும் இந்த தற்மத்துக்கு
37 யாதாமொரு அருத்தசிகாயம் சரீரசிகாயம்
38 பண்ணினார்களோ அவர்கள் காசியிலே சேதுவிலே
39 அசுவமேதை யாகம் பண்ணின பலனும் சி
40 தம்பரத்திலே பதஞ்சலி வியாக்கிறபாத மாமுனி
41 பெத்தபேறு பெறகடவோமாகவும் இதுக்கு
42 யாதாமொருவர் இசகேடு பண்ணினா
43 அவன் கெங்கை கரையிலே காரா
44 ம் பசுவை கொண்ண தோசத்திலு
45 ம் பிராமணனைக் கொண்ண தோசத்திலும்
46 போக கடவோமாகவும் இப்படிக்கு இந்த
47 தற்ம சாதனப் பட்டையம் யெழுதிக் குடுத்தே
48 தாம் மருதபண்டாரத்தின் மகன் சின்னத்த
49 ம்பியா பிள்ளைக்கு உ

# 45

# கடம்பங்குடிச் செப்பேடு

இருக்கும் இடம் : தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை அருங்காட்சியகம், இராமநாதபுரம்

அரசர் : ரகுநாத சேதுபதி காத்த தேவர்

காலம் : 21–9–1709

அளவு : 21 செ.மீ. × 13 செ.மீ.

**அமைப்பும் செய்தியும்** : இச்செப்பேடு துளையில்லாத சிறு கைப் பிடியை உடையது. கைப்பிடியில் உ குறி உள்ளது. செப்பேட்டின் முதல் பக்கம் மட்டும் மூன்றில் இரண்டு பங்கு அளவுக்கு எழுதப்பட்டுள்ளது. எழுத்துக்களின் கீழ் அழகிய பீடங்களின்மேல் நான்கு வரைகோட்டுச் சிற்பங்கள் வரையப்பட்டுள்ளன.

முதல் மூன்று வரைகோட்டுச் சிற்பங்கள் ஒரு குழுவாக உள்ளன. நடுநாயகமாகத் திருநாமம் வரையப்பட்டுள்ளது. திருநாமத்தின் வலப் புறம் சக்கரமும், இடப்புறம் சங்கும் வரையப்பட்டுள்ளன.

சற்றுத் தள்ளி சங்கின் இடப்புறம் திருப்புல்லாணித் தலவிருட்சம் பல கிளைகளுடன் அழகாக வரையப்பட்டுள்ளது.

எழுத்துக்களுக்கும் வரைகோட்டு ஓவியத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் அரைவட்ட வடிவுபோலும், எகரக்குறில் ஒற்றைக்கொம்பு போலவும் இரண்டு குறியீடுகள் உள்ளன. அவை சூரியன், சந்திரன் ஆகியவற்றைக் குறிப்பனவாகலாம்.

ஒரு அமாவாசைப் புண்ணிய நாள் அன்று கிழவன் சேதுபதி என்னும் இரகுநாத சேதுபதி அவர்களின் புண்ணியமாகக் கடம்பங்குடியிலிருக்கும் பூசாரி வெள்ளையன் மகன் பெரியணன் என்பவர் திருப்புல்லாணிக் கோயில் சீகாரியம் செய்பவர், கணக்குப் பண்டாரம் ஆகியோர் வசம் திருப்புல்லாணி தெய்வச்சிலைப் பெருமாளுக்குக் கடம்பங்குடியிலிருந்து தம் காவல் சீவிதத்தில் மூன்றில் ஒரு பங்கினை விற்பனை செய்ததை இச் செப்பேடு கூறுகிறது. ஊரில் மூன்றிலொரு பங்கு மாவிடை, மரவிடை, திட்டு, திடல், பனைபத்து, கிணறு, மரங்கள் எல்லாம் இவ்விற்பனையில் அடங்கும்.

அதற்காகப் பெரியணன் விலைக் கிரையமாகப் பெற்றுக்கொண்ட காசு ஆண்ணாடகம் விளங்கும் சுளிமின்னல் பொன் 40 ஆகும். 'அன்றாடு விளங்கும்' காசு என்று கல்வெட்டில் காணப்படும் தொடர்தான் இங்கு 'ஆண்ணாடகம்' என்று எழுதப்பட்டுள்ளது.

இச்செப்பேட்டில் காணும் 'இடைகூறு' என்ற சொல்லே இன்று இடையூறு ஆகிவிட்டது. கங்கைக்கரை, சேதுக்கரைக்கு இணையாகத் திருப்புல்லாணிச் சக்கரத் தீர்த்தக்கரையும் குறிக்கப்பட்டுள்ளது.

## செப்பேடு

1 சொஷ்ஸ்ரீ சாலிவாகன சகாத்தம் 1631 மேல் செல்லாநின்ற

2 விரோதி வரு புரட்டா மீ 20 உ கடம்பங்குடியிலிருக்கும் பூசே

3 ரி வெள்ளையன் மகன் பெரியணன் திருப்புல்லாணி கோயில்

4 செயகாரிபம் செய்வார் கணக்கப் பண்டாரியழுக்குத் தாம்பிர சா

5 தனம் குடுத்தபடி சாதனம்யாவது கற்த்தாக்கள் ரெகுநாத சேதுப

6 தி காத்த தேவர்கழுக்குப் புண்ணியமாக சுவாமி தெய்வச் சிலைப்

7 பெருமான் நயினாருக்கு என் காணியாட்சியான கடம்பங்குடி

8 காவல் சீவிதம் மூணிலொரு பங்கும் மாவிடை மரவிடை திட்

9 டுத் திடல் பனைப்பத்து கீள்நோக்கிய கிணறு மேல்நோக்கிய

10 மரம் சகலமும் விலைக்கிறயமாக ஆண்ணாடகம் விளங்கும்

11 சுளிமின்னல் பொன் 40 இந்தப் பொன் நாற்பதுக்கும் அறுதி வி

12 லையாய் ஆதிசந்திராதித்தவரை சந்திரப் பிறவேசம் ஆண்

13 டு அனுபவித்துக் கொள்ளக் கடவராகவும் இப்படிக்கு சம்ம

14 தித்து தாம்பிர சாதனம் குடுத்தேன் செயகாரியம் செய்வா

15 ர் கணக்கபண்டாரியழுக்கு பெரியணனோம் இதுக்கு யாதாமொ

16 ருவன் தடை இடைகூறு பண்ணினாலும் தினைத்தாலும் கங்கைக்
கரையிடே

17 லயும் சேதுவிலேயும் சக்கிரதீர்த்தக் கரையிலேயும் பிரம்பஅத்தி ஸ்ரீ அசுத்

18 தி அசுவத்தி கோவத்தி பண்ணின பாவத்திலே போகக் கடவராகவும்

# 46

# களத்தூர்ச் செப்பேடு

இருக்கும் இடம் : காரைக்குடி பேராசிரியை நா. வள்ளி அவர்கள் இல்லம்

அரசர் : ரகுநாத சேதுபதி காத்த தேவர்

காலம் : 20–11–1709

அளவு : 27 செ.மீ. × 15 செ.மீ.

**அமைப்பும் செய்தியும்** : துவாரமில்லாத அழகான கைப்பிடியில் 'ஸ்ரீ ஸுபமஸ்து' என எழுதப்பெற்றுள்ளது. கிரந்தத் தொடர்கள் சற்று மிகுதியாகக் கலந்துள்ள செப்பேடு. சேதுபதி அரசர்கள் செப்பேடுகள் பல கிடைத்திருப்பினும் சேதுபதி அரசரின் தேவிமார் அளித்த செப் பேடுகளில் இதுவுமொன்றாகும். மேலச்சீத்தைச் செப்பேடும் இவ்வம் மையார் அளித்ததேயாகும்.

கர்ம்பக்குடியில் கள்ளர் சமூகத்தில் மிகவும் செல்வாக்குப் பெற் றிருந்தவரும் பெரு வீரருமான ராயத் தொண்டைமானார் என்பவர் இருந் தார். 1639 இல் விசய நகர மன்னரின் இராமேசுவரத் தலயாத் திரைக்கு உதவி செய்து மன்னர் ஆதரவு பெற்றார். அவரால் 'ராய, எனப் பட்டம் அளிக்கப்பெற்றார். 1661 ஆம் ஆண்டு அவர் காலமா னார். அவருடைய மூத்த மகன் இரகுநாத ராயத் தொண்டைமானார் தஞ்சை மராட்டிய அரசிலும், சேதுபதியிடமும் மிகவும் செல்வாக்குப் பெற்றிருந்தார். இரகுநாத்ராயத் தொண்டைமானாரைத் தன் தளபதி

யாக்கிக் கொண்டார் கிழவன் சேதுபதி என்னும் இரகுநாத சேதுபதி.

இரகுநாத ராயத் தொண்டமானாருக்குக் காதலி என்ற சகோதரி ஒருவர் இருந்தார். இராமேசுவரம் அம்மன் பெயர் பர்வதவர்த்தனி ஆகும், அப்பெயரைத் தமிழில்'மலைவளர் காதலி' என்பர். மலைவளர் காதலி என்ற அம்மன் பெயரின் சுருக்கமே காதலி என்பதாகும்.[1]

செம்பிநாட்டு மறவர் குல திலகமான கிழவன் இரகுநாத சேதுபதி கரம்பக்குடி கள்ளர் குலப் பெருவீரன் இராயத் தொண்டைமானார் மகளும் இரகுநாதராயத் தொண்டைமானாரின் சகோதரியுமான காதலி நாச்சியாரை மணம் செய்து கொண்டார். கிழவன் சேதுபதியின் 47 மனைவிமாருள் இவர் இரண்டாம் மனைவியார். 1710 இல் கிழவன் சேதுபதி இறந்தபோது 47 மனைவிமார்களும் தீப்பாய்ந்து இறந்தனர்.

கிழவன் சேதுபதியான இரகுநாத சேதுபதியின் அரசியான காதலி நாச்சியார் குமரண்டூர் வீரம நல்லூரில் இருக்கும் வெங்கடேசுவரய்யன் மகன் சங்கர நாராயணய்யன் என்பவருக்கு ஒரு அமாவாசைப் புனித நன்னாளில் இராமேசுவரத்தில் தனுக்கோடிப் புண்ணியக் கரையில் தேர்போகி நாட்டில் உள்ள களத்தூரைக் கொடையாகத் தந்தார். களத்தூருக்கு அருகில் தேர்போகி என்ற ஊர் இன்றும் உள்ளது. களத் தூர் என்ற பெயரில் பல ஊர்கள் உள்ளதால் இவ்வூர் இன்றும் தேர் போகி களத்தூர் அதாவது டி. களத்தூர் என்றே அழைக்கப்படுகிறது.

களத்தூரின் கிழக்கு எல்லை கிள்ளிகுடி கண்மாய்: தெற்கு எல்லை தேர்போகியில் தேனாறு; மேற்கு எல்லை கொட்டகுடி வயல்: வடக்கு எல்லை திருத்தங்கூர் பாம்பாறு ஆகும். இன்றும் சுமார் 120 வீடுகளே உள்ள களத்தூருக்கு இதே எல்லைகள் வழக்கில் உள்ளன.

களத்தூருக்குக் காதலி நாச்சியாரின் பெயர் வைக்கப்பட்டு 'இரகு நாதக் காதலி ஆயிபுரம்' என்று அழைக்கப்பட்டது. அவ்வூரில் 55 பாகம் சங்கர நாராயண அய்யருக்குக் கொடையாக அளிக்கப்பட்டது.

---

1) சிலர் இப்பெயரைக் கதலி என்று எழுதியுள்ளனர், சிரஞ்சீவி, சேதுபதிகள் வரலாறு பக், 63; மீ. மனோகரன், கிழவன் சேதுபதி பக், 72. 'காட்டேரி' என்று தட்சிண இந்திய சரித்திரம் எழுதிய பகடால நரசிம்மலு நாயுடுவும், காத்தாயி, என்று மணிமேகலைப் பிரசுராலயத்தார் தங்கள் தமிழக வரலாற்றி லும் குறிக்கின்றனர்.

கொடையாகக் கொடுக்கப்பட்ட பகுதிக்கு அங்கு வழங்கிய அனைத்து வரிகளும் நீக்கப்பட்டது. அவ்வூர்ப் பகுதிகளான நன்செய், புன்செய், திட்டு, திடல், மாவடை, மரவடை, கிணறு, மரங்கள், குளம், குட்டம், ஏந்தல், பிறவடை, பாசி, படுகை, ஆவிரை, கொளிஞ்சி, பொதும்பு, ஊருணி, உடைப்பு, பள்ளம், குரப்பிணி, குளிப்பு, போன்ற வைகள் அடங்கிய பகுதிகள் உட்பட அனைத்துப் பகுதிகளும் கொடையாக அளிக்கப்பட்டன.

அங்கு வழங்கிய பள்வரி, பலவரி, மடத்துவரி, வேண்டுகோள், செம்புவிலை, காணிக்கை, வண்டில் மாடு, கொட்டிய எருது, சுரப்பிப்பசு, பெடிவிலாடம், நீராணிக்கம் போன்ற அனைத்து வரிகளும் நீக்கப் பட்டன.

இறுதியில் இக்கொடை நன்கு காக்கப்பட்டு நெடுங்காலம் நிலைக்க வெண்டும் என்ற தன் விருப்பத்தை அரசி காதலி நாச்சியார் தெரிவித்துள்ளார்.

## செம்பேடு

### முதல் பக்கம்

ஸ்ரீ ஸுபமஸ்து

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாஹந சகாப்தம் 1631 இதில்ச் செல்லாநின்ற விரோ

2 தி நாம ஸம்வத்ஸரத்தில் தெக்ஷிணாயநத்தில் ஸரம ரிதுவில் காத்திகை மீல் கிர்ஷ்ண

3 பட்சத்தில் அமாவாஸ்யும் ஆதித்யவாரமும் அநுராயர் நட்சத்திரமும் ப்ரிதிநாம யோக

4 மும் நாகவாகரணமும் ஸுபபோக ஸுபகரணமும் கூடிய புண்ணிய திநத்தில் தே

5 வை நகராதிபந் ஸேதுமூல ரட்சா துரந்தரந் ராமநாதஸ்வாமி கார்யா துரந்தரன்

6 ராமநாத ஸ்வாமி காரிய துரந்தரந் ஸிவபூஜா துரந்தரந் பரராஜ சேகரன்

7 பரராஜ கஜ ஸிம்ஹம் ரவிதுலசேகரந் ரவி மாத்தாண்டன் சொரி முத்து வன்

8 னியன் ஸ்வஸ்திஸ்ரீமந் மகாமண்டலேஸ்வரந் அரியராய தள்விபாடன் பாஷை

9 க்குத் தப்புவார் கண்டன் மூவராயிர கண்டன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு குடாதா

10 ன் பட்டமானங் காத்தான் துட்டராயிர கண்டன் புவநேக வீரன் வீரகஞ்சுகன் வீரவள

11 நாடன் வீரவெண்பாமாலை இளஞ்சிங்கந் தளஞ்சிங்கம் பகைமன்னர் சிங்கம் துரை

12 ராயன் ஆத்திற்ப்பாச்சி கடலில்ப்பாச்சி மதப்புலி அடைக்கலங் காத்தான் தாலிக்கு

13 வேலி சத்திருவாதியள் மிண்டன் வன்னியராட்டந் தழைத்தான் மேவலர்கள் கோளரி

14 மேவலர்கள் வணங்குமிரு தாளினான் வீரமஹா கெம்பீரன் கீற்திப் பிரதாபந் ஆரியம

15 ாநங்காத்தான் தொண்டியந்துறை காவலன் துர்க ரேபந்தன் அனும கேதநன் பரதள

16 விபாடன் குடைக்குக் கர்ன்னன் பரிக்கு நகுலன் அரசராவண ராமன் அடியார் வேளைக்கா

17 றன் உரிகோல் சுரதாநன் அந்தம்பிர கண்டன் மூவராயிர கண்டன் சாடிக்காறர் கண்ட

18 ன் ஸ்வாமித்துரோகியள் மிண்டன் பஞ்சவன்ன ராயராவுத்தன் பனு க்குவார் கண்டன் இ

19 வுளி பாவடி மிதித்தேறுவார் கண்டன் கண்டநாடு கொண்டு கொண்ட நாடு குடாதா

20 ன் பாண்டிமண்டல ஸ்தாபனாசாரியன் சோழமண்டலப் பிறதிட்டா பனாசாரிய

21 ன் பூர்வ தெட்சண பச்சிம உத்திர சப்த ஸ்மூத்திராபதி ஈளமுங் கொங்கும் யாட்பாண

22 பட்டணமும் கெசவேட்டை யாடியறுளிய ராசாதிராசன் ராசபர மேஸ்வரந் நவகோடி

23 நாராயணன் நவகண்ட சக்ரவத்தி மலை கலங்கிலும் மனங்கலங்காத கண்டன் கொட்ட

24 மடக்கி வையாளி நாராயணன் காவிக்குடையான் பரதநாடகப் பிரவீணன் கருணா க

25 டாட்சன் காமிநி கந்தற்பன் சத்யாபாஷா ஹரிச்சந்திரன் சங்கீத சாகித்ய வித்யா விநோதந்

## இரண்டாம் பக்கம்

26 வீரதண்டை சேமத்தலை விளங்குமிரு தாளிநான் ஸத்ரஜனா ஸேதுகா

27 வலன் வம்சாதிபநான துகவூர்க் கூற்றத்துக் காத்தூரான குலோத்துங்க சோழநல்லூர் கீழ்ப்ப

23 ால் விரையாத கண்டனில் இருக்கும் ஸ்ரீஹிரண்ய கர்ப்பயாஜி ரெகு நாத ஸேதுபதி காத்த தேவரவ

29 ர்கள் புத்ரன் ஸ்ரீஹிரண்ய கர்ப்பயாஜி ரெகுநாத ஸேதுபதி காத்த தேவரவர்கள் பத்நியா

30 ன ராய தொண்டமானார் புத்ரி ரெகுநாத ராய தொண்டைமானார் சஹோதரியரான கா

31 தலி நாச்சியாரவர்கள் நானா கோத்ரத்தில் நானா சூத்ரத்தில் நானா ஸாகாத்யாயியா

32 ளான ஷந்யமருஷ்ண கோத்ரத்தில் ஆபஸ்தம்ப ஸூத்ரத்தில் யஜுஸ் ஸாகாத்யாயியா

33 ன குமரண்டூர் வீரம நல்லூரில் இருக்கும் வெங்கடேஸ்வரய்யன் புத்ரந் ஸங்கரந

34 ாராயணய்யன் முதலாகிய பிராமணருக்கு ராமீஸ்வரத்தில் தநுஷ் கோடிக்கரை

35 ரயில் அக்ரஹாரத்துக்கு ஸ்ங்கரநாராயணய்யன் கய்யில் ஸ்ஹிரண்யோ தக தா

36 ரா பூர்வமாக ப்ரமாநம் பண்ணிக் கொடுத்தோம் கிராமமாவது தேர் போகி நாட்டி

37 ல் களத்தூருக்கு எல்கையாவது கிள்ளிகுடி கண்வாய்க்கு மேற்கு தேர்போகியி

38 ல்த் தேனாற்றுக்கு வடக்கு கொட்டகுடி வயலுக்கு கிழக்கு திருத்தங் கூர் பாம்பாற்றுக்குத் தெ

39 ற்கு இந்தப் பெருனான்கெல்கைக்குள்பட்ட களத்தூருக்கு ப்ரதி நாம மான ரெகுநாத

40 காதலி ஆயிபுரம் கணஸ்கைத்யபாகம் 55 இந்த பாகம் இதிலுள்ள நஞ்சை புஞ்சை திட்டுத் திட

41 ல் மாவடை மறவடை கீழ்நோக்கிய கிணறு மேல்நோக்கிய மரம் குள குட்டம் ஏந்தல் பிறவடை

42 பாசிபடுகை ஆவிரை கொழிஞ்சி தேன்படு பொதும்பு ஊறணி உடைப்பு மீன்படு பள்ளம்

43 குரப்பிணி குளிப்பு இதிலுள்ள பள்வரிப் பலவரி மடத்துவரி வேண்டு கோல் செம்புவிலை

44 சாணிக்கை வண்டில்மாடு கொட்டியளருது சுரவிப்பசு பெடி விலாடம் நீராணி

45 க்கம் யிதிலுண்டான சகலவரியும் தங்களுக்கு ஸர்வ மாந்யமாகக் கட்டளை இட்டபடியி

46 னாலே யிதிலுள்ள நிதி நிக்ஷேப ஜல தரு பாஷாணாக்ஷியாகாம்ய ஸித்த ஸாத்யமென்

47 று சொல்லப்பட்ட அஷ்டபோக தேஜ ஸ்வாமியங்களும் சந்திரார்க்கஸ் தாயியாக புத்ர பௌத்ர பா

48 ரம்பர்யமாக தானாதி விநிமய விக்ரயங்களுக்கும் யோக்யமாக ஆண்டனுபவித்து தர

49 க்கடவாராகவும் இந்த தம்மத்தைப் பரிபாலநம் பண்ணினபேர் கோடி சிவலிங்

50 க பிரதிஷ்டையும் கோடி பிரம்ம பிரதிஷ்டையும் பண்ணின ஸுகத் தையடைவாராகவும்

51 இந்த அக்ரஹாரத்துக்கு யாதாமொருவன் துரோகம் பண்ணினவன் கெங்கைக் கரையி

52 லே காராம் பசுவைக் கொன்ற பாவத்திலே போவானாகவும்

# 47

# இராமநாதபுரம் செப்பேடு

இருக்கும் இடம் : கோதண்ட ராமசாமி கோயில், இராமநாதபுரம்

அரசர் : இரகுநாத சேதுபதி காத்த தேவர்

காலம் : 7–1–1711

**அமைப்பும் செய்தியும்:** இராமநாதபுரத்தில் உள்ள கோதண்ட ராமசாமி கோயிலுக்கு அபிஷேகம், நெய்வேத்தியக் கட்டளைக்காகப் பலர் அளிக்கவேண்டிய கொடை விபரம் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

சத்திரியர், வைசியர், சூத்திரர் இவர்களில் அரசர் நிலையில் அதிகாரம் செய்பவர்களும், வெலமார், கவரைகள், மல்லக்கச் செட்டிகள் துளுவர், ராசபுத்திரர், கோமுட்டிகள், பட்டு நூல்க்காரச் செட்டிகள், தொட்டியர், சலுப்பர், வலசை இடையர், சேணியர், சிவியார், போவிண்டமார் ஆகிய பலவகைச் சாதிகளில் திருநாமம் தரித்த வைணவர்கள் குடிக்கு ஒரு பணம் தரவேண்டும்.

இடையர்களில் பெண்கொண்டு குடித்தனம் செய்பவன் குடிக்கு ஒருபடி நெய் கொடுக்கவேண்டும். இவையன்றிச் சில சீமைகளிலிருந்தும் ஊர்களிலிருந்தும். தனியாரிடமிருந்தும் குறிப்பிட்ட அளவு நெல் கொடையாக அளிக்கப்பட்டது.

---

டாக்டர் எஸ். எம். கமால், ஆவணம் 4, சனவரி 1994, பக், 55 – 58

இந்தப் பட்டயத்தை ஆனந்தநாத நாளங்கராயன் மகன் சின்னத் தம்பி நாளங்கராயன் எழுதியுள்ளான்.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாத்தம் 1632 யிதன்மேல் செல்லாநின்ற விக்கு

2 றுதிநாம சம்வச்சரமும் உத்தராயணமும் ஏமந்த ரிதுவும் மகர மாசமும் ஆதிவாரமும் உத்

3 திராட நட்சத்திரமும் சுபயோக சுகிர்தமும் அம்மாவாசியும் சுபயோக சுபகரணமும் பெற்ற மகா உதை

4 யத்தில் புண்ணிய காலத்தில் தேவை நகராதிபன் சேது மூல ரட்ஷா துரந்தரன் இராமநாத

5 சுவாமி காரிய துரந்தரன் சிவபூசா துரந்தரன் பரராச சேகரன் ரவிகுல சேகரன் ஸ்வஸ்தி

6 ஸ்ரீ மகாமண்டலேசுரந் கண்டநாடு கொண்டு கொண்டநாடு கொடா தான் ஈழ

7 மும் யாழ்ப்பாணமும் கெசவேட்டை கண்டருளிய ராசாதிராச பர மேஸ்வரன் ராசமார்த்தாண்

8 ட மகாராச மகாகப்பீரன் புவனேக வீரன் வீர கஞ்சுகன் அரச ராவண ராமன் அடியார் வே

9 ளைக்காரன் காட்டம் அடக்கி வையாளி நாராயணன் வீரவெண்பா மாலை தளஞ்சிங்கு

10 ம் பரராச மன்னர் சிங்கம் ஆற்றுப் பாய்ச்சி கடலில் பாய்ச்சி மதுப் புலி அடைக்கலங் காத்தான் தா

11 லிக்கு வேலி சத்துருவாதிகள் மிண்டன் பட்ட மானங் காத்தான் துஷ்ட ராயிர கண்டன் அந்தம்பர கண்

12 டன் சாடிக்காரர்கள் மிண்டன் சாமித்துரோயள் மிண்டன் பனுக்கு வார் கண்

13 டன் பஞ்சவண்ண ராய ராகுத்தன் மேவலர்

14 கள் கோளரி மேவலர்கள் வணங்கு

15 மிரு தாளினான் காவிக் குடையான்

16 கருணா கடாட்சன் சொரிமுத்து வன்னியன்

17 சத்திய பாஷா அரிச்சந்திரந் கொடைக்கு கர்ணன் பரத நாடகப் பிரவீணன் இவுளி பாவடி மிதி

18 த்தேறுவார் கண்டன் தளம்கண்டு தத்தளிப்பார் மிண்டன் பரதள விபாடன் அனுமகேதன

19 ன் சகல குணாபி ராமன் சங்கீத சாயிட்சிய வித்யா வினோதன் வீரைவள நாடன் வேதியர் காவல

20 ன் காமினி கந்தர்ப்பன் கலை தெரியும் விற்பனன் குன்றிலுயர் மேரு வில் குன்றா வளை

21 பொரித்தவன் திலக நுதல் மடவார்கள் மடலெழுத வருசுமுகன் நிஷ்கிரக வீரதண்

22 டை சேமத்தலை விளங்குமிரு தாளினான் தொண்டியந்துறை காவலன் துர்க ரேபந்தன் வை

23 கை வளநாடன் வன்னியராட்டந் தவிழ்த்தான் மதுரையார் ஆபத்ச காயன் வீரலட்சுமி கா

24 ந்தன் விசையலட்சுமி சம்பன்னன் சகல சாம்பிராட்சிய லட்சுமிநிவாசன் துகவூர் கூற்

25 றத்து காத்தூரான குலோத்துங்க சோழநல்லூர் கீழ்பால் விரையாத கண்டனில் இ

26 ருக்கும் சேதுபதி வங்கிஷாதிபனான ஸ்ரீ ஹிரண்ய கெர்ப்பயாசி ரவிகுல சேகர ரகுநாத சேது

27 பதி காத்த தேவரவர்கள் இராமநாதபுரம் முகவை கோதண்டராம சுவாமி அபிஷேக நெய்

28 வேத்தியக் கட்டளைக்கு தர்ம சாசனப் பட்டயம் குடுத்தபடி தர்ம சாசனமாவது நம்மு

29 டைய ராச்சியத்திலே இருக்கிற சூத்திரிய வைசிய சூத்திரர் முதலான ராசாக்கள் வெலமா

## இரண்டாம் பக்கம்

30 ர் கவரையள் மல்லக செட்டியள் தூளுவர் ராசபுத்திராள் கோமுட்டி யள் பட்டுநூல்

31 க்கார செட்டியள் தொட்டியர் சலுப்பர் வலசை இடையர் சேணியர் சிவியார் போ

32 விண்டமார் முதலான நானாவகைச் சாதியிலே திருநாமம் தரித்த பேருகளுக்கெல்லாம் கு

33 டிக்கு ஒரு பணமும் கோபால கட்டளை இடையர் பெண்கொண்டு குடியாக இருக்

34 கிறவனுக்கு குடிக்கு ஒருபிடி நெய்யும் வருஷந்தோறும் குடுத்துவரச் சொல்லிக் கட்டளை

35 யிட்டபடியினாலே அரண்மனைக் கட்டளை இயமனீசுவரம் நெல் 10 கலம் சின்னையா சீமை சி

36 க்கள் நெல் 30 கலம் சின்னனத் தேவர் சீமை மானாமதுரை நெல் 20 கலம் அடுக்க ... இளையான்கு

37 டி. நெல் கலம் அகிலாண்ட ஈசுபரிபுரம் நெல் 5 கலம் கண்ணனூர் நெல் 5 கலம் அஞ்சுகோட்டை

38 நெல் 5 கலம் உளையூர் நெல் 2 கலம் தேவர் நெல் 30 கலம் பவானு சங்கர ராமராசா நெல் 20

39 கலம் மாப்பிள்ளைத் தேவர் நெல் 5 கலம் கட்டைத் தேவர் நெல் 10 கலம் நாலு கோட்டை உடையா

40 த் தேவர் நெல் 20 கலம் முத்து ரகுநாத தேவர் நெல் 5 கலம் ரகு நாத சேர்வைக்காரன் நெல் 10

41 கலம் செல்லத் தேவர் நெல் 4 கலம் முத்து சேருவைக்காரன் நெல் 3 கலம் முத்தப்ப சேருவைக்கார

42 ன் நெல் 3 கலம் கிட்டினப்ப சேருவைக்காரன் நெல் 3 கலம் தாண்ட வந் சேருவைக்காரன் நெல்

43 5 கலம் கருப்பணன் சேர்வைக்காரன் நெல் 3 கலம் தெய்வகன்னி நெல் 2 கலம் ராமு சேருவைக்காரன்

44 ன் நெல் 3 கலம் சோமநாதன் சேருவைக்காரன் நெல் 2 கலம் அதியாரி பிச்சா சேருவைக்காரந் நெல்

45 2 கலம் அடப்பம் திருவுடையார் நெல் 1 கலம் ஊளியம் ரெகுநாத சேருவைக்காரன் நெல் கலம் 1

46 திருவுப்பிள்ளை நெல் 3 கலம் ஆவுடையப்பன் நெல் கலம் 1 ஆக நெல் 30 கலம் தெய்வச்சிலையய்யன்

47 நெல் கலம் 1 உலகப்ப மணியக்காரர் நெல் கலம் 5 இந்தப்படி தர்ம சாசனப் பட்டயம் கட்டளை

48 யிட்டபடியினாலே சந்திர் வர்க்கம் வரை பாரம்பரியம் குடுத்துவரக் கடவாராகவும்

49 தர்மத்தை பரிபாலனம் பண்ணினவர்கள் கோடி சிவலிங்க பிரதிட்டையும் கோடி விஷ்ணு பிரதிட்டையும் பண்ணின சுகிர்தத்தை அடைவாராகவும் இந்த

50 தர்மத்திற்கு அகிதம் பண்ணினவர்கள் காசி சேதுவிலே காராம்பசுவையும் பிரா

51 மணரையும் மாதா பிதாவையும் வதை பண்ணின தோஷத்திலே போகக்

52 டவராகவும் இந்தப்படிக்கு தர்ம சாசனப் பட்டயம் குடுத்தோம் கோதண்டராம

53 சுவாமிக்கு ஸ்ரீ ஹிரண்ய கர்ப்பயாசி சேதுபதி காத்த ரெகுநாதத்தேவர்

54 இந்தப்

55 படிக்கு தர்மசாசனப் பட்டயமும் எளுதினேந் ஆனந்தநாத நாளங்கராயந் புத்திரன்

56 சின்னதம்பி நாளங்கராயன் எழுத்து

# 48

# கோட்டக்குடிச் செப்பேடு

| | | |
|---|---|---|
| இருக்கும் இடம் | : | இராமநாதபுரம் சமஸ்தான அலுவலகம் |
| அரசர் | : | விசைய ரகுநாத தேவர் |
| செப்பேடு அளித்தவர் | : | அரசரின் தமையனார் முத்து வயிரவநாதத் தேவர் |
| காலம் | : | 16–11–1711 |

**அமைப்பும் செய்தியும்** : 1710 ஆம் ஆண்டு கிழவன் சேதுபதி காலமான பொழுது ஏற்பட்ட அரசியல் சூழ்நிலையில் அவரது தங்கை மக்களில் இளையவரான திருவுடையாத் தேவர் விசைய ரகுநாத சேதுபதி என்ற பெயருடன் அரசர் ஆனார். அவரது தமையனாரான முத்து வயிரவ நாதரும் முக்கிய அரசுப் பொறுப்பில் இருந்திருக்க வேண்டும் என்பது இக்கொடை மூலம் புலப்படுகிறது.

மறவர் சீமையில் உள்ள கடாரம் கொண்டானில் வாழ்ந்த சாந்தப் பிள்ளை மகன் சர்க்கரைப் புலவருக்குக் கோட்டக்குடி, கொந்தலான் வயல் ஆகிய ஊர்களை முத்து வயிரவநாத தேவர் கொடையாக வழங் கியுள்ளார்.

ஒரு முறை சர்க்கரைப் புலவர் இராமேசுவரம் திருக்கோயிலில் இராமாயண சொற்பொழிவு செய்தார். வேத பராகரும், இயல் இசை

நாடகத் தமிழ் வித்யாதரரும் இறுதிநாளான இராமர் பட்டாபிஷேக உரையன்று கூடியிருந்தனர். அச்சபையில் அவரைப் பாராட்டி இக் கொடை வழங்கப்பட்டது

காப்புரையில் இராமசாமி சரித்திரமாகிய இராமாயணத்தைக் கேட்டவர் அடையும் புண்ணியம் என்றும் இராமசாமி சரித்திரத்தை அசாத்தியமாக நினைத்தவர்கள் அடையும் தோஷம் என்றும் குறிப்பிடப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது இறுதியில் இராமகதையைக் கேட்போர் வைகுந்தம் பெறுவர் என்ற பொருளில் பாடல் ஒன்று பொறிக்கப்பட்டுள்ளது.

தஞ்சை மராட்டிய மன்னன் பிரதாபசிங் காலத்தில் (1739-1763) 'மிழலைச் சதகம்' என்ற நூலைப் பாடியவராக ஒரு சர்க்கரைப்புலவர் குறிக்கப் பெறுகிறார்.[1] வேதாந்த சூடாமணி என்னும் நூலுக்கு உரை இயற்றியோர் பெயரும் சர்க்கரைப் புலவர் என்று கூறப்படுகிறது. இவர் சேதுபதி மன்னரால் ஆதரிக்கப்பட்டவர். இவர் கல்விக் 'கடலைப் பருகும் முகில்' என்று குறிப்பிடப் பெறுகிறார்.[2]

ஓரியூர்ச் சீமை மாகாணத்தில் உள்ள அஞ்சு கோட்டைப் பத்தில் உள்ள நாட்டார், பிள்ளைமார், அம்பலக்காரர், முக்கந்தர் (வெற்றிலைக் காரர்) ஆகிய நாட்டார் பலர் 'பாகவத காவியப் பிரசங்கம்' என்று போற்றப்பட்ட சர்க்கரைப் புலவர் என்பவருக்கு 21-4-1748 அன்று திருவாடானை ஆதிரத்னேசுவரர் சந்நிதியில் ராமசரித்திரம் இராமாயணம் பரிசுக் கட்டளையாக ஆமரம் என்ற ஊரைக்கொடையாக அளித்தனர். பொன்னெட்டி மாலைச் சர்க்கரைப் புலவர் என்பவருக்குச் சேதுபதி அரசர்கள் மகமைக் கொடை அளித்துள்ளனர்,[3] தமிழ்நாவலர் சரிதையில் ஒரு சர்க்கரைப் புலவர் குறிக்கப் பெறுகிறார்[4]. சர்க்கரைப் புலவரின் மகன் சாந்துப் புலவர் என்பவர் மயூரகிரிக் கோவை' என்னும் பிரபந்தம் பாடியுள்ளார்.[5]

---

1. பெருந்தொகை 1753;
2. சேதுநாடும் செந்தமிழும் ப. 15;
3. ஆவணம் II ஏப்ரல், 1992 பக் 76-79;
4. தமிழ்நாவலர் சரிதை 232;
5. செந்தமிழ், தொகுதி 6. ப. 266,

# செய்யுள்

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1633 யிதிஸ்மேல் செல்லாநின்ற
சுபநாம

2 சம்வச்சரத்தில் தெட்சணாயனத்தில் கிரீஷ்ம ருதுவில் கார்த்திகை
மாசத்தில் சோமவாரமும் புன

3 ர்பூச நட்சத்திரமும் சித்தநாம யோகமும் பாலவாகரணமும் கூடின
சுபதினத்தில் தேவ

4 வ நகராதிபன் ராமனாத சுவாமி காரிய துரந்தரன் சிவபூஜா துரந்
தரன் பரராஜ சேகரன் பர

5 ராஜ கெச சிங்கம் இரவிகுலசேகரன் சொரிமுத்து வன்னியன் அரியராய
தளவிபாடன் வாக்கு

6 த் தப்புவாராத கண்டன் மூவராயர் கண்டன் கண்டநாடு கொண்டு
கொண்டநாடு கொடாதா

7 ன் பட்டமானங்காத்தான் துட்டராயரகண்டன் புவனேக வீரன் வீ
கஞ்சுகன் வீரவள

8 நாடன் பரத வித்தியாதரன் இயலிசை வித்யாதரன் வீரமார்த்தாண்
டன் பரதள விபாடன் உரி

9 கோல் சுரதானன் அந்தம்பர கண்டன் சாடிக்காரர் கண்டன் சாமித்
துரோகியள் மிண்டன்

10 பஞ்சவண்ணராய ராகுத்தன் பனுக்குவார் கண்டன் கொட்டமடக்கி
வையாளி நாராயணன் இவு

11 ளி பாவடி மிதித்தேறுவார் கண்டன் இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகை
மன்னர் சிங்கம் துரை

12 ராயன் ஆத்தில்பாச்சி கடலில்பாய்ச்சி மதப்புலி ஐவாப்புலி அடைக்
கலங் காத்தான் தாலிக்

13 கு வேலி சத்துராதிகள் மிண்டன் வன்னியராட்டந் தவிர்த்தான்
மேவலர்கள் கோளரி மேவலர்கள் வண

14 ங்குமிரு தாளினான் வீரகம்பீரன் தொண்டித்துறை காவல்லன் துர்க
ரேவந்தன் அனுமகேதனன் மீன

15 கேதனன் கொடைக்கு கர்ணன் பரிக்கு நகுலன் குன்றனை மேருவிற்
குன்றா வளைகுணில் பொறித்த

16 வன் திலதநுதல் மடமாதர் மடலெழுத வரு சுமுகன் வீசயலட்சுமி
காந்தன் சகலகலாவிற்பன்

17 னன் காமினி கந்தர்ப்பன் அட்டதிக்கு மனோபயங்கரன் துட்ட நிக்கிரக
சிட்ட பரிபாலன் வீர

18 தண்டை சேமத்தலை விளங்குமிரு தாளினான் சேது காவல்லன் வங்கு
சாதிபனான துகவூர்க் கூத்தத்து

19 காத்தூரான குலோத்துங்க சோழநல்லூர் கீழ்பால் விரையாத கண்ட
னிலிருக்கும் இரண்ய கர்ப்பயாஜி

20 ரெகுநாத தேவர் மருமகன் செம்பிநாட்டிலே திருஉத்தரகோச
மங்கையிலிருக்கும் கடம்பத்

21 தேவர் புத்திரன் விசயரகுநாத சேதுபதி சகோதரரான முத்து வயிரவ
நாத தேவரவர்கள் கிடா

22 ரத்திலிருக்கும் சாந்தபிள்ளை புத்திரன் ராமாயணப் பிரசங்கம் சர்க்
கரை புலவருக்கு இரா

23 மசுவாமி சன்னதியில் வேதபராகரும் இயலிசை நாடகத் தமிழ்
வித்யாதரரும் கூடிய சபையில்

24 இராமாயண பிரசங்கத்துக்குப் பரிசாக ராமசாமி பட்டாபிசேகத்தில்
கட்டளையிட்ட கிராமமாவது

25 வெள்ளாம்பத்தில் சாத்தணிவயலுக்கும் ஏம்பல் குளத்து காலுக்கும்
தெற்கு மஞ்சக்குடி புற

26 வாகிய வலையன் வயலுக்கும் கீழ்காவனூருக்கும் கிளக்கு விளத்தூரு
க்கு மேற்படியூர் புறவா

27 கிய பொத்தையன் வயலுக்கும் வடக்கு ஆசான் வயலுக்கும் ஏம்பல்
குளத்துக்கும் மேற்கு யின்னாங்

28 கெல்கைக்குட்பட்ட கோட்டகுடி கொந்தலான் வயல் நஞ்சை புஞ்சை
மாவடை மரவடை திட்டுத் திடல் மேல்

29 நோக்கிய மரம் கீள்நோக்கிய கிணறு நீரும் பாசி குடிபடை பள்ளு பறை இறைவரி ஊழியம் உலுப்

30 பை சகலசமுதாயப் பிராப்திகளும் நிதிநிக்ஷேபம் சலதரு பாஷாண விருத் விஷத் என்று சொல்லப்பட்ட

31 அஷ்டபோகதேச ஸ்வாமியங்களுக்கும் தான விக்கிரய விளியோகங் களுக்கு யோக்யமாக சந்திரார்க்க

32 சந்ததி பிரவேசம் புத்திர பவுத்திர பரம்பரையாக சர்வமான்யமாக ஆண்டனுபவித்து கொள்ளவும்

33 இந்த தருமத்துக்கு யாதாமொருவர் பரிபாலனம் பண்ணினபேர்கள் காசியிலேயும் மற்ற புண்ணிய

34 த் தலங்களிலேயும் பெரியோர்கள் சன்னிதானங்களிலேயும் ராமசுவாமி சரித்திரங்களாகிய இராமாயணத்தை

35 கேள்வியானவர்கள் எந்தப்பலனை அடைவார்களோ அந்தப் பலத்தை அடைவாராகவும் இந்த தருமத்துக்கு

36 அகுதம் பண்ணின பேர்கள் ராமசுவாமி சரித்திரத்தை யசாத்தியமாக நினைத்தவர்கள் போகின்ற தோசத்தி

37 லேயும் கங்கைகரையிலேயும் தனுக்கோடி கரையிலேயும் ராமபக்தரை யும் சிவபக்தரையும் இம்மிசை பண்ணினை

38 தோசத்தை அடைவாராகவும்

இறுவ ரம்பில் இராமன்என் றோர்உம்பர்
நிறுவர் என்பது நிச்சயம் ஆதலான்
மறுவின் மாக்கதை கேட்பவர் வைகுந்தம்
பெறுவர் என்பது பேசவும் வேண்டுமோ

# 49

# ஆய்க்குடிச் செப்பேடு

இருக்கும் இடம் : அழகர்கோயில் தேவஸ்தான நிருவாக அலுவலகம்

அரசர் : விசய ரகுநாத சேதுபதி தேவர்

காலம் : 22–7–1712

அளவு : 33 செ.மீ. × 17 செ.மீ.

**அமைப்பும் செய்தியும்** : இச்செப்பேட்டின் கைப்பிடி தாமரை மொட்டு வடிவில் துளையுடன் கூடியது [1] செப்பேட்டின் தொடக்கத்தின் மூன்றில் ஒரு பங்கு அளவுக்குப் பெரியதாக வைணவச் சின்னமான திருநாமம் சங்கு சக்கரம் ஆகியவை மிகவும் அழகிய முறையில் வரை கோட்டுச் சிற்பமாக வரையப்பட்டுள்ளன.

சுற்றிலும் விதானம் போன்று வரையப்பெற்றுள்ள இரட்டைக் கோட்டினுள் உயர்ந்த நிலையில் மையமாகத் திருநாமம் பெரியதாகச் சுமார் 6½ செ. மீ. உயரத்துக்கு வரையப்பட்டுள்ளது. நாமம் வடகலை அமைப்பில் உள்ளது. நாமத்தின் வலப்புறம் அழகிய பீடத்தில் சங்கும், இடப்புறம் அழகிய பீடத்தில் சக்கரமும் 8 செ.மீ உயரத்திற்குப் பெரிய அளவில் வரையப்பட்டுள்ளன.

---

*ARE. A.No. 1 of 1930*

நாமத்தின் கீழ்ப்பகுதியில் தொடங்கி செப்பேட்டில் கடைசிவரை மிகவும் பெரிய எழுத்திக்களில் 'ராமலிங்கம் துணை' எனத் தமிழில் எழுதப்பட்டுள்ளது.

வரைகோட்டுச் சிற்பம் உள்ள பக்கத்தில் தானத்தைக் காப்பது பற்றிய இரண்டு வடமொழிச் சுலோகங்கள் கிரந்த எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளன. இச்செப்பேட்டு வாசகத்தை ஓலைச்சுவடியில் முதலில் எழுதியவர் காமங்கோட்டை உடையினா பிள்ளை மகன் இராயசம் முத்து ஆதிநாராயண பிள்ளை என்பவர். இதனைச் செப்பேட்டில் பொறித்தவர் விசுவநாத ஆசாரி மகன் முத்தப்பாசாரி என்பவர்.

ஆய்க்குடி சுந்தனாவூர் என்ற இரண்டு ஊர்களில் இருந்த நிலங்களின் வருவாயில் அழகர் திருமலையில் இருக்கும் காசிப கோத்திரம் ஆஸ்வலாயன சூத்ரம் ரிக்வேதம் ஓதும் வேத மார்க்கப் பிரதிஷ்டாபனாச்சாரியர் உபய வேதாந்த ஆச்சாரியராக எழுந்தருளியிருக்கிற திருமலையாண்ட திருவேங்கடாச்சாரியார் மகன் திருவேங்கடாச்சாரி அவர்களுக்குப் பாதியும் அரண்மனைக்குப் பாதியுமாக அளிக்கப்பட்டு வந்தது.

22–7–1712 அன்று அமாவாசை நன்னாளில் திருவுடையாத் தேவர் என்னும் விசய ரகுநாத சேதுபதி தேவர் அவர்களின் மூத்த சகோதரரும், உத்தரகோசமங்கை கடம்பத் தேவர் அவர்கள் மகனுமான முத்து வயிரவனாதத் தேவர் அரண்மனைக்கு வரும் ஆய்க்குடி, சுந்தனாவூர் வருவாயில் பாதியை அழகர் சன்னிதியில் அன்னதானம் செய்யவும் அழகர்கோயிலிலும் அருகில் மதுரை வழியில் உள்ள அப்பன் திருப்பதி என்னும் வைணவத் தலத்தில் குளம் வெட்டவும் அளிக்குமாறு செய்தார்.

இச்செப்பேட்டிலிருந்து விசய ரகுநாத சேதுபதி கடம்பத்தேவரின் இளைய மகன் என்றும், அவர் உத்தரகோசமங்கையைச் சேர்ந்தவர் என்பதும் பெறப்படுகிறது. தம்பி சேதுபதி அரசராக்கப் பொறுப்பேற்றாலும் மூத்த சகோதரரும் அறச்செயல்களில் ஈடுபட்டார் என்பது தெரிகிறது.

அப்போது மதுரை நாயக்கர் ஆட்சிக் காலம் (1706-1732) என்றாலும் நாயக்க அரசர் பற்றிய எக்குறிப்பும் இச்செப்பேட்டில் இல்லை. நாயக்கர் ஆதிக்கம் மதுரைப் பகுதியில் குன்றியதை இதன் மூலம் அறிகின்றோம்.

அழகர்மலை திருமுருகாற்றுப்படையில் பழமுதிர்சோலை என்று அழைக்கப் பெறுகிறது. முருகப் பெருமானின் அறுபடை வீடுகளில் ஒன்று. திருமாலிருஞ்சோலை என்னும் இப்பகுதி பாண்டி நாட்டு வைணவத் திருப்பதிகளில் ஒன்று. நின்ற கோலத்தில இங்கு திருமால் எழுந்தருளியுள்ளார். திருமாலிருஞ்சோலை தாசர் என்றே வைணவ அடியார் ஒருவர்பெயர் பெற்றார். இம்மலையில் புண்ணிய சரவணம் பவகாரணி, இட்டசித்தி எனப்படும் மூன்று புண்ணிய தீர்த்தம் இருப்பதாகச் சிலப்பதிகாரம் கூறும். சிலம்பாறு என்பது இம்மலையில் தோன்றும் ஆறு. அழகர்கோயிலில் 18 ஆம்படிக் கறுப்பு காவல் தெய்வ மாக உள்ளார்.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1634 இதன்மேற்ச் செல்லாநின்ற நந்தன நாம சம்வத்சரத்தில் தெட்ணாயணத்தில் கிருஷ்ம கு

2 துவில் ஆஷாட மாசத்தில் கிருஷ்ண பட்சத்தில் அமாவாசியும் அங் காரக வாஸரமும் புஷ்ய நட்சத்திரமும் சோபநநாம யோக மும் பால

3 வாகரணமும் கூடின புண்ணிய காலத்தில் தேவை நகராதிபன் சேது மூல ரட்சா துரந்தரன் ராமநாதசுவாமி காரியா துரந்தரன் சிவபூஜா துரந்

4 தரன் பரராசசேகரன் ராஜகெஜலிங்கம் ரவிகுல கோத்ரன் ரவிவர்ம சொரிமுத்து வன்னியன் ஸ்வஸ்திஸ்ரீமந் மகாமண்டலேசுரன் ஆ

5 ரியரர் தள விபாடன் பாஷைக்குத் தப்புவராத கண்டன் மூவராயிர கண்டன் கண்டநாடு கொண்டு கொண்டனாடு கொடாதான் பட்ட

6 மானங் காத்தான் துட்டராயிர கண்டன் புவனேகவீரன் வீர சத்தீசு கன் வீரவளனாடன் வேதியர் காவலன் அரச ராவண ராமன் அடியா

7 ர் வேளைக்காரன் பரதள விபாடன் உரிகோல் சுரதானன் அந்தம்பர கண்டன் சாடிக்காறர் கண்டன் சுவாமி துரோகியள் மிண்டன் பஞ்சவ

8 ன்ன ராயராகுத்தன் பனுக்குவார் கண்டன் கொட்டமடக்கிய வையாளி னாராயணன் இவுழிபாவடி மிதித்தேறுவார் கண்டன் இளஞ் சிங்கம்

9 தளஞ்சிங்கம் பகைமன்னர்சிங்கம் துரைராயன் ஆற்றில் பாச்சி கடலில் பாச்சி மதப்புலி அடைக்கலங் காத்தான் தாலிக்குவேலி சத்து ராதியள் மின்

10 ண்டன் வன்னியராட்டந் தவிழ்த்தான் மேவலர்கள் கோளரி மேவலர் கள் வணங்குமிரு தாளினான் வீரமகா கெம்பீரன் கீர்த்திப் பிறதாபன்

11 ஆரியர் மானங் காத்தான் தொண்டியந்துறை காவலன் துர்க ரேவ ந்தன் அனுமகேதனன் கொடைக்குக் கன்னன் பரிக்கு நகுலன் பரத நாடக

12 ப்பிறவீணன் கருணா கடாட்சன் குன்றிஞ்யர் மேருவிற் குன்றாய் வளைகுணில்ப் பொறித்தவன் திலதநுதல் மடமாதர் மடலெ ழுத வருசு

13 முகன் காவிக் குடையான் விசயலட்சுமி காந்தன் கலைதெரியும் விற்பனன் காழிநகர் காமன் அட்டதிக்கு மனோபயங்கரன் துட்டர்

14 நிக்கரக சிட்டர்பரிபாலன் சங்கித சாகித்ய வித்யா விநோதன் வீர தண்டை சேமத்தளை விளங்கிய தாளினான் சகல சாம் ராஜ்ய ல

15 ட்சுமி நிவாசன் சேதுகாவலன் வீரபிரதிபனான துகவூர்க் கூற்றத்துக் காத்தூரான குலோத்துங்க சோழநல்லூர்க் கிள்பா

16 ல் விரையாத கண்டனியிலிருக்கும் ஹிரண்ய கர்ப்பயாஜி விசய ரகுனாத சேதுபதி தேவரவர்கள் ஜேஷ்டன் திருவுத்தரகோ

17 சமங்கையிலிருக்கும் கடம்பத்தேவர் அவர்கள் புத்ரன் முத்து வயிரவ னாத தேவர் அவர்கள் அழகர் திருமலையிலிருக்கும் காசிப

18 ப கோத்திரத்தில் ஆஸ்வலாயன சூத்ரத்தில் ரிக் சாகாத்யாயியாய ஸ்ரீமது வேதமார்க்க பிறதிஷ்டாபனாசார்யன் உபய வேதாந் தாசா

19 நியராயெழுந்தருளியிருக்கிற திருமாலையாண்ட திருவேங்கடாச்சாரி
யார் புத்ரர் திருவேங்கடாச்சாரியார் அவர்களுக்கு பூருவா
20 பூறுவமாக நடந்துவந்திருக்கும் ஆய்க்குடி சுந்தனாவூரில் அர்த்த மானி
பம் அரமனையைச் சார்ந்து நடந்துவந்த படியினாலே அந்
21 த அர்த்த மானியத்தில் வருகிற பலபாகத்தை ஸ்வாமி அழகர் சன்னி
தியில் அன்னதானம் பண்ணிவரச் சொல்லியும் சுவாமி
அழகர்கோ
22 விலுக்கும் அப்பன் திருப்பதிக்கும் மான்யத்திலே தடாகப்பிரதிஷ்டைப்
பண்ணிவித்து தடாகம் வெட்ட வேண்டியதுக்கு அந்த இ
23 ரண்டு கிராமப் பலவரிச் சொன்னாதாயம் வெட்டிவரி உண்டானதை
வருஷத்துக்கு வருஷம் தடாகம் வெட்டுவித்துவரச் சொல்லி
24 யும் சகிரோன்யதக தாராபூர்வமாக தானம்பண்ணிக் கட்டளையிட்ட
படியினாலே ஆசந்திராக்கஸ்தாகியாயி சந்திரப்பிரவேசம் புத்ர
25 பௌத்ர பாரம்பரையாய் தன்ம பரிபாலனம்பண்ணி ஆண்டு அனுப
வித்துக் கொள்ளக் கடவாராகவும் இந்த தன்மத்தை யாதா
26 மொருவர் பரிபாலனம் பண்ணினபேர்கள் காசியிலேயும் சேதுவிலேயும்
கோடி பிரம்ம பிரதிஷ்டையும் கோடி தேவ பிரதிஷ்டையும் ப
27 ண்ணின பாக்கியத்தையடைவார்கள் இந்த தம்மத்தை யாதாமொருவர்
அகுதம் பண்ணினபேர்கள் கெங்கைக் கரையிலே
28 யும் சேதுவிலேயும் மாதா பிதாவையும் குருவையும் காராம் பசுவையும்
பிராமணரையும் வதைபண்ணின தோஷத்திலேயும் போவான
29 ாகவும்

## இரண்டாம் பக்கம்

30 ஸ்வதத்தாத்வி குணம் புண்யம் பரதத்தாநு பாலநம்
31 பரதத்தாப ஹாரேண ஸ்வதத்தம் நிஷ்பலம் பவேத்: உ
32 தாந பாலந யோர்மத்யே தானா ச்ரெயோநு பாலநம் தா
33 நாத் ஸ்வர்க்கம் அவாப்நோதி பாலநாத் அச்சுதம் பதம்:
34 இந்த சாசனம் எழுதினேன் காமங்கோட்டை உடையினா பிள்ளை
35 புத்ரன் ராயசம் முத்து ஆதினாராயண பிள்ளை தாளைப்பத்திரப்
படிக்கு விசுவனாத
36 ஆசாரி புத்திரன் முத்தப்பாசாரி எழுத்து உ

# 50

# அத்தியூத்துச் செப்பேடு

இருக்கும் இடம் : அரசு அருங்காட்சியகம். எழும்பூர், சென்னை

அரசர் : முத்து விசைய ரகுநாத சேதுபதி

காலம் : 11—6—1713

**அமைப்பும் செய்தியும் :** சேது நாட்டில் ஒரு பிரிவான செவ்விருக்கை நாட்டில் உள்ள ஊர் அத்தியூத்து. இப்பொழுது அவ்வூர் இராமநாதபுரம் வட்டத்தில் உள்ளது.

கற்றறிந்த அந்தணர்கள் 14 பேருக்கு அக்கிரகாரமாக அத்தியூத்துக் கிராமம் சேதுபதி அரசரால் கொடையாகக் கொடுக்கப்பட்டது அத்தியூத்துக் கிராமத்துக்கு 'முத்து விசைய ரகுநாத சேதுபதி பூபால புரம்' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. பாம்பன் ஆற்றுக்கு மேல் கரையில் அரசர் பெயரால் அமைந்திருந்த சத்திரத்திற்கு மேற்கே அக்கிரகாரம் அமைத்துக் கொள்ள அனுமதி அளிக்கப்பட்டது. இக்கொடை தனுக்கோடிக் கரையில் அளிக்கப்பட்டது.

இக்கொடைச் சாசனத்தை இராயசம் வீரபத்திரன் என்பவர் எழுதியுள்ளார். நாளெங்காரியன் என்பவர் சாட்சிக் கையொப்பமிட்டுள்ளார். அத்தியூத்தின் கிழக்கு எல்லை தேர்போகி ஓட்டானேந்தல்

ஒருவானேந்தல், தெற்கு எல்லை திரு அத்தியூர் ஊருணி, மேற்கு எல்லை சீமை மஞ்சளோடை, வடக்கு எல்லை வயல், தெய்வேந்திரன் ஏந்தல், சமுத்திரம் என்பனவாகும்.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1635 இதன்மேல் செல்லாநின்ற

2 விசய நாம சம்வச்ரத்தில் உத்ராயண கிரீஸ்ம ரிதுவில்

3 மிதுன மாசத்தில் ... கிருஷ்ண பட்சத்தில் அமாவாசையும் சுபயோக சுபகரண

4 மும் அவிட்ட நட்சத்திரத்தில் பரிகநாம யோகமும் சா'து ஸ்தா

5 ரணமும் கூடிய புண்ணியகாலத்தில் தேவை நகராதிபன் சேது

6 மூல ரட்சா துரந்தரன் இராமநாதசுவாமி காரியதுரந்தரன் சி

7 வபூஜா துரந்தரன் பரராஜ சேகரன் பரராஜ கெச சிங்கம் இரவிகுல

8 சேகரன் இரவிவர்மன் சொரிமுத்து வன்னியன் ஸ்வஸ்திஸ்ரீமன் மக

9 ா மண்டலேசுவரன் அரியராயதள விபாடன் பாசைக்குத் தப்புவராய

10 கண்டன் மூவராய கண்டன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு

11 குடாதன் பட்டமானம் காத்தான் துட்டராயிர கண்டன்

12 புவனேகவீரன் வீரகஞ்சுகன் வீரவளநாடன் வேதியர் காவலன்

13 அரசராவணராமன் அந்தம்பிர கண்டன் சாடிக்காரர் மிண்டன் சு

14 வாமி துரோகியள் மிண்டன் பஞ்சவர்ணராய ராகுத்தன் பனுக்

15 குவார் கண்டன் வைகை வளநாடன் கொட்டமடக்கி வையாளி

16 நாராயணன் இவுளி பாவடி மிதித்தேறுவார் கண்டன் வீரவெண்ப

17 ாமாலை இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகைமன்னர் சிங்கம் மதுரைரா

18 யன் ஆத்தில் பாய்ச்சி கடலில் பாய்ச்சிமதப்புலி அடைக்கலங்காத்தான் தொண்டியந்

19 துறை காவலன் துர்க ரேப்நந்தன் அனுமகேதனன் குடைக்குக் கர்ணன் பர

20 த நாடகப் பிரவீணன் கருணாகடாட்சன் குன்றுயர் மேருவில்

21 குன்றா வளைகுணில் பொறித்தவன் திலதநுதல் மடமாதர் மடலெ

22 முதவரு சுமுகன் விசையபட்சுமி காந்தன் கலை தெரியும் விற்பன்ன

23 ன் காமினிகந்தப்பன் சத்தியபாஷா அரிச்சந்திரன் சங்கீத சாகி

24 த்திய ஷித்தியாவிநோதன் வீரதண்டை சேமத்தலை விளங்குமிரு தாளி

25 னான் சகல சாம்பிராச்சிய லட்சுமிவாசன் சேதுகாவலன் வங்கிஷ

26 ாதிபதியான துகவூர் கூத்தத்தில் காத்தூரான குலோத்துங்க சோழ ந

27 ல்லூர் கீழ்பால் விரையாத கண்டனிலிருக்கும் இரண்ய கெர்ப்ப

28 யாஜி ரெகுநாத சேதுபதி காத்தத்தேவர் புத்திரன் ஸ்ரீ இரண்ய கெர்ப்ப

29 யாஜி முத்து விசைய ரெகுநாத சேதுபதி காத்த தேவர் அவர்கள் அத்தியூத்திற்கு பிறதி

30 நாமமான முத்துவிசைய ரெகுநாத சேதுபதி பூபால புரத்திலிருக்கும்

31 நானா கோத்திரத்து நானா சூத்திரத்து நானா சாகத்தியரான அஷே

32 ஷ விர்த்துவரான மகாஜனங்களுக்கு பூதான தர்ம சாசனங் குடுத்த

33 தாவது பாம்பஆத்துக்கு மேல் கரையில் முத்து விசைய ரெகுநாத சேதுபதி

34 க்கு வாய்த்த சந்திரத்து மேல் பாரிசமாக அக்கிரகாரமும் கட்டியிருக்கச்

35 சொல்லி கட்டளையிட்ட கெண சங்கை பாகம் பதினாலும் மனை தர்ம

36 மாக பதினான்கு மனைக்கு கட்டளையிட்ட

## இரண்டாம் பக்கம்

37 கிராமமானது செவ்விருக்கை நாட்டில் தேர்போகி ஒட்டானேந்த

38 ல் ஒருவானேந்தலுக்கும் மேற்கு திருவத்தியூர் ஊருணிக்கு வடக்கு சீமை

மஞ்சளோடைக்கு கிழக்கு வயலுக்கும் தெய்வேந்திர னேந்தலுக்கும்

சமுத்திரத்துக்கும் தெற்கு இந்தநான்கு எல்லைக்குட்பட்ட

அத்தியூத்து கிராமத்துடன் சேர்ந்த ஏந்தல் பிறவிடை நஞ்சை புஞ்சை மா

விடை மரவிடை பட்டம் படுகை திட்டு திடல் மேல்நோக்கிய மரம் கீழ்

நோக்கிய கிணறு நீரும் பாசியும் குடி படை பள்ளு பறை சமுதாயப்

பிராப்தியும் நிதி நிஷேப ஜலதரு பாஷான தெட்சனம்

என்று சொல்லப்பட்ட அஷ்டபோக தேஜ சுவாமியங்களும்

தானாதி விநிமய் விக்கிரையங்களுக்கு யோக்கியமாக சகி

ரண்யோதக தாராபூர்வமாக ராம தனுஷ்க்கோடிக் கரையில் க

ட்டளையிட்ட படியினாலே சந்திராதித்தவரை சந்திரப் பிரவேஷம்

புத்திர பௌத்திர பாரம்பரை சர்வமானியமாக ஆண்டனுபவித்துக்

கொள்ளக்கடவாராகவும் இந்த தர்மத்தை யாதொருவர் பரி

பாலனம் பண்ணினவர்கள் கோடி சிவலிங்கப் பிரதிட்டையும் கோ

டி விட்ணு பிரதிட்டையும் கோடி விர்ம்மப் பிரதிட்டையும் பண்ணின சுகிர்

தத்தை அடையக்கடவாராகவும் இந்த தர்மத்துக்கு யாதொருவர்

அகிதம் பண்ணினவர்கள் கெங்கைக்கரையிலும் இராமசேதுவி

லேயும் மாதாபிதாவையும் பிராமணாளையும் குருவையும் பசுவை

யும் வதை பண்ணின தோசத்திலே போகக் கடவாராகவும் இந்தப்

படி சம்மதித்து இரண்ய கெர்ப்பயாஜி முத்து விசைய ரெகுநாத

சேதுபதி காத்த தேவர் அவர்கள் அத்தியூத்துக்கு பிரதி நாமமான முத்து

விசைய ரெகுநாத சேதுபதி பூபாலபுரம் அஷேஷவித்துவாரண மகா

ஜனங்களுக்கு தனுக்கோடிக் கரையில் பூதானம் தர்மசாதனம் பண்ணி குடுத்தோம்

இந்த சாசனம் எழுதினேன் தன்மராயப்பிள்ளை மகன் வீரபத்திரன் ராயச

ம் சொஸ்தலிகிதம் இந்தபடிக்கு நாளெங்காரியன் கையெழுத்து

# 51

# மன்னார் சலாபச் செப்பேடு

இருக்கும் இடம் : சமஸ்தான அலுவலகம், இராமநாதபுரம்

அரசர் : விசைய ரகுநாத சேதுபதி காத்த தேவர்

காலம் : 29—3—1714

**அமைப்பும் செய்தியும் :** மன்னார் சலாபத் துறை சேதுபதி அரசருக்குச் சொந்தமானதாக இருந்தது. அங்கு முத்துக் குளித்தல் நடைபெற்றது. முத்துக் குளித்தல் மூலமும், சங்குகள் எடுப்பதன் மூலமும் சேதுபதி அரசர்கட்குக் கணிசமான அளவு வருமானம் வந்தது.

சேதுபதி அரசர் இராமேசுவரம் இராமநாத சுவாமி, பர்வதவர்த்தனி அம்மனுக்கு அரசர் பெயரால் நடைபெறும் சுக்கிரவாரக் கட்டளை என்னும் பூசைக்குத் தமக்குச் சொந்தமான மன்னார் சலாபத் துறையில் மூன்று கல் குளிச்து அதில் வரக்கூடிய முத்துக்களை இராமேசுவரம் கோயிலுக்குக் கொடையாகக் கொடுக்க ஆணை பிறப்பித்தார்.

இந்தச் சாசனத்தை எழுதியவர் சென்னவீரப்ப பண்டாரம் மகன் ஏரப்பண்டாரம் என்பவர். இச்சேப்பேட்டிற்கு வேறு ஒரு நகல் செப்பேடு சென்னை எழும்பூர் அரசு அருங்காட்சியகத்தில் உள்ளது.

---

*1. ARE, A. 38 of 1947*

# செப்பேடு

## முதல் பக்கம்

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலிகவாகன சகாப்தம் 1636 இதன்மேல் செல்லாநின்ற செயவருஷம் சித்

2 திரை மாதம் 1ந்தேதி சோமவாரமும் திசமியும் ஸ்ரவண நட்சத்திரமும் சுபயோக சுபகரணமும்

3 பெத்த புண்ணிய தினத்திலே சுக ஸ்ரீமன் மகாமண்டலேசுரன் அரிய ராயதள விபா

4 டணன் பாசைக்கு தப்புவராயிர கண்டன் மூவராயிர கண்டன் கண்ட நாடு கொண்டு கொண்ட

5 நாடு கொடாதான் பாண்டி மண்டத் தாபனாச்சாரியன் சோழ மண்டலப் பிரதிஷ்டாபனாச்சாரி

6 யன் தொண்டமண்டல சண்டப் பிரசண்டன் ஈழமும் கொங்கும் யாழ்ப் பாண தேசமும் எம்மண்டல

7 மும் கெசவேட்டை கண்டருளிய ராசாதி ராசன் ராசபரமேசுரன் ராச மார்த்தாண்டன்

8 ராச உத்தண்டன் ராசகெம்பீரன் பரதள விபாடன் உரிகோல் சுர தானன் அந்தப்பரகண்டன்

9 பனுக்குவார் கண்டன் சாடிக்கார கண்டன் சாமத்துரோகியள் மூண்டன் துஷ்டரில் துட்டன் து

10 ட்ட நெட்டூரன் துஷ்டநிக்ரக சிஷ்ட பரிபாலன் புவனேக வீரன் வீர கஞ்சுகன் வேதியர் கா

11 வலன் அடியார் வேளைக்காரன் பட்டமானங் காத்தான் துஷ்டரா யிர கண்டன் இளஞ்

12 சிங்கம் தளஞ்சிங்கம் பகைமன்னர் சிங்கம் ஆத்துப் பாய்ச்சி கடலில் பாய்ச்சி மதப்புலி

13 அடைக்கலங்காத்தான் தொண்டியந்துறைக் காவலன் துர்க்க ரேபந்தன் வையாளி நாராயணன் இ

14 வுளி பாவடி மிதித்தேறுவார் கண்டன் வைகை வளநாடன் செம்பி வளநாடன் அனும

15 கேதனன் கருட கேதனன் வன்னியராட்டந் தவிழ்த்தான் கந்தனமாதன வெற்பினான் அர

16 சராவண ராமன் பரராச கேசரி பரராச கெஜ சிங்கம் பரராச சற்ப கருடன் ரவிவர்மன் ரவி

17 குலதிலகன் துலுக்கர்தள விபாடன் துலுக்கர் மோகத் தவிழ்த்தான் ஒட்டியதள விபாடன்

18 ஒட்டிய மோகம் தவிழ்த்தான் ஆரியர் மானங் காத்தான் மதுரை மானங் காத்தான்

19 நவகோடி நாராயணன் மேவலர்கள் கோளரி மேவலர்கள் வணங்குமிரு தாளினான்

20 வீரமுடி சேமத்தலை விளங்குமிரு தாளினான் குன்றினுயர் மேருவிற் குன்றா வளை

21 குணில் பொறித்தவன் திலதமுதல் மடவார் மடல்எழுத வருசுமுகன் வீரலட்சுமி விசய

22 லட்சுமி காந்தன் காமினி கந்தப்பன் கலைதெரியும் விற்பனன் சகல கலை வல்லவன் சத்

23 திய பாஷா அரிச்சந்திரன் சங்கீத சாகித்ய வித்யா வினோதன் சிவ பூசா துரந்தரன் இராமநாத

24 சுவாமி காரிய துரந்தரன் துகவூர் கூத்தத்து காத்தூரான குலோத்துங்க சோழநல்லூர் கீழ்பால் விரை

25 யாத கண்டனில் இருக்கும் இரண்ய கற்பயாஜி ரெகுநாத சேதுபதி காத்ததேவர் அவர்கள் குமாரர்

26 இரண்ய கற்பயாஜி விஜயரெகுநாத சேதுபதி காத்ததேவர் அவர்கள் வைகுண்டவாசியாய ரெகுவங்கிசோதைய

27 ரான ஸ்ரீராம ஸ்வாமிக்கு ராவணஹ் ஹத்தியா விமோசன ஸ்ரீ இராம நாத சுவாமி பாதம் பிரியாத

28 பர்வதவர்த்தினி அம்மனுக்கு தர்மசாதனப் பட்டயம் எழுதிக் கொடுத்த சாதனமாவது மன்

29 னார்ச் சலாபத் துறையில் நம்மிட சமஸ்தானத்திற்கு சலாபம் குளித்து வருகிறதில்

30 நம்மிட சமத்தானத்து சுக்கிரவாரக் கட்டளைக்கு மூணுகல் குளித்துக் கொள்ளச் சொல்லி பார்வதவர்த்தினி

31 அம்மன்சன்னதியில் தான பூர்வமாக தர்ம்ம சாதனம் பண்ணிக்கொடுத்த

32 படியினாலே சலாபம் குளிக்கிற வருஷந்தோறும் சுக்கிரவாரக் கட்டளைக்கு மூன்றுகல் குளித்து

33 அதில் வருகிற ஊதியம் நம்மூட கட்டளையை சாரப் பண்ணிக் கொள்ளச் சொல்லி கட்டளையிட்ட

34 படியினாலே ஆசந்திராக்தமாய் அனுபவித்துக் கொள்வாராகவும் இந்தப்படிக்கு தாம்பிர சாதனப்

35 பட்டயம் கொடுத்தேன் இராமநாதசுவாமி பார்வதவர்த்தினி அம்மனுக்கு இந்த தர்மத்தை

36 யாதாம் ஒருவர் பரிபாலனம் பண்ணிய பேருக்கு காசியிலேயும் சேதுவிலேயும் கோடி சிவலிங்க

37 பிரதிஷ்டை பண்ணின பலனையும் கோடி பிரம்மப் பிரதிஷ்டை பண்ணின பலனையும் அடையக்

38 கடவாராகவும் இந்த தர்மத்துக்கு யாதாம் ஒருத்தர் விக்கினம் பண்ணின பேர்கள் காசியி

39 லேயும் தனுக்கோடியிலேயும் ஸ்திரிவதை பண்ணின தோஷத்திலேயும் சிசுவதை பண்ணின

40 தோஷத்திலேயும் காராம் பசுவைக் கொன்ற தோஷத்திலேயும் போகக் கடவாராகவும் இந்த

41 தர்மசாதனம் எழுதினேன் சென்ன வீரப்பண்டாரம் மகன் ஏரப்ப பண்டாரம்

சங்கரன் துணை

# 52

# விளத்தூர்ச் செப்பேடு

இருக்கும் இடம் : இராமேசுவரம் இராமநாதசாமி கோயில்

அரசர் : விசய ரகுநாதச் சேதுபதி காத்த தேவர்

காலம் : 29—3—1714

**அமைப்பும் செய்தியும் :** இச்செப்பேட்டுக்கு மூலப்படி கிடைக்க வில்லை.[1] பர்கஸ், நடேச சாத்திரி ஆகிய இருவரும் 1886 இல் பதிப்பித்தபடியே இங்கு பதிப்பிக்கப்படுகிறது. செப்பேட்டின் இடை யில் 'சங்கரன் துணை' என்று கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளது.

29—3—1714 அன்று விசய ரகுநாத சேதுபதி காத்த தேவரவர்கள் இராமநாத சுவாமி பாகம் பிரியாத பருவதவர்த்தினி அம்மனுக்கு சுக் கிர வார அறக்கட்டளைக்காகவும், அர்த்தசாம பூசைக்காகவும், ஆடித் திருவிழாவுக்காகவும் விளத்தூர்க் கிராமத்தைக் கொடையாகக் கொடுத் ததை இச்செப்பேடு கூறுகிறது.

---

1. *Tamil and Sanskrit Inscriptions No. 10, pp. 83-87*

விளத்தூரின் எல்லைகள்: கிழக்குஎல்லை காவனூர்க் கண்மாய் உள்வாயில் எல்லைக் கல், ஆயிகுடி சின்னணத் தேவர் புன்செய்த் தட்டு; தெற்கு எல்லை செங்கானேந்தல் சின்னான் வேலைக்காறன் புன்செய்த்தட்டு, சிங்கனேந்தல் தென்கால்; மேற்கு எல்லை தேனாறு கூத்தன் தேனாற்றுக்கால் கவாத்தலை; வடக்கு எல்லை குளவிப்பாடியில் செல்வக் குடும்பன் புன்செய்த் தட்டு, ஆயிகுடிப் பொருத்துக் கரையில் சின்னத் தேவருடையார் புன்செய்த் தட்டு, ஆயிகுடி வாமதேவர் புன்செய்த் தட்டு, நரிகூட்டிப் பரம்பு ஆகியனவாகும்.

விளத்தூரின் மேற்படி எல்லைக்குட்பட்ட எல்லாவற்றையும் அளித்ததுடன் ஆயிகுடி உடையாத்தேவர் வைத்த தோப்பும் அதனைச் சேர்ந்த நிலங்களையும் அளித்தார்.

முன்பு இராமேசுவரம் கோயிலுக்கு சின்னத்தொண்டி, விளத்தூர், மண்கோட்டை சோழியக்குடி, சிருதவயல், கோடிப்புங்கு ஆகிய ஆறு ஊர்களும் மானிய ஊர்களாக நடைபெற்று வந்தது. சின்னத்தொண்டி நீங்கலாக மற்ற ஐந்து ஊர்களும் அறந்தாங்கியில் சேர்ந்து விட்டன.

சின்னத்தொண்டி எல்லைக்குட்பட்ட உள்க்கடை, ஏந்தல், மஞ்சள்க்கறைச்சான், விளக்கனேந்தல், வேலங்குடி, பன்றியேந்தல் கோடிவயல், பெருமாளேந்தல் இவை நீங்கலாக இப்போது இராமேசுவரம் கொடையாக நரிக்குடி புதுக்கண்மாய் மட்டும் நடந்து வந்தது.

சேதுபதியவர்கள் சின்னத்தொண்டியில் பஞ்சள்க்கறைச்சான் விளக்கனேந்தலை வடக்கு எல்லையாகவும், தளிமருங்கீற்கையிக் குள தர்மத்தையும் விசுவநாதன் ஏந்தலையும், கூத்தன் வயலையும் மேற்கு எல்லையாகவும், நவல்லக்குடி, நம்புதாளை உடையவர் தர்மத்தைத் தெற்கு எல்லையாகவும், பெரியதொண்டிக் கடையில் எல்லைக்கல், பள்ளிவாசல் இவைகளைக் கிழக்கு எல்லையாகவும் கொண்ட நிலப் பகுதியை இப்போது இராமேசுவரத்துக்குக் கொடையாக அளித்தார்.

இத்துடன் தெற்கு எல்லையாக சேமனூர் விரியானேந்தல் கண்மாய், வணதேவர் புதுக்கண்மாய், பெரியகுளம் கண்மாய், கிழக்கு வள நாட்டிலே கைகஞ்சம்பிள்ளை தோட்டம். ஆண்டி ஊரணி ஆகியவைகளையும், கிழக்கு எல்லையாகக் கொடிக்குளம் ரகுநாதக் குடும்பன் புன்செய், கொடிக்குளம் மடத்துக் கண்மாய், உள்க்கய்யில் மருதூர் உடையவர் கோயில் ஆகியவைகளையும், மேற்கு எல்லையாக, கொடிக் குளத்து வடகாலையும் வடக்கு எல்லையாக, பெரிய கூத்தன் ஊரணி

மேற்கு நக்கன்பெரியான் உள்வாய், களறிக்காலின் தென்மேற்குச் சம்மடி யேந்தல் எல்லை, புத்தூர்ப் பாதை, கொடிக் குளத்துக்கால் ஆகியவை களையும் எல்லையாக உடைய பெருநிலப் பகுதியையும் அளித்தார்.

இவை தவிர வேறு பல வருமானங்களையும் இக்கட்டளைக்கு உரியதாகச் சேதுபதி அரசர் செய்தார்.

அவையாவன:

1. சுக்கிரவார தினத்தில் சுவாமி சன்னிதி, விசுவநாதசுவாமி சன்னிதி, அம்மன் சன்னிதி, மற்ற சுற்றுச் சன்னிதி இவைகளின் உண்டியலில் வரும் ஆதாயம்

2. உள்நாட்டு உபயம்

3. சுத்துக் கோயில் சேது மாகாளியம்மன் நம்ம நாச்சியம்மன் கோயிலில் வருகிற உபயமும் பொன், வெள்ளி, பட்டு, பருத்தியும்

4. அரசர் அளிக்கும் காணிக்கையும் பொன், வெள்ளி, பட்டு, பருத்தியும்

5. பரிசை பட்டமார் வருடந்தோறும் கொடுக்கிற அறுபது பொன் னும் அவர்கள் வகையில் விபகார வகையில் வரும் அபராத ஆதாயம்

6. பரிசை பட்டமார்களுக்கு தோணிச் சீட்டு அளிக்கும் வகையில் வரும் தொகை

7. தலத்துப் பாடிகாவல் வருடந்தோறும் கொடுக்கும் ஏழு பொன்

8. தரகன் சுதந்திரம்

9. தவசம், தானியம் முதல் அளக்கப்பட்டவற்றிற்கு நூறு மரக் காலுக்கு ஒரு மரக்கால் எண்ணெய், தேன், நெய் ஆகியவற்றிற்கு நூறு படிக்கு ஒரு படி

10. எண்ணப்பட்டவற்றிற்கு நூற்றுக்கு ஒன்றேமுக்கால்; உள்ளூர் வியாபாரிகள் வாங்குகிறவற்றிற்கு நூற்றுக்கு ஒன்று

11. நிறுக்கப்பட்டவற்றிற்கு நூறு பலத்திற்கு ஒன்றேகால் பலம்

12. மகமை பத்துப் பொன்னுக்கு அரைப்பணம்

13. பாம்பன் இக்கரைப்பட்டு வருகிற நெய்தமை ஒன்றுக்கு ஒன்றரையே மாகாணிப்பணம்

14. பாம்பன் முதல் இராமேசுவரம் வரை நிற்கிற காளைமாட்டை அக்கரை ஏற்றுவது, சூலம்போடுவது ஆகியவற்றில் வரும் வருவாய்

15. அரண்மனைப் பட்டியில் உண்டான பசு

16. அகதியாய் நிற்கிற பசு

17. அனாதைப் பிணங்களின் ஆதாயம்

18. அரசர் முத்திரைக் குண்டான சும்பளம், சாதம், சுதந்திரம்

19. கோயில் கட்டளையில் ஆடித் திருநாள் பரிவட்டம் சுதந்திரம்

20. இக்கொடைக்குரிய சேதுபதி அரசர் மண்டபம் பரிவட்டச் சுதந்திரம்

21. புன்னைத் தோப்பில்ஆயித் தோப்பு நிலமும், முத்துத் திருவுடையாத்தேவர் தோப்பும்

22. இராமநாத பண்டாரம் விட்டுக் கொடுத்த தரைவைக் கொப்பை காட்டுக் கொல்லை

23. சின்னய்யா அவர்கள் நந்தவனம்

24. பவானி சங்கர மகாராசா அவர்கள் விட்ட தோப்பு

25. கந்தமாதன பருவத வழியில் விசய இரகுநாதப் பெரிய தோப்பு ஆகிய இவைகளில் வரும் வருமானம் அனைத்தும் என்றென்றும் இராமேசுவரத்துக்குக் கொடையாக அளிக்கப்பட்டது.

முத்துக் கருப்பனாசாரி என்பவர் இச்செப்பேட்டை வெட்டியுள்ளார்.

இச்செப்பேட்டுச் செய்தியுடன் கீழ்வரும் மற்றொரு கொடைச்செய்தியும் இரண்டாம் பக்கத்தின் இறுதிப் பகுதியில் வெட்டப்பட்டுள்ளது.

2-8-1750 அன்று முத்து விசய ரகுநாதச் சேதுபதி காத்த தேவர் அவர்கள் இராமேசுவரம் பர்வதவர்த்தனி அம்மனுக்கு சேமனூர் சிறு தேட்டு அரண்மனையில் அனுபவித்துவந்த முப்பத்தாறு கல விரைப் பாடு நன்செயும் ஆறுகல விரைப்பாடு புன்செயும் கொடையாக அளித்தார்.

இதைக் காப்பவர்களும், அழிப்பவர்க்கும் செப்பேட்டில் எழுதிய படி நன்மை தீமை கிடைக்கும் என்று கூறப்பட்டுள்ளது மதுரை உத் தண்ட மூர்த்தி நாலங்கராய ஆசாரி மகன் சடையப்பன் இச்செப்பேட் டுப் பகுதியை எழுதியுள்ளார்.

## செப்பேடு

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாஹந சகாப்தம் 1636 இதின்மேல்ச் செல்லாநின்ற ஜய வரு சித்தி

2 ரைமீம் 1 உ சோமவாரமும் தசமியும் ஸ்ரீவண நக்ஷத்திறமும் சுபயோக சுபகரணம்பெத்த புண்ணிய

3 தினத்தில் ஸ்ரீமன் மஹாமண்டலேசுரன் அரியராயிரதள விபாடன் பாசைக்குத் தப்புவராத கண்

4 டன் மூவராய கண்டன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு குடா தான் பாண்டிமண்டல ஸ்தாபனா

5 சாரியான் சோளமண்டல பிரதிஷ்ட்டாபனாசாரியான் தொண்ட மண்டல சண்டப்பிரசண்டன்

6 ஈளமும் கொங்கும் இயல்பான தேசமும் யெம்மண்டலமும் கெசவேட் டை கண்டருளிய ராஜாதிரா

7 ஜன் ராஜபரமேசுவரன் ராஜமார்த்தாண்டன் ராஜஉத்தண்டன் ராஜ கெம்பீரன் அரியராயிரதள வி

8 பாடன் உறிகுலசுற்தானன் அந்தம்பர கண்டன் பனுக்குவார் கண்டன் சாடிக்காறர் கண்டன் சுவாமி

9 துரோகியள் முண்டன் துஷ்டரில் துஷ்டன் துஷ்ட நிட்டுரந் துஷ்ட நிக்ரஹ சிஷ்டபரிபாலன் புவனாதி

10 வீரன் வீரகஞ்சுகன் வேதியர் காவலன் அடியார் வேலைக்காரன் பட்டமானங் காத்தான் துஷ்டராயி

11 ரகண்டன் இறாஜசிங்கம் தாமசிங்கம் பகைமன்னர் சிங்கம் ஆத்துப் பாச்சி கடல்பாச்சி மதப்புலி அடை

12 கலம் காத்தான் தொண்டியன்துரை காவலன் துர்க நேவந்தன் வய்
யாளி னாறரயணன் இவுளி பாவடி

13 மிதித்தேறுவார் கண்டன் வைகைவளநாடன் செம்பி வளநாடன்
அனும கேதனன் கெருட கேதனன்

14 வன்னியராட்டந் தவிற்தான் கெந்தமாதன வெற்பினான் அரசராவண
ராமன் பரராசகேசரி பரராச

15 கெச சிங்கம் பரராச சற்ப கெருடன் ரவிவர்மன் றவிகுலதிலகன்
துலுக்கர்தள விபாடன் துலுக்கர்

16 மோகந் தவிழ்த்தான் ஒட்டியர் தளவிபாடன் ஒட்டியர் மோகந் தவிழ்த்
தான் ஆரியமானங் காத்தான்

17 மதுரைமானங் காத்தான் நவகோடி நாராயணன் மேவலர்கள் கோளறி
மேவலர்கள் விளங்கும்மிரு

18 தாளினான் வீரமுடி சேமத்தலை விளங்குமிரு தாளினான் குன்றிலுயர்
மேருவை குன்றா வளைகுணில்

19 பொறித்தவன் திலத நுதல் மடவாற்கள் மடலெல்லது வருசுமுகன்
வீறலெட்சுமி விஜையலெட்சுமி

20 காந்தன் காமினி கந்தற்ப்பன் கலைதெரியும் விர்ப்பனன் சகலகலை
வல்ல

21 பன் சத்தியபாசா அரிசந்திரன் சங்கீத சாயுஜிய வித்தியா வினோதன்
சிவபூஜா துறந்தரன்

22 இறாமநாதசுவாமி காரிய துறந்தரனான துகவூர்க்கூத்தத்து காத்தூ
றான குலோத்துங்க சோள

23 நல்லூற் கீள்பால் விறையாத கண்டனிலிருக்கும் ஹிரண்ணிய கர்ப்ப
பாஜி ரெகுநாத

24 சேதுபதி காத்த தேவரவர்கள் புத்ரன் ஹிரண்ணிய கர்ப்பயாசி விசைய
ரெகு

25 நாத சேதுபதி காத்த தேவரவர்கள் னவகுண விலையரயர் ரெகுவங்கு
ஷோதையரான ஸ்ரீராம

26 சுவாமிக்கு ராவண ஹத்யாவிமோச ஸ்ரீராமநாத சுவாமி பாதம்
பிரியாத பருவதவர்த்தினி யம்மனுக்கு

27 சுக்ரவாற அரைகட்டளைக்கு தற்மசாசன பட்டயம் குடுத்தபடி பட்டயமாவது அற்தஜாம அபிஷேக

28 நெவேத்தியம் பூஜைக்கி ஆடி திருவிளா சுக்கிறவாற உச்சபத்துக்கும் கட்டளையிட்ட கிறாமமாவது காவ

29 ஞூர் கண்மா யுள்வாயில் எல்லைகல்லுக்கும் ஆயிகுடி. சின்னனதேவர் புன்செய் தட்டுக்கும் மேற்கு செங்கா

30 னேந்தல் சின்னான் வேலைகாறன் புன்செய் தட்டுக்கும் சிங்கனேந் தலுக்கும் தென்காலுக்கும் வடக்கு தேனாருக்கும்

31 கூத்தன் தேனாற்றுக்கால் கவாதலைக்கும் கிளக்கு குளவிப்பாடி இல் செல்வகுடும்பன் புன்சை

32 தட்டுக்கு ஆயிகுடிப் பொருத்து கரை இல் சின்னதேவருடையார் புன் செய் தட்டுக்கும் ஆயிகுடி வாமதே

33 வர் புஞ்சைதட்டுக்கு நரிகூட்டி பரம்புக்கு தெற்கு இன்னாங்கெல்கை குள்ப்பட்ட விளத்தூர் ஊறது

34 புரவு குடிபடை பள்ளுப்பறை உண்டாகிய வரிகோர்வையும் நிதி நிக்ஷேப செல தரு பா

35 ஷாணமென்று சொல்லப்பட்ட அஷ்டபோக தேச சுவாமியங்களும் சற்வமானியமாக பண்ணி

36 ஆயிக்குடி உடையாத்தேவர் வைச்ச தோப்பு நிலமும் அதிலுண்டாகிய மாவடை மரவடையும்

37 சின்னதொண்டி விளத்தூர் மண்கோட்டை சோளியக்குடி சிருதவயல் கோடிப்புங்கு இந்தப்

38 படி முன்னாதியில் நடந்துவருகிறது இப்போது சின்னதொண்டி நீங்கலாக மத்த அஞ்சுகிறாம

39 மும் அறந்தாங்கி வட்டகையிலே கூட்டிருக்கிறபடியினாலே சின்னத் தொண்டி யெல்கை உள்

40 கடை யேந்தல் மஞ்சள்க்கறைச்சான் விளக்கநேந்தல் வேலங்குடி பன்றி யேந்தல் கோடிவயல் பெருமா

41 னேந்தல் நீங்கலாக யிப்போது நடக்கிற சின்னதொண்டி நரிக்குடி புது கண்வாயி உள்பட இவள

42 ஆக்கும் யெல்கைக்கும் பிறவு மஞ்சள்க்கறைச்சான் விளக்கநேந்தல் பன்றியேம்பலுக்கு தெற்கு மே

43 ற்கு தளி ருங் கிற்கையிக் குளம் தர்மத்துக்கும் விசுவனாத நேந்தலுக் கும் கூத்தன் வயலுக்கும் கிளக்கு தெ

44 ற்கு நவல்லக்குடி நம்பிதாளை உடையவர் தர்ம்மத்து வடக்கு கிளக்கு பெரியதொண்டிக் கடையில்

45 யெல்லகல்லுக்கும் பள்ளிவாசலுக்கும் மேற்கு இந்த னாங்கெல்கையிக் குள்பட்ட நன்சை புன்சை மாவடை

46 மறவடையும் சேமனூர் விரியாநேந்தல் கண்வாயிற்கு வணதேவர் புதுக்கண்வாயி பெரியகுளத்து கண்

47 வாயிக்கும் கிளக்கு வளநாட்டிலே கைகஞ்சம்பிள்ளை தோட்டத்துக்கும் ஆண்டி ஊரணிக்கும் வடக்கு

48 கொடிக்குளம் ரெகுநாதகுடும்பன் புன்செய்க்கு கொடிக்குளம் மடத்துக் கண்வாயி உள்கையில் மறுதூர் உடை

49 யவர் கோயிலுக்கு மேற்கு கொடிக்குளத்து வடகாலுக்கு கிளக்கு பெரியகூத்தன் ஊரணிக்கு மேற்கு

50 நக்கன்பெரியான் கண்வாயி உன்வாயிக்கு களறிகாலுக்கு தென்மேற்கு சம்மடியேந்தல் யெல்கைக்கும்

51 புறவுக்கும் புத்தூர் பாதைக்கும் கொடிக்குளத்துக்காலுக்கும் தெரிக்கு இன்னாங்கெலலைக்கு உள்ப்பட்ட நஞ்

52 சையும் மாவடை மரவடையும் சர்வமானியமாக இறாமீசுவரம் ஸ்தலத்தில் கட்டளையிட்டது சுக்கிர

53 வாரதினத்தில் சுவாமி ஸன்னதியிலேயும் விசுவநாத சுவாமி ஸன்னதி யிலேயும் அம்மன் ஸன்னதியிலே

54 யும் மத்த சுத்து ஸன்னதியிலேயும் உண்டியலில் வருகிற ஆதாயமும் ருத்திறாபிஷேகமும் பஞ்சாமுருதமும்

55 பட்டுப் பருத்தி பொன் வெள்ளி பொட்டுக்காரை முதலாகிய உபயமும் உள்நாட்டு உபயமும் சுத்துகோ

56 வில் சேது மாகாளியம்மன் நம்மநாச்சியம்மன் கோயிலிலே வருகிற உபயமும் பொன் வெள்ளி

57 பட்டு பருத்தியும் நாம் சன்னதியிலே போடுகிற காணிக்கை பொன் வெள்ளி பட்டு பருத்தியும் பரிசை

58 பட்டமார் வருஷாந்திரம் கொடுக்கிற அறுபது பொன்னும் அவர் வகை யிலே விபகார விசேஷ

59 வகையிலே வருகிற அபராதம் வகை ஆதாயமும் அவர்களுக்கு தோணிச் சீட்டு கொடுக்கிறதும் ஸ்த

60 லத்து பாடிகாவல் வருஷாந்தரம் குடுக்கிற வேளு பொன்னும் தறகன் சொவந்திரம் தவச தர்ணியம்

61 முதல் அளக்கப்பட்டதுக்கெல்லாம் நூறு மறக்காலுக்கு ஒருமறக்காலும் யெண்ணெய் தேன் நெய்

62 முதலாகியதுக்கு நூருக்கு ஒருபடியும் யெண்ணப்பட்டதுக்கெல்லாம் நூற்றுக்கு ஒண்ணேமுக்காலும்

63 ஸ்தலத்து வியாபாரியள் வாங்குகிற யெண்ணப்பட்ட சறக்குக்கெல்லாம் நூற்றுக்கொண்ணும் நிறுக்கப்

64 பட்ட சறக்கு வகையிக்கு நூற்றுக்கொண்ணேகால் பலமும் மகமை பத்துப்பொன்னுக்கு அரைப்பண

65 மும் பாம்பன் இக்கரைப்பட்டு வருகிற நெய்தமை ஒண்ணுக்கு ஒண்ணரையேமாகாணி பணமும்

66 பாம்பன்முதல்கொண்டு இராமீசுவரத்தில் நிக்கிற காளைமாட்டை அக்கறை யேத்துவித்துக்கொள்கிற

67 தும் காளைமாட்டுக்குச் சூலம்போட்டு அதிலே வருகிற உபயமும் அறண்மனைப் பட்டியில் உண்டா

68 கிய பசுவும் அகுதியாயி நிற்கிற பசுவும் அனாதப் பிறேதமாயிப்போன பேர்வளியிலே இருந்த ஆதா

69 யமும் நம்முடைய முத்திரைக்குண்டாகிய சம்பளம் சாதம் சொவந் திரம் கோயில்கட்டளையில் ஆடித்தி

70 ருநாள் பரிவட்ட சுவந்திறமும் நம்முடைய மண்டபத்து பரிவட்ட சுவந்திரமும் புன்னைத்தோ

71 ப்பில் ஆயிதோப்பு நிலமும் முத்துத்திருவுடையாத் தேவர் தோப்பும் இறாமநாத பண்டாரம் விட்டுக்

72 குடுத்த தரவைக் கொல்லையும் காட்டுக்கொல்லையும் சின்னய்யா அவர்கள் நந்தவனமும் பவானிசங்கர

73 மஹாராஜா அவர்கள்விட்ட தோப்பும்கந்தமாதன பருவத மாற்கத்தில் விஜய ரகுநாத பெரிய

74 தோப்பும் இதுகளிலுண்டாகிய மாவடை மறவடையும் இதுவெல்லாம் தானா பூர்வமாக கட்டளை

75 யிட்டபடியினாலே சந்திறாதித்திய ஸந்ததிப்பிரவேசம் உள்ளமட்டும் ஆண்டனுபவித்து வரக்கடவா

76 றாகவும் யாதாமொருத்தறிந்த தற்மத்தை பரிபாலினம் பண்ணின பேருக்கு காசியிலேயும் சேதுவிலேயும்

77 கோடி லிங்கப்பிறதிஷ்டை பண்ணினப்பலத்தையும் கோடி பிரம்மப் பிறதிஷ்டை பண்ணின பலத்தையும்

78 அடையக்கடவாறாகவும் இந்த தருமத்துக்கு யாதாமொருத்தர் விக் கினம் பண்ணின பேர்கள் காசியிலேயும்

79 தநிஷ்கோடியிலேயும் ஹத்திஹரீவதை பண்ணின தோஷத்திலேயும் பிறம் மவதை பண்ணின தோஷத்தி

80 லேயும் போகக்கடவாராகவும் இந்தப்படிக்கு முத்துகருப்பனாசாரி யெளுத்து உ

81 பிரமோதூத ஸ்ரீ ஆவணிமீ 1 உ சுக்ரவாறமும் றேவதி நக்ஷத்திற மும் பஞ்சமியும் அமிருத சித்த

82 யோகமும் கூடின புண்ணியதினத்தில் பருவதவற்தனி அம்மனுக்கு ஸ்ரீமது முத்து விசைய ரெகுனாத

83 சேதுபதி காத்த தேவரவர்கள் உபயமும் சேமனூர் சிறுதேட்டு அறண் மனையில் ஆண்டுவந்த முப்பத்தா

84 று கல விறப்பாடும் ஆறு புன்செயும் தானபூர்வமாக பண்ணிவச்ச படியினாலே பட்டயப்படிக்கு

85 ஆசந்திராதித்தியவரைக்கும் ஆண்டு அனுபவித்துக்கொள்ளக் கடவா ராகவும் இந்த சிறுதேட்டு உள்ள

86 தற்மதை அம்மனுக்கு பரிபாலனம் பண்ணினபேருக்கு பட்டயத்தில் எளுதியிருக்கிறபடிக்கு சுகுற்த

87 த்தை அடைவாராகவும் இந்த சிறுதேட்டு உள்ளதர்மத்துக்கு யாதா மொருத்தர் விகாதம் நினைத்த

88 பேருக்கு பட்டயத்தில் எழுதியிருக்கிறபடிக்கு தோஷத்தை அடைவா றாகவும் இந்தப்படிக்கு மதுரை

89 உத்தண்டமூற்த்தி நாலங்கராய ஆசாரி குமாரன் சடையப்பன் கையெ ளுத்து உ சங்கரந் துணை

# 53

# தேவிப்பட்டினச் செப்பேடு

| | | |
|---|---|---|
| இருக்கும் இடம் | : | தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை அருங்காட்சியகம், இராமநாதபுரம் |
| அரசர் | : | முத்து விசயன் சேதுபதி |
| காலம் | : | 9—6—1714 |
| அளவு | : | 21 செ.மீ × 12.5 செ.மீ |

**அமைப்பும் செய்தியும்** : அரைவட்ட வடிவமுள்ள சிறு கைப்பிடியுடன் கூடிய செப்பேடு[1]. துளை இல்லை. கைப்பிடியில் 'உ யிந்தபடிக்கு விசையன் சேதுபதி' என எழுதப்பட்டுள்ளது. எழுத்துக்கள் எளிதாகப்படிக்க இயலா வண்ணம் தெளிவில்லாமல் எழுதப்பட்டுள்ளது.

சேதுநாட்டின் சிறந்த துறைமுக நகரங்களில் தேவிபட்டினம் ஒன்று. டச்சுக்காரர்கள் தங்கள் பொருள்களை இறக்குமதி செய்யவும், கொள்முதல் செய்த பொருள்களை ஏற்றுமதி செய்யவும் இத்துறைமுகத்தையே பெரும்பாலும் பயன்படுத்தினர். சேதுபதியரசரின் சங்கு வாணிகம் தேவிப்பட்டினம் வழியாகவே நடைபெற்றுள்ளது. இவ்வூரில் சேதுபதியரசர்களின் களஞ்சியம், சத்திரங்கள் ஆகியன இருந்தன.

---

1. *ARE, A. 46 of 1947.*

இங்கு நவக்கிரகங்களைக் குறிக்கும் ஒன்பது தூண்கள் கடலுக்குள் உள்ளதாக மக்கள் நம்புகின்றனர். அதனால் இவ்வூரை 'நவபாஷாணம்' என்பர். இங்குள்ள சக்கர தீர்த்தத்தில் குளித்த பிறகே கடலில் குளிக்க வேண்டும் என்பது மரபு. இராமேசுவரம் யாத்திரை செல்வோர் இங்கு முதலில் செல்வர்.

இங்கு எழுந்தருளியுள்ள உலகமாதேவியின் பெயரால் இவ்வூர் உலகமாதேவிப் பட்டினம் என முன்பு வழங்கப்பெற்றது. இப்போது தேவிப்பட்டினம் ஆகிவிட்டது. இறைவன் பெயர் திலகேசுவரர். இவ்வூருக்குச் சீவல்லபப் பட்டணம் என்ற பெயரும் உண்டு.

சேதுபதியரசர் பட்டம் ஏற்றதன் அறிகுறியாக தேவிப்பட்டினம் உலகமாதேவி அம்மையாருக்கு இப்பட்டயத்தில் கண்ட கொடையை அளித்துள்ளார்.

மாதம் 500 படி நெல்லும், மகமையாகப் பொன் 5ம், புன்செய்த் தானியம் 10 குறுணியும், மகாநோன்புக்கு ஆண்டுக்கு 11 பணமும் பட்டுப் பரிவட்டம் போன்றவைகளும் கொடையாக அளிக்கப்பட்டன.

நவபாஷாண வருவாயிலும், துறைமுக வருவாயிலும், சங்குகுளிப்பதிலும் அம்மனுக்குப் பங்கு அளிக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

பட்டயத்தின் இறுதிப்பகுதி தெளிவில்லாமல் உள்ளது. தேவிப்பட்டினம் சபையார் பற்றிய குறிப்பும் இதில் காணப்படுகிறது.

## செப்பேடு

### முதல் பக்கம்

உ

யிந்த படிக்கு ஸ்ரீ

விசையள்

சேதுபதி

1 செயவருடம் ஆனி மாதம் 10

2 உ ஸ்ரீமது யிரன்னிய கெ

3 ர்ப்ப ரவி குலமுத்து வி

4 சைய விசையன் சேது

5 பதி பட்டாபிசேகத்தில்

6 தேவி பட்டணம் உலகமா

7 தேவிக்கு பட்டையம்

8 குடுத்தபடி பட்டையமா

9 வது மாசம் சிருபடி 500

10 நெல் மகமை பொன் 5ம்

11 கைய் பிஞ்சையில் இறுக்கு

12 றது 10 குருணி மகா நோம்புக்கு

13 வருசத்துகு பணம் 11 பரிவ

14 ட்டம் பட்டு ... ..... டாய கோளிதி

15 ஆத்து கரை நவபாசானத்தில்

16 வருமான ஆதாயத்தில் வாடா

17 ராடி ..... ஆத்துக்கு ..... இரண்டு ப

18 ங்கு இத்தேவிக்கு ஒரு பங்கு

19 துரைமுகப் ப ... ... ட் டாரப் பட்ட

20 ார் பட்டம் கட்டியதை ..... சங்கு சி

21 மின் பங்கு யாய .... ... அம் அம்ம

22 ா ..... காதா --- .....

23 முத்துப் பட்டனம் யு ..... - .....

24 --- ..... சபையார் ஆண்டு

25 கொள்ளவும் ..... - யிந்த பட்டையம்

26 ..... பள்ளியால் .....

# 54

# சாக்காங்குடிச் செப்பேடு

இருக்கும் இடம் : இராமநாதபுரம் கோதண்டராமசுவாமி கோயில்

அரசர் : விசய ரகுநாத சேதுபதி காத்த தேவர்

காலம் : 24—1—1715

**அமைப்பும் செய்தியும்** : சங்கரந்துணை எனக் கிரந்தத்தில் காப்புச் சொல் பொறிக்கப்பட்ட செப்பேடு. முகவாபுரி (முகவை) என்னும் இராமநாதபுரத்திலுள்ள கோதண்டராமசுவாமி கோயிலில் நாள்தோறும் பூசை நடைபெறவும், படையல் படைக்கவும், திருமாலை சாத்தவும், திருவிளக்கு ஏற்றவும், விழாக்கள் கொண்டாடவும் நிலையான விரிவான கொடைகள் அளிக்க ஏற்பாடு செய்ததை இச்செப்பேடு கூறுகிறது.

விசயரகுநாதசேதுபதி அவர்கள் சாக்காங்குடி, பட்டப்பிள்ளா கூரானேந்தல் என்னும் இரண்டு ஊர்களைக் கொடையாக அளித்தார். அரசருடைய சொந்தப்பண்ணை நிலம் இருந்ததும் அவர் பெயரால் அமைக்கப்பெற்றதுமான விசயரகுநாத் சமுத்திரத்திலிருந்து ஆண்டு தோறும் 100 கலநெல் அளிக்குமாறு செய்தார்.

தம் நெருங்கிய உறவினர்களும்,[1] சிவகங்கை அரசமரபினரும் புதுக்கோட்டை தொண்டைமானார் அரசமரபினரும், பிரதானிகளும், அதிகாரிகளும், அடப்பம், ஊடயம் சேருவை பணி செய்பவர்களும் ஆண்டுதோறும் குறிப்பிட்ட அளவுநெல் கோதண்டராமசுவாமி கோயிலுக்குக் கொடுக்க வேண்டும் என்றும், இராமநாதபுரத்தில் உள்ள அனைத்துச்சாதி மக்களும் ஆண்டு தோறும் 1 பணம் மகமை கொடுக்க வேண்டும் என்றும், கால்நடைகளைக் காக்கும் இடையர்கள் திருமணத்தின்போது மாப்பிள்ளை வீட்டார் 5 படி நெய் கொடுக்க வேண்டும் என்றும் ஏற்பாடு செய்து தன் கையொப்பமிட்டுச் சேதுபதி ஆணை வழங்கினார். நெல் அளித்த உறவினர்கள் சின்னய்யா (30 கலம்), தமையனார் வடுகனாதத் தேவர் (100 கலம்), தம்பி திருவுடையாத்தேவர் (30 கலம்) தம்பி சீனி ரகுநாத தேவர் (50 கலம்) தம்பி இந்திரதேவர் ஆகியோர்.

சிவகங்கை அரசை சசிவர்ணத் தேவரின் தந்தை நாலுகோட்டை உடையாத்தேவர் 20 கல நெல் அளித்ததுடன் அவருக்குச் சேர்ந்த இளை ஆயன்குடி (இளையான்குடி) அகிலாண்ட ஈசுவரிபுரம், கண்ணனூர் ஆகிய ஊர்களிலிருந்தும் முறையே 5 கலம், 50 கலம், 5 கலம் நெல் அளித்தார் இவ்வூர்கள் அவருக்குச் சேதுபதியரசரால் சீதனமாகக் கொடுக்கப்பெற்றவையாகும். நாலுகோட்டை உடையாத்தேவர் மகன் சசிவர்ணத் தேவருக்கு இச்சேதுபதி அரசரின் இரண்டாவது மகள் அகிலாண்ட ஈசுவரிக்குச் சீதனம் கொடுத்த ஊர் அகிலாண்ட ஈசுவரிபுரம் ஆயிற்றுப் போலும்.

தொண்டைமானார் வகையில் திருப்பாச்சேத்தியிலும் (10 கலம்) அஞ்சுகோட்டையிலும் (5 கலம்) ஊழலிலும் (2 கலம்) நெல் அளிக்கப்பட்டதுடன் புதுக்கோட்டையில் ஆட்சியில் இருந்த தொண்டைமானார் ராயப்பன் 20 கலம் நெல் அளித்தார்.

சேதுபதி அரச குடும்பத்தைச் சேர்ந்த கட்டைத்தேவர் (10 கலம்), செல்லத்தேவர் (5 கலம்), முத்து ரகுநாதத் தேவர் 5 கலம்) மொத்தி தேவன் (5 கலம்), ஒய்யாத்தேவன் ஆகியோரும் நெல் அளித்தனர். இதில் முதல் மூவரும் பிற்காலத்தில் அரசுபீடம் ஏறியவர்கள் ஆவர்.

ரகுநாதன் சேருவைகாரன், வாச்சமாகாளித் தேவன், முத்தப்பன் சேருவைகாரன், தாண்டவன் சேருவைகாரன், மங்கைநாதன், குப்பன் சேருவைகாரன், ராமு சேருவைகாரன், சோமாசி சேருவைகாரன்,

1. 'இராசாக்கள் இராசபுத்திரர்' எனச் செப்பேடு கூறும் (43-44).

அதிகாரி பிச்சன் சேருவைகாரன், அடப்பம் திருவுடையான், ஊடயம் ரெகுநாதன் சேருவைகாரன், பிள்ளைமார், காரியக்காரர், கணக்குப் பிள்ளைகள் ஆகியோர் நெல் அளித்த அரசு அலுவலர் ஆவர். பின்னாளில் பிரதானியாகப் பொறுப்பேற்ற தெய்வக்கன்னியா பிள்ளை அவர்களும் நெல் அளித்தவர்களில் ஒருவராகக் குறிக்கப்பெறுகின்றார்.

இராமநாதபுரத்தில் அக்காலத்தில் வாழ்ந்த குரு, சூத்திரர், கருனாடகத்தார், கவறைகள், வேலமர், துளுவர், மல்லக செட்டிகள், ஏழு கூற்றும், பதினெட்டு நாடு ஐந்து நத்தம் முதலான கிராமத்து வெள்ளாளச் செட்டிகளில் மதுரைச் செட்டிகள், மஞ்சப்புத்தூர்ச் செட்டிகள், கோமுட்டிகள், பட்டுநூல்க்காரச் செட்டிகள், சலுப்பர், வலசை இடையர் சிவியார் இடையர், போயிண்டமார், தொட்டியக் கம்பளத்தார், நாட்டு இடையர், வடுக்க் குயவர் போன்ற எல்லோரும் ஆண்டுக்கு ஒரு பணம் மகமையாகக் கொடுக்க வேண்டும்.

இக்கொடையைச் சேதுபதி அரசர் தம் பெற்றோர்களுக்கும், தம் வம்சத்துப் பெரியவர்கட்கும் நலம் உண்டாகவேண்டிச் செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

நெல்லும், பணமும், நெய்யும் ஆண்டுதோறும் தவறாமல் செலுத்த வேண்டும் என்று ஆணையிடப்பட்டது.

18-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இராமநாதபுரத்தில் வாழ்ந்த பல்வேறு சமுதாய மக்களைப்பற்றி அறிய இச்செப்பேடு மிகவும் துணை செய்கிறது. அத்துடன் அரசமரபினர், அவர்தம் உறவினர்கள், உயர் அலுவலர்கள் போன்றவர்களைப்பற்றிய இன்றியமையாத பல குறிப்புகளைத் தருகிறது.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாஹந சகாப்தம் 1637 இதன்மேல்ச் செல்லாநின்ற ஜய நாம சம்வத்ஸர

2 த்து உத்தராயணமும் ஹேமந்த ரிதுவும் மகா மாஸமும் கிருஷ்ண பக்ஷத்து அமாவாசியும் ஆதித்த வாரமும் உத்திராட

3 நக்ஷத்ரமும் சுபயோக சுபகரணமும் பெற்ற மஹாஉதைய புண்யகாலத்
தில் தேவைநகராதிபன் ஸேது

4 மூலா ரக்ஷா துரந்தரன் ராமநாதசுவாமி காரியா துரந்தரன் சிவபூசா
துரந்தரன் பரராசசேகரன்

5 பரராச கஜ ஸிம்மம் ஸ்வஸ்திஸ்ரீமந் மஹாமண்டலேசுரன் கண்டநாடு
கொண்டு கொண்ட

6 நாடு கொடாதான் ரவிவன்ம ரவிமார்த்தாண்டன் ரவிகுலசேகரன்
சொரிமுத்து வன்னியன் ஈழமும் யாட்பாணமும் கெசவேட்டை
கண்டருளிய

7 ராசாதிராசன் ராசபரமேசுரன் ராசமார்த்தாண்டன் ராசமஹா கெம்
பீரன் உரிகோல் சுரதா

8 ணன் புவனேகவீரன் வீரகஞ்சுகன் அரசராவண ராமன் அடியார்
வேளைக்காரன் வீரவெண்பாமாலை இள

9 ஞ்சிங்கம் தழஞ்சிங்கம் பகைமன்னர் சிங்கம் ஆற்றுப்பாச்சி கடலிற்
பாச்சி மதப்புலி அடைக்கலங் காத்தா

10 ன் மேவலர்கள் கோளரி மேவலர்கள் வணங்குமிரு தாளினான் கீர்த்திப்
பிறதாபன் கொட்டமடக்கி வையா

11 ளி நாராயணன் காவிக் குடையான் கருணா கடாக்ஷந் காமினி கந்தற்
பன் கலைதெரியும் விற்பன்னன் சத்தி

12 ய பாஷா அரிச்சந்திரன் கொடைக்கு கற்னன் வில்லுக்கு விசையன்
பரிக்கு நகுலன் குன்றினுயர் மேரு

13 விற் குன்றா வலைகுணில் பொறித்தவன் திலதநுதல் மடவார்கள்
மடலெழுத வருசுமுகன் துஷ்டநிற்நிரஹ

14 சிஷ்ட பரிபாலன் வீரதண்டை சேமத்தலை விழங்குமிரு தாளினான்
அனுமகேதனன் சகலகுணாபி ராமன் சங்

15 கீத சாயுத்திய வித்தியா வினோதன் அஷ்டதிக்கு மனோபயங்கரன்
மதுரையார் மானங் காத்தான் தொண்டி

16 யந்துறை காவலன் துர்க ரேபந்தன் வைகை வழநாடன் வன்னிய
ராட்டந் தவிழ்த்தான் அந்தம்பர

17 கண்டன் சாடிக்காறர்கள் மிண்டன் ஸ்வாமித்துரோகியள் கண்டன் பஞ்சவன்ன ராய ராவுத்தன் பனுக்கு

18 வார் கண்டன் இவுளிபாவடி மிதித்தேறுவார் கண்டன் தழங்கண்டு தத்தளிப்பார் மிண்டன் பட்டமான

19 ங் காத்தான் துஷ்டராயிர கண்டன் தாவிக்குவேலி சத்துருவாதியள் மிண்டன் வேதியர்கள் காவலன் சிந்தி

20 த்த காரியம் செயம்பண்ணும் மனோகரன் வீரலட்சுமி காந்தன் விசைய லெட்சுமி சம்பன்ன சகல சாம்பி

21 றாச்சிய லட்சுமி நிவாசன் துகவூர்க் கூற்றத்துக் காத்தூரான குலோத் துங்க சோழநல்லூர் கீள்பா

22 ல் விரையாத கண்டனிலிருக்கும் சேதுபதி வங்ஷாதிபனான ஸ்ரீ ஹிரண்ய கெற்பயா ரவிகுல சேகர ரெ

23 குனாதச் சேதுபதி காத்த தேவரவர்கள் தம் முகவாபுரியான ராம நாதபுரத்தில் ஸ்ரீமந் கோதண்டராம

24 சுவாமிக்குத் தண்ம சாசன தாம்பிற சாசநப் பட்டையங் கொடுத்த படி நாம் இப்போது கோதண்டரா

25 ம சுவாமிக்குத் தாம்பிற சாசநப் பட்டையங் கொடுத்ததாவது சுவா மிக்கு நித்திய கட்டளை அபிஷேக

26 நெய்வேத்தியம் திருமாலை திருவிழக்கு விசேஷதின..... கட்டளை முதலானதுக்கு நிலவர

27 ம் பண்ணிக் கட்டளையிட்டது சாக்காங்குடி பட்டப்பிள்ளா கூரா னேந்தல் இந்த இரண்டு ஏந்தலு

28 ம் சறுவமானியமாகக் கட்டளையிட்டு யிதுவுடனே நம்முடைய பண்னைக்கிறாமம் விசையரெகுனாத

29 சமுத்திரத்தில் நெல் 100 கலம் அதுவும் சின்னய்யா வகைச் சிக்களில் நெல் 30 கலம் தமையனார் வடுகனா

30 த தேவர் எட்டிவயலில் நெல் 100 கலம் தம்பி திருவுடையாத்தேவர் நெல் 30 கலம் தம்பி சின்னத்தே

31 வர் வானரவீர மதுரையிலே நெல் 20 கலம் தம்பி சீனிரகுனாத தேவர் நெல் 50 கலம் தம்பி இந்திரதேவ .....

32 நாலுகோட்டை உடையாத்தேவர் நெல் 20 கலம் அடுக்களை வகையில் இளைஆயன் குடியில் நெல்

33 5 கலம் அகிலாண்ட ஈசுவரிபுரத்தில் நெல் 50 கலம் கண்ணனூர் நெல் 5 கலம் தொண்டைமானார் வகை

34 திருப்பாச்சேத்தியில் 10 கலம் அஞ்சுகோட்டையில் நெல் 5 கலம் ஊழல் நெல் 2 கலம் தொண்ட

## இரண்டாம் பக்கம்

35 மானார் ராயப்பன் நெல் 20 கலம் கட்டையத்தேவர் நெல் 10 கலம் செல்லத்தேவர் நெல்

36 5 கலம் முத்துரகுநாததேவர் நெல் 5 கலம் மொத்திதேவன் நெல் 5 கலம் ஒய்யாத்தேவன் நெல்.....

37 ரகுநாதன் சேருவைகாறன் நெல் 10 கலம் வாச்சமாகாளித் தேவன் நெல் 10 கலம் முத்தப்

38 பன் சேருவைகாறன் ..... கலம் தாண்டவன் சேருவைகாறன் 5 கலம் மங்கையனாதன் குப்பன்

39 சேருவைகாறன் 2 கலம் ஷி தெய்வகன்னி 2 கலம் ராமு சேருவை காறன் 5 கலம் சோமாசி சேருவை

40 காறன் நெல் 2 கலம் அதியாரி பிச்சன் சேருவைகாறன் நெல் 2 கலம் அடப்பம் திருவுடையான் நெல் 1 கலம் ஊட

41 யம் ரெகுனாதன் சேருவைகாறன் நெல் 1 கலம் பிள்ளைமார் காரியக் காரர் வகையில் திருவுபிள்ளை

42 கப்பன கணக்குப் பிள்ளை உள்பட்டாரு இந்தப்படி வருஷக் கட்டளை யாக நிலவரம் பண்

43 ணி நம்முடைய இராச்சியத்தில் யிருக்குற பிரம்ம க்ஷத்ரிய வைசியர்க்கு முதலான இரா

44 சாக்கள் ராசபுத்திறாள் குரு சூத்திரர் கருவாடகத்தார் கவறையள் வெலமா துழுவர் மல்லக

45 செட்டியள் ஏழு கூற்றம் பதினெட்டு நாடு அஞ்சு நத்த முதலான கிறா மத்து வெள்ளாழ செட்டி

46 யளில் மதுரை செட்டியள் மஞ்சப்புத்தூ ர்ச் செட்டியள் கோமுட்டியள் பட்டுனூ ல்க்

47 காறச் செட்டியள் சலுப்பர் வலசைஇடையர் சிவியார்இடையர் போயிண்டமார் தொ

48 ட்டியக் கம்பளத்தார் நாட்டுஇடையர் வடுகக்குசவர் முதலாக நம் நகரிலுள்ள பேற்கெ

49 ல்லாம் வருஷக் கட்டளைக்கு மகமை ஒரு பணமும் கோபால கட்டளை இடையர் பெண்கொண்

50 ட பேற்கெல்லாம் குடிக்கு 5 படி நெய்யும் ஆதிசந்திராதித்த வரைக்கு எண்ணெண்ணைக்கும்

51 குடுத்துவரச் சொல்லி நம்முடைய மாதா பிதாவுக்கும் நம்முடைய உபைய வங்குஷத்திலே

52 உண்டாகிய பெரியவர்களுக்குச் சுகுற்தமாக நிலவரம் பண்ணி விச்சுப் பெருங்கருணையி லிரு

53 க்கும் திருக்காவுடையாரி ஈசுரமாத்தியா பிள்ளை புத்திரன் நம்முடைய திருவு பாரிசமாக மு

54 த்திரிக் கணக்கும் கட்டளை இட்டபடியினாலே சந்திர சூரியாள் உள்ள மட்

55 டும் சந்திரப் பிறவேசம் நெல்லும் பணமும் நெய்யும் வருஷத்துக்கு வருஷம் தறுகாமல்

56 க்குமித்துத் தற்ம்ம பரிபாலனமாக நடத்திவிச்சுவரக் கடவராகவும் இந்தப்படிக்குத் தன்ம

57 சாசன தாம்பிர சாசனப் பட்டையங் கொடுத்தோம் இராமநாநபுரம் கோதண்ட ராமசுவாமி

58 க்கு இரண்யகெற்பயாசி ரவிகுல சேகர விசைய ரெகுநாதச் சேதுபதி
காத்த தேவரவர்கள்ஓம்

59 இந்தத் தற்மத்தை யாதாமொருத்தர் பரிபாலனம் பண்ணினபோர்
காசியிலே இராமசேதுவிலே அனேகம்

60 புண்ணியச் சேத்திரம் புண்ணிய நதி புண்ணிய தீர்த்தங்களிலேயும்
அனேகம் கோடி சிவலிங்கப் பிறதி

61 ஷ்டையும் விஷ்ணுப் பிறதிஸ்ட்டையும் பிரமப் பிரதிஷ்ட்டையும் பண்
ணின சுகுற்தத்தையும் தான தருசனம் பண்

62 ணின பலத்தையும் அடைவராகவும் இந்தத் தற்மத்துக்கு அஹிதம்
பண்ணின பேர்கள் கங்கா ன

63 திக்கரையிலே ராமசேது தனுக்கோடியிலேயும் மற்றப்புண்ய தீர்த்தப்
புண்ய நதிக்கரை

64 யளிலேயும் மாதா பிதாவையும் பிராமணரையும் பசுவையும்ஸ்ரீயளையும்
சிசுக்களையும் மநி

65 ஷ்யாளையும் வதைபண்ணின தோஷத்தை அடைவராகவும்

சங்கரந் துணை

# 55

# காக்குடிச் செப்பேடு

| | | |
|---|---|---|
| இருக்கும் இடம் | : | தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை அருங்காட்சியகம், இராமநாதபுரம் |
| அரசர் | : | விசய ரகுநாத சேதுபதி காத்த தேவர் |
| காலம் | : | 10—1—1719 |
| அளவு | : | 22 செ.மீ × 14.5 செ.மீ |

**அமைப்பும் செய்தியும் :** இது வேலைப்பாடு மிக்க கைப்பிடியுடன் அமைந்த செப்பேடு. கைப்பிடியில் துளை இல்லை. செப்பேட்டின் முதல் பக்கத்தில் நடுநாயகமாக 'சங்கரன் துணை' எனக் கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளது. இரண்டாம் பக்கம் ஐந்தாம் வரியில் பெரும்பகுதி எழுதி மீண்டும் அழிக்கப்பட்டுள்ளது.

திருவுடையாத் தேவர் என்னும் விசய ரகுநாத சேதுபதி காத்த தேவரவர்கள் காக்குடி, கணபதிஏந்தல் என்ற இரு ஊர்களைக் கற்ற றிந்த அந்தணர்களுக்குத் தானம் செய்து செப்பேடு எழுதித் தந்தார். கொடை அளிக்கப்பெற்ற கணபதிஏந்தலுக்கு வேங்கடம்மா சமுத்திரம் என்ற பெயரும் வழங்கியது.

வேங்கடம்மா சமுத்திரம் என்ற கணபதி நல்லூர்க்குக் கிழக்கு எல்லை கோவனூர்; தெற்கு எல்லை செம்மானேந்தல்; மேற்கு எல்லை ஆலங்குளம்; வடக்கு எல்லை அரியனூர் ஆகும்.

காக்குடிக்குக் கிழக்கு எல்லை எழுநூத்தி மங்கலம்; தெற்கு எல்லை நெட்டூர்; மேற்கு எல்லை தச்சனேந்தல், காத்தானேந்தல்; வடக்கு எல்லை தேவரேந்தல்.

இச்செப்பேட்டை எழுதியவர் திருஉத்தரகோசமங்கையில் இருந்த வீரப்பாசாரி என்பவர் ஆவார். 'வீரப்பாசாரி லிகிதம்' என்று செப்பேட்டில் உள்ளது.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாஹந ஸகாப்தம் 1640 இதன்மேல் செல்

2 லாநிந்ற விளம்பி நாம ஸம்வத்ஸரத்தில் உத்தராயணத்தில்

3 ஹேமந்த ரிதுவில் புஷ்ய மாஸத்தில் ஸ்ராவண நக்ஷத்திரமும்

4 ஸுபயோக ஸுபகரணம் பெத்த ஸூர்யோதய ஸங்கம பு

5 ண்ய காலத்தில் தேவநகராதிபந் ஸேதுமூல ரக்ஷண துர

6 ந்தெரந் ராமநாத ஸ்வாமி கார்ய துரந்தெரந் ஸிவபூசா துரந்தர

7 ரான ஸ்வஸ்திஸ்ரீமந் மஹாமண்டலேஸ்வரந் ஆரியராயக விபாடின்

8 பாஷைக்கி தப்புவார் கண்டன் மூவராய கண்டன் பட்டமானங்

9 காத்தான் துட்டராயிர கண்டன் அந்தம்பர கண்டன் சாடிக்காற க

10 ண்டன் சாமிதுரோஹியள் மிண்டன் பஞ்சவற்ணராய ராகுத்தன் ப

11 புளுவார் கண்டணன் பரதள விபாடன் பரராச சேகரன் பரத

12 நாடக ப்ரவீணந் கருணா கடாஷன் மதப்புலி அடக்கலங்காத்தான்

13 தாலிக்கு வேலி ஸத்ருவாதியள் மிண்டன் வன்னியராட்டந் தவிளுத்

14 தான் கொட்டமடக்கி வைய்யாளி ணாறாய

15 ணன் இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகமன்

16 னர் சிங்கம் அரசராவண ராமன் அடியார்

17 வேளைக்காற்றின் வீரெ வளனாடன் வேதியர் காவலன் புவநேக

18 வீரன் தொண்டியந்துறை காவலான் துர்க ரேவந்தன் அனுமகே

19 தனன் கெருடகேதனன் காவிக்கொடியான் ரவிகொல சேகர

20 ன் ரவிவம்மன் சொருமுத்து வண்ணியன் மதுரை மானங்

21 கரத்தான் மஹாதானட்சாத்ராவதரந் திலத நுதல் முடமாதர் ம

22 டலெழுத வரிசமுகன் விசையலெச்சுமி காந்தன் கலைதெ

23 ரியம்விப்பன்னன் காமினிகந்தப்பன் ஸத்யாபாஷ ஹரிச்சந்திரந்

24 ஸகலஸாம்ராஜ்ய லட்சுமி வாசன் வீரதண்டை சேமத்தலை வி

25 ளங்கிய தாளினான் சேதுகாவலன் வங்சாதிபன் துகவூர் கூத்தத்து

26 க் காத்தூரான குலோத்துங்க சென்னூரக்கிளை பாலந் விரயாதகண்

27 டனிலிருக்கும் ஸ்ரீஹிரண்ய கர்ப்பாயாஜி ரெகுநாத சேதுபதி காத்த

28 தேவர் புத்திரன் ஸ்ரீ ஹிரண்யகர்ப்பயாஜி விசைய ரகுனாத சேதுப

29 தி காத்த தேவரவருகள் ஞானாகோத்ர ஞானாசூத்ரரான ஞானாஸா
காத்

## இரண்டாம் பக்கம்

30 யகரான காக்குடி கணபதி ஏந்தலுக்கு பிரதி வாமமான வேங்கி

31 டம்மா சமூத்திரம் அசேஷவித்வஜ்ஜந மஹாஜநங்களுக்கு ஸோ

32 பகூயோதக தாராபூர்வக பூதாந சாசநம் பண்ணிக்கு

33 டுத்தபடி சாசனமாவது கோவனூர்க்கு மேர்க்கு செம்மானே

34 ந்தலுக்கு வட

35 க்கு ஆலங்குளத்துக்கு கிளக்கு அரியனூருக்கு தெற்கு இந்த னாறு

36 கெல்லக்கு உள்பட்ட கெணபதி ஏந்தலும் எழுனூத்துமங்கலத்

37 துக்கு மேர்க்கு நெட்டூர்க்கு வடக்கு தச்சனேந்தல் காத்தானேந்தலுக்

37

38 குக் கௌக்கு தேவரேந்தலுக்கு தெற்க்கு இந்த னாங்கெல்லக்கி உள்ப

39 ட்ட காக்குடியும் தங்களுக்கு பூதானம் பண்ணிக்குடுத்தபடி

40 னாலே இந்த இரண்டு கிராமத்துக்குண்டாகிய னஞ்சை புஞ்சை

41 த மாவடை மரவடை திட்டுத்தெடலு நிதி நிக்ஷேப ஜல த

42 ரு பாஷாண அக்ஷிணியாகாமி ஸித்த ஸாத்ய மிங்குற அஷ்ட

43 போக தேஜஸ்வாம்யங்களுக்கும் தானாதி விநிமய விக்ரய யோக்ய

44 மாக புத்ரபவுத்ர பாராம்பரம்மாக ஆச்சந்திரார்க்க ஸ்தாயியாக ஆ

45 ண்டனுபவித்துக் கொளுவாராகவும் இந்த தம்மத்தை ப்ரவல்யம்
பண்ணாரி

46 வச்ச பேருகள் கோடி சிவலிங்க ப்ரதிஷ்டை பண்ணின பலத்

47 தை அடயிவாராகவும் இதுக்கு விக்கிநம் பண்ணின பே

48 ருகள் கெங்கெக்கரயிலே கோசத்தி பண்ணின பலத்தை அடை

49 யிவாராகவும் இந்த தாம்பிற சாசன திருவுத்தரகோசமங்கை

50 யிலிருக்கும் வீரபாசாரி லிகிதம்

51 தாந பாலந யோம்மத்யே தாநா ஸ்ரயோநு பாலநம் தாநா

52 த் ஸ்வர்க்க மநாப் நோதி பாலநாத் அச்சுதம் பதம்: உ

# 56

# பால்குளம் செப்பேடு

இருக்கும் இடம் : தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை அருங்காட்சியகம், இராமநாதபுரம்

அரசர் : முத்து விசைய ரெகுனாத சேதுபதி காத்த தேவர்

காலம் : 15—4—1722

**அமைப்பும் செய்தியும்** : பால்குளம் என்னும் ஊர் சேது நாட்டில் ரகுணவளநாட்டில் இராசசிங்கமங்கலம் மாகாணத்தில் உள்ளது. பழம் பாண்டி நாட்டுப் பகுதியான கைக்கி நாட்டில் உள்ளதாகச் செப்பேட்டில் குறிக்கப்படுகிறது.

காஸ்யப கோத்திரம் ஆபஸ்தம்ப சூத்திரத்தைச் சேர்ந்த யசுர் வேதம் தாதாசிவன் என்பார் மகன் ரகுநாதக் குருக்கள் என்னும் அந்தணருக்குப் பால்குளம் ஊர் கொடையாகக் கொடுக்கப்பட்டது. பால்குளம் ஊருக்கு நாற்பாங்கு எல்லைகள் கூறப்பட்டுள்ளன.

## செப்பேடு

1 *ஸ்வஸ்திஸ்ரீ ஸாலிவாஹந ஸகாப்தம்* 1645 *இதின்மேல்ச் செல்லாநின்ற சோபகிருது நாம*

2 ஸம்வச்சரம் உத்தராயண கிரீஷ்மரிது மேஷமீ சுக்லபட்சம் நவமீ நாயித்துக் கிழமை

3 அஸ்த நட்சத்திரம் வரியாநாமயோகமும் பாலவாகரணமும் பெத்த சுப நட்சத்ர சுப

4 யோக சுபகரணத்தில் தேவைநகராதிபன் சேது மூலரட்சா துரந்தரன் ராமனாத

5 சுவாமி பற்வதவர்தனி காரியா துரந்தரன் பரராச சேகரன் பரராச கெச சிங்கம் ஸ்வ

6 ஸ்தி ஸ்ரீமன் மகாமண்டலேசுவரன் விருதரசர்மணவாளன் அந்தம்பிற கண்டன் சு

7 வாமித்துரோகியள் மிண்டன் கொட்டமடக்கி துர்க ரேவந்தன் பாஷா ஹரி

8 ச்சந்திரன் ஸங்கீத சாஹித்ய வித்யா வினோதன் துட்டரை அடக்கி வீரத் தண்டை சேமத்தலை வி

9 ளங்கிய தாளினான் சகல சாம்பிறாச்சிய அட்ட லெட்சிமி நிவாசன் புவனேக வீரன் வீரகஞ்சு

10 கன் வேதியர் காவலன் அரசராமன் அடியார் வேளைக்காறன் பர மன்னர் சற்ப கெருடன் பா

11 ண்டி மண்டலத் தாபனாசாரியன் பாசைக்குத் தப்புவராய கண்டன் கண்டனாடு கொண்டு கொண்

12 டநாடு கொடாதான் தாலிக்குவேலி பட்டமானங் காத்தான் இடரு வார் கோடாலி

13 ய சாமா உல்லாச நளினக்காறன் குறும்புகளடக்கி அடைக்கலங் காத்தவன் மனோன்

14 மணி கடாட்சன் யெம்மண்டலமும் கெசவேட்டை கொண்டருளிய ராசாதிராசன் ராசமா

15 ற்தாண்டன் ராசகுல தீபன் வீராதிவீரன் பரிக்கு நகுலன் வில்லுக்கு விசையன் பலத்துக்கு அடிமன் சொ

16 ல்லுக்கு அரிச்சந்திரன் பொறுமைக்கு தற்மர் கருணைக்கு ராமன் மதப்புலி நித்திய அன்னதான

17 சிலன் கல்லியாண குணாபிராமன் சகலகுண சம்பன்னன் படைக்குங் குடைக்கும் ஓடாத தண்டன்

18 தநதாரதார பரதார சகோதரன் மனுநீதி மன்னன் மலை கலங்கினாலு மனங்கலங்காத கண்டன்

19 செம்பிவளநாட்டன் அனகன் அகளங்கன் அதிகவுபாயன் மேவலர்கள் கோளரி மேவலர்கள் வ

20 ணங்குமிரு தாளினான் தொண்டியந்துறை காவலன் வைகையை அடைச்சு ரெகுனாத

21 சமுத்திரமாக பெரிப கண்மாய் வுண்டு பண்ணினவன் குண்டாத்தை யடைச்சு ராச்

22 சியத்துக்கு ரெகுனாதக் காவேரியாக வுண்டு பண்ணினவன் ஆத்திப் பாச்சி கடலில்ப் ப

23 ராச்சி யெமைய ரட்சிக்குந் தயாபரன் சத்துருவாதியளுக்கு இடியேறு பரிக்கு நகுலன குடைக்கு

24 க்கற்ணன் கனக பல்லக்கும் சிங்க முகமும் பஞ்சவர்ன்னப் பாவாடையும் நடநாடக சாலையு முண்டான தே

25 வன் இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகைமன்னர் சிங்கம் பெலத்துக்கு ஆதிசேஷன் அழகுக்கு வாலசிவன் கா

26 மினி கந்தற்பன் கலிகோபன் பஞ்சபாணாவதாரன் பரதள விபாடன் தெட்சண சிங்காசனாதிபதி சேதுகாவல

27 ன் அசுபதி கெசபதி நரபதிக்கு மேலான சேதுபதி அனுகேதனன் கெருடகேதனன் வியாக்கிரமகேதன

28 ன் மீன கேதனன் நெமலி கேதனன் குக்குட கேதனன் காஷ கேதனன் செங்காவிக் குடையுமதின்

29 மேல் விருது சல்லியுமுண்டான தேவாதிதேவன் துகவூர்க் கூத்தத்தில் காத்தூரான குலே

30 ாத்துங்க சோழநல்லூர் கீள்பால் விரையாதகண்டனில் விளங்கிய தீரன் துலாபுருஷாதி

31 சோடாசமகாதான திட்சாதுரந்தரன் இரணிய கெற்பயாசி ரவிகுல ரெகுநாதச் சேது

32 பதி காத்த தேவரவர்களுக்கு வம்சோத்தகரான ஸ்ரீ மது முத்துவிசைய ரெகுனாதச் சேதுபதி

33 காத்ததேவரவர்கள் ராமேசுபரத்தில் ராமநாதசுவாமி சன்னதியிலே காஸ்யப கோ

34 த்திரத்தில் ஆபஸ்தம்ப சூத்திரத்தில் யெஸ்ஸாகாத்யபக ரான தாதா சிவ புத்

35 திரன் ரெகுனாதக் குருக்களுக்கு இரண்யோதகதார்த்தமாக பூதான சாஸநம் ப

36 ண்ணிக் குடுத்தபடி பூதான ஸாஸநமாவது கைக்கு நாட்டு வட்டகையிழு பால்

37 குளத்துக்கு கீழ்பாற் கெல்கையாவது வலமாவூர்க் கண்மாயில் துறை முகங் கொண்டா

38 னுக்கு மேற்கு தென்பாற் கெல்கையாவது வலமாவூர்க் குளக்காலுக்கு வடக்கு மேற்பாற்

39 கெல்கையாவது கருங்குடிக்குளம் கோர்வைக்கு கிளக்கு வடபாற் கெல்கையாவ

40 து ஊர் வய்யக் கண்மாய்க்குக் கரைக்கு மண்டி வய்க்கு எல்லைக் கல்லுக்கும் தெற்கு இப்பெ

41 ரு நான்கெல்கைக் குள்ப்பட்ட பால்க்குளம் சந்திராதித்ய தாரா பூறுவ மாக பூதான

42 தாம்பிர ஸாஸநம் கட்டளையிட்டபடியினாலே இந்தப்பூமியில் வரு நஞ்சை புஞ்சை

43 மாவடை மரவடை யேந்தல்ப் பிறவிடை திட்டுத் திடல் குடிபடை பள் பறை பாசிப் படுகை

44 கிணறு ஊரணி நிதிநிட்சேப செலதரு பாசாண யாகாமி பிச்ய ஸாஸந மென்று

# 57

# அன்னவாசல் செப்பேடு

| | | |
|---|---|---|
| இருக்கும் இடம் | : | தமிழக அரசு அருங்காட்சியகம், எழும்பூர் சென்னை |
| அரசர் | : | முத்து விசய ரகுநாதச் சேதுபதி காத்த தேவர் |
| காலம் | : | 27–4–1724 |
| அளவு | : | 25.5 செ.மீ × 17.5 செ.மீ |

**அமைப்பும் செய்தியும்** : நீள்சதுர வடிவில் இச்செப்பேடு அமைந்துள்ளது. இரண்டாம் பக்கம் வடமொழிச் சுலோகம் இரண்டு கிரந்த எழுத்துக்களில் எழுதப்பட்டிருப்பதுடன் முதல் பக்கம் 'சங்கரன் துணை' என்ற தொடரும் இடைப்பகுதியில் எழுதப்பட்டுள்ளது.

27–4–1724 சித்திரா பவுர்ணமி புண்ணிய நாளன்று முத்து விசய ரகுநாதச் சேதுபதி காத்த தேவரவர்கள் திருவாரூர் தியாகராச சுவாமியாருக்குச் சோழமண்டலத்தில் திருவாரூர்ச் சீமையில் நம்பிப் பாடி மாகாணத்தில் பாண்டவாய் ஆறு பாயும்படியான வடகரை அன்னவாசல் என்னும் ஊரைக் கொடையாகக் கொடுத்ததை இச் செப்பேடு விளக்குகிறது.

---

1. *ARE, A. 26 of 1946*; திருவாரூர்த் திருக்கோயில், பக் *311-313*.

அன்னவாசலின் எல்லை: கிழக்கு எல்லை அன்னக்குடி; தெற்கு எல்லை பாண்டவாய் ஆறு; மேற்கு எல்லை கலியாணி மாதேவி; வடக்குஎல்லை கலியாணி மாதேவி எல்லை.

இக்கொடை ஆதி சேது எனப்படும் தனுக்கோடியில் கொடுக்கப் பட்டது. அவ்வூரிலிருந்துவரும் வருவாயைக் கொண்டு வாரக் கட்டளை நடத்த வேண்டும் என்று செப்பேட்டில் எழுதப்பட்டுள்ளது.

ஆனந்தநாத நாலங்கராயன் மகன் சின்னத்தம்பி நாலங்கராயன் சாட்சிக் கையொப்பமிட்டுள்ளான். பரஞ்சோதி மலய்யன் மகன் வசம் இக்கொடை நிறைவேற்றும்பொருட்டு அளிக்கப்பட்டது.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாஹன சகாப்தம் 1645க்கு மேற்ச் செ

2 ல்லாநின்ற குரோதி நாம ஸம்வத்ஸரத்து உத்தராயணத்

3 து வஸந்த ருதுவில் சுக்கில பக்ஷத்து சுபயோஹ சுப

4 கரண ழம் பெற்ற சித்திரா பவுர்ணமை புண்யகாலத்து தே

5 வை நகராதிபன் சேதுமூல ரட்சா துரந்தரன் சிவபூசா

6 துரந்தரன் ராமனாத சுவாமி காரியா துரந்தரன் ஸவஸ்திஸ்ரீ மகா

7 மண்டலேசுரன் அரியராயிரதள விபாடன் பாஷைக்கு தப்பு

8 வராயிர கண்டன் புவனேக வீரன் வீரகஞ்சுகன் வீரவெண்

9 பாமாலை இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகைமன்னர் சிங்கம் தா

10 லிக்கு வேலி ஆற்றில் பாச்சி கடலில் பாச்சி மதப்புலி அடைக்கல

11 ங்காத்தான் செங்காவிக்கொடை வெற்றி விருதுடையான் வேதியர்கா

12 வலன் அரச ராவண ராமன் காமினி கந்தப்பன் கலைதெரியும் விற்

13 பன்னன் செம்பிவள நாடன் வையகை வளநாடன் சேதுபதி

14 வங்கிசாதிபதியான் துகலூர் கூ

15 ற்றத்து காத்தூரான குலோத்துங்க சோழ நல்லூர் கீள்பால் வி

16 ரையாத கண்டனிலிருக்கும் ஸ்ரீ ஹிரணியகர்ப்பயாஜி ரகுனா

17 தச் சேதுபதி புத்திரன் ஸ்ரீமுத்து விசைய ரகுனாதச் சேதுபதி காத்த

18 தேவரவர்கள் திருவாரூர் தியாகராச சுவாமியாருக்கு ஸ்ரீதாந தன்ம

19 சாஸன பட்டையம் எழுதிக் கொடுத்தபடி இவரு பூதானம் பண்ணி

20 க்கொடுத்த கிறாமமாவது சோழமண்டலத்தில் திருவாரூர்ச் சீமை

21 யில் நம்பிப்பாடி மாகாணத்தில் பாண்டவாய் ஆற்றில்பாச்சல் வ

22 டகரை அன்னவாசலுக்கு எல்கையாவது கீள்பால் எல்கை அன்ன

23 குடிக்கு மேற்கு தென்பால் எல்கை பாண்டவாய்க்கு வடக்கு மேல்

24 பால் எல்கை கலியாணி மாதேவிக்கு கிழக்கு வடபால் எல்கை

25 ஷி கல்யாணி மாதேவி எல்லைக்கு தெற்கு இன்னான்கெல்

26 கைக் குள்பட்ட அன்னவாசலை சித்திராபவுணமை புண்ணியா

27 காலத்தில் ஆதிசேதுவில் சுவாமி தியாகராச சுவாமியாருக்கு

28 ராஜஸ்ரீ மகாராசா அவர்கள் கொடுத்த அன்னவாசலை

## இரண்டாம் பக்கம்

29 ஸ்ரீசஹிரண்யோதக தாராபூற்வமாக ஸ்ரீ ஹிரண்யகர்ப்பயா

30 ஜி சேதுபதியவர்கள் தாநம் பண்ணிக் கொடுத்த

31 படியினாலே இந்த கிறாமத்துக்கு உண்டாகிய நஞ்

32 சை புஞ்சை செல தரு பாஷாண அக்ஷினியாகாம்மி

33 ய ஸித்த ஸாத்யமென்று சொல்லப்பட்ட அஷ்டபோக

34 சுவாமியங்களும் தெய்வதாயம் மானியம் உம்ப

35 ள னீங்கலாக சகல சமுதாய பிறாப்பித்தியும் சுக்கு

36 றவாரம் கட்டளையாகப் பண்ணினபடியினாலே புத்தி

37 ர பவுத்திர பாரம்பரைக்கும் சந்திராதித்திய வரைக்கும் ஆ

சந்திராற்கவரைக்கு தன்ம பரிபாலனமாக அனுபித்து
க்கொள்ள கடவராகவும் இந்த தன்மத்தை யாதாமொருவ
ர் பரிபாலனம் பண்ணினபேர்கள் கெங்கை கரையிலும்
ஆதி சேதுவிலும் ஆயிரங் கோதானம் பூதானம் பண்ணி
னபலன் பெறுவார்கள் இந்த தன்மத்துக்கு யாதாமொ
ருத்தர் ஆகுதம் பண்ணின பேர்கள் கெங்கைக் கரையிலும்
ஆதி சேதுவிலும் கராம்பசுவை கொண்ண தோஷத்தில்
போகக்கடவராகவும் உ ஸ்வத்த் தாத்வி குணம் புண்யம் பர
த்தாநு பாலநம் பரதத்தாப ஹாரேண ஸ்வதத்தம் நிஷ்ப
லம் பவேது: தாந பாலந யோர்மத்யே தாநாத் ஸ்ரயோநு
பாலநம் தாநாத் ஸ்வர்க்க மவாப்நோதி பாலநாத் அச்சு
தம் பதம்: சுபமஸ்து உ ஆனந்தவாத நாலங்ராயன் புத்திரன்
சின்னத் தம்பி நாலங்கராயன் கை எழுத்து உ இந்தபடிக்கு இந்த தற்ம
த்தை பரஞ்சோதி கமலய்யன் புத்திரன் பாரிசமாக தாரதெத்தமாக
கட்டளை
யிட்டபடியினாலே தாமே புத்திர பவுத்திர பரம்பரையும் பரிபால
னம் பண்
ணிவரக்கடவராகவும் சுபமஸ்து உ

சங்கரன் துணை

# 58

# தேர்போகிச் செப்பேடு

இருக்கும் இடம் : தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை அருங்காட்சியகம், இராமநாதபுரம்

அரசன் : முத்துவிசய ரகுநாத சேதுபதி காத்த தேவர்

காலம் : 30—1—1727

அளவு : 25 செ.மீ. × 21 செ.மீ.

**அமைப்பும் செய்தியும்** : இச்செப்பேட்டின் கைப்பிடி மேல்பகுதி உடைந்துள்ளது. பிழைகள் அதிகமாகவும் தெளிவில்லாத பல எழுத்துக்களையும் கொண்ட செப்பேடு. நேரான கோடிட்டு எழுதாததால் வரிகள்கோணலாகவும் உள்ளன. ஸ்ரீ ராமனாத ஸ்வாமி ஸஹாயம் எனத் தெலுங்கில் எழுதப்பட்டுள்ளது.

முத்துவிசய ரகுநாத சேதுபதி என்னும் கட்டயத் தேவர் 1729 இல்தான் பட்டமேற்றார் என்று வரலாற்றில்கூறப்படுகிறது. திருவுடையார்த் தேவருக்குப்பின் தண்டத்தேவர் என்னும் சுந்தரேசுவர ரகுநாத தேவரின் (ஆட்சித் தொடக்கம் 1720) முடிவு சரியாகத் தெரியவில்லை. அவருடைய இறுதிக் காலத்தில் கிழவன் சேதுபதியின் காமக் கிழத்தி மகன் பவான்சிங் என்ற பவானிசங்கரன் கிளர்ச்சி செய்து ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டான்.

தண்டைத்தேவருக்கு வாரிசு இல்லாத காரணத்தால் தன் தம்பி கட்டயத்தேவர் என்னும் முத்து விசய ரகுநாத சேதுபதியைவாரிசாக அறிவித்தார். தஞ்சை மராட்டிய மன்னர் உதவியுடனும் சிவகங்கை சசிவர்ணத்தேவர் உதவியுடனும் பவானிசங்கரனை விரட்டிக் கட்டயத் தேவர் ஆட்சிக்கு வந்தார். அவ்வாண்டு 1729 என்று கூறப்படுகிறது. ஆனால் கட்டயத் தேவர் காலத்து இச்செப்பேடு 1727இல் அளிக் கப்பட்டுள்ளது.

திருமலை சேதுபதியும், கிழவன் சேதுபதியும் மதுரை நாயக்கர் அரசுக்கு ஏற்பட்ட ஆபத்துக்களை நீக்கிக் காத்தமையால் பின் வந்த சேதுபதிகளும் மதுரை வழிகண்டான், மதுரை வழிகண்ட மார்த்தாண் டன் என்ற பட்டங்களைத் தங்களுக்கு உரித்தாக்கிக் கொண்டனர்.

சேது மூலத்தில் ஆதிசேது நவபாஷாணத்துக்குக் கிழக்கில் தோணித்துறை சத்திரக் கிராமம் தேர்போகித் துறையில் சிவகங்கை பிரதானி தாண்டவராயன் தன் தர்மத்தின்பொருட்டு சங்கரய்யர் பேரர் வேங்கிடகிருட்டிண அய்யரிடத்தில் நிலக்கொடை அளித்தார். இந்நிலம் தேர்போகியை அடுத்துக் கடற்கரையோரம் உள்ளது. அத னால் தான் தேர்போகித்துறை என்று செப்பேட்டில் கூறப்பட்டுள்ளது.

கொடையாக அளித்த நிலத்திற்கு எல்லை: வடக்கு எல்லை சமுத்திரம்; கிழக்கு எல்லை பள்ளவேற்குடி மேடு; தெற்கு எல்லை பருமணல் தேரியில் கட்ட உசிலமரம், காட்டுப் பிச்சர் கோயில், அரு கூரணி வடகரை தூளை வடமேடு; மேற்கு எல்லை நல்ல தண்ணீர்ச் செங்கல் கசிவு ஊத்து ஊரணி, நரிகுமிச்சாத் திடல், செங்கல் தூளை வடமேற்கு மூலைத்திடல், நந்திமேடு ஊரணி மேல்கரை என் பவனாகும்.

இவ்வெல்லையில் அக்கிரகாரம் கட்டிக்கொள்ள அனுமதிக்கப் பட்டது. எல்லைகட்குட்பட்ட எல்லாவகை நிலங்களும் வரிகள் உட்பட அளிக்கப்பட்டது எனச் செப்பேட்டில் பொறிக்கப்பட்டது.

நெல்லை மாவட்டத்தில் கடல்கரை மணல் குன்றுப் பகுதிகள் தேரி என வழங்கப்பட்டது போல் இராமநாதபுரம் பகுதியிலும் வழங் கப்பட்டமை இச்செப்பேடு மூலம் தெரிகிறது.

# செப்பேடு

## முதல் பக்கம்

உ

1 ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலேசுவறன் அரியரயி

2 றதள விபாடன் பாசைக்குத் தப்புவறாயிர கண்டன் க

3 ண்டனாடு கொண்டு கொண்டனாடு கொடதான் பாண்டி

4 மண்டல ஸ்தாபனாசாரியான் சோளமண்டலப் பிறதி

5 ஷ்டாபனாசாரியன் தொண்டமண்டல சண்ட பிறசண்

6 டன் யீளமும் கொங்கும் யால்ப்பாண ராயற் பட்டணமும்

7 யெம்மண்டலமும் அளித்து கெசவேட்டை கொண்டருளிய றாசாதிறா

8 சன் றாசபரமேசுவரன் றாசமாற்த்தாண்டன் றாசகெம்பீரன் றாச
மனோகர

9 ன் றாசகுலதிலகன் றாசறாஷ்ட்டாம்ந் தவித்தான் றாசாக்கள் தம்பி
றான் பரராச

10 கேசரி சொரிமுத்து வன்னியன் வன்னியறாஷ்ட்டாந் தவிள்த்தான்

11 பஞ்சவற்ணராய றாவுத்தற் கண்டன் விருது அந்தம்பிர கண்டன்
சாடிக்கா

12 ர கண்டன் சாமித்துரோகியள் முண்டன் துர்க்க ரேவெந்தன் துர்க்
கறாவு

13 த்தன் தேவைநகறாதிபன் சேதுமூலாகிடாக்ஷாந்திரன் ராமனாத சுவாமி

14 காரியாதுரந்திரன் சேதுகாவலன் சேதுக்கு வாத்தவன் சிவபூ

15 ச குருபூசை மரவாத வங்கிஷாதிபன் அடைக்கலம் காத்தான் விரை

16 யாத கண்டனில் விளங்கியதீரன் யெதிரிட்ட மருவலர்கள் சிர

17 முருளவெட்டு நிலையிட்ட திரன் ரவிகுலசேகரன் புவனேகவீர

18 ன் வீரவளர்னாடன் வீரகஞ்சுகன் அரசறாவண றாமன் அடியாற் வே

19 ளைக்காரன் பரதளவிபாடன் உரிகோல்சுரதன் உபயசாமர உற்பா

சன் கொட்டமடக்கிய வய்யாளி னாற்ராயணன் வீரவெண்பாமாலைய
ான் உபயகோடிச் சாமரஉல்லாசின் நளினக்காற்ன் யிளஞ்சிங்க
ம்ந் தளஞ்சிங்கம் பகைமன்னற் சிங்கம் துன்றராச்சன் ஆத்தில்ப்பாச்சி
கடலில்ப் பாச்சி கடலில்ப் பாச்சி மதப்புலி அடைக்கலங் காத்தான் தா
லிக்கு வேலி வளர் நாடன் பாண்டிவளர் னாடன் வய்கைவள்ர்
னாடன் வைகைமானதியான் பொதியமால்வரையான் கெங்கை
யாதிபன் தொண்டியந்துரை காவலன் மதுரை வளி கண்ட
மாற்த்தாண்டன் கிரிதுற்க செலதுற்க வனதுற்கமுடையான் அ
ஹமதேதனன் கெருடகேதனன் மீனகேதனன் னரசிம்ம கேதனன்
செங்காவி கேதனன் செங்காவிக் குடையோன் குடைமேல்ச்ச
ல்லியன் பூலோக தெயிவேந்திரன் சத்திய அரிச்சந்திரன் அரி
வுக்கு ஆதிசேஷன் தமிளுக்கு அகஷ்த்தியன் மல்லுக்கு வீமன்
வாளுக்கு அபிமன்னன் வில்லுக்கு விசயன் பரிக்கு னகுலன்
சாஷ்த்திரத்துக்குச் சகாதேவன் கொடைக்கி கற்ணன் அளகு
க்கு வாலசீவகன் ஆனெக்கி மகிபதி அன்னக்கொடி விளங்கிய தி
ரன் வீரதண்டை சேமத்தலை விளங்குமிரு தாளினான் அஷ்ட்ட
லெட்சுமி விளங்கிய தீரன் செயதுங்கராயற் விருப்பாட்சி
ராயற் கிற்ஷ்ணராயற் வங்கிஷாதிபனான காத்தூரான் குலோ
த்துங்க சோள்நல்லூரான் கீள்பால்ல் விரையாத கண்
டனில் யிருக்கும் அசுபதி கெசபதி நறபதி ஸ்ரீமது யிரண்ணிய
ய கெற்ப்பயாசி ரவிகுல முத்து விசைய இரகுனாத சேதுப
தி காத்த தேவறய்யர் அவற்கள் பிரதிவி ராச்சிய பரிபா

## இரண்டாம் பக்கம்

42 லனம் பண்ணிருளானின்ற சாலீவாகந சகா

43 ப்த்தம் 1648 கலியாப்த்தம் 4827 இதின்

44 மேல் செல்லானின்ற பிரபவ ணாம சம்பசரத்தில் உத்திராயண

45 த்தில் மகா மாசம் கிற்ஷ்ன பட்சத்தில் சோமவாரம் புன

46 ற்பூச நட்சத்திரமும் பஞ்சமியும் கபிலாவாகரணமும் கூடின

47 சுபயோக சுபதினத்தில் பூதானசாசனம் பண்ணிகுடுத்த

48 து பூதானசாசனமாவது சேதுமூலத்தில் ஆதிசேது நவ

49 பாசாணத்துக்கு கிளக்கு தோணித்துறை சத்திர கிராமம் தேற்

50 போகித்துறையில் சிவகெங்கை பிரதானி தாண்டவராய

51 ன் தற்ம்மம் கட்டுகுரதற்கும் ஷியூரிலிருக்கும் பாரத்வாஜ

52 கோத்ரத்தில் ஆபஸ்தம்ப ஸூத்ரத்தில் ...கர

53 ய்யர் பகறர் வேங்கிட கிற்ஷ்ண அய்யரிடத்தில் பூதான சாஸ

54 நமாக கட்டளையிட்ட நிலமாவாது ஷி தேற்போகி துரையில்

55 வடக்கெல்கையாவது சமுத்திரத்திற்கு தெற்கு கிளக்கெல்கை

56 யாவது பள்ளவேற்குடி மேட்டுக்கும் மேற்கு தென்பாற்க்கெல்

57 கையாவது பருமணல்த்தேரியில் கட்ட உசில மரத்துக்கும் கா

58 ட்டுப் பிச்சர் கோவிலுக்கும் அருகூரணி வடகரைக்கும் செங்க

59 ச்சூளை வடமேட்டுக்கும் வடக்கு மேல்பாற்கெல்கையாவது நல்ல

60 தண்ணீர்க் கசிவு ஊத்து ஊரணிக்கும் நரிகுமிச்சா திடலுக்கும்

61 செங்கச்சூளை வடமேற்கு மூலைத்திடலுக்கும் னந்திமேடு ஊரணி

62 மேல்கரைக்கும் கிளக்கு இன்னாங்கெல்கைக்குள்ப்பட்ட நிலத்தில்

63 அக்கிரகாரம் தற்ம்மங் கட்டிக்கொள்ளச் சொல்லியும் அதில் சே

64 ற்ந்த னிலத்தில் நஞ்சை புஞ்சை மாவடை திட்டு திடல்

65 நத்தம் செயித்தலை பாசி படுகை கீள்னோக்கிய கிணரு மேல்னோ
66 க்கிய மரமும் சில்வரி பெருவரி நிதி நிட்சேபம் செல தொற
67 பாஷாணா சண்ணிய சித்தி சாயுத்தியமென்று சொல்லச்
68 செயித அஷ்ட்டபோக தேஜ ஸ்வாமியங்களும் சுத்த சருவமா
69 னியமாக கட்டளையிட்டோம் புத்திர பௌத்திர பாரம்பரையாக ஆதி
70 சந்திராதித்திய சந்திரசூரிய பிரவேசமுள்ள மட்டும் ஆண்டு
71 கொள்ள சொல்லி கட்டளையிட்டோம் யிந்த தற்ம்மத்தை பரிபாலி
72 னம் பண்ணினபேர்கள் கசி றாமேசுவரம் தனுக்கோடிக் கரை
73 லேயும் கெங்கை கரையிலேயும் கோடி சிவலிங்க பிரதிஷ்ட்டை
74 விஷ்ணு பிரதிஷ்ட்டை பிரம்ம பிரதிட்டை கோடி பூதானம் கோ
75 தானம் கன்னிகாதானம் பண்ணின பலனை அடைவாராகவும் யி
76 ந்த தற்மத்துக்கு அகிதம் பண்ணினபேர்கள் கெங்கைகரை
77 யிலேயும் தனுக்கோடிக் கரையிலேயும் ஆயிரம் பிராம்மனாளை
78 யும் மாதா பிதாவையும் கோவதையும் கொண்ட தோஷத்தில்
79 போக கடவாராகவும் ஸ்வதத்தாத்வி குணம் புண்யம் ப
80 ரதத்தாநு பாலநம் பரத்தாப ஹாரேண ஸ்வ
81 தத்தம் நிஷ்பலம் பவேது : உ

# 59

## மன்னார்சலாபச் செப்பேடு

இருக்கும் இடம் : திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை

அரசர் : விசய ரகுநாத சேதுபதி காத்த தேவர்

காலம் : 13–4–1729

அளவு : 24 செ.மீ. × 17 செ.மீ.

**அமைப்பும் செய்தியும்** : இச்செப்பேடு தாமரை மலர் குவிந்தது போன்ற துளையில்லாத கைப்பிடியை உடையது. செப்பேட்டின் மையப் பகுதியில் முதல்பக்க முகப்பில் திருப்பெருந்துறையில் மாணிக்க வாசகருக்கு சிவபெருமான் குருவடிவாகி வந்து குருந்த மரத்தடியில் உபதேசம் செய்யும் காட்சி அழகுமிக்க வரைகோட்டு ஓவியமாகச் செதுக்கப் பட்டுள்ளது. சிவபெருமான் குரு வடிவில் யோகபட்டிகையுடன் விபூதி உருத்திராக்க மாலையணிந்து சிவப்பழமாகக் காட்சிதருகின்றார். எதிரில் அவ்வாறே தலையில் உருத்திராக்க மாலையணிந்து அடக்கமாக நின்று கைகள் இரண்டினாலும் வாய் பொத்திய நிலையில் மாணிக்க வாசகர் வரைகோட்டு ஓவியத்தில் தீட்டப்பட்டுள்ளார்.

செப்பேட்டின் முதல் பக்கம் முழுவதும் இரண்டாம் பக்கத்தின் பாதி அளவும் கோடுகள் இட்டு அவற்றின் நடுவில் எழுத்துக்கள் எழுதப்பட்டுள்ளன.

பாண்டிய நாட்டின் கிழக்குக் கடற்கரையில் குறிப்பாக மன்னார் சலாபத்தில் முத்துக்கள் மிகுதியாகக் கிடைக்கின்றன. மதுரை நாயக் கிரிடமிருந்து சேதுபதி அரசர்கள் முத்துக்குளிக்கும் உரிமையைப் பெற்றனர்.

திருப்பெருந்துறை ஆத்மநாத சுவாமிக்கும், சிவயோக நாயகிக்கும் அடப்ப வரிசை ஆபரணத்திற்காக மன்னார் சலாபத்தில் முத்துக்குளிப் பில் ஒரு பகுதியைச் சர்வ மானியமாகச் சேதுபதி அரசர் வழங் கினார். இக்கொடை அளிக்கப்பட்டபோது திருவாவடுதுறை ஆதீனத் தலைவராக விளங்கியவர் ஸ்ரீ (பின்)வேலப்பதேசிகர் (1700-1730).

மன்னார் சலாபத்தில் முத்துக்குளிப்போர் ஒருதோணிக்கு அஞ்சு சிப்பிஅளிக்க வேண்டும் என்று அரசர் கட்டளையிட்டார்.[1]

திருப்பெருந்துறை பாண்டி நாட்டில் மிழலைக் கூற்றத்தில் நடு வில் கூற்றம் தனியூர் பிரம்மதேயம் பவித்திர மாணிக்க சதுர்வேத மங்கலம் ஆதிகைலாச சிவபுரம் சேத்திரம் என்று கூறப்பட்டுள்ளது.

ஸ்ரீ ஆத்மநாதர் துணை என்று எழுதப்பட்டுள்ளது.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகந சகாப்தம் 1651 இதி

2 ன்மேல் செல்லாநின்ற சௌம்ய நாம சம்வத்சரத்தி

3 ல் உத்தராயணத்தில் வசந்த ருதுவில் சித்திரை மீ

4 16 உ சுக்ல பட்சத்தில் சுக்ர வாரமும் சப்தமியு

5 ம் அநுஷ நட்சத்திரமும் பிராஹ்மிநாம யோகமும் கூடி

6 ன சுபதினத்தில் தேவை நகராதிபன் சேது மூல

7 ரெட்சா துரந்தரன் சிவபூசா துரந்தரன் ராமனா

8 த சுவாமி காரியா துரந்தரன் பரராச கெச சிங்க

---

1. முத்துச் சிப்பிகள் 'கல்' என்ற பெயரில் அழைக்கப்பட்டுள்ளன. இதைப் பல செப்பேடுகள் உறுதிப்படுத்துகின்றன.

9 ம் பரராச சேகரன் ரவிகுல சேகரன் ரவிவற்ம்

10 மன் சொரிமுத்து வன்னியன் ஸ்வஸ்திஸ்ரீ மகாமண்

11 டலேசுபரன் அரியராயர தள விபாடன் பாசைக்குத் தப்

12 புவராத கண்டன் மூவராயிர கண்டன் கண்டனா

13 டு கொண்டு கொண்டனாடு குடாதான் பட்டமானங்

14 காத்தான் பாண்டி.மண்டலத் தாபனாசாரியன் சே

15 ாழமண்டல பிறதிட்டாபனாசாரியன் தொண்டம

16 ண்டல பிரசண்டன் ஈளமும் கொங்கும் யாள்ப்பாண

17 பட்டணமும் கெசவேட்டை கண்டருளிய ரரச

18 ாதிராசன் ராசபரமேசுரன் ராசமாத்தா

19 ண்டன் துட்டராயிர கண்டன் புவனேகவீரன் வீர

20 கண் சுகன் ஊரவள னாடன் வேதியர் காவலன் அர

21 சராவண ராமன் அடியார் வேளைக்காறன் அ

22 ந்தம்பிற கண்டன் சாமதுரோகியள் முண்ட

23 ன் பஞ்சவற்ண ராய ராகுத்தன் பனுக்குவார் கண்

24 டன் விசையலெட்சுமி காந்தன் கலைதெரி

25 யும் விற்பனன் வீரமாற்க்கன் கீற்த்திப் பிறதாபன்

26 வயிகை வளனாடன் கொட்டமடக்கி வய்யாவி னாறா

27 யணன் இவ்வுளி பாவடி மிதித்தேறுவார் கண்

28 டன் வீரவெண்பாமாலை தளசிங்கம் பகைம

29 ன்னர் சிங்கம் மதப்புலி அடைக்கலங் காத்தான்

30 தாலிக்கு வேலி சத்துராதியள் முண்டன்

## இரண்டாம் பக்கம்

31 வன்னியராட்டம் தவிழ்த்தான் துலுக்கர் ெ

32 மாகந் தவிழ்த்தான் ஒட்டியர் தளவிபாடன் ஓ

33 ட்டியர் மோகந் தவிழ்த்தான் மேவலர் கோள

34 றி மேஷலர்கள் வணங்குமிகு தாளினான் ஆ

35 ரியர் மானங் காத்தான் தொண்டியன்று

36 றை காவலன் துர்க ரேபந்தன் அனும கேத

37 னன் குடைக்குக் கற்ணன் பரிக்கு னகுலன் பரத

38 னாடக விற்ப்பன்னன் கருணா கடாட்சன் சங்

39 கித சாகித்ய வித்யா வினோதன் சகல கல

40 ா வல்லவன் லெட்சுமி விவாசன் வீரதண்

41 டை சேமத்தலை விளங்கும் வீர தாளினான் ரர்சகு

42 லக் காலகன் ராசாக்கள் தம்பிரான் பாண்டி வளனா

43 டன் செகராசர் பணிகின்ற செம்பிவள னாடன் செங்

44 காவிக் குடையான் பூலோக தேவேந்திரன் சே

45 து காஷலன் வரப்பிறதிப நடனத் துகவூர் கூத்தத்து

46 காத்தூரான குலோத்துங்க சோழநல்லூர் கீழ்பா

47 ல் விரையாத கண்டனிலிருக்கும் ஸ்ரீ யிரண்ய

48 கெற்ப்பாயாதி ரெகுனாத சேதுபதி காத்த தேவரவர்க

49 ன் புத்திரன் விசைய ரெகுனாத சேதுபதி காத்த தே

50 வரவர்கள் ஸ்வேத நதி தெட்சண தீரமாகிய பாண்டி

51 னாட்டில் மிழலைக் கூத்தத்தில் நடுவில் கூத்தம் தனியூ

52 ர் பிரம்மதேசம் பவித்திர மாணிக்கம் சதுருவேத மங்க

53 லபுரம் ஆதி கயிலாச சிவபுர சேத்திறமாகிய திருப்பெருந்

54 துறையில் விளங்கானின்ற பிரம்ம விஷ்ணு மகே

55 ஸ்வரர் சதாசிவ ரகுநாத பராசக்திக்கும் போக்கி

56 யமாக

57 ஸ்ரீ ஆத்மனாத சுவாமியள் சந்நித

58 ானத்துக்கு சிவயோக னாயகி அ

59 ம்மனுக்கு அடப்ப வரிசை ஆபரணத்துக்கு மன்னார்சலாபத்தில் சர்வ

60 வமானியமாக ஒரு தோணி அஞ்சு கல்லும் நீர்த்தடாக முத்து கு

61 ளித்துக்கொள்ளச் சொல்லி தாம்புரசாதன பட்டையம் குடுத்தோம் சந்தி

62 ராதித்தர் வரைக்கும் ஆண்டனுபவித்துக் கொள்ளக் கடவராகவும் இந்த

63 த்தற்மத்தை யாரொருவர் பரிபாலனம் பண்ணினவர்கள் கெங்

64 கைக்கரையில் கோடி சிவலிங்க பிறதிஷ்டையும் கோடி

65 பிரம்ம பிரதிஷ்டையும் பண்ணின பலனை அடைவார்

66 கள் இந்த தற்மத்துக்கு யாரொருவரகிதம் பண்ணி

67 நவர்கள் கெங்கைக் கரையிலும் சேதுக்கரையி

68 ம் மாதா பிதா குருவையும் பசுவையும் வதை

69 செய்த தோஷத்திற் போகக் கடவராகவும்

# 60

# பனையங்கால் செப்பேடு

இருக்கும் இடம் : சுப்பிரமணியர் கோயில், வைகை

அரசர் : குமாரமுத்து ரகுநாத சேதுபதி காத்த தேவர்

காலம் : 9–6–1729

**அமைப்பும் செய்தியும் :** இராமநாதபுரம் மாவட்டம்ஏர்வாடியிலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது வைகை என்னும் ஊர். அங்குள்ள சுப்பிரமணியர் கோயிலில் இச்செப்பேடு உள்ளது. செப்பேட்டில் காணும் குமாரமுத்து விசய ரகுநாத சேதுபதி அவர்களின் பிரதானி இராமலிங்கம் பிள்ளை அவர்கள் குளவயல் அருகேயுள்ள நத்தம் என்னும் பகுதியில் முதலில் இச்சுப்பிரமணியர் கோயிலை அமைத்தார். சுமார் 70 ஆண்டுகட்குமுன்புஅக்கோயில் கற்களைப்பிரித்துக் கொண்டு வந்து வைகையில் அக்கோயிலை அமைத்தார்.

இராமலிங்கம் பிள்ளையின் தந்தை திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர். இராமேசுவரத்திற்கு மகப்பேறு வேண்டி வந்தவர் வைகை ஊரின் வளம்கண்டு அங்கேயே தங்கிவிட்டார். இராமநாதன் அருளால் பிறந்த குழந்தைக்கு இராமலிங்கம் என்று பெயரிட்டார்.

வைகை வழியாக ஏர்வாடி சென்ற சேதுபதி, இராமலிங்கம் பிள்ளையை இராமநாதபுரத்திற்கு அழைத்துக் கொண்டு சென்று பிரதானி ஆக்கினார்.[1] இராமலிங்கம் பிள்ளையும் தன் ஊரை மறவாமல் அங்கு சுப்பிரமணியர் கோயில்கட்டி குமார விசுவேசுவரரையும் எழுந்தருளச்செய்தார்:

பிரதானி இராலிங்கம்பிள்ளை கட்டிய கோயிலுக்குப் பூசைக்காகச் சேதுபதி பனையங்கால் புளியங்குட்டம், பழஞ்சிறாய் என்ற இரு ஊர்களைக் கொடையாக அளித்தார்.

பனையங்கால் புளியங்குட்டத்தின் கிழக்கு எல்லை தெல்லேந்தல் பனையங்கால் ஊடுபாதை பழுபாகலூரணிப் பாதை, குத்துக்கல் தெற்கு எல்லை சேகு இபுராகீம் மரைக்காயர் தோட்டம், குட்டி ஆலிப்பிள்ளை தோட்டம், வன்னித் தேவர் தோட்டம்; மேற்கு எல்லை வைகைவாரியன் செவ்வல் தோட்டம், வணங்காமுடி தோட்டம், மாத்தாண்டன் செவ்வல்த் தோட்டம், குறிஞ்சானோடை பள்ளிவாசல் தோட்டம்; வடக்கு எல்லை தன்ம முக்குந்தர் புகையிலைத்தோட்டம், சக்கிலியன்குடி, மூளிப்பயல் தோட்டம் ஆகியவையாகும்.

பழஞ்சிறாய்க்கு இரகுநாத சமுத்திரம் என்று சேதுபதி அரசரின் பெயர் வழங்கியது. அவ்வூர்க்குக் கிழக்கு எல்லை ஆமைக்குட்டம், வெங்கலமுடையபிள்ளை கண்டவாய்க்கால்; தெற்கு எல்லை கொம்பிடமருதூர் மேலக்கண்மாய்க்கரை, மயிலாடு திடல் புகையிலை தொண்டாலி, சேதுரகுநாத சமுத்திரத்திற்கு வெண்ணிமாலை குமாரு சேருவைகாரன் நாளையில் தேறின ஊடுகரை; மேற்குஎல்லைசிறுக்கொம்பூதி தெற்குக் கடைக்கொம்புக்கரை சேது ரகுநாத சமுத்திரம் வயல் கிழக்கறுதி, உடையான் கருங்குளம்புதுக்கண்மாய்ப் பொருத்துக்கரை கிழக்கோடிய மாடைக்குளம், உடையான் கருங்குளம், வண்ணான்செய், சக்கிலியன் செய், சக்கர ராவுத்தன் செய்; வடக்குஎல்லை வாகைக்குளம் கருப்பஞ் செய், கரும்பனாரோடை, புதுக்குளம் கண்மாய்க்கரை ஆகியன ஆகும்.

சேகு இபுராகீம் மரைக்காயர் தோட்டம், குறிஞ்சானோடை பள்ளி வாசல் தோட்டம், சக்கர ராவுத்தன் செய் ஆசிய தொடர்களால் இசு

---

1. ஒரு நாள் களைத்துவந்த சேதுபதிக்கு வைகை அருகே வந்தவுடன் தாகமேற்படவே தனக்கென்று வைத்திருந்த கம்மஞ்சோற்றையும் மோரையும் சேதுபதிக்கு அளித்துத் தாகமும் தீர்த்தார். சேதுபதியால் 'தர்ம முக்குந்தர்' என்று பாராட்டுப்பெற்றார். இன்றும் அப்பெயர் கொண்ட குடும்பம் வைகையில் உள்ளது.

லாமியர்கள் நில உரிமை பெற்று வாழ்ந்ததும், அவர்கள் தொழுகை நடத்தப்பள்ளிவாசல்கள் மானிய நிலங்களுடன் இருந்ததும் பெறப் படுகிறது. சேதுகாவலராக விளங்கிய சேதுபதி மன்னர்களின் சமய ஒருமைப்பாட்டுக்கு இவை எடுத்துக்காட்டுகளாகும்.

செப்பேட்டின் பின்புற முகப்பில் கிழவன் சேதுபதி என்னும் இரகுநாத சேதுபதி காலத்தில் அளிக்கப்பட்ட கொடை பற்றிய குறிப் புக் காணப்படுகிறது.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 ஸ்வஸ்தி ஸ்ரீ சாலியவாகந சகாத்தம் 1652 இதன்மேல் செல்லாநின்ற

2 சாதாரண வருடம் ஆனி மாதம் 8 உ உத்திராயணத்தில் திசமியும் ஸௌமிய நாம

3 யோகமும் வாலவாகரணமும் சோமவாரமும் அசுபதி நட்சத்திரமும் கூடின

4 புண்ணிய காலத்தில் தேவநகராதிபன் சேதுமூலா துரந்தரன் ராமனாத சுவாமி

5 காரியா துரந்தரன் சிவபூசா துரந்தரன் பரராசசேகரன் பரராச கெச சிங்கம்

6 இரவிகுலசேகரன் இரவிமாத்தாண்டன் சொரிமுத்து வன்னியன் ஸ்வ ஸ்த ஸ்ரீ மன்

7 மகாமண்டலேசுரன் அரியராயிரதள விபாடன் பாசைக்கு தப்புவ ராயிர

8 கண்டன் மூவராயிர கண்டன் கண்டனாடு கொண்டு கொண்டனாடு கொடார்

9 தான் பாண்டிமண்டலத் தாபனாசாரியன் சோளமண்டலப் பிறதிட்ட னாசார்

10 ரியன் தொண்டமண்டல சண்டப்பிறசண்டன் ஈளமுங் கொங்கும் யாட்ப்பா

11 ணராயன் பட்டணமும் கெசவேட்டை கொண்டருளிய ராசாதிராச்சன் ரர்ச

12 பரமேசுரன் ராசமாத்தாண்டன் ராசகெம்பீரன் பரதள விபாடன் உரிகோ

13 ல் சுரதான்ன் அந்தப்பிற கண்டன் சாடிக்காறர் கண்டன் சுவாமித் துரோகியள்

14 மிண்டன் இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகைமன்னர் சிங்கம் துரைராய சிங்கம்

15 ஆற்றிற்பாச்சி கடலில்ப்பாய்ச்சி மதப்புலி அடைக்கலங் காத்தான் தாலிக்கி

16 வேலி சத்துருவாதியள் மிண்டன் வன்னியராட்டந் தவிள்த்தான் மேவலர்

17 கள் கோளரி மேவலர்கள் வணங்குமிரு தாளினான் வீரமகா கெம்பீரன்

18 கீர்த்திப் பிறதாபன் ஆரியமானங் காத்தான் தொண்டியந்துறை காவலன்

19 துர்க ரேவந்தன் அனுமகேதனன் குடைக்குக் கற்னன் பரிக்கு நகுலன்

20 கருணாகடாச்சன் குன்றியனுயர் மேருவிற் குன்றாய் வளைக்குணில் பொறித்தவன்

21 திலகனுதல் மடமாதர் மடலெளுத வருசுமுகன் விசையலட்சிமி காந்தன்

22 கலைதெரியும் விற்பன்னன் காமினி கந்தப்பன் வீரதண்டை சேமத்தலை

23 விளங்குமிரு தாளினான் ராசகுலதிலதன் ராசமனோபயங்கரன் மன்

24 னரில் மன்னன் மகுடவற்தன வேந்தன் மன்னர் சூடாமணி துட்டரில் துட்

25 டன் துட்ட நெட்டிரன் அஷ்ட்டத்திக்கு மனோபயங்கரன் கட்டாரி சாளு

26 வன் நவகோடி நாறாயணன் துலுக்கர்தள விபாடன் துலுக்கர் மோகந் த

27 விள்த்தான் ஒட்டியர்தள விபாடன் ஒட்டியர் மோகந் தவிள்த்தான் மலைகல

28 ங்கினும் மனங்கலங்காதான் அசுபதி நரபதி கெசபதி தனபதி அறிவுக்கு

29 அகத்தியன் சொல்லுக்கு அரிச்சந்திரன் வில்லுக்கு விசையன் மல்லுக்கு வீம

30 ன் வாளுக்கு அபிமன் தாலிக்கிவேலி அன்ன சத்திரசோமன் அடியார்கள்

31 வேளைக்காரன் செம்பி வளனாடன் பூலோக தெய்வேந்திரன் செங்

32 காவிக்குடையான் தனுக்கோடி காவலன் கெந்தமாதன கிரியான்

## இரண்டாம் பக்கம்

33 துகவூர்க் கூத்தத்தில்க் காத்தூரான குலோத்துங்க சோழநல்லூரில் கீள்

34 பால் விரையாத கண்டனிலிருக்கும் ஸ்ரீ இரணிய கெற்பயாசி ரகுனாத

35 ச்சேதுபதி காத்த தேவரவர்கள் மருமகன் குமாரமுத்து விசைய ரெகுநாத

36 ச்சேதுபதி காத்ததேவரவர்களுட பிறதானி ராமலிங்கம் பிள்ளையவர்கள்

37 குளவயல் சுப்பிறமணிய சுவாமியையும் குமார விசுவேசுரரையும் பிற திஷ்ட்டை

38 பண்ணி திருப்பணியும் கட்டி முகிப்பிச்சு பூசை நெய்வேதனத்துக்கு தேவ

39 தாயமாக தான பூறுவமாகப் பண்ணிகுடுத்த கிறாமமாவது பனையங் கால்

40 புளியங்குட்டம் பளஞ்சிறாய் இப்படிக்கு குமாரமுத்து விசைய ரெகு னாதச் சேதுபதி காத்ததேவர

41 வர்கள் விட்டுக்குடுத்தது கிறாமம் பனையங்காலுக்கு எல்கையாவது கிள

42 க்கு எல்கை தெல்லேந்தலுக்கும் பனையங்கால் ஊடுபாதை பழு

43 பாகலூறணிப் பாதைக்கும் குத்துக்கல்லுக்கும் மேற்கு தெக்கு எல்கை

44 சேகு இபுறாகி மரைக்காயர் தோட்டத்துக்கும் குட்டி ஆலிப்பிள்ளை தோரட்ட

45 த்துக்கும் வன்னித்தேவர் தோட்டத்துக்கும் வடக்கு மேற்கு எல்கை வைகை வாரி

46 யன் செவ்வல்தோட்டத்துக்கும் வணங்காமுடி தோட்டத்துக்கும் மாத்தா

47 ண்டன் செவ்வல்த் தோட்டத்துக்கும் குறிஞ்சானோடை பள்ளிவாசல் தோட்

48 டத்துக்கும் கிளக்கு எல்கை வடக்கு எல்கையாவது தன்மமுக்குந்தர் புகையி

49 லைத்தோட்டத்துக்கும் சக்கிலியன்குடிக்கும் மூளிப்பயல் தோட்டத்து

50 க்கும் தெற்க்கு இன்னாங் கெல்கைகுள்ப்பட்ட பனையங்கால் புளியங் குட்டம்

51 பளஞ்சிறாய் ரகுநாத சமுத்திரத்துக்கு எல்கை கிளக்கெல்கையாவது ஆமைக்குட்

52 டமும் வெங்கலமுடைய பிள்ளை கண்டவாய்க்கால் கிழக்கறுதிக்கு மேற்கு

53 தெக்கு எல்கையாவது கொம்பிட மருதூர் மேலக் கண்மாய்க்கரைக்கு

54 தெக்கு மயிலாடு திடலொட்டி மேற்க்கு பொகையிலை தொண்டாலி க்குஞ் சே

55 து ரெகுனாத சமுத்திரத்துக்கு வெண்ணிமாலை குமாரு சேருவைகாறன் நாளையில்

56 த்தேறின ஊடுகரைக்கு வடக்கு மேற்க்கு எல்லையாவது சிறுக்கொம் பூதி

57 தெக்குக் கடைக் கொம்புக்கரைக்கு ஷி கிறாமத்து வயல் கிழக்கறுதி க்கும்

58 உடையான் கருங்குளம் புதுக்கண்மாய்ப் பொருத்துக்கரைக்கும் கிளக் கோ

59 டிய மாடைக்குளத்துக்கும் உடையான் கருங்குளம் வண்ணான் செய் சக்கிலியன்

60 செய் சக்கரராவுத்தன் செய்குங்கிழக்கு வடக்கு எல்கையாவது வாகை

61 க்குளம் கருப்பஞ்செய்க்குங் கரும்பனாரோடைக்கும் புதுக்குளம் கண்மா
ய்க்கரை

62 க்குந் தெக்கு இன்னாங்கெல்கைக்குள்ப்பட்ட பளஞ்சிறாய் ரகுனாத
சமுத்திரம்

63 இதை சாந்த நஞ்சை புஞ்சை திட்டு திடல் மாவடை மரவடை ஊறணி
குட்டம்

64 மேல்நோக்கிய மரம் கீள்நோக்கிய கிணறு குடிபடை பள்ளுப் பறை
பாசி படுகை

65 நிதி நிட்சேபம் செல தரு பாசாணமும் சகலசமுதாயப் பிறாத்தியும்
கல்லுங்கா

66 வேரியும் புல்லும் பூமியும் உள்ளழவும் ஆதி சந்திராதித்தவரை சந்தி
ரப்பிறவேசம்

67 ஆண்டு அனுபவித்துக் கொள்ளக் கடவாராகவும் இந்த தன்மத்தை
பரிபாலினம் பண்ணினபேர்

68 களுக்கு காசி ராமீசுரத்திலே கோடி சிவலிங்கப்பிறதிட்டை பண்ணின
பலனை அடை

69 வாராகவும் இதுக்கு அகுதம் பண்ணின பேர்கள் கெங்கை கரையிலே

70 காராம் பசுவையும் மாதா பிதாவையும் வதை பண்ணின தோசத்தை
அடைவாராகவும்

## பின்புற முகப்பு

71 களரி சூழவயல் பனிரண்டு மடைக்கும் இந்த எல்கைக்குள்ப்பட்ட
ஏந்தலுக்கும்

72 மூகவூறணி அய்யாவர்கள் நாளையில் விட்டிருக்கிறது விரையடி 6 கலம்
மாத்தால் ½ பணம் அரை பொன் 1 மா

73 குடுத்து வருகிறது சின்னய்யா வாடைல் இறாம முளுது மகமை வாங்கி
வருகிறது உ

# 61

## கொத்தங்குடிச் செப்பேடு

| | | |
|---|---|---|
| இருக்கும் இடம் | : | தெய்வச்சிலைப் பெருமாள் கோயில், திருப்புல்லாணி |
| அரசர் | : | முத்து விசய ரகுநாதச் சேதுபதி காத்த தேவர் |
| காலம் | : | 7—1—1730 |
| அளவு | : | 26 செ.மீ. x 15 செ.மீ. |

**அமைப்பும் செய்தியும் :** இச்செப்பேட்டின் முகப்பில் சங்கு சக்கரம் வரையப்பட்டுள்ளது. ஸ்தல ஸ்தபதி எனப்படிக்கும் நிலையில் தெளிவில்லாத தெலுங்குத் தொடர் ஒன்று இடையில் எழுதப்பட்டுள்ளது.

சேதுபதி அரசர்கள் ஒவ்வொருவரும் தாம் பட்டம் ஏற்கும்போது பட்டக்காணிக்கையாகப் பட்டக்கிராமம் என்று பெயரிட்டு ஒரு ஊரை இராமேசுவரம் கோயிலுக்கு அளித்துவந்தனர். இவ்வாறு அளிக்க வேண்டும் என்று இராமேசுவரம் செப்பேட்டிலும் முன்னிருந்த சேதுபதிகளால் எழுதப்பெற்றுள்ளது.

ஆனால் 1730 இல் தண்டத்தேவர் என்ற சுந்தரேசுவர ரகுநாத சேதுபதி மறைவிற்குப்பின் பட்டம் பெற்ற கட்டயத்தேவர் என்னும் முத்து விசய ரகுநாதச் சேதுபதி காத்த தேவரின் தம்பி முத்து ரெகுனாத

சேதுபதி காத்த தேவர் அண்ணனுடைய பட்டக்காணிக்கையாகத் திருப்புல்லாணி தெய்வச்சிலைப் பெருமாளுக்கு ஆதன் கொத்தங்குடி என்ற ஊரைக் கொடையாக அளித்தார் என்று இச்செப்பேட்டின் மூலம் தெரிகிறது.

சேதுபதி அவர்கள் கொடையாக 1730 இல் தெய்வச்சிலைப் பெருமாளுக்குப் பட்டக்காணிக்கையாக அளிக்குமுன்னரே இவ்வூரின் ஒரு பகுதியை அந்தணர் ஒருவர் அனுபவித்து வந்துள்ளார். அவர் அனுபவித்துவந்த பிரமதேயத்துக்கு இடையூறு இல்லாமல் அதனை நீக்கித் தான் சீவிதமாக ஆண்டுகொண்டுவந்த பங்கினை மடை குளி ஏந்தல்கள் உட்பட அனைத்தையும் தானமாக அளித்தார்.

கிழக்கு எல்லை ஓனாய்ப் பொட்டலும், தெற்கு எல்லை ஆலங் குளமும், மருதம்பி குளமும், வடக்கு எல்லை கையகத்துத்திடலும், (மேற்கு எல்லை) பூசாரி கடம்போடை, கண்ணாக்குடி ஆயகுடி கள்ளி யடந்தல்நங்கை புள்ளான் கீழ்வித்தை மேல்வித்தை சிறுகுளம் ஆனைக் கால் பெரியஎலை சின்னஎலை ஆகியவைகளும் நான்கு எல்லை களாகக் குறிக்கப்பட்டுள்ளன.

இக்கொடை ராசாக்கள் முன்னிலையில் அளிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. 28-29 ஆம் வரிகளில் கொடையாக அளிக்கப்பெற்ற ஊர்ப்பெயர் கொத்தங்குடி என்றும், இறுதி 49 ஆம் வரியில் கொத்தங் குளம் என்றும் கூறப்பட்டுள்ளது. இருவகை வழக்கும் உண்டுபோலும்.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1651 இதன் மேல் செல்லாநின்ற ஸவு ம்மி

2 ய நாம ஸம்மச்சரத்து உத்தராயணத்தில் யேமந்த ரிதுவில் கிட்டிண பட்சத்தில் தை

3 ய் அம்மாவாசை புண்ணிய காலத்தில் உத்திராடத்தில் சவும்மிய வாச ரத்தில் தேவை நக

4 ராதிபன் சேதுமூலா ரெக்ஷா துரந்தரன் சிவபூசா துரந்தரன் இராம னாத சுவாமி காரிய

5 துரந்தரன் பரராசசேகரன் பரராச கெசரிங்கம் ரவிகுலசேகரன் விபம்
மன் சொரிமுத்

6 து வன்னியன் ஸ்வஸ்திஸ்ரீ மகாமண்டலேசுரன் அரியராய தளவிபாடன்
பாசைக்கு

7 தப்புவராயிர கண்டன் மூவராயிர கண்டன் கண்டநாடு கொண்டு
கொண்ட

8 நாடு குடாதான் பட்டமானங் காத்தான் துட்டராயிர கண்ட புவனேக
வீரன் வீ

9 ரகஞ்சுகன் வீரவளநாடன் வேதியர்காவலன் அரசராவண ராமன்
அடியார்

10 வேளைக்காறன் அந்தம்பிற கண்டன் சாமித்துரோகியள் மிண்டன் பஞ்ச

11 சவன்னராய ராகுத்தன் பனுக்குவார் கண்டன் விசையலட்சுமி காந்த

12 ன் கலைதெரியும் விற்பன்னன் காமினி கந்தப்பன் சத்திய பாசா அரிச்
சந்திரன்

13 வீரதண்டை சேமத்தலை விளங்குமிரு தாளினான் விக்கிறமாற்க்கன்

14 கீற்த்திப் பிறதாபன் வைகை வளநாடன் கொட்டமடக்கி வய்யா

15 ளி நாறாயணன் இவுளிப்பாவடி மிதித்தேறுவார் கண்டன் வீரவெண்

16 பாமாலை இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகைமன்னர் சிங்கம் ம

17 தப்புலி அடைக்கலங் காத்தான் தாலிக்குவேலி சத்துராதியள் மின்

18 டன் வன்னியராட்டந் தவிர்த்தான் மேவலர்கள் கோளரி மேவ

19 லர்கள் வணங்குமிரு தாளினான் கீற்த்திப் பிறதாபன் அரியமானங்
காத்தா

20 ன் தொண்டியந்துறை காவலன் துர்க ரேபந்தன் அனுமகேதனன் குடை

21 க்கு கற்னன் பரிக்கு நகுலன் பரதநாடக விற்பன்னன் கருனாகிடாட்ச

22 ன் சங்கீதசாயுச்சிய வித்தியா வினோதன் சகலகலா வல்லவன்

23 லெட்சுமி னிவாசன் சேதுகாவலன் வம்சாதிபநாத துகவூர்கூத்தத்து

## இரண்டாம் பக்கம்

24 காத்தூரான குலோத்துங்கசோள நல்லூர் கீள்பால் விரையாத க

25 ண்டனில் இருக்கும் ஸ்ரீஇரணிய கெற்பையாதி சேதுபதி காத்த ரெகுனாத

26 தேவர் புத்திரன் சேதுபதி காத்ததேவர் முத்துவிசையரெகுனாத தேவர் தம்

27 பி முத்து ரெகுனாதச் சேதுபதி காத்ததேவர் சுவாமி தெய்வச் சிலைப் பெருமா

28 ள் சுவாமிக்கு பட்டக்காணிக்கைக்கு விட்ட நிறாமமாவது ஆதன் கொ த்தங்கு

29 டியில் பீரமதாயம் ஒருபங்கு நீங்கலாக சீவிதமாண்டபங்கும் அந்தவூர்

30 மடைகுளி ஏந்தல்களும் சுவாமி தெய்வச்சிலைப் பெருமாளுக்கு தான பூறுவ

31 மாக தாம்பர சாதன பட்டையமும் கட்டளையிட்ட ஆதன் கொத்தங் குடிக்கு

32 எல்கையாவது கீள்எல்கை ஓனாய்ப் பொட்டலுக்கு கீழ் தென் எல்கை ஆ

33 லங்குளத்துக்கு வடக்கு மருதம்பி குளத்துக்கு கிழக்கு வடஎல்லை கய்ய

34 கத்து திடலுக்கு தெற்கு பூசாரி கடம்போடை கண்ணாக்குடி ஆயக் குடி கள்ளியடந்த

35 ல் நங்கை புள்ளான் கீழ்வித்தை மேல்வித்தை சிறுகுளம் ஆனைக்கால் பெ

36 ரிய எலை சின்னஎலை கணகதிரலாக இன்னுங்கெல்கைகுள்ப்பட்ட மா வடை

37 மரவடை திட்டுத்திடல் கீள்நோக்கிய கிணறுமேல்நோக்கிய மரமும் தானபூறு

38 வமாக சுவாமி தெய்வச்சிலைப் பெருமாளுக்கு விட்டபடியினாலே இது க்கு விக்கின

39 ம் பண்ணினபேர்கள் கெங்கை கரையிலேயும் சேதுக்கரையிலேயும்
காராம்ப

40 சுவை கொன்ன தோஷத்திலேயும் விறுமகத்தி பண்ணின தோஷத்திலே

41 யும் போகக்கடவாராகவும் பின்னும் குரு நிந்தாச்சினை பண்ணின தோ
ஷத்திலே

42 யும் சிறீகத்தி பண்ணின தோஷத்திலேயும் சிசுக்களை கொண்ண
தோஷத்தி

43 லேயும் விசுவாச பாதகம் பண்ணின தோஷத்திலேயும் குருத் துரோகம்

44 பண்ணின தோஷத்திலேயும் மாதா பிதாக்களை நிந்தாச்சினை பண்

45 ணின தோஷத்திலேயும் நம்புனாரை சசித்த தோஷத்திலேயும் தெய்வ

46 த்துரோகம் பண்ணின தோஷத்திலேயும் யிப்படி மகாபாதகங்க

47 ள் பண்ணின தோஷத்திலேயும் போதக் கடவாராகவும்

48 இதுவும் ராசாக்கள் முன்னிலையாக சுவாமி தெய்வச்சிலைப் பெரு
மாளுக்கு னி

49 ட்டகிறாமம் ஆதன் கொத்தங்குளம்

# 62

# கீழைக்காட்டுச் செப்பேடு

இருக்கும் இடம் : தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை அருங்காட்சியகம், இராமநாதபுரம்

அரசர் : முத்து விசைய ரகுநாதச் சேதுபதி காத்த தேவர்

காலம் : 7—1—1730

அளவு : 20 செ.மீ. x 15 செ.மீ.

**அமைப்பும் செய்தியும் :** இச்செப்பேட்டில் அழகிய வேலைப்பாடு மிக்க துளையுடன் கூடிய கைப்பிடியில் நடுநாயகமாகத் திருநாமம் வரையப்பட்டுள்ளது. திருநாமத்தின் வலப்புறம் சக்கரமும் இடப்புறம் சங்கும் அழகிய வரைகோட்டுச் சிற்பங்களாக வரையப்பட்டுள்ளன உ 'ஸ்தல ஸ்தபதி' என்று தெலுங்கில் எழுதப்பட்டுள்ளது.

இன்று திருப்புல்லாணி என வழங்கும் இராமபெருமான் வரலாற்றோடு தொடர்புடைய திருப்புல்லணை தெய்வச்சிலைப் பெருமாளுக்கு கீழைக்காட்டில் முன்பு கொடைநிலம் இருந்தது ஆனால் அந்நிலப் பகுதி பெருமாளுக்கு இல்லாமல் வேறு வகைகளுக்கும் கட்டுப்பட்டுக் கிடந்தது. அதாவது இறைவனுக்குக் கொடைநிலம் பயன்படாமல் இருந்தது.

சேதுபதி அவர்கள் தம்பி முத்து ரெகுனாதச்சேதுபதி காத்த தேவர் அதைக் கேள்வியுற்று தம் அலுவலர் சிலரால் அதனைத் தீர்த்துவைத் துக்கொடை நிலத்தின் பயன் கோயிலுக்கு முன்பு நடந்தபடியே நடக்க வேண்டுமென்று அதைச் செப்பேட்டிலும் பொறித்து அளித்தார்.

கீழைக் காட்டுக்கு எல்லை: வடக்கு எல்லை முன்சீப்புடையார் கோயிலுக்குத் தென்கிழக்குச் சக்கரக்கல், வயிரவன் கோயிலுக்கு வட மேற்கு கல் இதன் கிழக்குக்கல், விழுந்த புளி ஊருணி, நயினான் மரைக் காயன்கல்; கிழக்கு எல்லை பத்திரா தரவைக்குக் கிழக்குக் சக்கரக் கல், ஆனை விழுந்தான் மேல்கரை சக்கரக்கல், உப்பு ஊருணி கீழ்க் கரை,அலைவாய்க்கரை சக்கரக்கல்; தெற்கு எல்லை அலைவாய்க் கரை;மேற்கு எல்லை உப்பாத்து அளம்.

இராசாக்கள் முன்னிலையாகத் தெய்வச்சிலை பெருமாளுக்கு கீழைக்காடு மீண்டும் கொடையாகக் கொடுக்கப்பட்டதாகக் கூறப் படுகிறது.

கடற்கரை 'அலைவாய்' என்று கூறப்படுகிறது. (திருச்சீரலை வாய் என்ற பெயர் கடற்கரையில் உள்ள திருச்செந்தூருக்கு வழங்கப் படுகிறது). திருமால் கோயில் கொடைப்பகுதிகளைக் குறிக்க 'சக்கரக் கல்' நடப்படுவது வழக்கம். இதனைத் 'திருவாழிக்கல்' என்றும் கூறுவர். கீழைக்காட்டில் உப்பெடுக்கும் தொழில் நடைபெற்றதையும், கடல்வாணிகத்தில் ஈடுபட்ட இசுலாமியப் பெருமக்கள் வாழ்ந்தார்கள் என்பதையும் அளம், மரைக்காயன் என்ற சொற்களால் அறிகின்றோம்.

இதே செப்பேட்டுக்கு மற்றொரு நகலும் இராமநாதபுரம் அருங் காட்சியகத்திலேயே உள்ளது.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 ஸ்வஸ்தி ஸ்ரீ ஸாலிவாஹந ஸகாப்தம் 165, இதன்மேற் செல்

2 ல்லாநின்ற சவும்மிய நாம ஸம்வஸ்சரத்தில் உத்தராயணத்தில் யேமந்

3 த ரிதுவில் தைய் மாசத்தில் கிருஷ்ண பக்ஷத்தில் அம்மவாசையும் புத

4 வாரமும் உத்திராட நக்ஷத்திரமும் சுபயோக சுபகரணமும் பெற்ற தைய
5 ம்மவாசை புண்ணிய காலத்தில் தேவைநகராதிபன் சேதுமூல ரக்ஷா
6 துரந்தரன் சிவபூசா துரந்தரன் ராமனாத சுவாமி காரியா துரந்தரன்
7 பரராச கெச சிங்கம் பரராச சேகரன் இரவிகுல சேகரன் ரவி வற்
8 மன் சொரிமுத்து வன்னியன் ஸ்வஸ்திஸ்ரீமன் மகா மண்டலேஸ்வர
9 ன் அரியராயிர தளவிபாடன் பாசைக்குத் தப்புவராயிர கண்டன்
10 மூவராயிர கண்டன் கண்டநாடு கொண்ட கொண்டநாடு கொ
11 டாதான் பட்டமானங் காத்தான் துட்டராயிர கண்டன் புவனேக வீர
12 ன் வீரகஞ்சுகன் வீரவளனாடன் வேதியர் காவலன் அரச ராவண
13 ராமன் அடியார் வேளைக்காறன் அந்தம்பிற கண்டன் சாமித் துரோ
14 கியன் மிண்டன் பஞ்சலற்ண ராய ராவுத்தன் பனுக்குவார் கண்ட
15 ன் விசையலெட்சுமி காந்தன் கலைதெரியும் வீற்பனன் காமிநி
16 கந்தப்பன் சத்திய அரிச்சந்திரன் வீரத்தண்டை சேமத்தனல விளங்கு
17 மிரு தாளினான் வீரசூர விக்கிறமாற்கன் கீற்திப் பிறதாபன் வை
18 கை வளனாடன் ஈகாட்டமடக்கி வையாளி நாராயணன் இவுளி
19 பாவடி மிதித்தேறுவார் கண்டன் வீரவெண்பா மாலை இளஞ்சிங்க
20 ந் தளஞ்சிங்கம் பகைமன்னர் சிங்கம் மதப்புலி அடைக்கலங்
21 காத்தான் தாலிக்குவேலி சத்துருவாதியள் மிண்டன் வன்னிய
22 ராட்டந் தவிள்த்தான் மேவலர்கள் கோளரி மேவலர்கள் வணங்
23 குமிரு தாளினான் கீற்திப் பிறதாபன் அரிய மானங் காத்தான்
24 தொண்டியந்துறை காவலன் துர்க ரேபந்தன் அனும கேதன
25 ன் குடைக்குக் கற்னன் பரிக்கு நகுலன் பரத நாடகப் பிறவீண
26 ன் கருணா கடாட்சன் சங்கீத சாயித்திய வித்தியா வினோதன்
27 சகல சாம்பிறாச்சிய லக்ஷ்மிநிவாசன் சேது காவலன் வங்
28 கிஷாதிபனாகிய அசுபதி கெசபதி நரபதி சேதுபதியாகிய துக

29 வூர்க் கூற்றத்துக் காத்தூரான குலோத்துங்க சோள நல்லூர்

## இரண்டாம் பக்கம்

30 இன்னால் விரையாத கண்டனிலிருக்கும் ஸ்ரீ ஹிரண்ய கெற்ப

31 யாசி சேதுபதி காத்த ரெகுனாத தேவர் புத்திரன் சேதுபதி காத்த தே

32 தவர் மூத்து விசைய ரெகுநாதத்தேவர் தம்பி முத்து ரெகுனாத்ச் சே

33 துபதி காத்ததேவர் சுவாமி தெய்வச்சிலைப் பெருமாள் நயினார் கிளைக்

34 க்காடு கட்டுப்பட்டுக் கிடந்த படியினாலே சில்ராதித்து முன் நடந்

35 தபடிக்குச் சறுவமானியமாக சுவாமிக்குத் திருப்பிவிட்டுத் தாம்பு

36 ர சாதனங் கொடுத்தபடி சாதனமாவது இந்தக் கிளைக் காட்டுக்கு

37 எல்லையாவது வடபாற்கெல்கை முன்சீப்புடையார் கோ

38 விலுக்கும் தென்கிளக்குச் சக்கரக் கல்லுக்கும் வயிரவன் கோ

39 விலுக்கு வடமேற்குக் கல்லுக்கும் இதின் கிளக்குக் கல்லுக்கும்

40 விளுந்த புளி ஊறணிக்கும் நயினான் மரைக்காயன் கல்லுக்

41 கும் தெற்கு கீல்பாற்கெல்கை பத்திரா தரவைக்குக் கிளக்கு

42 ச் சக்கரக் கல்லுக்கும் ஆனை விளுந்தான் மேல்கரைச் சக்கரக்

43 கல்லுக்கும் உப்பு ஊறணி கீல் கரைக்கும் அலைவாய்க்கரை

44 ச் சக்கரக் கல்லுக்கும் மேற்கு தென்பாற்கெலினை அலைவா

45 ய்க்கரைக்கு வடக்கு மேற்பாற்கெல்கை உப்பாத்து அளத்

46 துக்கு கிளக்கு இன்னாங் கெல்கைக்குள்ளிட்ட நஞ்சை புஞ்

47 சை மாவடை மரவடை திட்டுத் திடல் கீல்நோக்கிய கிணறு

48 மேல்நோக்கிய மரம் நிதி நிட்சேப செல தரு பாஷாணாக்ஷின்யா

49 காமிய சித்த சாத்தியமாகிய அஷ்டபோகப் பலப் பிறாத்தியும் ரா

50 சாக்கள் முன்னிலையாக தெய்வச் சிலைப் பெருமாள் நயினாரு

51 க்கு விட்டுக்கொடுத்த கிளைக்காடு இந்தத் தற்மத்தை பரிபாலனம்

52 பண்ணின பேர்கள் காசியிலேயும் சேதுவிலேயும்
53 சிவலிங்கப் பிரதிஸ்டையும் கோடி பிறும்ம பிறதிஷ்டையும்
54 கோடி கோதான பூதாணமும் பண்ணின பலனையடைவா
55 ராகவும் இதுக்கு விகாதம் பண்ணின பேர்கள் கெங்கைக்
56 கரையிலும் சேதுக்கரையிலும் காராம்பசுவையும் பிராம
57 ணரையும் மாதா பிதாவையும் கொன்ற தோஷ
58 த்திலே போகக் கடவாராகவும்

# 63

# காராம்பல் செப்பேடு

இருக்கும் இடம் : கோதண்டராமசாமி கோயில்
இராமநாதபுரம்

அரசர் : ரகுநாத சேதுபதி காத்த தேவர்

காலம் : 12—1—1730

**அமைப்பும் செய்தியும்** : அழகிய தாமரை மொட்டுப்போன்ற கைப் பிடியில் சில துளையுடன் இச்செப்பேடு காணப்படுகிறது. ஸ்தல ஸ்த பதி எனப்படிக்கும் வகையில் தெலுங்குத் தொடர் இடையிலே எழுதப் பட்டுள்ளது,

சேதுபதியவர்கள் இராமநாதபுரம் முகவை கோதண்டராம சுவாமி க்குப் பூசை திருமாலை திருவிளக்கு ஆகியவற்றுக்கு அக்கோயில் தானிகர் தலத்தார் ஆகியோருக்குக் காராம்பல் என்ற ஊரைக் கொடை யாக அளித்ததை இச்செப்பேடு கூறுகிறது.

நிலத்தைப் புரவு என்றும், சில நிலத்தைக் தட்டு என்றும், வயலை வயக்கல் என்றும், குளத்தின் நீர்ப்பிடிப்புப் பகுதியைக் கோறுவை என்றும் இச்செப்பேடு குறிக்கிறது.

காராம்பலின் நாற்பாங்கு எல்லைகள் முறையாக இச்செப்பேட்டில் கூறப் பெறவில்லை. தொறுவரூர் புரவு, கந்தன் வயக்கல், சானாயேந்

தல் கண்மாய், காவனூர்ப்புரவு, காணத்திடல், சானாயேந்தல் ஊர், குமரியேந்தல், காரேம்பல், பொருத்துகரை, வண்ணான்தட்டு, தொண்டர் யேந்தல்குளம் கோறுவை, பேயாண்டி தட்டு, பெரிய குருந்தன் தட்டு, அச்சடிபரம்பு, ஊருணிக்கரை. புல்லங்குடி கண்மாய் குளம் கோறுவை. வேறிகூம்பு ஆகியவை காராம்பலின் எல்லையில் உள்ளவைகளாகக் குறிக்கப்பட்டுள்ளன.

ஏந்தல் என்ற நீர்நிலை ஏம்பல் என்றும் கூறப்படும். காரேந்தல் காரேம்பல் காராம்பல் என இவ்வூர் பெயர் பெற்றிருக்க வேண்டும். எல்லை கூறுமிடத்து காரேம்பல் எனவும்இவ்வூர் குறிக்கப்பட்டுள்ளது

இச்செப்பேட்டின் இடையில் 'கோதண்டராமசுவாமி துணை, என்று தமிழில் எழுதப்பட்டுள்ளது. இடையில் எழுதப்பட்டுள்ள கிரந் தத்தில் உள்ள காப்புப்பகுதி முழுமையாக இல்லாமல் உள்ளது. திருப் புல்லாணியில் சென்னவீரப்பன் என்பவர் இச்செப்பேட்டை எழுதி யுள்ளார்.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சாப்தம் 1651 ள் தின்மேல் செல்லாநின்ற சவு

2 மிய நாம ஸ்ம்வத்ஸரத்தில் உத்தராயணத்தில் ஏமந்திரிதுல் மாக மாசத்து பூற்வ

3 பட்சத்தில் பஞ்சமியும் திங்கள்கிழமையும் உத்திராட்டாதி நட்சத்தி ரமும் சிவ

4 னாமயோகமும் வாலவாகருணமும் சுபயோக சுபகரணமும் பெத்த சுபதினத்தி

5 ல் தேவைநகராதிபன் சேதுமூலா ரட்சாதுரந்தரன் ராமநாதசுவாமி காரியா துரந்

6 தரன் சிவபூசாதுரந்தரன் பரராசசேகரன் ரவிவர்ம ரவிகுலசேகரன் ஸ்வஸ்தஸ்ரீமந் ம

7 காமண்டலேசுரன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு கொடாதான்

8 யாட்பாணமும் கெசவேட்டை கண்டருளிய ராசாதி ராசபரமேசுரன் ராசமாத்தான்

9 டன் ராசமகா கெம்பீரன் புவனேகவீரன் வீரகஞ்சுகன் அரசராவண ராமன் அடியா

10 ர் வேளைக்காறன் கொட்டமடக்கி வையாளி நாராயணன் வீரவெண் பாமாலை இள

11 ஞ்சிங்கம் பகைமன்னர்சிங்கம் ஆற்றுப்பாச்சி கடலிற்பாச்சி மதப்புலி அடைக்கல

12 ங்காற்றான் தானை சத்துருவாதிகள் மிண்டன் பட்டமா

13 னங்காத்தான் துஷ்டராயிர கண்டன் அந்தம்பர கண்டன்

14 சாடிக்காறர்கள் மிண்டன் ஸ்வாமித்துரோகர் கண்டன் பனுக்குவார் கண்டன் பஞ்

15 சவன்ன ராயராகுத்தன் மேவலர்கள் கோளரி மேவலர்கள் வணங்குமிரு தாளினான் கா

16 விக்குடையான் கருணாகடாட்சன் சொரிமுத்து வன்னியன் சத்திய பாஷா அரிச்சந்திரன்

17 கொடைக்கு கற்னன் பரதநாடகப் பிறவீணன் இவுளிபாவடி மிதித் தேறுவார்

18 கண்டன் தழங்கண்டு தத்தளிப்பார் மிண்டன் பரதழ்விபாடன் அனும கேதனன் சகல குணா

19 பிராமன் சங்கீத சாயித்திய வித்தியாவினோதன் வீரைவழநாடன் வேதியர் காவல

20 ன் காமினி கந்தற்பன் கலைதெரியும் விற்பன்னன் குன்றினுயர் மேரு விற் குன்றாவளைகு

21 னில் பொறித்தவன் திலதநுதல் மடவார்கள் மடலெழுத வருசுமுகன் துஷ்டநிற்கிர

22 க வீரத்தண்டை சேமத்தலை விழங்குமிரு தாழினான் தொண்டியந் துறை காவலன்

23 துர்க ரேபந்தன் வைகை வழநாடன் வன்னியராட்டந் தவிழ்த்தான் மதுரையார் ஆபத்

24 சகாயன் வீரலட்சுமி காந்தன் விசையலட்சுமி சம்பன்ன சகல சாம்பி ராச்சிய ல

25 க்ஷிமிநிவாசன் துகவூர் கூற்றத்துக் காத்தூரான குலோத்துங்க சோழ நல்லூர் கீள்பா

26 ல் விரையாதகண்டனில் இருக்கும் சேதுபதி வங்கிஷாதிபனான ஹிரண்யகெற்ப

27 யாஷி ரவிகுல சேகர ரகுநாத சேதுபதி காத்த தேவரவர்கள் ராமனாத புரம் முகவை கோதண்ட

28 ராமசுவாமிக்கு பூசை திருமாலை திருவிளக்கு தானிகர் தலத்தாருக்கு விட்ட

## இரண்டாம் பக்கம்

29 கிறாமமான காராம்பல் இந்த காராம்பலுக்கு எல்கை ஆவது தெந் புரவில் செ

30 தாறுவளூர்புரவு கந்தன் வயக்கலுக்கு வடக்கு ஆத்துக்கு தென்கரை நீக்கி வடக்கு

31 ஆறுஉள்பட மேற்புரவில் சானாயேந்தல் கண்மாய்க்குள் காவனூர்ப் புரவில்

32 காணத்திடலுக்குகிழக்கு சானாயேந்தல் ஊர் வடக்கு புரவில் குமரியேந் தல் புர

33 வுக்கு தெக்கு மெ கண்மாய் தென்கரைக்கு கிழக்கு காரேம்பல் பொருத்துக

34 ரைக்கு வடக்கு வன்னான்தட்டு உள்பட திக்கு ஓடிய தொண்டர்யேந்தல்

35 குளம் கோறுவை உள்பட தொண்டர் யேந்தல் தென்கரைக்கொம் பிதெ

36 ாண்டர் யேந்தல் புரவில் பேயாண்டி தட்டுக்கு தெக்கு பெரியகுருந்தன் தட்டு நீ

37 டறுதிக்கு அச்சடி பரம்பு ஊறணிகரை தெக்கு கிளக்கு ஓடிய புல்லங்குழ க

38 ண்மாயில் குளம்கோறுவையில் வேற்கூம்புக்கு மேற்கு கோதண்டராமசு

39 வாமிதுணை இந்தப்படி தற்மச் சாசனம் பட்டையம் கட்டளைப் படியிலாலே ஆ

40 சந்திராற்கம் புத்ரபௌத்ர பாரம்பரியம் குடுத்துவரக்கடவராகவும் இந்த தம்மத்தை

41 பரிபாலனம் பண்ணினவர்கள் கோடி சிவலிங்கப் பிறதிஷ்டையும் கோடி பிரம்ம பிர

42 திஷ்டையும் பண்ணின சுகிறுதத்தை அடைவாராகவும் இந்தத் தற்மத் துக்கு அகித

43 ம் பண்ணினவர்கள் காசி சேதுவில் காராம்பசுவையும் பிராமணரையும் மா

44 தா பிதாவையும் வதைபண்ணின தோஷத்தி லே போகக்கடவாராகவும் இந்தப்ப

45 டிக்கு தற்மசாசன பட்டையம்ங் குடுத்தோம் கோதண்டராமசுவாமிக்கு ஸ்ரீ ஹிரண்யக

46 ற்பயாஜி சேதுபதி காத்த ரெகுனாதத்தேவர் தானாத் ஸ்ரயோநு பாலநம் தாநா

47 த் ஸ்வர்க்க மவாப்நோதி பாலநாத் அச்சுதம் பதம் : இந்தப்படிக்கு தற்மசாசனப் பட்டை

48 யம் திருப்புல்லாணியில் இருக்கும் சென்ன வீரப்பன் கையெழுத்து

# 64

# கள்ளிக்கோட்டைச் செப்பேடு

இருக்கும் இடம் : சமஸ்தான அலுவலகம், இராமநாதபுரம்

அர்சர் : குமார முத்து விசய ரகுநாத சேதுபதி காத்த தேவர்

காலம் : 11—1—1731

**அமைப்பும்செய்தியும் :** இராமநாதபுரம் பாலசுப்பிரமணியசுவாமி கோயில் சன்னதியில் தைப்பூச நாள் அன்று கற்றறிந்த அந்தணர்கள் 24 பேருக்குச் சேதுபதி அரசர் அக்கிரகாரம் அளித்த செய்தியை இச்செப் பேடு கூறுகிறது. அளிக்கப்பட்ட நிலத்திற்கு நாற்பாங்கு எல்லைகள் கூறப்படுகின்றன.

கள்ளிக் கோட்டையின் மேற்கு எல்லை குமுக்கோட்டை, வடக்கு எல்லை கொல்லனூர், கிழக்கு எல்லை மின்னந்தி, தெற்கு எல்லை காமன்கோட்டை என்பனவாகும். கள்ளிக்கோட்டை செவ்விருக்கை நாட்டில் உள்ளது. மேற்கண்ட நான்கு எல்லைக்குட்பட்ட நன்செய், புன்செய், திட்டு, திடல், மாவடை, மரவடை, ஏந்தல், பிரவடை, கிணறு இதர வருவாய் அனைத்தும் கொடையாக அளிக்கப்பட்டது.

## செப்பேடு

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1652 இதன்மேல் செல்லாநின்ற

2 கலியத்தம் 4831 இதன்மேல் செல்லாநின்ற சாதாரண வருஷம் உத்த ராயண

3 த்தில் தை மாதம் திங்கட்கிழமை பௌர்ணமி அமாவசியும் பூச நக்ஷத்திர

4 சித்திரநாம யோகமும் பாலவாகரனமும் சிவராத்திரி தியாச்சியமும் பூகச்சியம்

5 இப்படிக்கு யுகந்த சுப நட்சத்திர சுபயோக சுபகரணமும் பெத்த தைப்பூச

6 புண்ணிய காலத்தில் பாலசுப்ரமணிய சுவாமி சன்னதியில் ஸ்ரீமது தேஷ்வ நகராதிபன்

7 சேதுமூல துரந்தரன் ராமநாதசுவாமி காரியதுரந்தரன் சிவபூசா துரந்தரன்

8 பரராச சேகரன் பரராச கெச சிங்கம் ரவிகுல சேகரன் ரவிவர்மன் சொரி

9 முத்து வன்னியன் அரியராயதள விபாடன் பாசைக்கு தப்புவராயிர கண்டன் மூவராய

10 கண்டன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு கொடாதான் பட்ட மானங் காத்தான்

11 துஷ்டராய கண்டன் புவனேக வீரன் வீரகஞ்சுகன் வீரவளநாடன் வேதியர் காவலன்

12 அரசராவண ராமன் அடியார் வேளைக்காரன் பரதள விபாடன் ஊரி சூலசுரதானன்

13 அந்தம்பர கண்டன் சாமித்துரோகியள் மிண்டன் பஞ்சவர்ணராயர் ராஜத்தர் மிண்டன்

14 பனுக்குவார் ராயகண்டன் கொட்டமடக்கி வய்யாளி நாராயணன் இவுளி பாவடி மீதித்

15 தேறுவார் கண்டன் வீர வெண்பரமாலை இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகைமன்னர்

16 சிங்கம் துரைராயன் ஆத்தில் பாய்ச்சி கடலில் பாச்சி மதப்புலி அடைக்கலங்

17 காத்தான் தாலிக்கு வேலி சத்துருவாதி வன்னியராட்டந் தவிழ்த்தான் மேவலர்கள்

18 கோளரி மேவலர்கள் வணங்குமிரு தாளினான் மேவலர்கள் சிங்கம் வீரமஹா

19 கம்பீரன் கீர்த்தி பிரதாபன் ஆரியமானங் காத்தான் தொண்டியன் துறை

20 காவலன் துர்க ரேபந்தன் அநும கேதனன் குடைக்கு கர்ணன் பரிக்கு நகுலன் பரத

21 நாடகப்பிரவீணன் கருணாகடாட்சகன் குன்றுயர் மேருவை குன்றாய் வளைகுணில்

22 பொரித்தவன் திலதநுதல் மடமாதர் மடல் எழுதவரும் சுழுகன் விஜயலட்சுமி காந்தன்

23 கலைதெரியும் விற்பனன் காமினி கந்தப்பன் சத்தியவாசகன் சத்திய அரிச்சந்திரன்

24 சங்கீத சாகித்திய வித்யாவினோதன் வீரத்தண்டை சேமத்தலை விளங்குமிரு தாளினான்

25 சகல சாம்பிராச்சிய லெட்சுமி நிவாசன் துலுக்கர்தள விபாடன் துலுக்க மோகந் த

26 விள்த்தான் ஒட்டியர்தள விபாடன் ஒட்டியர் மோகந் தவிழ்த்தான் சுப்பிரமணிய

27 சுவாமி கருணா கடாட்சன் தளவாய் சேதுபதி காத்த தேவரவர்கள் வங்கிஷாதி

28 பதியான துகவூர் கூத்தத்தில் காத்தூரான குலோத்துங்க சோழ நல்லூர்

29 கீழ்பால் விரையாத கண்டனிலிருக்கும் ஸ்ரீ ஹிரண்ய கெர்ப்பாதிபதியன் ரெகுநாதச்

30 சேதுபதி காத்த தேவரவர்கள் புத்திரன் முத்து விசைய ரகுநாத சேதுபதி

31 காத்த தேவரவர்கள் புத்திரரும் குமார முத்து ரெகுநாத சேதுபதி தேவரவர்கள்

32 பாலசுப்ரமணியசுவாமி கோவில் சன்னதியில் அக்கிரகாரம் பிரதிஷ்டை பண்ணி

33 க்கொடுத்தோம் உதக தான பூறுவமாக கொடுத்த கிராமமாவது செவ்விருக்கை

34 நாட்டில் குமுக்கோட்டைக்கு கிளக்கு கொல்லனூருக்கு தெற்கு பின்னந்திக்கு

35 மேற்கு காமன்கோட்டைக்கு வடக்கு இந்நான்கெல்லைக் குள்பட்ட கள்ளிக்

36 கோட்டை நஞ்சை புஞ்சை திட்டுத் திடல் மரவடை ஏந்தல்

37 பிரவடை ஊரணி குட்டம் தோப்பு துரவு மேல்நோக்கிய மரம் கீழ் நோக்கிய

38 கிணறு நிதி நிச்சேபம் செல துரு பாஷாணமும் முதலான அட்டபோக பாக்கியங்கள்

39 முக்கல சமுதாய பீராப்தியும் அக்கிரகாரத்துக்கு தானம் பண்ணிக் கொடுத்த படியினாலே

40 சந்திராதித்த வரைக்கும் கெணசங்கியாபாகம் இருபத்து நாலு இந்த இருபத்துனாலு

41 பாகமும் சர்வமாக ஆண்டனுபவித்துக் கொள்வாராகவும் இந்த தர்மத்தை யாதா

42 மொருவர் பரிபாலனம் பண்ணின பேர்களுக்கு கோடி சிவலிங்க பிரதிஷ்டையும்

43 கோடி பிரம்ம பிரதிஷ்டையும் பண்ணின சுகிர்தத்தை அடைவாராகவும்

44 இந்த தர்மத்துக்கு அகிதம் பண்ணின பேர்கள் தனுக்கோடி கரையிலும் கெங்கை

45 கரையிலேயும் மாதாபிதாவையும் குருவையும் காராம் பசுவையும் வதை பண்ணின தோஷத்திலே போகக்கடவாராகவும்

# 65

## பொசுக்குடிச் செப்பேடு

இருக்கும் இடம் : திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை

அரசர் : குமார முத்து விசைய ரகுநாத சேதுபதி காத்த தேவர்

காலம் : 1–9–1731

அளவு : 19.5 செ.மீ. × 15 செ.மீ.

**அமைப்பும் செய்தியும்:** துளையுடன் கூடிய இச்செப்பேட்டின் கைப்பிடி கோபுரக் கலசம்போல் மிகவும் அழகிய முறையில் அமைக்கப் பட்டுள்ளது. கைப்பிடியின் இரண்டாம் பக்கத்தில் நீண்ட முத்தலைச் சூலம் அமைக்கப்பெற்றுள்ளது. சூலத்தின் இடப்புறம் தூபக்கால் போன்ற அமைப்பில் வரைகோட்டு ஓவியம் வரையப்பட்டுள்ளது.

முதற்பக்கம் இடையில் 'ராமலிங்கந் துணை' என்றும், இரண்டாம் பக்கம் மேல் பகுதி 'ஸ்தல ஸ்தபதி' என்றும் தெலுங்கில் எழுதப் பட்டுள்ளது. இரண்டாம் பக்கத்தில் எழுதப்பெற்றுள்ள 10 வரிகளும் செப்பேட்டின் மேல்பகுதியிலிருந்து எழுதப்பெறாமல் நடுப்பகுதியில் எழுதப்பட்டுள்ளது புதுமையாகக் காணப்படுகிறது.

1–9–1731இல் சேதுபதி அரசராக காத்தமுத்து ரகுநாத தேவ ரவர்கள் ஆட்சிசெய்யும்போது அவர் மகன் குமார முத்து விசைய ரகுநாத

சேதுபதி காத்த தேவரவர்கள்[1] திருவாவடுதுறை பண்டாரச் சன்னிதி அவர்களுக்கு மடப்புறமாகப் பொசுக்குடி என்ற ஊரைக் கொடையாக அளித்தார். அப்போது திருவாவடுதுறை ஆதீனத் தலைவராக விளங்கியவர் ஸ்ரீ திருச்சிற்றம்பலதேசிகர் (1730-1770).

பொசுக்குடியின் எல்லைகள் கூறப்பெறவில்லை. நன்செய், புன்செய் திட்டு, திடல், இடைகுடி, பள்ளு உள்படச் சருவமானியம் அளிக்கப் பட்டது என்பது மட்டும் குறிக்கப்பட்டுள்ளது.

பழனியான் துணை என்ற காப்புச் சொல்லுடன் இச்செப்பேடு முடிவடைகிறது. பெரும்பாலும் பிழையின்றி எழுதப்பட்டுள்ளது. கிரந்த எழுத்துக்களின் பயன்பாடு மிகவும் குறைவாக உள்ள செப்பேடு.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 சிவஸ்ரீமன் மஹாமண்டலேசுவரன் அரியராயிரதள விபாடன்

2 பாஷைக்குத் தப்புவராத கண்டன் மூவராயிர கண்டன் கண்ட

3 னாடு கொண்டு கொண்டனாடு கொடாதான் பாண்டிமண்டலத் தா

4 பனாசாரியன் சோழமண்டலப் பிறதிட்டாபனாசாரியன் தொண்

5 டைமண்டலச் சண்டப்பிறசண்டன் பூறுவ தெட்ஷண பச்சிம

6 உத்தர சத்த சமுத்திராதிபன் யீழமும் கொல்லமும் யாட்பா

7 ணராயன் பட்டணமும் மழித்துக் கெசவேட்டை கண்டரு

8 ழிய ராசாதிராசன் ராசபரமேசுரன் ராசமாற்தாண்டன் ரா

9 சகெம்பீரன் துட்ட நிற்கிரக சிட்டர் பரிபாலனன் கட்டாரி

10 சாமுவன் நவகோடி நாராயணன் அட்டதிக்கரசர் மனோப

11 யங்கரன் துலுக்கர்தள விபாடன் துலுக்கர் மோகந்

12 தவிழ்த்தான் ஒட்டியர்தள விபாடன் ஒட்டியர் மோகத்

1. இவர் 1735 ஆம் ஆண்டு சேதுபதி அரசர் ஆனார்.

13 தவிழ்த்தான்

14 மலை கலங்கினுப் மண்ங்கலங்காதான் பட்டாபிஷே

15 கன் குதிரைக்கு நதலன் அறிவுக் ககத்தியன் சொல்லுக் க

16 ரிச்சந்திரன் வில்லுக்கு விசையன் வாளுக் கபிமன் கொ

17 டைக்குக் கன்னன் அன்னசத்திர சோமன் அடைக்கலங்

18 காத்தவன் தாலிக்கு வேலி செம்பி வழநாடன் பூலோக

19 தெய்வேந்திரன் இரவிகுல சேகரன் இரணிய கெற்ப சுதா

20 கரன் தேவை நகராதிபன் அசுவபதி கெசபதி நரபதி சேதுப

21 தி காத்தமுத்து ரெகுநாத தேவரவர்கள் பிறிதிவி ராச்சி

22 ய பரிபாலனம் பண்ணியருளா நின்ற சாலிவாகன சகா

23 த்தம் 1654 க்குமேல்ச் செல்லாநின்ற விரோதிகிறுது ஹு ஆவ

24 ணி மீ 31 உ சவுமிய வாசரமும் பூறுவ பட்ஷத்தில்த் துவா

25 தெசியும் அவிட்ட நட்செத்திரமுஞ் சோபனநாம யோகமும்

26 பவகறணமும் பெத்த சுபதினத்தில் குமார முத்து விசைய

27 ரெகுனாதச் சேதுபதி காத்த தேவரவர்கள் திருவாவடுதுை

28 றப் பண்டாரச் சன்னதி மடப்பிறமாகத் கட்டளையிட்ட பொ

29 சுக்குடிகு எல்லையாவது நஞ்சை பிஞ்சை திட்டு

## இரண்டாம் பக்கம்

30 திடல் இடைகுடி பள்ளுள்படச் சறுவமானியமாகத்

31 தான பூறுவமாய் நாம் தர்மா சாதனம் பண்ணிக்

32 கொடுத்தபடியினாலே சந்திராதித்தர் வரைக்கும்

33 ஆண்டனுபவித்துக்கொள்ளக் கடவாராகவும்

34 இந்தத் தன்மத்தை யாதாமொருவர் பரிபாலனம்

35 பண்ணினபேர் கோடி கன்னிகாதானம் பண்ணின

36 பலன் பெறுவார்கள் அகுதம் பண்ணினபேர்

37 கெங்கைக் கரையிலே காராம்பசுவையும்

38 சேதுக்கரையிலே பிராமணனைக் கொன்ற தோ

39 ஷத்திலே போவாராகவும் உ பழனியான் துணை

ராமலிங்கந் துணை

ஸ்தல ஸ்தபதி

# 66

# செறந்தைச் செப்பேடு

| | | |
|---|---|---|
| இருக்கும் இடம் | : | தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை அருங்காட்சியகம், இராமநாதபுரம் |
| அரசர் | : | குமார முத்து ரகுநாதச் சேதுபதி காத்த தேவர் |
| காலம் | : | 17—4—1732 |
| அளவு | : | 25 செ.மீ. × 16.5 செ.மீ. |

**அமைப்பும் செய்தியும் :** தாமரை மொட்டுப் போன்ற அழகான கைப்பிடியுடன் இச்செப்பேடு அமைந்துள்ளது. கைப்பிடியில் துவாரம் இல்லை. ஸ்தல ஸ்தபதி என்று தெலுங்கில் எழுதப்பட்டுள்ளது. சாலி வாகன ஆண்டில் 1654இல் 4 கீழே எழுதப்பட்டுள்ளது.

சேதுபதியால் அளிக்கப்பட்ட கொடை நிலமான செறந்தை முதலில் அளிக்கப்பட்டது கோபாலய்யன் என்பவருக்கேயாகும். 30-ஆம் வரியில் 'கோபாலய்யனுக்கு' என்பதைக் 'கோபாலய்யனுட' என்று திருத்தி 36-38 ஆம் வரிகளின் இடையில் 'புத்திரன் ராமய்யனு க்கு' எனச்சிறிய எழுத்தில் எழுதப்பட்டுள்ளது. எல்லை கூறுமிடத்தில்

கிடார வட்டகை என்பதும் இரு வரிகளுக்கிடையில் தனியாக எழுதப் பட்டுள்ளது.

கொடை அளிக்கப்பட்ட நாள் அமாவாசை என்றும் அன்று திங்கட் கிழமை என்றும் கூறப்படுகிறது. ஆனால் அமாவாசை மூன்று நாட் களுக்குமுன்னரே வியாழக்கிழமையில் வருகிறது. கொடைஅளிக்கப் பட்ட நாளும் செப்பேடு வெட்டிய நாளும் வெவ்வேறு நாட்களாக இருந்து இம்மாறுபாடு வந்தது போலும்.

இராமய்யனுக்குத் தனுக்கோடிப் புண்ணிய தலத்தில் அளிக்கப்பட்ட செறந்தையின் தெற்கு எல்லை இறையான் ஏந்தல், கிழக்கு எல்லை அந்திரங்குளம், வடக்கு எல்லை கிடார வட்டகையில் நரசிங்கன் ஏந்தல், மேற்கு எல்லை தனிச்செயம்.

சென்னவீரப்பண்டாரம் மகன் சென்னவீரப்பன் இந்தச் செப்பேட் டை எழுதியுள்ளார்.

இதே செப்பேட்டுக்குத் திருப்புல்லாணி தெற்கு ரத வீதியில் உள்ள டி.பி.எல் எஸ். சுப்பிரமணிய ஐயர் வசம் ஒரு நகல் செப்பேடு உள்ளது.[1] அச்செப்பேடு 27 செ.மீ. × 16.7 செ.மீ அளவு உடையது. 37-ஆம் வரியில் இடையில் எழுதப்பட்டுள்ள 'புத்திரன் ராமய்யனுக்கு' என்பது இயல்பான வரியாக எழுதப்பட்டுள்ளது. இதன்மூலம் இராம நாதபுரம் அருங்காட்சியகத்தில் உள்ள திருத்தப்பட்ட செப்பேட்டுக்குப் பின்னர் திருப்புல்லாணி சுப்பிரமணிய ஐயர் வசமுள்ள செப்பேடு தயாரிக்கப்பட்டது என்பது தெரிகிறது. 40 ஆம் வரியில் உள்ள கிடார வட்டகையில் என்ற தொடர் திருப்புல்லாணிச் செப்பேட்டில் இல்லை. பிற பகுதிகளில் இவ்விரண்டு செப்பேட்டிலும் எவ்வித மாற்றமும் இல்லை.

செப்பேட்டு நிலக் கொடை பெற்ற கோபால அய்யன் இடையில் மரணமடைந்திருக்கலாம். அவர் மகன் ராமய்யன் நிலத்தைத் தனக்கு உரிமை ஆக்கும் பொருட்டுச் செப்பேட்டில் திருத்தத்தைச் செய்திருக்

1. தமிழ்நாடு அரசு தொல்பொருள் துறை கோவை அருங்காட்சியகக் காப்பாளர் இரா. ப. கருணானந்தம் அவர்கள் மூலமாகக் கிடைத்தது.

கலாம். எப்படியிருந்தாலும் செப்பேட்டை மக்கள் எவ்வாறு ஆவண மாகக் கொண்டனர் என்பதற்கும், திருத்தி உரிமை பெற்றதற்கும் இச் செப்பேடு சுவையான சான்று தந்து அதன்மூலம் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த செப்பேட்டாகத் திகழுகிறது.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 ஸ்வஸ்திஸ்ரீ ஸாலீவாஹந ஸகாப்தம் 1654 இதன்மேல்ச் செல்லாநின்

2 ற பரியதாபி நாம சம்மச்சறத்தில் உத்தராய்ணமும் வசந்த ரிதுவில் சயி

3 த்திர மாசத்தில் கிஷ்ணபச்சத்தில் சோமவாரத்தில் அமாவாஸையும்

4 ரோகணி நச்செத்திரமும் சவுபாக்கியநாம யோகமும் பாலவாகரணமும்

5 கூடின புண்யகாலத்தில் தேவ நகராதிபன் சேது மூலீ ரீச்ச் துரந்தரன்

6 ராமநாத சுவாமி காரியா துரந்தரன் சிவபூசா துரந்தரன் பரராஜ சேகரன் பர

7 ராச கெஜ ஸிம்ஹம் அடைக்கலம் காத்தான் ஸ்வஸ்ரீமந் மஹாமண்ட லேஸ்வ

8 ரந் தாலிக்குவேலி அரியராயிர தீழவீபாட்டன் பாசைக்கு தப்புவார் கண்டன்

9 மூவராயிர கண்டன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு கொட்டாதான்

10 பாண்டிமண்டலத் தாபநாசாரியன் சோழமண்டல பிரதிஷ்டாபனா சாரியன்

11 பூற்வ தெட்சண ஈழமும் கொங்கும் யாட்ப்பாண பட்டணமும் கெ

12 கஜ வேட்டை கண்டறுளிய ராசாதிராசன் ராசப்ரமேஸ்வரன் ராச

13 மார்த்தாண்டன் ராஜகெம்பீரன் புவனேக வீரன் வீரகஞ்சுகன் வே

14 தியர் காவலன் அரச ராவண ராமன் அடியார் வேளைக்காரன் கொட்ட

15 மடக்கி வய்யாளி னாறாயணன் இவ்வுழி பாவடி மிதித்தேறுவார் கண்

16 டன் வீரவெண்பாமாலை இளஞ்சிங்கந் தவஞ்சிங்கம் பகைமன்

17 னர் சிங்கம் ஆற்றுப்பாச்சி கடலுப்பாச்சி மதப்புலி அடைக்கலங்கா

18 த்தான் சத்துராதியள் மிண்டன் பட்டமானங் காத்தான் துட்டராயிர

19 கண்டன் அந்தம்பிரகண்டன் சாடிக்காறர்கள் கண்டன் சாமித் துரோ

20 கியள் மிண்டன் பஞ்சவன்ன ராய ராவுத்தர் பனுக்குவார் கண்டன் மே

21 வலர்கள் கோளரி மேவலர்கள் வணங்கு

22 குமிரு தாளினான் காவிக்குடையான்

23 கறுணாகடாட்சன் சொரிமுத்து வன்னி

24 யன் சத்திய அரிச்சந்திரன் குடைக்குகற்

25 னன் பரிக்கி நகுலன் மல்லுக்கு வீமன் வில்லுக்கு விசையன் பரதனாட

26 கப் பிறவீணன் கலைதெரியும் விற்பன்னன் குன்றினுயர் மேருவில்
குன்றா

27 வளைகுணில் பொறிற்றவன் திலதனுதல் மடவார்கள் மடலெழுதும்
வருசு

28 முகன் விசையலெட்சுமி காந்தன் துட்டநிக்கிறகன் கிட்ட பரிபாலநன்

29 வீரதண்டை சேமத்தலை விளங்குமிரு தாளினான் தொண்டியந்துறை

30 காவலன் துறைக ரேபந்தன் அனுமகேதனன் வையகை வளனாடன்

31 வன்னியராட்டந் தவிழ்த்தான் மதுரயர்பச்சகாயன் விசையலெட்சுமி

32 சம்பன்னன் சகலசாம்பிராச்சியலட்சுமிவாசன்னான துகவூர் கூத்தத்தில்

33 காத்தூரான குலோத்துங்க சோழநல்லூர் கீழ்பால் விரையாத கண்

34 டனிலிருக்கும் ஸ்ரீஹிரண்யகர்ப்பயாஜி ரவிகுல விஜய

## இரண்டாம் பக்கம்

35 ரகுனாதச் சேதுபதி காத்த தேவரவர்கள் புத்திரன் குமார முத்து

36 ரெகுனாதச் சேதுபதி காத்த தேவரவர்கள் கோபால அய்யனுட

37 புத்திரன் ராமய்ய னுக்கு

38 தனுக்கோடிக் கரையில் உதக தாராபூறுவமாகத் தானம்பண்ணி

39 குடுத்த கிராமமாவது இறையான் ஏந்தலுக்கு வடக்கு அந்திரங் கு

40 ழத்துக்கு மேற்க்கு கிடாற வட்டகையில் நரசிங்கன் ஏந்தலுக்கு தெற்கு தனிச்செயத்து

41 க்கு கிளக்கு இன்னாங்கெல்லைக்குள்ப்பட்ட செறத்தை சறுவ

42 மான்னியமாக தானம்பண்ணிக் குடுத்தபடியினாலே அதுக்கு வுண்டாகிய

43 நஞ்சை புஞ்சை திட்டு திடல் மாவடை மரவடை நிதி நிக்ஷேப ஜெல

44 தரு பாஷா ணாச்சின்னி யாகாம்மிய ஸித்த சாத்தியம்மென்று சொல் லச் செய்த

45 அஷடபோக தேஜ ஸாம்யங்களும் தானாதி வினிமய விக்கிர யங்களுக்கு

46 யோக்யமாக சந்திராதித்தவரைக்கும் புத்ர பவுத்திர பாரம்பரையாக ஆண்டும

47 னுபவித்துக் கொள்ளக்கடவாராகவும் சுபமஸ்து ஸ்வதத் தாத்வி குணம் புண்யம்

48 பரதெத்தாறு பாலநம் பரதத்தாப ஹாரேண ஸ்வதத்தம் நிஷ்பலம் பவேது : தாந பா

49 லன யோர்ம்மத்யே தாநா ஸ்ரயோறு பாலனம் தாநாத் ஸ்வர்க்க மவாப்நோதி

50 பாலனாத் அச்சுதம் பதம் : இதுக்கு யெவனாகிலும் இந்தத் தர்ம்மத்தை பரி

51 பாலனம் பண்ணினபேர்கள் காசியிலே கோடி சிவலிங்கப் பிற

52 திட்டையும் கோடி பிரம்மப் பிறதிட்டையும் கோடி கன்னிகாதான

53 மும் பண்ணின பாவ த்தை அடைவாராகவும் இந்தத் தர்மத்

54 துக்கு அகிதம் பண்ணினபேர்கள் கெங்கையிலேயும் காசியிலே

55 யும் தனுக்கோடியிலேயும் மாதா பிதாவையும் குருவையும் காராம்

56 பசுவையும் வதை பண்ணின தோஜத்திலே புக கடவாராகவும்

57 ஸிவ ஸிவ ஸிவ ஸிவஸ்ரீ இந்தச் சாதனம் எளிதினேன் சென்ன

58 வீரப் பண்டார மகன் சென்ன வீரப்பன் எளுத்து

# 67

# திருப்பொற்கோட்டைச் செப்பேடு

| | | |
|---|---|---|
| இருக்கும் இடம் | : | திருப்பெருந்துறை ஆவுடையார் கோயில் |
| அரசர் | : | இரகுநாத சேதுபதி காத்த தேவர் |
| காலம் | : | 10-11-1733 |
| அளவு | : | 25.3 செ.மீ x 17.7 செ மீ |

**அமைப்பும் செய்தியும் :** இச்செப்பேட்டில் பெரிய துளைகளையுடைய கைப்பிடியில் உ குறியுள்ளது. செப்பேடு வெட்ட அதிக கனமில்லாத தகடு பயன்படுத்தப்பட்டிருப்பதால் முன் பக்கத்தில் பொறித்த சிலஎழுத்துக்களின் அழுத்தம் பின்புறமும் காணப்படுகின்றன.

திருவாவடுதுறை மடத்தில் அருளாட்சி நடத்திய பன்னிரெண்டாம் ஆதினகர்த்தர் தவத்திரு திருச்சிற்றம்பல தேசிகர் அவர்களிடம் (1730-1770) திருமடத்தின் மயேச்சுர பூசைக்காக சேதுபதி அரசர் அம்பலவாணசுவாமி சன்னதியில் ஏழுகோட்டை நாட்டில் ஓரூர் வட்டகையில் திருப்பக்கோட்டை என்னும் ஊரைக் கொடையாக அளித்தார். திருப்பக்கோட்டை நான்கெல்லைகட்குட்பட்ட ஏந்தல் பிறவடை நன்செய் புன்செய் மாவடை மரவடை உட்பட எல்லாவற்றையும் அரசர் அளித்தார்.

சேதுபதி நாட்டில் உள்ள சுங்கத்துறை எட்டு மாகாணத்துக்குள்ளும் இருக்கின்ற வணிகர்கள் திருவாவடுதுறை ஆதினத்துக்கு மகமை அளிக்க வேண்டும் என்றும் ஆணையிட்டார்.

மகமை விகிதம்,

1) பொதி ஒன்றுக்குப் பணம் ஒரு மாகாணி

2) சுமை ஒன்றுக்குப் பணம் அரைமாகாணி

3) பேட்டைத் தலங்கள், சில்லரைக் கடைகளுக்கு மாதத் துக்குப் பணம் அரைக்கால்

4) துறைமுகத்தில் நெல் ஒரு கண்டிக்கு மூன்று மாகாணி

5) துறைமுகத்தில் சுமைக்கு அரைமாகாணி

6) பாறு, படகு ஏற்றுமதி இறக்குமதிக்குப் பத்துப் பணம் தீர்வைபட்டால் பணம் அரை

7) உப்பளத்தில் ஒரு பொதிக்கு பணம் அரைக்கால்

8) உப்பளத்தில் சுமைக்குப் பணம் அரைம்காணி

9) கும்பட்டத்தில் 100 பொன்னுக்குப் பணம் கால்

10) பண்ணைக் கிராமம் சீவிதக் கிராமம் கோயில் கிராமம் பிரதமதாயக் கிராமம் இவைகளில் விளைந்த நிலத்துக்கு ஒரு மா நிலத்துக்கு நெல் குறுணி

11) புன்செய் நிலத்துக்கு தானியம் மூன்றுபடி

ஆவுடையார் கோயிலில் சேதுபதி அரசருக்குச் சுத்திரம் ஒன்று இருந்தது. அதையும் சேதுபதி அரசர் பண்டாரச் சன்னதி அவர்கள் பெயரில் அன்னதான மடமாகக் கொடையாக அளித்தார்.

திருப்பக்கோட்டையைச் சேதுபதி அரசர் திருவாவடுதுறை ஆதீனத்திற்குக் கொடையாக அளித்தமைக்கு ஒரு வரலாற்று நிகழ்ச்சி கூறப்படுகிறது.

ஒருமுறை சேதுநாட்டில் மழையின்றிப் பெரும்பஞ்சமும் வறட்சியும் ஏற்பட்டது. அப்போது இராமேசுவரத்தைத் தரிசித்து இராமநாதபுரத்

தில் எழுந்தருளிய திருவாவடுதுறை ஆதினகர்த்தர் அவர்களைச் சந்திக்கச் சேதுபதியரசர் தக்க காணிக்கையுடன் சென்றிருந்தார். சேதுபதி அரசரின் பிரதானி திருவாவடுதுறை ஆதீனத்துச் சீடர் ஆவார். தன் நாட்டு நிலையைச் சேதுபதியரசர் ஆதீனகர்த்தர்க்கு எடுத்துக்கூறி அருள்புரியுமாறு பிரதானிமூலம் வேண்டினார். நாட்டின் நிலையையும், மக்கள் படும் பெருந்துயரினையும் கண்ட திருவாவடுதுறை ஆதினகர்த்தர் அவர்கள் ஸ்ரீஞானமா நடராச மூர்த்திக்கு விசேடப் பூசைசெய்து தேவாரத் திருப்பண்களில் மேகராகக் குறிஞ்சிப் பண்ணைப் பாடச் செய்து பஞ்சாக்கர செபத்துடன் சிவானந்த நிட்டையில் நெடுநேரம் இருந்தார். பின்னர்

சைவ சமயம் சமயமெனில் அச்சமயத்
தெய்வம் பிறைசூடும் தெய்வமெனில்-ஐவரைவென்று
ஆனந்த அன்பில் அழுந்துவது முத்தியெனில்
வானங்காள் பெய்மீமின் மழை

என்னும் வெண்பாவை இறைவனை வணங்கிப் பாடினார். அன்றே சேது நாட்டில் பெருமழை பெய்து ஏரி குளங்கள் எல்லாம் நிரம்பின.[1]

இதைக்கண்டு மகிழ்ந்த சேதுபதியரசர் ஆதீனகர்த்தருக்குக் 'திருப்பொற் கோட்டை' என்னும் ஊரைக் கொடையாக அளித்தார். அவர் அளித்த 'திருப்பொற்கோட்டை' என்னும் ஊரே இச்செப்பேட்டில் காணப்படும் 'திருப்பக்கோட்டை' ஆகும். திருப்பொற்கோட்டையைச் செப்பேட்டில் பொறித்தவர்கள் மக்கள் வழங்கியபடி திருப்பக்கோட்டை என எழுதிவிட்டனர்.

சேதுபதி அரசர் திருப்பொற்கோட்டையைத் தமக்குத் தானமாக அளித்தது கண்டு மகிழ்ந்து திருவாவடுதுறை ஆதினகர்த்தர் அவர்கள்,

நதியாம் வரிசிலை நன்னகர்பொற் கோட்டைப்
பதியாம் துறைசைப் பதிக்கு — விதியாகத்
தானமிட்டான் சேதுபதி தாரணிதான் உள்ளவும்
ஊனமில்லை யெந்தநா ளும்

என்ற வெண்பாவைப் பாடினார். இப்பாடலால் வரிசிலையாறு பாயும் நன்செய் நிலங்களையுடையது திருப்பொற்கோட்டை என்பது தெரிகிறது.

---

1. துறைசை ஆதின வரலாறு, பக் 32,33; பெருந்தொகை 1918-1919

சேதுபதி அரசர்கட்கும் திருவாவடுதுறை ஆதினத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. திருவாடுதுறை ஆதினத்தில், சேதுபதியன்னமும் காவிரி நீரும் ஆவுடையப்பர் நீழலும்' என்ற தொடர் ஒன்று பரம்பரை யாக வழங்கி வருகிறது.

சென்னவீரப்பன் என்பவர் இச்செப்பேட்டை எழுதியுள்ளார்.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 ஸ்வஸ்ஸ்ரீ மகாமண்டலேசுரன் ஆரியராயிரதள விபாடன் பா

2 ஷைக்குத் தப்புவராயிர கண்டன் மூவராயிர கண்டன் கண்டனாடு கொண்டு

3 கொண்டனாடு கொடாதான் பாண்டிமண்டலத் தாபனாசாரியன் சோழமண்

4 டலப் பிரதிஷ்டாபனாசாரியன் தொண்டமண்டலச் சண்டப்பிர சண்டன் பூறு

5 வ தெட்சண பச்சிம உத்தர சத்த சமுத்திராதிபதி ஈழமுங் கொங்கும் யாட்பாணமும்

6 எம்மண்டமுங் கெசவேட்டை கண்டருளிய ராசாதிராசன் ராசபரமேசுர

7 ன் ராசமாத்தாண்டன் ராசகெம்பீரன் ராசகுல திலகன் மன்னற்கு மன்னன்

8 துட்டற்கு துட்டன் துட்டநெட்டுரன் அட்டதிக்கு மனோபயங்கரன் கட்டாரி சா

9 ளுவன் நவகோடி நாராயணன் துலுக்கர்தள விபாடன் துலுக்கர் மோகந் தவித்தா

10 ன் ஒட்டியர்தள விபாடன் ஒட்டியர்மோகந் தவிழ்த்தான் மலை கலங்கிலும் மனங்க

11 லங்காதான் நரலோகர் கண்டன் குடைக்கி கன்னன் பரிக்கு நகுலன் அறிவுக் கக

12 தீதியன் வில்லுக்கு விசையன் சொல்லுக் கரிச்சந்திரன் வாளுக்கு வீமன் தாலி

13 க்குவேலி சமர கோலாகலன் அன்னசத்திர சோமன் அந்தம்பர கண்டன் அடியார்வே

14 ளைக்காரன் அடைக்கலங் காத்தான் இளஞ்சிங்கந் தளஞ்சிங்கம் பகை மன்னர் சிங்கம் ஆற்று

15 ப்பாச்சி கடலிற்பாச்சி துட்ட நிக்கிரகன் சிட்டர் பரிபாலன் மனுநீதி சோழன் மன்மத சொ

16 ரூபன் தொண்டியந்துறை காவலன் வீரதண்டை சேமத்தலை விளங் கிய தாளினான் இவுளி

17 பாவடி மிதித்தேறுவார் கண்டன் கருணா கடாட்சன் ருத்திராட்ச மாலிகா பரணன் சிவபூசா

18 துரந்தரன் சொரிமுத்து வன்னியன் குன்றனைய மேருவிற் குன்றா வளைகுணில் பொறித்தவ

19 ன் தனுக்கோடி காவலன் ராமனாத சுவாமி சுப்பிரமணியசுவாமி பார்தாரவிந்த சேகர

20 ன் வீரலட்சுமி காந்தன் விசையலட்சுமி சம்பன்னன் காமினி கந்தற் பன் மேவலர் கோ

21 ளரி மேவலர் வணங்குமிரு தாளினான் சங்கீத சாயித்திய வித்தியா வினோதன் பரத னாடக

22 ப் பிரவீணன் செம்பினாடுடையோன் வையகை வளனாடன் அசுபதி கெசபதி நர

23 பதி சேதுபதி பிரிதிவி ராச்சியம் பண்ணி யருளாநின்ற சாலிவாகன சகாத்

24 தம் 1656 க்கு மேல் செல்லாநின்ற பிரமா

25 தீட்ச ஞ்ரு காற்திகை மீ 10 உ தெட்சணாயணத்துப் பூறுவ பட்சத்துப் பவுர்ணமையும் மந்த

26 வாரமும் ரோகனீ நட்செத்திரமும் சந்திரோபராக புண்ணியகாலங் கூடின சுபதி

27 னத்தில் துகளூர்க் கூற்றத்துக் காத்தூரான குலோத்துங்க சோழ நல்லூற் கீழ்ற்பால் வி

28 ரையாத கண்டனிலிருக்கும் ஸ்ரீஇரணியகெற்பயாசி ரெகுநாத சேது பதி காத்த தேவரவர்கள்

29 திருவாவடுதுறைப் பண்டார சன்னதி மடம் மயேசுர பூசைக்கு தற்ம சாஸநப் ப

30 ட்டையங் குடுத்தபடி பட்டையமாவது அம்பலவாண சுவாமி சன்னதி யில் மயேசு

31 வர பூசைக்குக் கட்டளையிட்டது கிறாமம் ஏழுகோட்டை நாட்டில் ஓரூர் வட்ட

32 கையில் திருப்பக்கோட்டை பெருநான்கெல்லைக் குள்பட்ட ஏந்தல் பிறவடை நஞ்

33 சை புஞ்சை மாவடை மரவடை சகலமுஞ் சறுவமானியமாகவும் நம் முடையது

34 ச்சியத்துச் சுங்கத்துறை எட்டு மாகாணத்துக்கும மகமை பொதி ஒன்றுக்கு மா

35 காணிப் பணமுஞ் சிமைக்கு அரை மாகாணியும் பேட்டைத் தலங்கள் மற்றச் சில்ல

36 றையுங் கடைபோட்டிருக்கிற கடைக்கு மாதம் அரைக்கால் பணமுங் கரைது

37 றையில் நெல்லுக் கண்டி ஒன்றுக்கு மூணு மாகாணியுஞ் சிமைக்கு அரைமாகாணி

38 யும் பாறு படவு ஏத்துமதி இறக்குமதிக்கு பத்துப்பணம் தீர்வை பட்டால் அரைப்பணமும் அளத்தில் பொதி 1க்கு மகமை அரை

39 க்கால் பணமுஞ் சிமைக்கு அரை மாகாணியும் கம்பட்டத்தில் நூறு பொன்னுக்கு மக

40 மை கால்ப்பணமும் பண்ணைக்கிறாமம் சீவிதக் கிறாமங் கோவில்க் கிறாமம் பிரமதாய

41 க் கிறாமத்துக்கு விளைஞ்ச நிலத்துக்கு மாத்தாலிக் குறுணி நெல்லும் புஞ்சைத் தட்டுக்கு

42 மூன்றுபடி தவசமும் இந்தப்படிக்கு மயேசுவர பூசைக்குக் கட்டளை
யிட்ட

## இரண்டாம் பக்கம்

43 படியினாலே சந்திராதித்த வரைக்கும் கல்லும் காவேரிப் புல்லும் பூமி

44 யும் உள்ளமட்டுக்கும் ஆண்டனுபவித்துக் கொள்ளக் கடவாராகவும்
யிந்த

45 த் தற்மத்தை யாதாமொருத்தர் பரிபாலனம் பண்ணினபேர் கோடி
சிவலிங்கப்

46 பிரதிட்டையும் கோடி விறுமப் பிரதிட்டையும் கோடி கன்னிகாதானம்

47 பண்ணின பலத்தையும் அடைவாராகவும் இந்தத் தற்மத்துக்கு
யாதாமொ

48 ருத்தர் அகிதம் நினைத்தபேர் கெங்கைக் கரையிலேயுஞ் சேதுவிலேயு மா

49 தா பிதாவையும் காராம்பசுவையும் வதைபண்ணின தோஷத்திலே

50 போகக் கடவராகவும் அம்பலவாணன் றிருவடி வாழ்க உ

51 ஆவுடையார் கோயில் சன்னதியில் நம்மிட சத்திரமும் பண்டாரச் சன்

52 னதி அன்னதான மடமாகக் கட்டளையிட்டோம் இந்தப்படிக்கி

53 சென்னவீரப்பன் எழுத்து உ

# 68

# குளத்தூர்ச் செப்பேடு

| | | |
|---|---|---|
| இருக்கும் இடம் | : | தமிழ் - சமஸ்கிருதச் சாசனங்கள் நூல் |
| அரசர் | : | குமார முத்து விசைய ரகுநாதச் சேதுபதி காத்த தேவர் |
| காலம் | : | 10–11–1733 |
| அளவு | : | 32.5 செ.மீ. × 18 செ.மீ. |

**அமைப்பும் செய்தியும்** : இச்செப்பேட்டின் மூலப்படி கிடைக்க வில்லை. மேற்கண்ட நூலில் பதித்துள்ள பாடமே இங்கு பதிப்பிக்கப் பட்டுள்ளது.[1]

இராமேசுவரம் இராமநாதசுவாமி கோயிலில் உள்ள நடராசர் சன்னிதிக்குத் தேவையம்பலம் சபாபதி சன்னிதி என்பது பெயர். அச் சபாபதிக்கு அபிடேகம், நெய்வேத்தியம் ஆகியவற்றிற்குக் குளத்தூர் என்னும் ஊரினைச் சேதுபதி அரசர் கொடையாக அளித்ததை இச் செப்பேடு கூறுகிறது.

குளத்தூரின் எல்லைகள்: கிழக்கு எல்லை குடையார்குடி; தெற்கு எல்லை எல்லைக் களம்; மேற்கு எல்லை தெள்ளாபிள்ளை ஊரணி

1. *Tamil and Sanskrit Inscriptions, No. 13, pp 90-92.*

கிழக்குக்கரை; வடக்கு எல்லை கொல்லன் புன்செய் ஆகியனவாகும்.

இராமேசுவரத்தில் புன்னைத் தோப்பு, ரகுநாதீசுவரத்துத் தோப்பு சின்னய்யர் தோப்பு இவைகளும் கொடையாக அளிக்கப்பட்டன.

கிராமத்திலிருந்து வருகிற தவசம், விற்பனையாகும் தவசம் ஆகியவற்றில் அளக்கப்பட்ட, நிறுக்கப்பட்ட, எண்ணப்பட்ட எவ்விதப் பொருள்களுக்கும் மகமையில் அள்ளுத்தீருவை வேண்டியதில்லை என்றும் கட்டளையிடப்பட்டது.

ஏறப்பண்டாரம் என்பவர் இதனைச் செப்பேட்டில் எழுதியுள்ளார்.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 ஸ்வஸ்திஸ்ரீ ஸாலிவாகன சகாத்தம் 1655 இதன்மேல் செல்லாநின்ற
பிறமாதிஷ வருஷம்

2 காத்திகை மாதம் 10ம்தேதி சனிவாரமும் பவுர்ண அமாவாசையும்
ரோகணி நட்சத்திரமும் சுப

3 யோக சுபகரணமும் சோமஉபராக புண்ணிய காலத்தில் ஸ்வஸ்திஸ்ரீமன்
மகாமண்டலே

4 ஸ்வரன் அரியராய தளவிபாடன் பாஷைக்குத் தப்புவராயிர கண்டன்
மூவராயிர கண்டன் கண்ட

5 நாடு கொண்டு கொண்டநாடு கொடாதான் பாண்டியமண்டல தாபனா
சாரியன் சோளம

6 ண்டல பிரதிஷ்டாபனாசாரியன் தொண்டமண்டல சண்டப்பிர
சண்டன் ஸளமும் கொ

7 ங்கும் யாட்பாண தேசமும் யெம்மண்டலமும் கெஜவேட்டை கண்ட
ருளிய ராசாதிராசன் ராச

8 பரமேசுரன் ராசமார்த்தண்டன் ராசஉத்தண்டன் ராசகெம்பீரன்
பரதள விபாடன் உரிகோல் சுர

9 தாரணன் அந்தம்பர கண்டன் பனுக்குவார் கண்டன் சாடிக்காரர்
கண்டன் சாமித்துரோ

10 கியள் முண்டன் தூட்டரில் துட்டன் துட்ட நெட்டுரன் துட்ட நிக்கிரக சிட்ட பரிபாலணன் புவ

11 னேக வீரன் வீர கஞ்சுகன் வேதியர் காவலன் அடியார் வேளைக்காரன் பட்டமானங் காத்தான்

12 துட்டராயிர் கண்டன் இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகைமன்னர் சிங்கம் ஆத்தில்

13 ப்பாச்சி கடலில்பாச்சி மதப்புலி அடைக்கலங் காத்தான் தொண்டியந் துறை காவல

14 ன் துறைகள் ரேவந்தன் வையாளி நாராயணன் இவுளி பாவடி மிதித் தேறுவார் கண்டன் வை

15 கை வளநாடன் செம்பி வளநாடன் அனும கேதனன் கருட கேதனன் வன்னியராட்டந்

16 தவிர்த்தான் கந்தமாதன வெற்பினான் அரச ராவண ராமன் பரராஜ கேசரி பரராஜ கெஜ சிங்கம் பரரா

17 ஜ சர்ப்ப கெருடன் ரவிவர்மன் ரவிகுல திலகன் துலுக்கர்தள விபாடன் துலுக்கர் மோகந் த

18 விள்த்தான் ஒட்டியர்தள விபாடன் ஒட்டியர் மோகந் தவிள்த்தான் ஆரியர் மானங் காத்தா

19 ன் மதுரை மானங் காத்தான் நவகோடி நாராயணன் மேவலர்கள் கோளரி மேவலர்கள்

20 வணங்குமிரு தாளினான் வீரமுடி சேமத்தலை விளங்குமிரு தாளினான் அற குன்றில் உயர்மேருவில்

21 குன்றா வளைகுணில் பொறித்தவன் திலகநுதல் மடவார்கள் மட லெழுத வருசூழகன் வீரலட்சுமி

22 விசயலட்சுமி காந்தன் காமினிகந்தப்பன் கலைதெரியும் விற்பனன் சகலகலை வல்

23 லவன் சத்தியபாஷா ஹரிச்சந்திரன் சங்கீத சாகித்ய வித்யாவினோதன் சிவபூசா

24 துரந்தரன் இராமநாதசுவாமி காரியா துரந்தரன் சபாபதி காரியா துரந்தரன் துகவூர் சு

25 த்தத்து காத்தூரான குலோத்துங்க சோழநல்லூர் கீழ்பால் விரையாத கண்டனில் இருக்கும்

26 ஹிரண்ய கர்ப்பயாஜி ரகுநாதச் சேதுபதி காத்த தேவர் அவர்கள் புத்ரன் யிரனி கர்ப்பயாஜி

27 ஸ்ரீமது குமார முத்து விசைய ரகுநாதச் சேதுபதி காத்த தேவரவர்கள் தேவையம்பலம்

## இரண்டாம் பக்கம்

28 சபாபதி கட்டளைக்கு தாம்பிர சாதனப் பட்டையம் குடுத்தபடி பட்டயமாவது சபாபதி அபிஷேக

29 நெய்வேத்தியத்துக்கு கட்டளையிட்ட கிராமமாவது குளத்தூருக்குப் பெருநான்கெல்லையாவது

30 கிழக்கெல்லை குடையார்குடிக் கரைக்கு மேற்கு தெற்குஎல்கை எல்லை களத்துக்கு

31 வடக்கு மேற்கு எல்கை தெள்ளாபின்னை ஊரணிக்கு கிழகரைக்குக் கிழக்கு வடவெல்

32 கை கொல்லன் புஞ்சைக்குத் தெற்கு இந்நான்கெல்கைக் குள்பட்ட நஞ்சை புஞ்சை மா

33 வடை மரவடை ஏந்தல் பிரவடை சகலமும் சருவமானியமாகவும் ராமேசுரத்தில்

34 கட்டளையிட்டது புன்னைத் தோப்பும் ரகுநாதீஸ்வரத்துத் தோப்பும் சின்னய்யர் தோப்பும் ஆ

35 டு மாடும் கிராமத்திலேயிருந்து வருகிற நெல்லு தவசங்கள் கொண் டேத்தி வருகிற தவ

36 சம் தட்டுமுட்டுக்கால் தலத்திலோ கோயில் பூசைக்கு விக்குற சாமக்கிரிகை

37 அளக்கப்பட்ட சரக்கு நிறுக்கப்பட்ட சரக்கு எண்ணப்பட்ட சரக்கு இதுகளுக்

38 கெல்லாம் அள்ளுத்திருவை மகமையால் வாங்கவேண்டாம் என்று தானபூருவமாக சே

39 து ராமலிங்கய்யனிடத்திலே தாம்பிர சாதன பட்டயம் கட்டளை யிட்டபடிக்கு

40 சந்திராதித்த சந்திரப் பிரவேசம் உள்ளமட்டும் ஆண்டனுபவித்து வரக்கடவாரா

41 கவும் யாதாமொருத்தர் இந்த தன்மத்தை பரிபாலனம் பண்ணின பேருக்கு காசியிலேயும்

42 சேதுவிலேயும் கோடி சிவலிங்க பிரதிட்டை பண்ணின பலத்தையும் கோடி பிரம பிர

43 திட்டை பண்ணின பலத்தையும் அடையக்கடவராகவும் இந்த தன்மத் துக்கு யாதா

44 மொருவர் விக்கனம் பண்ணின பேர்கள் காசியிலேயும் தனுக்கோடியி லேயும் ஸ்திரி

45 வதை பண்ணின தோஷத்தையும் பிராமணவதை பண்ணின தோஷத் திலேயும் போ

46 கக்கடவாராகவும் உ இந்தப்படிக்கு ஏறப்ப பண்டாரம் கையெழுத்து உ

69

# கொள்ளனூர்ச் செப்பேடு

இருக்கும் இடம் : தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை அருங்காட்சியகம், இராமநாதபுரம்

அரசர் : குமார முத்து விசய ரகுனாதச் சேதுபதி

காலம் : 11—11—1734

அளவு : 27.5 செ.மீ. × 22 செ.மீ.

**அமைப்பும் செய்தியும்** : இது துளையில்லாத பெரிய கைப்பிடி உடைய செப்பேடு.[1] கைப்பிடிப் பகுதியில் உ குறி இடப்பட்டுள்ளது. ஸ்தல ஸ்தபதி எனத் தெலுங்கில் எழுதப்பட்டுள்ளது.

குமார முத்து விசய ரகுனாதச் சேதுபதி முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் ஒன்றாகிய கொங்குநாட்டுப் பழனிமலை வேலாயுத சுவாமிக்குத் திருவிழா நடத்தவும், பூசை செய்யவும், தைப்பூச விழாவில் எட்டாம் திருநாள் மண்டபப்படிச் சிறப்புக்கும், அபிஷேத்திற்கும், நெய்வேதனத்திற்கும், திருமாலை, திருவிளக்கு, நந்தவனம் முதலிய அறச்செயல்கள் நடந்து வரும்படிக்கும் செம்பி நாட்டில் வைகை ஆற்று ஓரத்தில் சேதுபதி அரசர்களின் சேனைக்காணி ஊராகிய கொள்ளனூரையும், செவ்விருக்கை நாட்டில் விலைக்கு கொண்ட கொள்காணி

1. *ARE, A.35 of 1947.*

ஊராகிய கங்கைகொண்டான் என்ற ஊரையும் கொடையாக அளித் தார்.

கொடைநிலத்தின் எல்லைகள்: கிழக்கு எல்லை நாகாச்சிக் கண்மாய் உள்வாய் சங்கம்பத்து; தெற்கு எல்லை மென்னேந்தி, கள்ளிக் கோட்டை சேதுபாதை; மேற்கு எல்லை மெய்யானேந்தல் புளி; வடக்கு எல்லை வலசை, பாண்டியூர் எல்லை.

இந்த எல்லைக்கட்குட்பட்ட கொள்ளனூர், கங்கைகொண்டான் இரண்டு ஊர்களையும் ஏந்தல், பிறவடை, நன்செய், புன்செய், மாவடை மரவடை, திட்டு, திடல் போன்றவைகளையும் அனைத்து வருமானங் களுடனும் கொடையாக அளித்தார்.

கிராமத்தில் உள்ள அம்பலம், காவல், உளவு, எடைகுடி, அடுமை, பள்வரி, பலவரி, கீதாரம், ஊளியம், பாளயம் போன்ற அனைத்தும் உட்படக் கொடையாகச் சேதுபதி அளித்தார்.

பழனிமலைப் பண்டாரத்தின் மகன் முத்துக் குமாரசுவாமி ஓது வார் என்பவர் இந்தக் கொடையை நிருவகிக்க வேண்டும் என்று ஏற் பாடு செய்யப்பட்டது.

என்றென்றும் இக்கொடையில் குறிப்பிட்டபடி அறச்செயல்கள் நடைபெற வேண்டும் என்று தம் விருப்பத்தையும் அரசர் தெரிவித்துள் ளார். கொடைக்கு ஏற்ப பழனிமலை வேலாயுத சுவாமியார் துணை என்று இச்செப்பேடு முடிவடைகிறது.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாஹந சகாப்தம் 1655 இதற்கு மேல்ச் செல்லாநி

2 ன்ற ஆனந்த னாம ஸம்வத்ஸரத்நு சர ரிதுவாகிய காத்திகை

3 மீ த்து அமரப்ட்சத்து திரயோதெசியும் சோமவாரமும் ஸ்வாதி நட்செ சூத்திரமும் மிதுன

4 லெக்கினமும் சுபயோக சுபகரணமும் பெற்ற புண்ணிய காலங் கூடின சுபதி

5 னத்தில் ஸ்வஸ்தி ஸ்ரீமந் மகாமண்டலேசுரன் ஆரியராயிர தளவி பாடன் பாஷைக்கு

6 தப்புவராயிர கண்டன் மூவராயிர கண்டன் கண்டநாடு கொண்டு கொ ண்டநாடு கொ

7 டர்தான் பாண்டிமண்டலத் தாபணாசாரியன் சோழமண்டலப் பிரதிஷ் டாபணா

8 சாரியன் தொண்டமண்டலச் சண்டப் பிறசண்டன் பூறுவ தெட்சண

9 பச்சிம உத்தர சத்த சமுத்திராதிபதி ஈழமும் கொங்கு யாட்பாணமும் எம்ம

10 ண்டலமும் கெசவேட்டை கண்டருளிய ராசாதிராசன் ராசபரமே சுரன் ராசமா

11 ற்தாண்டன் ராசகெம்பீரன் ராசகுலதிலகன் மன்னற்கு மன்னன் துட்டற்கு துட்டன்

12 துட்ட நெட்டூரன் அட்டதிக்கு மனோபயங்கரன் கட்டாரி சாளுவன் நவகோடி நாறா

13 யணன் துலுக்கர்தள விபாடன் தலுக்கர் மோகந் தவிள்த்தான் ஒட்டி யர்தள

14 விபாடன் ஒட்டியர் மோகந் தவிள்த்தான் மலை கலங்கிலும் மனங் கலங்காதான் ந

15 ரலோகர் கண்டன் குடைக்குக் கற்ணன் பரிக்கு நகுலன் அறிவுக் ககத்தியன் வி

16 ல்லுக்கு விசையன் சொல்லுக் கரிசந்திரன் வாளுக்கு வீமன் தாலிக்கு வேலி சமர

17 கோலாகலன் அன்னசத்திர சோமன் அந்தம்பிற கண்டன் அடியார் வேளைக்கா

18 றன் அடைக்கலங் காத்தவன் இளஞ்சிங்கந் தளஞ்சிங்கம் பகைமன்னர் சிங்

19 கம் ஆற்றுப்பாச்சி கடலிற்பாச்சி துட்ட நிக்கறக சிஸ்ட பரிபாலனன் மனுநீதி

20 சோழன் மன்மத சொரூபன் தொன்டியந்துறை காவலன் வீரதண்டை சே

21 மத்தலை விளங்குமிரு தாளினான் இவுளி பாவடி மிதித்தேறுவார் கண்டன் கரு

22 னா கடாட்சன் ருத்திராட்ச மாலிகா பறணன் சிவபூசா துரந்தரன் சொரிமுத்து வன்னிய

23 ன் குன்றனைய மேருவிற் குன்றா வளைகுணில் பொறித்தவன் தனுக் கோடி. காவலன்

24 ராபனாத சுவாமி சுப்பிறமணிய சுவாமி பாதாரவிந்த சேகரன் வீர லட்சுமி காந்

25 தன் விசையலட்சுமி சம்பன்னன் காமினி கந்தப்பன் கலைதெரியும் விற்பன்னன்

26 மேவலர் கோளரி மேவலர்கள் வணங்குமிரு தாளினான் சங்கீத சாயித்தி வி

27 த்தியா வினோதன் பரதநாடகப் பிறவீணன் செம்பி நாடுடையோன் தேவ நகராதி

28 பன் வையகை வளநாடன் காவிக் குடையான் அனும கேதனன் பஞ்ச வன்ன ரா

29 ய ராவுத்தன் பனுக்குவார் கண்டன் அரச ராவண ராமன் சேதுமூலா ரட்சா துரந்தரன்

30 அசுபதி கெசபதி நரபதி சேதுபதி பிறுதிவிராச்சிய பரிபாலனம் பண்ணி யருளா

31 நின்ற துகவூர்க் கூத்தத்திற் காத்தூரான குலோத்துங்க சோழ நல்லூற் கீல்பால் விரை

32 யாத கண்டனிலிருக்கும் ராஸ்ரீ தளவாய் சேதுபதி காத்த தேவரவர் கள் வங்கிஷாதி

33 பனாத ராஸ்ரீ இரணிய கெற்பயாஜி ரெகுனாதச் சேதுபதி காத்த தேவரவர்கள் புத்திரன் ராஸ்ரீ இர

34 னிய கெற்பயாஜி குமாரமுத்து விசைய ரெகுனாதச் சேதுபதி காத்த தேவரவர்கள்

35 பளனிமலை வேலாயுத சுவாமியாருக்கு பூதான தாம்பிற சாசன பட்டையங்

36 கொடுத்தபரிசாவது பளனிமலை வேலாயுத சுவாமியார் சன்னதியில் விளா

37 பூசை கட்டளைக்கு தைப்பூசம் எட்டாந்திருனாள் மண்டகப்படி சிறப் புக் கட்ட

## இரண்டாம் பக்கம்

38 ளை அபிஷேக நைய்வேதனம் திருமாலை திருவிளக்கு ணந்தவன முத லாகிய கைங்கரி

39 யம் நடப்பிவிச்சு வரச்சொல்லி கட்டளை இட்ட கிறாமமாவது செம்பி னாட்டில் வை

40 கை தீரத்தில் நமது சேனக் காணியான கொள்ளனூரும் செவ்விருக் கை நாட்டி

41 ல் நமது கொள் காணியான கெங்கை கொண்டானுக்கு எல்கையாவது நாகாச்சி

42 கண்மாய் உள்வாய் சங்கம்பத்துக்கு மேற்கு மென்னேந்திக்கும் கள்ளி கோட்

43 டைக்கும் சேது பாதைக்கும் வடக்கு மெய்யாநேந்தல் புளிக்கு கிழக்கு வல

44 சைக்கும் பாண்டியூரு எல்கைக்கும் தெற்கு இந்த பெருனான் கெல் கைக் குள்பட்ட

45 கொள்ளனூர் கெங்கைகொண்டா னிரண்டு கிராமத்துடனே கூடிய ஏந்தல் பிறவ

46 ஏட நஞ்சை புஞ்சை மாவடை மரவிடை திட்டு திடல் நிதி நிஷேபம் ஜல

47 தரு பாவியமென்று சொல்லப்பட்ட சகல சமுதாய பலப்பிறாத்தியும் அம்பலம்பலம்

48 காவலுளவும் எடைகுடி யுள்ளடுமையும் பள்வரி பலவரி கோரவரி ஊளியம்

49 கெங்கைகொண்டான் வாணியக்குடி செக்குவரி ஆயம் திருவை ஊளிய பாவையும்

50 சறுவமாணியமா கட்டளையிட்டோம் பளனிமலை பண்டாரத்தின் குமார முத்துக் குமார

51 சுவாமி ஒதுவார் இந்த தற்மம் பரிபாலணம் பண்ணி கொள்வராகவும் இந்தபடி

52 க்கு புத்திர பபுத்திர பரம்பரை புல்லும் பூமியும் கல்லும் காவேரியும் ஆதிசந்

53 திராதித்தவரைக்கும் ஆண்டு அனுபவித்துக் கொள்ளக் கடவாராகவும் இ

54 ந்த தற்மத்தை யாதாமொருவர் பரிபாலினம்பண்ணின பேர்கள் கோடி

55 சிவலிங்கப் பிறதிஷ்டையும் கோடி பிறம பிரதிஷ்டையும் கோடி கன்னி

56 கர்தாணம் பண்ணின சுகுற்தத்தை அடைவராகவும் இந்த தற்மத்துக்கு அகிதம் ப

57 ண்ணின பேர் கங்கைக் கரையிலேயும் சேதுவிலேயும் மாதா பிதாவையும்

58 கராம்பசுவையும் தேவப்பிறாமணளையும் வதை பண்ணின தோஷத்திலேப் போக க

59 டவராகவும் ஸ்வதத் தாத்வி குணம் புண்யம் பரதத்தாறு பாலநம் பர்தத்தா

60 ப ஹாரேண ஸ்வதத்தம் நிஷ்பலம் பவேத்: உ ஸ்வதத்தாம் பரதத்தம் வாயோ ஹரேக் வ

61 ஸ ந்தரா ஷஷ்டி வர்ஷ ஸஹஸ்ராணி விஷ்டாயா ஜாயதே க்ரிமி: பழனி மலை வே

62 லாயுதசுவாமியார் துணை உ

# 70

# ஈசா பள்ளிவாசல் செப்பேடு

இருக்கும் இடம் : புதுமடம் கிராமம், இராமநாதபுரம் மாவட்டம்

அரசர் : குமார முத்து விசைய ரகுநாத சேதுபதி காத்த தேவர்

காலம் : 30—12—1734

**அமைப்பும் செய்தியும்** : இராமநாதபுரம் நகரில் அமைந்துள்ள பள்ளி வாசல்களில் ஒன்று ஈசா பள்ளிவாசல். அப் பள்ளிவாசல் அன்னதான தர்மத்திற்காக சர்தர்வேசலி என்பார் மகன் சார்மூஸா பாப்ஷா வசம் சேதுபதி அரசர் கிழவனேரி என்ற ஊரைக் கொடையாக அளித்ததை இச்செப்பேடு கூறுகிறது. கொடையாகக் கொடுக்கப்பட்ட கிழவ னேரிக்கு நாற்பாங்கு எல்லைகள் கூறப்பட்டுள்ளன.

இந்தக் கொடையை தமிழனாவது, நான்கு வருணத்தாராவது இசு லாமியர்களாவது மேன்மேலும் பரிபாலனம் செய்தால் கங்கைக் கரை யிலும், சேதுவிலும், மக்கா மதினாவிலேயும், பிற புண்ணியத் தலங் களிலேயும் அன்னதானம், சொன்னதானம், வெகுகுடும்பப் பிரதிட்டை செய்த புண்ணியம் கிடைக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

கிழவனேரியின் தெற்கு எல்லை கருக்கத்திக் கண்மாய் கடைக் கொம்பு, மேற்கு எல்லை மாணிக்கனேரிப் பொருத்து, வடக்கு எல்லை மேற்படி ஏந்தல் தென்கரை, கிழக்கு எல்லை ஆதிநாராயணன் மடை சிவந்தியப்பன் பொட்டல் செய் என்பனவாம்.

## செப்பேடு

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1656 இதன்மேல் செல்லாநின்ற ஆன

2 ந்த வருஷம் தை மாதம் 1ந்தேதி பௌர்ணமையும் சோமவாரமும் பூச நட்சத்திரம் சௌமியநா

3 மயோகமும் பாலவாகரணமும் கூடின புண்ணிய காலத்தில் தேவை நகரா

4 திபன் சேதுமூல ரட்சா துரந்தரன் இராமநாதசுவாமி காரிய துரந்தரன் சிவபூஜா து

5 ரந்தரன் பரராஜ சேகரன் பரராஜ கெஜ சிங்கம் இரவிகுல சேகரன் இரவிமார்த்

6 தாண்டன் சொரிமுத்து வன்னியன் ஸ்வஸ்திஸ்ரீ மகாமண்டலேசுர

7 ன் அரியராயதள விபாடணன் பாசைக்குத் தப்புவராயிர கண்டன் மூவராய க

8 ண்டன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு கொடாதான் பாண்டி மண்டல

9 தாபனாச்சாரியான் சோழமண்டல பிரதிஷ்டாபனாச்சாரியன் தொண் டைம

10 ண்டல சண்டப் பிரசண்டன் ஈழமும் கொங்கும் யாழ்ப்பாண பட்ட ணமும் கெ

11 சவேட்டை கண்டருளிய ராஜாதி ராஜன் ராஜபரமேசுரன் ராஜமார்த்

12 தாண்டன் ராஜகம்பீரன் இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகைமன்னர் சிங்

13 கம் துரைராயன் ஆற்றில் பாய்ச்சி கடலில் பாய்ச்சி மதப்புலி அடைக் கலங் காத்

14 தான் தாலிக்குவேலி சத்துருவாதியள் மிண்டன் வேதியர் காவலன் அரசராவ

15 ணராமன் அடியார் வேளைக்காரன் பரதள விபாடன் உரிகோல் சுரதானன்

16 அந்தம்பர கண்டன் சாடிக்காரர் கண்டன் சுவாமி துரோகியன் மிண்டன்

17 பஞ்சவர்ணராய ரர்குத்தன் பனுக்குவார் கண்டன் கொட்டமடக்கி வை

18 யாளி நாராயணன் இவுளிபாவடி மிதித்தேறுவார் கண்டன் ஆரிய மானவி க

19 ாத்தான் தொண்டியந்துறைக் காவலன் துர்க ரேபந்தன் அனுமகேத னன் கொ

20 டைக்கு கர்ணன் பரிக்கு நகுலன் வில்லுக்கு விஜயன் பரதநாடகப்

21 பிரவீணன் கருணா கடாட்சன் குன்றினுயர் மேருவில் குணில் பெ

22 ாரித்தவன் திலதநுதல் மடமாதர் மடலெழுத வருசுமுகன் கருட கேதனன்

23 காவிக்கொடையான் விசையலட்சுமி காந்தன் கலைதெரியும் விற்பனன்

24 காமினி கந்தர்ப்பன் அட்டதிக்கு மனோபயங்கரன் துஷ்ட நிக்கிரக சிட்டபரி

25 பாலன் சங்கீத சாகித்ய வித்யா வினோதன் வீரதன்டை சேமத்தலை வன

26 ங்கிய தாளினான் சகல சாம்பிராச்சிய லெட்சுமி நிவாசன் சேது காவல

27 ன் வங்கிஷாதிபனான துகவூர் கூத்தத்தில் காத்தூரான குலோத்துங்க சோழ

28 நல்லூர் கீழ்பால் விரையாத கண்டனிலிருக்கும் ஸ்ரீ இரண்ய கர்ப்பயா

29 ஜி ரெகுநாதசேதுபதி காத்த தேவர் அவர்கள் மருமகன் கெங்கை கொண்டானி

30 லிருக்கும் கட்டையத்தேவர் புத்திரன் ஸ்ரீகுமாரமுத்து விசைய ரெகு நாத சேது

31 பதி காத்ததேவர் அவர்கள் இராமநாதபுரத்திலிருக்கும் ஈசா பள்ளி வாசல்

32 அன்னதான தன்மத்துக்கு சர்தர்வேசலி குமாரன் சர்ர்மூஸா பாப்ஷா

33 பாரிசமாக கட்டளையிட்ட கிழவனேரிக்கு எல்கையாவது கருக்கத்திக்
கண்

34 மாய்க் கடைக் கொம்புக்குவடக்கு மாணிக்கனேரி பொருத்துக்கு கிழ

35 க்கு மேற்படி யேந்தல் தென்கரைக்குத் தெற்கு ஆதி நாராயணன்
மடை சிவந்தி

36 யப்பன் பொட்டல் செய்க்கு மேற்கு இன்னான்கு எல்லைக்குள்பட்ட
கிழ

37 வனேரி நஞ்சை புஞ்சை மாவிடை மரவிடை திட்டு திடல் ஏந்தல்
பிறவடை

38 குடி படை பள்ளு பறை கீழ் நோக்கிய கிணறு மேல் நோக்கிய மரம்

39 அஷ்டபோக தேஜ சுவாமியங்களும் இவை பரியது சர்வ மானிபம் தாம்

40 பிரசாசனம் கட்டளையிட்டபடியினாலே ஆதி சந்திராதித்தவரை புத்
திர

41 பௌத்திர பரம்பரைக்கும் அன்னதானத்துக்கும் ஆண்டனுபவித்துக்
கொள்

42 ளுவாராகவும் இந்த தன்மத்திற்கு தமிழனாலும் நாலு வருணத்தில் உள்

43 ள பேரும் இசுலாமானவர்களும் பரிபாலனம் பண்ணின பேர்களும் கெ

44 ங்கைக்கரையிலேயும் சேதுவிலேயும் மக்க மதினத்திலேயும் புண்

45 ணிய தலங்களிலேயும் அன்னதானம் சொன்னதானம் வெகுகுடும்ப பிர

46 திட்டையள் பண்ணின பலத்தை அடைவாராகவும் இந்த தன்மத்துக்கு

47 அகிதம் பண்ணினபேர்கள் புண்ணியத்தலங்களிலே மாதா பிதாவை

48 வதைத்த தோஷத்திலே போகக்கடவாராகவும்

# 71

# முதலூர்ச் செப்பேடு

இருக்கும் இடம் : தமிழ் - சமஸ்கிருதச் சாசனங்கள் நூல்

அரசர் : ரகுநாத சேதுபதி

காலம் : 19—11—1737

அளவு : 25 செ.மீ. × 18 செ.மீ.

**அமைப்பும் செய்தியும்** : இச்செப்பேட்டின் மூலப்படி கிடைக்கவில்லை. முன் பதிப்பைக் கொண்டு இங்கு பதிப்பிக்கப்படுகிறது.

காசிப கோத்திரம் ஆசிவிலாயன சூத்திரம் ரிக்வேதம் பயின்ற கலாநிதி கோனய்யர் மகன் இராமனய்யருக்கு செவ்விருக்கை நாட்டில் கோவிந்தராச சமுத்திரம் என்னும் முதலூரை ரகுநாத சேதுபதி அரசர் மருகனின் மகன் முத்துக்குமாரு விசைய ரகுநாத சேதுபதியவர்கள் கொடையாகத் தை அமாவாசையன்று அளித்ததை இச்செப்பேடு கூறுகிறது.

**முதலூரின் எல்லைகள்**

கிழக்கு எல்லையில் கொளத்தூர்க் கண்மாய் தென்கடைக் கொம்பு, மறுகால்தலை, உடையாதேவன் பனங்கூடல், வெண்ணகுட்டிக் கண்

1. *Tamil and Sanskrit Inscriptions No. 15, pp. 95-98.*

மாய் உள்வாயில் தென்கடைக் கொம்பு, ஊருணி கீழ்க்கரை, அரியா குடியிருப்பு, காருக்குடிக் கண்மாய் உள்வாயில், குசவன்திடல், குடி மகன் புஞ்சை, வயறானேந்தல் எல்லை ஆகியன இருந்தன.

தெற்கு எல்லை கரதேவர் புன்செய், ஆறு, வயறானேந்தல் பண்ணைக்காறன் புன்செய் வயல், வயறானேந்தல் பழைய கண்மாய், அதன் வடகலிங்கு, வயறானேந்தல் புதுக்கண்மாய் உள்வாயில், வகுத் துக்கால், தெஞ்சியேந்தல், இராசபிள்ளையார் கோயில், முட்டத்தி னேந்தல், நொச்சியடி யிறக்கம், வைகை ஆறு இவைகள் இருந்தன

மேற்கு எல்லையில் நயினா மணியகாரன் கால், தில்லா பிள்ளை ஊருணி கீழ்க்கரை ஆகியனவாகும்.

வடக்கு எல்லையில் கொளத்தூர்க்கால், தேத்தாங்கால், நாகாச்சி எல்லை, தேத்தாங்கால் எல்லை, மருதொண்டி எல்லை, நல்ல முத் தய்யன் பட்டவிருத்திப் புஞ்சை, தொரைராயன் ஏந்தல், கண்மாய் உள் வாய், அழகுப்பிள்ளைகால், காவனூர்க்கால், கொளத்தூர் வகுத்துக் கால் ஆகியன இருந்தன.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாஹந ஸகாப்தம் 1658 இதன்மேல் செல்

2 லாநின்ற நளநாம ஸம்வச்சரத்தில் உத்திராயணத்தில் யேமந்த ருதுவில்

3 புஷ்ய மாசத்தில் கிட்டிணபட்சத்து அம்மாவாசியும் குருவாசரமும் ஸ்ரீவண ந

4 ட்சத்திரமும் பிரும்மியநாம யோகமும் கவுலகரணமும் கூடின சுப யோக

5 சுபகரணமும் பெத்த தைய் அமாவாசி புண்ணிய காலத்தில் ராமசேதுவி

6 ல் தேவ நகராதிபன் சேதுமூல ரட்சா துரந்தரன் ராமனாதசுவாமி பரு

7 வதவர்த்தநி காரிய துரந்தரன் சிவபூசா துரந்தரன் பரராசசேகரன் கண்

8 டநாடு கொண்டு கொண்டநாடு குடாதான் பாண்டியமண்டல ஸ்தாப னாசா

9 ரியன் மீளும் கொங்கு மியாட்பார்ண் பட்டணமும் எம்மண்டலமுங் கொ

10 காண்டு கெசவேட்டை கொண்டருளிய ராசாதிராசன் ராசபரமேசுரன் ரா

11 ச மாற்தாண்டன் ராசகுலதீபன் கொடைக்குக் கற்னண் வில்லுக்கு விசய

12 ன் வீரரில் வீரன் வீரகஞ்சுகன் வேதியர் காவலன் வீரவிக்கிரமாற்க

13 ன் மல்லுக்கு வீமன் பொருமைக்கு தற்மபுத்திரன் ஆக்கினைக்கு சுக்கிரீபன் பிற

14 சங்கத்துக்கு ஆதிசேஷன் கருணைக்கு ரெகுராமன் சத்தியபாசா அரிச்சந்திரன் ச

15 ங்கீத சாகித்திய வித்தியா வினோதன் சத்துராதியன் மிண்டன் சகல குண சம்ப

16 ன்னன் சருவசீவ தயாபரன் தளங்கண்டு தத்தளிப்பார் மின்டன் தந தா

17 ர தாரம் பரதார சகோதரன் சகல சாம்பிறாச்சிய லெட்சுமீ நிவாசன்

18 கருதலர்கள் முடியிடறுங் கண்டன் துரக நகுலன் காமிநீ கந்தற்ப்பன் கலியர்

19 ண குணசீலன் இடருவார் கோடாலி இரவலர் கலிகோபன் அரசராவ

20 ண ராமன் அடியார் வேளைக்காரன் அடைக்கலங் காத்தவன் உரி கோல் சு

21 ரதாணன் வீரதண்டை சேமத்தலை விளங்கியதாளினான் மனுநீதி மன்ன

22 ன் மலைகலங்கினும் மனங்கலங்காதவன் செம்பியள நாடன் திலகனுத

23 ல் மடமாதர் மடலெழுதுஞ் சுமுகன் இயலிசை நாடக முத்தமிளறி வாளன்

24 அளகன் அனபாயன் அதிவீரன் அகளங்கன் அதிசெயன் ஆம்பொருட் கடாட்

25 சன் புவனேகவீரன் மருவலர் கெச சிங்கம் விருதர்சர் மணவாளன் துட்ட

26 ற்கள் கொட்டமடக்கி பட்டமானங் காத்தான் தாலிக்குவேலி பரதள விபா

27 டன் பரமன்னற் சற்ப கெருடன் பனுக்குவாற் சுண்டன் பரராச சேகரன் அ

28 ன்னதான சீலன் செகராசர் பனிபாதன் தெட்சண சிங்காசனாதிபதி துலா

29 புருசாதி சோடச மகாதான திட்சாதுரந்தரன் பாறத்துவாச கோத் திரத்தில் ஸ்ரீஇரணி

30 யகெற்பயாசி ரெகுனாத சேதுபதி அவர்கள் மருகனான ஸ்ரீமது குமார முத்து

31 விசைய ரெகுனாத சேதுபதியவற்கள் புத்திரன் ஸ்ரீமது முத்து குமாரு விசைய

32 ரெகுனாத சேதுபதியவர்கள் காசிப கோத்திரத்தில் ஆசிவிலாயன சூத்திரத்தில்

33 ரிகு சாகாத்தியாபகறான ரா களாநிதி கோனய்யனவர்கள் புத்திரன் றாமண

## இரண்டாம் பக்கம்

34 ய்யனவர்களுக்கு சகிரண்ணியோதக தாராபூறுவமாக செவ்விரு

35 க்கை னாட்டில் முதலூருக்கு பிறதினாமமான கோவிந்தராச சமுத் திரத்துக்கு நா

36 ன்ங்கு யெல்கை கீள்யெல்கையாவது கொளத்தூர் கண்ம்மாயி தென்

37 கடைகொம்பு மருகால்தலைக்கும் உடையாதேவன் பனங்கூடலுக்கும்

38 மேற்கு இதின் தெற்கு வெண்ணகுட்டி கண்ம்மாயி உள்வாயில் தென் கடை

39 கொம்பு ஊறணி கீள்கறைக்கு மேற்கு இதின் தெற்க்கு அரியாகுடியிரு

40 ப்புக்கு மேற்க்கு காருக்குடி கண்ம்மாயி உள்வாயில் குசவன்திடலுக்கு மே

41 ற்கு குடிமகன் புஞ்சைக்கு வடக்கு வயறானேந்தல் யெல்கைக்கி

42 தெக்கு யெல்கை கரதேவர் புஞ்சைக்கி வடக்கு இதின் ஆத்துக்கு மேற்கு வயறாளேந்தல் பண்ணை

43 க்காறன் புஞ்சை வயலுக்கு வடக்கு இதின் மேற்க்கு வயறானேந்தல் பளைய க

44 ண்ம்மாயி வடகலுங்குக்கு வடக்கு இதன் மேற்க்கு வயறானேந்தல் புதுக் கண்ம்மா

45 ய் உள்வாயில் வகுத்துகாலுக்கு வடக்கு தெஞ்சியேந்தல் எல்கைக்கும் வட

46 க்கு றாச பிள்ளையார் கோவிலுக்கு கிளக்கு முட்டத்தினேந்தல் சின்ன திடலுக்கு கிளக்கு இதின்

47 வடக்கு னொச்சியடி யிறக்கத்துக்கு கிளக்கு வய்கை ஆத்துக்கு வடக்கு மேற்க்கு யெல்கையா

48 வது நயினா மணியகாறன் காலுக்கு வாமசூநின்று தில்லாபிள்ளை ஊறணிமேல்கரை புளி

49 ய மரத்துக்கு கிளக்கு முத்திருளப்பிள்ளை ஊறணி கீள்கரைக்கி கிளக்கு வடக்கு ஓடிய யெல்கை

50 கொளத்தூர் காலுக்கு வடக்கு தேத்தாங்கால் காலுக்கு தெற்க்கு னாகாச்சி யெல்கைக்கி கிளக்கு இ

51 தின் கிளக்கு ஓடிய எல்கை தேத்தாங்கால் யெல்கைக்கு மேற்க்கு மருதொண்டி இறக்கத்தில்

52 நின்று தெக்கு ஓடிய யெல்கை கொளத்தூர் காலுக்கு கிளக்கு நல்ல மூத்தய்யன் பட்ட

53 வருத்தி புஞ்சை கீள் பொளியில்நின்று மேர்க்கு இதின்தெற்கு தொரை ராயன் யேந்த

54 ல் கண்ம்மாயி உள்வாயில் அளகுபிள்ளை காலுக்கு மேற்க்கு இதின் தெற்கு ஷெ கண்

55 மாயி தென்மூலை கரையில்நின்று காவனூர்காலுக்கு தெற்கு இதின் தெற்கு காவனூர்

56 காலுக்கு வடக்கு பனைஊர் பாதைக்கி கிளக்கு இதின்வடக்கு கொளத் தூர் வகுத்துக்கா

57 லுக்கு தெற்கு இந்த னான்ங்கு யெல்கைக்கி உள்பட்ட நஞ்சை புஞ்சை னத்தம் செய்த்

58 தலை திட்டு திடல் பாசி படுகை மாவிடை மரவிடை மேல்னோக்கிய மறம் கீ

59 ள்ளோக்கிய கிணறு நிதி நிக்ஷேப ஜல தெரு பாஷாணாகஷிண்யாகாம் ய ஸி

60 த்த ஸாத்யமென்று சொல்லப்பட்ட அஷ்டபோக ஸ்வாம்யங்களும் மற்றும்

61 எப்பேற்பட்ட சகல சமுதாய ப்ராப்தியும் தானாதி வினியோயங்களுக்கு யோக்கியம

62 ாக தமக்கு தனுக்கோடிகரையில் தைய் அமாவாசி புண்ணியகாலத்தில் சகிஇர

63 ண்ணியோதக தாரா பூர்வகமாக சருவமான்னியமாக தானம்பண்ணி குடுத்த

64 படியினாலே ஆசந்திறார்க்கமாக சந்ததிபிறவேசமே ஆண்டு அனுப வித்து கொ

65 ள்வர்ாகவும் ஷெ ஊர்குப்பைப் பாட்டுபள்ளு சோனைகடையானும் சாத்தகு

66 டும்பனும் தண்டும்பூலி குடும்பனும் காத்தா குடும்பனும் உள்பட்ட பிரசையளும்

67 மற்றும் உண்டாகிய குடிபடையும் சருவமான்யமாக அனுபவித்து கொள்

68 வாறாகவும்தாநபாலந யோர்மத்யே தாநா ஸ்ரயோநு பாலநம் தாநாத்

69 ஸ்வர்க்க மவாப்நோதி பாலநாத் அச்சுதம் பதம்: இந்த தற்மத்தை யாதாமொரு

70 ருத்தன் பரிபாலனம் பண்ணினவர்கள் சேதுவிலேயுங் காசியிலேயும் சி

71 வலிங்க பிறதிட்டையும் கோடி பிரமப் பிரதிட்டையும் கன்னிகாதானம் பண்ணின பல

72 னை அடைவாராகவும் இந்த சேத்திரத்துக்கு அகிதம் பண்ணினவர்கள் சேதுவிலே

73 யும் காசியிலேயும் கோவதையும் பிறம்ம அத்தியும் மாத்துரு கெமனமும் சிசு அத்தியும் பண்

74 ணினப் பாவத்தை அடைவாராகவும்

75 சிவசுப்ரமண்யம் துணை

# 72

## கதயனேந்தல் செப்பேடு

இருக்கும் இடம் : தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை அருங்காட்சியகம், இராமநாதபுரம்

அரசர் : குமார முத்து விசைய ரகுநாத சேதுபதி காத்த தேவர்

காலம் : 23–5–1737

**அமைப்பும் செய்தியும்** : சேதுபதி அவர்கள் தம் தாய் தந்தையார் வர்க்கத்தார் புண்ணியத்திற்காகவும் கிரகண காலத்தில் தாம் உணவு உட்கொண்ட பாவத்திற்காகவும் திருவிளக்கு வைத்து அப்பூவம் நீங்கும் பொருட்டு அந்தணர் ஒருவருக்கு நிலதானம் செய்து கொடுத்தது இச் செப்பேடு மூலம் தெரிகிறது. இச்செப்பேட்டில் நாள்மட்டும் தவறாகக் குறிக்கப்பட்டுள்ளது.

காக்கூறு வட்டகையில் கதயனேந்தல் என்னும் ஊர் அந்தணருக் குக் கொடையாக அளிக்கப்பட்டது நிலத்தைக் கொடையாகப் பெற்றவர் கௌதம கோத்திரத்து போதாயந சூத்திரத்து இராமலிங்க நம்பியார் மகன் மங்களேஸ்வரக் குருக்கள் என்பவர்.

கொடையாகக் கொடுக்கப்பட்ட ஊரின் 'நான்கெல்லைக்குட்பட்ட எல்லைகள் விளக்கமாகக் கூறப்பெறவில்லை சாட்சிக் கையொப்ப மோ செப்பேட்டை எழுதியவர் பெயரோ இல்லை. சிவமயம் என்ற தொடருடன் செப்பேடு முடிவடைகிறது.

இராமநாதபுரம் அரண்மனையில் சேதுபதி அரசர்களின் வழிபடு தெய்வமான இராசராசேசுவரி அம்மன் சந்நிதியில் இக்கொடை அளிக் கப்பட்டது.

இராசராசேசுவரி அம்மன் திருமலை நாயக்கரால் (1629-1659) இரகுநாத சேதுபதி என்ற திருமலை சேதுபதிக்கு அவர் செய்த உதவிக் காக அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டது.

மைசூர் மன்னன் கண்டீரவ நரசராசா தன் தளபதி ஹம்பயைனை மதுரை நாயக்கர்மீது படை எடுக்குமாறு ஏவினார். 1656 ஆம் ஆண்டு மைசூர்ப்படை சத்தியமங்கலத்தைத் தாண்டி ஈரோடு முதலிய பகுதி களில் புகுந்து பேரழிவு செய்தது.

அப்போது திருமலை நாயக்கர் தலையில் ஏற்பட்ட கட்டியினால் உடல்நலக் குறைவாக இருந்தார். தளவாய் இராமப்பையர் மறைவுக்குப் பின் அவர் மருமகன் சிவராமய்யர் தளவாயாக இருந்தார். மைசூர்ப் படையை எதிர்க்கும் அளவிற்குப் பெரும்படை திருமலை நாயக்கரிடம் இல்லை.

திருமலை நாயக்கர் மனைவியின் அழைப்பை ஏற்று இரகுநாத சேதுபதி 25000 மறவர் படையோடு சென்று மைசூர்ப் படையை முறி யடித்தார். இவ்வெற்றியின் அறிகுறியாக இரகுநாத சேதுபதிக்கு திரு மலை சேதுபதி என்று பட்டமளிக்கப்பட்டதுடன் $1\frac{1}{4}$ அடி உயரமுள்ள தங்கத்தாலான இராசராசேசுவரி அம்மன் சிலையும் பரிசாக வழங்கப் பட்டது.[1] 'தேசக் காவலன்' 'இராணி சொல் காத்தார்' என்ற பட்டங் களும் சேதுபதி அரசருக்கு அளிக்கப்பட்டன.

இச்சிலையின் எதிரில் உள்ள மரகதப் பலிபீடம் குமாரவிசய ரகுநாத சேதுபதியின் பிரதானி ஆன தெய்வகன்னியால் இராய வேலூரிலிருந்து கொண்டு வரப்பட்டது என்பது அவர் மீது பல பட்டடைச் சொக்கநாதப் புலவர் பாடிய விஞ்சைக்கோவைப் பாடல் மூலம் தெரிகிறது.

1. முதலில் இந்தப் பொற்சிலை துர்க்கை வடிவில்இருந்தது என்றும் துர்க்கைக்கு நரபலி கொடுக்கவேண்டி இருந்ததால் பிற்காலத்தில் சிருங்கேரி சங்கராச்சாரியார் அவர் கள் அறிவுரைப்படி இராசராசேசுவரியாக மாற்றப் பெற்றது என்றும் கூறுவர். இங்கு நவ ராத்திரி விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பெறும்.

# செப்பேடு

## முதல் பக்கம்

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாஹந சகாப்தம் 1659 ந் மேல் செல்லாநின்ற

2 பிங்களநாம சம்மச்சரத்தில் உத்தராயணத்தில் வசந்த ரிதுவில் வைகா

3 சமீத்தில் பூற்வ பக்ஷத்தில் பஞ்சமியும் சுக்குரவாரமும் பூசநக்ஷத்
திரமு

4 ம் சித்திநாம யோகமும் பாலவாகரணமும் கூடின சுபதினத்தில்
ஸ்வஸ்திஸ்ரீ

5 மன் மகாமண்டலேசுரன் அரியராயிரதள விபாடன் பாஷைக்குத் தப்பு

6 வராயிர கண்டன் மூவராயிர கண்டன் கண்டநாடு கொண்டு கொ

7 ண்டநாடு கொடாதான் பாண்டிமண்டலத் தாபனாசாரியன் சோ

8 ளமண்டல பிறதிஷ்டாபனாசாரியன் தொண்டமண்டல சண்டப்பிறசன்

9 டன் ஈளமுங் கொங்கு மியாட்பாணபட்டணமும் எம்மண்டலமும்

10 அளித்து கெசவேட்டை கண்டருளிய ராசாதிராசன் ராசபரமேசுரன்

11 ராசமாற்த்தாண்டன் ராசதலதிலகன் துட்டரில் துட்டன் துட்டர் கொ

12 ட்டமடக்கி வையாளி நாராயணன் இவுளிபாவடி மிதித்தேறுவார் க

13 ண்டன் சாடிக்காறர் கண்டன் சாமித்துரோகியள் மிண்

14 டன் ஆற்றில்ப் பாச்சி கடலில்

15 ல் பாச்சி மதப்புலி அடைகி

16 கலங் கர்த்தான் தாலிக்கு வே

17 லி தளங்கண்டு தத்தளிப்பார் கண்டன் அரசராவணராமன் அ

18 டியார் வேளைக்காறன் பரதள விபாடன் பகைமன்னர் சற்ப கெரு

19 டன் உரிகோல் சுரதானன் அந்தம்பிற கண்டன் இளஞ்சிங்கம் தளஞ்சி

20 ங்கம் பகைமன்னர் சிங்கம் மதுரை ம ணங்காத்தான் வைகை வளநா

21 டன் குடைக்குக் கற்னன் பரிக்கு நகுலன் வில்லுக்கு விசையன் மல்

22 லுக்கு வீமசேனன் சத்திய அரிச்சந்திரன் பொறுமைக்கு தற்மபுத்தி

23 ரன் செம்பி வளநாடன் வீரதண்டை சேமத்தலை விளங்குமிரு தாளினா

24 ன் அனும கேதனன் கெருட கேதனன் மீன கேதனன் சிங்க கேத

25 ன் செங்காவிக் குடையும் குடைமேல் சல்லிவிருதும் உடைய தே

26 வன் தேவை நகராதிபன் சேதுமூல ரகூடா துரந்தரன் ராமனாத சுவா

27 மி காரியா துரந்தரன் துகலூர்க் கூற்றத்தில்க் காத்தூரான குலோத்

28 துங்க சோளநல்லூர் கிள்பால் விரையாத கண்டனிலிருக்கும் ரா

29 சமாண்ய ராசஸ்ரீ ஹிரண்ய கெற்பயாசி ரெகுநாதச்சேதுபதி காத்த தேவ

30 ரவர்கள் புத்திரன் குமார முத்து விசைய ரெகுனாதச் சேதுபதி காத்த தேவ

31 ரவர்கள் மாத்ரு வற்கத்துக்கும் பிதுரு வற்கத்துக்கும் புண்ணியமா

32 கவும் கிரான போசன காலத்தில் திருவிளக்குத் திருவேறின பாபநி

33 பாரணமாகவும் பூதானம்பண்ணிக் குடுத்தபடி காக்கூரு வட்டகையி

## இரண்டாம் பக்கம்

34 ல் கதயநந்தல் னான்கெல்லைக் குள்பட்ட நஞ்சை புஞ்சை மாவடை

35 மரவடை திட்டு திடல் நிதி நிக்ஷேப ஜல தரு பாஷா ணாட்சன்யாகாம்ய

36 சகல சமுதாயப் பிறாப்தியும் கௌதம கோத்திரத்தில் போதாயந சூத்திர

37 த்தில் ராமலிங்க நம்பியார் புத்திரன் மங்களேஸ்வரக் குருக்கள் கையயி

38 ல் சஹிரண்யோதக தாராபூற்வகமாக ராசராசேஸ்வரியம்மன் சன்

39 னதியில் தானம்பண்ணிக் குடுத்தோம் அந்தப்படிக்கு சந்திராதித்தவ

40 ரை சந்ததிப் பிறவேம் ஆண்டனுபவித்துக்கொள்ளக் கடவாரா

41 கவும் இந்தத் தற்மத்தைப் பரிபாலனம் பண்ணினபேர்கள் கோடி சிவலிங்க

42 கப் பிறதிஷ்டையும் கோடி விறுமப் பிறதிஷ்டையும் கோடி கோதான பூதா

43 னம் பண்ணின பலனை அடையக்கடவாராகவும் இந்தத் தற்மத்துக்கு விகா

44 தம் நினைத்தபேர் கெங்கைக் கரையிலே காராம் பசுவையும் பிராம்மண

45 ரையும் கொன்ற தோஷத்திலே போகக்கடவாராகவும் உ சிவமயம்

# 73

# பெருவயல் செப்பேடு

| | | |
|---|---|---|
| இருக்கும் இடம் | : | எஸ். மீனாட்சிசுந்தரம், பெருவயல் |
| அரசர் | : | முத்துக்குமார விசைய ரகுநாத சேது பதி காத்த தேவர் |
| தானம் அளித்தவர்கள் | : | சேதுராசன் பேட்டை வணிகர்கள், இராமநாதபுரம் |
| காலம் | : | 29—3—1741 |

**அமைப்பும் செய்தியும் :** தேவிபட்டினத்தை அடுத்த பெருவயல் கிராமத்தில் இரணபலி முருகன் திருக்கோயில் உள்ளது. அக்கோயிலை நிர்மாணித்தவர் தளவாய் வயிரவன் சேர்வைகாரர். தளவாய் வயிரவன் சேர்வைகாரரும், சேதுபதி மன்னரும், சிவகங்கை மன்னர் முத்து வடுகநாதப் பெரிய உடையாத் தேவரும், அறந்தாங்கித் தொண்டைமான்களும், திருநெல்வேலிப் பாளையக்காரரும் இந்த இரணபலி முருகன் கோயிலுக்குப் பல கொடைகளை அளித்துள்ளனர்.

இராமநாதபுரம் சேதுராச பேட்டையில் வணிகம் செய்யும் வணிகர்களின் முன்னோர் நூலின்படி இரணபலி முருகனே அவர்கள் வணிகத்துக்கு குருமூர்த்தி கர்த்தராக உள்ளார் என்று கூறப்படுகிறது. பேட்டைக்கு வணிகத்துக்கு வருகிற பாக்கு, மிளகு, பலசரக்கு, செம்பு,

சவுளி, பஞ்சுப்பொதி இவைகட்குப் பொதி ஒன்றுக்கு அரைப் பணமும் மற்ற நெல், காய்கள், தானியம், நவதானியம், வெற்றிலை, பருத்தி முதலிய பொருள்களுக்குச் சீமையில் உள்ளபடி மகமையும் அளிக்கப் பட்டது.

கூறப்பட்டுள்ள செட்டியார்கள் பெயரிலிருந்து அவ்வணிகர்கள் தெலுங்கு தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் என்பதை அறிகிறோம். 'ஏடு தொட்டுக் குடுத்தபடிக்கு' விசுவ குலத்தைச் சேர்ந்த மதுரை நாலங்கராயன் சட்டையப்பன் இச்செப்பேட்டை எழுதியுள்ளார்.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 சுபமஸ்து ஸ்வஸ்தி ஸ்ரீமன் மகாமண்டலேசுரன் அரிய ராயிர தளவிபா டன் பாசைக்கு தப்

2 புவார் கண்டன் மூவராயிர கண்டன் கண்டநாடு கொண்டு கொண்ட நாடு கொடாத

3 ான் பாண்டியமண்டல தாபனாசாரியன் சோழமண்டலப் பிரதிஷ்டா பனாச்சாரிய

4 ன் தொண்டமண்டல சண்டப்பிரசண்டன் மீழமுங் கொங்கும் யாட் பாண

5 தேசமும் எம்மண்டலமுங் கெச வேட்டை கொண்டருளிய ராசாதி ராசன் ராசபர

6 மேசுரன் ராச மார்த்தாண்டன் ராசகெம்பீரன் ராசமனோ பயங்கரன் உரிகோல் சுர

7 தானன் அந்தம்பிரகண்டன் சாடிக்காரர்கள் கண்டன் சாமித்துரோகி யள் மிண்டன்

8 பரதழ விபாடன் துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலன் வேதியர் காவலன் பட்டமானங் க

9 ாத்தான் மலைசுலங்கிலும் மனங்கலங்காதான் பஞ்சவன்ன ராய ராவுத்த மிண்டன்

10 வன்னியராட்டந் தவிழ்த்தான் ஓட்டியராட்டந் தவிழ்த் தான்து

11 லுக்கதள விபாடன் துலுக்கராட்டந் தவிழ்த்தான் நிலதநுதல் மடமா
தர் மடலெ

12 முத வருசுமுகன் வீசையலட்சுமி காந்தன் காமினி கந்தப்பன் கலை
தெரியும் வி

13 ற்பனன் சகலகலை வல்லவன் சண்டபிரசண்டன் சத்தியசீலசந்திரன்
சங்கித சாயுத்

14 நிய வித்தியா வினோதன் வீரவெண்பாமாலை விருதரசர் மணவாளன்
இளஞ்சிங்கந் த

15 ளஞ்சிங்கம் பகைமன்னர் சிங்கம் பரராசசிங்கம் ஆத்தில் பாச்சி கடலில்
ப

16 ாச்சி தாலிக்குவேலி தர்மபரிபாலன் அடைக்கலங் காத்தான் கொட்ட
மடக்கி வ

17 ய்யாளி நாராயணன் யிவுளி பாவடி மிதித்தேறுவார் கண்டன் துர்க
ரேபந்தன் நாடு க

18 லக்கி தொண்டியந்துறைக் சுாவலன் தண்டுவாரி மிண்டன் வலியச்
சருவி மதுரை மா

19 னங்கரத்தான் செங்காவிக் குடையான் கெருடக்கொடி அனுமக்கொடி
சி

20 ங்கக்கொடி யாழிக்கொடி புலிக்கொடி மீனக்கொடித் துவசன் வில்லு
க்கு

21 விசையன் சொல்லுக்கு அரிச்சந்திரன் பொறுமைக்குத் தர்மன் புகழுக்கு
குமுண

22 ன் செம்மிவளநாடன் தேவை நகராதிபன் சேதுகாவலன் சேதுமூலரட்ச

23 ா துரந்தன் ராமனாதசுவாமி காரிய துரந்தரன் ஏழை பங்காளன்
எதுத்தார்க்கு

24 மார்பிலாணி கிரிதுற்க செலதுற்க மதில்துற்க விபாடன் சேதுமார்க்க

25 ந் தளவிலாச தர்ம பரிபாலனம் பண்ணிவிச்ச ராசமாணிய ராசஸ்ரீ
ஹிரணிய

26 கெற்பயாசியாகிய ஸ்ரீமது ரவிகுல முத்துக்குமார் விசைய ரகுநாத சேதுபதி கா

27 த்த தேவரவர்கள் பிறிதிவி ராச்சியம் பரிபாலனம் பண்ணிஅருழா நின்ற

28 நாளாவன கலியுகம் 4842ல் சாலியவாகன சகாத்தம் 1663

29 யிதன்மேல்ச் செல்லாநின்ற துற்மதி ஞ்ரு சித்திரை மாதம் 1 தேதி ஆதித்த வாரமுஞ் சத்

30 தமியும் உத்தராட நட்சத்திரமுந் சித்தி நாமயோகமும் மறுவால வா கரணமும் ரிஷ

31 ப லக்கினமுங் கூடின புண்ணிய தினத்தில் பெருவயல் ரணபலி முருக சுவா

32 மியாருக்குச் சேதுராசாவின் பேட்டை பலராவண பொம்மு செட்டியா

33 ர் மாணிக்கன்செட்டியார் வயிரவன்செட்டியார் சிவசங்கரன்செட்டி யார்

34 வயிரவன்செட்டியார் முதலாகிய பலரும் மத்துமுள அன்பத்தாறு தேசத்து

35 ப்பலரும் மகமை நிறுத்திக் கொடுத்த பரிசாவது ரணபலி முருகன் சுவாமி முருகன்

36 சூற்பகை செட்டி குமரன் என்ற முன்னோர்கள் நூலின்படிக்கு எங்கள் செட்டு விய

37 ாபாரத்துக்குக் குருமூர்த்த கர்த்தற்ராகிய ரணபலிமுருக சுவாமியா கச்சே சு

## இரண்டாம் பக்கம்

38 வாமியாருக்கு அபிஷேக நெய்வேதனம் திருமாலை திருவிழாக்கு முத லாகிய

39 சோடசோபகாரத்துக்கு மண்டபம் கட்டிவிக்கிறதுக்கு திருவிழா உச்சப மண்ட

40 பப்படி தர்மம் நடத்தைக்கும் திருநந்தவன முதலாகிய கயின்கிரியங்களு

41 க்கு மகமை நிறுத்திக்குடுத்த பரிசாவது சேதுராசாவின் பேட்டையை நோ

42 க்கி வருகிற வியாபாரம் பாக்கு மிளகு பலசரக்கு செம்பு சவுளிப் பஞ் சுப்

43 பொதிக்கெல்லாம் பொதி ஒன்று அரைப்பணமும் மத்த நெல்லுக் காய்கள் தானி

44 யம் நவதானியம் வெத்திலை பரித்தி மத்தச்சரக்கு மத்தமுள்ள வியா பாரப்

45 பொதியளுக்கும் சீமைக்கும் உள்ளபடிக்கும் மகமையும் ரணபெலி முருக சுவா

46 மியாருக்கு மகமை நிறுத்தி தானம் பண்ணிக் குடுத்தபடியினாலே ஆசந்திரா

47 ற்கஞ் சந்திராதித்தவரை சந்ததிப் பிரவேசமுள்ளவரைக்கும் குடுத்து லர

48 க்கடவோமாகவும் இப்படிக்கு நடந்துவருகின்ற மகமை தற்மத்து

49 க்கு யாதாமொருவர் வாக்கு சகாயம் அற்த்த சகாயம் சரீர சகாயத்

50 துடனேயுங்கூட பரிபாலனம் பண்ணினவர்கள் காசியிலே சேதுவி

51 லேயும் மத்தப்புண்ணிய ஸ்தலங்களிலேயும் கோடிபிரம்ம பிரதிஷ் டையும்

52 கோடி விஷ்ணுப்பிரதிஷ்டையும் கோடி சிவலிங்க பிரதிஷ்டையும் கோடி

53 பூதான கோதான கன்னிகாதான சோடச மஹாதானங்களையும் பண்ணினாலெ

54 ந்தக் சுகிர்த விஷேச முண்டோ அந்தச் சுகிர்த விசேஷங்களையும் அஷ்ட

55 யிசுவரியங்களையும் வங்கிஷாபிவிர்த்தியுமடைந்து பலசாதகங்களி லேயு

56 ம் எண்பத்தோரு கோடி சொற்கமண்டலங்களிலே உள்ள வைபோகங் களை

57 அடையக்கடவாராகவும் இந்த-தர்மத்துக்கு யாதாமொருவர் அகிதம்
பண்ண நினைத்தா

58 லும் அவர்கள் கெங்காதீர்த்தத்திலேயும் ஸ்ரீ ராமதனுக்கோடியிலேயும்
கோடிப் பிரமஹ

59 த்தி கோஹத்தி ஸ்திரிஹத்தியும் பண்ணின தோஷத்தையும் மாதா
பிதாவையும் வ

60 தை செய்த தோஷத்தையும் அடைந்து அனேக கொடிய ரோகத்தை
யும் அன்ன வஸ்தர

61 பந்தத்தையும் லெட்சயும் புத்திரச் சயத்தையும் அடைந்து மறுமையி
லேயும் வைவசுத

62 பட்டினத்திலே தென்பாரிசத்தில் இருக்கப்பட்ட விராள கிராள்
உணர்த்த கோசனென்

63 னப்பட்ட இமகிங்கிராயளயிம் படான் தெண்டினையும் இருபத்து
எட்டுக்கோ

64 மாவூர்வாதி நரகத்திலே அழுந்தக் கடவாராகவுமென்று இந்த இரு
வகைச்

65 சபதங்களையும் இருவகைசு கருமங்களும் மகமையிலே நடத்தினபேரு
க்கு

66 வரகக்கடவதென்று பலர் சகலரும் சம்மதியாக மனோவாக்குக் காய
கருமங்

67 களுடன் சபிச்சு அவரவர் பெரும்புண்ணியம் ஹஸ்தலிகிதங்களும் வகிச்

68 சு பட்டயங்குடுத்தபடியினாலே மகமைத் தற்மத்தை அபிவிற்தியாக ந

69 டத்திவிச்சுக்கொள்ளக்கடவார்களாகவும் இந்தத் தாலிகா சாதனப்
படிக்கு தா

70 ம்பிர சாதனம் சிலாசாதனமும் பெருவயல் ரணபலி முருக சுவாமி
சன்ன

71 தித் தானத்தார் தலத்தாரும் பண்ணிவிச்சுக் கொள்ளக் கடவாராக
வும் இந்த

72 ப்படி சேதுராசாவின் பேட்டைப் பல ஹஸ்த லிகிதம் போட்டுவிச்சு
ஏடு

73 தொட்டுக் குடுத்தபடிக்கு எழுதினேன் விசுவகுல வங்கிஷத்தில் மதுரை
நாலாங்கரா

74 யன் சட்டையப்பன் எழுதினது

# 74

# பாலையேந்தல் செப்பேடு

| | | |
|---|---|---|
| இருக்கும் இடம் | : | தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை அருங்காட்சியகம், இராமநாதபுரம் |
| அரசர் | : | முத்துக் குமார விசைய ரகுநாத சேதுபதி காத்த தேவர் |
| காலம் | : | 7—5—1742 |
| அளவு | : | 18.7 செ.மீ. × 15.5 செ.மீ. |

**அமைப்பும் செய்தியும்** : இச்செப்பேட்டின்[1] கைப்பிடியின் மேல்பகுதி உடைந்துள்ளது. தாமரைமலர் இதழ்கள் போல அழகான வரை கோட்டு ஓவியம் கைப்பிடியில் வரையப்பட்டுள்ளது.

சேதுபதி அரசர் அவர்கள் தம் தாயார், தந்தையார் ஆகியோர் புண்ணியமாகத் திரு உத்தரகோசமங்கை இறைவன் மங்கைநாத சுவாமி சன்னதியில் சகஸ்ரலிங்க சுவாமிக்கு அபிடேகம், நைவேத்தி யம், திருமாலை, திருவிளக்கு ஆகிய அறச்செயல்கள் தொடர்ந்து நடை பெறப் பாலையேந்தல் என்ற ஊரைக் கொடையாகக் கொடுத்ததை இச்செப்பேடு கூறுகிறது.

---

1. *ARE, A. 42 of 1947*

நான்கெல்லைகளிலும் நடப்பட்டுள்ள எல்லைக்கற்களாகிய குத்துக்கற்களுக்கு உட்பட்ட நன்செய், புன்செய், மாவடை, மரவடை, திட்டு, திடல், வாவி, கூபம் அனைத்து வருவாய், வரிஇறை, ஊழியம், உலுப்பை போன்ற எல்லாவற்றையும் கொடையாக அளித்ததை இச் செப்பேடு கூறுகிறது.

இதிலிருந்து வரும் வருவாயைக் கொண்டு சுவாமி மங்கைநாத சுவாமிக்கும் வாரேறு பூண்முலை அம்மனுக்கும் சுக்கிரவாரக் கட்டளை நடத்தி அம்மனை எழுந்தருளச் செய்து திருநந்தாவிளக்கு வைக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

அத்துடன் குமார தோப்பு நந்தவனத்துக்குக் கொடையாக தேரிரு வேலியில் இருந்த சேதுபதி அரசரின் காவல் காணியாட்சியான வீசு கொண்ட தேவன் நஞ்சையில் பத்தொன்பது மா நிலமும் புன்செய் நிலம் இரண்டு மாவும் கோயிலுக்குக் கொடையாக அளிக்கப்பட்டது என்ற செய்தியும் கூறப்பட்டுள்ளது.

அந்த ஊரில் உள்ள காவல் சுதந்திரமும், சேதுபதி அரசரின் அவ்வூர்க் காவல் குடியான துலுக்கர் அளிக்கும் தறிக்கடமை, அந்த ஊரில் உண்டான காவல் சுதந்திரம் ஆகிய பணமும் சுவாமிக்குக் கொடுக்குமாறு கட்டளையிடப்பட்டது.

இச்செப்பேட்டை திருப்புல்லாணி வங்காருப் பண்டாரம் மகன் முத்துப் பண்டாரம் என்பவர் எழுதியுள்ளார். சிவமயம் என்ற தொடருடன் இச்செப்பேடு முடிவடைகிறது.

இச்செப்பேடு அளிக்கப்பெற்ற தலம் திருஉத்தரகோசமங்கை பாண்டிநாட்டுச் சைவத் தலங்களில் ஒன்று. மாணிக்கவாசருக்குச் சிவபெருமான் காட்சி கொடுத்தருளிய தலம். இதனை மாணிக்கவாசகரின் கீர்த்தித் திருஅகவல் (48-49)

''உத்தர கோச மங்கையுள் இருந்து
வித்தக வேடங் காட்டிய இயல்பும்''

என்று கூறுகிறது.

# செப்பேடு

## முதல் பக்கம்

1 சொஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1664 இதன் மே
2 ல்ச் செல்லாநின்ற துந்துமீநாம சம்வத்சரம் உத்தராயணத்தில்
3 வசந்த ரிதுவில் வைய்காசி மீத்து 8உ பூறுவ பட்சத்து
4 சதுற்தெசியும் சுக்குறவாரமும் விசாக நட்செத்திரமும் வரி
5 யானினாம யோகமும் வணிககரணமும் பெற்ற சுபதின
6 த்தில் தேவை நகராதிபன் சேதுமூல ரட்சா துரந்தரன் ரா
7 மனாதசுவாமி காரிய துரந்தரன் கண்டநாடு கொண்டு கொ
8 ண்டநாடு கொடாதான் பாண்டிமண்டலத் தாபனாசா
9 ரியன் சோளமண்டலப் பிறதிஷ்டாபானாசாரியன் தொண்
10 டமண்டல சண்டப் பிறசண்டன் ஈளமும் கொங்கு மி
11 யாட்பான பட்டணமும் எம்மண்டலமு மளித்து கெசவே
12 ட்டை கண்டருளிய ராசாதிராசன் ராசபரமேசுபரன் ராச
13 மாத்தாண்டன் துட்டரில் துட்டன் துட்டர் கொட்டம
14 டக்கி தொட்டலார் மறவாதவன் அன்னசத்திர சோமன் கு
15 டைக்கு கற்னன் பொறுமைக்கு தற்மர் பரிக்கு நகுலன் செ
16 ங்காவிக் குடையான் சேமத்தலை விளங்கிய தாளினான்
17 கெருடகேதனன் அனுமகேதனன் சிங்ககேதனன் மீன
18 கேதனன் துகலூர்க் கூற்றத்துக் காத்தூரான குலோத்து
19 ங்க சோளநல்லூர் கீள்பால் விரையாத கண்டனிலிருக்
20 கும் ஸ்ரீஇரணிய கெற்பயாசியான முத்து ரகுனாதச் சேது
21 பதி காத்த தேவரவர்கள் புத்திரன் முத்துக் குமார விசைய

22 ரகுநாதச் சேதுபதி காத்த தேவரவர்கள் மாத்ரு வர்க்கத்து
23 க்கும் பிதாவர்க்கத்துக்கும் புண்ணியமாக திருவுத்தரகோ
24 சமங்கை நயினார் மங்கைனாத சுவாமி சன்னதியில் சக
25 ஸ்ரலிங்க சுவாமிக்கு அபிஷேக நெய்வேத்தியம் திருமாலை
26 திருவிளக்கு நடக்கும்படிக்கு விட்டுக்கொடுத்த கிறாமம் பாலை
27 யேந்தல் னாங்கெல்கைக் குத்துக்கல்லுக் குள்பட்ட ந
28 ஞ்சை புஞ்சை மாவடை மரவடை திட்டுத்திடல் நிதிநிட்

## இரண்டாம் பக்கம்

29 சேபமும் வாவி கூபமும் சொற்னாதாயம் சகலசமுதாயப்பிறா
30 த்தியும் வரி இறை ஊளியம் உலுப்பையும் சறுவ மானிபமா
31 க குடுத்து சுவாமி மங்கைனாதசுவாமிக்கும் அம்மன் வாறே
32 று பூண்முலை யம்மனுக்கும் சுக்குறவாறக் கட்டளைக்கு அ
33 ம்மனெளுந்தருளப் பண்ணுகிறதுக்கும் அம்மனுக்கு
34 திருநந்தா விளக்கும் குமாரதோப்பு நந்தவனத்துக்கு
35 விட்டுக் குடுத்தது தேரிருவேலியில் நம்முட காவல்க்
36 காணியாட்சியான வீசுகொண்ட தேவன் காவல் நஞ்
37 சை பத்தொன்பது மா நிலமும் புஞ்சைத் தட்டு ரெண்
38 டும் அந்த ஊரிலே உண்டாகிய காவல் சுவந்திரம் சகல
39 மும் நம்முட காவல்க்குடியான துலுக்கர் தறிக்கடமை
40 யும் அந்த ஊரிலே உண்டாகிய காவல் சுவந்திரப் ப
41 ணமும் சகலமு சுவாமிக்கு சறுவமானியமாகத் தாம்புர
42 சாதனங் கட்டளையிட்டோம் இந்தப்படிக்கு ஆதி சந்
43 திராதித்தவரை சந்திறப் பிறவேசம் ஆண்டனுபவி
44 த்துக் கொள்ளக் கடவாராகவும் இந்த தற்மத்தை யாதா

45 மொருவர் பரிபாலனம் பண்ணினபேர் கெங்கை

46 க்கரையிலே கோடி சிவலிங்கப் பிறதிஷ்டையும் கோ

47 டி விறும்மப் பிறதிஷ்டையும் கோடி அன்னசத்திரங்களும்

48 பண்ணிவைத்த பலனையடைவாராகவும் இந்த தற்மத்

49 துக்கு யாதாமொருவர் விகாதம் நினைத்தபேர் கெங்கைக்

50 கரையிலேயும் சேதுக்கரையிலும் மாதா பிதாவையும்

51 குருவையும் காராம்பசுவையும் பிராமணனையும் கொன்

52 ற தோஷத்திலே போகக் கடவாராகவும் உ ஸ்வதத் தாத்வி கு

53 ணம் புண்யம் பரதத்தாநு பாலநம் பரதத் தாப ஹா

54 ரேண ஸ்வத்தம் நிஷ்பலம் பவேத்: உ இந்தப்படிக்கு எ

55 ளுதினேன் திருப்புல்லாணியூர் வங்காருப் பண்டாரம்

56 புத்திரன் முத்துப் பண்டாரம் கையெழுத்து உ சிவமயம்

# 75

# ஏர்வாடிச் செப்பேடு

இருக்கும் இடம் : ஏர்வாடி தர்கா, இராமநாதபுரம் மாவட்டம்

அரசர் : முத்துக்குமார விசைய ரகுநாதச் சேதுபதி காத்த தேவர்

காலம் : 1—11—1742

அளவு : 32 செ.மீ. × 18.6 செ.மீ.

**அமைப்பும் செய்தியும்** : இது சேதுபதியரசர் இசுலாமியத் தர்காவிற்கு அளித்த கொடையைக் குறிக்கும் செப்பேடு. சிவசுப்ரமண்யம் துணை எனத் தெலுங்கில் எழுதப்பட்டுள்ளது. இச்செப்பேடு சேதுபதியரசர் களின் சமயப்பொறைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

சேதுபதியரசரின் மாமனாருக்கு ஏற்பட்டிருந்த தொழுநோய் அவர் ஏர்வாடித் தர்காவிற்கு வந்து வழிபட்டதன்மூலம் தீர்ந்தது என்றும், அதைக் கண்ணுற்ற சேதுபதியரசர் தனக்கு மகப்பேறு இல்லாக் குறை யைப் போக்க இங்கு வந்து வணங்கி மகப்பேறு பெற்றார் என்றும் கூறுவர். அவ்விரு அரிய காரியங்களால் மகிழ்ந்த சேதுபதி இந்தத் தர்காவிற்குக் கொடை தந்தார் என்பது செவிவழிச் செய்தியாகும்.

இங்கு புனித அடக்கம் அடைந்துள்ள சான்றோர் சுல்தான் சையத் இபுராகீம் வலி அவர்கள். மக்காவில் பிறந்த அவர் மதினாவிலிருந்து இங்கு வந்தார். அவர்கள் ஆண்டவனின் புனிதத்தூதர் நபிகள நாயகம் அவர்களின் திருமகளார் வழி 16ஆவது வாரிசு ஆவார். அவர் 12ஆம் நூற்றாண்டில் இங்கு வந்தார் என்பர்.

கல்வி கேள்விகளிலும் சமய ஒழுக்கத்திலும் சிறந்தவரான அவர் தாம் கண்ட கனவுப்படி தொண்டர்களுடனும் வீரர்களுடனும் குடும்பத்தோடும் மேலைக் கடற்கரையில் இறங்கிப் பாண்டியனோடு தொடர்பு கொண்டார்.

காயல், மதுரை, பெரியபட்டினம் சென்று சமயநெறி பரப்பி ஏர்வாடியில் புனித அடக்கம் ஆனார். இவரது வரலாற்றை வண்ணக் களஞ்சியப் புலவர் தீன்நெறி விளக்கம் என்னும் நூலில் எழுதியுள்ளார். அந்நூல் குறிப்பிடும் பவித்திரமாணிக்க பட்டினம் ஏர்வாடியே என்பர்.

சுல்தான் சையத் இபுராகீம் வலி அவர்கள் அராபியாவில் வாழ்ந்த இடத்திற்கு 'ஏர்பாத்' என்பது பெயர் என்றும், அதனால் அவர் புனித அடக்கமான இடத்திற்கு 'ஏர்பாடி'-'ஏர்வாடி' என்று பெயராயிற்று என்பர்.

சிவபெருமான் சடலில திமிங்கலத்தைக் கொன்று கரை ஏறிய 'ஏறுபாடி' ஆயிற்று என்று மற்றொரு கருத்தும் உண்டு. வேறுசிலர் முருகன் மீனாக வந்து பரதவர் வலையில் அகப்பட்டுக் கரையேறிய இடம் 'ஏறுபடி' என்பர். இன்று கத்தோலிக்க மதத்தைச சேர்ந்த மீனவர்கள் கூட வலையை இழுக்கும்போது இப்பகுதியில் 'ஓவேலா காவேலா' என்று கூறுவராம்.

ஏர்வாடிக் கண்மாய்க் கரையில் 'யேறுபடிக் கிராமம் கண்மாய் மேல்கடக்கொம்புக் கரெக்கி யெல்கைக் கல்' என்று எழுதப்பெற்ற கல் வெட்டொன்றுள்ளது.

செப்பேட்டில் ஏறுபாடிப் பள்ளிவாசல் என்ற பெயர் காணப்படுகிறது.

ஒரு முழுமதி நாளன்று முகமதியப் பெரியார் முசாபர் ருல்ல இபுராகீம் என்பவரிடம் பெரியமாயாகுளம், திரு உத்தரகோசமங்கை ஆகிய

ஊர்களில் உள்ள சில நிலப்பகுதிகளைச் சேதுபதி அரசர் ஏர்வாடி தர்காவுக்காகக் கொடையாக அளித்தார்.

பெரியமாயா குளமான ஏந்தல் நிலத்துக்குக் கிழக்கு எல்லை நிலமுடையான் கண்மாய் கீழ்க்கரை, சின்னு பண்டாரம் தோட்டம்; வடக்கு எல்லை பண்ணைக் காட்டில் தொலிச்சான் வீரன் தட்டு, பனையேந்தல் புஞ்சைக்காடு; மேற்கு எல்லை மேற்படி எதம்பாடல் காடு, ஆண்டி சுத்தான் வாகையடி ஊருணி; தெற்கு எல்லை ஓரக்கரை ஆகியன ஆகும்.

மேற்கண்ட எல்லைக்குட்பட்ட பாசனப்பகுதி நன்செய் விரையடி 50 கலம் நிலமும், புன்செய் விரையடி 4 கலம் 1 மரக்கால் நிலமும் ஆக மொத்தம் 54 கலம் 1 மரக்கால் விரையடி நிலம் பெரியமாயா குளத்தில் கொடுக்கப்பட்டது

திரு உத்தரகோசமங்கையில் புன்செய் நிலம் 32 காணி சதுர மான செம்மண் மணக்காடு கொடையாக அளிக்கப்பட்டது. இந்நிலத் திற்கு மேற்கு எல்லை மாவிலிங்க ஊருணி, அரியவன் கட்டையன் தட்டு, கரிமுந்தல், தெற்கு எல்லை சமுத்திரக்கரை; கிழக்கு எல்லை பள்ளிமுனைக்குடா, வாளி நாடான் தட்டு, பூசாரி நாடான் தட்டு, தச்சன் ஊருணி; வடக்கு எல்லை ஓரக்கரை ஆகியன ஆகும்.

இவ்விரண்டு நிலப்பகுதிகளில் வழங்கும் எல்லாவரிகளையும் தர்காவுக்கே அளிக்கவேண்டும் என்று கட்டளையிடப்பட்டது.

ஊழியம், உலுப்பை, வைக்கல்கட்டு, வண்டில்மாடு, ஆயக்கட்டு வரி, உம்பளவரி, நிலவரி, பள்வரி, பறைவரி, கம்பட்டவரி, முள்ளு வரி, காணிக்கைவரி முதலிய அப்போது வழங்கிய வரிகளையும், இனி மேல் எதிர்காலத்தில் ஏதேனும் புதுவரிகள் இடப்பட்டால் அவ்வரி களையும் (யெவ்வரிப் பிறக்கிலும் அவ்வரி முதல்) அரசர் அளித்தார்.

நீர் நிலைகள், அங்கு மீன்பிடிக்கும் உரிமை, கொடை நிலங்களில் பணிபுரியும் ஆட்கள் இவர்களையும் கொடையாக அளித்தார்.

உப்பளத்திலிருந்து கிடைக்கும் எல்லா வரிகளும் தர்காவுக்கே அளிக்கப்பட்டன.

அப்பகுதியில் நெல், புல் உட்பட எல்லாப் பொருள்களையும் வாங்கவும், விற்கவும், வியாபாரம் செய்யவும் வருவோர் செலுத்தும்

ஆயம், தீர்வை, சம்மாதம், சத்தவரி முதலியன அனைத்தும் தர்காவுக்கு அளிக்கப்பட்டன.

இறுதிப் பகுதியில் வழக்கமான காப்புரைகளுடன் இசுலாமியர் பெருமக்கள் மரபுக்கு ஏற்பச் சில புதிய காப்புரைகளும் மிக அரிய வகையில் கூறப்படுகின்றன.

> 'யாதொரு யிசிலாமானவர்களில் (இஸ்லாம்) பரிபாலனம் பண்ணினவர்கள் கோடி அடுமை கொண்டு உருமைக்கு விட்ட பலனும்'
>
> 'கோடி கச்சுச் (ஹஜ்) செய்த பலனும் அடைவாராகவும்'.
>
> இந்த தற்மத்துக்கு விகாதம் பண்ணினவர்கள் மாதா பிதா ஒஸ்த்தாதை (வஸ்தாத்-குரு) வதை பண்ணிவிச்சு மக்கத்துப் (மக்கா) பள்ளியை இடித்தபாவத்திலே போவாராகவும்'

போன்ற காப்புரைத் தொடர்கள் வேறு செப்பேடுகளில் காணமுடியாத தொடர்களாகும்.

இச்செப்பேட்டை மதுரையிலிருக்கும் விசுவகோத்திரம் உத்தண்ட மூர்த்தி நாலங்கராயன் ஆசாரி மகன் சட்டையப்பன் என்பவர் எழுதினார் என்று கூறப்படுகிறது.

இச்செப்பேடு ஏர்வாடி ஊராட்சி மன்றத் தலைவரும் தர்காவில் பரம்பரை அறங்காவலருமான திரு. சையத் இபுராகீம் அவர்கள் வசம் உள்ளது.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாஹந சகாப்தம் 1654 இதன்மேல்ச் செல்லாநின்ற துந்துபி வருஷ

2 நாம ஸம்வத்சரத்தில் தெட்சணாயத்தில் சரரிதுவில் அற்பிசி மாஸத்தில் பவற்ணமையும் சோ

3 மவாரமும் அசுபதி நட்செத்திரமும் வச்சிரநாம யோகமும் சுபகரண மும் பெத்த சுபதினத்தில் சுபஸ்ரீ

4 மன் மகாமண்டலேசுரன் அரியராயிரதள விபாடன் பாசைக்குத் தப்புவராயிர கண்டன் மூவரா

5 யிர கண்டன் கண்டனாடு கொண்டு கொண்டனாடு கொடாதான் பாண்டிமண்டலத் தாபனாசாரி

6 யன் சோமமண்டலப் பிறதிஷ்டாபனாசாரியன் தொண்டமண்டலப் பிறசண்டப் பிறசண்டன் யிழமுங்

7 கொங்கு யாழ்ப்பாண பட்டணமும் கிசவேட்டை திகாண்டருளிய ராசாதி ராசன் ராசபரமேசுப

8 ரன் ராசமாற்தாண்டன் ராசகெம்பீரன் ராசகுலதீபன் வீரரில் வீரன் வீரகஞ்சுகன் வீரவெண்பா

9 மாலை வீரரணகேசரி வீரவிற்கிரமாற்கன் பரிக்கு நகுலன் குடைக்குக் கற்னன் வில்லுக்கு விசையன் மல்லு

10 க்கு வீமசேனன் பொறுமைக்கு தற்மப்புத்திரன் ஆக்கினைக்கு சுக்கிறீ பன் அழகுக்கு வாலசீவகன் பிறச

11 ங்கத்துக்கு ஆதிசேஷன் கருணைக்கு ரெகுராமன் சத்தியபாஷா அரிச் சந்திரன் சத்துருவாதியள் மி

12 ண்டன் சகலகுண சம்பன்ன சங்கீத சாரயுத்திய வித்தியா வினோதன் சறுவசீவ தயாபரன் சாமித்

13 துரோகியள் மிண்டன் தண்டுவார் மிண்டன் தளங்கண்டு தத்தளிப் பார்கள் கண்டன் தந தார

14 தார பிறதார புத்திரன் சகல சாம்பிறாச்சி லட்சுமி நிவாசன் கருதலர் கள் முடியிடறு கள துரந்த

15 ர னகுலன் கட்டாரி ராயன் கருணா கடாட்சன் காமிநி கந்தப்பன் கலைதெரியும் விற்பனன் கலியாண

16 குணசீலன் இரவிகுல சேகரன் இறவி வற்மன் இவுளி பாவிடி மிதித் தேறுவார் கண்டன் இடறு

17 வார் கண்டன் இடறுவார் தோடாலி யிரவலர் கவிகோபன் அரசராவண ராமன் அடியார் வேளை

18 க்காறன் அந்தம்பிற கண்டன் அனுமத்துசம் கருடத்துசம் மீன்துசம் சிங்கத்துசம் வியாக்கிறம

19 துசம் நீமிதுசம் காவித் துசமுஞ் செங்காவிக் குடையும் அதின்மேல் விரூது சல்லியும் உண்டான தே

20 வாதிதேவனை அடைச்சுங் காற்றான் உரிகோல் சுரதானன் வீரதண்டை சேமத்தலை விளங்கிய தாளினான்

21 மனுநீதி மன்னன் மலைகலங்கினும் மனங்கலங்காதான் வன்னியராட்டந் தவிள்த்தான் அசுபதி கெ

22 சபதி நரபதி சேது செம்பி வளநாடன் வேதியர் காவலன் கொளுமீதி கொண்டு குவலையங் காத்

23 தவன் சேதுமூல லெட்சா துரந்தரன் தேவ நகராதிபன் துரகதவேந்தன் துலுக்கர்தள விபாடன

24 ன் கோடச மகாதான சீலன் பஞ்சகால பயங்கரன் பஞ்சபானா அவ தாரன் பஞ்சவற்ன ராவுத்தர்

25 மூண்டன் படைக்குங் குடைக்கும் ஓடாத கண்டன் ராமனாத சுவாமி பறுவதவற்தனி பாதாரவிந்த ே

26 சவிதன் தனுக்கோடி காவலன் திலக நுதல் மடமாதர் மடலெளுது புயசுமுகன் இயலிசை நாடக மூத்

27 தமிளறிவாணன் அனகன் அதிவீரன் அகளங்கன் அதிசெயன் புவனேக வீரன் மருவலர் கெச சிங்

28 கம் விருதான் வலியச் சருவி வளியில்க் கால்நீட்டி துட்டர் கொட்ட மடக்கி பட்டமானங் காத்தான்

29 பகைமன்னர் சற்ப கெருடன் பரதழவிபாடன் பனுக்குவார் கண்டன் பரராச சிங்கம் தாலிக்கு வே

30 லி தெகூஷண சிங்காசனாபதி மனுநீதி மன்னன் செகராசர் பணி பாதன் அன்னதான சோமன் அம

31 லன் அம்போரு கடாஷ்சன் தற்மபரிபாலனன் சற்பன்ன பாஷா துரந்தரன் சங்கீத சுவாமி பறு

32 வதவற்த்தனிநாயகி ராமநாதசுவாமி கருணா கடாஷ்சன் பரிபூறன் கீற்த்திப் பறிதாபணன் ஸ்ரீமது இ

33 றணிகெற்பயாசி ரெகுனாதச் சேதுபதி காத்த தேவரவர்கள் ஸ்ரீமது முத்துக்குமார வி

34 சைய ரெகுநாதச் சேதுபதி காத்த தேவரவர்கள் ஏறுபாடிப் பள்ளிவாச லுக்குக் கட்டளையிட்ட கிராம

35 த்துக்கு முசாபர் ருல்ல இபூறாகிமிடத்தில் தாம்பிற சாதனம் கொடுத்த பரிசாவது இப்போது

36 செம்பி நாட்டில்ப்பெரியமாயா குளமான ஏந்தல்தற்க் கெல்கையாவது கீள்யெல்

37 கை நிலமுடையான் கண்மாயி கீள்கரைக்கும் சின்னு பண்டாரம் தோட்டத்துக்கும்

38 மேற்கு வடயெல்கையாவதுப் பண்ணைக் காட்டில்த் தொலிச்சான் வீரன்த் தட்டுக்கும்

39 பனையேந்தல் புஞ்சைக் காட்டுக்கும் யெதம்பாடல் புஞ்சைக் காட்டுக் கும் தெற்கு C

40 மலெல்கையாவது ஷி யெதம்பாடல்க் காட்டுக்கும் ஆண்டி சுத்தான் வரகையடி ஊ

41 றணிக்கும் கிளக்கு தெற்கெல்கையாவது ஓரக்கரைக்கு வடக்கு யின்னாங் கெல்கைக்

42 குள்ப்பட்டது ஆயக்கட்டுப்படிக்கு நஞ்சை விரையடி 50 கலம் புஞ்சைத் தட்டு கொச்சமுள்பட செய்

## இரண்டாம் பக்கம்

43 க்கு விரையடி 4 கலத்து 1 மரக்கால் ஆக விரையடி 54 கலத்து 1 மரக் கால் ஷி ஊர் புஞ்சையில் திருவுத்திரகோசமங்

44 கைப் பிறவேசமாயிருந்த தட்டு 32 காணி சதிர செவ்வல் மணக்காடுக் கட்டளையிட்டுக் கொ

45 டுத்தக் காட்டுக்கு யெல்கையாவது மாவிலிங்க ஊறணிக்கும் அரியவன் கட்டையன்த் தட்டு

46 க்கும் கரிமுந்தலுக்கும் கிளக்கு தெற்கெல்கையாவது சமுத்திரக் கரைக்கு வடக்கு கிளக்கெ

47 ல்கையாவது பள்ளீமுனைக் குடாவுக்கும் வாளி நாடான் தட்டுக்கும் பூசாறி நா

48 டான்த் தட்டுக்கும் தச்சனூறணிக்கும் மேற்கு ஓரக்கரைக்கு தெற்கு இன்னாங்கெல்கை

49 க்குள்பட்ட செவ்வல் மணல் நஞ்சை புஞ்சையும் ஊறணி குட்டம் திட்டு திடல் மாவடை ம

50 ரவடை மேல்நோக்கிய மரம் கீள்நோக்கிய கிணரும் நீரும் பாசியும் பள்ளப் பறை

51 ஊளியம் உலுப்பை வைக்கல்க்கட்டு வண்டில்மாடு ஆயக்கட்டுவரி உம்பளவரி நில

52 வரி பள்வரிப் பறைவரி கம்பட்டவரி மூள்ளுவரி கார்ணிக்கைவரி இவ்வரி முதல் யெவ்

53 வரிப்பிறக்கிலும் அவ்வரிமுதல் அஷ்ட்ட போக தேசசுவாமியங்களும் ஓடையழத்தில்

54 மாதாந்தமாண்டு பறை உப்பு மூன்றெருவைபில் நெல்லுப் புல்லு யேதொன்றாகிலும்

55 பொதிபிடிச்சு கொள்வினை விற்பினை யாயினை யாபாரம் பண்ணி கொள்ளுகிறதுக்

56 கு ஆயந் திருவை சம்மாதஞ் சத்தவரி யீதுமுல்ான அஷ்ட்டபோக தேசசுவாமியங்களும்

57 ஏறுபடிப் பள்ளிவாசலுக்கு சறுவமானியமாக்கக் கட்டளையிட்டபடிக்கி ஆதித்த சந்திராத்த சந்ததிப் பிற

58 வேசமாக வுத்திர கோத்திரமாக ஆண்ட்னுபவித்து கொள்வாராகவும் இந்த தற்மத்தை யாதாமெ

59 ாருத்தர் பரிபாலனம் பண்ணின போர்கள் கோடிப் பிறதிஷ்ட்டையும் கோடி சிவலிங்கப் பிறதிஷ்ட்டை

60 யும் கோடி கன்னியதான பிற்ம பிறதிஷ்ட்டையும் கோடி அன்னதான் சொற்னதான கோதானமும் ப

61 ண்ணிக்கிற ஈகர்த்தத்தை அடைவராகவும் இந்த தற்மத்துக்கு யாதா மொருத்தர் அகிதம் பண்ணி

62 ன போகள் கெங்கைக் கரையிலேயும் சேதுவிலேயும் மாதா பிதாக் குருக்களையும் காராம்பசு

63 வையும் பிறாமணாளையும் வதைபண்ணின தோஷத்திலே போவா ராகவும் இந்த தற்மத்துக்கு

64 யாதாமொரு யிசிலாமானவர்களில் பரிபாலனம் பண்ணினவர்கள் கோடி அடுமை கொண்

65 டு உருமைக்கு விட்ட பலனும் கோடி கச்சுச் செய்த பலனுமடைவா ராகவும் இந்த தற்மத்துக்

66 கு விகாதம் பண்ணினவர்கள் மாதா பிதா ஒஸ்த்தாதை வதை பண்ணிவிச்சு மக்கத்துப் பள்

67 ளியை இடித்த பாவத்திலே போவாராகவும் யிப்படி சம்மதித்து தாம்பிற சாதனங் கொடுத்

68 தோம் ஸ்ரீயிறணி பகெற்பயாசி இரகுனாதச் சேதுபதி காத்த தேவர வர்கள் குமாரர் ஸ்ரீமது முத்துக்கு

69 மார விசைய ரெகுநாதச் சேதுபதி காத்த தேவரவர்கள் விசுவகோத் திர்த்தில் மதுரையிலிருக்கும்

70 உத்தண்ட நாலங்கராயன் ஆசாரி குமாரன் சட்டையப்பன் அஸ்த லிகிதம் உ சிவசுப்ரமண்யம் துணை

# 76

# இராமேசுவரம் செப்பேடு

இருக்கும் இடம் : ஆபில் காபில் தர்கா, இராமேசுவரம்

அரசர் : முத்துக்குமார விஜய ரகுநாத சேதுபதி கர்த்த தேவர்

காலம் : 9—5—1745

**அமைப்பும் செய்தியும்** : இது பெரிய தெலுங்கு எழுத்துக்களில் 'சிவ சுப்ரமணியம் துணை' என இருவரிகளில் எழுதப்பட்ட செப்பேடு.

ஆதிமனிதன் ஆதாம்-ஏவாள் தம்பதியர்க்கு ஆபேல் காயில் என இரு ஆண்மக்கள் இருந்தனர். கருத்து வேறுபாட்டின் காரணமாக காயின் ஆபேலைக் கொன்றுவிட்டான்.[1] தன்னால் கொல்லப்பட்ட தம்பி ஆபேலைச் சுமந்து கொண்டு பிணத்தை என்ன செய்வதென்று தெரியாமல் உள்கெங்கும் அலைந்தான். இராமேசுவரத்திற்கு வந்தபோது இறந்த ஒரு காக்கையைப் புதைக்க மற்றொரு காகம் குழிதோண்டியதைக் கண்டான். உடனே தானும் தம்பி ஆபலைப் புதைத்தான். பின் காயினும் அங்கு இறந்தபோது புதைக்கப்பட்டான்.

ஆதாம்-ஏவாளின் மக்கள் ஆபேல், காபேலின் புனித அடக்கம் ஆகியுள்ள இடமே இராமேசுவரம் ஆபில் காபில் தர்கர் என்று இசுலாமியர்

1) பரிசுத்த வேதாகமம், பழைய ஏற்பாடு, ஆதியாகமம்-4

நம்புகின்றனர். இலங்கையில் ஆதாம் குன்று என்ற பெயருள்ள குன்று இருப்பதும், சேதுப்பகுதியில் ஆதாம் பாலம் என்ற பெயருடன் ஒரு பகுதி இன்றும் இருப்பதும் இப்பண்டைய வரலாற்றுக்குத் தக்க ஆதாரங்களாக உள்ளன.

முத்துக்குமார விசயரகுநாத சேதுபதியவர்கள் இராமேசுவரத்தில் உள்ள ஆவல் காவல் பள்ளிவாசல் தர்மத்துக்காக நூறாலம்சா அவர்கள் மகன் சுல்தான் சஹாயி சரி பகீர் அவர்களிடம் புதுக்குளம் என்ற பகுதியைக் கொடையாக அளித்தார்.

புதுக்குளத்தின் தெற்கு எல்லை எக்கைகுடி ஒருச்சிறகு மடையில் நீர் பாய்ந்து நெல் விளைகின்ற குன்றா வயல், வாழவந்தாளம்மன் கோயில், பச்சரித்திடல் சேது மார்க்கம். கிழக்கு எல்லை கொத்தங்குளம் புரவு இவற்றின் தென்மேற்கு. வடக்கு எல்லை அச்சன்குடி, தோட்டக்காடு. மேற்கு எல்லை எக்கைகுடிக் கண்மாய் வடகடைக்கொம்பு, காணத்திடல் ஆகியவையாகும்.

மேற்கண்ட எல்லைக்குள் அடங்கிய எல்லா நிலப்பகுதிகளையும் எல்லா வரிகளுடனும் நீண்டகாலம் நிலைத்து நிற்கும் வண்ணம் கொடையாக அளித்தார்.

பொதுவாகச் செப்பேடுகளில் கூறப்படும் காப்புரைகளுடன் தமிழனாகிலும் நாலாவர்ணத்தில் உள்ளவனாகிலும் இசுலாமானவனாகிலும் வாக்குச் சகாயம் அர்த்தசகாயம் பண்ணினால் கங்கையிலும் சேதுவிலும் மக்கா மதினா ஆகிய இடங்களிலும் அன்னதானமும் சொர்னதானமும் அநேக குடும்ப பிரதிஷ்டையும் பண்ணின பலன்கிடைக்கும் என்று கூறப்பட்டுள்ளது. அதேபோல் இசுலாமியர்கள் யாராவது தீமை செய்தால் மக்கா மதினாவிலே மாதா பிதாவைக் கொன்ற பாவம் வரும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இச்செப்பேட்டை எழுதியவர் திருப்புல்லாணி முத்துப்பண்டாரம் மகன் இருளப்பன் என்பவர்.

இராமேசுவரத்தில் சங்கு வணிகம் செய்யும் திரு. தும்மணி மரைக்காயர் அவர்களும் அவர் துணைவியார் திருமதி அருள்மொழி அம்மையார் அவர்களும் இப்பள்ளிவாசலை நன்கு நிர்வகித்து வருகின்றனர். இன்றும் கொடைப்பகுதி பள்ளிவாசலுக்குச் சொந்தமாக உள்ளது.

கிழக்குக் கடற்கரையில் வணிகத்தால் செல்வ வளமிக்க சில நகரங்கள் பவித்திரமாணிக்கப் பட்டினம் என்று பெயர் பெற்றன. பவித்திரமாணிக்கம் 'தூயமணி' என்று பொருள்தரும் சொல். இத் தூயமணி என்ற தமிழ்ப்பெயரே தும்மணி (மரைக்காயர்) என்ற பெயர் ஆயிற்று.

கடல் வாணிகம் செய்த இசுலாமியப் பெருமக்களே மரக்கலராயர் கள்-மரைக்காயர் ஆயினார் என்பர்.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாஹந சகாப்தம் 1667 இதன்மேல் செல்லாநின்ற குரோத

2 ன் வருடம் உத்தராயணத்தில் வசந்த ரிதுவில் வைய்யாசி மீ 11 உ வியாளக்கிழ

3 மை பஞ்சமியும் உத்திராட நக்ஷத்திரமும் சுப்பிறநாம யோகமும் கௌலவாக

4 றணமுங் கூடின சுபதினத்தில் தேவை நகராதிபன் சேதுமூல ரக்ஷா துரந்தரன்

5 ராமனாதசுவாமி காரிய துரந்தரன் சிவபூசா துரந்தரன் பரராசசே கரன் பரராச கெ

6 ச சிங்கம் இரவிகுல சேகரன் இரவிமாத்தாண்டன் சொரிமுத்து வன்னி யன் ஸ்வஸ்தி

7 ஸ்ரீமன் மஹாமண்டலேசுவரன் அரியராயிரதள விபாடன் பாஷைக் குத் தப்பு

8 வராயிர கண்டன் மூவராயிர கண்டன் கண்டநாடு கொண்டு கொண்ட நாடு

9 கொடாதான் பாண்டிமண்டலத் தாபனாசாரியன் சோளமண்டலப் பிரதிஷ்டா

10 பனாசாரியன் தொண்டமண்டல சண்டப்பிறசண்டன் ஈழமும் கொங்கு மியா

11 ட்பான பட்டணமும் யெம்மண்டலமுமளித்து

12 கெசவேட்டை கண்டருளிய ராசாதிராசன் ராசப

13 ரமீசுவரன் ராசமாத்தாண்டன் ராசகுல திலகன்

14 இளஞ்சிங்கந் தளஞ்சிங்கம் பகைமன்னர் சிங்கம்

15 ஆற்றில்ப் பாச்சி கடலில்ப் பாச்சி மதப்புலி அடை

16 க்கலங் காத்தான் தாலிக்கு வேலி சத்துருவாதிய

17 ள் மிண்டன் வேதியர் காவலன் அரசராவண ரா

18 மன் அடியார் வேளைக்காறன் பரதள விபாடன் உரி

19 கோல் சுரதானன் அந்தப்பிற கண்டன் சாடிக்காறர் கண்டன் சாமித்து ரோகி

20 யள் மிண்டன் பஞ்சவற்ன ராய ராவுத்தன் பனுக்குவார் கண்டன் கொட்டமடக்கி

21 வையாளி நாராயணன் இவுளி பாவடி மிதித்தேறுவார் கண்டன் ஆரியர் மா

22 னங்காத்தான் தொண்டியந்துறை காவலன் துர்க ரேவந்தன் அனும கேதனன்

23 கெருட கேதனன் கொடைக்கு கற்னன் பரிக்கு நகுலன் வில்லுக்கு விசையன்

24 பரத நாடகப் பிறவீணன் கருணா கடாக்ஷன் குன்றினுயர் மேருவைக் குன்றா வ

25 ளைக்குணில்ப் பிறித்தவன் திலத நுதல் மடமாதர் மடலெழுத வருசு மூகன் செங்கா

26 விக் குடையான் சேமத்தலை விளங்குமிரு தாளினான் விசையலட்சுமி காந்

27 தன் கலைதெரியும் விற்பன்னன் காமினி சுந்தப்பன் அஷ்டதிக்கு மனோ பயங்கர

28 ன் துஷ்ட நிக்கிறக சிஷ்ட பரிபாலனன் சங்கீத சாயித்தியன் வித்தியா வினோதன்

## இரண்டாம் பக்கம்

29 சகல சாம்பிராச்சிய லட்சுமிநிவாசன் சேது காவலன் துகவூர்க்கூத்தத்து

30 க் காத்தூரான குலோத்துங்கசோள நல்லூர் கீள்பால் விரையாத கண்டனிலிரு

31 க்கும் ராசமான்ய ராசஸ்ரீ இரண்யகெற்பயாசியான குமாரமுத்து விசைய ரகுநா

32 தச் சேதுபதி காத்த தேவரவர்கள் குமாரன் முத்துக்குமார விசைய இரகுநாதச் சே

33 துபதி காத்த தேவரவர்கள் ராமீசுவரத்திலிருக்கும் ஆவல் காவல் பள்ளிவா

34 சல் தன்மத்துக்கு நூறாலம்சா குமாரன் சுலுத்தான் சஹாயீ சரீ பகீர் பாரிசமா

35 க கட்டளையிட்ட புதுக்குளத்தை ஆண்டனுபவித்துக்கொள்வாராகவும்

36 விட்டுக்குடுத்த புதுக்குளத்துக்கு யெல்கையாவது யெக்கைகுடி ஒருச் சிறகு

37 மடையில் நீர்பாய்ந்து நெல்விளைகின்ற குன்றா வயக்கலுக்கும் வாள வந்

38 தாளம்மன் கோவிலுக்கும் பச்சரித் திடலுக்கும் சேதுமாற்கத்துக்கும் வடக்கு

39 கொத்தங் குளத்துக்கும் புரவுக்கும் தென்மேற்கு அச்சங்குடிக்கும் தோட்டக்கா

40 ட்டுக்கும் தெற்கு எக்கைகுடிக் கண்மாய் வடகடைக் கொம்புக்கும் காணத் திட

41 லுக்கும் கிளக்கு யின்னாங் கெல்லைக்குள்பட்ட நஞ்சை பிஞ்சை மா வடை மர

42 வடை திட்டு திடல் மேல்நோக்கிய மரம் கீள்நோக்கிய கிணறு நிதி நிக்ஷேப

43 ஜல தரு பாஷாண ஆகாம்ய அஷ்டபோகமும் குடிபடை பள்பறைவரி யிறை ச

44 கலமும் சறுவ மானிபமாக கட்டளையிட்டபடியினாலே புதுக்குளத்தை

45 சந்திராதித்தவரை சந்ததிப் பிறவேசம் புத்திர பௌவுத்திர பாரம் பரையாய் ஆண்

46 டனுபவித்துக் கொள்ளக் கடவாராகவும் இந்த தற்மத்துக்கு தமிள னாகிலும் நாலா

47 வர்னத்திலே உள்ளவனாகிலும் இசுலாமானவனாகிலும் வாக்குச் சகாயம் அற்த ச

48 காயம் பண்ணினால் கெங்கையிலும் சேதுவிலும் மக்க மதீனத்திலேயும்

49 அன்னதானமும் சொற்னதானமும் அனேகம் குடும்ப பிறதிஷ்டையும் பண்ணி

50 னபலனை யடையக்கடவாராகவும் இந்த தற்மத்து விகாநம் நினைத் தால் புண்ணி

51 ய ஸ்தலங்களிலேயும் மக்க மதீனத்திலேயும் மாதா பிதாவையுங் கொன்ற தோ

52 ஷத்திலும் மகாபாவத்திலேயும் போகக்கடவாராகவும் உ குருவே துணை உ

53 இந்தப்படிக்கு தாம்பிற சாதனம் யெளுதினேன் திருப்புல்லாணியூரி லிருக்கு

54 ம் மூத்துப் பண்டாரம் புத்திரன் இருளப்பன் கையெளுத்து உ இந்த தற்மத்துக்கு

55 தமிளனாகிலும் எவர்களாகிலும் விகாதம் நினைத்தால் கெங்கையிலும் சேதுவி

56 லும் காராம்பசுவையும் மாதாபிதாவையுங் கொன்ற தோஷத்திலே போகக்க

57 டவாராகவும்

சிவசுப்ரமண்யம் துணை

# 77

# இராமேசுவரம் செப்பேடு

| | | |
|---|---|---|
| இருக்கும் இடம் | : | தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை அருங்காட்சியகம், இராமநாதபுரம் |
| அரசர் | : | முத்துக் குமார விசைய ரகுநாத சேதுபதி |
| காலம் | : | 18–1–1746 |
| அளவு | : | 24 செ.மீ. × 16 செ.மீ. |

**அமைப்பும் செய்தியும் :** இச்செப்பேடு கோடிட்டு எழுதப்பட்டுத் துளையில்லாத அமைப்பில் தாமரை மொட்டுப்போன்ற கைப்பிடியை உடையது. கிரந்தத்தின் பயன்பாடு மிகவும் குறைவாகவே உள்ளது. வழக்கமான கொடையைக் குறிக்கும் செப்பேடாக இல்லாமல் இராமேசுவரம் கோயிலில் உள்ள இரு குழுவினர்களுக்கிடையே ஏற்பட்ட வழக்கினையும் அதனைச் சேதுபதி அரசர் விசாரித்துத் தீர்ப்பளித்த முறையையும் மிக விளக்கமாகக் கூறுகிறது.

இராமேசுவரத்தில் குருக்கள்மார் என ஒருசாரார் உள்ளனர். இவர்கள் தமிழ்நாட்டு மக்கள் வந்து வழிபடும்போது அவர்களுக்காக வழிபாடு செய்பவர்கள். மற்றொரு சாரார் நயினாக்கள் ஆரிய மகாசபையார் என்பவர்கள். இவர்கள் பிறமொழி பேசும், குறிப்பாக வடநாட்டு மக்கள் வழிபட வரும்போது பூசை செய்து பிரசாதம் அளிப்பவர்கள். இன்றும் இவர்கள் இருந்துவருகின்றனர்.

இராமேசுவரம் கோயிலிலும், ஊரின் பிற இடங்களிலும் பல்வேறு தீர்த்தங்கள் உள்ளன. அவற்றில் மிகச் சிறந்த தீர்த்தம் என்று அடியார்கள் விரும்பிப் புனித நீராடுவது இலட்சுமண தீர்த்தம் ஆகும். இராமேசுவரத் தலத்தின் புகழ்பாடும் தேவையுலா (19)

'ஒருதேவை வந்து பலதேவர் தாழும்
இலக்குமணத் தண்புனல்'

என்று இலட்சுமண தீர்த்தத்தின் சிறப்பைப் புகழும்.

மக்கள் அதிகம் கூடுவதால் இலட்சுமண தீர்த்தத்திலிருந்து வரும் வருவாயும் அதிகம். இதனால் இலட்சுமண தீர்த்தத்தின் உரிமை குறித்துக் குருக்கள் மகாசபையாரும், நயினார்கள் ஆரிய மகாசபையாரும் இலட்சுமண தீர்த்தம் தங்களுக்கே சொந்தம் என்று உரிமை கொண்டாடினார். அதனால் இரு சபையாரும் இராமநாதபுரத்திற்கு வந்து சேதுபதி அரசரிடம் இலட்சுமண தீர்த்தத்தின் உரிமை குறித்து முறையிட்டனர்.

அவர்கள் கூறிய புகாரின் அடிப்படையில் அவ்வழக்கை விசாரிக்கச்சேதுபதி அரசர் தக்க ஏற்பாடு செய்தார்.

அரசு சார்பில் நான்கு உயர் அதிகாரிகள் வழக்கு விசாரணைக்கு முன்னிலை வகித்தனர். அவர்கள்

1. தளகர்த்தம் ரா வெள்ளையன் சேர்வைகாரர்வர்கள்
2. ரா பிரதானி ஆண்டியப்ப பிள்ளையவர்கள்
3. பெரிய கட்டளை இராமநாத பண்டாரமவர்கள்
4. சத்திர மணியகாரன்

என்பவர்கள் ஆவர். இவர்கள் அனைவரும் அரசுப் பிரதிநிதிகள்.

மேற்கண்ட அலுவலர்கள் முன்னிலையில் பல நடுவர்களை அரசர் நியமித்தார். முன்பு பின்பு உள்ளவைகளை ஆராய்ந்து நியாயமான முறையில் இந்த வழக்கினை விசாரிக்குமாறு கீழ்க்கண்ட நடுவர்களை அரசர் நியமித்தார்.

1. புரோகிதம் சின்னையன்
2. உப்பூர் வேதமய்யன்

3. தேவிபட்டணம் வெங்கிட்டய்யன்
4. இராமேசுவரம் திம்மனாசாரியார்
5. தனுக்கோடியாசாரியர் காமாட்சியய்யன்
6. ஏத்துவளி சேஷய்யன்
7. சுப்பிமணியக் கவிராயர்
8. கடல்துறை இராமனாதபிள்ளை
9. அளம் கணக்கு இருளப்ப பிள்ளை
10. அட்டவணைச் சுப்பிரமணியபிள்ளை
11. கவறை சங்கரன் செட்டியார்
12. திருமலை செட்டியார்
13. வயிரவன் செட்டியார்
14. சூரிய நாராயண செட்டி
15. வங்காரு செட்டி
16. இராமேசுவரம் கோமுட்டி ராமு செட்டி
17. அலிப்புலி ராவுத்தர்
18. உத்தமப் பணிக்கன்
19. மயிலேறி

இவர்கள் அனைவரும் இராமநாதபுரம் கோட்டைவாயில் பிள்ளையார் சன்னதியில் கூடி வழக்கினை ஆராய்ந்து தீர்ப்பளித்தனர்.

வழக்கிற்குக் கீழ்வரும் சான்றுகளை நடுவர்கள் பெற்று ஆராய்ந்தனர்.

1. வாய்மொழி
2. ஓலை நறுக்கு
3. செய்தி அட்டவணை

4. பெரிய கட்டளை இராமநாத பண்டாரம் அவர்கள் அறையிலிருந்த செப்பேடு

5. அச்செப்பேடு ஒன்றின்படி 316 ஆண்டுகட்கு முன்பு இது போன்ற வழக்கினை விசாரித்த விபரம்

6. பரிஷை பட்டமார் எழுதிக்கொடுத்த செய்தி அட்டவணை

7. திருமலை சேதுபதி காத்த தேவரவர்கள் ஆட்சிக்காலத்தில் பெரிய தெய்வகன்னியா பிள்ளை அவர்கள் முன்னிலையில் குருக்கள்மார் சபையாருக்கும். பரிஷை பட்டமாருக்கும் வழக்கு விசாரித்து எழுதப்பட்ட பத்திரம்

8. தளவாய் சேதுபதியவர்கள் காலத்திலும். கிழவன் சேதுபதியவர்கள் காலத்திலும் நடந்த காரியங்கள் பற்றி ஏத்துவளிச் சேஷய்யன் எழுதிக்கொடுத்த செய்தி அட்டவணை

மேற்கண்ட எல்லாச் சான்றுகளையும் நடுவர்கள் படித்துப் பார்த்து இவைகளில் இருந்த விவகாரங்கள் எல்லாவற்றையும் நன்கு தெரிந்து கொண்டு முன்பு நடந்துவந்த பிரகாரம் இலட்சுமண தீர்த்தக்கரை பற்றியும் கீழ்வருமாறு தீர்ப்பளித்தார்.

1. இலட்சுமண தீர்த்தக்கரை குருக்கள்மார் சபையாருக்கே உரியது

2. குருக்கள்மார் சபையார் முன்பு அனுபவித்து வந்த மராட்டியப் பரிஷை, சத்திரியப் பரிஷை, குச்சரியார் வாணியப் பரிஷை இந்தவகை ஆதாயங்கள் எல்லாம் தொடர்ந்து குருக்கள்மார் சபையாரே அனுபவிக்கலாம்.

3. கொங்கணியப் பரிஷையில் வரும் ஆதாயத்தில் குருக்கள் மார் சபையாருக்குப் பாதியும், மடத்துகுப் பாதியும் ஆகும்.

4. பரிஷை பட்டமார் கூட்டிவந்து அனுபவித்து வருகின்ற பரிஷைகளுக்குத் தீர்வை பத்துக்கு இரண்டு ஆகும்.

5. இந்தப் பரிஷைகளையும் எப்போதும் உள்ளபடிக்குக் குருக்கள்மார் சபையாரே அனுபவிக்கலாம்.

6. ஏற்கெனவே மேற்படி பரிஷைகளில் முறையற்று நயினாக்கள் ஆரிய மகாசனங்கள் அனுபவித்ததனால் அவர்களுக்குக் கிடைத்த ஆதாயங்களையெல்லாம் குருக்கள்மார் மகாசபைக்குக் கொடுத்துவிட வேண்டும்.

7. இனிமேலும் நயினாக்கள் ஆரிய மகாசனங்கள் யாராவது தவறாக மேற்கண்டவற்றைக் கைப்பற்றி அனுபவித்தால் பெற்ற ஆதாயத்தைக் குருக்கள்மார் சபையாருக்குக் கொடுப்பதுடன் அரண்மனைக்கு 1200 பொன் அபராதம் செலுத்தி மேலும் எவ்வாறு தீர்ப்பளிக்கப்படுகிறதோ அவ்வாறு நடக்கவேண்டும்.

8. சந்திர சூரியர் உள்ளவரை பரம்பரை பரம்பரையாகக் குருக்கள்மார் சபையார் இந்தப் பரிஷைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

9. எல்லாக் குருக்கள்மார் சபையாரும் தங்களுக்கு வரும் ஆதாயங்களைப் பாகம் பிரித்துக் கொள்ளும்போது சங்கரக் குருக்கள் முன்னிலையில் பிரித்துக் கொள்ள வேண்டும்.

10. அப்படிப் பாகம் பிரித்துக்கொள்ளும்போது ஒவ்வொரு குருக்கள்மார் சபையின் உறுப்பினர்களும் எவ்வாறு பெறுகிறார்களோ அதைப்போல இரண்டு மடங்கு சங்கரக் குருக்களுக்குக் கொடுக்க வேண்டும்.

11. இந்தச் செப்பேட்டின்படி சங்கரக் குருக்களுக்கு முன் கூறியதுபோல இரண்டு பங்கு, குருக்கள்மார் சபையாருக்கு உதவியாயிருந்த உதையப்பெருமாளுக்கு ஒரு பங்கு அளிக்க வேண்டும்

இந்தச் செப்பேட்டுச் செய்தியை எழுதியவர் முத்தரிது பிள்ளை மகன் இராமலிங்கம் என்பவர் செப்பேட்டில் எழுத்துக்களைப் பொறித்தவர் ஈசுவரமூர்த்தி ஆசாரி மகன் குழந்தைவேல்.

இச்செப்பேட்டின் இறுதிப் பகுதியில் நான்குபேர் இவ்வழக்கு விசாரணைக்கும் தீர்ப்புக்கும் சாட்சிக் கையொப்பமிட்டுள்ளனர். அவர்

கள் (1) ஆபத்தாருணன் (2) உமாபதி (3) சிதம்பரன் (4) சுந்தரே சுர நயினார் என்பவர்கள் ஆவர்.

சேதுபதி அரசர்களின் நீதிமுறையை நாம் அறிந்துகொள்ள இச் செப்பேடு மிகச் சிறந்த சான்றாகத் திகழுகிறது.

விபகாரம் (வழக்கு), கரையேறுதல் (புகார் செய்தல்), தேறுதல் (விசாரித்தல் , கடல்துறை (துறைமுகம்), அளம் (உப்பளம்), அட்ட வணை (அரசுக்கணக்கு), மத்தியஸ்தர் (நடுவர்), முறி நறுக்கு (சாசன ஓலை), (கையாடி) அனுபவித்து அதகடி (தீமை), அடியழித்தல் (தீங்கு செய்தல்) போன்ற பண்டைய சொற்கள் பல இச்செப்பேட்டின் மூலம் விளக்கம் அடைகிறது.

காசிக்கு நிகரானதும் மிகப் பெரிய சைவத் தலமுமான இராமேசு வரத்தின் மிகப்பெரிய இரு குழுவினருக்கிடையே எழுந்த சிக்கலைத் தீர்க்க மக்களாட்சி முறைப்படி பொதுமக்களிலிருந்து பலரைத் தெரிவு செய்து வழக்குத் தீர்த்தமுறை மிகவும் போற்றத்தக்க வகையில் அமைந்துள்ளது. ஊரின் பல்வேறு சமூகப் பிரதிநிதிகள் கலந்துகொண்ட அச்சபையில் புலவர், இசுலாமியர் போன்றவர்களை நியமித்துள்ளது வியப்புக்குரியது.

அரசு அதிகாரிகள் விசாரணையில் ஈடுபடாமல் முன்னிலை வகித்துள்ளனர். 316 ஆண்டுகட்கு முன்பு இருந்த ஆவணத்தைப் பார்த்துத் தீர்ப்பளித்தமுறை சிறப்புக்குரியது.

சாட்சிக் கையொப்பமிட்டவர்கள் நால்வரும் விசாரணையில் கலந்து கொண்ட நடுவர்கள் அல்லாதவர்களே. அவர்கள் பார்வை யாளர்கள் போலும். செப்பேட்டில் பொறிக்க வேண்டிய செய்தியை எழுதியவர் பெயரும், செப்பேட்டில் பொறித்தவர் பெயரும் தெளிவாக வேறுவேறாக எழுதப்பட்டுள்ளன.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 உ ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1667

2 கலியுகம் 4846 இதின்மேல்ச் செல்லா

3 நின்ற குறோதன ஞ்ருத்தில் உத்திராயணத்தில் சிசிரரிது

4 வில் மாகமாஸத் தையில் பூறுவபக்ஷத்தில் சத்தமி

5 யும் ஸத்திவாசரமும் அசுவதி நக்ஷத்திரமும் சுப்பிறநாம யோ

6 கமும் வணிககரணமும் பெற்ற சுபதினத்தில் தேறின விபகார

7 மாவது ராமேசுவரத்திலிருக்கும் குருக்கள்மாற் சபையாரும்

8 நயினாக்கள் ஆரிய மகாசெனங்களும் லக்ஷ்சுமண தீர்த்தப்

9 பரிஷை விபகாரமாக ராமநாதபுரத்தில் வந்து ராசஸ்ரீ இ

10 ரணிய கெற்பயாசி முத்துக்குமார விசைய ரெகுனாதச் சே

11 துபதி காத்த தேவரவர்கள் சமூகத்தில் கரையேறு மிடத்தில்

12 கற்த்தாக்கள் கட்டளையிட்டது தளகற்த்தம் ரா வெள்ளையன் சே

13 ர்வைகாறரவர்கள் ரா பிறதானி ஆண்டியப்ப பிள்ளை ய

14 வர்கள் பெரிய கட்டளை ராமனாத பண்டாரமவர்கள் ச

15 த்திர மணியகாறன் இவர்கள் முன்னிலையாக பல நடுவ

16 ரையும் வைச்சுகொண்டு முன்பினற்றபடி ஞாயமானபடி

17 தேறச்சொல்லிக் கட்டளையிட்ட பிறகாரத்துக்கு தேறின மத்தியஸ்

18 த்தர் புரோகுதம் சின்னய்யன் உப்பூர் வேதமய்யன் தேவிபட்ட

19 ணம் வெங்கிட்டய்யன் ராமீசுரம் இம்மணாச்சாரியார் தனு

20 க்கோடியாசாரியர் காமாக்ஷியய்யன் யேத்துவளிச் சேஷய்ய

21 ன் சுப்பிறமணியக் கவிராயர் கடல்துறை ராமனாதபிள்ளை அளம்

22 கணக்கு இருளப்பபிள்ளை அட்டவணைச் சுப்பிறமணிய பிள்ளை கவ

23 றை சங்கரன் செட்டியார் திருமலை செட்டியார் வயிரவன் செ

24 ட்டியார் சூரியனாராயண செட்டி வங்காரு செட்டி ராமேசுரம் சே

25 காமுட்டி ராமுசெட்டி அலிப்புலி ராவுத்தர் உத்தமப் பணிக்கன் மயி

26 லேறி னாடான் இந்த மத்தியஸ்த்தர் கூடியிருந்து கோட்டை

27 வாசல்ப் பிள்ளையார் சன்னிதியிலே விபகாரம் தேறுகிறது

28 குருக்கள்மார் சபையார் வாய்மொளியும் அவர்கள் முறிந
29 றுக்கும் செயிதி அட்டவணையும் நயினாக்கள் ஆரிய மகாசென
30 ங்கள் முறிநறுக்கும் செயிதி யட்டவணையுமவ ருட மூலம
31 ாகப் பார்த்துகொண்டு அப்பால் பெரிய கட்டளை ராமனாத பண்
32 டாரமவர்கள் அறையிலிருந்த தாம்பிற சாதனப் பிறக
33 ாரம் முன்னூற்றுப் பதினாறாம் வருஷம் தேறின செயிதிய
34 ளும் பரிஷை பட்டமார் எழுதிக்குடுத்த செயிதியட்டவணை
35 யும் முன் ரா திருமலைச் சேதுபதி காத்த தேவரவர்கள்
36 நாளையிலே பெரிய தெய்வகன்னியா பிள்ளையவர்கள்
37 முன்னிலையாக குருக்கள்மார் சபையாருக்கும் பரிஷை ப
38 ட்டமாருக்கும் தெரிந்த பத்திரத்துச் செயிதியும் ரா பெரிய அய்யா
39 அவர்கள் கற்த்தாக்கள் நாளையிலேயும் ரா விசைய ரெகுனா
40 தச் சேதுபதி காத்த தேவரவர்கள் நாளையிலேயும் நடந்து வ
41 ந்த காரியங்களுகெல்லாம் ஏத்துவெளிச் சேஷய்யன் எ
42 ழுதிக் குடுத்த செய்தி யட்டவணையும் இதுகளெல்லாம் வாசித்து
43 ப்பாத்து இதுகளிலே யிருந்த விபகாரங்களெல்லாம் தெ
44 ரிந்துகொண்டு தேறினது லட்சுமண தீர்த்தக் கரையி
45 ல் முன்பின் நடந்தஞாயம் குருக்கள்மார் சபையார் கை

## இரண்டாம் பக்கம்

46 யாடிவந்த மறாஷ்ட்டப் பரிஷையளும் சத்திரியப் பரிஷையளும் கு
47 ச்சரியர் வாணியப் பரிஷைய ளிந்தவகை யாதாயங்க சகலமும்
48 குருக்கள்மார் சபையாரே அனுபவிக்கவும் கொங்கலரியப் பரி
49 ஷை இந்தவகை யாதாயங்கள் குருக்கள்மார் சபையாருக்குப்

50 பாதியும் மடத்துக்குப் பாதியும் பரிஷை பட்டமார் கூட்டிவந்து கையா
51 டி வருகிற பரிஷையளுகெல்லாம் பத்துக்கு ரண்டு தீர்வையும் இந்த
52 வகைப் பரிஷையளுகெல்லாம் யெப்போதும் அற்றபடிச்சுக் கு
53 ருக்கள்மார் சபையாரே கையாடி யனுபவித்து கொள்ளுகிறது
54 இந்தப் பரிஷை யர்தாயங்களை யதகடி பண்ணி நயினாக்கள் ஆ
55 ரிய மகாசனங்கள் கையாடின ஆதாயங்களெல்லாம் குருக்க
56 மார் சபையாருக்குக் குடுத்து விடுகிறது இனிமேலும் யாதாமொரு
57 வன் அதற்தணமாக ரேகைப்படுத்தாமல் கையாடின ஆதாயங்
58 களும் குருக்கள்மார் சபையாருக்குக் குடுத்து அரமனைக்கு ஆயிரத்
திருநூ
59 று பொன் அபராதமும் யிறுத்துக் கட்டளை இட்ட புத்தியும் கேழ்க்க
கடவ
60 ராகவும் என்று விபகாரம் தேறினபடியினாலே யிந்தப்படி
61 க்குச் சந்திராதித்தவரை சந்ததிப் பிறவேசம் இந்தப் பரிஷை
62 யாதாயங்களெல்லாம் குருக்கன்மார் சபையாரே ஆண்டனு
63 பவித்துக்கொள்ளக் கடவாராகவும் இதிலே குருக்கள்மார் சபை
64 யார் பங்கு பாகம் தீருகிற போதெல்லாம் சங்கரக் குருக்கள்
65 முன்னிலையா தேர்ந்து சங்கரக் குருக்களுக்கு ரண்டு பங்கு மற்ற கு
66 ருக்கள்மார் சபையார்க்கெல்லாம் சனத்துக்கு ஒரு பங்குமாகப்
67 பற்றிக்கொள்ளுவாராகவும் யிந்தத் தாம்பிறசாதனப் பிறகாரத்து
68 க்கு யிந்தப் பரிஷை யாதாயங்களெல்லாம் குருக்கள்மார் சபை
69 யாரைச் சாரப்பண்ணி நடத்தை பண்ணிக்கொண்ட போக
70 ள் கெங்கைக் கரையிலேயும் சேதுவிலேயும் கோடி சிவலி
71 ங்கப் பிரதிஷ்டை பண்ணின பலனும் கோடி கன்னிகா
72 தானம் பண்ணின பலமும் கோடி அக்கிரகாரப் பிறதிஷ்டை

73 பண்ணிவ பலனும் அடைவராகவும் யிந்தத் தாம்பிற சாதன
74 பிறகாரம் சங்கரகுருக்கள் மேல்பங்கு குருக்கள்மார் சவை
75 யாருக்கு உதவியாயிருந்த உதையப் பெருமாளுக்கு ஒருபங்
76 கும் சாமிக்கு ஒருபங்கும் புத்திரபவுத்திர பாரபரியந்தம்
77 அனுபவித்து வருவாராகவும் யிந்த தாம்பிற சாதன
78 த்தை யடியளிச்சவன் கெங்கைக் கரையிலேயும் சேதுவி
79 லேயும் கோடி கோகத்தி பிறம்மகத்தி பண்ணின தோஷத்தி
80 லேயும் தன் மாதாபிதாவையும் குருவையும் கொன்ற தோ
81 ஷத்திலேயும் போகக் கடவராகவும் யிந்தச் சாதனமெழு
82 தினேன் ராயசம் முத்தரிது பிள்ளை மகன் றாமலிங்கம் எழுத்து
83 படிக்கி தாம்பிற சாதனம் தீர்த்தது ஈசுரமூற்த்தி ஆசாரி
84 மகன் குழந்தைவேல் ராமலிங்கம் துணை உ
85 ஆவத்தாருணன் உமாபதி
86 சிதம்பரன் சுந்தரேசுரனயினார்

# 78

# நாட்டுசேரிச் செப்பேடு

இருக்கும் இடம் : திருவர்வடுதுறை ஆதீனம், திருவர்வடு துறை

அரசர் : செல்லமுத்து விசைய ரகுநாத சேதுபதி காத்த தேவர்

காலம் : 31—12—1752

அளவு : 29 செ.மீ. × 19.5 செ.மீ.

**அமைப்பும் செய்தியும் :** இச்செப்பேடு முக்கால் வட்ட வடிவிலான கைப்பிடியுடன் கூடியது கைப்பிடியின் மையத்தில் துளை உள்ளது. கைப்பிடியின் கீழ் அழகிய விதானம் போன்ற வரைகோட்டுச் சிற்பத்தின் கீழ் மூன்று தனிச் சன்னதிகள்போல் கட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நடுநாயகமான சன்னதியின் உள் நடராசர் வடிவம் ஆனந்த நடனக் கோலத்தில் காட்டப்பட்டுள்ளது. நடராசரின் வலப்பக்கம் உள்ள அறையில் வியாக்கிரபாதர் (புலிக்கால் முனிவர்) தம்மை மறந்த நிலையில் நடராசரை நோக்கிக் கைகூப்பி வணங்கிக் கொண்டுள்ளார். அவர் கையிலிருந்த தாளம் கீழே வைக்கப்பட்டுள்ளது. அவருக்குப் பின் அதே கட்டத்தினுள் நான்கு திருக்கரங்களுடன் காளி அமர்ந்திருக்கும் நிலை காட்டப்பட்டுள்ளது.

நடராசப் பெருமானுக்கு இடப்புறம் உள்ள அறையில் இரண்டு திருக்கைகளுடன் சிவகாமி அம்மையார் வலக்கையில் மலரேந்திக் காணப்படுகிறார். அவருக்குப் பின்னர் பதஞ்சலியார் நடராசப் பெருமானையும் சிவகாமி அம்மையாரையும் நோக்கி வணங்கிக் கொண்டுள்ளார். சிவகாமி அம்மை முன் சிறு சூல வடிவம் உள்ளது. இச்சன்னதியுள் 'ந' என்ற எழுத்துப் பொறிக்கப்பட்டுள்ளது.

மூன்று சன்னதிகளின் கீழும் அழகான வரைகோட்டுச் சிற்பங்கள் உள்ளன. சப்பரம் எனப்படும் சிறுதேரின் கீழ்ப்பகுதிபோல் அவை வரையப்பட்டுள்ளன.

நடராசப் பெருமானின் காலில் மிதிபடும் முயலகனின் கீழ்ப் பகுதியில் தமிழில் 'சிவமயம்' என்றும், இரண்டாம் பக்கம் தெலுங்கில் 'ஸ்ரீ சுப்ரமண்ய பாதாரவிந்தமே துணை' என்றும் எழுதப்பட்டுள்ளது.

சேதுபதி அரசர் 31—12—1752 இல் திருவாவடுதுறை ஆதீனகர்த்தருக்கு நாணாக்குடிக்குப் பதிலாக ஏழுகோட்டை நாட்டில் ஓரூர் வட்டகையில் உள்ள நாட்டுசேரியைக் கொடையாகக் கொடுத்ததை இச் செப்பேடு கூறுகிறது.

சாலிவாகன சகம் 1582 இல் (1661) திருமலை சேதுபதி ரகுநாதத் தேவர் அவர்கள் கங்கணி, கட்டி, செரினாஞ்சிவயல், நாணாக்குடி நான்கையும் திருவாவடுதுறைத் திருமடத்துக்கு அளித்த செய்தியும் நாணாக்குடி மட்டும் திருமடத்தின் அனுபோகம் இல்லாமல் இருப்பதும் அதற்குப் பதிலாக நாட்டுசேரி இப்போது அளிக்கப்படுகிறது என்பதும் இச்செப்பேட்டில் கூறப்பட்டுள்ளது.

ஆனால் முன் செப்பேடொன்றிலும், திருமலை சேதுபதி அரசர் 1661 இல் இதே 'நாட்டிசேரியை' நாணாக்குடிக்குப் பதிலாக அளித்துள்ளார். 1661 க்கும் 1752 க்கும் இடைப்பட்ட காலத்தில் நாட்டிசேரி (நாட்டுசேரி) திருமடத்தின் ஆட்சியிலிருந்து கைமாறிவிட்டது என்பது இதன்மூலம் தெளிவாகிறது. அதனால் திருமடத்தின் வேண்டுகோளை அரசர் நிறைவேற்றியிருக்கலாம்.

நாட்டு சேரியின் எல்லைகள் இச்செப்பேட்டில் கூறப்பட்டுள்ளன. கிழக்கு எல்லை ஆயாங்கோட்டை கண்வாய் நீர்ப்பிடி; தெற்கு எல்லை தனிச்சக் கண்மாய் வடகால், நெட்டேந்தல் குளக்கால்: மேற்கு

எல்லை அதங்குடிக் கீழ்ப்புறத்து எல்லை; வடக்கு எல்லை மேற்கு திருப்பொற்கோட்டை நஞ்சைமால் ஆகியனவாகும்.

திருப்பொற்கோட்டை ஏற்கனவே திருவாவடுதுறை ஆதீனத்துக் குச் சேதுபதி அரசர் கொடையாக அளித்த கிராமம். அதன் அருகில் இருப்பதால் நாட்டுசேரி மடத்திற்கு அளிக்கப்பட்டது போலும்.

இக்கொடை அளிக்கப்பட்ட போது திருவாவடுதுறை ஆதீனத் தலைவராக விளங்கியவர் ஸ்ரீ திருச்சிற்றம்பல தேசிகர் (1730-1770).

## செப்பேடு

### முதல் பக்கம்

1 சிவமயம்

2 ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1674க்கு மேல் செலாநின்ற ஆங்கிரஸ

3 ஹ மார்கழி மீ 20 உத்தராயணத்துப் பூருவ பட்சமும் சோமவா

4 ரமும் அசுபதி நட்செத்திரமுங் கூடின சுபதினத்திலே திருவாவடுது

5 றைப் பண்டார சன்னிதி அவர்கள் அம்பலவாண சுவாமி பூ

6 ச மஹேஸ்வர பூசைக்கித் தேவை நகராதிபன் சேது மூலரட்

7 சா துரந்தரன் இராமநாத சுவாமி பருவதவற்தநி அம்மை காரி

8 ய துரந்தரன் சுப்பிரமணிய பாதாரவிந்த சேவிகன் பரராச சிங்க

9 ம் பரராசசேகரன் பரராசசேகரன் இரவிகுல சேகரன் சொரிமுத்

10 து வன்னியன் துட்ட ராசர் கண்டன் சாடிக்காறர் கண்டன் சா

11 மித்துரோகிகள் முண்டன் அந்தம்பர கண்டன் அடியார் வேளை

12 க்காரன் அரசராவண ராமன் பஞ்சத்து வரமாரி பனுக்குவார் க

13 ண்டன் பட்டமானங் காத்தான் பட்டம் பரப்படத்தான் தாலிக்கு வேலி

14 ஐவாய்ப் புலி இளஞ்சிங்கந் தளஞ்சிங்கம் வீரவெண்பா மாலை

15 வைகை வளநாடன் பரதள விபாடன் பஞ்சவற்ன றாய றாவுத்தன் புவ

16 னேக வீரன் வேதியர் காவலன் கொட்டமடக்கி வையாளி நாறாயண
17 ன் இவுழி பாவடி மிதித்தேறுவார் கண்டன் பகைமன்னர் சிங்கம்
18 ஆற்திற்பாச்சி கடலிற்பாச்சி சத்துருக்கள் மிண்டன் மேவலர்
19 கோளரி வீரகெம்பீரன் கீற்திப் பிறதாபன் கபட நாடக சூத்திரப் பிற
20 தாபன் பத்தி முத்திப் பிறியன் அஷ்ட லெட்சுமி வாசன் சற்பன்
21 ன பாஷா வீட்சணன் சகல குண சம்பன்னன் சங்கீத ச
22 ாயித்திய வித்தியா வினோதன் வீணாப் பிறசங்கன் வீர
23 ர வளநாடன் தொண்டியந்துறை காவலன் அடைக்க
24 லங் காத்தான் வன்னியராட்டந் தவிழ்த்தான் மூவரா
25 ய கண்டன் சாமித்துரோகி செண்டய காவல
26 ன் வீரதண்டை சேமத்தலை விளங்கிய தாளினான் து
27 ரை ராயன் செயதுங்க ராயன் வமிஷாதிபனான துகவூர்
28 க்கூற்றத்துக் காத்தூரான குலோத்துங்க சோள நல்லூ
29 ர்க் கீழ்ப்பால் விரையாத கண்டனிலிருக்கும் ஸ்ரீமது
30 இரணியகெற்பவாசி ரவிகுல ரெகுநாதச் சேதுபதி கா
31 த் தேவரவர்கள் வங்குசோத்தாரகரான ஸ்ரீமது செல்லமுத்து
32 விசைய ரெகுநாத சேதுபதி காத்த தேவரவர்கள் எங்கள்

## இரண்டாம் பக்கம்

33 மாதா பிதாவினுடைய வற்க்கத்துக்கும் புண்ணியமாகத் தரும சா
34 தனப் பட்டயங் கொடுத்தபடி முன் எங்கள் துரைத்தன பரம்பரை
35 யில் சாலிவாகன சகாப்தம் 1582க்கு மேற்செல்லா
36 சாறுவரி ஹூ மாகா மாத புண்ணிய காலத்திலே திருவாவடு
37 துறை ஆதீனம் அம்பலவாண பண்டார சன்னதி அவர்களுக்கு
38 ஸ்ரீமது திருமலைச் சேதுபதி ரெகுநாதத் தேவரவர்கள் தரும சாச

39 னப்படி கங்கணி கட்டி செரினாஞ்சிவயல் நாணாக்குடி இந்த நான்கில்
40 கங்கணி கட்டி செரினாஞ்சி வயலிந்த மூன்றுந் தாங்களனுபவித்
41 து வருகிறதுனாலே தங்கள் நாணாக்குடிக்குப் பதிலாய் ஏழுகோ
42 ட்டை நாட்டில் ஓருர் வட்டகையில் நாட்டுசேரியை தங்களு
43 க்குக் கட்டளையிட்டோம் நாட்டுசேரி எல்கையாவது கிழக்கு ஆ
44 யாங் கோட்டைக் கண்வாய் நீர்ப்பிடிக்கு மேற்குத் தெற்கு
45 தனிச்சக் கணவாய் வடகாலுக்கு நெட்டேந்தற் குளக்காலு
46 க்கும் வடக்கு மேற்கு அதங்குடிக் கீழ்புறத்தெல்லைக்குக் கிழக்
47 கு வடக்கு மேற்கு திருப்பொற்கோட்டை நஞ்சைமாலுக்குத் தெற்கு
48 இந்த நான்கெல்கைக்குள்ப்பட்ட திட்டுத் திடல் மாவடை மரவ
49 டை மேல்நோக்கிய மரம் கீழ்னோக்கிய கிணறும் ஆத்துக்கா
50 ல் ஊத்துக்கால் சில தரு பாஷாண நிதி நிட்சேபமும் அஷ்ட்ட
51 போக தேச சுவாமியங்களும் விநியாதி விக்கிரையங்க
52 ளுக்கு யோக்கியமாக சந்திராதித்தர் உள்ளவரைக்கும்
53 ஆதீன பரம்பரையாக தாங்களே ஆண்டனுபவித்துக்கெ
54 ாள்ளக் கடவார்களாகவும்
55 இந்தத் தருமத்தைப் பரிபாலனம் பண்ணினவர்கள் கெங்கை
56 க் கரையிலுஞ் சேதுக்கரையிலு புண்ணிய ஸ்தலங்களிலே அ
57 னேக சிவலிங்கப் பிறதிட்டை மடப்பிறதிட்டை அக்கிராரப் பிறதிட்
58 டை கன்னிகா தானம் பண்ணின பலனை அடைவார்கள் இந்தத்
59 தருமத்துக்கு யாதொருத்தர் அஹிதஞ் செய்த பேர்கள் கெங்கை
60 க்கரையிலுஞ் சேதுக்கரையிலுங் காராம்பசுவையும் பி
61 ராமணரையுங் குருவையும் மாதா பிதாவையுங் கொன்ற
62 தோஷத்திலேயும் அனேக சிவதலங்களிலே சிவத்துரோக

63 ம் பண்ணின நரகத்திலேயும் போகக் கடவாராகவும் இப்படிக்கு

64 ஸ்ரீ செல்லமுத்து விசைய ரெகுனாதச் சேதுபதி காத்த தேவரவர்

65 கள் திருவாவடுதுறைப் பண்டாரச் சன்னதி அவர்கள் அம்பலவா

66 ண சுவாமி பூசை மஹேசுவர பூசைக்குத் தாம்பிரசாதனங் கொடுத்

67 தோம் உ

சுப்ரமண்ய பாதார விந்தம் துணை

# 79

# இராசசிங்கமங்கலம் செப்பேடு

இருக்கும் இடம் : தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை அருங்காட்சியகம், இராமநாதபுரம்

அரசர் : செல்லமுத்து விசைய ரகுநாத சேதுபதி

காலம் : 20–7–1754

**அமைப்பும் செய்தியும் :** முழுவதும் நன்கு படிஎடுக்கவோ படிக்கவோ இயலாத நிலையில் பிழைகளுடன் எழுதப்பட்டுள்ளது.[1] செப்பேட்டின் தலைப்பில் 'ஸ்ரீமது விசையன் சேதுபதி' என எழுதப்பெற்றுள்ளது இச்செப்பேட்டின் இறுதியில் தலைகீழாக வாசிக்கக்கூடிய நிலையில் சில தொடர்கள் எழுதப்பெற்றுள்ளன. அவை வேறு செப்பேட்டின் பகுதியாக இருக்கலாம்.

இராசசிம்ம பாண்டியனால் அமைக்கப்பட்ட மிகப்பெரிய கண்மாய் உள்ள ஊர் இராசசிங்கமங்கலம். கண்மாய்க்கரையின் நீளம் 23 கி.மீ. வீராணம் ஏரிக்கு அடுத்த பெரிய ஏரி இதுவேயாகும். இவ்

---

*ARE, A. 45 of 1947.*

வூர் முற்காலப் பாண்டியர் சிலருக்குத் தலைநகராகவும் இருந்துள் ளது. இவ்வூர் வரகுணவள நாட்டில் இருந்ததாகவும் பிரமதேயமாக அந்தணர்கட்கு வழங்கப்பட்டது என்றும் பாண்டியர் கல்வெட்டால் அறிகின்றோம்.

இராசசிங்கமங்கலத்தில் வாழ்ந்த ஒரு சமூகத்தாருக்கு வழங் கிய உரிமைகள் இச்செப்பேட்டில் பொறிக்கப்பட்டுள்ளனபோல் தோன்றுகிறது. முழுவிபரம் அறிய முடியவில்லை.

## செப்பேடு

ஸ்ரீமது

விசையன்

சேதுபதி

உ

1 பர்வ வருடம் ஆடி மீம் 8 உ ஸ்ரீ மது

2 ராசாதிராசன் ராச மார்த்தாண்டன்

3 ராசகெம்பீரன் துட்ட நெட்டூறன் து

4 ரை க . . ந்த கர்மினி ஆத்துப் பாச்சி கட

5 லிப் பாச்சி ஆதினம் காத்தான் வில்லு

6 க்கு விசையன் சொல்லுக்கு அரிச்சந்தி

7 ரன் குடைக்கு கர்ணன் பரிகி நகுல

8 ன் கண்டநாடு கொண்டு கொண்ட

9 நாடு கொடாதான்

10 ... ... ... ... — ... ... ... ... ... —

11 ... ... ... — — ... ... ... ... ... ... கீற்ப் பரவி கூ

12 ... ... ... ஸ்ரீமது விசையன் சேதுபதி செ

13 ல்லமுத்து

14 ... ... ... ஸ்வர ... ... ண் வளநாட்டில்

15 பிரம்மதேசமான ராசிங்க மங்கலம்

16 கோளியர .... .... .... நாட்டை கட்ட ... ... ...

17 பாங்க .... ... ... சாதி பட்டையம் குடுத்த பட்டையம்

18 பட்டையமார்க்கு சேதுபதி ... ... — ... புண் — ... — திச

19 ற்கூ ஆண்டய் — ... ... ந்து ... — ... யன்ன .... .... .... தே

20 ... ... ... டு கெட்டது ... ... ... —

21 சாதிப்பார் .... .... .... அம்பலம் ரெட்டைபாக்கு

22 நம்மை கிரெணம் பண்மிதிமமை திப்பு

23 ரு பாண்டி பாயலன் ... ... ... ... முட்டி ... ... ... ...

24 ... ... — ... — ... ... கூட்டத்து நா

25 ... ... ... ... ... ... — ... ... ... ...

26 ... ... ... ... ... ... புலேந்திர ... — ... ... ... ...

1 மல் புரிதல்யனை பத்திரகாளி புண் ... ... ... ...

2 ட்டமி நாடனுக்கு பட்டையம் குடுத்

3 தோம் யிதற்கு அடம் செய்தால் — ... ... ...

4 பசுவை கொன்ன தோசத்தில் போ

5 வார்கள் யிந்த பட்டையம் ெ ... ... ... ...

6 மாடாய்ச்சாரி யிந்தப் படிக்கி

# 80

# சாருவூரனேந்தல் செப்பேடு

இருக்கும் இடம் : சருகணி சிவன்கோயில்

அரசன் : குமார முத்து விசைய ரகுநாத சேதுபதி

காலம் : 7–8–1755

அளவு : 26 செ.மீ. × 17.5 செ.மீ.

**அமைப்பும் செய்தியும்** : சாருவூரனேந்தல் என்னும் ஊர் இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை வட்டத்தில் உள்ளது. அவ்வூரிலிருந்த மடம் பழுதடைந்திருந்தது. அம்மடத்தைப் பழுதுபார்த்துப் பராமரிக்கவும், அதன் அருகில் இருக்கும் ஊரணியைப் பழுதுபார்க்கவும் அவ்வூர்ப் பள்ள உலகாண்டி வசம் சேதுபதி அரசரால் இச்செப்பேடு வழங்கப்பட்டது.[1]

இம்மடத்தின் பராமரிப்புக்காக பத்துக்கலம் விதை விதைக்கக் கூடிய நிலம் கொடையாக அளிக்கப்பட்டது. மேலும் இத்தர்மத்திற்காக அனைத்துக் கிராமங்களிலிருந்தும் குடி ஒன்றுக்கு இரண்டு படி நெல் அளிக்கவும் மன்னரால் கட்டளையிடப்பட்டது. இன்றைய வருவாய்த் துறை ஆவணங்களில் இவ்வூர் சாருவூரனேந்தல் என்ற பள்ள மடம் என்றே குறிக்கப்படுகிறது. இதன் கிழக்கு எல்லை பொற்றுடப்பு,

1. *ARE, A. 2 of 1943*

தெற்கு எல்லை வீராண்டான் வயல், மேற்கு எல்லை உருவாட்டியாறு வடக்கு எல்லை சாணான் வயல் என்பன.

## செய்யுள்

### முதல் பக்கம்

1 உ சுவஸ்ரீமன்றாசா மண்டலேசுரன் அரியராய தளவிபாடன் பாசைக்கு தப்பு

2 வராத கண்டன் மூவராய கண்டன் கண்டனாடு கொண்டு கொண்டநாடு

3 கொடாதான் பாண்டிமண்டலத் தாபனாசாரியன் சோழ மண்டலப் பிரிதி

4 ட்டாபனாசாரியன் மிதாண்டமண்டல சண்டப்பிறகண்டன் யீளமுங் கொங்

5 கும் யாப்பானமு மளித்துக் கீசவேட்டை கண்டருளிய ராசாதிராசன்

6 ராசபரமேசுரன் ராசமாற்த்தாண்டன் ராசகெம்பீரன் அஷ்டலட்சுமி

7 பொருந்தியவான் தற்ம ஞாய சோளநீதி தவறாத ரணமுக சுத்த

8 வீரன் நவகோடிராயன் நவகண்ட சக்கிறவத்தி கெங்கை குமரி

9 முதல் செங்கோல் நடத்திய தீரன் கோபால வங்கிஷம் சூரியவங்

10 சிஷம் ஏவல்செய்வித்திருந் தருளினோன் எம்மண்டலமுந் திறைகொ

11 ண்டருளிய ராசர்கள் தம்பிரான் துலுக்கர்தள விபாடன் துலுக்க ராட்டந் தவி

12 ள்த்தான் ஒட்டியர்தள விபாடன் ஒட்டியர்மோகந் தவிள்த்தான் தொட்டியர்த

13 ள விபாடன் தொட்டியராட்டந் தவிள்த்தான் மலைகலங்கினும் மனங்கல

14 ங்காதகண்டன் குறையமக்கி மதிகொண்டோன் வீரப்பிறதாபன் விரு தராசர் மண

15 வாளன் யிந்துகோப சற்பிற கெருடன் சமர கோலாகலன் தாலிக்கு வேலி

16 தரியலர்கள் மணவாழன் தண்டுவார்கள் மிண்டன் சம்பிரம கெம்பீரன்

17 பாவநாசபன் திரயாகசாலை யாகமூர்த்தி துஷ்டநிற்கிறக சிஷ்டபரி பாலனன்

18 அஷ்டதிக்கு மனோபயங்கரன் கட்டாரிராயன் கட்டாரிச் சாளுவன் துட்டரில்துட்ட

19 ன் துட்டராயிர கண்டன் துண்டீர நெஷ்டுரந் தவிழ்த்தான் மாளுவ ராயன்

20 தேசசூரன் எங்குந் திறைகொண்ட கண்டன் பதினெட்டுக் கூட்டத்து வன்னி

21 யர்கள் கண்டன் வன்னியராட்டந் தவிள்த்தான் ஒரு குடைக்கீள் உலகமுழு

22 தும் ஆண்டோன் திருவிளக்கு மணிபார்பன் கிஷ்டன் ரணமுக சந்தி ரோத

23 யன் கோடி சூரியப் பிரகாசன் ஈழமுந் திரைகொண்ட இரகுல சூரியன்

24 மதனகிறுவித சுமுக மன்ன கேசரியான் அனவரத கலிதுரத தேவ

25 வடவரசர் முடியள் நடுவி விடறிவரும் ராசாதிராசன் விருது மானங் காத்

26 தருளிய தேவமராயர் நரசிங்கராயர் இம்முடி கிருஷ்ணராயர் தேவை பிரவுட

27 ராயர் மல்லிகைராயர் சசிவர்ணராயர் சீரங்கராயர் விருப்பாச்சிராயர்

28 சேது ராசேந்திரனான தின்புய கோலாகலன் தாலிக்கு வேலி தரியலர்

29 கள் மனைவாழன் தண்டுவார்கள் மிண்டன் சம்பிரம வலியச்சரு

30 வி வழியில்க்கால்நீட்டி அரிவையர்கள் மதரூபன் அஷ்டபோக துரந் தரீகன்

31 தேவைவரு துரைராயன் செம்பீநாடான் அரசராவண ராமன் அரசராட் டந் தவி

32 ள்த்தான் குப்பலக்குளக்காரன் குவலையங் காத்தோன் யிறந்தகால மெடுத்தோன்

33 யிரவீகுல சேகரன் அடைக்கலங் காத்தோன் அடையலர்கள் சிங்கம் உரிகோ

34 ல் சுரதனன் உத்தண்டராயன் காவிக்குடையான் கனகாபிசேகன் தத்துபரி

35 யான் தங்கச்சிவிகையான் சாடிக்காறர் கண்டன் சற்பன்ன பாசையான்

36 தொட்டவாரந்தவறாத சொரிமுத்து வன்னியன் சேது வழிகொண் டோன்

37 தொண்டியந்துறை காவலன் சாமித்துரோகிகள் மிண்டன் இவுளி பாவ

38 டி மிதித்தேறுவார்கள் கண்டன் அந்தம்பிரகண்டன் பூறுவ தெஷ்ண பச்சிம உத்

39 தர சத்த சமுத்திர தெட்சணாதிபன் வடகரைப்புலி துளபமாலை யணியுஞ் சம்பிரம

40 கோலாகலன் கெருட கேதனங் கொண்ட கீற்திப் பிரதாபன் வீரவெண் பா மாலை

41 யான்....கு சிங்கம் தமிள்ப்பிறசிங்கம் பகைமன்னர் சிங்கம்

42 மதன மோகன தேவை ராமனாதசுவாமி காரியதுரந்தரன் தேவப் பிராமண பரி

43 பாலகன் சிவபூசை குருபூசை அரிபூசை மறவாத துரந்தரன் ஆத்துப் பாய்ச்சி கடலு

44 ள் பாச்சி பகைமன்னர் கண்டன் பனுக்குவார் மிண்டன் தளங்கண்டு தவிப்ப

45 ... ண்டன் துரைகள் சிகாமணி ராமலிங்கசுவாமி பாத மறவாமல் பார்

46 ... ண்டோன் எதுத்தவர்கள் சிங்கம் வடகரைப்புலி குளந்தையாதி

47 ... கு வெட்டி விருதுமீட்டான் அன்னக்கொடியாதிபன் அஷ்டவட

48 .... ந்தினோன் மனுமுறை செலுத்திய மதன கெறுவித சுமுகன் அரி

49 ... யன் பிலத்தில்ச் சேடன் வில்லுக்கு விசையன் சொல்லுக்கு

50 ... இந்திரன் பரிக்கு நகுலன் குடைக்குக் கர்ணன் பொறுமை

51 ... தளத்தில்த் துரியோதனன் அசுபதி கெசபதி நரபதியாகிய சேது

52 ... நிலையிட்ட குமார முத்து விசைய ரெகுநாதச் சேதுபதியவர்க

53 ...க்கும் பிறம்பும் புண்ணியத்துக்குள்ளுமாய்க் பிறிதிவிராட்சிய பரி

54 ... ண்ணி அருளாநின்ற சாலிவாகன கலியுக சகாற்த்தம்

55 ... மேல் செல்லாநின்ற யுவ வருசம் ஆடிமாதம் 26 தேதி

56 ... முத்துக்குமார முத்து விசைய ரெகுனாத சேது காத்த தேவ

57 ர்கள் மடம் பூறாதனமாயிருந்தபடியினாலே யின்னமே

58 ... ம் பரிபாலனமாகும்படிக்கு கிறாமம் சறுவமானியமா

59 க பட்டையமெளுதிக் குடுத்தனந்தலே பெருநாங்கு யெல்கையா

60 வது கீள்பாற்க் கெல்கையாவது பொற்றுடப்புக்கு மேற்க்கு தென்பாற்

61 க்கெல்கையாவது வீராண்டான் வயலுக்கு வடக்கு மேற்பாற்கெல்

62 கையாவது உருவாட்டியாத்துக்கு கிளக்கு வடபாற்கெல்கையாவ

63 து சாணான் வயலுக்கு தெற்க்கு இன்னாங்கு யெல்கைக்குட்பட்ட சாருவூர

64 ன்நேந்தல் விரையடி 10 யிந்த வீரையடி பதிங்கலத்துக்கு வரியிறை யெ

65 ச்சோறு வரிச்சோறு ஆடோட்டி மாடோட்டி யெச் சொவந்தை

66 யும் மில்லாமல் மடமும் ஊறணியும் தற்மமும் பரிபாலினம் பண்ணி

67 வியக்கச் சொல்லி பள்ள உலகனாண்டி பாரிசம் பண்ணி விச்சபடியி

68 னாலேயும் நம்முடைய ராச்சியத்தில் தேவதாயம் விறுமதாயம் ராச

69 ாக்கள் னாயக்கமாற் ராவுத்தமார் துரைமக்கன் தேவமார் பாளைய

70 காறர் ஒண்டிக்காறர் ஊளியக்காறர் நாட்டுவகுப்பார் இவர்களுக்கு

71 நடக்கிற கிராமங்களிலேயும் பண்ணைக் கிராமம் சிறுதேட்டுக் கிராமம் இந்தக் கி

72 ராமங்களிலேயும் இருக்கிற குடி ஒண்ணுக்கு முத்திரைப் படியால்

73 ரெண்டுபடி நெல்லு அந்த அந்தக் கிராமத்து அம்பலகாறன் கொத்து

74 க் கணக்கனை அளவிட்டுக் குடுக்கச் சொல்லியும் கட்டளையிட்டு
பட்டைய

75 ம் மெளுதிக்குடுத்திருக்கிறபடியினாலேயும் கல்லுங் காவேரியும் புல்லு

76 ம் பூமியும் சந்திராதித்தவரைக்கு இந்த தற்மத்தை பிறவலப்படுத்தி
விக்கு

77 இந்த தற்மத்தை மென்மேலும் பரிபாலினம் பண்ணினவர்கன் காசியி

78 லே ராமேசிரத்திலே கன்னியாகுமரியிலே கோதாபுரியிலே இந்

79 த சிவதலங்களிலே ஆயிர சிவலிங்க பிறதிஷ்டை பண்ணின

80 பலனும் அந்தச் சிவத்தலங்களிலே கோபிறாமணர் சகலத்திர பேரு

81 ம் பொசிக்கத் தக்கதாய் தடாகப் பிரதிஷ்ட்டை பண்ணின பலனை
அடை

82 வாராகவும் இந்தத் தற்மத்துக்கு யாதாமொருவர் இடைகூறு

83 நினைத்தவர்கள் காசியிலே ராமேசுரத்திலே கன்யாகுமரியி

84 லே கோதாபுரியிலே இப்படிக்கொற்ற சிவத்தலங்களிலே கோ

85 கத்தி விறுமகத்தி ஸ்ரீகத்தி சிசுகத்தியும் ஆயிரத்தெட்டு சிவா

86 லயத்தில் வைய்த்த விளக்கை யமத்தின பாவமும் இவர்கள்

87 பண்ணின பாவத்திலே போவாராகவும் இந்தப்படிக்கு இந்தப்பட்டை

88 யமெளுதினது ராமனாதபுரத்திலிருக்கும் அட்டவணை புள்ளைமாரி

89 ல் தெய்வகன்னியாபிள்ளை மகன் தெய்வகன்னி கையெளுத்து

90 இந்தப்படிக்கு இந்தச் செப்புப்பட்டைய மெளுதினேன் ராமனாத

91 புரத்திலிருக்கும் தங்கவேலை கெங்கணா பத்தன் உ

# 81

# வேப்பங்குளம் செப்பேடு

இருக்கும் இடம் : சித்துரெட்டியார் மடத்துப் பூசகர்

அரசர் : முத்து விசைய ரகுநாத சேதுபதி காத்த தேவர்

செப்பேடு அளித்தவர் : அரசரின் மருமகன் தனுக்கோடி ராமுத்தேவர்

காலம் : 19—7—1756

**அமைப்பும் செய்தியும்** : அருப்புக்கோட்டை வட்டத்தில் பரளாச்சி என்ற ஊரின் வடக்கில் சுமார் 8. கி.மீ. தொலைவில் சித்துரெட்டியார் மடம் உள்ளது. மடம் உள்ள பகுதிக்கு வடக்கு நத்தம் என்பது பெயர். இச்செப்பேட்டில் இப்பெயர் நத்தக்காடு என்று குறிக்கப்படுகிறது. இந்த மடத்திற்கு எதிர்ப்பகுதியில் சுமார் நூறாண்டுகட்கு முன்பு ஜீவ சமாதி கொண்ட ஆறுமுகசாமி என்பாரின் சமாதியும், முருகன் கோயிலும் உள்ளது. அதனால் இம்மடத்தை மக்கள் ஆறுமுகசாமி மடம் என்று அழைக்கின்றனர். சித்திரை மாதம் அவிட்ட நட்சத்திரத்தில் அவருக்குக் குருபூசை விழா சிறப்பாக நடைபெறுகிறது.

இம்மடத்திற்காக சேதுபதி அரசரின் மருமகன் தனுக்கோடி இராமுத்தேவர் வேப்பங்குளம் என்ற ஊரைக் கொடையாகக் கொடுத்

ததை இச்செப்பேடு கூறுகிறது. கொடையாக அளிக்கப்பட்ட வேப்பங் குளம் பரளாச்சி சாலையில் செட்டிகுளம் வழிக்குக் கிழக்கே உள்ளது.

இதில் குறிக்கப்பட்டுள்ள முத்திருளப்பிள்ளை பின்னாளில் இராம நாதபுரம் சீமையின் பிரதானியாக விளங்கியவர் (1782-1791) வேப்பங் குளத்திற்கு நாற்பாங்கு எல்லைகள் கூறப்பட்டுள்ளன.

## செப்பேடு

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1678ம் வருஷம் இதன்மேல் செ

2 ல்லாநின்ற தானு நாம சம்வச்சரத்தில் உத்தராயணத்தில் கிரீஷ்ம ருதுவில் ஆடி மாதம் 8ம் தேதி கிருஷ்

3 ணபட்சத்தில் பஞ்சமையும் குருவாரமும் அவிட்ட நட்சத்திரமும் சுப யோக சுபகரணமும் பெ

4 ற்ற சுபதினத்தில் ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீமன் மகாமண்டலேசுவரன் அரியராய தள விபாட

5 ன் பாஷைக்கு தப்புவராயிர கண்டன் மூவராயிர கண்டன் கண்டநாடு கொண்டு

6 கொண்டநாடு கொடாதான் பாண்டிமண்டல தாபனாச்சாரியன் சோழ மண்டல

7 ப் பிரதிஷ்டாபனாச்சாரியன் தொண்டமண்டல சண்டப்பிரசண்டன் ஸ்ரீமும்

8 கொங்கும் வாழ்ப்பாண பட்டணமும் எம்மண்டலமும் அளித்து கெச வேட்டை கண்

9 டருளிய ராசாதிராசன் ராசபரமேஸ்வரன் ராசமார்த்தாண்டன் ராச குலதிலகன் துட்ட

10 ரில் துட்டன் துட்டர் கொட்டமடக்கி துட்டர் நிட்டூரன் வையாளி நாராயண

11 ன் இவிளிபாவடி மிதித்தேறுவார் கண்டள் அரச ராவணராமன் அடி
யார் வேளைக்கார

12 ரன் பரதள விபாடன் உரிகோல் சுரதாணன் அந்தம்பிர கண்டன்
சர்டிக்கார

13 ன் சமித்துரோகியள் மிண்டன் பஞ்ச பாணாவதாரன் இளஞ்சிங்கம்
தளஞ்சிங்கம் பர

14 மன்னர் சிங்கம் ஆத்தில் பாய்ச்சி கடலில் பாய்ச்சி மதப்புலி அடைக்
கலங்காத்தான்

15 தாலிக்கு வேலி தொண்டியந்துறை காவலன் வைகை வளநாடான்
அனுமகேதன

16 ன் கருடகேதனன் சிங்ககேதனன் மீனகேதனன் செங்காவி கு

17 டையும் அதன்மேல் வெண்கவரியும் பெற்ற தேவாதி தேவன் தேவை

18 நகராதிபன் சேதுமூல ரட்சா துரந்தரன் ராமநாதசுவாமி காரிய துரந்

19 தரன் சிவபூஜா துரந்தரன் பரராஜ சேகரன் இரவிகுல சேகரன் சொரி

20 முத்துவன்னியன் புவனேகவீரன் திலதநுதல் மடமாதர் மடலெழுத
வரு சுமு

21 கன் விசையலட்சுமி காந்தன் கலைதெரியு விற்பன்னன் காமினி கந்தப்ப

22 ன் சத்திய அரிச்சந்திரன் பூலோக தேவேந்திரன் வில்லுக்கு விசையன்
மல்லுக்

23 கு வீமசேனன் கொடைக்கு கர்ணன் பரிக்கு நகுலன் வீரத்தண்டை
சேமத்தலை விளங்

24 குமிரு தாளினான் அசுபதி கெஜபதி நரபதி சேதுபதியாகிய துகவூர்
கூற்றத்து

25 காத்தூரான குலோத்துங்க சோழ நல்லூர் கீழ்பால் விரையாத கண்ட

26 னில் இருக்கும் ராஜராஜன் ராஜஸ்ரீ ஹிரண்யகர்ப்பயாசி முத்துவிஜய
ரகுநாத

27 சேதுபதி காத்த தேவரவர்கள் மருமகன் ஸ்ரீதனுக்கோடி ராமுத்தேவ
ரவர்கள்

28 நத்தக்காட்டில் சித்துரெட்டியார்கள் மடம் சுப்பையனுக்கு தானம் பண்ணின

29 கிராமம் வேப்பங்குளம் இந்த வேப்பங்குளத்திற்கு எல்கையாவது பல் லவ குலாந்த

30 க நல்லூர்ஆகிய பரளச்சி கண்மாய்க்கும் செவ்வல் புஞ்சைக்கும் மேற்

31 கு சின்னதிருக்கணிக்கு தென்மேற்கு நாட்டுகணக்கு முத்திருளப்ப பிள்ளை

32 புஞ்சைக்கு வடக்கு பள்ளஊரணிக்கும் பாதைக்கும் கிழக்கு இன்னாங் கெல்லைக்

33 குட்பட்ட வேப்பங்குளம் நஞ்சை புஞ்சை மாவடை மரவடை திட்டுத் திடல் நிதி நிட்சேப

34 சலதரு பாஷாண சித்தசாத்தியமென்று சொல்லப்பட்ட அஷ்ட சுவா மிய

35 யங்களும் சந்திராதித்த சந்ததி பிரவேசம் சர்வமானியமாக தானம் பண்

36 ணிக்கொடுத்த படிக்கு ஆண்டனுபவித்துக் கொள்வார்களாவும் இந்

37 த தருமத்துக்கு உபகாரம் பண்ணினபேர் கோடி சிவலிங்க பிரதிஷ்டை

38 கோடி பிரும்ம பிரதிஷ்டை பண்ணின சொர்ணதான கோதான பூதா னம்

39 பண்ணின பிரயோஜனம் அடைவாராகவும் இந்த தருமத்துக்கு விகா தம் நினைத்தபேர்

40 கெங்கைக்கரையிலே காராம்பசுவையும் மாதாபிதாவையும் குருவை யும்

41 கொன்ன தோஷத்திலே போகக்கடவராகவும் உ சிவமயம்

# 82

# கருக்காத்திச் செப்பேடு

இருக்கும் இடம் : இராமநாதபுரத்திற்கு அண்மையில் உள்ள திரு உத்தரகோசமங்கை

அரசர் : முத்து விசைய ரகுநாத சேதுபதி காத்த தேவர்

காலம் : மே-ஜூன் 1760

**அமைப்பும் செய்தியும் :** பாண்டி நாட்டின் சிறந்த சைவத் தலங்களில் ஒன்று உத்தரகோசமங்கை. இத்தலத்தின்மீது மணிவாசகப் பெருந்தகையார் பல பாடல்கள் பாடியுள்ளார்.

அங்குள்ள மங்களேசுவரசுவாமி கோயில் ஸ்தானிகரான இராம லிங்கக் குருக்கள் மகன் மங்களேஸ்வரக் குருக்களுக்கு சேதுபதி அரசர் கருக்காத்திக் கிராமத்தைக் கொடையாக அளித்ததை இச் செப்பேடு கூறுகிறது. கருக்காத்தி உத்தரகோச மங்கையிலிருந்து 8 கி.மீ. தொலைவில் உள்ளது. கொடை அளிக்கப்பட்ட கருக்காத்தி 'முத்துராமலிங்கபுரம்' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

இச்செப்பேட்டை எழுதியவர் சங்கர பண்டாரம் மகன் சின்ன வீரப்பன் என்பவர். கருக்காத்திக்குக் கிழக்கு எல்லை வேளாநேரி நன் செய் வயல், தெற்கு எல்லை வையையார்த்துப் பாதி நன்செய் வயல்,

மேற்கு எல்லை மரகதவள்ளி அம்பலக்களரி எல்லைக்குட்பட்ட கருக் காத்தி நன்செய் புன்செய், வடக்கு எல்லை மேல்மடந்தை நன்செய் வயல் என்பனவாகும்.

## செப்பேடு

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1682 இதின் மேல்

2 செல்லாநின்ற விக்ரமநாம சம்வத்ஸரத்து உத்தராயணத்

3 தில் வசந்த ரிதுவில் வைகாசி மாதம் சுக்கில பூர்வ பட்சத்தில் வெள் ளிக்கிழ

4 மையும் குரு வாரமும் சுபயோக சுபகரணமும் ——————————

5 ——————————————————————————ணாமயோகமும் பெற்ற பகுதானமும் கூடின சோம மிதுன லக்குன

6 த்தில் தேனவை நகராதிபன் சேதுமூல ரட்சா துரந்தரன் இராமநாத சுவாமி காரிய துரந்தரன் பரராஜ சிங்கம் அசுவபதி மகா மண்

7 டலேசுவரன் விருதராசர் மணவாளன் அந்தம்பிர கண்டன் சாமித்து ரோகியள் மிண்டன் கொட்டமடக்கி துர்க ரேபந்தன்

8 சத்திய அரிச்சந்திரன் சங்கீத சாகித்திய வித்யா வினோதன் வீரத் தண்டை சேமத்தலை விளங்குமிரு தாவினான் சகல

9 சாம்பிராச்சிய லட்சுமி வாசன் வீராதி வீரன் வேதியர்கள் சுவலன் அரச ராவண ராமன் அடியார் வேலைக்காரன்

10 பரமன்னர் சற்ப கருடன் பாண்டி மண்டல தாபனாச்சாரியன் சோழ மண்டல பிரதிஷ்டாபனாச்சாரியன் தொண்டைமண்

11 டல சண்டப்பிரசண்டன் பாசைக்குத் தப்புவார் கண்டன் கண்ட

12 நாடுகொண்டு கொண்டநாடு கொட்டாநான் தாலிக்குவேவி பட்டமா னங்காத்தான் துட்டரில் துட்டன் துட்டர் கொட்டமடக்கி இ

13 டருவார் கோடாரி —— ஈழமும் கொங்கும் யாழ்ப்பாணபட்டண மும் எம்மண்டலமும் அவித்து கெஜவேட்டை

14 கண்டருளிய ராசாதி ராசன் ராஜ பரமேஸ்வரன் ராச மார்த்தாண்டன் ராச கம்பீரன் கொடைக்குக் கர்ணன் பரிக்கு ந

15 குலன் வில்லுக்கு விசையள் மல்லுக்கு வீமசேனன் பொறுமைக்கு தர்மபுத்திரன் பிரசங்கத்துக்கு ஆதிசேஷன் அடைக்கலங்காத் தா

16 ன் மதப்புலி சகல குண சம்பந்தன் கலியாண குணாபிராமன் படைக் கும் கொடைக்கும் ஓடாத கண்டன் —— பரசுராமன்

17 மனுநீதி மன்னன் அநாதரட்சகன் மலை கலங்கினுங் மன

18 ங் கலங்காத கண்டன் இளஞ்சிங்கம் பகைமன்னர் சிங்கம்

19 செம்பிவளநாடன் அதிவீரன் அகலங்கன் கருணை பொழி கடாட்

20 சன் அன்னதான சிவன் மேவலர்கள் கோளரி மேவலர்கள்

21 வணங்குமிரு தாளினான் அனும கேதனன் கெருட கேதனன் சிங்

22 க கேதனன் வியாக்கிர கேதனன் மீன கேதனன் குக்கிடகேதனன்

23 காவி கேதனன் செங்காவிக் கொடையும் அதன்மேல் விருதுசல்லியு முண்டான தேவாதி தேவன் தனலட்சுமி

24 தானியலட்சுமி வீரலட்சுமி விசையலட்சுமி சந்தானலட்சுமி

25 சௌபாக்கிய லட்சுமி கீர்த்தி லட்சுமி சகல சாம்பிராச்சிய லட்சு

26 மி அட்டலட்சுமிநிவாசன் அசுபதி நரபதி சேதுபதி மகாராஜா

27 அவர்கள் துகவூர் கூத்தத்தில் காத்தூரான குலோத்துங்க சோழ நல் லூர் கீழ்பால் விரையாத கண்டனில் மாதுருவங்கி

28 சத்துக்காக சோடா மகாதான தீட்சா துரந்தரனான இரண்ய கெற்ப்

29 பயாசி இரவிகுல இரெகுநாத சேதுபதி மகாராஜா அவர்கள் வம்சத்

30 தவரான ஸ்ரீமது முத்துச்செல்லத் தேவர் அவர்கள் குமாரர் முத்து விசைய ரெகுநாத சேதுபதி காத்ததேவர் அவர்கள் திரு உத்திரகோ

31 சமங்கை மங்களேசுவர சுவாமி கோயில் ஸ்தானிகரான கௌதம கோத்திரத்

32 தில் போதாயண சூத்திரத்தில் .. ... இராமலிங்க குருக்கள்

33 புத்திரன் மங்களேசுவர குருக்களுக்கு சகிரண்ணியோதக தாராபூர்வ மாக

34 தானம் பண்ணிய கிராமமாவது கருக்காத்திக்கு எல்கையாவது வேளா நேரி நன்சை வயலுக்கு மேற்கு தெற்கு வையையாத்து

35 க்கு பாதி நஞ்சை வயலுக்கு வடக்கு மரகதவள்ளி அம்பலகளரி எல் லைக்குட்பட்ட கருக்

36 காத்தி நஞ்சை புஞ்சைக்குக் கிழக்கு வடக்கு எல்கையாவது மே

37 ல் மடந்தை நஞ்சை வயலுக்குத் தெற்கு இந்நான்கெல்கைக்குள்ப் பட்ட

38 கருக்காத்திக்கு பிரதிநாமமான முத்துராமலிங்கபுரம் நஞ்சை புஞ்சை மாவிடை மரவிடை

39 திட்டு திடல் பள்ளம் படுகை ஊரணி குடி படை பள்ளு பறை சகல சமுதாய

40 பிராப்தி நிதி நிட்சேப சல தரு பாஷாணங்களின் ஆதாயமென்று சொ

41 ல்லச் செய்த அஷ்டபோக தேச சுவாமியங்களுக்கு தானாதி விணிமய விக்கி

42 ரயங்களுக்கும் யோக்கியமாக ஆசந்திராதி புத்திர பௌத்திர பரம் பரையாக ஆண்

43 டனுபவித்துக் கொள்வாராகவும் இந்த தர்மத்திற்கு யாதொமொரு வன் அகிதம் பண்ணி

44 னபோர்கள் காசியிலே இராமேஸ்வரத்திலே கெங்கைக் கரையிலே கோடி காரா

45 ம் பசுவையும் கோடி பிராமணரையும் வாதம் பண்ணின பாவத்தை அடைவா

46 ராகவும் இந்த தாம்புர சாதனம் எழுதினேன் திருப்புல்லாணியிலிருக் கும்

47 சங்கர பண்டாரம் மகன் சின்ன வீரப்பன் லிகிதம் உ

# 83

## சிக்கில் செப்பேடு

இருக்கும் இடம் : திருப்புல்லாணி தேசிகர் இல்லம்

அரசர் : முத்து விசைய ரகுநாத சேதுபதிகாத்த தேவர்

காலம் : 17–10–1762

அளவு : 28.2 செ.மீ. × 19 செ மீ.

**அமைப்பும் செய்தியும்** : இச்செப்பேடு அழகிய தாமரை மொட்டுப் போன்ற கைப்பிடியுடன் இரண்டு துளைகளையும் உடையது. வழக்க மான மெய்க்கீர்த்தி உள்ளது. 17–10–1976 அமாவாசைப் புண்ணிய தினத்தன்று முத்து விசைய ரகுநாத சேதுபதி காத்த தேவர் செம்பி நாட்டில் உள்ளிட்ட பற்றில் சின்ன நாட்டான் பெரிய நாட்டான் என்னும் பகுதியைக் கற்றறிந்த அந்தணர்களுக்குத் தானமாகக் கொடுத்தார்.

தானம் கொடுத்த பகுதியின் கிழக்கு எல்லை செகுட்டுமடை வாய்க்காலும் அயக்குடிக்காலும், தெற்கு எல்லை தத்தங்குடிப்பாதை, மேற்கு எல்லை உப்புப்பாதை, வடக்கு எல்லை பண்ணந்தை. பாதை

இத்தானம் சூரிய கிரகணத்தன்று ஆதிசேதுவில் கொடுக்கப் பட்டது. கொடுக்கப்பட்ட நிலத்தினை அவர்கள் பரம்பரை பரம்பரை

யாக அனுபவித்துக் கொள்ளச் சந்திர சூரியர் உள்ளவரைக்கும் அளிக்கப்பட்டது.

இதனைச் காத்தவர்களுக்கு வரும் புண்ணியமும், அழிப்பவர்க்கு வரும் பாவமும் இறுதியில் கூறப்பட்டுள்ளது. அரசன் தானேகொடை கொடுத்ததாகச் செப்பேட்டில் கூறப்பட்டுள்ளது.

அரசன் ஆணை 'சமூக உத்தாரம்' என்று கூறப்படுகிறது. அரண்மனை பொக்கிசத்தில் பணிபுரியும் பச்சை உகந்த பண்டாரம் இச் செப்பேட்டை எழுதியுள்ளார். ஸ்ரீராமநாத ஸ்வாமி ஸஹாயம் எனத் தெலுங்கில் எழுதப்பட்டுள்ளது.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 உ ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1684 கலியப்தம் 4863

2 இதின்மேல் செல்லாநின்ற சித்திரபானு நாம ஸம்வத்ஸரமும் தெட்சிணா

3 யனமும் சரத்ரிதுவும் அற்பிசிமாசமும் கிருஷ்ணபட்சமும் அமாவாசியும் பா

4 னுவாசரமும் சித்திறா நட்சத்திரமும் சுபயோக சுபகரணமும் கூடின

5 பதினத்தில் ஸ்ரீமதுதேவநகராதிபன் சேதுமூலதட்சா துரந்தரன் ராம

6 னாதசுவா காரியாமி துரந்தரன் சிவபூசா துரந்தரன் பரராசசேகரன்ப

7 ரராச கெச சிங்கம் இரவிகுலசேகரன் இரவி மாற்த்தாண்டன் சொரிமு

8 த்து வன்னியன் ஸ்வஸ்திஸ்ரீ மன் மகாமண்டலேசுரன் அரியதள விபா

9 டன் பாசைக்குத் தப்புவாராத கண்டன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு

10 கொடாதான் பாண்டிமண்டல ஸ்தாபனாசாரியன் சோழமண்டல பிறுதி

11 ஷ்டாபனாசாரியன் தொண்டமண்டல சண்டப்பிரசண்டன் ஈளமும் கொங்

12 கும் யாழ்ப்பாணராயன் பட்டணமும் கெசவேட்டை கொண்டருளிய ராசா

13 திராசன் ராசபரமேசுரன் ராசமாற்த்தாண்டன் ராசகெம்பீரன் பரதள

14 விபாடன் உரிகோல் சுரதானன் அந்தம்பர கண்டன் சாடிகாரர் கண்டன் சா

15 மித்துரோகியள் மிண்டன் இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகைமன்னர் சிங்

16 கம் மதுரை ராசர் சிங்கம் ஆத்தில்பாச்சி கடலில்பாச்சி மதப்புலி அடை

17 க்கலங்காத்தான் தாலிக்குவேலி சத்துராதியள் மிண்டன் வன்னியரா

18 ட்டந் தவிள்த்தான் மேவலர்கள் கோளரி மேவலர்கள் வணங்குமிரு தாளினான்

19 வீரகெம்பீரன் கீற்த்திப்பிறதாபன் ஆரியர் மானங்காத்தன் தொண்டி யன்து

20 றை காவலன் துர்க ரேவந்தன் அனுமகேதனன் கெருடகேதனன் குடைக்கு கற்

21 ஸன் பரிக்கு நகுலன் கருணாகடாட்சன் குன்றினுயர் மேருவை குன் றாய் வளைகுனில்

22 பொரித்தவன் திலதனுதல் மடமாதர் மடலெளுத வருசுமுகன் விசய லெட்சுமி

23 காந்தன் கலைதெரியும் விற்பன்னன் காமினி கந்தற்பன் வீரதண்டை சேமத்தலை விளங்

24 குமிரு தாளினான் ராசகுல திலகன் ராசமனோபயங்கரன் மன்னரில் மன்னன் ம

25 குடவற்த்தநர் வேந்தன் மன்னர் சூடாமணி துட்டரில்த்துட்டன் துட்ட நி

26 ட்டுரன் அட்டதிக்கும் மனோபயங்கரன் கட்டாரி சாளுவன் நவகோடி

27 நாராயணன் துலுக்கர்தள விபாடன் துலுக்கர்மோகந் தவிள்த்தான் ஓட்டி

28 யர்மோகந் தவிள்த்தான் மலைகலங்கினும் மனங்கலங்காதான் அசுவபதி நர

29 பதி கேசபதி தளபதி அரிவுக்கு அகத்தியன் சொல்லுக்கு அரிச்சந்திரன் வில்லுக்

30 கு விசயன் மல்லுக்கு வீமன் தாலிக்குவேலி அன்னசத்திர சோமன் அடியார் வேளைக்க

31 ாறன் செம்பி வளநாடன் பூலோகதேவேந்திரன் செங்காவிக்குடையான் ஸ்ரீமது

32 ஹிரண்ய கெற்பயாசி முத்துவிசயரெகுநாதச் சேதுபதி கர்த்த தேவரவர்கள் பேர

33 ன் முத்துவிசய ரெகுநாதச் சேதுபதி காத்த தேவரவர்கள் பூதானம் பண்ணி

34 க்குடுத்த கிறாமமாவது செம்பிநாட்டில் சிக்கல் உள்ளிட்ட பத்தில் சின்னநா

35 ட்டான் பெரியநாட்டானுக்கு எல்கையாவது கீள்பாற்க்கெல்கை செகுட்டு

36 மடைவாய்காலுக்கும் அயக்குடிக்காலுக்கும் மேற்கு தென்பாற்கெல்கை த

37 த்தங்குடிப்பாதைக்கு வடக்கு மேல்பாற்க்கெல்கை உப்புப்பாதைக்கு கிளக்கு வடபா

38 ர்க்கெல்கை பண்ணந்தப்பாதைக்கு தெற்கு இன்னான்கெல்கைக்குள்

39 ளான சின்னநாட்டான் பெரியநாட்டானை சூரியோபராக புண்ணிய காலத்தில்

## இரண்டாம் பக்கம்

40 ஆதிசேதுவில் பூதானம் நாநாகோத்திரத்தில் நாநாசூத்திரத்தில் நாநா சா

41 காத்தியாயியளான அஷ்வித்துவன் மகாசெனங்களுக்கும் பூதானம் ப

42 ண்ணிக்குடுத்தபடியினாலே சின்னநாட்டான் பெரியநாட்டாலுக் குள்ள நஞ்

43 சை புஞ்சை மாவடை மறவடை கீள்நோக்கிய கிணரு மேல்நோக்கிய மர

44 ம் நிதி நிட்சேப செல தரு பாஷாணாட்சிண்ணி யாகாம்மியம் என்று சொலப்பட்

45 ட அஷ்ட்டபோக தேச சுவாமியங்களும் ஆசந்திராற்க்க புத்திர பவீத் திர ப

46 ாரப்பறையாக தானாதி விணிமய விக்கிறயங்களுக்கும் யோக்கியமாக சகிரன்

47 ணிய பூறுவமாக பூதானம் பண்ணிக்குடுத்தபடியினாலே இந்த தற்மத் தை

48 பரிபாலனம் பண்ணிவிச்சவன் கெங்கைக் கரையிலேயும் ராமே

49 சுரத்திலேயும் கோடிசிவலிங்க பிறதிஷ்டையும் கோடி விஷ்ணு

50 ப்பிறதிஷ்டையும் கோடி பிறும பிறதிஷ்டையும் பண்ணிவிச்ச சுகிரு

51 தத்தை அடைவாராகவும் இந்த தற்மத்துக்கு அகிதம் பண்ணினவன்

52 கெங்கைக் கரையிலேயும் தனுக்கோடிக் கரையிலேயும் மாதா

53 பிதாவையும் குருவையும் பிறாமணரையும் கோவதையும் பண்ணி

54 ஞ தோஷத்திலே போகக் கடவாராகவும் இந்தப்படி சம்மதித்து

55 ஸ்ரீமது முத்துவிசய ரெகுனாதச் சேதுபதி காத்ததேவரவர்கள்

56 சின்னநாட்டான் பெரியநாட்டான் அசேஷவித்தவன் மகாசெ

57 னங்களுக்கு பூதானம் பண்ணிக்குடுத்தோம் தாந பாலத யோர்மத்யே

58 தாநாத் ஸ்ரயோநு பாலநம் தாநாத் ஸ்வர்க்க மவாப்நோதி பால

59 நாத் அச்சுதம் பதம்: ஸ்வதத்தாத்வி குணம் புண்யம் பரதத்தாநு பாலு

60 நும் பரதத்தாநு ஹாரேண ஸ்வதத்தம் நிஷ்பலம் பவேது: உ

61 த்தாரப்படிக்கு பொக்கிசம் வேலை பச்சை உகந்த பண்டாரம் ங்க

62 யி அச்சரம்

ஸ்ரீராமநாத ஸ்வாமி ஸஹாயம்

# 84

# அரியக்குடிச் செப்பேடு

இருக்கும் இடம் : அரசு அருங்காட்சியகம், எழும்பூர், சென்னை

அரசர் : முத்து ரகுநாத சேதுபதி காத்த தேவர்

காலம் : 19—6—1763

**அமைப்பும் செய்தியும்** : செப்பேட்டில் குறிக்கப்பட்டுள்ள அரியக்குடி இராமநாதபும் மாவட்டம் பரமக்குடி வட்டத்தில் போகலூருக்கு அருகில் உள்ளது. இப்போது அரியக்குடி புத்தூர் எனப் பெயர் வழங்கப் பெறுகிறது. முன்பு அரியக்குடிக்கு கடம்பவனநல்லூர் என்ற பெயரும் இருந்துள்ளதைச் செப்பேடு கூறுகிறது. அரியக்குடி கிடாத்திருக்கை நாட்டில் இருந்துள்ளது.

பாரத்வாஜ கோத்திரத்தில் ஆபஸ்தம்ப சூத்திரத்தில் யஜுர்வேதம் வல்ல அந்தணர் குலத்தவரான சேஷ அவதானியின் மகன் சந்திர சேகர அவதானியருக்கு அரியக்குடியைச் சேதுபதியரசர் கொடையாக வழங்கியதைச் செப்பேடு குறிக்கிறது. தந்தையாரும், மகனும் நினைவுக் கலையில் (அவதானம்) சிறந்து விளங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. கொடை அளிக்கப்பட்ட பின் அரியக்குடி முத்து ரகுநாத சமுத்திரம் என்று அழைக்கப்பட்டது.

அரியக்குடியில் முன்பு ஒரு அக்கிரகாரம் இருந்தது. அதற்கு உரிமையான கால் பங்கு நீக்கி முக்கால் பங்கு ஊரின் உரிமையே அவதானியாருக்கு வழங்கப்பட்டது அக்கிரகாரத்திலும் பதினான்கில் ஒரு பங்கு அவதானியாருக்கு அளிக்கப்பட்டது.

இச்செப்பேட்டை சின்னப்பத்தர் மகன் வேலாயுதம் என்பவர் எழுதியுள்ளார்.

கொடை அளிக்கப்பட்ட நிலத்தின் தெற்கு எல்லை மஞ்சியூர்ப் புன்செய், கிழக்கு எல்லை போகலூர், மேற்கு எல்லை புத்தூர், வடக்கு எல்லை பெரும்பாதை என்பனவாகும்.

## செப்பேடு

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1685 இதின் மேல் செல்லாநின்ற
ஸ்வபானு னாமசம்வச்ரத்தில் உத்தராயண வசந்தரிது ஜேஷ்ட
மாதம் நவமி ஞாயித்துக் கிழமையும்

2 சந்திர பிரபையான யோக சேஷ வாகன பெத்த ————————...—
ஸ்வஸ்தி ஸ்ரீமன் தேவை

3 நகராதிபன் சேது மூல ரட்சா துரந்தரன் பரராஜ சேகர பரராஜ கேசரி
பரராஜ

4 கஜ சிங்கம் இரவிகுல சேகரன் சொரிமுத்து வன்னியன் புவனேக வீரன்

5 ஸ்ரீமகா மண்டலேசுவரன் அரியாயிரதள விபாடன் பாசைக்கு தப்புவ

6 ராயிர கண்டன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு கொடாதான்
பாண்

7 டி மண்டலத் தாபனாச்சாரியன் சோழமண்டல பிரதிஷ்டாபனாச்
சாரியன் தொண்டைமண்டல சண்டப்பிரசண்டன் ஈழமும்
கொங்

8 கும் யாழ்ப்பாண பட்டணமும் எம்மண்டமும் அளீத்து கெஜ வே

9 ட்டை கண்டருளிய ராசாதி ராசன் ராச பரமேஸ்வரன் ராச மார்த்
தாண்டன்

10 ராஜ கெம்பீரன் இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகைமன்னர் சிங்கம் துவை

11 ரராயன் ஆத்தில் பாச்சி கடலில் பாச்சி மதப்புலி அடைக்கலங் காத்

12 தான் தாலிக்கு வேலி சத்துராதியன் மிண்டன் துட்டராயிர கண்டன் வீரகஞ்சுகன் வீரவளநாடன் வன்னியராட்டந் தவழ்த்

13 தான் மேவலர்கள் கோளரி மேவலர்கள் வணங்குமிரு தாளினான் வீ

14 ரமகா கெம்பீரன் கீர்த்தி பிரதாபன் பரத நாடகப் பிரவீணன் ஆரியர்

15 மானங்காத்தான் தொண்டியந்துறைக்காவலன் துர்க ரேபந்த

16 ன் அனுமகேதனன் கருட கேதனன் விஜாக்குர கேதனன் சிம்ம கேதன

17 ன் குடைக்குக் கர்ணன் பரிக்கு நகுலன் பரதளவிபாடன் உரிகோல் சுரதா

18 னன் படைக்கும் கொடைக்கும் ஓடாத கண்டன் தந தார தார பரதார சகோ

19 தரன் மனுநீதிமன்னன் அன்னதான சீலன் மனம் கலங்கினுங் மனங் கலங்

20 காத கண்டன் செம்பிவளநாடன் அளகன் அகளங்கன் அதிக உபரியான

## இரண்டாம் பக்கம்

21 வைகை அடைச்சு ரெகுநாத சமுத்திரமாக பெரியகண்மாய் உண்டு பண்ணி

22 னவன் குண்டாத்தை அடைச்சு இராச்சியத்துக்கு இரெகுநாத காவேரி யாக உண்டு ப

23 ண்ணினவன் ஏழையை இரட்சிக்குப் தயாபரன் சத்துருவாதியள்க்கு இடி இ

24 யங்கள பல்லக்கும் சிங்க முகமும் பஞ்சவர்ண பாவாடையும் நட நாட

25 க சாலையும் உண்டான தேவன் பலத்துக்கு ஆதிசேசன் அழகுக்கு வால

26 சிவகன் காமினி கந்தப்பன் கன கோபாலன் பஞ்சபாணாவதாரன் பரதள

27 விபாடன் தட்சிண சிங்காசண சேனாதிபதி சேதுகாவலன் அசுபதி கெஜபதி நரப

28 திகளுக்கு மேலான சேதுபதி செங்காவிக் குடையன் இரண்ய கெற்ப

29 யாசியான முத்துரெகுநாத சேதுபதி காத்ததேவரவர்கள் பரத்வாஜ கோ

30 த்திரத்தில் ஆபஸ்தம்ப சூத்திரத்தில் யஜுர்பிரியாபரான சே

31 சவதானியின் புத்திரன் சந்திரசேகர அவதானிக்கு சகிரண்ணியமாக

32 அரைவாரியாக தாம்பிர சாதனம் பண்ணிக் கொடுத்ததான தாம்பிர சாசனமாவது

33 கிடாத்திருக்கை நாட்டில் அரியக்குடியான கடம்பவன நல்லூர்

34 இந்த கிராமத்துக்கு நான்கு எல்கையாவது மஞ்சிஊர் புஞ்சைக்கு வடக்கு போகலூருக்கு

35 மேற்கு புத்தூருக்கு கிழக்கு பெரும்பாதைக்கு தெற்கு போகலூருக்கு

36 அரியக்குடிக்கு பிரதிநாமமான முத்து ரெகுநாத சமுத்திரத்தில் முன்

37 அக்கிரகாரம் கால் பங்கு நீக்கிய கிராமமும் முக்கால் பங்கும் முன் அ

38 க்கிரகாரம் கால் பங்கு பின் சர்வ சேவார்த்திகளில் ஜீவிதம்

39 பங்கு ஒன்றும் தனுக்கோடிக் கரையில் தானம் பண்ணிக் கொடுத்த படியினா

40 லே இந்தக் கிராமம் முக்கால் பங்கும் முன் அக்கிரகார கால் பங்கில்

41 பதினாலில் ஒரு — — — — —

42 பிறவினட திட்டுத்திடல் கீழ்நோக்கிய கிணறும் மேல்நோக்கிய மரமும் நிதி நிட்சேப

43 சலதரு பாசான ஆச்சண்ணிய ஆகாம்மிய சித்த ஸாத்தியமெனச்

44 சொல்லப்பட்ட அஷ்டபோக தேஜ சுவாமியங்களும் வினயவிக்கிரையங் களுக்கு போக்கிய

45 பாக புத்திர பௌத்திர ஆசந்திரராதித்ய சந்ததிப்பிரவேசம் ஆண்டனு பவித்துக் கொள்ளக்

46 கடவாராகவும் இந்த தர்மத்திற்கு யாதொருவர் அசிதம் பண்ணின பேர்கள்

47 கங்கைக் கரையிலே காராம் பசுவை வதை பண்ணின தோஷத்திலே போக

48 க் கடவார்களாகவும் இந்த தர்மத்தை பரிபாலனம் பண்ணுகிற பேர்கள்

49 கோடிக் கன்னிகாதானமும் கோடி சிவலிங்க பிரதிட்டையும் அஷ்வ மேகமும் பண்ணிய

50 புண்ணிய பலன் அடைவார்களாகவும் இந்த பட்டயம் சின்னப்பத்தர் மகன் வேலாயுதம் உ

இராமநாத சுவாமி துணை

# 85

# பாலக்குளம் செப்பேடு

இருக்கும் இடம் : தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை அருங்காட்சியகம், இராமநாதபுரம்

அரசர் : முத்து விசைய இரகுநாத சேதுபதி காத்த தேவர்

காலம் : 19—6—1763

அளவு : 28 செ.மீ. × 16 செ.மீ.

**அமைப்பும் செய்தியும் :** இச்செப்பேடு துளையில்லாத கைப்பிடியை உடையது. கைப்பிடியில் எவ்விதக் குறியீடும் இல்லை. முதல் பக்கத்தில் ஆறு வரிகளுக்குக் கீழ்

'ஸ்ரீராமநாத சுவாமி சகாயம்'

என எழுதப்பெற்றுள்ளது. முத்து விசைய இரகுநாத சேதுபதி அவர்கள் 1762 வரை ஆட்சிபுரிந்தார் என்பர். இச்செப்பேடு மூலம் அவர் 1763 வரை ஆட்சிபுரிந்தார் என்பது புலனாகிறது.

இச்செப்பேட்டில் அரசர்கள் பற்றிய சிறப்புப் புகழுரையில் இச் சேதுபதி அரசரின் இரண்டு செயற்கரிய செயல்கள் கூறப்பட்டுள்ளன. அவை

(1) வைகை ஆற்றை அடைத்துப் பெரிய கண்மாய் அமைத்து அதற்கு இரகுநாத சமுத்திரம் என்று பெயர் வைத்தது

(2) குண்டாற்றை அடைத்து வாய்க்கால் வெட்டி அதற்கு இரகுநாதக் காவேரி என்று பெயர் வைத்தது

ஆகியனவாகும்.

முத்து விசைய இரகுநாத சேதுபதியவர்கள் இராமேசுவரம் இராம நாதசுவாமி சன்னிதியில் காஸ்யப கோத்திரம் ஆபஸ்தம்ப சூத்திரம் யெச்சர்காத்யாபாகரான தாதா சிவராம் அவர்கள் மகன் ரகுநாதக் குருக்களுக்குக் கைக்கு நாட்டு வட்டகையில் பாலக்குளம் என்ற ஊரைக் கொடையாக அளித்தார்.

பாலக்குளத்தின் எல்லைகள்: கிழக்கு எல்லை வலமாவூர்க் கண் மாயில் துறைமுகம் கொண்டான்; தெற்கு எல்லை வலமாவூர்க் குளக் கால்; மேற்கு எல்லை கருங்குடிக்குளம் கோவை; வடககு எல்லை ஊர்வயல் கண்மாய்க்கரை, ஊர் வயல் எல்லைக்கல் ஆகியனவாகும்.

இந்தச் செப்பேட்டை வேலாயுதம் என்பவர் எழுதியுள்ளார்.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாஹந சகாப்தம் 1685 இதின்மேல்ச் செல்லாநின்ற ஸோபாநுநாம

2 ஸம்வத்ஸ்சரம் உத்தராயண கிரீஷ்மரிது ஜேஷ்ட மீ சுக்லபட்சம் நவமி நாயித்துக்கிழமை

3 அஸ்த நக்ஷத்திரம் வரியாநாமயோகம் பாலவாகரணமும் பெத்த சுப நக்ஷத்ர சுப

4 யோக சுபகரணத்தில் தேவை நகராதிபன் சேதுமூலரட்சா துரந்தரன் ராமனாத

5 சுவாமி பற்வதவற்தனி காரியா துரந்தரன் பரராச சேகரன் பரராச கெச சிங்கம் ஸ்வ

6 ஸ்தி ஸ்ரீமந்மஹா மண்டலேசுரன் விருதரசர் மணவாளன் அந்தம்பிற கண்டன் சு

7 வாமித்துரோகியள் மிண்டன் கொட்டமடக்கி துர்க ரேவந்தன் சத்திர பாஷா ஹரி

8 ச்சந்திரன் ஸங்கீத சாஹித்ய வித்யா விநோதன் துட்டரை அடக்கி வீரதண்டை சேமத்தலை வி

9 ளங்கிய தாளினான் சகல சாம்பிறாச்சிய அட்ட லெட்சிமி நிவாசன் புவனேக வீரன் வீரகஞ்சு

10 கன் வேதியர் காவலன் அரசராமன் அடியார் வேளைக்காறன் பர மன்னர் சற்ப கெருடன் பா

11 ண்டிமண்டலத் தாபனாசாரியன் பாசைக்குத் தப்புவராத கண்டன் கண்டனாடு கொண்டு கொண்

12 டநாடு கொடாதான் தாலிக்குவேலி பட்டமானங் காத்தான் இடரு வார கோடாலி உபைய

13 ய சாமர உல்லாச நளினக்காறன் குறும்புகளடக்கி அடைக்கலங் காத்தவன் மனோன்

14 மணி கடாட்சன் யெம்மண்டலமும் கெசவேட்டை கொண்டருளிய ராசாதிராசன் ராசமா

15 ற்தாண்டன் ராசகுல தீபன் வீராதிவீரன் பரிக்கு நகுலன் வில்லுக்கு விசையன் பலத்துக்கு அபிமன் சொ

16 ல்லுக்கு அரிச்சந்திரன் பொறுமைக்கு தற்மர் கருணைக்கு ராமன் மதப் புலி நித்திய அன்னதான

17 சீலன் கல்லியாண குணாபிராமன் சகலகுண சம்பன்னன் படைக்குங் குடைக்கும் ஓடாத கண்டன்

18 தந தார தார பர தீர சோதரன் மனுநீதி மன்னன் மலைகலங் கினாலு மனங்கலங்காத கண்டன்

19 செம்பிவளநாடன் அனகன் அகளங்கன் அதிகவுபாயன் மேவலர்கள் கோளரி மேவலர்கள் வ

20 ணங்குமிரு தாவினான் தொண்டியந்துறை காவலன் வைகையை அடைச்சு ரெகுனாத

21 சமுத்திரமாக பெரிய கண்மாய் வுண்டு பண்ணினவன் குண்டாத்தை யடைச்சு ராச்

22 சியத்துக்கு ரெகுனாத காவேரியாக வுண்டு பண்ணினவன் ஆத்தில் பாச்சி கடலில்ப் ப

23 ராச்சி யேழையை ரட்சிக்குந் தயாபரன் சத்துரு வாதியளுக்கு இடியேறு பரிக்கு நகுலன் குடைக்கு

24 க் கற்னன் கனக பல்லக்கும் சிங்க முகமும் பஞ்சவர்ன்னப் பாவாடையும் நடநாடக சாலையு முண்டான தே

25 வன் இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகைமன்னர் சிங்கம் பெலத்துக்கு ஆதி சேஷன் அழகுக்கு வாலசீவகன் கா

26 மினி கந்தற்பன் கலிகோபன் பஞ்சபாணாவதாரன் பரதள விபாடன் தெட்சண சிங்காசனாதிபதி சேதுகாவல

27 ன் அசுபதி கெசபதி நரபதிக்கு மேலான சேதுபதி அனுமகேதனன் கெருட கேதனன் வியாக்கிரம கேதன

28 ன் மீன கேதனன் நெமலிகேதனன் குக்குட கேதனன் காவி கேதனன் செங்காவிக் குடையுமதின்

## இரண்டாம் பக்கம்

29 அதின்மேல் விருது சல்லியுமுண்டான தேவாதிதேவன் துகவூர்க்கூத்தத் தில் காத்தூரான குலே

30 ராத்துங்க சோழநல்லூர் கீன்பால் விரையாதகண்டனில் வினங்கியதிரன் துலாபுருஷாதி

31 சோடச மகாதரன் தீட்சாதுரந்தரான் இரணிய கெற்பயாசி ரவிகுல ரெகுநாதச் சேது

32 பதி காத்த தேவரவர்களுக்கு வம்சோத்தகரான ஸ்ரீமது மூத்துவிசைய இரகுனாதச் சேதுபதி

33 காத்த தேவரவர்கள் ராமேசுபரத்தில் ராமநாத சுவாமி சன்னிதியிலே காஸ்யப கோ

34 த்திரத்தில் ஆபஸ்தம்ப சூத்திரத்தில் யெச்சாசூத்யாபகரான தாதா சிவராம் புத்

35 திரண் ரெகுனாதக் குருக்களுக்கு சகிரண்யோதக தாரா பூர்வமாக பூதான சாஸநம் ப

36 ண்ணிக் குடுத்தபடி பூதான சாஸநமாவது கைக்கு நாட்டு வட்டகையில் பாலக்

37 குளத்துக்கு கீள்பாற் கெல்கையாவது வலமாவூர் கண்மாயில் துறை முகங் கொண்டா

38 ளுக்கு மேற்கு தென்பாற்கெல்கையாவது வலமாவூர்க் குளக்காலுக்கு வடக்கு மேல்பாற்

39 கெல்கையாவது கருங்குடிக்குளம் கோர்வைக்குக் கிளக்கு வடபாற் கெல்கையாவ

40 து ஊரி வயல்க்கண்மாய்க் கரைக்கும் ஷி வயலுக்கு எல்கைக் கல்லுக்கும் தெற்கு இப்பி

41 ரு நான்கெல்கைக்குள்பட்ட பாலக்குளம் சகிரண்யோதக தாரா பூறுவ மாக பூதாந

42 தாம்பிர சாஸநம் கட்டளையிட்டபடியினாலே இந்தப் பூமியில் வரு நஞ்சை புஞ்சை

43 மாவடை மரவடை யேந்தல் பிறவிடை திட்டுத்திடல் குடிபடை பள் பறை பாசிப் படுகை

44 கிணறு ஊறணி நிதி நிட்சேப செல தரு பாசாணாச்சின்னி யாகாமி சித்த சாத்யமென்று

45 சொல்லச் செய்த அஷ்டபோக ஜேஸ்வர்யங்களும் தானாதி விநிமய விக்ரயங்களுக்கும் யோ

46 க்கியமாகவும் சந்திராற்க புத்ர பவுத்திர பாரம்பரியமாக ஆண்டனு பவித்துக் கொள்ளக் கடவா

47 ராகவும் சொதெத்தாத்வி குணம் புண்ணியம் பரதெத்தாநு பாலணம் பரதெத்தாப ஹாரேண ஸ்வ

48 தெத்தாம் நிஷ்பலம் பவேத்: தாந பாலந யோர்மத்யே தாநஈத் ச்ரோயோநு பாலணம் தானாத் ஸ்வ

49 ர்க்க மவாப்நோதி பாலநாத் அச்சுதம் பதம்: இந்த தற்மத்தை புரோ விற்தியாக நடப்பிட்ச பேர்

50 கள் காசி சேதுவிலே கோடி கன்னிகாதான கோதானங்கள் பண்ணின பலனை அடைவரா

51 கவும் இந்தத் தற்மத்துக்கு அகிதம் பண்ணின பேர்கள் காசி சேதுவில் கோடி கோவை

52 வதை பண்ணின பாவத்தை அடைவாராகவும் இந்தப்படிக்குக் தாம்பிற சாசன

53 ம் எழுதினேன் வேலாயுதம் எழுத்து உ

# 86

# இராமேசுவரம் செப்பேடு

இருக்கும் இடம் : இரகுநாதக் குருக்கள், இராமேசுவரம்

அரசர் : முத்து ராமலிங்க விசைய ரகுநாதச் சேது பதி காத்த தேவர்

காலம் : 2—1-1764

**அமைப்பும் செய்தியும்** : இச்செப்பேட்டின் மூலப்படி கிடைக்க வில்லை.[1] இச்செப்பேடு நீளம் அதிகமான செப்பேடாக இருக்க வேண்டும். இச்செப்பேடு வழக்கமான கொடைச் செப்பேடாக இல்லா மல் அர்ச்சகர் ஒருவருக்கு அளிக்கப்பட்ட உரிமை பற்றிய செய்தியைக் கூறும் செப்பேடாக உள்ளது.

முத்துராமலிங்க சேதுபதி அரசர் ஒருமுறை இராமேசுவரத்திற்குத் தம் குடும்பத்துடன் சென்று வழிபட்டார். இராமேசுவரத்தில் பரம்பரை பரம்பரையாக வழிபாடியற்றிவரும் மரபைச் சேர்ந்தவரும் காசிப கோத் திரம் ஆபஸ்தம்ப சூத்திரம் யஜுர் வேதம் பயின்ற தாதா சிவராமபட் டர் மகனும் ஆன இரகுநாதக் குருக்கள் என்பவர் இராமேசுவரத் தலத் தில் உள்ள வயிரவ தீர்த்தம் முதல் தனுஷ்கோடி அனுப்பு தீர்த்தம்

1. *Tamil and Sanskrit Inscriptions No. 16, pp. 98-100.*

வரையிலும் எல்லாத் தீர்த்தங்களிலும் நன்கு முறைப்படி அரசர் குடும் பத்தைத் தீர்த்தமாடச் செய்து இராமநாதசுவாமி பர்வத்வர்த்தினி சன்னதியிலும், பிற தெய்வச் சன்னதிகளிலும் செய்த சிறப்பான வழி பாட்டு முறை அரசருக்கு மிகவும் மகிழ்ச்சி அளித்திருக்க வேண்டும்.

அதனால் அரசர் மகிழ்ந்து இனிமேல் தமக்கும், தம் அரசப் பரம் பரைக்கும் ரகுநாதக் குருக்களும், அவர் வழியினருமே தொடர்ந்து புரோகிதம் வழிபாடு முதலியன செய்விக்க வேண்டுமென்று இச்செப் பேட்டு மூலம் கட்டளையிட்டார்.

இராயசம் சொக்கு என்பவர் இச்செப்பேட்டை எழுதியுள்ளார்.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 சொத்திஸ்ரீ சாலிவாகன சகார்த்தம் 1685 இதின்மேல் செல்லாநின்ற சுபாநு நாம சம்மச்சரத்தில் உத்தராயணத்தில் யேமந்த ருதுவில் புஷ்ய மாசத்தில் அமரபட்சத்தில்

2 அமாவாசியும் சோமவாரமும் உத்திர நட்செத்திரமும் சுபயோக சுப கறணமும் பெற்ற சுபதினத்தில் ஸ்ரீராம தனுக்கோடி சேது மூலத்தில் ஸ்ரீமன் மகாமண்ட

3 லேசுபரன் அரியராயிரதழ விபாடன் பாசைக்குத் தப்புவராயிர கண் டன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு குடாதான் பாண்டி மண்டல தாபனாசாரியன்

4 சோழமண்டல பிரதிஷ்ட்டாபனா சாரியன் தொண்டமண்டல கண்டப்பிரசண்டன் பூறுவ தெட்சன பட்சிம உத்தர ஈழமுங் கொங்கும் யாழ்ப்பாணமும் அளித்துக் கெச

5 வேட்டை கொண்டருளிய ராசாதிராசன் ராசபரமேசுபரன் ராசமார்த் தாண்டன் ராசகெம்பீரன் பட்டமானங் காத்தான் துட்ட ராயிர கண்டன் புவனேகவீரன்

6 பூபாலன் கோபாலன் அஷ்ட்டதிக்கு மனோபயங்கரன் துஷ்ட்ட நிக்கி ரக சிஷ்ட்ட பரிபாலினன் வேதியர் காவலன் அரசராவண ராமன் அந்தம்பிற கண்டன் சாமித்

7 துரோகியள் முண்டன் பஞ்சவற்ன ராய ராகுத்தன் பனுக்குவார் கண்டன் வைகைவழநாடன்

8 வீரவெண்பாமாலை உபைய சாமரம் உல்லாசநவின அலங்காரன் இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகைமன்னர் சிங்கம் துரைராச சிங்கம் ஆத்துப்பாச்சி கடலில்பாச்சி மதப்புலி அடை

9 க்கலங்காத்தான் தாலிக்கு வேலி செம்பி வளநாடன் தொண்டியந் துறை காவலன் துர்க ரேவந்தன் அனுமகேதனன் கெருடகே தனன் புலிக்கொடிப் புரவலன் கொடைக்கு கற்ணன்

10 வில்லுக்கு விசையன் சொல்லுக் கரிச்சந்திரன் கருணாகிடாச்சன் விசைய லெட்சுமி காந்தன் பரத நாடகப் பிரசன்னன் கலை தெரியும் விற்பன்னன் வீரதண்டை சேமத்தலை விளங்குமிரு

11 தாளினான் தேவை நகராதிபன் சேது காவலன் சேறுமூல ரெட்சா துரந்தரன் ஸ்ரீராமநாத சுவாமி காரிய துரந்திரன் செங்கா விக் குடையான் அன்னசத்திர சோமன் ஸகல ஸாம்பிறாட்சிய

## இரண்டாம் பக்கம்

12 லெட்சுமி வாசனான துகவூர்க் கூத்தத்தில் குலோத்துங்க சோழ நல்லூர்க் கீழ்பால் விரையாத கண்டனிலிருக்கும் ஸ்ரீமன் இரணிய கெற்பயாசி ரவிகுல முத்துராமலிங்க விசைய ரெகு நாதச் சேதுபதி காத்த

13 தேவரவர்கள் இராமீசுவரம் ராமனாதசுவாமி பூசாபநாயணநான காசிபகோத்திரத்தில் ஆபஸ்தம்ப சூத்திரத்தில் யெசு சாகாத் திபகறான தாதா சிவராமபட்டர் புத்திரன் ரெகுனாத குருக் களுக்கு சகிரண்ணியோதக

14 தாராபூருவமாக தீர்த்தபுறோகிதத் தான சாதனபட்டையம் குடுத்த படி நாம் தீர்த்த சேது யாத்திரைக்கு ராசா குடும்பத்தோடே வந்ததில் வயிரவ தீர்த்தம் முதல் தனுக்கோடி அனுப்பு தீர்த் தம் வரைக்கும் தீர்த்த ஸ்தானங்களும்

15 ராமனாதசுவாமி பருவதவர்த்தனியம்மன் மற்ற சன்னதி சுவாமி தெரி சனங்களும் சாற்த முதலானதுகளுக்கும் தம்முடைய கையி னாலே பவித்திரம் வாங்கிக்கொண்டு யாத்திரை முழுவதும் நடப்பிவிச்சுக்கிகா

16 ண்டதினாலே இனிமேல் நம்மிட வம்மிசத்து ராசாக்கள் ஜீர்த்தயாத் திரைக்கு வந்தால் அவர்களுக்கு நீரும் உம்முட வம்மூசத்தா ரே புறோகிதம் பண்ணிவிச்சு அதில் வருகிற ஊதியம் முழு வதையும் நீரே புறோ

17 கிதக் காணியாட்சியாயி ஆதிசந்திராற்கஸ்தாயியாயி சந்ததிப் பிரவேச மாக புத்திர பவுத்திர பாரம்பரையாயி ஆண்டனுபனித்துக் கொள்ளக் கடவராகவும் இந்த தற்மத்தை நம்மிட வம்மிசத் தில் யாதாமொருத்தர்

18 பரிபாலனம் பண்ணின பேர்களுக்கு காசியிலேயும் ராம தனுஷ்கோடி யிலேயும் கோடி சிவலிங்கப் பிரதிஷ்ட்டையும் கோடி பிறமப் பிறதிஷ்டையும் பண்ணின சுகிர்தத்தை அடைவார்களாகவும் இந்த

19 தற்மத்தை அகிதம் பண்ணின பேர்கள் கெங்கைக்கரையிலேயும் சேதுக் கரையிலேயும் காராம் பசுவையும் தேவப் பிறாமணாளை யும் மாதா பிதா குருவையும் வதைபண்ணின தோஷத்தில்ப் போகக்கடவா

20 ராகவும் ஸ்வதத் தாத்வி குணம் புண்யம் பரதத்தாநு பாலநம் பரதத் தாப ஹாரேண ஸ்வதத்தம் நிஷ்பலம் பவேது: ஸ்ரீராமநாத சுவாமி சகாயம்

21 இந்த தற்ம சாதன பட்டயம் யெளுதினேன் ராயசம் சொக்கு கையெ ளுத்து

# 87

## நீலமழகியமங்கலம் செப்பேடு

இருக்கும் இடம் : தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை அருங்காட்சியகம், இராமநாதபுரம்

அரசர் : முத்து ராமலிங்க விசைய ரகுநாத சேது பதி காத்த தேவர்

காலம் : 25–7–1764

அளவு : 23 செ.மீ. × 19 செ.மீ.

**அமைப்பும் செய்தியும்** : இச்செப்பேட்டின் கைப்பிடி சற்றுச் சிதைந்துள்ளது.[1] கைப்பிடியில் உ குறியீடு உள்ளது. கிரந்த எழுத்துக்கள் குறைவான அளவிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளன.

செம்பி நாட்டில் தீயனூரிலிருக்கும் செந்திப் பெருமா பிள்ளை மகன் பிரதானி தாமோதரப் பிள்ளை அவர்களின் உபையமாகச் சேது பதி அரசர் இராமேசுவரம் இராமநாதசுவாமி பார்வத வர்த்தனி அம்மன் பூசை நெய்வேதனத்துக்கு இராமநாத பண்டாரம் அவர்களிடம் அஞ்சு கோட்டைப் பற்றில் நிலமழகிய மங்கலத்தைக் கொடையாக அளித்ததை இச்செப்பேடு கூறுகிறது.

---

1. *ARE, A. 29 of 1947.*

நிலமழகிய மங்கலம் கிராமமும், கண்மாயும், ஏந்தல், பிரவடை, நன்செய், புன்செய், திட்டு, திடல், மாவடை, மரவடை, வரி, மகமை, தோப்பு, துரவு, மரம், கிணறு, பாசி, குடிபடை, பள்ளு, பறை போன்ற அனைத்தையும் இராமநாதசுவாமிக்குக் கொடையாக எழுதிக்கொடுக் கப்பட்டது.

இந்தச் செப்பேட்டை எழுதியவர் வீரப்பண்டாரம் மகன் திருப் புல்லாணி என்பவர் ஆவார். அலுவலர்கள் அரசருக்காகக் கொடை யளிப்பர். ஆனால் இச்செப்பேட்டில் அரசர் அலுவலருக்காகக்கொடை கொடுத்திருப்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும். 'திருப்புல்லாணி' என்ற தலத்தின் பெயரையே அடியார்கள் தங்கள் பெயராகச் சூட்டிக் கொண்டதையும் காணுகின்றோம்.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலீவாகன சகாத்தம் 1686 யிதின்மே
2 மல் செல்லாநின்ற தாருண வருடம் ஆடி மீ்ம் 15வ தெட்சிணாயன
3 த்தில் சுக்கிலபட்சமும் புதவாரமும் சதுர்தெசியும் உத்திராட ந
4 ட்சத்திரமும் சுபநாம யோகமும் பாலவாகரணமும் பெற்ற
5 புண்ணிய தினத்தில் ஸ்ரீ மகாமண்டலேசுவரன் அரிய
6 ராய தளவிபாடன் பாசைக்கி தப்புவராய கண்டன் கண்
7 டனாடு கொண்டு கொண்டநாடு குடாதான் பாண்டிமண்ட
8 ல தாபநாசாரியன் சோளமண்டல பிரதிட்டாபனாசாரிய
9 ன் தொண்டமண்டல சண்டபிறசண்டன் பூர்வ தெட்சண பச்சி
10 ம உத்திரமும் ஈளமும் கொங்கு யாண்ப்பாணமும் எம்மண்ட
11 லமும் அளித்து கெசவேட்டை யாண்டருளிய ராசாதிராசள் ர
12 ாசபரமேசுரன் ராசமார்த்தாண்டன் ராசகெம்பீரன் வட்ட ம
13 ானம் காத்தான் துட்டராயிர கண்டன் புவனேக வீரன் பூபா

14 லன் கோபாலன் அட்டதிக்கு மனோபயங்கரன் துட்ட நிக்கிரக சி
15 ட்ட பரிபாலனன் வேதியர் காவலன் அரசராவண ராமன் அந்த
16 ம்பிற கண்டன் சாமித்துரோகியள் முண்டன் பஞ்சவர்ண ராய
17 ராவுத்தன் பனுக்குவார் கண்டன் வைகை வளநாடன் கொட்
18 டமடக்கி வையாளி னாறாயணன் இவுளி பாவடி மிதித்தேரு
19 வார் கண்டன் வீரவெண்பாமாலை உபைய சாமரம் உல்லாச
20 நளிநன் அலங்காரன் இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகைம
21 ன்னர்சிங்கம் மதுரைராய சிங்கம் ஆற்றுபாச்சி கடலிபாச்சி
22 மதப்புலி அடைக்கலங் காத்தான் தாலிக்கிவேலி செம்பி
23 வளநாடன் தொண்டியன்துரை காவலன் துரங்க ரே
24 வெந்தன் அனும கேதனன் கெருட கேதனன் புலிக்கொடிப் பு
25 ரவலன் குடைக்கி கற்ணன் வில்லுக்கு விசையன் சொல்லு
26 க்கு அரிச்சந்திரன் கறுணா கடாச்சள் விசைய லெட்சுமி காந்தன்
27 பரதநாடகப் பிரவீணன் கலைதெரியும் வீர்ப்பன்னன் வீரதண்
28 டை சேமத்தலை விளங்குறிரு தாளினான் தேவை நகராதிபன் சேது
29 காவலன் சேதுமூலா ரெட்ச துரந்தரன் ஸ்ரீ ராமனாத சுவாமி
30 காரிய துரந்தரன் சிவபூசா துரந்தரன் குருபூசை மரவாத கீ
31 ர்த்திபன் செங்காவிக் குடையான் அன்னசத்திர சோமன்
32 சகல சாம்பிராச்சிய லெட்சுமி விலாசன் துகவூர்க் கூத்ததில்
33 காத்தூரான குலோத்துங்க சோளநல்லூர் கீழ்பால் வி

## இரண்டாம் பக்கம்

34 ரையாத கண்டனிலிருக்கும் இரணிய கெர்ப்பயாசி
35 முத்துராமலிங்க விசைய ரகுனாத சேதுபதி காத்த தே
36 தவர்கள் செம்பி னாட்டில் தியனூலிரிருக்கும் செந்திப்

37 பெருமாள் பிள்ளை புத்திரன் பிறதானி தாமோதரம் பிள்ளை

38 உபையமாக ஷெ கட்டளை இராமனாத சுவாமி பறுவதவ

39 ர்த்தனி அம்மன்பூசை ணெய்வேதனத்துக்கு இராமனாத ப

40 ண்டாரமவர்கள் பாரிசம் தர்மசாதன தாம்புர சாதன ப

41 ட்டையம் யெளுதிக் குடுத்தபடி அஞ்சு கோட்டை பத்தில்

42 நிலமளகியமங்களம் கிராமமும் ஷெ கண்மாயும் ஏந்தல்

43 ப் பிரவடை இன்னாங்கெல்கைக்குள்ப்பட்ட நஞ்சை புஞ்

44 சை நிலமும் திட்டு திடல் மாவடை மரவடை வரி மகமை

45 தோப்புத் துரவு மேல்நோக்கிய மரம் கீள்நோக்கிய கிண

46 ர்நீரும் பாசியும் குடிபடை பள்ளு பறை நிதி நிட்சேப செ

47 லதரு பாசாணகாமியமென்று சொல்லப்பட்ட அட்டபோக தே

48 தச சுவாமியங்களும் இராமனாத சுவாமிக்கி தான சாதனம

49 ாக பட்டையம் எழுதிக் குடுத்தபடியினாலே ஆசந்திராக்கம

50 ாக அனுபவிச்சிகொள்வராகவும் இந்த தர்ம்மத்தை யா

51 தாமொருதர் பரிபாலனம் பண்ணின பேர்கள் கா

52 சியிலேயும் சேதுவிலேயும் கோடி சிவலிங்க பிரதிட்

53 டையும் கோடி பிறும பிரதிட்டையும் பண்ணின பலத்

54 தை அடைவராகவும் இந்த தர்மத்துக்கு அகிதம் பண்ணின

55 பேர்கள் காசியிலேயும் சேதுவிலேயும் கோடி பிறு

56 மகத்தியும் சேதுவிலேயும் கராம்பசுவை கொன்ற தோச

57 த்திலேயும் போவார்கள் இந்த தாம்புர சாதனம் எளுதின

58 து வீரப்பண்டார மகன் திருப்புல்லாணி உ

59 உ ஸ்ரீராமநாதசுவாமி சகாயம்

# 88

## அனிச்சகுடிச் செப்பேடு

இருக்கும் இடம் : அரசு அருங்காட்சியகம், எழும்பூர், சென்னை

அரசர் : முத்துராமலிங்க விசைய ரகுநாத சேதுபதி காத்த தேவர்

காலம் : 3—9—1768

**அமைப்பும் செய்தியும் :** இராமநாதபுரம் வட்டத்தில் மண்டபத்திற்கு அருகில் வேதாளை என்ற ஊர் உள்ளது. இங்கு வேதாள தீர்த்தம் என்ற புனித இடம் உள்ளது. சுதர்சனன் என்ற கந்தர்வன் இங்கு நீராடிச் சாப விமோசனம் பெற்றான் என்பது ஐதீகம். இராமேசுவரம் வருவோர் அங்கு திருக்கோயில் வளாகத்தில் உள்ள இருபத்திரண்டு புனிதத் தீர்த்தங்களில் நீராடுவதுடன் அருகில் உள்ள மண்டபம், வேதாளை, திருப்புல்லாணி, தேவிபட்டினம், திருப்பாலைக்குடி, உப்பூர் ஆகிய இடங்களில் உள்ள 64 தீர்த்தங்களிலும் நீராடுதல் மரபு .

வேதாளை கிராமத்தில் அன்னதான மடம், தண்ணீர்ப்பந்தல், அக்கிரகாரம் ஆகியவை இருந்தன. அத்தர்மங்கள் தொடர்ந்து நடை பெறவேண்டி சேதுபதி அரசர் ஸ்ரீவத்ச கோத்திரம் ஆபஸ்தம்ப சூத்ரம் யஜுர்வேதம் வல்ல சீனிவாச அய்யர் மகன் ரெங்கநாதபுரம் வெங்கிட நாராயண அய்யங்காருக்கு அனிச்சகுடிக் கிராமத்தை மானியமாக

வழங்கிய செய்தி இச்செப்பேட்டில் குறிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே அன்னதானமடம், தண்ணீர்ப்பந்தலை முத்து சாத்தக்குட்டிசெட்டி மகன் முத்துக்கூரிசெட்டி என்பவர் நிறுவியிருந்த செய்தியும் செப் பேட்டில் கூறப்பட்டுள்ளது.

மதுரை சுப்பையபட்ட நாலங்கராயன் மகன் உத்தண்ட வைரவன் இச்செய்தியை எழுதியுள்ளார்.

அனிச்சகுடியின் எல்லைகள்: வடக்கு எல்லை இராசசிங்க மங் கலம் நாட்டார் காலில் முன் ஆட்டங்குடிக்கால், அரியாங்கோட்டை எல்லை; தெற்கு எல்லை புலியாத்திக் கண்மாய் மூலக்கரைக்கும் நேர் கிழக்கான புளியமரம்; மேற்கு எல்லை நகரத்துக் கோட்டையேந்தல் மூலக்கரையில் பறையன் உம்பளத் தோட்டம்; நகரத்து நாவிதன் உம் பளத்தோட்டம்; கிழக்கு எல்லைஆட்டாங்குடிக்கால்.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1690 இதின்மேல் செல்லாநின்ற வி

2 ரோதி வருடம் ஆவணி மாதம் 21ந் தேதி பானுவாசரம் திருவோண நட்சத்திரமும் பூர்வபட்ச

3 த்து திரியோதசியும் சோபநாமயோகமும் கபிலவாகரணமும் பெற்ற சுபதினத்

4 தில் ஸ்ரீமன் மகாமண்டலேசுவரன் தேவை நகரர்திபன் சேதுமூல ரட்சா துரந்தரன்

5 அரியாயிரதள விபாடன் பாசைக்குத் தப்புவார் கண்டன் கண்டநாடு கொண்டு கொண்ட

6 நாடு கொடாதான் பாண்டியமண்டல ஸ்தாபனாச்சாரியன் சோழ மண்டல பிரதிஷ்டாப

7 னாச்சாரியன் தொண்டைமண்டல சண்டப்பிரசண்டன் ஈழமும் கொங் கும் யாழ்ப்பாண

8 தேசமும் எம்மண்டலமும் கெஜவேட்டை கண்டருளிய ராஜாதிராஜன் ராஜ பரமே

9 ஸ்வரன் ராஜ மார்த்தாண்டன் ராஜ கெம்பீரன் ராஜகுல திலகன் இரவிகுல சேகரன் கொ

10 டைக்கு கர்ணன் அந்தம்பிர் கண்டன் சாடிக்கார கண்டன் சாமித்து ரோகியன் மி

11 ண்டன் துஷ்டரில் துஷ்டன் துஷ்டர் கொட்டமடக்கி இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகைமன்

12 னர் சிங்கம் ஆத்துப் பாய்ச்சி கடலில் பாய்ச்சி மதப்புலி அடைக்கலங் காத்தான் தாலிக்குவேலி சத்

13 துராதியள் மிண்டன் வன்னியராட்டம் தவிழ்த்தான் தொண்டியந் துறைக் காவலன் தூர்

14 கரேபந்தன் அனுமகேதனன் கருடகேதனன் சிம்மகேதனன் கொடைக் குக் கர்ணன்

15 பொறுமைக்கு தர்மன் மல்லுக்கு வீமன் வில்லுக்கு விசையன் பகைக்கு நகுலன் அறி

16 வுக்கு அகத்தியன் சத்திய அரிச்சந்திரன் வீர வெண்பாமாலை உபய சாமரன் உல்லாச

17 சல்லாபன் சங்கீத சாகித்திய வித்யா வினோதன் திலதநுதல் மடமா தர் மடல் எழுத வரு

18 சுமுகன் விசையலட்சுமி கடாட்சன் அரசராவண ராமன் அடியார் வேளைக்காரன் வீர

19 தண்டை சேமத்தலை விளங்குமிரு தாவினான் துஷ்ட நிக்கிரன் சிட்டர் பரிபாலனம் துலுக்கர்தள விபா

20 டன் துலுக்கர் மோகம் தவிர்த்தான் ஒட்டியர்தள விபாடன் ஒட்டியர் மோகம் தவிழ்த்தான்

21 பரதள விபாடன் மலை கலங்கினுங் மனங்கலங்காதான் அன்னசத்திர சோமன் பூலோக

22 தேவேந்திரன் சிவபூஜா துரந்தரன் அநேக விர்ம பிரதிஷ்டாபகாரன் செம்பிவளநா

23 டன் செங்காவிக் கொடையும் அதன்மேல் வீருது வெண்கவரி பெற்ற வன் சகல சாம்பி

24 ராச்சிய லெட்சுமி நிவாசன் இராமநாத சுவாமி காரிய துரந்தரன் துகவூர் கூத்தத்தி

25 ல் காத்தூரான குலோத்துங்க சோழநல்லூர் கீழ்பால் விரையாத கண்டனில் விள

26 ங்கிய துலாபுருஷ தானாதி சோடச மகாதான துரத்தான் இரண்டய கெற்பயாசி இரவி

27 குல சேகர ரெகுநாத சேதுபதி காத்தத்தேவர் வங்கிசத்துகாரரான

28 முத்துராமலிங்க விசைய ரெகுநாத சேதுபதி காத்த தேவர் அவர் கள் சேதுமார்க்க

29 கத்தில் வேதாள தீர்த்தத்தில் பூர்வ பாகத்தில் முத்து சாத்தக்குட்டி செட்டி குமாரன் முத்து

30 கூரி செட்டி தர்மத்துக்கு ஸ்ரீவத்ஸ கோத்திரத்தில் ஆபஸ்தம்ப சூத்தி ரத்தில் யஜுர் பிர

## இரண்டாம் பக்கம்

31 வாயிர வங்கிசகராய் ரெங்கநாதபுரத்தில் இருக்கும் ஸ்ரீநிவாச அய்யன் புத்திரன் வெங்

32 ங்கிட நாராயணஐயன் கையில் தர்ம பத்தில் அன்னதான தண்ணீர் பந்தல் அ

33 க்கிரகாரத்திற்குமாக தானம் பண்ணிவிச்சு கொடுத்த சேத்திரமாவது குறிச்சி

34 க்காட்டு வட்டகையில் தர்மத்துக்குத் தானம் பண்ணின கிராமமாவது அனிச்சகுடியில்

35 ஒரூர் பட்ட இதற்கு எல்கையாவது இராஜசிங்க மங்கலம் நாட்டார் காவில் முன் ஆ

36 ட்டங்குடி காலுக்கும் அரியாங்கோட்டை எல்கைக்குத் தெற்கு புலி யாத்தி

37 கண்மாய் மூலக்கரைக்கும் நேர் கிழக்கான புளியமரத்துக்கு வடக்கு மேல்

38 பாற்கெல்கையாவது நகரத்து கோட்டையேந்தல் மூலக்கரையில் பறை யன்

39 உம்பளத் தோட்டத்திற்கும் கிழக்கு நகரத்து நாவிதன் உப்பளத் தோட் டத்துக்

40 கும் கிழக்கு கீழ்பார்க்கெல்கையாவது ஆட்டாங்குடிக்காலுக்கு மேற்கு இந்நான்

41 கெல்கைக்குட்பட்ட நஞ்சை புஞ்சை மாவிடை மரவடை திட்டு திடல் கீழ்நோக்கி

42 ய கிணறு மேல்நோக்கிய மரம் மச்சாதி முதலாய பிராப்த்தியும் தர் மத்திற்கு தான பூ

43 ர்வமாக இராமசேது தனுக்கோடிக்கரையில் தானபூர்வமாக பண்ணி விச்சுக்

44 கொடுத்தபடியினாலே ஆச்சந்திரர்கள்வரைக்கும் புத்திர பௌத்திர பாரம்பரியமா

45 க சந்திராதித்தியவரை சந்ததிப் பிரவேசம் ஆண்டுஅனுபவித்துக் கொள்ளக்கடவா

46 ராகவும் இந்த தர்மத்தை பரிபாலனம் பண்ணின பேர்கள் காசியிலேயும் சேதுவிலே

47 யும் தனுஷ்கோடிக் கரையிலேயும் கோடி கோதானமும் கோடி பிரம்ம பிரதிஷ்டை கோடி சி

48 வலிங்க பிரதிஷ்டை கோடி அஷ்வமேத யாகமும் பண்ணின புண்ணி யம் பெறு

49 வாராகவும் இந்த தர்மத்துக்கும் அகிதம் நினைத்தபேர்கள் காசியிலே யும் சேதுவிலே

50 யும் தனுஷ்கோடியிலும் கோடி கோகத்தி கோடி பிரம்மகத்தியும் பண்ணின பாவத்தை அனுபவிப்பார்களாகவும்

51 இந்தபடிக்கு மதுரையில் இருக்கும் சுப்பைய பட்ட நாலங்கராயன் குமாரன் உத்தண்ட வைர்வன் அஸ்த லிகிதம்

# 89

# இராமேசுவரம் செப்பேடு

இருக்கும் இடம் : அரசு அருங்காட்சியகம், எழும்பூர், சென்னை

அரசர் : —

செப்பேடு அளித்தவர் : இராமேசுவரம்கோயில் இராமநாத பண்டாரம்

காலம் : 29—8—1772

**அமைப்பும் செய்தியும்** : இராமேசுவரம் திருக்கோயில் மடாதிபதி இராமநாத பண்டாரத்திற்கும் அந்தக் கோயிலின் பூஜகர், குருக்கள், சபையார், நயினாக்கள், ஸ்தானிகர் ஆகிய மகாஜனங்கள் 512 பேர் களுக்கும் இடையில் ஏற்பட்ட உடன்பாட்டை இந்தச் செப்பேடு விளக்குகிறது.[1]

தென்பகுதிக்கு நவாப்பால் நியமனம் செய்யப்பட்ட வாலாஜா முகமது அலிக்கு கப்பம் கட்டாத காரணத்தால் இளைஞரான அரசர் முத்துராமலிங்க சேதுபதியையும் அவர் குடும்பத்தாரையும் திருச்சி யில் சிறைவைத்தனர். இராமேசுவரம் கோயிலின் நிர்வாகம் தடைப் பட்டது. கோயில் மகாஜனங்கள் சென்னை சென்று நவாப்பிடம் முறை

1. *ARE, A. 14 of 1911.*

யிட்டு அவர் அனுமதிபெற்றுக் கோயில் நடைமுறைகளைக் கவனிக்க ஏற்பாடு செய்தனர். இராமநாத பண்டாரம் முக்கியப் பொறுப்பேற்றுக் கொண்டார். ஈசுவர பட்டர் என்பவர் சொத்துக்களைப் பாதுகாத்ததுடன் நாயக்கர் கட்டளைகளையும் மேற்பார்வை செய்து வந்தார். பல்வேறு கட்டளைகளும் கோயில் உடைமைகள் பாதுகாப்பு விபரங்களும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

மகாஜனங்கள் செய்யும் பணிகட்கு ஊதியமும், மரியாதைகளும் பெற்றனர். நடுவர் ஒருவர் முன்னிலையில் இந்த ஒப்பந்தத்தைச் செய்து கொண்டனர். இராமநாதபண்டாரம் 'சேது' என்ற அடைமொழிச் சிறப்பைப் பெற்றார். பிச்சைக்கட்டளை மடத்தில் பண்டாரம் இருந்து வந்தார். சேது நாட்டின் நெருக்கடியான காலத்தில் கோயிலை நிர்வகித்த முறையை இச்செப்பேடு தெரிவிக்கிறது. அங்கப்ப ஆசாரி என்பவர் இந்தச் சாசனத்தை எழுதியுள்ளார்.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 நந்தன வருசம் ஆவணி மாசம் 17தேதி இராமீசுரத்திலிருக்கும் றாம
நாதசு

2 வாமி கோவில் பூசகாள் குருக்கள் சபையார் நயினா ஸ்தானிகாள் மு

3 தலான ஆரியாமகாஜங்கள் 512 யேர்களுக்கும் தேவர் கட்டளை

4 ரெகுநாத குருக்கள் உடையத்தேவர் கட்டளை பெரிய நயினானும் நா

5 த அய்யர் உடையவர் கட்டளை வாமதேவ குருக்கள் நாயக்கர் கட்ட

6 ளை ஈசுரபட்டர் பிரதானி கட்டளை ஆதிநாராயணபிள்ளை முதலிய
பெ

7 ரியதனக்காரருக்கும் பிச்சக்கட்டளை இராமநாதபண்டாரம் யெளுதிக்
குடு

8 த்த உடன்படிக்கை சாதனம் அசரத்து நவாபு அவர்கள் தீவாணத்தி
சே

9 துபதி ஆண்டவர்களை பிடித்து கொண்டுபோயி திருச்சுனாப்பளி

10 யில் வைத்துக்கொண்டு சீமை வுரோட்டுக்கு கட்டிக்கொண்டதிநாலே

11 கோவில் பூசைகளும் கட்டளைகளும் நடவாமல் போனதால் நீங்கள்

12 யெல்லோரும் ஒன்றுசேர்ந்து சென்னபட்டனம் போயி ரா-ரா-இவா

13 ன் ராயரவர்களையும் அசரது நவாபு அவர்களையும். கண்டு பேட்டி செயி

14 வித்து கோவில் கட்டளை கிறாமங்களை யென்னிடம் சாரிசெய்ய வேணு

15 மென்று சேதி அட்டவணை மூலம் தெரியப்படுத்திக் கொண்டதுநால் எங்

16 கள் நினைப்புபடி பென்னிடம் கிராமங்களை விடும்படி பரவான்ாலும் மகா

17 சனங்களுக்கு கவுல் நாமாவும் குடுத்திருப்பதால் யெஸ்ர் கட்டளை கிராம

18 வரும்படிகளையும் இன்னம் வரக்கூடிய நிலங்களில் வரும்படியை

19 யும் மற்றயெல்லா வரும்படியும் நான் ஒரே மொத்தமாக கசானா

20 களஞ்சியம் சேர்ப்பிவித்தால் சப்திக்ஞ முன் திருவாபரண முதலியது கருவூ

21 லம் தான கணக்குப்படிக்குள்ள சொத்துக்கள் தானிகாளிடமும் யாத்தி

22 ரை சனங்கள் றாசாக்களாலும் சுவாமிக்கி குடுக்கப்பட்டப் பாத்தரம் பட்

23 டு பரிவட்டம் வாகனம் விறுது ஆனை குதிரை பசுமாடு முதலியதும் கோ

24 வில் கணக்கு சொக்கப்ப றாசசேகரறாசர் கட்டளை கல்வெட்டுப் படியும் விசு

25 வநாத நாயக்கர் வீரப்பநாயக்கர் அவர்கள் கட்டளைப்படி கெங்கை காவ

26 டி 5-3 5-2 பங்கில் சுவாமி பங்கையும் உண்டியல் காணிக்

27 கையும் முத்திரை கணக்கு தாக்கல்படிக்கு உள்ளதையும் வாயி மூப்புக் காணி

28 யர்ச்சகரான நயினார் தானிகரும் வைத்து பராமரித்தும் சுவாமி நை

29 வேத்தியம் முதலான கையிங்கிரியம் செய்யும் மிறாசுதார்களை வேலை தான்

30 வன்னியில் கண்டித்தும் கோவில் சொத்துக்கள் யிருப்பிடங்களில் தா

31 னிகாள் முத்திரை போட்டுவந்தபடிக்கும் கட்டளைக்காரர்களால் கொடுக்கும்

32 சாமன்களை ஆரிய மகாசனங்கள் மிராசுதார் நயினா ஸ்த்தனி

33 காள் முன்னுக்கு வாங்கி சுவாமிக்கு உபயோகப்படுத்தி கட்டளை கணக்கி

34 ல் யேர்ப்பட்ட சுவந்திரம் ஊதியங்களை பெற்றுக்கொண்டும் பரி வட்டம்

35 கட்டி மரியாதை செய்துவந்ததில் கட்டளை சுவந்திரம் ஊதியம்

36 ஒண்ணாகிவிட்டதால் நயினா தானிகாள் யெல்லாரும் இருந்து

37 யேர்படுத்திய கணக்குப்படி வருஷம் 1க்கு திருக்கை மருக்கை வராக

38 ன் பொன் 1000 பொன்னும் சுவந்திரம் முதலியதும் பெற்றுக்கொள்ளவே

39 ணுமென்று ம ரா-ரா- நாயக்கர் கட்டளை கோவில் காரியம் ஈ

40 சுரபட்டர் இடத்திலிருந்த சொத்துக்களும் கிராமங்களும் யென்

41 னிடம் சேர்ந்துவிட்டதால் அவர்களை மாமூல்படி கோயில் காரி

42 யம் நயினா ஸ்தானிகள் கூடயிருந்து பார்த்தும் பெரிய அறை

43 யில் சகல அபிஷேக சாமான்களையும் காவடிகளையும் பார்வையி

44 ட்டு அபிஷேகம் செய்ய சீட்டுக்குடுக்கவேணுமென்றும் சாணிக்

45 கை உண்டியல் முதலானதும் பெரியஅறை மிராஸ் சேது

46 ப்பண்டாரம் உத்தரவாதத்தில் இருக்கும் அறையும் மத்த சொத்து

47 க்கள் இருக்கும் அறைகளிலும் மத்த முத்திரையுடன் ஈசுபர பட்டர்

48 கோவில் முத்திரையும் போட்டுவர வேணுமென்றும் ஈசுர

49 பட்டர் கட்டளைக்கி யேர்பட்டிருந்த வருஷம் 1க்கு பொன் 120 பணம் 8ம் 6

50 சாதமும் பெத்துக்கொள்ள வேணும்மென்றும் பிரதானி க

51 ட்டளை ஆதிநாராயணபிள்ளை பாத்தியத்திலிருந்த கட்டளைகளையும்

52 சொத்துக்களையும் சேர்த்து விட்டதால் அந்தக் கட்டளைகளில் யே

53 ர்ப்பட்ட வருஷம் 1க்கு பொன் 100 பொன்னும் நாள் ஒன்றுக்கு நால ரை சாதமும் அவர்கள்

54 பெத்துக்கொண்டு கோவில் சகல வரவு செலவு கணக்குகளும்

55 மேல்ப்பாத்து யென்னுடைய மடத்துக்கு சொந்த தஸ்தரமும் காப்பா

56 த்தி வரவேணும்மென்றும் நடுவர் முன்னிலையில் நீங்கள் சொன்

57 னதை நானும் ஒப்புக்கொண்டு இந்த சாசனம் கொடுக்க இசவு கு

58 டுத்தபின் யெனக்கு கோவில் விசாரணை தர்மகர்த்தா யென்ற பேரு

59 ம் குருசன்னியதாவமுன்னுக்கு சன்னாசி முத்திரையும் குடுத்து

60 ஆறுகால் பீடத்தில் வைத்து பரிவட்டம்கட்டி சேதுராமனாத பண

61 டாரம் என்ற பேறும் ராமநாதந் யென்று ஒப்பத்தேடும் கு

62 டுத்தும் ஆதியில் பிச்சைக்கட்டளை மடத்தில் யென்னையிருந்து காரி

63 யம் பார்க்கவும் மடம் சிலவுக்கு வடிச்ச 12 சாதமும் கோவில்

64 கிராமத்தில் நாலரை நிலமும் அனுபவித்துக்கொள்ளுபடி செய்திருப்ப

65 தால் சுவாமி காரியம் தவராமல் பாத்துவரக்கடவேனாகவும் தவ

66 றினால் நடுவர்களும் நீங்களும் செய்யும் பஞ்சாயத்துக்குள்ளாகி

## இரண்டாம் பக்கம்

67 யிருப்பேனாகவும் இந்தப்படிக்கு நானும் நீங்களும் எங்கள்

68 சந்ததியாரும் யெனக்குக்குப்பின் யென்னைப்போல் நேருமுகமாயி வ

69 ரப்பட்ட தர்மகர்த்தா பண்டாரங்களும் வளிவளி பரம்பரை

70 யாக நடந்து கொண்டு வரக்கடவராகவும் உ ராமநாதந்

71 இதற்கு அறியும் சாச்சி ஆவத்தா

72 ரண பிள்ளை பெரியமாவன் ராமலிங்கம் செட்டி இந்த

73 சாதனம் யெளுதினது அங்கப்ப ஆசாரி அச்சரம்

# 90

# அனுமனேரிச் செப்பேடு

அரசர் : முத்து ராமலிங்க விசைய ரகுநாத சேதுபதி காத்த தேவர்

காலம் : 15—11—1781

அளவு : 29 செ.மீ. × 16.5 செ.மீ.

**அமைப்பும் செய்தியும்** : கைப்பிடியில் சிறு துளையுடன் இச்செப் பேடு அமைந்துள்ளது. அனுமன், கெருடன், சிங்கம், மயில், சேவல் போன்ற கொடிகள் சேதுபதி அரசர்கட்கு உண்டு என்று இச்செப்பேடு கூறுகிறது. ஸ்ரீராமநாத ஸ்வாமி ஸஹாயம் என்று தெலுங்கில் எழுதி யிருப்பதுடன் தான சாசனத்தைக் காப்பது பற்றிய மூன்று வடமொழிச் சுலோகங்கள் கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளன.[1]

அமாவாசைப் புண்ணிய நாளில் அனுமனேரிக்கு முத்துராமலிங்க புரம் என்று தன் பெயரை இட்டுக் கற்றறிந்த பத்து அந்தணர்கட்குக் கொடையாக சேதுபதி கொடுத்தார். அவர்கள் பெயர்கள் வருமாறு :

---

1 இதன் மூலப்படி கிடைக்கவில்லை. இராமநாதபுரம் டாக்டர் எஸ். எம். கமால் தமிழ்நாடு அரசு தொல்பொருள்துறை அலுவலர் திரு. இரா. ப. கருணானந்தம் ஆகியோர், அளித்த நகலை அடிப்படையாக வைத்து வெளியிடப்படுகிறது.

1) குளத்தூரான் மகன் சுப்பையன்

2) கஸ்தூரிஅய்யன் மகன் இலட்சுமி நாராயணய்யன்

3) இலட்சுமணய்யன் மகன் சின்னச் சுப்பையன்

4) அய்யாவய்யன் மகன் திருவேங்கிட நாதன்

5) வீரராகவய்யன் மகன் சுப்பய்யன்

6) ஐயங்கார் மகன் சீனிவாசன்

7) அழகரய்யன் மகன் முத்தையய்யன்

8) சேனாபதிசாத்திரியார் மகன் வேதாந்தமய்யன்

9) நரசிங்க அய்யன் மகன் இராமலிங்கய்யன்

10) நாரணவாத்தியார் மகன் வேங்கிடசுப்பன்

இவர்கள் பல்வேறு கோத்திரத்தையும், சூத்திரத்தையும் சேர்ந்த வர்கள்.

இவர்களுக்குப் பொதுவாக அளிக்கப்பட்ட அனுமனேரி நிலத் திற்குக் கீழ்வருமாறு நான்கெல்லைகள் கூறப்பட்டுள்ளன. அளிக்கப் பெற்ற நிலம் பெரிய பரப்பு ஆதலின் ஒவ்வொரு எல்லையிலும் உள்ள பல பகுதிகள் கூறப்பட்டுள்ளன.

கிழக்கு எல்லை: பாதைக்குடியிருப்புக்குக் கீழ்புறம் ரகுநாதக் காவேரி உள்வாய்க் காடுவெட்டிப் புன்செய், கோரைக்குளம் காடு வெட்டிப் புன்செய், கோரைக்குளம் கொத்துக்கு எல்லைப் புன்செய், மல்லல் திருமேனிக் குடும்பன் புனசெய்.

தெற்கு எல்லை: குப்பைச்செய் வெங்காயக் குண்டு, பொடுகட்டி ஊரணி, தாளியாரேந்தல் விழாவடிப் புன்செய்.

மேற்கு எல்லை: தாளியாரேந்தல் கீழ்க்கரை அருளப்பன் புன் செய், தாளியாரேந்தல் வடகால், குண்டான் ஊரணி, வளநாட்டுப் பறையன் புன்செய், வளநாட்டு முத்தப்பன் புஞ்சைக்கு மறிச்சுக்கட்டி உள்வடக்கு கோடிக்குளம் விளங்கான் புன்செய், கோடிக்குளம் சேரிக் குடும்பன் பொட்டல் புன்செய், கோடிக்குளம் பத்தன் புன்செய்.

வடக்கு எல்லை: கட்டுக்கரை, கோடிக்குளம் பள்ளர்சேரி, நெடுங்கண்ணிக்குக் கீழ்ப்பிலை இலுப்பையடி ஊரணி, கண்வாய்த் தென்கரை.

ஒரு வாய்க்காலுக்கு ரகுநாதக் காவேரி என்று காவிரியோடு சேதுபதியின் பெயரையும் சேர்த்து வைத்திருப்பது நோக்கத்தக்கது. இவ்வாய்க்கால் குண்டாறு எனப்படும் ஆற்றிலிருந்து வருவது. காட்டை அழித்து நிலங்களை உருவாக்கியுள்ளது காடுவெட்டி என்பது மூலம் தெரிகிறது. ஏரி, குளம், ஊரணி, ஏந்தல், கண்மாய் என்பன பல்வேறு தன்மைகளையுடைய நீர் நிலைகட்குப் பெயர்களாகும். ஒவ்வொன்றுக்கும் வேறுபாடு உண்டு. மறிச்சுக்கட்டி என்பது ஒரு நீர்நிலைக்கு அழகான காரணப்பெயர். கண்ணி என்பது சிறு வாய்க்காலையும், குண்டு என்பது சிறுபகுதி நிலத்தையும், பிலை என்பது எல்லைகளையும் குறிக்கும் சொற்களாகும்.

இச்செப்பேடு வாசகத்தை ஓலையில் எழுதியவர் பொக்கிசக் கணக்கு ஆதிநாராயணபிள்ளை மகன் தளவாத்தான். செப்பேட்டில் பொறித்தவர் முத்துப்பத்தர் மகன் வேலாயுதம்.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாத்தம் 1702 கலியப்தம் 4882 இதன்மேல்

2 ச் செல்லாநின்ற பிலவநாம ஸம்வத்ஸரத்தில் தெக்ஷிணாயநத்தில் சரத்ரிதுவில்

3 காத்திகை மாசத்தில் அசுபதி [நக்ஷத்திரத்தில் சுபயோக சுபகரணமும் பெற்ற சு

4 பதினத்தில் தேவை நகராதியன் சேதுமூலா துரந்தரன் ராமனாத சுவாமி க

5 ாரிய துரந்தரன் பரராச இங்கம் பரராசசேகரன் பரராச கெற்ப நிறபே

6 தனன் சொரிமுத்து வன்னியன் அனுமசேதனன் கெருட கேதனன் சிங்கம்

7 கேதனன் மயூரகேதனன் குக்கிடகேதனன் செங்காவிக் குடைமேல் க

8 வரிமயிர் வைச்ச விருதுடைய ராசாதி ராசாதிராசன் ராச மாற்தாண்

9 டன் ராசகுலதிலகன் சங்கீத சர்யித்திய வித்தியாவினோதன் சோளம

10 ண்டல பிறதிஷ்டாபனாசாரியன் தொண்டமண்டல சண்டப்பிற சண்டன் பா

11 ண்டிமண்டல ஸ்தாபனாசாரியன் ஈளமுங் கொங்கும் யாள்ப்பான ராயன் பட்டன

12 மும் கெசவேட்டை கண்டருளிய ராசாதிராசன் திலதநுதல் மடவார்கள் மடலெ

13 ழுது வருசுமுகன் பதினெண் பாசை வீணாப்பிறவீனன் அகளங்கள் அனந்தக

14 லியான குணாபிராமன் அபிமானங்காத்தவன் மனுநீதி மறவாதவன் வே

15 தியர் காவலன் திலதநுதல் மடவார்கள் மடலெழுது வருசுமுகன் தொ

16 ண்டியந்துறை காவலன் வீரதண்டை சேமத்தலை விளங்குமிரு தாளினா

17 ன் துஷ்டநிக்கிறக சிஷ்டபரிபாலனன் அஷ்டலட்சுமிவாசன் சத்திய அரிச்சந்திர

18 ன் வில்லுக்கு விசையன் துகவூர்க் கூற்றத்துக் கதிபரான குலோத்துங்க சோள

19 நல்லூர்க் கீள்பால் விரையாத கண்டனிலிருக்கும் வங்கிஷாதிலகரான ஸ்ரீ

20 மது இரணிய கெற்பயாசி ரவிகுல ரெகுனாத சேதுபதியவர்கள் வங்கி

21 சோத்தகரான ஸ்ரீமது முத்துராமலிங்க விசைய ரெகுனாதச் சேதுபதி

22 யவர்கள் அனுமனேரிப் பிரதிநாமமான முத்துராமலிங்கபுரம் நாநா

23 கோத்திரத்தில் நாநா ஸூத்ரத்தில் நாநா வியாபகரான அசேஷ வித்வ மாசனங்களுக்கு தானபூருவ

24 கமாக தாம்புர சாஸநம் பண்ணிக்குடுத்தப்படி கட்டுக்கரைக்குத் தெ

25 க்கு குப்பைச்செய் வெங்காயக் குண்டுக்கு வடக்கு கோடிக்குளம் ப

26 ள்ளர் சேரிக்குத் தெக்கு நெடுங்கண்ணிக்கு கீள்பிலை இலுப்பையடி

27 யூரணிக்குத் தெக்கு பாதைக்குடியிருப்புக்குக் கீள் பிறத்தில் ரெகுநாதக்

28 காவேரிக் குள்வாய்க் காடுவெட்டி புஞ்சைக்கு மேற்கு கோ

29 ரைக்குளம் காடுவெட்டிப் புஞ்சைக்கும் மேற்கு கோரைக்குளம் காடு வெ

30 ட்டிப்புஞ்சைக்கு மேற்கு கோரைக்குளம் கோரைக்குளம் கொத்துக்கு

31 எல்கைப் புஞ்சைக்கு மேற்கு ரெகுநாத காவேரிக்குத் தெற்கு மல்லல் திரு

32 மேனிக்குடும்பன் புஞ்சைக்கு மேற்கு பொடுகட்டியூரணிக்கு வடக்கு தாளியா

## இரண்டாம் பக்கம்

33 ரேந்தல் விளாவடிப் பிஞ்சைக்கு வடக்கு தாளியாரேந்தல் கீள்கரை அருள

34 ப்பன் புஞ்சைக்கு கிளக்கு தாளியாரேந்தல் வடகாலுக்கு கிளக்கு குண்டான்

35 ஊறணிக்குக் கிளக்கு வளநாட்டுப் பறையன் புஞ்சைக்குக் கிளக்கு வளநாட்டு

36 முத்தப்பன் புஞ்சைக்கு மறிச்சுக்கட்டி உள்வடக்கு கோடிக்குளம் விளங்கா

37 ன் புஞ்சைக்குக் கிளக்கு கோடிக்குளம் சேதிக்குடும்பன் பொட்டப் புஞ்சைக்

38 குக் கிளக்கு கோடிக்குளம் பத்தன் புஞ்சைக்கு கிளக்கு கோடிக்குளம் கண்வா

39 ய்த் தென்கரைக்குத் தெக்கு இன்னான் கெல்கைக்குள்பட்ட மாவடை மரவடை

40 திட்டித் திடல் மேல்நோக்கிய மரம் கீள்நோக்கிய கிணறு ஆத்துக்கால் ஊத்து

41 க்கால் செல தரு பாஷாணம் நிதி நிட்க்ஷேபம் அஷ்டபோக தேச சுவாமியங்க

42 ளும்விநவாதி விக்கிறயங்களும் யோக்கியமாக குளத்தூரான் குமாரன்

43 சுப்பையன் கஸ்தூரிஅய்யன் குமாரன் லட்சுமி நாராயணய்யன்
லட்சுமணய்

44 ய்யன் குமாரன் சின்னச்சுப்பையன் அய்யாவய்யன் குமாரன் திருவேங்
கிட

45 னாதன் வீரராகுவய்யன் குமாரன் சுப்பையன் ஐய்யங்கார் குமாரன் சீ

46 னிவாசகன் அளகரய்யன் குமாரன் முத்தய்யன் சேனாதிபதி சாத்திரியார்

47 குமாரன் வேதாந்தமய்யன் நரசிங்கஅய்யன் குமாரன் ராமலிங்கய்யன்

48 நாரணவாத்தியார் குமாரன் வேங்கிடசுப்பன் ஆகமதாசனங்கள் பத்து

49 ப்பேருக்கும் தாம்புர சாலனம் பண்ணிக் கொடுத்தபடியினாலே ஆ

50 ண்டனுபவித்துக் கொள்வாராகவும் இந்ததர்மத்தைப் பரிபாலனம் ப

51 ண்ணினவர்கள் கெங்கைக் கரையிலே புண்ணிய ஸ்தலங்

52 களிலே கோடி சிவலிங்க பிறதிஷ்டை கோடி கன்னிகா தானம் கோடி

53 அக்கிறாகாரப் பிறதிஷ்டை பண்ணின பலனை அடைவார்கள் இந்தத்
தற்மத்து

54 க்கு அகிதம் பண்ணினவர்கள் கெங்கைக்கரையிலே சேதுவிலே மாதா
பிதா

55 க்குருவை வதைபண்ணின தோஷத்தை அடைவாராகவும் ஸ்வதத்
தாத்வி

56 குணம் புண்யம் பரதத்தாறு பாலநம் பரதத்தாப ஹாரேண ஸ்வதத்தம்

57 நிஷ்பலம் பவேது: உ ஏகைவ பகிநி லோகேஸர் வேஷாமேவ பூபுஜாம்

58 நயோஜ்யா கரக் ரஹ்யா விப்ரதத்தா வஸுந்தரா: உ தாந பாலந யோ

59 ர்மத்யே தாநாத் ஸ்ரயோநு பாலநம் தாநாத் ஸ்வர்க்க மவாப்நோ திபா

60 லநாத் அச்சுதம் பதம்: ஸ்ரீமத் முத்துராமலிங்க விசைய ரெகுநாதச் சே

61 துபதி காத்த தேவரவர்கள் முத்துராமலிங்கபுரம் அசேச வித்து மகா

62 சனங்களுக்குத் தானமாகக் குடித்தது இந்தப்படிக்கு பொக்கிசக் கணக்

63 கு ஆதினாராயணபிள்ளை மகன் தளவாத்தான் கையெழுத்துப் படிக்கு

64 முத்துப்பத்தர் மகன் வேலாயுதம் கையெழுத்து உ

ஸ்ரீராமநாத ஸ்வாமி ஸஹாயம்

# 91

## தெஞ்சீயேந்தல் செப்பேடு

இருக்கும் இடம் : இராமநாதபுரம், டாக்டர் எஸ்.எம். கமால் அவர்கள் தொகுப்பு

அரசர் : முத்து விசைய ரகுநாத சேதுபதி காத்த தேவர்

காலம் : 17—11—1781

**அமைப்பும் செய்தியும்** : பதினேழாம் நூற்றாண்டில் மதுரை சேசு சபை மூலமாக மறவர் சீமையில் கிறித்தவமதம் புகுந்தது. சேதுபதி அரசரின் நெருங்கிய உறவினரில் சிலர் அம்மதத்தைப் பின்பற்றினர் (சிறுவெள்ளிப் பாளையங்காரர் போன்ற சிலர்). அங்கு மத மாற்றத் தில் ஈடுபட்டிருந்த ஜான் பிரிட்டோ நாடு கடத்தப்பட்டார். மீண்டும் மற வர் சீமையில் அவர் நுழைந்து பணியாற்றியதால் ஓரியூரில் 4-2-1693 அன்று அவர் உயிரிழக்க நேர்ந்தது.

இடைவிடாத போராட்டத்தின் இடையில் சருகணி, பொன்ன ளிக் கோட்டை, ஓரியூர், இராமநாதபுரம் ஆகிய ஊர்களில் கிறித்தவ தேவாலயங்கள் அமைக்கப்பட்டன. முத்துப்பேட்டை கிறித்தவ தேவா லயம் கி.பி. 1638-39 இல் போர்ச்சுக்கீசியரால் கட்டப்பட்டது. முன்பு கொச்சி, பாண்டிச்சேரி குருபீடத்துடன் இணைக்கப்பட்டிருந்த முத்துப் பேட்டை தேவாலயம் இப்போது மதுரைச் சபை நிருவாகத்தில் உள்ளது.

சேதுபதி மன்னர் முத்துப்பேட்டை கிறித்தவ தேவாலயத்திற்கு தெஞ்சியேந்தல் கிராமத்தைக் கொடையாக அளித்ததை இச்செப்பேடு கூறுகிறது. பாதிரியாருக்குப் பெரியபட்டணம் முத்துப்பேட்டை சுங்கத்திலிருந்து நாள்தோறும் இரண்டுபணம் அளிக்கப்பட்டது. தளவாத்தான் எழுதிய ஆவணத்தை முத்துப்பத்தர் மகன் வேலாயுதம் செப்பேட்டில் பொறித்துள்ளார். தெஞ்சியேந்தலுக்கு நாற்பாங்கு எல்லைகள் கூறப்பட்டுள்ளன.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 மகாமண்டலேசுவரன் அரியராயிரதள விபாடன்

2 பாசைக்குத் தப்புவராயிர கண்டன் கண்டநாடு கொண்டு கொ

3 ண்டநாடு கொடாதான் பாண்டிமண்டலத் தாபனாச்சாரியன்

4 சோழமண்டல பிரதிஷ்டாபனாசாரியன் தொண்டைமண்டல

5 சண்டப்பிரசண்டன் ஈழமும் கொங்கும் யாழ்ப்பாணமு

6 ங் கெசவேட்டை கண்டருளிய ராசாதி ராஜன் ராசபர

7 மேசுபரன் ராசமார்த்தாண்டன் ராச கெம்பீர ராச

8 ன் ராசமனோ பயங்கரன் ராசகுல திலகன் அந்தம்பிர கண்டன்

9 சாமித்துரோகியள் மிண்டன் பரதள விபாடன் பட்ட

10 மானங் காத்தான் வேதியர் காவலன் துஷ்டநிக்ரகன் சிஷ்

11 டபரிபாலனன் மலை கலங்கிலு மனங்கலங்காதான் யொட்டியர்

12 தள விபாடன் யொட்டியர் மோகந் தவிள்த்தான் வன்னிய

13 ராட்டந் தவிழ்த்தான் பஞ்சவன்ன ராகுத்தன் மிஞ்சு புகழ் கொண்ட

14 வன் வன்னியராட்டம் தவிழ்த்தான் வீரலட்சுமி

15 விசையலட்சுமி தனலட்சுமி தான்யலட்சுமி அட்டல

16 ட்சுமி காந்தன் காமினி கந்தர்ப்பன் சகலகலை வல்லவன் வீரவெம்பா

17 மாலை விருதரசர் மணவாவன் வில்லுக்கு விசையன் சொல்லுக் கரி

18 ச்சந்திரன் மல்லுக்கு வீமன் பரிக்கு நகுலன் கொடைக்கு கர்ணன் இள

19 ஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகைமன்னர் சிங்கம் ஆத்திற் பாய்ச்சி கட

20 ில் பாய்ச்சி தாலிக்கு வேலி தண்டுவார் மிண்டன் கோடாளி

21 சருவந்த மாமுடி அடைக்கலங் காத்தான் தாலிக்கு வேலி துட்

22 டர்கள் கொட்டமடக்கி இவுளி பாவடி மிதித்தேறுவார் கண்டன் தொ

23 ண்டியந்துறைக் காவலன் மதுரை பாலங் காத்தான் செங்காவி கு

24 டையான் கெருடக்கொடி அனுமக்கொடி சிங்கக்கொடி புலிக்கொடி குக்கிட

## இரண்டாம் பக்கம்

25 க்கொடி யுடையான் செம்பிவளநாடன் சேது

26 காவலன் சேதுமூல துரந்தரன் ராமநாதசுவாமி காரிய துரந்தரன்

27 ஏழைபங்காளன் எதிர்த்தவர் மார்பிலாளி அசுபதி கெசபதி நரபதி

28 ரவிகுல முத்துவிசைய ரெகுநாத ராமலிங்க சேதுபதி காத்த தேவ

29 ரவர்கள் பிரதிவிராச்சிய பரிபாலனம் பண்ணியருளாநின்ற சாலிவாகன

30 சகாப்தம் 1702 கலியுகம் 4872 மேல் செல்லா

31 நின்ற பிலவ ஞூ கார்த்திகை மீ 5 தேதி முத்துப்பேட்டை சருவேசுவ

32 ரன் கோயிலுக்கு சருவமானியமாக நாம்பிர சாதனம் கு

33 டுத்த நிலமாவது முத்துப்பேட்டை சருவேசுவரன் கோவி

34 லும் சங்கரவலசை

35 யாவது சக்கிலியன் குண்டுக்கு தெற்கு எல்கையாவது

36 கிழக்கு மேற்கு எல்கையாவது வண்ணானூரனிக்கு வடக்கு எல்லை

37 தளம் புளி இன்னான்கு எல்கை நிலமும் இந்தக் கோவிலுக்கு விட்டு கொடுத்த தெ

38 ஞ்சியேந்தல் எல்லையாவது பாப்பானேந்தல் கண்மாய்க்கும்

39 மேற்கு குண்டமுடையார் கோயிலுக்கு வடக்கு மலட்டாறுக்கு கிழக்கு வயகுனேந்தல் கால் முதலூர் கண்மாய்

40 க்கரைக்குத் தெற்கு இன்னான்கு எல்லைக் குட்பட்ட மர

41 வடை மாவடை கிழ்நோக்கிய கிணறு மேல்நோக்கிய மரங்கள் வரத்

42 துக்கால் நிதி நிட்சேபம் செல தரு பாஷாணமெனப்படும் அஷ்ட தேச சுவா

43 மியங்களும் வினியாதி விக்கிரயங்களுகு யோக்கி

44 யமாகவும் பாதிரியாரவர்களுக்கு பெரியபட்டணமுத்துப்

45 பேட்டை சுங்கத்தில் நித்தம் இரண்டுபணம்

46 ஆதி சந்திராதித்த வரைக்கும் ஆண்டு அனுபவித்துக் கொள்வாராகவும்

47 இந்த தர்மத்தை பரிபாலனம் பண்ணினவர் காசியிலேயும்

48 சேதுவிலேயும் புண்ணியம் பண்ணின

50 ———— ———— கோடி பாவத்தையும் பண்ணின குருவையும் மீதா பிதர்வையு

51 ம் வதைபண்ணின தோஷத்தையடைவாராகவும் இந்தப்படிக்கு பொ

52 க்கிஷ்ங் கணக்கு ஆதிநாராயண பிள்ளை மகன் தளவாத்தான்

53 யெழுத்துப்படிக்கு முத்துப்பத்தர் மகன் வேலாயுதன் யெழுத்து கூ

# 92

# விலானூர்ச் செப்பேடு

இருக்கும் இடம் : திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை

அரசன் : முத்து ராமலிங்க விசைய ரகுநாத சேதுபதி காத்த தேவர்

காலம் : 1—1—1782

அளவு : 24.5 செ.மீ. 18.5 செ.மீ.

**அமைப்பும் செய்தியும்** : இச்செப்பேடு பெரிய அளவிலான தாமரை மலர் மொட்டுப் போன்ற கைப்பிடியை உடையது. கைப்பிடியில் உமங்கலக் குறி உள்ளது. முதல் பக்கம் 'ராமநாத சுவாமி ஸஹாயம்' என்று தெலுங்கில் எழுதப்பட்டுள்ளது. கலியுக ஆண்டு தவறாக எழுதப்பட்டுள்ளது.[1]

சேதுபதி அரசர் அவர்கள் ஆவுடையார் கோயிலுக்கு உச்சிக் காலக் கட்டளை அரசர் கட்டளையாக நடப்பதற்காக விலானூர், இடையூர், சொருகானூர், பூதக்குடி, கோடிக்குளம், ஆவுடையார் கோயில் தெற்கு மடம் நடக்கிற தேர்ப்பு, மனை தென்னந்தோப்பு, ஊர்த்

1. 4882 என இருக்க வேண்டும் 4872 என்பது தவறு.

தோப்பு, மாரியம்மன் கோயில் திடல், உள்ளூர் மனைகள், உள்ளூர்நன் செய், புன்செய் உள்பட நெல்லியடிக்குளம், நெல்லியடித் தோப்பு ஆகிய வைகளைக் கொடையாக அளித்த விபரத்தை இச்செப்பேடு கூறுகிறது. இக்கொடை அளிக்கப்பட்டபோது திருவாவடுதுறை ஆதீனத்தலைவ ராக விளங்கியவர் ஸ்ரீ அம்பலவாண தேசிகர் (1770-1789).

இப்பகுதியில் உள்ள சுங்கம், மகமை, நாடுகாவல்வரி, உள்ளூர் வரி, சாணார்வரி இடங்கைவரி, வலங்கைவரி இவைகளுடன் கூடிய பதினெட்டு வரிகளையும் கோயில் உச்சிக்காலக் கட்டளைக்கு வாங் கிக் கொள்ளும்படி சேதுபதி அரசர் கட்டளையிட்டார்.

இந்தத் தர்மத்தைத் திருவாவடுதுறை ஆதீனம் பண்டார சன்னதி அவர்கள் மேற்பார்வை செய்யுமாறும் மணியம், கணக்கு, கங்காணி ஆகிய கட்டளைக்கும், சிராமாந்தரத்துக்கும் எதுவும் அளிக்கவேண்ட டாம் என்றும் கூறிப்பரதேசி முத்திரையும் கட்டளையிடப்பட்டது.

இவைமட்டுமில்லாமல் இராமநாதபுரம் சீமை திருவாடானைச் சீமை ஆகியவற்றில் உள்ள ஒவ்வொரு ஊரிலும் நன்செய், புன்செய் ஆகியவற்றில் நான்கு செய், இரண்டிரண்டு குறுக்கம் கொடையாக அளித்து அவைகளையும் ஆதீனகர்த்தர் அவர்களையே மேற்பார்வை யிடுமாறு அரசர் வேண்டிக்கொண்டார்.

திருவிழாக் காலங்களிலும், பிற விசேட தினங்களிலும் சேதுபதி சீமையிலிருந்தும், சிவகங்கை சீமையிலிருந்தும் காணிக்கையாக வரு கின்ற கால்நடைகள் அனைத்தும் இக்கட்டளையில் சேர்க்கவேண்டும் என்றும் சேதுபதியரசர் ஆணையிட்டார்.

அரசர் பெயரில் நடக்கும் உச்சிக்காலக் கட்டளைக்கு உண்டான ஆபரணங்கள், வஸ்து, வாகனம், பூசணம், பாத்திரம், பாண்டம் முதலான அனைத்தையும் நெல்லியடி மண்டபத்தையும் திருவாவடு துறை ஆதீன கர்த்தர் அவர்கள் வசம் சேதுபதியரசர் அளித்தார்.

கொடையின் பாதுகாப்புத் தொடர்பான மூன்று வடமொழிச் சுலோ கங்கள் கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளன. இந்தச் செப்பேட்டைப் பொக்கிசம் ஆதிநாராயண பிள்ளை மகன் தளவாத்தான் ஆணைப் படிக்கு வேலாயுதம் என்பவர் எழுதினார் என்ற விபரமும் இறுதியில் அளிக்கப்பட்டுள்ளது.

# செப்பேடு

## முதல் பக்கம்

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாத்தம் 1703 கலியுக சகாப்தம் 4872 இதன் மேற்ச்

2 செல்லாநின்ற பிலவ நாம சம்வத்சரத்தில் தெக்ஷணாயநத்தில் தஎலூற் மா

3 சத்தில் பூச நட்சத்திரத்தில் சுபயோக சுபகரணமும் பெற்ற சுப தினத்தில்

4 தேஸை நகராதிபன் சேது மூலா துரந்தரன் ராமநாத சுவாமி காரியா துரந்த

5 ரன் பரராச்சிங்கம் பரராசசேகரன் பர்ர்ாச கெற்ப நிறபேதனன் சொரி

6 முத்து வன்னியன் அனுமகேதனன் கெருடகேதனன் சிங்ககேதனன் மயூர

7 கேதனன் குக்கிடகேதனன் செங்காவிக் குடைமேல் கவரி வைச்ச விருது

8 டைய ராசாதிராசன் ராசமாத்தாண்டன் ராசகுலதிலகன் சங்கீத சாயித்

9 திய வித்தியா வினோதன் சோள மண்டலப் பிற்திஷ்டாபனாசாரியன் தொண்ட

10 மண்டல சண்டப்பிறசண்டன் பாண்டிமண்டல ஸ்தாபனாசாரியன் இள்மு

11 ங் கொங்கும் யாள்ப்பாண ராயன் பட்டணமும் கெசவேட்டை கொ ண்ட

12 ருளிய ராசாதிராசன் திலக நுதல் மடவார்கள் மடலெளுது வரு சுழுகன் பதி

13 ணென் பாசை வீணாப் பிறவீணன் அகளங்கன் அணந்த கலியாண குணாபிர்ாமன்

14 அபிமானங் காத்தவன் மனுநீதி மறவாதான் வேதியர்கள் காவலன் தொண்டி

15 யந்துறை காவலன் வீரத

16 ண்டை சேமத்தலை விளங்குமிரு தாளினான் துஷ்ட நிக்கிறக சிஷ்ட

17 பரிபாலனன் அஷ்ட லட்சுமி வாசன் சத்திய அரிச்சந்திரன் வில்லு

18 க்கு விசையன் துகவூர்க் கூத்தத்துக்குதிபரான குலோத்துங்க சோ

19 ள நல்லூர் கீள்பால் விரையாத கண்டனிலிருக்கும் வங்கிஷாதிபரா

20 ன ஸ்ரீமது இரணிய கெற்பயாசி ரவிகுல ரெகுனாதற் ரெகுனாதச் சேதுபதி சாத்

21 த தேவரவர்கள் வங்கிஷ்சோத்தகரான ஸ்ரீமது முத்து ராமலிங்க விசைய

22 ரெகுனாதச் சேதுபதி காத்த தேவரவர்கள் ஆவுடையார் கோவிலுக்கு

23 தேவர் கட்டளை உச்சிக் காலக் கட்டளைக்கு நடக்கும் சுவாத்தியம்

24 விலானூார் இடையூர் செருகானூார் பூதகுடி கோடிக்குளம் ஆவு

25 டையார் கோவில்த் தெற்கு மடம் நடக்கிர தோப்பு மனை தென்

26 னந் தோப்பு ஊர்த்தோப்பு குருமுடையான் தோப்பு செக்கடி

27 த் தோப்பு சுக்கிறவாரக் கட்டளைத் தோப்பு மாரியம்மன் கோ

28 வில்த் திடல் உள்ளூர் மனையள் உள்ளூரிலிருக்கும் நஞ்சை புஞ்சை

29 உள்பட நெல்லியடிக்குளம் நெல்லியடித் தோப்பு இந்தக் கட்ட

30 ளைக்கு நடக்கிற கிறாமங்களில் சுங்கம் மகமை நாடுகாவல்வரி

31 உள்ளூர் வரி சாணார் வரி இடங்கைவரி வலங்கைவரியுடன் கூடி

## இரண்டாம் பக்கம்

32 ய பதினெட்டு வரியும் சுவாமிக்கு சறுவ மானியமாக கோவில்க் க

33 ட்டளைக்கு வாங்கிக் கொள்ளச் சொல்லி கட்டளை இட்டோம் இந்த தற்

34 மத்தை திருவாடுதுறை பண்டாரச் சன்னதி அவர்களுக்குள்ளே விசா ரித்துக்

35 கொள்ளச் சொல்லி மணியம் கணக்கு கங்காணம் கிறாமாந்திரத்து

36 க்கும் கட்டளைக்கும் வேண்டாமென்று பரதேசி முத்திரையாய் கட்

37 டளை இட்டோம் இதுவில்லாமல் ராமனாதபுரம் சீமை திருவாடா னைச்சீ

38 மையில் ஊரு ஊருக்கும் நஞ்சை புஞ்சை நாலுசெய் இரண்டு செய்

39 நாலு குறுக்கம் ரெண்டு குறுக்கம் புஞ்சையும் அவர்கள்தானே வி

40 வாரிச்சுக் கொள்ளச் சொல்லி கட்டளை இட்டோம் திருவிளா முத லான

41 விசேஷ திண்திலும் வருகிற ஆடுமாடுகள் காணிக்கை சேதுபதி சீமை உ

42 னடையர்த் தேவர் சீமையிலிருந்து வருகிறதெல்லாம் கட்டளையில்ச் சேரப்

43 ண்ணச் சொல்லி கட்டளையிட்டோ மதுவும் தேவர் கட்டளைக்கு உண்டா

44 ன திருவாபரணம் வஸ்த்து வாகன பூசன பாத்திர பாண்ட மூதலான தெ

45 ல்லாம் நெல்லிபடி மண்டபமும் இந்த தற்மத்தை திருவாவடுதுறை பண்டா

46 ரச் சன்னதியவர்கள் மாரிபத்தில் கட்டளையிட்டோம் பாரம்பரை யாய் ஆண்டனு

47 பவித்துக் கொள்வாராகவும் இந்த தற்மத்தை பரிபாலனம் பண்ணின பேர்

48 கெங்கையிலும் சேதுவிலேயு கோடி கன்னிகாதானமும் கோடிபிற்ம பிறதிட்

49 டையுங் கோடி சிவலிங்க பிறதிட்டையும் பண்ணின பலனையடை வார்

50 கள் இந்த தற்மத்துக்கு யாதாமொருவர் விகாதம் பண்ணினபேர்
கெங்கைக்

51 கரையிலே சேதுவிலே மாதா பிதா குருவை வதைபண்ணின தோ

52 ஷத்தையடைவாராகவும் உ ஸ்வதத்தாத்வி குணம் புண்யம் பரதத்தா

53 நு பாலநம் பரதத்தாப ஹாரேண ஸ்வதத்தம் நிஷ்பலம் பவேது: உ

54 தாத பாலந யோர்மத்யே தாநா ஸ்ரயோநு பாலநம் தாநாத் ஸ்வர்க

55 மவாப்நோதி பாலநாத் அச்சுதம் பதம்: உ ஏகைக பகநீ லோ

56 கே சர்வேசா மேவ பூபுஜாம் நகோஜ்ய ந கரக்யா விப்ரதத்தா வ

57 சுந்தரா: உ இந்தப் படிக்கு பொக்கிசம் ஆதிநாராயண பிள்ளை மகன்

58 தளவாத்தான் சவாதுப்படிக்கு வேலாயுதம் கையெழுத்து உ

# 93

# வள்ளைக்குளம் செப்பேடு

இருக்கும் இடம் : திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை

அரசர் : முத்து ராமலிங்க விசைய ரகுநாத சேது பதி காத்த தேவர்

காலம் : 1—1—1782

அளவு : 22 செ.மீ. × 16.5 செ.மீ.

**அமைப்பும் செய்தியும்** : இச்செப்பேடு பெரிய அளவிலான துளை யில்லாத அழகிய கைப்பிடியை உடையது. கைப்பிடியில் எவ்விதக் குறியீடுகளுமில்லை. முதல் பக்கம் 'ஸ்ரீராமநாத ஸ்வாமி சஹாயம் என்று தெலுங்கில் எழுதப்பட்டுள்ளது.[1]

முத்துராமலிங்க சேதுபதியவர்கள் திருவாவடுதுறை ஆதீனத்துக்கு அம்பலவாண சுவாமி சன்னிதியில் மகேசுவர பூசை செய்வதற்காக தவத்திரு ஆதீனகர்த்தர் அவர்களிடம் வள்ளைக்குளம் என்ற ஊரைக் கொடையாக அளித்துச் செப்பேடும் வெட்டித்தந்தார். இக்கொடை அளிக்கப்பட்டபோது திருவாவடுதுறை ஆதீனத் தலைவராக விளங் கியவர் ஸ்ரீ அம்பலவாண தேசிகர் (1770-1789)

1, இச்செப்பேட்டிலும் கலியுகம் தவறாக உள்ளது.

இக்கொடையளித்த சேதுபதியரசர் அவர்கள் சில ஆண்டுகள் திருச்சியில் கிழக்கிந்தியக் கம்பெனியாரிடம் சிறைப்பட்டிருந்தார். இடையில் சில ஆண்டுகள் கழித்து ஆட்சிபீடம் ஏறினார். அவ்வாண்டு 1782 என்பர். 1781ஆம் ஆண்டிலேயே அரசுப் பொறுப்பேற்றிருக்கலாம் என்பது இதன்மூலம் தெரிகிறது.

வள்ளைக்குளத்தின் எல்லைகளாவன: தெற்கு எல்லை; சிக்கள் கண்மாய் நீர்ப்பிடி; வள்ளைக்குளம் கண்மாய் உள்வாயில் கொடிக்கால் கேணிப் பரம்பு, மேற்கு எல்லை: வைய நாயக்கன் ஊருணி, எத்திலு நாயக்கன் மாலையீட்டு ஊருணி, பனியாசல எல்லையில் இரகுநாத நாயக்கன் பொட்டச்செய்.

வடக்கு எல்லை: அண்ணுனிக் கண்மாய் உள்வாயில் ஆய்க்குடி எல்லையில் சேதுகுடும்பன் எல்லை உரத்தி புன்செய்க்கும் கீழ்ப்பால் கண்ணாங்குடி புன்செய்க் காட்டில் அடைக்கலன் எல்லைப் புன்செய்க் கும் கீழ்ப்பால் கூடம்யோடை புன்செய்க் காட்டில் ஆதிநாராயணக் குடும்பன் கடமைப் புன்செய்.

கிழக்கு எல்லை: அண்ணுனிக் கண்மாய் உள்வாயில் சுருங்கன் கடமைப் புன்செய்க்கும், அண்ணுனிக் கண்மாய் பிறக்கரையில் குள வெட்டுப் புன்செய்க்கும் கீழ்ப்பால் சிக்கள் புன்செய்க் காட்டில் இராம நாதபுரம் பாதைக்குத் தென்புறம் இருக்கிற புன்செய்க்கும் சிக்கள் கண் மாய் கீழ்க்கரை உத்தராள்வு.

தானத்தைச் காப்பதன் பயன்கூறும் மூன்று வடமொழிச் சுலோ கங்கள் கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளன.

இக்கொடைச் செய்தியை எழுதியவர் பொக்கிசக் கணக்கு ஆதி நாராயணப்பிள்ளை மகன் தளவாத்தான் என்பவர். முத்துப் பத்தர்மகன் வேலாயுதன் என்பவர் இச்செப்பேட்டை வெட்டியுள்ளார்.

வள்ளைக்குளம் என்று மற்றொரு ஊரை சிவகங்கை அரசர் வடுகனாதப் பெரிய உடையாத் தேவரவர்கள் காசி விசுவநாதர் கோயி லுக்கு 13—4—1763இல் கொடையாகக் கொடுத்துள்ளார்.

# செப்பேடு

## முதல் பக்கம்

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாத்தம் 1703 கலியுப்தம் 4872 இதன்

2 மேற் செல்லாநின்ற பிலவ நாம ஸம்வத்ஸரத்தில் தெக்ஷணாயநத்தி

3 ல் சரத்ரிதுவில் தனுர் மாசத்தில் பூச நக்ஷத்ரத்தில் சுப்யோகமும் சுப
கரண

4 மும் பெத்த சுபதினத்தில் தேவை நகராதிபன் சேதுமூலா துரந்தரன்

5 ராமநாத ஸ்வாமி காரியா துரந்தரன் பரராசசிங்கம் பர்ராசசேகரன்

6 பரராச கெற்ப நிறபேதனன் சொரிமுத்து வன்னியன் அனுமகேதன

7 ன் கெருடகேதனன் சிங்ககேதனன் மயூரகேதனன் குக்குடகேதனன்

8 செங்காவிக் குடைமேல் கவரிமயிர் வைத்த விருதுடைய ராசாதி

9 ராசாதிராசன் ராசமார்த்தாண்டன் ராசகுல திலகன் சங்கீத சாயித்திய

10 வித்தியா வினோதன் சோளமண்டலப் பிறதிஷ்டாபனாசாரியன்தொண்

11 டமண்டல சண்டப்பிரசண்டன் பாண்டிமண்டல பத்மனாசாரியன்

12 ஈளமுங் கொங்கும் யாள்ப்பாணராயன் பட்டணமும் கெசவேட்டை

13 கொண்டருளிய ராசாதிராசன் திலதநுதல் மடவார்கள் மடலெளுது வ

14 ரு சுமுகன் பதிணெண்பாஷை வீணாப் பிறவீணன் அகளங்கன்
அனந்த க

15 லியாண குணாபிராமன் அபிமானங் காத்தவன் மனுநீதி மற

16 வாதான் வேதியர்கள் காவலன் தொண்டியந்துறை காவ

17 லன் வீரதண்டை சேமத்தலை விளங்குமிரு தாளினான் துஷ்ட நிக்கி

18 றக சிஷ்ட பரிபாலனன் அஷ்டலட்சுமி வாசன் சத்திய அரிச்சந்

19 திரன் வில்லுக்கு விசையன் துகவூர்க் கூத்தத்துக்கதிபரான கு

20 லோத்துங்க சோளநல்லூர்க் கீள்பால் விரையாத கண்டனிலிரு

21 ருக்கும் வங்கிஷாதிபரான ஸ்ரீமது இரணிய கெற்பயாசி ரவிகுல ரே
குனா

22 தச் சேதுபதி காத்த தேவரவர்கள் வங்கிசோத்தகரான ஸ்ரீமது முத்து
ரா

23 மலிங்க விசைய ரெகுனாதச் சேதுபதி காத்த தேவரவர்கள் திருவா
வடுது

24 றை பண்டாரச் சன்னதியவர்கள் மடத்துக்கு அம்பலவாண சுவா

25 மி சன்னதியில் மயேசுவர பூசைக்கு பண்டாரச் சன்னிதியவ

26 ர்கள் கையில் தானபூருவமாக தாம்பிர சாசனம் பண்ணிக்

27 குடுத்த கிறாமமாவது வள்ளைக்குளம் எல்லைப்புரவு தெற்கே சிக்கள்

28 கண்மாய் நீர்ப்பிடிக்கும் ஷெயூர்க் கண்மாய் உள்வாயில் கொடி

29 க்கால் கேணிப்புரம்புக்கு வடக்கு மேற்கே வய்ய னாயக்கன் ஊ

30 ரணிக்கும் எத்திலு நாயக்கன் மாவையிட்டுக்கு ஊரணிக்கும் பணியாசல

## இரண்டாம் பக்கம்

31 எல்கையில் ரெகுநாத நாயக்கன் பொட்டச் செய்க்கும் கிளக்கு வ

32 டக்கே அண்ணுனிக் கண்மாய் உள்வாயில் ஆய்க்குடி எல்கையில்

33 சேதுக் குடும்பன் எல்கை உரைத்திப் புஞ்சைக்கும் கீள்பால் கண்ணாங்

34 குடி புஞ்சைக் காட்டில் அடைக்கலன் எல்கைப் புஞ்சைக்கும் கீள்பா

35 ல் கடம்போடைப் புஞ்சைக் காட்டில் ஆதிநாராயணன் குடும்பன் கட

36 மைப் புஞ்சைக்கும் தெற்கு கிளக்கே அண்ணுனிக் கண்மாய் உள்
வாயில்

37 சுருங்கன் கடமைப் புஞ்சைக்கும் ஷெ கண்மாய் பிறக்கரையில் குள

38 வெட்டுப் புஞ்சைக்கு கீள்பால் சிக்கள் புஞ்சைக் காட்டில் ராமனாத
புரம்

39 பாதைக்கு தென்பிறம் இருக்கிற புஞ்சைக்கும் சிக்கள் கண்மாய் கீள்
கரை

40 உத்தராள்வுக்கும் மேற்கு இந்தப்படி நான்கெல்லைக்குள்பட்ட திட்டுத்
தி

41 டல் மாவடை மரவடை மேல்நோக்கிய மரம் கீள்நோக்கிய கிணறு
ஆத்து

42 க்கால் ஊத்துக்கால் செல தரு பாஷாணம் நிதி நிட்சேபம் அஷ்ட

43 தேச சுவாமியங்களும் வினுயாதி விக்கிறங்களுக்கும் யோக்கியமாக

44 ஆதி சந்திராதித்தவரைக்கும் ஆண்டனுபவித்துக் கொள்ளக் கடவாராக்

45 வும் இந்தத் தற்மத்தைப் பரிபாலனம் பண்ணினவர்கள் கெங்கைக்கரை

46 யிலே சேதுவிலே புண்ணிய ஸ்தலங்களிலே கோடி சிவலிங்கப் பிற

47 திஷ்டை கோடி கன்னிகாதானம் கோடி கோடி அக்கிறாகார பிரதிஷ்
டை பண்ணின

48 பலன்னயடைவார்கள் இந்தத் தர்மத்துக்கு அகிதம் பண்ணினவர்கள்
கெ

49 ங்கைக் கரையில் சேதுவில் மாதா பிதா குருவை வதை பண்ணின
தோஷ

50 த்தையடைவார்கள் உ ஸ்வதத்தாத்வி குணம் புண்யம் பரதத்தாநு ப

51 ாலநம் பரதத்தாப ஹ்ாரேண ஸ்வதத்தம் நிஷ்பலம் பவேது: உ ஏஸ

52 கவ பஹநீ லோகே சர்வேஷா மேவ பூபுஜாம் நகோஜ்ய ந கரக்ய

53 ா விப்ரதத்தா வசுந்தரா: உ தாந பாலந யோர்மத்யே தாநா

54 ஸ்ரயோ நு பாலநம் தாநாத் ஸ்வர்க்க மவாப்நோதி பாலநாதச்சு

55 தம் பதம்: உ இந்தப்படிக்கு பொக்கிசக் கணக்கு ஆதினாராயண பிள்

56 ளை மகன் தளவாத்தான் கையெழுத்துப்படிக்கு முத்துப்பத்தர் மக

57 ன் வேலாயுதன் கையெளுத்து உ

# 94

# சொக்கானைச் செப்பேடு

இருக்கும் இடம் : தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை அருங்காட்சியகம், இராமநாதபுரம்

அரசர் : முத்துராமலிங்க விசைய ரகுநாதச் சேதுபதி காத்த தேவரவர்கள்

காலம் : 13—1—1782

அளவு : 32.5 செ.மீ. × 20.5 செ.மீ

**அமைப்பும் செய்தியும் :** இச்செப்பேடு துளையுள்ள பெரிய கைப்பிடி உடையது. பெரும்பாலும் செப்பேட்டின் இடையில் காணப்படும் தெலுங்கு காப்புத் தொடர் இச்செப்பேட்டில் முதலில் எழுதப்பட்டுள்ளது. 'ஸ்ரீ ராமநாதஸ்வாமி ஸஹாயம்' என்று தெலுங்கில் எழுதப்பட்டுள்ளது. இறுதிப் பகுதியில் வடமொழிச் சுலோகம் ஒன்று கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளது. செப்பேட்டின் முதல் பக்கத்தில் தொடக்கத்திலிருந்து எழுதாமல் பாதியிலிருந்து எழுத்துக்கள் தொடங்குகின்றன.

ரகுநாதச் சேதுபதி தேவரவர்கள்வழியில்வந்த முத்துராமலிங்க விசைய ரகுநாதச் சேதுபதி காத்த தேவரவர்கள் முகவை இராமநாதபுரம் முத்துராமலிங்க சுவாமி கோயில் அய்யாசாமிக் குருக்களிடத்தில் செம்பி நாட்டில் உள்ள சொக்கானை, மத்திவயல் என்னும் இரண்டு ஊர்களைக் கொடையாக ஆதிசேதுவில் அளித்ததை இச்செப்பேடு தெரிவிக்கிறது.

சொக்கானையின் கிழக்கு எல்லை பணிவாசல், தெற்கு எல்லை நத்தக்குடியிருப்பு, சிக்கல் கண்மாயில் பேய்க்குளம் கருப்பண்ண கோயில் மேற்கு எல்லை பேய்க்குளம் ஊரணி, சின்னக்கண்மாய் கீழக்கரை வடக்கு எல்லை சுக்கல் காலாங்கரை ஆகும்.

மத்திவயலின் கிழக்கு எல்லை வல்லப்பாடல், தெற்கு எல்லை சிறைக்குளம் கண்மாய், மேற்கு எல்லை கழுநீர் மங்கலம், வடக்கு எல்லை சிக்கல் ஐயனார் கோயில் ஊரணி ஆகும்.

சொக்கானையில் நத்தம் என்ற தொன்மையான் பகுதி இருந்ததும் அங்கும் சில குடியிருப்புக்கள் கட்டப்பட்டிருந்ததும் இச்செப்பேட்டின் மூலம் தெரிகிறது.

அரசனின் ஆணை சமூக உத்தாரம் என்ற தொடரால் குறிக்கப் படுகிறது. ராயசம் குப்பையாண்டி கையெழுத்திட்ட ஆணையைச் செப் பேட்டில் பொரித்தவர் அருணாசலம் என்பவராவார்.

## செப்பேடு

### முதல் பக்கம்

ஸ்ரீராமநாத ஸ்வாமி ஸஹாயம்

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாத்தம் 1703 கலியப்தம் 4882 இதன்மேற் செல்

2 லா நின்ற பிலவ நாம ஸம்வத்ஸரத்தில் உத்தராயணத்தில் தைய் அமா வாசி புண்ணி

3 யகாலமும் உத்திராட நட்சேத்திரமும் சுபயோக சுபக்ரணமும் பெற்ற சுபதினத்தில்

4 தேவை நகராதிபன் சேதுமூலா துரந்தரன் ராமனாத ஸ்வாமி கரியா துரந்தரன் பரராச

5 சிங்கம் பரராசசேகரன் பரராச கெற்ப நிறபேதனன் சொரிமுத்து வன்னியன் அனு

6 மகேதனன் கெருடகேதனன் சிங்ககேதனன் மயூரகேதனன் குக்கிட கே தனன் செ

7 ங்காவிக் குடைமேல் கவரிமயிர் வைச்ச விருதுடை ராசாதிராசர்ன் ராசமாத்தாண்

8 டன் ராசகுல திலகன் சங்கீத சாயித்தியா வினோதன் சேபளமண்டலப் பிறதிஷ்டபானாசாரி

9 யன் தொண்டமண்டல சண்டப்பிறசண்டன் பாண்டிமண்டல ஸ்தாபனாசாரியன் ஈள

10 மூங் கொங்கும் யாள்பாணராயன் பட்டனமுங் கெசவேட்டை கொண்டருளிய

11 ராசாதிராசன் திலதநுதல் மடவார்கள் மடலெளுது வருசுமுகன் பதிணெண்பா

12 சை வீணாப் பிறவீணன் அகளங்கன் அனந்த சுலியர்ண குணாபிராமன் அபிமான

13 ங் காத்தவன் மனுநீதி மறவாதான் வேதியர்கள் காவலன் தொண்டியந்து

14 றை காவலன் வீரதண்டை சேமத்தலை விளங்குமிரு தாளினான் துஷ்டநிக்கிரக சி

15 ட்டபரிபாலனன் மனுநீதிசோளன் மன்மதசொரூபன் திக்கெல்லாம் புகள்

## இரண்டாம் பக்கம்

16 கொண்டராயன் இரணியகெற்ப சுதாகரன் விருதுசொல்

17 லார் கண்டன் விருதுகங்கணம் பெத்தவன் சிவபூசா துர

18 ந்தரன் தனுக்கோடி காவலன் வெள்ளானை வாகனன் இ

19 ரணிய கெற்பயாசி ரவிகுல ரெகுனாதச் சேதுபதி காத்த தே

20 வரவர்கள் வங்கிஷ கோத்திரான் ஸ்ரீமது முத்துராமலிங்க

21 விசைய ரெகுநதேச் சேதுபதி காத்த தேவரவர்கள் பூதாநம் ப

22 ண்ணி வீச்சது முகவை ராமநாதபுர முத்துராமலிங்க சுவாமிக்கு

23 மாறியாடும் பெருமாபிள்ளை மகன் முத்து வையிருப்பிள்ளை மாரீபத்தக அய்யாச்சாமிக் குருக்களிடத்தில் தானசாதனமாவது செம்பிநா

ட்டில் சொக்கானை மத்திவயல் இந்த ரெண்டு கிறாமமும் சருவமா
னிபமாக ஆதிசேதுவில் தானசாதனம் பண்ணிகுடுத்ததற்கு யெல்
கைபுரவாவது மத்திவயல் யெல்கைப் புரவு வல்லபாடலுக்கு மேற்கு
சிரைக்குளங் கண்மாய்க்கு வடக்கு களுநீர் மங்கலத்துக்கு கிள
க்கு சிக்கள் அய்யனார் கோவிலூரணிக்கு தெற்கு சொக்கானை யெல்கை
புரவாவது பணிவாசலுக்கு மேற்கு சிக்கள் கண்மாயில் பேய்க்கொளம்
கருப்பன கோவிலுக்கு வடக்கு பேய்க்குளம் ஊரணிக்கும் சின்னகண்மா
கீள்கரைக்குங் கிளக்கு நத்த குடியிருப்புக்கு வடக்கு சிக்கள் காலா
ங்கரைக்கு தெற்கு இந்த ரெண்டு கிறாமத்து நாங்கெல்கைக்குள்பட்ட
நஞ்சை புஞ்சை திட்டு திடல் மாவடை மரவடை கீள்நோக்கிய கிண
று மேல்நோக்கிய மரம் நிதி நிச்சேபம் செல தரு பாசாண மாச்ச
சென்னியாகாமியமென்று சொல்லப்பட்ட அஷ்டபோக தேச சாமி
யங்களும் ஆண்டனுபவித்துக்கொள்ளக் கடவராகவும் இந்த த
ற்மத்தை யாதாமொருவர் பரிபாலனம் பண்ணினபேர் காசி
யிலும் ஆதிசேதுவிலும் கோடி சிவலிங்க பிறதிஷ்டையும் விஷ்
ணு பிறிதிட்டையும் பிறம பிரதிஷ்டையும் பண்ணினவன்பலனையடை
யக்கடவராகவும் இந்ததற்மத்துக்கு விகாதம் பண்ணினவன் கா
சியிலும் சேதுவிலும் கோடி பிராமணரையும் கோடி காராம்பசு
வையும் பிதாவையும் குருவையும் வதைபண்ணின பாவத்தை
யடைய கடவாராகவும் ஸ்வதத் தாத்வி குணம் புண்யம் பரதத்தாநு
பாலநம் பரதத்தாப ஹாரேண ஸ்வதத்தம் நிஷ்பலம் பவேது:

சமூகம் உத்தாரபடி ராயசம் குப்பையாண்டி கையெளுத்து

இந்தப்படிக்கு அருணாசலம் கையெளுத்து

# 95

## களநீர்மங்கலம் செப்பேடு

இருக்கும் இடம் : திருப்புல்லாணி தேசிகர் இல்லம்

அரசர் : முத்து ராமலிங்க விசைய ரகுநாத சேதுபதி காத்ததேவர்

காலம் : 24—1—1782

அளவு : 29 செ.மீ. × 16 செ.மீ.

**அமைப்பும் செய்தியும்** : மொட்டுப்போன்ற கைப்பிடியில் துளை இன்றி நீண்ட சதுர வடிவில் இச்செப்பேடு அமைந்துள்ளது. செப்பேடு நான்கு துண்டுகளாக உடைந்து ஒட்டவைத்ததுபோல் காணப்படுகிறது. பிடியின் முகப்பில் 'களநீர் மங்கலம்' என்று தெலுங்கில் எழுதப்பட்டுள்ளது.

செல்லத் தேவர் என்ற செல்லமுத்து விசய ரகுநாத சேதுபதி (1749-1762) வாரிசு இன்றி இறந்தார். அவரது சகோதரி முத்து தளவாயி நாச்சியாரின் 72 நாட்களே நிரம்பிய ஆண் குழந்தையை அரிய

---

1. ஆங்கிலத் தளபதி பரிந்துரையால் சேதுபதியின் பின்னாளில் பிரதானி ஆன இருளப்ப பிள்ளை இறுதி நாட்களில் சேதுபதிக்கு எதிராகவும் ஆங்கிலேயருக்கு ஆதரவாகவும் நடந்து கொண்டார்;

*Revenue Consultations, Vol. 62, 15-3-1795 pp. 1260-79.*

கணையில் அமர்த்தினார்கள். அக்குழந்தை அரசரே முத்துராமலிங்க விசய ரகுநாத சேதுபதி காத்த தேவர் ஆவார்.

சேதுபதி சார்பாகத் தாயார் முத்துத் தளவாயி நாச்சியாரும், தள வாய் தாமோதரம்பிள்ளையும் ஆட்சி நடத்தி வந்தனர். பிரதானியாகப் பிச்சைப்பிள்ளை, இருளப்ப பிள்ளை என்பவர்கள் இருந்தனர்.

இளவயதிலேயே ஆங்கிலேயரால் திருச்சியில் சிறை வைக்கப் பட்டிருந்த இவர் 1781 இல் மீண்டும் இராமநாதபுரத்தில் ஆட்சியுரிமை பெற்றார். 1795இல் மீண்டும் இவரைக் கைதியாக்கிச் சென்னைக்குக் கொண்டு சென்றனர்.

இடைக்காலத்தில் இவர் செய்த எண்ணற்ற கொடைகளில் இதுவு மொன்றாகும். ஆதிசேது எனப்படும் திருப்புல்லாணியில் உள்ள புரு சோத்தம பண்டிதர் சத்திரத்தில் பிராமணர்களுக்கு அன்னமிட கழுநீர் மங்கலம் என்ற ஊரைக் கொடையாகக் கொடுக்கப்பட்ட செய்தியை இச்செப்பேடு கூறுகிறது.

கொடையாக அளிக்கப்பட்ட நிலத்தின் வடக்கு எல்லை சிக்கல் பழனியான் செய், ஆண்டிகாத்தான் செய்: கிழக்கு எல்லை சிறைக் குளம் கண்மாய் மேலகரை; தெற்கு எல்லை விளிஓடைக் கண்மாய் உள்வாய், மேற்கு எல்லை சின்னாயக்குடிகானத்திடல், கண்மாய்க் கவாத்தலை ஆகும்.

பொக்கிசம் கணக்கு ஆதிநாராயணபிள்ளை மகன் தளவாத்தான் கையெழுத்துப்படி வேலாயுதம் என்பார் இச்செப்பேட்டை எழுதி யுள்ளார்.

'ஸ்ரீராமநாத சுவாமி ஸஹாயம்' என்ற தொடர் தெலுங்கில் எழுதப் பட்டுள்ளது. இறுதிப்பகுதியில் தானம் பற்றிய மூன்று வடமொழிச் சுலோகம் கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளது.

புருசோத்தம பண்டிதர் திருப்புல்லாணியில் வாழ்ந்த அந்தணர் ஆவார். அவர் இச்சத்திரத்தை நிருவகித்துடன் நாகாச்சி என்ற ஊரில் உள்ள மடத்தையும் நிருவகித்து வந்தார். அம்மடத்துக்கும் சேதுபதிய வர்கள் இதேநாளில் கொடை ஒன்று அளித்துச் செப்பேடும் அளித் துள்ளார் (எண் 96).

# செப்பேடு

## முதல் பக்கம்

### களநீர் மங்கலம்

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாத்தம் 1703 கல்லியப்தம் 4882 இதன்மே

2 ற் செல்லாநின்ற பிலவ நாம சம்வத்ஸரம் தைய் மாசம் 15 உயும் திசமி

3 யும் வியாளக்கிளமையும் ரோகிணி நட்செத்திரமும் கூடின சுபயோக சு

4 பகரணத்தில் தேவை நகராதிபன் சேதுமூலாதுரந்தரன் ராமனாத சுவாமி காரி

5 யாதுரந்தரன் சிவபூசாதுரந்தரன் பரராசசேகரன் பரராசசிங்கம் பரராச

6 கெற்ப நிறபேதன்னன் சொரிமுத்து வன்னியன் அனுமகேதனன் கெரு டகேத

7 னன் குக்கிடகேதனன் மயூரகேதனன் செங்காவிக்குடைமேல் கவரிமயி

8 ர்வைச்ச விருதுடைய ராசாதிராசன் ராசபரமேசுபரன் ராசகுலதிலகன்

9 ராசமார்த்தாண்டன் ராசகெம்பீரன் சங்கீத சாயித்திய வித்தியா வினோதன்

10 சோளமண்டலப் பிரதிஷ்டாபனாசாரியன் தொண்டமண்டலச் சண்டப் பிற

11 சண்டன் பாண்டிமண்டல ஸ்தாபனாசாரியன்ஈளமும் கொங்கும் யாள்

12 ப்பாணராயன் பட்டணமுங் கெசவேட்டை கொண்டருளிய ராசாதிர

13 ாசன் அபிமானங்காத்தவன் அகளங்கன் அனந்தகலியாண குணாபி ராமன்

14 மனுநீதி மறவாதான் வையகை வடநாடன் வேதியர்கள் காவலன் தில

15 தநுதல் மடவார்கள் மடலெழுத வருசுமுகன் பதினென் பாசை

16 வீணாப்பிறவீணன் தொண்டியந்துறை காவலன் மலைகலங்கினும் மனை

17 னங்கலங்காதான் துஷ்டநிக்கிறக சிஷ்டபரிபாலனன் அஷ்டலக்ஷ்மி
வாசன்

18 சத்திய அரிச்சந்திரன் வில்லுக்கு விசையன் சொல்லுக்கு அகஸ்தியன்
இவு

19 ளிபாவடி மிதித்தேறுவார்கண்டன் உரிகோல் சுரதானன் வீரதண்டை
20 சேமத்தலை விளங்குமிரு தாளினான் துகவூர் கூத்தத்துக் கதிபரான
குலோத்

21 துங்கசோள நல்லூர் கீள்பால் விரையாத கண்டனிலிருக்கும் வங்கிஷ

22 ாதிபரான ஸ்ரீமது இரணிய கெற்பயாசி ரஷிகுல ரெகுனாதச் சேதுபதி
காத்

23 ததேவரவர்கள் வங்கிஷோத்தகரான ஸ்ரீமது முத்துராமலிங்க விசை

24 ய ரெகுனாதச் சேதுபதி காத்ததேவரவர்கள் ஆதிசேதுவில் புல்லாணி

25 ச்சேத்திரத்தில் புருசோத்தமபண்டிதரவர்கள் சத்திரத்தில் பிரா

26 மணபோசனத்துக்கு சறுவமானியமாக சஹிரண்ணியோதக தா

27 னபூருவகமாக தாம்பிரசாசனம் பண்ணிக்குடுத்தபடி நிலவரி இடங்ளை

28 கவரி வலங்கைவரி கிதாரம் கரைமணிய மத்த ஆதடைப்பலசுவந்

## இரண்டாம் பக்கம்

29 தையளுஞ் சறுவமானியமாக தானம் பண்ணிக்குடுத்த கவிநீர்மங்க

30 லம் வடபாற்கெல்கையாவது சிக்கள் பளனியான் செய் ஆண்டி

31 க்காத்தான் செய்க்குத்தெற்கு கீள்பாற்கெல்கையாவது சிறைக்கு

32 ளம் கண்மாய் மேல்கரைக்கு மேற்கு தென்பாற்கெல்கையா

33 விளிஓடைக்கண்மாய் உள்வாய்க்கு வடக்கு மேற்பாற்கெல்கையா

34 வது சின்னாயக்குடிக் கானத்திடலுக்கும் ஷி கண்மாய்க் கவாத்
தலைக்

35 குக்கிளக்கு இன்னான் கெல்கைக்குள்ப்பட்ட மாவடை மரவடை திட்

36 டுத் திடல் மேல்நோக்கிய மரம் கீள்நோக்கிய கிணறு ஆத்துக்கால் ஊ

37 த்துக்கால் செலத்தருபாஷாணம் நிதிநிக்ஷபம் அஷ்டபோக தேசசு

38 வாமியங்களும் வினிமயாதி விக்கிறயங்களுக்கு யோக்கியமாக ஆ

39 திசந்திரார்த்தவரைக்கு புத்திரபவுத்திர பாரம்பரையமாக ஆண்ட

40 னுபவித்துக் கொள்ளக் கடவாராகவும் இந்த தற்மத்தைப் ப

41 ரிபாலனம் பண்ணினவர்கள் கெங்கைக்கரையிலே சேதுவிலே கோ

42 டிசிவலிங்கப்பிறதிஷ்டை கோடிகன்னிகாதானம் கோடி அக்கிறாகாரபி

43 றதிஷ்டை பண்ணின பலத்தை அடைவார்கள் இந்தத் தற்மத்துக்கு யா

44 தாமொருவர் விகாதம்பண்ணின பேர் கெங்கைக்கரை சேதுவிலே ம

45 ாதாபிதா குருவை வதைபண்ணின தோஷத்தை யடைவார்கள் உ

46 ஸ்வதத் தாத்வி குணம் புண்யம் பரதத்தாநு பாலநம் பரதத்தாப ஹ

47 ாரேண ஸ்வதத்தம் நிஷ்பலம் பவேது:உதாந பாலந யோர்மத்யே

48 தாநாத் ஸ்ரயோநு பாலநம் தாநாத் ஸ்வர்க்க மவாப்நோதி பாலநாத்
அச்சு

49 ம் பதம்:ஏகைவ பதிநி லோகே ஸர்வேஷா மேவ பூபுஜா

50 ம் நயோயாஜ் கரக் ரஹ்யா விப்ரதத்தா வஸுந்தரா: உ இந்தப்படி

51 க்கு பொக்கிசங்கணக்கு ஆதிநாராய்ண பிள்ளை மகன் தளவாத்தா

52 ன் கையெளுத்துப்படிக்கு வேலாயுதம் கையெழுத்து உ

# 96

# பெயராமாத்தேவன்ஏந்தல் செப்பேடு

| | |
|---|---|
| இருக்கும் இடம் | : திருப்புல்லாணி தேசிகர் இல்லம் |
| அரசர் | : முத்துராமலிங்கம் விசைய ரகுநாத சேதுபதி காத்த தேவர் |
| காலம் | : 24—1—1782 |
| அளவு | : 29.5 செ மீ. × 16 செ மீ. |

**அமைப்பும் செய்தியும்** : இச்செப்பேடு துளை இல்லாத கைப்பிடியுடன் உடையது. செப்பேடு சிதைந்து ஒட்டப்பட்டுள்ளது. 'ஸ்ரீராமநாத சுவாமி ஸஹாயம்' என்று தெலுங்கில் எழுதப்பட்டுள்ளது. செப்பேட்டின் இறுதிப் பகுதியில் தானங்களைக் காப்பது பற்றிய மூன்று வடமொழிச் சுலோகங்கள் கிரந்த எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளன.

சேதுபதி அவர்கள் வைகைநதி தீரத்தில் நாகாச்சி என்னும் ஊரில் உள்ள மடத்திற்குத் திருப்புல்லாணி புருசோத்தம பண்டிதர் வசம் பெயராமாத்தேவன் ஏந்தல் என்னும் ஊரைக் கொடையாகக் கொடுத்ததை இச்செப்பேடு கூறுகிறது.

பெயராமாத்தேவன்ஏந்தலுக்கு கிழக்கு எல்லை பெரியானேந்தல் கண்மாயில் பெரியானேந்தல் எல்லையில் நாகாச்சி கொல்லுமுத்தனா

சாரியார் புஞ்சை; வடக்கு எல்லை தவளைக்குளம் தென்கண்மாய் மூலக்கரை பிறகரை கரையடி தேத்தால்; தெற்கு எல்லை சித்தனேந்தல் வடகண்மாய் மூலக்கரைக்கும் கிழக்கு சந்தைப்பாதைக்கு மேற்கு இதன் மேற்கு சித்தனேந்தல் வடகண்மாய் கடக் கொம்புக்கு வடக்கு பெயரா மா ஏந்தல் கண்மாய் வெட்டுத் தாவுக்கும் கிழக்கு ஏந்தல் வடகரை பிறகரை புஞ்சை அதுக்கும் பிறகரை; மேற்கு எல்லை அக்கிறமேசி எல்லை புஞ்சையில் சிலையப்பன் அம்பலக்காரன் செய்க்கு இருளாண் டிவார் புஞ்சைக்கு மேற்கு இதன் வடக்கு அஞ்சாமடை கிழக்கு வயலுக் குத் தெற்கு அஞ்சாமடை பள்ள பூவனவார் உழவு உழுத புன்செய்க்கும் விகாந் பரம்புக்குத் தெற்கு தவளைக்குளம் தென்கண்மாய் நடுக்கண்மாய் பாகைபொட்டல் பரம்பு.

மேற்கண்ட எல்லைக்குட்பட்ட ஏந்தல் வடகாட்டுப் புரவு ஆகிய வற்றுக்குட்பட்ட எல்லாவற்றையும் ஆத்துக்கால் ஊத்துக்கால் உட்படக் கொடையாக அளித்தார்.

நிலவரி, இடங்கைவரி, வலங்கைவரி, கீதாரம், கரைமணியம் ஆகிய வரிகள் கூறப்பட்டுள்ளன. இடங்கை, வலங்கைப் பிரிவு மக் களுக்குள் இருந்த செய்தியும், பொருள்களை விற்கவும் வாங்கவும் சந்தை கூடிய செய்தியும், கூறப்படுவது சிறப்புடைத்து.

பொக்கிசம் கணக்கு ஆதிநாராயண பிள்ளை மகன்தளவாத்தான் கையெழுத்துப்படி வேலாயுதம் என்பார் செப்பேட்டை எழுதிய செய்தி இறுதியில் கூறப்படுகிறது.

இக்கொடையைப் பெற்ற புருசோத்தம பண்டிதர் ஆதிசேது என்னும் திருப்புல்லாணியில் ஒரு சத்திரத்தை நடத்திவந்த செய்தியும் அச்சத்தி ரத்தில் பிராமணர்கட்கு உணவிட இச்சேதுபதியவர்கள் கழுநீர் மங்கலம் என்னும் ஊரைக் கொடுத்த செய்தி பிறிதொரு செப்பேட்டில் கூறப்படு கிறது. (எண் 95)

## செப்பேடு

### முதல் பக்கம்

1 *ஸ்வஸ்தி ஸ்ரீ சாலிவாகன சகாத்தம்* 1703 *கல்லியப்தம்* 488 *இதன்*

2 *மேல்ச் செல்லாநின்ற பிலவ நாம ஸம்வத்ஸரம் தைய்மாசம்* 15*உயும் தி*

3 சமீயும் வியாளக்கிளமையும் ரோகிணி நட்செத்திரமும் கூடின சுபயோ

4 க சுபகரணத்தில் தேவை நகராதிபன் சேதுமூலாதுரந்தரன் ராமனர்த ஸ்வ

5 ாமி காரியா துரந்தரன் சிவபூசாதுரந்தரன் பரராசசேகரன் பரராச சிங்க

6 ம் பரராசகெற்ப நிறபேதன்னன் சொரிமுத்து வன்னியன் அனுமகே தனன் கெ

7 ருடகேதனன் குக்கிடகேதனன் மயூரகேதனன் செங்காவிக்குடைமேல் கவ

8 ரிமயிர் வைத்துவிருதுடைய ராசாதிராசன் ராச பரமேசுபரன் ராச குல தி

9 லகன் ராசமாத்தாண்டன் ராச கெம்பீரன் சங்கித சாயித்திய வித்தி யாவி

10 னோதன் சோளமண்டலப் பிறஷ்டாபனாசாரியன் தொண்டமண்டல சண்ட

11 ப்பிறசண்டன் பாண்டிமண்டல ஷ்தாபனாசாரியன் ஈளமுங் கொங்கும்

12 யாள்பாணராயன் பட்டணமுங் கெசவேட்டை கொண்டருளிய ராசா

13 திராசன் அபிமானங்காத்தவன் அகளங்கள் அனந்தகலியாண குணா பிராமன்

14 மனுநீதி மறவாதான் வையகை வளநாடன் வேதியர்கள் காவலன் திலத

15 நுதல் மடவார்கள் மடலெளுதவரு சுமுகன் பதினென் பாசை வீணாப்

16 றவீணன் தொண்டியந்

17 துறைகாவலன் மலைகலங்கினும் மனங்கலங்காதான் துஷடநிக்கிறக

18 சிஷ்டபரிபாலனன் அஷ்டலகஷ்மிவாசன் சத்திய அரிச்சந்திரன் வில்லுக் கு வி

19 சையன் சொல்லுக்கு அகஸ்தியன் இவுளிபாவடி மிதித்தேறுவார் கண்டன்

20 உரிகோல் சுரதானன் வீரத்தண்டை சேமத்தலை விளங்குமிரு தாளி னான்

துகலூர்க் கூத்தத்துக்கதிபரான குலோத்துங்கசோள நல்லூர் கீள்பால்
விரையாத கண்டனிலிருக்கும் வங்கிஷாதிபரான ஸ்ரீமது இரணியகெற்
பயாசி ரவிகுல ரெகுனாத சேதுபதி காத்ததேவரவர்கள் வங்கிஷோ
த்தகரான ஸ்ரீமது முத்துராமலிங்க விசைய ரெகுனாதச் சேதுபதிகாத்
ததேவரவர்கள் வைகை தீரத்தில் நாகாச்சி மடம் தற்மத்துக்கு
புருசோ
த்தமபண்டிதரவர்கள் கையில் சறுவமானியமாக சஹிரணியோதக
தாறாபூறுவகமாக தாம்பிரசாசனம் தானம் பண்ணிக்குடுத்தபடி நிலவ
ரி இடங்கையவரி வலங்கையவரி கீதாரம் கரைமணிய மத்த ஆத
டைப்பலசுவந்தையளும் சறுவமானியமாக தானம் பண்ணி
க்கொடுத்த பெயராமாத்தேவன் யேந்தல் கிளக்கு எல்கையாவ
து பெரியானேந்தல் கண்மாயில் பெரியானேந்தல் எல்கையில்

## இரண்டாம் பக்கம்

மேப்படியூர் கொல்லமுத்தனாசாரியார் புஞ்சைக்கி மேற்கு தவளைக்
குளம் தென்கண்மாய் மூலக்கரை பிறகரை கரையடி தேத்தாலுக்கு
தெற்கு தெற்கு எல்கையாவது சித்தனேந்தல் வடகண்மாய் மூலக்கரை
க்கும் கிளக்கு சந்தைப்பாதைக்கு மேற்கு இதன்மேற்கு சித்தனேந்தல் வ
டகண்மாய் கடம்கொம்புக்கு வடக்கு பெயராமாயேந்தல் தென்மூல
கரைக்கும் பெயராமாயேந்தல்க் கண்மாய் வெட்டுத்தாவுக்கும் கிளக்
கு யேந்தல் வடகரை பிறகரை புஞ்சை அதுக்கும் பிறகரைமேற்கு எல்
கையாவது அக்கிறமேசி எல்கை புஞ்சையில் சிலையப்பனம்பலகாறன்
செய்க்கு இருளாண்டிவார் புஞ்சைக்கு மேற்கு இதன் வடக்கு அஞ்
சாமடை
கிளக்கு வயலுக்கு தெக்கு அஞ்சாமடை பள்ளபூவனமார் உளவு உளுத
புஞ்சைக்கும் விகாந்பரும்புக்கு தெற்கு தவளைக்குளம் தென்கண்மாய்
நடுக்க

43 ண்மாய் பாகைபொட்டல் பரும்புக்கு மேற்க்கு ஆக ஏந்தல் வட காட்டுப்புர

44 வு எல்கை நான்கெல்லைக்குள்ட்ட நஞ்சைபுஞ்சை திட்டுதிடல் மாவடை

45 மரவடை மேல்நோக்கிய மரம் கீள்நோக்கிய கிணறு சலதருபாஷாண

46 ம் நிட்சேபம் ஆத்துக்கால் ஊத்துக்கால் சகலமும் வினியாதிவிக்கிறய

47 ங்களுக்கும் யோக்கியமாக ஆதிசந்திராதித்தவரைக்கும் புத்திரபவுத்திர

48 பாரம்பரையமாக ஆண்டனுபவித்துக் கொள்வாராகவும் இந்த தற்ம

49 த்தை யாதாமொருவர் பரிபாலனம் பண்ணினவர்கள் கெங்கைக்கரையி

50 லே சேதுவிலே புண்ணியத்தலங்களிலே கோடிசிவலிங்கப்பிறதிட்டை

51 கோடி அக்கிறகாரப் பிறதிட்டை கோடிகன்னிகாதானம் பண்ணின பலனை

52 யடைவார்கள் இந்தற்மத்துக்கு யாதாமொருவர் விகாதம் பண்ணின பேர்

53 கெங்கைகரையிலே சேதுவிலே மாதாபிதா குருவை வதைபண்ணின தோஷத்தை

54 யடைவார்கள் உ ஸ்வதத்தாத்வி குணம் புண்யம் பரதத்தாறு பாலநம் பரதத்தாப

55 ஹாரேண ஸ்வத்தம் நிஷ்பலம் பவேது: உதாந பாலந யோர்மத்யே தாநாத் ஸ்ரயோ

56 நு பாலநம் தாநாத் ஸ்வர்க்க மவாப்நோதி பாலநாத் அச்சுதம் பதம்: ஏகைவ பகிநி

57 லோகே ஸர்வேஷா மேவ பூபுஜாம் நயோஜ்யா கரக் ரஹ்யா வி

58 ப்ரதத்தா வஸுந்தரா: உ இந்தப்படிக்கு பொக்கிசம் கணக்கு ஆதி நாராயண

59 பிள்ளைமகன் தளவாத்தான் கையெளுத்துப்படிக்கு வேலாயுதம் கை

60 யெளுத்து உ

ஸ்ரீ ராமநாத ஸ்வாமி ஸஹாயம்

# 97

# குளப்பட்டிச் செப்பேடு

இருக்கும் இடம் : அரசு அருங்காட்சியகம், எழும்பூர், சென்னை

அரசர் : முத்துராமலிங்க விசைய ரகுநாத சேதுபதி காத்ததேவர்

காலம் : 13--5--1782

**அமைப்பும் செய்தியும்** : பரமக்குடி வட்டத்தின் தென்பகுதியில் குளப்பட்டி அமைந்துள்ளது. அக் குளப்பட்டிக் கிராமத்தின் பாதிப் பகுதியை பாரத்வாஜ கோத்திரம், ஆபஸ்தம்ப சூத்திரம் யஜுர் வேதம் வல்ல அந்தணரான இராமசிவன் மகன் சுப்பிரமணிய அய்யருக்குக் கொடையாக அளித்ததை இச்செப்பேடு கூறுகிறது.[1]

குளப்பட்டியின் தெற்கு எல்லை விளத்தூர் வகுத்துக்கால், வடக்கு எல்லை ஆயக்குடிக்கால். கிழக்கு எல்லை ஆயக்குடிக் கண்மாய்ப் பொருத்துக்கரை. மேற்கு எல்லை ஆயக்குடி முக்வணை ஆகிய எல்லைகள் கூறப்பட்டுள்ளன. ஊரின் மாவடை, மரவடை, திட்டு, திடல், நன்செய் புன்செய், ஆத்துக்கால், ஊத்துக்கால், செய்த்தளை உள்ளிட்ட அனைத்து வருமானமும் பார்த்தி அளிக்கபபட்டது.

1. *ARE, A. 4 of 1940.*

மூல நகலைப் பார்த்து வேலாயுதம் என்பார் இச்செப்பேட்டை எழுதிய விபரம் கூறப்பட்டுள்ளது.

## செப்பேடு

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலியவாகன சகாப்தம் 1703 கலியப்தம் 4882 இதன்மே

2 ற் செல்லாநின்ற சுபகிறுதுநாம சம்வத்சரத்தில் உத்தராயண வசந்த
ரிது வை

3 காசி மாசம் கிஷ்ண பக்ஷம் அமாவாசி இந்து வாரம் ரோகிணி நட்க்ஷத்
திரம் சித்தநாம

4 யோகமும் சதுற்ப்பாத கரணமுங் கூடின சுபதினத்தில் தேவை நகரா
திபன் சே

5 து மூல துரந்தரன் ராமனாதசுவாமி காரிய துரந்தரன் சிவபூசா துரந்தர

6 ன் பரராசசேகரன் பரராசசிங்கம் அரியராயிர தள விபாடன் கண்ட

7 னாடு கொண்டு கொண்டாடு கொடாதான் பாண்டிமண்டல ஸ்தாப
னாச்

8 ரியன் சோளமண்டல பிறதிஷ்டாபனாசாரியன் தொண்டமண்டலச்
சண்ட

9 ப் பிறசண்டன் ஈளமுங் கொங்கும் யாழ்ப்பாணராயன் பட்டணமும்

10 அளித்துக் கெசவேட்டை கொண்டருளிய ராசாதிராசன் ராச பரமேஸ்
வர

11 ன் ராசமார்த்தாண்டன் ராசகுலதிலகன் ராசகெம்பீரன் துஷ்டராயிர
கண்ட

12 ன் மூவராயிர கண்டன் வேதியர்கள் காவலன் வைகை வளநாடன் தொ

13 ண்டியந்துறை காவலன் செம்பிவளநாடான் பட்டமானங்

14 காத்தவன் கொட்டமடக்கி இவுளி பா

15 வடி மிதித்தேறுவார் கண்டன் சொரிமு

16 த்து வன்னியன் திலதநுதல் மடவார்க

17 ள் மடலெழுத வருசுமுகன் சங்கீத சாயித்ய வித்தியா வினோ
18 தன் பதிணென்பாசை வீணாப்பிறவீணன் சகல சாம்பிறாச்சிய லக்ஷ்மி
19 வாசன் சத்திய அரிச்சந்திரன் கொண்டைக்கு கர்ணன் வில்லுக்கு வி
20 சையன் சொல்லுக்கு அகத்தியன் அலுமகேதனன் கெருடகேத
21 னன் மயூரகேதனன் குக்கிடகேதனன் சிங்கதேனன் மனுநீதி ம
22 றவாதவன் செங்காவிக்குடை விருதுசல்லி யுடையவன் சேமத்த
23 லை விளங்குமிரு தாளினான் மதுரவசனன் வங்கிசாதிபரான் துகவூர்க் கூ
24 த்ததது குலோத்துங்க சோழநல்லூர் கீள்பால் விரையாத கண்ட
25 னிலிருக்கும் ஸ்ரீமது இரணியகெற்பயாசி ரவிகுல ரெகுனாத
26 ச்சேதுபதி காத்த தேவரவர்கள் வங்கிச பரிபாலகரான ஸ்ரீமது
27 முத்துராமலிங்க விசைய ரெகுனாத சேதுபதி காத்த தேவர
28 வர்கள் பாரத்வாஜ கோத்திரத்தில் ஆபஸ்தம்ப சூத்திரத்தில் யெஜுஸா
29 காத்யாபகரான ராமசிவன் புத்திரன் சுப்பிறமணிய அய்யனுக்
30 கு குளபட்டி பாதியும் பூதானம் தாம்பிர சாசனமாகப் பண்ணி
31 க் கொடுத்தபடி இந்தக் கிறாமத்துக்கு எல்கையாவது விளத்தூர்
32 வகுத்துக் காலுக்கு வடக்கு ஆயக்குடி முகவணைக்குக் கிளக்கு ஆயக்
33 குடிக் காலுக்குத் தெற்கு ஆயக்குடிக் கண்மாய் பொருத்து கரைக்கு
34 மேற்க்கு இன்னாங்கெல்கைக் குள்பட்ட பாதிக்கு மாவடை
35 மரவடை திட்டுத்திடல் நஞ்சை புஞ்சை ஆத்துக்கால் ஊத்துக்கால் செ
36 ய்த்தலை நிதி நிட்சேபம் மேல்நோக்கிய மரம் கீழ்நோக்கிய கிணறு செ
37 ல்த ரு பாஷாணம் நிதி நிட்சேபம் என்று சொல்லப்பட்ட அஷ்டபோக
38 தேசசாமியும்மும் விநுயாதி வீக்கிறயங்களுக்கு யோக்கியமாக ஆ
39 தி சந்திராதித்தவரைக்கு ஆண்டனுபவித்துக் கொள்வாறாகவும்
40 இந்த தற்மத்தை யாதாமொருவர் பரிபாலனம் பண்ணினவர்

41 கள் கெங்கைக்கரையிலே சேதுவிலே புண்ணிய ஸ்தலங்களிலே
42 கோடி கன்னிகாதானம் கோடி கோதானம் கோடி சிவலிங்கப் பிற
43 திஷ்டை அக்கிறகாரப் பிறதிஷ்டை பண்ணின பலத்தையடைவாராகவு
44 ம் இந்த தற்மத்துக்கு யாதாமொருவர் விகாதம் பண்ணினவர்கள் கெ
45 ங்கைக் கரையிலே சேதுவிலே புண்ணிய ஸ்தலங்களிலே மாதா பிதா
46 குருவை வதை பண்ணின பாவத்தை யடைவாராகவும் உ
47 ஸ்வதத்தார்த்வி குணம் புண்யம் பரதத்தாநு பாலநம் பரதத்தாப ஹாரே
48 ண ஸ்வதத்தம் நிஷ்பலம் பவேது: தாந பாலந யோர்மத்யே தாந
49 ாச்ரயோநு பாலநம் தாநாத் ஸ்வர்க்க மவாப்நோதி பாலநாத் அச்சு
50 தம் பதம்; ஏகைவ பகநீ லோகோ ஸர்வேஷ மேவபூபுஜாம் ரயோ
51 ஜ்ய நகரக் ராஹ்யா விப்ரதத்தாவசுந்தரா: உ பட்டைய மெளுதினே
52 ன் சவாதுப்படிக்கு வேலாயுதம் கையெழுத்து உ ராமனாதசுவாமி
53 சகாயம் உ

# 98

# செய்யானேந்தல் ஓலைப்பட்டயம்

இருக்கும் இடம் : அனுமந்தக்குடி சமணப் பள்ளி

அரசர் : முத்து விசைய ரகுநாத முத்துராமலிங்க சேதுபதி காத்த தேவர்

காலம் : 7—1—1783

**அமைப்பும் செய்தியும்** : வழக்கமான செப்பேட்டில் இல்லாமல் ஓலைப்பட்டயமாக இஃதமைந்துள்ளது. ஒரே ஓலையின் இரண்டு பக்கங்களிலும் பக்கத்திற்கு ஏழு வரிகளாகப் பதினான்கு வரிகள் எழுதப் பட்டுள்ளன. சமணப்பள்ளிக்கு அதன் பழங் கொடையை நீக்கிப் பதிலாக வேறு ஊரை அளித்த ஓலைப்பட்டயமாக இது இருப்பினும் 'ஸ்ரீராமஜெயம்' என்று தொடங்குகிறது.

திருவாடானை வட்டம் அனுமந்தக்குடியில் மிகப் பழமையான சமணக்கோயில் ஒன்று உள்ளது. அருகபரமேசுவரர் மாளுவ நாயகர் தம்பிரானார் என்று அனுமந்தக்குடிக் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது. கி.பி. 1533ஆம் ஆண்டுக்குரிய கல்வெட்டு ஒன்றில் அவ்வூர் 'முத்தாற்றுக் கூற்றத்து ஜினேந்திரமங்கலமான குரவடிமிதி' என்று குறிக்கப் பட்டுள்ளது.[1]

சேதுபதி அரசர்தம் வேறொரு செப்பேட்டிலும் 'சமணப்பள்ளி' குறிக்கப்பட்டுள்ளது. சேதுபதி அரசர்கள் சமண சமயத்துக்கும் ஆதரவு கொடுத்ததை இவைகள் மெய்ப்பிக்கின்றன.

அனுமந்தக்குடிச் சமணப்பள்ளிக்கு முத்து விசைய ரகுநாத சேதுபதி கூத்த தேவரவர்கள் (1729-1735) அனுமந்தக்குடியைக் கொடையாக அளித்திருந்தார்.

முத்துராமலிங்க சேதுபதி அரசர் அவர்கள் (1762-1795) அனுமந்தக்குடிக் கொடையை நீக்கி அவ்வூரை அரண்மனைக்குச் சேர்த்துக்கொண்டு அதற்கு மாறாக வடக்குச் செய்யானேந்தல் என்னும் ஊரைக்கொடையாக அளித்ததையும் இந்த உத்தரவு பிரதானி முத்திருளப்பபிள்ளை மூலம் நிறைவேற்றப்பட்டது என்பதையும் இப்பட்டயம் கூறுகிறது.

மாற்றூராக அளிக்கப்பட்ட வடக்குச் செய்யானேந்தல் கிராமத்துக்கு எல்லைகளாவன:

கிழக்கு எல்லை பன்னானேந்தல் குளக்கால்; மேற்கு எல்லை சிவந்தான் கோட்டை எல்லை; வடக்கு எல்லை புளிக்குளத்து எல்லை; தெற்கு எல்லை தெற்குச் செய்யானேந்தல் பாம்பூரணி. இவ்வெல்லை கட்குட்பட்ட எல்லாவகையான நிலமும் கொடையாக அளிக்கப்பட்டது. எல்லைகளை நோக்க நன்செய் நிலங்கள் அடங்கிய வளமான பகுதிகளை இக்கோயிலுக்கு மாற்றாகச் சேதுபதி அரசர் அளித்துள்ளார் என்பது பெறப்படுகிறது.

மாலவ நாதர் மரகதவல்லி அம்மன் என்று சமணப்பள்ளி தெய்வத் திருமேனிகட்குப் பெயர் வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் பட்டயத்திற்கு வணங்காமுடி பழனியப்ப சேர்வைகாரன் என்பவரும், அனியாபதி அய்யணனம்பலம் என்பவரும் சாட்சிக் கையொப்பமிட்டுள்ளார்.

இந்தப் பட்டயம் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை முத்திங்களிதழ் வெளியீடான 'கல்வெட்டு' இதழில் வெளிவந்துள்ளது.[2]

---

1. கல்வெட்டு 18, காளயுக்தி, ஆடி, பக் 1-6.

2. *S.I.I. XXIII-408; ARE. 408 of 1907.*

# ஓலைப்பட்டயம்

## முதல் பக்கம்

## ஸ்ரீ ராமஜெயம்

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாற்த்தம் 1705 இன்மேல் செல்லாநின்ற சுப கிறுது வருசம் மார்கழி மாதம் 27 சுவாமி மா

2 லவநாத் சுவாமிக்கும் மரகதவல்லியம்மனுக்கும் மகர்சாத்தாவுக்கும் நித்தியம் பூசை மாத உத்சபம் அபிசேக நெய்வே

3 தினத்துக்கு திரூப்பணி வேலைக்கும் மகாராச ராசமானிய ரா இரலிய கெற்பயாசி ரவி குல முத்து விசைய ரெகுனாத சேது பதி

4 காத்த தேவரவர்கள் கட்டளையிட்ட கிறாமமாவது அனுமந்தக்குடி மூன் பூறுவீகமாக நடந்து வந்ததை அரண்மனையில் திறப் பில்

5 சேத்துக் கொண்டு மா-றா-ரா மானிய ரா முத்துவிசைய ரெகுநாத முத்துராமலிங்க சேதுபதி காத்த தேவரவர்கள் உத்தர

6 வின் பேரின் பிரதானி முத்திருளப்ப பிள்ளையவர்கள் உத்தரவு பண் ணின கிறாமம் வடக்குச் செய்யானேந்தலுக்கு பெருநான் கெல் லையாவது

7 கீள்பார்க் கெல்லையாவது பன்னானேந்தல் குளக்காலுக்கும் மேற்கு மேற்பக்கெல்லையாவது சிவந்தான் கோட்டை எல்லைக்கு

## இரண்டாம் பக்கம்

8 கிளக்கு வடபார்க்கெல்கையாவது புளிகுளத்து யெல்லைக்கு தெற்கு தென்பார்க்கெல்லையாவது தெற்குச் செய்யானேந்தல் பாம் பூரணிக்கு

9 வடக்கு இந்த பெருநான்கெல்லைக்கு உட்பட்ட நஞ்சை புஞ்சை திட்டு திடல் மாவடை மரவடை மேல்நோக்கிய மரமும் கீள்நோக் கிய கிண

10 றும் வயப்புச் செப்பிறை சகல சமுதாய பிரபா பாத்தியழும் சுவாமி மாலவநாதர்க்கும் மரகதவல்லி அம்மனுக்கும் மகா சாத்தா வுக்கும்

11 தான சாதனம் பூறுவ்மாக கட்டளையிட்டோம் ஆதி சந்திராதித்த- உள்ளவரைக்கும் அனுபவித்துக் கொள்ளக் கடவதாகவும்

12 இந்த தர்மத்துக்கு யாதாமொருவன் விகாதம் பண்ணினவர் கெங்கைக் கரையில் காராம் பசுவையும் பிதாவையும் குருவையும் கொ

13 ண்ட தோஷபிராத்தியடையக் கடவாராகவும் இதுக்கு சாட்சி வணங் காமுடி பளனியப்ப சேருவைகாரன் ஷி அனியாபதி அய்யண

14 னம்பலம்

# 99

# செப்பேடுகண்டான் செப்பேடு

இருக்கும் இடம் : இராமநாதபுரம் பண்டிதர்

அரசர் : முத்துராமலிங்க விசைய ரகுநாத சேதுபதி காத்த தேவர்

காலம் : 10–4–1783

**அமைப்பும் செய்தியும்** : இச்செப்பேட்டின் மூலப்படி கிடைக்க வில்லை.[1] 'ஸ்ரீராமநாத சுவாமி சகாயம்' என்று தெலுங்கில் எழுதப் பட்டுள்ளது.

சேதுபதியரசர் அவர்கள் அரித கோத்திரத்தில் ஆபஸ்தம்ப சூத்திரத்தில் யஜுர் வேதம் கற்ற சேஷாத்திரி அய்யங்கார் மகன் கிருஷ்ணய்யங்காருக்கு மேச சங்கராந்தி புண்ணிய காலத்தில் இராமநாதபுரத்தில் செப்பேடுகண்டான் என்னும் முத்துராமலிங்க பூபாலபுரத்தைக் கொடையாகக் கொடுத்ததை இச்செப்பேடு கூறுகிறது.

செப்பேடுகண்டான் கிராமத்துக்கு கிழக்கு எல்லை சேதுபாதை; தெற்கு எல்லை பத்தனேந்தல் வடகரை ஊரணித் தென்கரை; மேற்கு

---

1. *Tamil and Sanskrit Inscriptions, No. 17. pp. 100-103.*

எல்லை நம்பிப் பிள்ளையார் குட்டம், முனியன் திடல்; வடக்கு எல்லை சயரம் என்பனவாகும்.

தானத்தைக் காப்பதன் இன்றியமையாமையைக் கூறும் வட மொழிச்சுலோகம் ஒன்று கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளது.

இச்செப்பேட்டை முத்தப்பத்தர் மகன் வேலாயுதம் என்பவர் எழுதியுள்ளார். 'செப்பேடு கண்டான்' என்ற ஊர்ப்பெயர் சிறப்புக்குரியது. அவ்வூர்க்குச் சேதுபதி அரசர்தம் பெயர் வைக்கப்பட்டது என்பதை இச்செப்பேடு மூலம் அறிகின்றோம். முத்துராமலிங்க பூபாலபுரம் என அவ்வூர் அழைக்கப்பட்டது.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாஹந சகாப்தம் 1705 கலியப்பதம் 4885 இதன்

2 மேல்ச் செல்லாநின்ற சோபகிருது நாம சமவத்ஸரத்தில் உத்திராய

3 ணத்தில் வஸந்த ருதுவில் சைத்ர மாஸத்தில் சுக்லபக்ஷத்தில் குரு

4 வாஸரமும் அஷ்டமியும் புனர்வஸு நட்சத்திரமும் ஸுகர்மநாம யோகமும்

5 பவ கரணமும் கூடின ஸுபயோக ஸுபதினத்தில் ஸ்ரீமந் மஹாமண்ட

6 லேசுர தேவை நகராதிபன் சேதுமூல ரக்ஷா துரந்தரன் அரியராயிரத

7 ள விபாடன் பாஷைக்குத் தப்புவராயிர கண்டன் கண்டநாடு கொ

8 ண்டு கொண்டநாடு குடாதான் பாண்டிமண்டல ஸ்தாபனாசாரியன்

9 சோளமண்டலப் பிரதிஷ்டாபனாசாரியன் தொண்டமண்டல சண்டப்பி

10 றசண்டன் ஈளமுங் கொங்கும் யாட்பான தேசமும் எம்மண்டலமு

11 ங் கெசவேட்டை கொண்டருளிய ராசாதிராசன் ராசபரமேசுவரன்

12 ராசமாற்தாண்டன் ராசகெம்பீரன் ராசகுலதிலகன் இரவிகுல

13 சேகரன் சொரிமுத்து வன்னியன் அந்தம்பிற கண்டன் சாடிக்காறர்

14 கண்டன் சாமித்துரோகியள் மிண்டன் துட்டரில் துட்டன்

15 துட்டர் கொட்டமடக்கி இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகைமன்ன

16 ர் சிங்கம் ஆத்துப்பாச்சி கடலில்பாச்சி மதப்புலி அடைக்கலங்

17 காத்தான் தாலிக்கு வேலி சத்திராதிகள் மிண்டன் வன்னியராட்

18 டந் தவிர்த்தான் தொண்டியந்துறை சுவலன் துர்க ரேபந்தன் அ

19 னும கேதனன் கெருட கேதனன் சிங்க கேதனன் கொடைக்கு கர்

20 னன் பொறுமைக்குத் தற்மந் மல்லுக்கு வீமன் வில்லுக்கு விசைய

21 ன் பரிக்கு நகுலன் அரிவுக்கு அகஸ்தியன் சத்திய அரிச்சந்திரன் வீர வெண்ம்

22 பாமாலை உபைய சாமர உல்லாச சல்லாப சங்கீத சாயித்திய வித்தி

23 யாவினோதன் திலத நுதல் மடமாதர் மடலெளுத வருசுமுகன் விசைய

24 லெட்சுமிதாந்தன் அரச ராவண ராமன் அடியார் வேளைக்காரன் வீரத

25 ண்டை சேமத்தலை விளங்குமிரு தாளினான் துட்ட நிக்கிர சிஷ்டபரி பால

26 ணன் ஒட்டியர் தள விபாடன் ஒட்டியர் மோகந் தவிர்த்தாள் பரதள வி

27 பாடன் மலைகலங்கினும் மனங்கலங்காதான் அன்னசத்திர சோமன் பூலோக தே

28 வேந்திரன் சிவபூசா துரந்தரன் அனேக பிறமப் பிறதிடஷ்டாபகாரன் செம்பி வ

29 ள நாடன் செங்காவிக் குடையும் அதன்மேல் விருது வெண்கவரியும் பெ

30 ற்றவன் சகல சாம்பராச்சிய லெட்சுநிவாசன் ராமனாதசுவாமி காரி

## இரண்டாம் பக்கம்

31 ய துரந்தரன் தொகலூர் கூத்துத்து காத்தூரான குலோத்

32 துங்க சோளநல்லூர் கிள்பால் விரையாத கண்டலில் விளங்கிய துலாபு

33 ருவிதானாதி ஷோடசமஹாதான துரந்தரரான ஸ்ரீ ஹிரண்யகெற்பயாகி இரவி

34 குலசேகர ரெகுநாதச் சேதுபதி காத்த தேவரவர்கள் வங்கிஷோத்தக ரான ஸ்ரீ

35 மது முத்து ராமலிங்க விசைய ரெகுனாதச் சேதுபதி காத்த தேவர வர்கள் ஹரி

36 த கோத்திரத்தில் ஆபஸ்தம்ப சூத்ரத்தில் யஜுஸ்ஸாகாத்தியாபகராந சேஷாத்ரி அ

37 ய்யங்கார் புத்ரந் க்ருஷ்ணய்யங்காருக்கு மேஷ ஸங்கராந்தி புண்ய காலத்தில்

38 இராமநாதபுரத்தில் நிராவில் ஸஹரண்யோதக தாராபூர்வமாக பூதான ச

39 ாஸநம் பண்ணிக்கொடுத்தப்படி பூதாந சாஸனமாவது கைகி நாட்டுப் பத்

40 தில் செப்பேடு கண்டானுக்குப் பிறதிநாமமான மூத்துராமலிங்க பூபால புரம்

41 நமக்கு தாநசாஸநம் பண்ணிக் கொடுத்தப்படியினாலே இதுக்கு எல்கை

42 யாவது சேதுபாதைக்கு மேற்கு தென்பாற்கெல்கையாவது பத்தனே

43 ந்தலாணையாய் வடகரை ஊரணித் தென்கரை அரசுக்கு வடக்கு மேற்கெ

44 ல்கையாவது நம்பிப் புள்ளையார் குட்டத்துக்கும் முனியன் திடலுக்கும் கிளக்கு

45 வடக்கெல்கையாவது சயரத்துக்குத் தெற்கு இன்னான்கெல்லைக்குள் ப்ப

46 ட்ட செப்பேடு கண்டான் கிருஷ்ணய்யங்காருக்கு பூதான ஸஹிரண் யோதக தாரா

47 பூர்வ சாஸநம் பண்ணிக்கொடுத்தபடியினாலே இதிலுள்ள நஞ்சை புஞ்சை தி

48 ட்டுத் திடல் மாவடை மரவடை கீள்நோக்கிய கிணறு மேல்நோக்கிய மரம்

49 குட்டம் குளம் குளக்கால் குடிபடை பள்ப்பறை சொற்னாதாயம் நிதி நிக்ஷே

50 ப ஜல தரு பாஷாணாச்சிண்யாகாமிய சித்த சாத்யமென்று சொல்லப் பட்ட அஷ்ட

51 போக தேஜஸ்வாமியங்களும் தாநாதி விநிமய விக்ரயங்களுக்கும் யோ

52 க்யமாக புத்திர பவுத்திர பாரம்பரியமாக ஆச்சந்திராற்க ஸ்தாஹியாக சந்திரப் பிரவேசம்

53 வரையும் சந்திராதித்யவரையும் ஆண்டனுபவித்துக் கொள்வராகவும் இந்த தற்

54 மத்தை பரிபாலனம் பண்ணினபேர் கோடி சிவலிங்க பிரதிஷ்டையும்

55 கோடி பிரம பிறதிஷ்டையும் கோடி கோதானமும் பண்ணின புண்ணிய

56 ம் பெறுவாராகவும் இந்த தற்மத்துக்கு அஹிதம் நினைத்தபேர் காசி சேது

57 வில் கோகத்தி பிரமஹத்தி பண்ணின பாவத்தை அடைவராகவும் உ

58 ஸ்வதத்தாத்வி குணம் புண்யம் பரதத்தாநு பாலநம் பரதத்தாப ஹா

59 ரேண ஸ்வத்தம் நிஷ்பலம் பவேது: உ முத்தப்பத்தர் மகன் வேலா

60 யுதம் கையெழுத்து உ

# 100

# புவனேசுவரிபுரச் செப்பேடு

இருக்கும் இடம் : சங்கரன் குருக்கள், இராமேசுவரம்

அரசர் : முத்து ராமலிங்க விசைய ரகுநாதச் சேது பதி காத்த தேவர்

காலம் : 13–6–1783

**அமைப்பும் செய்தியும் :** மூலச் செப்பேடு கிடைக்காதவைகளில் இச்செப்பேடும் ஒன்றாகும்.[1] ஸ்ரீராமநாத சுவாமி சகாயம்' என்று தெலுங்கில் எழுதப்பட்டுள்ளது.

சேதுபதி அரசரால் ஏற்கனவே வரகுண வளநாட்டுப் பிரமதேச மான இராசசிங்க மங்கலம் உள்க்கடை அவ்வூர்க் கைலாசநாதர் கோயில் அர்ச்சனா போகத்துக்கு விடப்பட்டிருந்தது.

இப்போது இராசசிங்க மங்கலத்திற்குப் பதிலாக வரகுண வள நாட்டுப் பிரமதேசமான புவனேசுவரிபுரம் என்னும் முடிந்தனாவயல் கிராமம் முழுவதையும் மந்திரநாதக் குருக்கள் மகன் சங்கரலிங்கக்

1. *Tamil and Sanskrit Inscriptions, No. 18, pp. 103-105.*

குருக்கள் மூலம் மாற்றுக் கொடையாக அளிக்கப்பெற்றதை இச்செப் பேடு கூறுகிறது. அவ்வாறு மாற்றி அளித்ததற்கான காரணம் கூறப் பெறவில்லை.

முடிந்தனாவயல், கிழக்கே கருங்குடிக் கண்மாயையும் தெற்கே சொளந்தூர் வயலையும், மேற்கே பொன்மாரி வயலையும் வடக்கே அத் தானூர்க் கண்மாயையும் எல்லையாக உடையது என்பது செப்பேட்டில் விளக்கப்படுகிறது.

தானத்தைக் காப்பதன் பயனைக் கூறும் இரு வடமொழிச் சுலோகங்கள் கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளன. இச்செப்பேட்டை எழுதியவர் வேலாயுதம் என்பவர்.

கைலாயநாத சுவாமி சகாயம் என்ற தொடரோடு இச்செப்பேடு முடிவடைகிறது.

## செப்பேடு

1 ஸவஸ்திஸ்ரீ மந் மகாமண்டலேசுவரன் அரியராயிரதள விபாடன் பாசை

2 க்கு தப்புவராயிர கண்டன் மூவராயிர கண்டன் கண்டனாடு கொண்

3 டு கொண்டனாடு கொடாதான் பாண்டிமண்டல தாபனாசாரியன்

4 சோளமண்டலப் பிறதிஷ்டாபனாசாரியன் தொண்டமண்டல சண்டப் பிரசன்

5 டன் ஈளமும் கொங்கும் யான்பாண பட்டணமும் கெசவேட்டை கொ

6 ண்டருளிய ராசாதிராசன் ராசபரமேசுவரன் ராசமார்த்தாண்டன்

7 ராசகெம்பீரன் ராசகுல திலகன் துட்டரில் துட்டன் இளஞ்சிங்கம் தளஞ்

8 சிங்கம் பகைமன்னர் சிங்கம் ஆத்துப்பாச்சி கடலில்ப்பாச்சி மதப்புலி

9 தாலிக்குவேலி தொண்டியன்துறை காவலன் வைகை வளநாடன்

10 அரசராவண ராமன் அடியார் வேலைக்காரன் பரதள விபாடன்

11 துர்க ரேபந்தன் அந்தம்பிற கண்டன் சாடிக்காறர் கண்டன்

12 சாமித் துரோகியர் மிண்டன் பனுக்குவார் கண்டன் செம்பி

1 வளநாடன் சேமத்தலை விளங்குமிரு தாளினான் செங்காவிக்
14 குடையான் அனுமத் துவசன் கெருடத் துவசன் சிங்கத் துவசன்
15 மீனத் துவசமுடையான் திலதநுதல் மடமாதர் மடலெளு
16 தவரு சுமுகன் பரதநாடகப் பிறவீணன் வலியச்சருவி மதுரை
17 மானங் காத்தான் சத்திய அரிச்சந்திரன் குடைக்கு கற்னன் பரிக்கு
18 நகுலன் அறிவுக்கு அகஸ்தியன் பொறுமைக்குத் தற்மந் நிதிக்குக் கு
19 பேரன் வில்லுக்கு விசையன் தேவைநகராதிபன் ராமனா
20 த சுவாமி காரியா துரந்தரன் சிவபூசா துரந்தரன் இவுளி பாவடி
21 மிதித்தேறுவார் கண்டன் பஞ்ச பாணாவதாரன் சங்கீத சாயித்
22 திய வித்தியா வினோதன் ஓட்டியர்தள விபாடன் ஓட்டியர் மோ
23 கந் தவிர்த்தான் துலுக்கர்தள விபாடன் துலுக்கர் மோகந்
24 தவிர்த்தான் சமரகோலாகலன் சொன்னமொளி மார்ாத சுமுகன்
25 அசுபதி கெசபதி நரபதி சேதுபதியாகிய துகவூர்க் கூத்தத்துக் க
26 ாத்தூரான குலோத்துங்கசோள நல்லூர் கீள்பால் விரையா
27 த கண்டனிலிருக்கும் ராசமானிய ராசஸ்ரீ இரணிய கெற்பயா
28 ஜி முத்துராமலிங்க விசைய ரெகுநாதச் சேதுபதி காத்தத்
29 தேவரவர்கள் பிறிதிவிராச்சிய பரிபாலனம் பண்ணியரு
30 ளர்நின்ற ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1705 இதன்
31 மேல் கலியப்தம் 4884 இதன்மேற் செல்லாநின்ற
32 சோபகிருது நாம சம்வஸ்ஸரத்தில் உத்ராயணத்தில் கிரீ
33 ஷமரிதுவில் மிதுன மாசைய்யில் சுக்கில பட்சத்து திறயோதை
34 சியும் அனுச நஷத்திரமும் சுக்கிரவாரமும் சித்திநாமயோகமும்
35 தைதுல வாகரணமுங்கூடின சுபயோக சுபதினத்தில் சுத்தோதக
36 தாராபூற்வகமாக தானம்பண்ணினது வரகுண வளநாட்டுப் பிரம

37 தேசமான ராசசிங்கமங்கலம் கைலாசநாத சுவாமி கோயில்
38 அற்சனாபோகத்துக்கு மந்திரநாத குருக்கள் புத்திரன் சங்கரலிங்கக்கு
39 ருக்களுக்கு இராசசிங்கமங்கலம் உள்கடைக்குப் பரிவற்த்தனையாக வி
40 ட்டுக்குடுத்த கிறாமமாவது வரகுண வளநாட்டுப் பிரமதேசமான புவ
41 னேசுவரி புரத்துக்கு பிரதிநாமமான முடிந்தனாவயல் முளுதும் சஹி
42 ரண்யோதக தாராபூருவமாக தானம்பண்ணின படியினாலே
43 ஆண்டுகொள்வாராகவும் முடிந்தனாவயலுக்கு எல்லையாவது
44 கருங்குடிக் கண்மாய்க்கு மேற்கு சொளந்தூர் வயலுக்கு வடக்கு பொ
45 ன்மாரி வயலுக்கு கிளக்கு அத்தானூர் கண்மாய்க்கு தெற்கு இன்னா
46 ன்கெல்லைக் குள்ப்பட்ட யேந்தல்ப் பிரவிடை கண்மாய் நஞ்
47 சை புஞ்சை திட்டுத் திடல் மாவடை மரவடை மேல்நோக்கிய
48 மரம் கீள்நோக்கிய கிணறு நிதி நிக்ஷேபம் செல தரு பாஷாண
49 ஆகாமிய அஷ்ட்டபோகமும் சந்திராதித்தவரைக்கும் தானாதி
50 வினியாதி விக்கிறயங்களுக்கும் புத்திர பாரம்பரியமா
51 க ஆண்டு அனுபவித்துக்கொள்ளக் கடவாராகவும் இந்த தற்மத்
52 துக்கு வாக்கு சகாயம் அற்தசகாயம் பண்ணினவர்கள் கோடி
53 சிவலிங்கப் பிறதிஷ்டையும் கோடி பிறம பிறதிஷ்டையும் கோடி
54 கன்னிகாதானம் பண்ணின பலனை அடைவராகவும் இந்த
55 தற்மத்துக்கு விகாதம் பண்ணினவர்கள் கெங்கைக்கரையி
56 லே பிறமகத்தியும் ஸ்ரீகத்தியும் கோகத்தியும் பண்ணின பாவத்தி
57 லே போகக்கடவாராகவும் ஸ்வதித்தாத்வி குணம் புண்யம் பரதத்தா
59 நு பாலநம் பரதத்தாப ஹாரேண ஸ்வதத்தம் நிஷ்பலம் பவே
58 து: தாநபாலந யோர்மத்யே தாநா ச்ரயோநு பாலநம்
60 தா நா ஸ்வர்க்க மலாப்நோதி பாலநாத் அச்சுதம் பதம்: உ
61 இந்தப்படிக்கு எளுதினேன் வேலாயும் உ கையிலா
62 ஸநாத ஸ்வாமி ஸஹாயம் உ

ஸ்ரீராமநாத சுவாமி சகாயம்

# 101

## நெடியமாணிக்கம் செப்பேடு

இருக்கும் இடம் : திருப்புல்லாணி பெருமாள் கோயில் ஸ்தானிகர் திருவேங்கடம் ஐயங்கார்

அரசி : மங்களேசுவரி நாச்சியார்

காலம் : 17—11—1805

அளவு : 30.5 செ.மீ. x 16 செ.மீ.

**அமைப்பும் செய்தியும் :** இச்செப்பேட்டின் கைப்பிடியில் சிறு துவாரம் உள்ளது. துவாரத்தின் அருகில் சங்கு, சக்கரம், நாமம் ஆகிய வை பொறிக்கப்பட்டுள்ளன. வடமொழியில் அமைந்த தான சாசனக் காப்பு மொழிகள் பிற செப்பேடுகள் போலக் கிரந்த எழுத்துக்களில் எழுதாமல் தமிழ் எழுத்தில் பொறிக்கப்பட்டிருப்பது புதுமையானதாகும்.

மங்களேசுவரி நாச்சியார் முத்துராமலிங்க சேதுபதி (1762-1795) அவர்களின் மூத்த சகோதரியார், தாயார் முத்துத்திருவாயி நாச்சியார். தன் தம்பி முத்து ராமலிங்க சேதுபதியை அரசராக்கியது பொறுக்கா மல் வழக்குத் கொடுத்தும் கிழக்கிந்தியக் கம்பெனி அதிகாரிகளிடம்

முறையிட்டும் ஆட்சியைப் பெற விழைந்தவர்.[1] இவருடைய கணவர் மாப்பிள்ளைத் தேவர் என்ற இராமசாமித் தேவர் அவர் 1803 இல் இறந்தார்.

முத்துராமலிங்க சேதுபதியைச் சிறையில் அடைத்தபின் 8 ஆண்டுகள் இராமநாதபுரம் நிருவாகத்தை வழக்குமன்றமே மேற்கொண்டது. பின்னர் 3,24,404 ரூபாய் பெற்றுக் கொண்டு 20—2—1803 இல் ஜமீன்தாரினியாக மங்களேசுவரி நாச்சியாரைக் கம்பெனியார் நியமித்தனர். ஆண்டுதோறும் அத்தொகையைக் கம்பெனியார் வசூல் செய்தனர். மங்களேசுவரி நாசசியார் காலத்தில் பிரதானியாக இருந்தவர் தியாகராச பிள்ளை என்பவர்.

மதுரை மீனாட்சியம்மனுக்கு அர்த்தஜாமக்கட்டளை நிறுவி, இராமநாதபுரத்திலும் புகலூரிலும் புதிய சத்திரங்கள் கட்டி, மல்லாங்கிணறு பிடாரிசேரி ஆகிய ஊர்களிலுள்ள சத்திரங்களைப் பழுதுபார்த்து, மதுரை திருஞானசம்பந்தர் மடத்திருப்பணிக்கு உதவிய தெய்வபக்தி மிகுந்த மங்களேசுவரி நாச்சியார் தன் மகள் சேஷம்மா சங்குமுகம் அகத்திய தீர்த்ததில் பிரதிட்டை செய்த சீனிவாசப்பெருமாள் கோயிலுக்கு வழிபாட்டுக்காக காமங்கோட்டைத் தாலுக்கா புதூர் மாகாணம் நெடிய மாணிக்கம் என்னும் ஊரைக் கொடையாக அளித்ததை இச் செப்பேடு கூறுகிறது.

கொடையாக அளிக்கப்பட்ட நெடிய மாணிக்கத்தின் வடக்கு எல்லை புத்தூர் எல்லை; தெற்கு எல்லை வளநாட்டு எலலை; மேற்கு எல்லை உளையூர் எல்லை; கிழக்கு எல்லை சேமனூர் எல்லை.

ஜமீன்தாரின் பெண்ணாக இருப்பினும் மறைந்த அரசரின் பெயரைக்கூறிச் சேதுபதி மரபினர்க்குரிய பெரும்பாலான சிறப்பு அடைமொழிகள் கூறப்பட்டுள்ளது சிறப்புக்குரியது.

நெடியமாணிக்கத்தில் உள்ள கொடை நிலங்கள் விதை நெல் அளவைக் கொண்டே கூறப்பட்டுள்ளது. செப்பேடு இறுதிப் பகுதியில் ராணி சேதுபதி என்று கையொப்பம் இடப்பட்டுள்ளது.

இச்செப்பேட்டை எழுதியவர் உத்தரகோசமங்கை திருப்புல்லாணி அகத்திய தீர்த்தம் ஆகிய இடங்களில் சிற்பவேலைசெய்த வீரப்ப ஆசாரி மகன் இராமசாமி என்பவர் ஆவார்.

---

1 *Military consultations, Vol. 105A. 4. 9. 1800, pp 2608 22: Revenue consultations, Vol. 61, 18. 2. 1795 pp. 452-59*

இராணீ சேதுபதியார் 1812 இல் காலமானார். தன் கணவன் இராமசாமித் தேவரின் மருமகன் அண்ணாசாமித் தேவர் (1812-1820) என்பவரை 1807 இல் தன் வாரிசாக நியமித்தார்.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 உசுவஸ்ஸ்ரீமன் சாலிவாகன சகாத்தம் 1727 கலியப்தம் 4906 இதின்மேல்

2 ச்செல்லாநின்ற குறோதன நாம சம்மச்சரத்தில் தெஷ்சணாயணத்தில் சரரிதுவா

3 கிய காற்திகை மாதம் 4 உ ஆதித்தவாரனாள் அமரபட்சத்து ஏகா தெசியும் அத்த

4 நட்செத்திரமும் பிறிதிநாமயோகமும் பாலவாகரணமும் கூடின சுப

5 யோக சுபதினத்தில் சுவஸ்திஸ்ரீமன் மகாமண்டலேசுபரன் அரியர்த

6 ள விபாடன் பாசைக்குத் தப்புவராயிர கண்டன் மூவராயிரகண்டன் கண்டநாடு கொ

7 ண்டு கொண்டநாடு கொடாதான் பாண்டிமண்டலத் தாபனாசாரியன் சோளமண்ட

8 லப் பிறதிஷ்ட்டாபனாசாரியன் தொண்டமண்டலச் சண்டப்பிற சண்டன் ஈளமும்

9 கொங்கும் யாட்ப்பானபட்டணமும் கெசவேட்டை கொண்டருளிய ராச

10 ராதிராசன் ராசபரமேஸ்வரன் ராசமாற்தாண்டன் ராசகெம்பீரன் ராசகுலதிலகன்

11 உரிகோல் சுரதானன் அடியார் வேளைக்காறன் கோடிசூரியப்பிற காசன் அ

12 ஷ்ட்ட லெட்சுமிவாசன் பூலோக தெய்வேந்திரன் வேதியர்காவலன் அ

13 டைக்கலம் காத்தவன் இரவிகுலசேகரன் சொரிமுத்துவன்னியன் புவனேக

14 வீரன் சங்கீத சாயித்திய வித்தியா வினோதன் அந்தம்பிற கண்டன் சாடிக்காறர் கண்

15 டன் சாமித்துரோகியள் முண்டன் அரசராவண ராமன் தாலிக்குவேலி தண்டுவார்

16 முண்டன் சமையகோடாலி இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகைமன்னர் சிங்கம்

17 ஆத்துப்பாச்சி கடலில்ப்பாச்சி இவுளிபாவடி மிதித்தேறுவார் கண்டன்

18 வையாளி நாறாயணன் தொண்டியந்துறை காவலன் அனுமகேதனன்

19 கெருடகேதனன் சிங்க கேதனன் வியாக்கிறகேதனன் மயூரகேதனன் மான்

20 கேதனன் துஷ்ட்டரில் துட்டன் துட்ட நெட்டுரன் சிட்டபரிபாலனன் செங்காவி

21 க்குடையான் சேமத்தலை விளங்குமிரு தாளினான் திலதநுதல் மடவார் கள் ம

22 டலெளுத வருசுமுகன் தனுக்கோடி காவலன் மதுரை மானங் காத்தான் வலிய

23 ச்சருவி வளியில்க்கால் நீட்டி குடைக்கிக் கற்னன் பரிக்கி நகுலன் வில்லுக்கு வி

24 சையன் சொல்லுக்கு அரிச்சந்திரன் மல்லுக்கு வீமன் அறிவுக்கு அகத்திய

25 ன் வையகை வளநாடன் செம்பிவளனாடன் தேவை நகராதிபன் சேது மூல

26 ாதுரந்தரன் ராமனாதசுவாமி காரியாதுரந்தரன் துகவூர்க்கூத்தத்தில் காத்தூ

27 ரான குலோத்துங்கசோள நல்லூருக்கு கீன்பால் விரையாத கண்டனிலி

28 ருக்கும் அசுபதி கெசபதி நரபதி சேதுபதியாகிய மகாராசா ராசஸ்ரீ இரணி

29 யகெற்பயாசி ரவிகுல முத்துவிசைய ரெகுனாதசேதுபதி காத்ததேவரவ

30 ர்கள் வம்மிசோதாபகரான ஸ்ரீமது முத்து விசைய ரெகுனாத ராணி சேதுபதி

31 மங்களேசுவரி நாச்சியாரவர்கள் ஸ்ரீமது முத்து விசைய ரெகுனாத

32 ச்சேதுபதி புத்திரியாகிய சேஷம்மா அவர்கள் சங்குமுகம் அகத்திய தீ

## இரண்டாம் பக்கம்

33 ற்தத்தில் பிறதிஷ்ட்டை செய்து வைய்த்த சீனிவாசகப்பெருமாள் கோ

34 வில் அபிசேகம் பூசை நெய்வேதனத்துக்கு தானபூறுவ சாதனமாக வி

35 ட்டுக்குடுத்த கிறாமம் காமங்கோட்டைத்தாலுகா புத்தூர் மகாணத்தில் புத்தூர்

36 எல்கைக்கித் தெற்த வளனாட்டு எல்கைக்கி வடக்கு உளையூர் எல்கை க்கு கிளக்கு

37 சேமனூர் எல்கைக்கி மேற்கு இன்னான்கெல்கைக்குள்பட்ட நெடிய

38 மாணிக்கம் கிறாமம் ஒன்னுக்கு குளப்பிறமாணம் நஞ்சை விரையடி 54 கலம்

39 மாவிடை மரவிடை திட்டுத்திடல்

40 கீள்னோக்கிய கிணறு மேல்னோக்கிய மரம் பாசி படுகை நிதிநிட்சேப செல

41 தருபாஷாணாச்சண்ணியாகாமியமென்று சொல்லப்பட்ட அஷ்ட்ட போக தேச

42 சுவாமியங்களும் ஆதிசந்திராற்கசந்திரப்பிறவேசமுள்ள வரைக்கும் கல்லு

43 ம் காவேரியும் புல்லும் பூமியுள்ள வரைக்கும் ஆண்டனுபவித்துக் கொள்ளக்கடவா

44 ராசவும் அந்தக் கிறாமத்தில் வரப்பட்ட சகல ஹதியத்தையும் சங்கு முகம் அகத்திய தீ

45 ற்த்தம் சீனிவாசகப்பெருமாள் கோவில்ப் பூசைநெய்வேதினம் தான் வில்லா

46 மல் நடப்பிவிச்சுக்கொள்ளக் கடவாராகவும் இந்ததற்மத்தை யாதா மொருதர் புறோ

47 விற்தி பன்னுகிறார்களோ அவர்களுக்கு காசியிலே கெங்கைக்கரையி லேயும்

48 புண்ணிய சேத்திரங்களிலேயும் அனேகச் சிவபிரதிஷ்ட்டையஞ்ம் விஷ்ணு

49 ப்பிறதிஷ்ட்டையளும் அனேகம் அக்கிறாகாரப் பிறதிஷ்ட்டையும்
பன்னி

50 விச்சபலனை அடைவார்களாகவும் யிதற்கு அகிதம் நினைக்கப்பட்ட
பேற்கள் கெ

51 ங்கைகரையிலே அனேகம் கோவதை மாதுருவதைபன்னின தோசத்தை

52 யடைவாராகவும் சுதத்தாதி குணம் புண்ணியம் பரதத்தாஞபாலனம்
பரதத்தாபகா

53 ரெனா சுதத்தம் நிற்பலம் பவேது: தானபாலன யோர்மற்றே தானா
சிரெயோ

54 ன பாலனம் தானா சுவற்க மவாப்புனோதி பாலனா தச்சுதம்:பதம்
இந்தச்சா

55 தனப்பட்டையம் யெஞ்தினேன் திருஉத்தரகோச

56 மங்ஙை திருப்புல்லாணி அகத்திய தீற்த்தம் சிப்

57 பம் வீரப்பாசாரி மகன் ராமசாமி லிகிதம்

உ ராணி சேதுபதி

# 102

# வீரலட்சுமி நாச்சியார் செப்பேடு

| | | |
|---|---|---|
| இருக்கும் இடம் | : | சென்னை தாம்பரம், சுந்தரசாமித் தேவர் |
| அரசர் (ஜமீன்) | : | முத்துவிசைய ரகுநாத முத்துராமலிங்க சேதுபதி |
| காலம் | : | 4—10—1808 |

**அமைப்பும் செய்தியும்** : சேதுபதி மன்னர்களில் கடைசி அரசரான இம்மன்னரைப் பதவி நீக்கம் செய்த கிழக்கிந்தியக் கம்பெனியார் 7—5—1795 முதல் இராமநாதபுரம் அரண்மனையைக் கைப்பற்றி எட்டாண்டுகள் தம் வசம் வைத்திருந்தனர். 1803 இல் இம் மன்னரின் தமக்கையார் மங்களேசுவரி நாச்சியாரை சேது நாட்டின் ஜமீன்தாரினியாக நியமனம் செய்தனர்.

சேதுபதி மன்னர் சென்னையில் சிறையிலிருந்தார். அவர்தம் முதல் மனைவியார் ராஜேஸ்வரி நாச்சியார் தன் பெண் குழந்தையுடன் இராமநாதபுரம் அரண்மனையிலிருந்தார். அரசரின் இரண்டாவது மனைவி வீரலட்சுமி நாச்சியார் சென்னையில் சிறையிலிருந்த அரசருடன் இருந்தார். கர்ப்பமாக இருந்த வீரலட்சுமி நாச்சியாருக்குக்

குழந்தை பிறந்தால் மங்களேசுவரி நாச்சியாரிடம் ஒப்புவித்து அரசு பென்ஷன் தொகை பெறும் பொருட்டு இச்செப்பேட்டை வெட்டித் தந்தார். அரசர் 23—1—1809 அன்று இறந்தார். ஆங்கிலேயரிடம் முறையிட்டு எவ்விதப் பலனும் ஏற்படாத நிலையில் 31—10—1809 அன்று வீரலட்சுமி நாச்சியார் இராமநாதபுரம் திரும்பினார்.

## செப்பேடு

1 இராமநாதபுரம் ஜெமீன் கிரண்ய கர்
2 ப்பயாஜி இரவிகுல முத்துவிசைய ரெகுநாத முத்து
3 ராமலிங்க சேதுபதியவர்கள் தன்பாரி
4 கெற்பவதியாகியிருக்கும் வீரலட்சுமி நாச்
5 சியார் அவர்களுக்கு 1808 வருடம் அக்டோபர் மீ 4ந்தேதி
6 எழுதிக் கொடுத்த சாசனம்
7 1795ம் வருடம் மார்ச் மீ 4 தேதி நவாபு வாலாசாகி
8 புக்கும் மதராஸ் ஓப்பேர்ட் கவர்னர் துரையவர்
9 களுக்கும் நடந்த உடன்படிக்கை படிக்கும்
10 1803 ஆம் வரு ஏப்ரல் மீ 5ந் தேதி 24ந் தேதி
11 யிலும் கவர்மெண்டார் அவர்களா
12 லே பிறத்திருக்கித்திரமான உத்திரவுப்
13 படிக்கும் கர்ப்பவதியாய் இருக்கின்ற என்பாரி வீர
14 லட்சுமி நாச்சியாருக்கு குழந்தை பிறந்த உ
15 டன் இராமநாதபுரம் ஜெமீனுக்குத் கொண்டு
16 போய் தமக்கை மங்களேஸ்வரி நாச்சி
17 யாரிடம் ஒப்புவித்து கவர்மெ
18 ண்டு பென்சனும் ஜெமீனில் அலவெண்சு
19 ம் சந்ததி பரம்பரையாய் கொடுத்து
20 பாதுகாத்து வரவும்

# 103

## பெரியமடைச் செப்பேடு

இருக்கும் இடம் : மேலைப் பனையூர் கரு. இராசேந்திரன்

அரசர் : வயிரமுத்து விசைய ரகுநாத ராமலிங்க சேதுபதி

காலம் : 1478

**அமைப்பும் செய்தியும் :** இது கைப்பிடி இல்லாத சிறு செப்பேடு இச்செப்பேட்டின் மூலப்படி கிடைக்காமையால் இதன் கையெழுத்துப் படியைக் கொண்டே இங்கு பதிப்பிக்கப் பெறுகிறது.

சேதுபதி அரசர் ஊருக்கு ஒரு சிறை கேட்டபோது கார்காத்த வேளாளர் கொடுத்த காணியாட்சியில் இருக்கும் சேதுகாவல்ப் புரையர் மறமன்னர் வாள்க்கோட்டைராயன் நாலுகரைப்புரையார் கூடி மளுவிராயப் புரையார் அசையாவீரன் மகள் முத்துக் கருப்பாயியைச் சிறை தந்தனர். அதன் பொருட்டு அனைத்துக் கரைப்புரையரும் கூடி மளுவிராயப் புரையருக்குக் காணியாக பெரிய வயலில் பெரியமடையில் நீர் பாயும் நிலத்தில் 20 கலவிரையடி நிலத்தைக் கொடையாகக் கொடுத்ததை இச்செப்பேடு கூறுகிறது.

இச்செப்பேட்டுக்கு ஈசுவரன் கோயில் மகாமண்டபத்தில் கல் வெட்டு நகல் உண்டு என்று கூறப்பட்டுள்ளது. இவ்வாறு அளிக்க

வேண்டும் என்று நாட்டுக் கணக்கர் மூவேந்திர வேளார் தீர்ப்பளித் துள்ளார்.

இச்செப்பேட்டின் காலமும் பொருந்திவரவில்லை.

## செப்பேடு

ஸ்ரீ மகாமண்டலீசுபரன் அறியதள விபாடன் பாசைக்கி தப்பு மூவராய கண்டனாடு கொண்டு கொண்டனாடு கொடாதான் பாண்டி மண்டலத்தார் பஞ்சாளனாச்சாரியார் சோழமண்டலப் பிறதெச்சனாச்சாரியார் தொண்ட மண்டலப் பிறதாபன் ராசாதிராசன் ராசமார்த்தாண்டன் ராசகெம்பீரன் ராசாக்கள் தம்பிரான் மல்லிகச்சிராயர் மகாராய வீமராயர் விசையராயர் அசுபதி கெஷபதி நரபதி தெச்சினாதிபதி பிறதிவு ராச்சியபாரம் பண்ணியரு ளாயிதின்ற சாலிகவாகன சகாத்தம் 1400க்கு மேல் செல்லாயி நின்றன கர ஹ மாசி மீ 11 விறுதாசாய் பயங்கரன் கானாட்டில் கோவிந்தநாராயண புரம் கோட்டூருக் காணியாட்சியான காருகாத்த வேளாளர்குடுத்த காணியாச் சியில்லிருக்கும் சேது காவல்ப்புரையர் மறமன்னர் வாள்க்கோட்டைராயன் நாலு கரைப்புரையாருள்ளிட்டாரும் கூடி ராயிராயர் மானிய துரையவர்கள் வயிர முத்து விசைய ரெகுநாத ராமலிங்க சேதுபதியவர்கள் ஊருக்கு ஒருசிறை எடுத்தபோது கோட்டூருக்கு நாங்கள் நாலுகரைப்புரையாருமாகக் கூடி மஞுவி ராயப் புரையார் அசையா வீரன் சிறை முத்துக் கருப்பாயியை சிறை குடுத்த படியினாலே நாங்கள் நாலுகரைப்புரையரும் கூடி மஞுவிராயப்புரையர் அசை யாவிரனுள்ளிட்டாருக்கும் குடுத்த காணியாட்சியாவது நஞ்சையில் பெரிய வயலில் பெரியமடை வாய்க்கால் மேல்புறம் பெரியகல்லுக்கு சுத்திய நஞ்சையில் நாலு மா நிலமும் விறுமதாயம் ஏந்தல் நஞ்சை கண்டதும் பிஞ்சையில் மந்தைக் காட்டில் 20 வீரையடி காடும் சறு அடி தள்ளி உளந்து அரவிலை நாங்கெல் லைபடிக்கி நாலத்தொரு கரை முன்கரை அம்பலம் உம்பளம் ஆண்டு அனு பவித்துக்கொள்ளவும் இப்படிக்கி கல்வெட்டு நஞ்சையில் கல்வெட்டு பீசுபரன் கோவில் மகாமண்டபம் கல்லுப்வெட்டி தாய்பூர சாதனம் குடுத்தோம் யிப் படிக்கி கல்லுபுல்லு பூமி சந்திரன் சூரியனுள்ளவரைக்கும் ஆளுவது யிப்படிக்கி ஷியூர் நாட்டுக் கணக்கு அறுகாத வட்டகை மூவேந்திர வேளார் திருப்பி மெய்யநாத சுவாமி உய்யவந்தவள் துணை

# 104

## துவாக்குடிச் செப்பேடு

இருக்கும் இடம் : மேலப்பனையூர் கரு. இராசேந்திரன்

அரசர் : முத்து ராமலிங்கச் சேதுபதி

காலம் : 1478

அளவு : 12 செ.மீ. × 10 செ.மீ.

**அமைப்பும் செய்தியும் :** இச்செப்பேடு கைப்பிடி இல்லாமல் சிறு அளவில் செய்யப்பட்டுள்ளது. தமிழில் மட்டுமே எழுதப்பெற்றுள்ள செப்பேடு. பிழைகள் மலிந்த செப்பேடு புதுக்கோட்டை வட்டாரத்தில் பல கிடைக்கின்றன. அவற்றில் சேதுபதி பெயர் பொறிக்கப்பெற்ற மூன்று செப்பேடுகள் மட்டும் இங்குப் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

கார்காத்த வேளாளரில் கொளும்பிச்சர் என்பாருடைய மகள் முருகாயி என்பவள் சேதுபதி அரசர் ஊருக்கு ஒரு சிறை எடுத்தபோது சிறை எடுக்கப்பட்டாள். அவள் சிறையெடுக்கப்பட்டமைக்காகத் சீய சோழ கெம்பீர வளநாடு கோனாடு பிறமலை சூழ்ந்த பொன்னமராவதி நாட்டில் வடபத்தில் ஆயிரமங்கல ஊரவராகிய அஞ்சுகரைப்புரையர் உள்ளிட்டாரும் சிறை அளித்த கொளும்பிச்சருக்குக் கொடுத்த காணி பற்றி இச்செப்பேடு கூறுகிறது.

சிறைஎடுப்பது என்பது பாளையக்காரர்களோ, அல்லது அரசர் களோ தமக்குத் தேவையான பெண்களை அரண்மனைக்கு அழைத் துக்கொள்ளும் பண்டைய வழக்கம் போலும்.

பல இடங்களில் நன்செயும் புன்செயும் கொடுத்து அதன் வரு வாயை அனுபவித்துக் கொள்ளுமாறு செய்தனர். கல்வெட்டும்வெட்டிக் கொடுத்தனர். செப்பேடும் எழுதித் தந்தனர். கல்வெட்டுகளில் கல்லி லும் செம்பிலும் பொறித்துக் கொள்ளுக என எழுதப்பெற்ற மரபு இங்கு செப்பேட்டிலும் காணப்படுகிறது.

அழகிய நாயகி ஒளியவள் துணை என்றும் முருகியேந்தல் நன் செய்யை ஆளுவது என்றும் இறுதியில் எழுதப்பட்டுள்ளது.

ஊர்க்குப்பை, பாட்டு, பள்ளு, இவைகளைச் சோலை உடை யானும், சாத்தக் குடும்பனும், தண்டும்புலி குடும்பனும், காத்தகுடும் பனும் உள்பட்ட மக்களும் மற்றும் உண்டாகிய குடிபடைகளும் சருவ மானியமாக வரியின்றி அனுபவித்துக்கொள்ள அனுமதி அளிக்கப் படட்து.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 உ ஸ்ரீ மகாமணல்லீசுபரன் அரிய

2 தள வியபாடன் பாசைக்கி தப்பு

3 மூவராய கண்டன் கண்டநாடு கெ

4 ாண்டு கொண்டநாடு குடதான் பா

5 ண்டி மண்டலத்தார் பஞ்சாளவனாச

6 ாரியார் தொண்டமண்டலப் பிறதாபன்

7 சோலமண்டலப் பிறதெச்சனாசாரியர்

8 ர் கட்டாரி சாளுவன் தொட்டாரி யுடை

9 யோன் ஒடித் தப்புவார்க் கண்டன் சே

10 தடிக் கட்டுவார் முண்டன் ராசாதி ராசன்

11 ராசமாற்த்தாண்டன் ராசாக்கள் தம்பிரன்

12 மல்லிக்கச்சி ராயர் மகராயர் வீம ரா

13 யர் விசைய ராயர் அசுபதி கெஷபதி நர

14 பதி தெச்சினாபதி சிறுது ராச்சிய

15 பாரம் பண்ணியருளயிநின்ற சாலி

16 கவாகன சகாத்தம் 1400க்கு மேல்

17 ச் செல்லாயிநின்றென கர ஹூ மாசி

18 மீ 9உ சியசோள கெம்பீர வள

19 ர் நாடாகிய கோனாடு பிறமலை சூள்

20 ந்த பொன்னமராபதி நாட்டில் வட

21 பத்தில் ஆயிரமங்கலமாகிய துவாலை

22 யில் ஊராயமைந்த ஊரவர்கள் அஞ்

23 சு கரைப்புரையாருள்ளிட்டரும் கொ

24 ாளும்பிச்சருதேவன்னுள்ளிட்டார்க்

25 கும் சிரைகுடுத்த பட்டயம் குடுத்த வ

26 கையாவது ரா ராயமானிய ராயதுரை

27 யவர்கள் வயிர முத்து ராமலிங்கச் சே

28 சதுபதியவர்கள் ஊருக்கு ஒரு

29 சிரை குடுத்தபோது கொளும்பிச்சரு சே

30 தவன் சிரை முருகாயியை சிரை கு

31 டுத்தபடியினாலே நாங்கள் அஞ்சுக

32 ரைப்புரையாருள்ளிட்டாரும் குடுத்த க

33 ானியாவது முதசுரை அம்பளம் உம்பளம்

34 நஞ்சையில் துவாகுடி ஏந்தலும் நஞ்சை
35 கண்டதும் வள்ளிவயலில் அஞ்சுரெண்டு
36 பங்கும் பிஞ்சையில் மந்தைக்காடு கோ
37 ட்டைக்கரைப் பிஞ்சையில் யிருகல விஞ
38 ரயடிக் காடும் சறுவ மானியம்ந் தள்ளி
39 ஊரது புரவில் அஞ்சில் ஒரு கரையு
40 ம் மன்னு மனை கோவில்க் குளம் வறை
41 யிடை பள்ளுப் பரை சகலமும் ஆண்டு
42 கொள்ளுவது திருவிளா மண்டக
43 ப்படி மண்டபம் கல்வெட்டு நஞ்சை சு
44 ல்வெட்டுப்படி தாம்பூர சாதனம் குடு
45 த்தபடி யிப்படி ஷெயூர் நாட்டுக்கணக்
46 கு அறுகாத வட்டகை மூவேந்திர தே
47 வளார் திருப்பூ அளகிய நாயகி ஒளி
48 யவள் துணை உ முருகியேந்தல் ந
49 ஞ்சை கண்டது ஆளுவது

# 105

# ஆலங்குளச் செப்பேடு

இருக்கும் இடம் : மேலைப் பனையூர் கரு. இராசேந்திரன்

அரசர் : வயிரமுத்து விசைய ரகுநாத இராமலிங்க சேதுபதி

காலம் : 1478

**அமைப்பும் செய்தியும்** : இது கைப்பிடி இல்லாத சிறு செப்பேடு. செப்பேட்டின் மூலப்படி கிடைக்கவில்லை. கிடைத்த காகிதப்படியைக் கொண்டு இங்கு இச்செப்பேடு பதிப்பிக்கப்படுகிறது.

புதுக்கோட்டை வட்டாரத்தின் காணியாளர்கள் கார்காத்த வேளாளர் என்று முதற்கண் கூறப்படுகிறது. விருதராச பயங்க வள நாட்டில் கார்காத்த வேளாளரில் வாணாதராயர் கரையில் நத்தம் 108, குடிக்காடு 308, பிரமதாயம் 9, தேவதாயம் 7, நாடு 60 கூறப்படுகின்றன.

மறவர் மன்னர் சேதுபதி அரசர் சிறைகேட்ட போது பல்லவராயப் புரையரில் மொக்கு புலித்தேவன் மகள் அழகிய நல்லாளைச் சிறை கொடுத்தனர்.

அச்சிறை கொடுத்தமைக்காக எட்டுக்கரைப் புரையரும் சேர்ந்து ஆலங்குளம் என்னும் ஊரில் இருக்கும் நிலங்களில் 20 கல விரையடி நிலத்தைச் சிறை கொடுத்த குடும்பத்திற்குக் காணியாக அளித்ததை இச்செப்பேடு கூறுகிறது.

சிறை கொடுத்தல் என்பது அரசருக்குப் பெண் கொடுப்பது போலும். இச்செப்பேட்டு அமைப்பில் பல செப்பேடுகள் புதுக்கோட்டைப் பகுதியில் வழங்குகிறது.

இச்செப்பேட்டின் காலம் பொருந்திவரவில்லை.

## செப்பேடு

உ ஸ்ரீ மகாமண்டலீசுபரன் அறியதள வியபாடன் பாசைக்கித் தப்பு மூவ ராய கண்டன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு குடாதான் பாண்டிமண்ட லத்தார் பஞ்சாளனைச்சாரியார் சோளமண்டலப் பிறாதச்சனாச்சாரியார் தொண்டமண்டலப் பிறதாபன் கட்டாரி சாளுவன் தெட்டாரியுடையோன் ஓடித்தப்புவார் கண்டன் சம்மட்டி நாறாயண வங்கி நாறாயணன் யீளமும் கொங்கும் யாழ்ப்பாணமும் கிசைவேட்டை கொண்டருளிய ராசாதிராசன் ராசமாத்தாண்டன் ராசகம்பீரன் ராசவீர வசந்தராயர் மல்லிகச்சிராயர் மகாராயர் வீமராயர் அசுபதி கெஷபதி சிறுது ராச்சியபாரம் பண்ணியருளாயி நின்ற சாலிகவாகன சகாத்தம் 1400 செல்லாயிநின்றன கர ஹூ மாசி மீ 11 தீ விறுதாய பயங்கரன் கானாட்டில் விரைசை நல்லூர்க் காணியாச்சிக்கி கற்த்த ராகிய காருகாத்த வேளாளர் வாணாதராயர் கரை ஒன்னுக்கும் நத்தம் 108க்கு குடிக்காடு 308க்கு விறுமதாயம் 9 தேவதாயம் 7 நாடு 60 தலையூராகிய பான்னூ றுரு பாண்டியபுரம் ஆதன கூத்தம் காருகாத்த வேளாளர் குடுத்த காணியான விரைசை நல்லூருக்கு காணியாச்சிக்கு வந்த சேதுகாவல்ப் புரையர் மறமன்னர் கரை 85 கரைபுரை ராய துரையவர்கள் வயிரமுத்து விசைய ரெகுநாத ராமலிங்க சேதுபதியவர்கள் மறமன்னர் வகையில் ரெகுநாத ராமலிங்க சேதுபதியவர்கள் மறமன்னர் வகையில் ஊருக்கு ஒரு சிறை எடுத்தபோது விரைசை நல்லூரில் சிறை கேட்டதுக்கு நாங்கள் அஞ்சுகரைப்புரையா ருள்ளிட்டாரும் கூடி பல்ல வராயப் புரையர் மொக்கு புலித்தேவன் சிறையை அழகிய நல்லாளை சிறை குடுத்தபடியினாலே நாங்கள் எட்டுக்கரைப் புரையரும் குடுத்த காணியாட்சி யாவது நஞ்சையில் ஆலங்குளம் நஞ்சை கண்டதும் பிஞ்சையில் கும்மாயில் நீர்ப்புடிக்கி மேற்கு 20 கலம் விரையடிக் காடும் அக்கரைக்கி முதக்கரை அம்பளம் உம்பளம் குடுத்தபடியினாலே நஞ்சையில் கல்வெட்டு யீசுபரன் கோயிலில் பெருமாள் கோவில் கல்லும் வெட்டி தாம்பூர சாதனம் குடுத் தோம் யிப்படிக்கு ஷியூர் நாட்டுக்கணக்கு அறுகாத வட்டகை மூவேந்திர வேளார் தீருப்பு அளகிய நாயகி ஒலியவள் துணை

# 106

# வடமாத்தூர்ச் செப்பேடு

| | | |
|---|---|---|
| இருக்கும் இடம் | : | மதுரை மாவட்ட நீதிமன்றம்[1] |
| அரசர் | : | முத்து விசைய ரகுநாதச் சேதுபதி |
| காலம் | : | 15—8—1603 |
| அளவு | : | 30 செ.மீ. × 18 செ.மீ. |

**அமைப்பும் செய்தியும்** : மதுரை மாவட்ட நீதி மன்றத்தில் இருந்த இச்செப்பேட்டின் சுருக்கம் சீவெல் அவர்களால் வெளியிடப்பெற்றது. 1886 இல் ஜேம்ஸ் பர்கஸ் அவர்களும் எஸ். எம். நடேச சாஸ்திரி அவர்களும் எழுதிய 'தமிழ், வடமொழிச் சாசனங்கள்' என்னும் நூலில் இச்செப்பேட்டு வாசகத்தை வெளியிட்டன. நடேச சாஸ்திரிகள் இதற்கு ஆங்கில மொழியாக்கமும் செய்துள்ளார்.

வழக்கமான கொடைச் செப்பேடாக இல்லாமல் பெற்ற காணியின் உரிமையை நிலைநாட்டிக் கொள்ளச் செப்பேடு கேட்டுப் பெற்ற விபரத்தை இச்செப்பேடு கூறுகிறது.

காவிரி-கொள்ளிடம் பிரியாத அகண்ட காவிரிப் பகுதியிலிருந்து காஞ்சிவளம் காமாட்சியம்மாள் படைத்தலைவர் வடமாத்தூருக்கு வந்து

---

1. *Tamil and Sanskrit Inscriptions No. 1, pp. 62-55; Sewell's Lists, Vol. II, No. 31. p. 5.*

காணியாட்சி பெற்றனர். வடமாத்தூர்ப் பகுதி கள்ளர் சீமையாகி விட்டது. அங்கு வன்னியர் காணியாட்சி பெற்றது போல இடையரும் காணியாட்சி பெற்றிருந்தனர்.

கனேறிக் கள்ளர் அரசநத்தத்தில் குடியேறியிருந்தனர். அவர்களு டன் நிறுபானி நத்தத்துச் சேருவைகாரர் காணியின்பொருட்டுச் சண்டையிட்டுக் கொண்டனர். அங்கு வாழ்ந்த இடையர் இருவருக்கும் பொதுவாக இருந்தனர். ஏழுகட்டு சொக்கன்திடல் சென்றிருந்த சேருவைகாரருடன் கள்ளர் சண்டையிட்டபோதும் இடையர் நடுநிலை யாக இருந்து இருவருக்கும் பல வழிகளில் உதவியாக இருந்தனர்.

காணி தொடர்பாகக் கள்ளரும் சேருவைகாரரும் சண்டையிட்டுக் கொண்டதைக் கண்ட இடையர் தம் சந்ததிகளுக்குப் பாதுகாப்பாகத் தாம் பெற்ற காணிக்குச் செப்புப்பட்டயம் எழுதிக் கொள்ள விரும்பினர்.

இவ்விருப்பத்தைக் கள்ளர், சேருவைகாரரிடம் சொல்ல அவர் கள் நாலு கிராமத்தாரைக் கூட்டிவைத்துச் செப்பேடு செய்யவேண்டும் என்றனர்.

அதன்படி தமறாக்கி நாட்டார், முடிகண்டன், அம்பலக்காரர், நாலு கோட்டை நாட்டு அம்பலக்காரர், பெரியகோட்டைக் கவண்டமார், காறூரு கல்லூருணி கவண்டமார், கன்னாரிருப்பு அம்பலக்காரர், வேல்குள அம்பலக்காரர் ஆகியோர் ஆலப்பட்டி ஆலமரத்தின் அடியில் கூடியிருந்தார்கள்.

நாட்டார் கூட்டத்தின் நோக்கம்பற்றிக் கேட்கக் கூட்டம் கூட்டிய நோக்கம் சொல்லப்பட்டது.

அனுபவிக்கும் நிலத்தின் எல்லைகளைக் கூறுமாறு கேட்டார்கள். இடையர் எல்லை கூறவும் அரசநத்தம் கள்ளர், சொக்கன்திடல் சேருவைகாரர் வேலங்குளம் வேலத்தேவன், கன்னாரிருப்பு மங்க தேவன் ஆகியோர் ஒப்புக் கொண்டனர்.

இறுதிப் பகுதியில் இடையர் காணிஉரிமை பெற்ற நிலத்தின் நாற்பாங்கு எல்லை கூறாமல் விரிவான சுற்றளவு எல்லை கூறப் பட்டுள்ளது.

செப்பேட்டில் உள்ள எழுத்துக் குற்றம், சொல்குற்றம், பொருள் பிழை வாசகப் பிழை வரி இடருதல் போன்ற பிழைகள் ஏதேனும்

இருந்தால் பெரியோர்கள் பொறுத்துக்கொள்ளவேண்டும் என்று கூறப் பட்டுள்ளது.

நாட்டுச்சபைக் கூட்டத்தாருக்கு பொன் 50 பணமும், செப்பேடு எழுதிய ஆசாரிக்குப் பொன் 10 பணமும் அளிக்கப்பட்டது.

திருப்புவனம் பாண்டி ஆசாரி மகன் பென்னம்பலம் ஆசாரி என் பவர் இதனை எழுதியுள்ளார்.

## செப்பேடு

### முதல் பக்கம்

1 சுத்தி ஸ்ரீ மகாமண்டலேசுபரன் அரியராயிர

2 தளவிபாடன் பாசைக்கு தப்புவறாய கண்ட

3 ன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு குடா

4 தான் பாண்டிமண்டல தாபனாசாரியன் சோ

5 லமண்டலப் பிரத்திச்சாபதாபானாசாரியன் சோ

6 லப் பிறசண்டப்பிறசண்டன் ஈளமு கம்பளமும் யாள்பாண

7 மும் பட்டணமும் அளித்து கெசவேட்டை கொண்டரு

8 ளிய றாசாதிராசான் ராசமாத்தாண்டன் றாசவசிகரன் றாசகோலாகல

9 ன் துட்டரில் துட்டன் துட்டநெட்டீரன் துட்டர்குலக்காரன் துலுக்கர் தளவிபாட

10 ன் துலுக்கற் மோகந்தவிர்ந்தான் சூறாதிசூரன் சமுத்திறாதிபன் மலைகலங்கி

11 னாளு மனங்கலங்காத கண்டன் தாலிக்கி வேலி தண்டு வீரமுண்டன் தரிய

12 லர் சிங்கம் யிளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் தரூபண தற்மக்குடையவன்

13 தொண்டித்துரை காவலன் சொரிமுத்துவன்னியன் படைக்களஞ் சாத பகைம

14 ன்னற் சிங்கம் பஞ்சகால பயங்கரன் பரிதேசி காவல

15 ன் வெடிக்கும் தங்கம் வெதுப்பிக்கும் பச்சை காயகடு வடப்பள்ளி கொ

16 ண்டபெருமாள் யிரவிகுலசேகரன் பொருமைக்கி தற்மர் மானத்துக்கு அ

17 ருச்சுனன் குடைக்கு கன்னன் சாஷ்திரத்துக்கு சகாதேவன் மல்லு

18 க்கு வீமன் பறிக்கு நகுலன் அரிவுக்கு ஆதிசேடன் செங்காவிரு வீரபரன் செங்காவி

19 ச் சிவிகையான் அனுமகொடி சிம்மக்கொடி யுடையோன் இப்படிய

20 ாகொற்ற ஸ்ரீமது முத்துவிசைய ரெகுனாதச் சேதுபதி பிறிதிவி நாச்சிய

21 பரிபாலனம் பண்ணியருளாநின்ற சாலிவாகன சகாற்த்தம் 1525

22 மேல் செல்லாநின்ற செய வருடம் ஆவணி மீம் 15 உ அகண்ட காவேரியிலி

23 ருக்கும் காஞ்சீவனம் காமாச்சியம்மாள் படைத்தலைவர் வன்னிக்கன் மனித

24 க்கன் புளுக்கன் இவர்கள் மூண்டுபேரு யெடுபட்டு தொங்கறா...

25 ல் சேர்ந்து வடமாத்தூருவந்து குடியேரி கள்ளன் சீமையாணதின் பி

26 றகு சீமையிலவனவன் யெப்படிக் காணியாச்சி பெற்றானோ அப்படி நா

27 னும் காணியாச்சி பெத்துக்கொண்டு யிருந்தேன் அப்போ கனேறியி

28 லிருந்து கள்ளற் யெடுபட்டு அரசநத்தத்தில் குடியேறியிருந்தா

29 ற்கள் அப்போதைக்கி நினையாணி நத்தத்து சேருவைகாறரும் அரச நத்தத்துக்

30 ள்ளரும் இருபேரும் காணி வியாச்சியமாக இருபேருக்கும் வெட்கவினை

31 குது வினைவந்து யிருக்கிறபோது நான் யிருபேருக்கும் நான் பொதுவா

32 கயிருந்தேன் நினையானி நத்தம் சேருவைகார் யேளுகட்டு சொக்க

33 ன் திடல் போயிருந்தார்கள் திரும்பவுள்ள படை ....சொக்க

34 ன் திடல் ஊரில் படைகொண்டு போய்விட்டு யிருபேரும் வெட்டி

35 க்கொள்கிறபோது யிருபேருக்கும் அவனவனுக்கும் அவனவன் பனத்

36 தை யெடுத்துகுடுத்து யிருபேருக்கும் தண்ணீரும் குடுத்து வினையும் ஒ

37 ளிந்ததின்பிறகு அவனவன்காணியை யாண்டு கொண்டியிருக்குறபோ

38 து நான் யிடையன் யானதால் யிருக்கும் பிள்ளையளுக்கு நான் பேற்ற
கா

39 ணிக்கும் பிசகுவறாமல் செம்புப்பட்டையம் செய்யவேணும்மென்

40 று சொல்ல அவர்கள் சொன்னது நாலு கிறாமத்தாரை கூட்டிவைய் எ

41 ன்று சொன்நார்கள் அதுக்கு தமறாக்கி நாட்டார் முடிகண்டம் அம்

42 பலகாரார் நாலுகோட்டை நாட்டு அம்பலக்காரர் பெரிய கோட்டை

43 க் கவண்டமார் காலூரு கல்லூருணி கவண்டமார் கன்னாருப்பு

44 அம்பலகாரர் வேல்குள அம்பலகாரர் இவர்கள் யனவோரையும் கூட்டி

45 ஆலபட்டி ஆலமரத்தடியில் கூடியிருக்குறபோது நடுயிதுயென்ன

46 வயனத்துக்காக கூட்டிவச்செது யென்று கேள்க்க நான் சொன்ன

47 வயனம் நான் பெற்ற காணிக்கி ஒரு இசகு பிசகு பன்னாமல் யெனக்கு
செம்

48 புபட்டையம் செய்யவேணுமென்று நான் சொல்ல அவர்கள் யி

49 ருபேரும் அப்படியே செய்வோமென்று சொல்ல நாலு கிறா

50 மாத்தாரை அரிஞ்சு செய்யவேணும்மென்று நான் சொல்ல அப்ப

51 டியே கூட்டிவையென்று யிருபேரும் சொல்ல இது காரியத்துக்கு

52 த்தான் கூட்டிவச்சேன் நடுபாத்து சொன்னவித கேள்க்கிறேன்.

53 னென்று சொன்னேன் ஒன் யெல்கை மாலை நாலு பக்கமும் காம்பி

54 யென்று சொன்னார்கள் அவனவன் இந்த பூமியில் யெப்படி

55 க்காணி பெத்தானோ அப்படி நான் பெத்த நிலமை யெல்லைம

56 ால் நாலு யெல்கையும் காண்ம்பிட்சு நடுவும் பாத்து அரசநத்த

57 ம் கள்ளரையும் சொக்கன்திடல் சேருவைகாரரையும் சரி த

58 ானாயென்று நடுகேட்டார்கள் வேலங்குளம் வேலத்தேவ உனை

59 யும் கன்னாறிருப்பு மங்கதேவனையும் யிருபேரையும் கேட்டதர்க்கு இவ

60 கள் நாலுபேரும் அவன்பெற்ற நிலமைதான்யென்று சொன்னா

61 ர்கள் இந்த நிலமைக்கி யெல்லைப்பாடு வடபாற்கெல்கை அ

62 ளதா...க்கும் நல்லான் செட்டி கண்மாய்க்கரைக்கும் மேர்

63 க்கு இதுக்கு தெற்க்கு பாணான்ங்கண்மாய் புரகரைக்கும் நாட்

64 டுக்கயலுக்குடி அழகாபுரி பாதைக்கும் மேற்க்கு யிதுக்கு மே

65 நாட்டான் கண்மாய்க்கும் பைபடிக்கும் வடக்கு யிதுக்கு மேற்க்கு

66 வேலைத்தேவன் வடக்கு கண்மாய் யிரங்கு மண்துரைக்கும்

67 தெற்க்கு கண்மாய் நடுப்படிக்கும் மேற்க்கு யிதுக்கு மேற்க்கு மூக்க

68 ற பிள்ளையார் ஒட்டக்கோவிலுக்கும் வடக்கு யிதுக்கும் தெற்க்கு

69 மங்கத்தேவன் கண்மாய் ணீருபுடிக்கும் வடக்கு யிதுக்கு மேற்

70 க்கு வெள்ளத் பொட்டலுக்குக் கிளக்கு யிது வடக்கு மணல்

71 புஞ்சைக்கும் கிளக்கு யிதுக்கு வடக்கு கீள்மேல் ஓடிய பெரு

## இரண்டாம் பக்கம்

72 ம் பாதைக்கு மணல் புஞ்சைக்கும் தெற்க்கு யிதுக்குக் கிள

73 க்கு பாதைக்கும் சூலக்கல்லுக்கும் தெற்க்கு யிதுக்குக் கிளக்குக் கிள

74 க்கு வெள்ளாளன் குடியிருப்பு திடலுக்கு தெக்கு யிது

75 க்கு கிளக்கு முடிகண்டம் மேல்வயலுக்கும் அளகாபு

76 ரி பாதைக்கும் வெள்ளைக்காடெலு பாதைக்கும் தெர்க்கு இன்னாங்

77 கெல்கைக்கி உள்பட்ட நிலமை கீள்நோக்கியும் கிணரும் கே

78 மல் நோக்கிய மரமும் திட்டு திடலும் புத்துப்புனலும்

79 மாவடை மரவடை புத்துப்புனல்வையப்பு அருகுதா

80 ளி ஆவரை கொளஞ்சி உள்பட கல்லுங்காவேரி புல்

81 லும் பூமி உள்ளவரைக்கும் சந்திரா சூரியாள் உள்ளவ

82 ரைக்கும் ஆண்டு அனுபவித்துக்கொள்வதாகவும் யிந்த

83 செப்புப்பட்டையம் யனவோரும் கூடிச்செய்த பட்டை

84 யத்துக்கு துரதங்கள் பண்ணினவன் காவேரிக்க

85 ரையில் காறாம்பசுவை கொண்ட தோசத்திலே போ

86 வாறாகவும் இந்தபடிக்கு சாட்சி சொக்கலிங்கம்

87 மீனாட்சி அழகர் பூவணலிங்கம்-அழகிய மி

88 ன்னாள் சாட்சி யிந்த பட்டையத்துக்கு யெளு

89 த்துக்குத்தம் சொல்க்குத்தம் பொருன்வாசக பிளை

90 வரி இடரிதல் யாதொரு பிளையும் பெரியோர்க்

91 ள் பொருத்துக்கொள்ளவும் நடுவுக்கு முடிப்பு

92 வச்சது வீறறாயன் பொன் 50 பணம் பட்டை

93 யம் யெளுதின ஆச்சாரிக்கி பொன் 10 பணம் யிந்தபடி

94 யெளுதினேன் திருப்புவனத்திலிருக்கும் பாண்

95 டி ஆசாரி மகன் பொன்னம்பலம் ஆசாரி கை

96 யெளுத்து காமாட்சி துணை உ

# 107

# பெருவாய்க்கோட்டைச் செப்பேடு *

இருக்கும் இடம் : அரசு அருங்காட்சியகம், எழும்பூர், சென்னை

அரசர் : விசையன் சேதுபதி

**அமைப்பும் செய்தியும்** : ரவி மூல விசையன் சேதுபதி காலத்தில் அளிக்கப்பெற்ற இச்செப்பேடு வழக்கமான கொடைச் செப்பேடாக இல்லாமல் பெருவாய்க்கோட்டை முத்து விசையன் சேருவைகாரன் அவர்களுக்கு அளிக்கப் பட்ட பல உரிமைகளைக் குறிக்கும் செப்பேடாக உள்ளது. 'சாசுபதப் பட்டயம்' என்று கூறப்படுகிறது. இச்செப்பேட்டில் எவ்விதக் காலக் குறிப்பும் இல்லை.

உரிமைகள் கொடுக்கப்பட்டமைக்கான காரணம் தெளிவாக விளங்கவில்லை. பட்டத்து யானையைக் கன்னடியர் பிடித்து இழுத்துவிட்ட செய்தி கூறப்படுகிறது. அந்நிகழ்ச்சியில் முத்து விசையன் சேருவைகாரன் ஏதோ வீரச்சாதனை புரிந்திருக்க வேண்டும்.

சேதுபதி அரசர் சேருவைகாரனுக்குச் சிங்க முத்தண்டியலும் வைத்தியக் கொடிச் சரப்பளியும் போட்டு சுத்து தண்டிய மாரனுக்கும் முதலாவதாகச் சேருவை காரனை வைத்துள்ளார். அரண்மனையில்

*ARE 16 of 1911 ஆண்டறிக்கையில் பிரபவ என்று ஆண்டு குறிக்கப்பட்டுள்ளது.

மகர நோன்பு பத்து நாளைக்கும் பல உரிமைகள் முதன்மையாக அளிக்கப்பட்டது. படி, துப்பட்டி, உருமாலை, மாலை, சந்தனம், பிரசாதம், பரிவட்டம். இருபத்திரண்டு ஊர்களில் சில உரிமைகள் அளிக்கப்பட்டன். சந்தை தரகு வருமானத்திலும் துறை முகங்களிலும், முத்துச் சிலாபங்களிலும் சில உரிமைகள் அளிக்கப்பட்டுள்ளன.

பட்டயம் (செப்பேடு) எழுதியதை 'தெளித்தல்' என்று கூறப்பட்டுள்ளது. அரண்மனைப் பொக்கிஷய் பணியாளன் மாடப்பி ஆசாரி இச்செப்பேட்டை எழுதியுள்ளான்.

## செப்பேடு

1 ஸ்ரீமது மகாமண்டலேசுபரன் அகண்ட மண்டலாதிபன்

2 ராசாதிராசன் ராசமார்த்தாண்டன் ராசகுலசேகரன் ராச

3 கெம்பீரன் ராசகுல வன்னியன் சேதுக்கரசு சேதுகாவ

4 லன் துட்ட நெட்டேரன் துரைகள் சிகாமணி ஆதீனமகா

5 ச்சுரன் அயிராபதத்தான் கொத்துகூடையும் கூடைமேச்செல்

6 வியும் யதி சுமுகன் மதனகெம்பீரன் யீளமும் கொங்கும் யா

7 ழ்ப்பாணப் பட்டணமும் கெசவேட்டையாடிய அசுபதி கெசபதி நர

8 பதி - திபதி தளபதி சக்கரபதி ஸ்ரீமது யிரணியகெற்ப ரவி குல வி

9 சையன் சேதுபதி நாளையில் பெருவாய்க் கோட்டை முத்து வி

10 சையன் சேருவைக்காரனுக்கு சாசுபத பட்டையம் குடுத்தபடி பட்டை

11 யம்மாவது பட்டத்து ஆனையை....நாகன்னடியர் பிடித்து

12 யிளுத்து விட்டதுனாலே ஆண்டவர் சிங்க முத்தண்டியலும்

13 வைத்தியகொடி சரப்பளியும் போட்டு சுத்து தண்டியமார

14 னுக்கும் முதலாய் வய்த்து அரமனையில் மகர நோம்புக்கு

15 பத்து நாளைக்கும் படி துப்பட்டி உருமால் தேவாலயம் பிரமா

16 லையத்தில் சிமையும் முன்மாலை முன்சந்தனம் பிரசாதம்

17 பரிவட்டம் மரியாதியும் பண்(ட்)டார பட்டம் கட்டியள் கரியின்

18 பண்டார வாசலில் 56 நெட்டிபடி ஆட்காழ் சிதண்டியல்

19 ராம் மகாலன் கோட்டை புவான் திரவாளி மேல்மடை

20 கீள்மடை தெக்கநேந்தல் வடக்கனேந்தல் தத்தன் சிந்திஸ் யவு

21 லுமான் வயல் வளிமுத்தூர் அரசத்தூர் சம்புரன் சாணன்

22 வயல் நெடுமரம் பெருவாய்க்கோட்டைய் அயன்நேந்தல்

23 அரிவித்தி பனிச்சக்குடி அரியன்நேந்தல் யிடச்சிகுடிம்

24 மண்டலகோட்டை தாமோதிரப் பட்டணம் ஆக இருபத்திரண்டே

25 அரை கிராமத்து சானிஅய்யனும் கணக்கு தாவள மங்கலத்

26 சந்தை காவல் தரகில் வருமானம் துரைமுகங்களில் சங்கவு

27 டு எடுப்பு சிலாபத்தி ..... முரை சிப்பியும் மேல்கண்டக்கிலும்

28 சந்திராள் சூரியாள் உள்ளமட்டும் ஆண்டு கொள்ளவும்

29 யிந்த பட்டயத்துக்கு ஆராவது விரோதம் பண்ணி

30 நால் தனிக்கோடிக் கரையில் ஆயிரம் பசுவைக் கொ

31 ண்ட தோஷத்தில் போவார்கள் ஆண்டவர் உத்தரவு

32 படி யிந்த பட்டையம் தெளித்தேன் அரமனை

33 பொக்கிச வேலையாள்

34 மாடப்பி ஆசாரி

# சேதுபதி செப்பேடுகள்

## சொல்லடைவு

(எண்கள் பக்க எண்கள்)


அ

அகண்ட காவேரி 534
அகிலாண்ட ஈசுவரபுரி 275
அகிலாண்ட ஈசுவரிபுரம் 236
அகிலாண்டீசுபரி 168
அக்கிரகாரம் 250, 455
அக்கினி தீர்த்தக் கரை 17
அக்கினி தீர்த்தம் 10
அக்கிறாகர பிரதிஷ்டை 483
அசரத்து நவாபு 458
அச்சங்குடி 394
அஞ்சாமடை 496
அஞ்சானைக்குத்தி 112
அஞ்சிரண்டுச்சீமை 87
அஞ்சுகரை புரையார் 527
அஞ்சுகோட்டை 140, 236, 451
அஞ்சுகோட்டை நாடு 77
அஞ்சுகோட்டை வகை 275
அஞ்சுக்கோட்டை பற்று 163
அஞ்சுநத்தம் 276
அடப்பந்தாழ்வு 123
அடப்பம் திருவுடையார் 237
அடப்பன் திருவுடையாம் 275
அடுக்களை வகை 275
அட்டவணை 61, 62, 124, 135, 141, 159
அட்டவணை பிள்ளைமார் 63
அட்டாலைச் சொக்கநாதசுவாமி 116, 117
அண்ணினு கண்மாய் 482
அதியாரி பிச்சா சேருவைக்காரன் 237
அதிவீரனாசாரி 170
அதிவீரன் 200
அத்தானூர் கண்மாய் 54
அத்தினூத்து 192
அந்திரங்குழம் 335
அப்பனூர்னாடு 7
அப்பன் திருப்பதி 247
அமரடக்கிப்பற்று 122
அமரடக்கி வட்டம் 123
அமரர் தொழ நின்னான் 36
அம்பலகளரி 428
அம்பலக்காரர் 535
அம்பலத்தாடும்பண்டாரம் 88, 109
அம்பலவாண சுவாமி 341
அம்பலவாண பண்டாரம் 95
அம்பளம்-உம்பளம் 527
அய்யனாரேந்தல் 164
அய்வன்கிளை 192
அரங்கக்கிளவன் 192
அரங்க மூப்பன் 175
அரசநத்தம் 534
அரசநத்தம் கள்ளர் 535
அரண்மனைக் கட்டளை 236
அரந்தாங்கி 77
அரமனை 53, 247
அரமனைத் தீர்வை 151

அரமனையார் 33
அரமனை வாசலூளியம் 174
அரிசிலையாறு 169
அரிச்சந்திரன் 36
அரிபட்டன் 36
அரியக்குடியான சடம்பவன நல்லூர் 437
அரியன் கட்டையன்தட்டு 387
அரியலூர் 280
அரியன் ஏந்தல் 540
அரியா குடியிருப்பு 362
அரியாங்கோட்டை 455
அருகாதங்குடி 93
அருகூரணி 294
அரும்பூர் 50
அலவாக்கரை 130
அலவெள்சு 522
அலைவாய்க்கரை 316
அல்லிக்குளம் 77

அழகப்ப தொண்டமானார் 160
அழகர் 247
அழகர் கோவில் 247
அழகர் திருமலை 246
அழகாபுரி பாதை 536
அளகப்பன் 71
அளகாங்குளம் 192
அளகுபிள்ளை கால் 363
அறந்தாங்கி 61, 62, 222
அறந்தாங்கி சீமை 87
அறந்தாங்கி வட்டகை 252
அற்சனாபோகம் 514
அனகமூப்பன் 192
அனுமேசுரர் 33
அன்பத்தாறு தேசத்துப்பலர் 373
அன்னகுடி 288
அன்னவாசல் 288
அஹோபலய்யன் 81

ஆ

ஆக்கலூர் 164
ஆசாள் வயல் 241
ஆடியபாத பண்டாரம் 62
ஆட்டாங்குழக்கால் 456
ஆண்டயினான் 36
ஆண்டி ஊரணி 263
ஆண்டிக்கறுப்ப மூப்பன் 192
ஆண்டி சுத்தான் 387
ஆத நாராயணன் குடும்பன் 482
ஆதன கொற்றங்குடி 186
ஆதன் கொத்தங்குடி 311
ஆதன் கொத்தங்குளம் 312
ஆதிசேது 219, 288, 289, 294, 486 491
ஆதி நாராயணன் மடை 357
ஆத்தங்கரை 192
ஆத்மனாத சுவாமி 300
ஆந்தைகுடி 102
ஆமணக்கம் பற்றி ஏந்தல் 186
ஆமைக்குட்டம் 306
ஆம்பட்டன் கோட்டை 204
ஆயக்குடி 311
ஆயக்குடிக் கண்மாய் பொருத்து கரை 500
ஆயன்பற்று 187
ஆயிதுடி 262
ஆயிகுடி சின்னத்தேவர் 263
ஆயித்தப்பட்டி 61
ஆயிரமங்கலமாகிய துவாலை 527
ஆய்க்குடி 247
ஆரிய மகா ஜனங்கள் 458
ஆலங்குளம் 280, 311
ஆலப்பட்டி 535
ஆவல் காவல் 394

ஆவிடைய பரமசுவாமி 222
ஆவிடையார் கோவில் 222
ஆவிலுக்கான் 213
ஆவுடைய பரமசுவாமி 160
ஆவுடையப்பன் 237
ஆவுடையார் கோயில் 63
ஆள் அமஞ்சி 93
ஆனந்தநாத நாளங்கராயன் 237
ஆனந்தவாத நாலங்ராயன் 289
ஆனந்தூர் 100
ஆனாந்தூர் 101, 102
ஆனைமேறிவயல் 82
ஆனை விளுந்தான் 316

இ

இசுலாம் 357, 395
இசைவுமுறி 33, 35
இடங்கைவரி 476
இடைகுடி 76
இடையன் கோட்டை 106
இத்தியடிக்காடு 123
இந்திரத்தேவன் 275
இபுறாகி மரைக்காயர் 305
இயமனீசுவரம் 236
இரகுனாத சேதுபதி காத்த தேவர் 384
இரவிமங்கலம் 102
இராசசிங்கமங்கலம் 180
இராமநாதசுவாமி 21, 47, 254, 255
இராமநாத பண்டாரம் எழுதிக் கொடுத்த உடன்படிக்கை 458
இராமநாதபுரம் 76, 235, 276, 356, 507
இராமநாதபுரம் ஜமீன் 552
இராமநாதமடை 180
இராமீசுவறம் 155
இராமேசுபரம் 285
இராமேசுவரம் 21
இராமேசுவரம் கோயில் 21
இராமலிங்க குருக்கள் 428
இராமநாதசுவாமி 3, 16, 155, 195
இராமனாத பண்டாரம் 3, 7, 16 21, 451
இராமனாதபுரம் 321
இராமானுஷப்பேரி 186
இராயம் 67, 71
இராஜசிங்க மங்கலம் 455
இருட்டுரணி 192
இருவரை வென்றான் 186
இருளப்பன் கோயில் 116
இலங்கமீட்டா பிள்ளை
இலங்கை வழி ஏந்தல் 186
இலுப்பையடியூரணி 466
இளமநேரி 174, 212
இளபநேறி 191
இளமனூர் 174
இளம்பஞ்சுக்காரன் 76
இளையான்குடி 236
இறாமனாத பண்டாரம் 264
இறையான் ஏந்தல் 335

ஈ

ஈகரை ஆங்கல் 169
ஈசா பள்ளிவாசல் 356
ஈசுரமாத்தியாபிள்ளை 276

உ

உச்சவ விக்கிறகம் 33
உச்சிகாலக் கட்டளை 476
உடையக்காள் 193
உடையநாத சமுத்திரம் 163
உடையாத்தேவர் 262, 275
உடையாத்தேவன் 361
உடையான் கருங்குளம் 306
உடையான் சேதுபதிகாத்த தேவர் 55
உடையினா பிள்ளை 247

உடையின்ான்பட்டி 112
உத்திண்ட நாலங்கராயன் 389
உத்தரகோசமங்கை 170
உபைய சாமரம் 40
உப்பிளம் 77, 164
உப்பாற்று அளம் 316
உப்பு ஊறணி 316
உமையர்தேவன் 36
உம்பளத் தோட்டம் 456
உரசூர் 102
உருமால் தேவாலயம் 537
உலகப்ப மணியக்காரர் 237
உலகமாதேவி 269
உலகன் 140
உலுப்பை 93
உளையூர் 236, 519
உள்கிடை ஏந்தல் 234
உள்வாய் 186
உள்ளூரணி 509

ஊ

ஊடையம் 275
ஊர்த்தோப்பு 476
ஊர்வய்யக் கண்மாய் 285
ஊளியக்கறேர் 419

எ

எக்கைக்குடிக் கண்மாய் 394
எச்சிக்கோட்டை 134
எச்சைக்குடி 394
எச்சோறு 419
எடுத்தணி 140
எடையன் வயல் 169
எட்டிசேரி 163
எட்டிச்சேரி 161
எட்டிவயல் 274
எதம்பாடல் 387
எம்மண்டலங் கொண்டான் 192
எழுந்தருளும் நாயகர் 34
எழுனூத்து மங்கலம் 280

ஏ

ஏகபண்டாரம் 124
ஏகாம்பர தொண்டமானார் 62
ஏகாம்பரநாத சுவாமி 163
ஏந்தல் 7
ஏம்பல் குளற்றுக்கால் 241
ஏயணிசிங்கன் ஏந்தல் 134
ஏரப்பப் பண்டாரம் 255
ஏழு கூற்றம் 276
ஏழு கோட்டை நாடு 341
ஏறணிக்கோட்டைக்கண்மாய் 204
ஏறப்ப பண்டாரம் 347
ஏறுபடி 192
ஏறுபடிப் பள்ளிவாசல் 388
ஏறுபாடிப்பள்ளிவாசல் 387
ஏனாதி கறுப்பு மூப்பன் 192

ஒ

ஒச்சி மூப்பன் 192
ஒட்டானேந்தல் 250
ஒத்தக்கால் 175
ஒப்பில்லாத பெருமாள் 36
ஒய்யாத்தேவன் 275
ஒய்யா மூப்பன் 192
ஒன்டடிக்காறர் 419

ஓ

ஓரக்கரை 388
ஓரூர் குழிக்கல் 164
ஓரூர் வட்டகை 341
ஓனாய்ப்புலி 175
ஓனாய்ப்பொட்டல் 311

ஔ

ஔக்குடை 123

க

கங்கணி 93
கங்காணம் 477
கங்கை 242
கசானா களஞ்சியம் 459
கடம்பங்குடி 186, 225
கடம்பத்தேவர் 241, 246
கடம்பவனம் 117
கடம்பன் குடி 207
கடம்போடை 482
கடலடைத்தான் 36
கடல் துறைமுகம் 77
கட்டளைக்காறர் 460
கட்டளை சுவந்திரம் 460
கட்டியேரி 93
கட்டுக்கரை 466
கட்டுமாவடி 222
கட்டைத்தேவர் 236
கட்டையதேவர் 275
கட்டையத்தேவர் 356
கணக்கப்பண்டாரி 225
கணக்கப்பிள்ளை 222
கணக்கப்பிள்ளைமார் 16
கணக்கு 477
கணக்குப்பிள்ளை 275
கண்ணனூர் 236, 275
கண்ணாக்குடி 311
கண்ணாங்குடி 482
கண்ணாற்றுக்கரை 100
கண்மாய்க் கவரத்தலை 491
கதயநேந்தல் 365
கந்தமாதன பருவதம் 265
கந்தன் வயக்கல் 321
கப்பலூர் புரவு 164
கய்வித்தாரம் 34
கரிசல்குளம் 163
கருக்கத்தி கண்மாய் 357
கருங்குடிக் கண்மாய் 514
கருங்குடிக் குளம் 285, 442
கருங்குழி தாவு 61
கருங்குளம் 7
கருசங்குளம் 7
கருப்பட்டி கிளவன் 192
கருப்பண கோயில் 487
கருப்பணன் சேர்வைக்காரன் 236
கருப்புக்கட்டி 77
கரும்பனரோடை 307
கருவூலம் 459
கருனாடகத்தார் 276
கலியாணி மாதேவி 288
கல்லடி சாலை 17
கல்லுக்குளத்தால் 169
கவர்மெண்டார் 522
கவறையள் 276
கவுல் நாமா 459
களத்தூர் 231, 232
களாநிதி கோனய்யன் 361
கள்ளகுடி ஏந்தல் 134
கள்ளபக்தி நாடன் 174
கள்ளன்குடி 169
கள்ளிக்குடி 169

கள்ளிக்குளம் 7
கள்ளிக்கோட்டை 326, 352
கள்ளியடந்தல் 311
கறிதின்னி 192
கறுத்தப்பயல் 192
கறுப்பு மூப்பன் 192
கற்பக மடல் 11
கள்ளன் சீமை 534
கன்னாருப்பு அம்பலக்காரர் 535
கன்னாறிருப்பு மங்கதேவன் 535

**கா**

காக்குடி 280, 281
காக்கூரு வட்டகை 368
காசி 247
காஞ்சர மருங்கன் 175
காஞ்சனூரணி 192
காஞ்சான் 192
காஞ்சிரயடி பொட்டல் 169
காடுகுடி 161
காட்டுப்பிச்சர் கோவில் 294
காட்டு பிள்ளையார் கோவில் 77
காட்டுப்பிள்ளையார் கோயில் 175, 213
காணத்திடல் 321
காணியாச்சி 534
காணியாட்சி 35, 379
காதலி நாச்சியார் 207, 208, 231
காத்த தேவர் 285
காத்தூர் 241
காமங்கோட்டை 247, 519
காமன் கோட்டை 326
காமாட்சித் தேவன் 63
காரியக்காரர் 56, 275
காரியக்காறர் 27, 35
காருக்குடி கண்மாய் 362
காரேம்பல் 321
காரைக்குளம் 112
காரையடி முறிவு 186
காவல்க்குடியான துலுக்கர் 379
காவல்ப்பற்று 186
காவனூர் 262
காவனூர்கால் 363
காவனூர்ப் புரவு 321
காவிகுடை 40
காவிகூடாரம் 40
காவிப்பன்னாகம் 40
காவியடால் 40
காவேரி ஏந்தல் 186
காளையார் கோவில் சீமை 169
காளையார் கோவில்ச் சீமை 81
கானி 527

**கி**

கிடாதிருக்கை நாடு 437
கிடார வட்டகை 335
கிடாரம் 241
கிட்டாரு கோட்டை 192
கிட்டினப்ப சேருவைக்காரன் 236
கிராமத்து அம்பலக்காரன் 419
கிழவனேரி 357
கிளாறாநல்லி 222
கிள்ளிகுடி கண்மாய் 231
கிற்ஷண அய்யர் 294

**கீ**

கீதார ஊழியன் 140
கீழக்கரை 77
கீழைப் பிராந்தனி 123
கீழ் காவனூர் 241
கீழ் வித்தை 311
கீளக்கரை 150, 151

கீளக்கரை பட்டணம் 150
கீளக்கொர்டுமஞர் 67
கீளைக்காடு 316
கீளைச்சூரநேம்பல் 82
கீள்மடை 540

### கு

குசவன்குளி 192
குசவன் திடல் 362
குடவேலி 207
குடியானவர் 16
குடும்பம் 446
குடையார்குடி 346
குட்டி ஆலிப்பிள்ளை 305
குணத்திரான் வயல் 123
குண்டயன் கோட்டை 77
குண்டாறு 436
குண்டான் ஊறணி 467
குதக்கோட்டைத்தரவை 186
குப்பன் சேருவைக்காறன் 275
குப்பா மூப்பன் 192
குமரண்டூர் 231
குமரியேந்தல் புரவு 321
குமாரசுவாமி 61
குமாரசுவாமியாபிள்ளை 62
குமாரணிபத்து 77
குமாரமுத்து ரெகுநாதச் சேதுபதி காத்த தேவர் 334
குமாரமுத்து விசைய ரகுநாத சேதுபதி காத்த தேவர் 394
குமாரமுத்து விசைய ரகுநாதச் சேதுபதி காத்த தேவர் 305, 346
குமாரமுத்து விசைய ரெகுநாத சேதுபதி 361
குமாரமுத்து விசைய ரெகுநாத சேதுபதி காத்த தேவர் 356
குமாரமுத்து விசைய ரெகுநாதச் சேதுபதி காத்த தேவர் 329, 351, 368
குமார விசுவேசுரர் 305
குமாரு சேருவைகாறன் 306
குமுத சீமை 77
குமுறூர் 123
குருகூறணி 100
குருக்கள்மார் 33
குருச்சி நாடு 77
குரு நமச்சிவாயம் 95
குலோத்துங்க சோழ நல்லூர் 241
குவளஞ்சாத்தான் 207
குழுக்கோட்டை 326
குளத்தூர் 346
குளவயல் 305
குளவிப்பாடி 262
குறிஞ்சானோடை 306
குன்றாவயக்கல் 394

### கூ

கூங்காரித்தேவன் 62
கூத்தனேற்றுக்கால் 262
கூத்த மூப்பன் 192
கூத்தன் வயல் 263
கூறிச்சாத்தான் சேருவைக்காறன் 112
கூன்காரித் தேவன் 61, 62

### கெ

கெங்காதர குருக்கள் 35
கெங்கைக்கரை 145, 247, 251
கெங்கைகொண்டான் 352, 356
கெங்கையாடி பெருமாள் 36

**கை**

கைகஞ்சம்பிள்ளை 263
கைக்குநாட்டுப்பத்து 186
கைக்குநாட்டு வட்டகை 285
கையக்களக்குடி 174
கையக்களார் ராமு 213
கையக்குளக்குடி 212
கையாடி 175

**கொ**

கொடிக்குளம் 263
கொட்டகுடி வயல் 232
கொட்ட மடைக்கி 213
கொட்டமடக்கி தோட்டம் 175
கொண்டொடிகாரி 174, 212
கொண்டோடிக்காறி 213
கொத்தங்குளம் 116, 394
கொந்தளன் கொட்டை 163
கொந்தை 3
கொம்பூதி 116
கொல்லமுத்தணசாரியார் 496
கொல்லனூர் 326
கொல்லன் புஞ்சை 346
கொளத்தூர் 362
கொளத்தூர் கண்மாயி 361
கொளந்தூர் 514
கொளந்துறை 112
கொள்ளனூர் 352
கொன்னையனேந்தல் 186

**கோ**

கோங்கிவயல் 169
கோடிக்கர்க் கிளவன் 192
கோடிக்குளத்து ஆறு 134
கோடிக்குளம் 134, 466
கோடிப்புங்கு 262
கோடிவயல் 262
கோட்டங்குடி கொந்தலான் 241
கோட்டைக்கரை 528
கோனாண்டிகிளை 192
கோதண்டராமசாமி 276
கோதண்டராமசுவாமி 235, 274 321
கோபால அய்யன் 335
கோபால கட்டளை 236
கோபாலக்கட்டளை 276
கோபாலர் கட்டளை 140
கோமுட்டியள் 236, 276
கோயில் கட்டளை 459
கோரம்பல் 167
கோரைக்குளம் 186, 467
கோவலன் கிடங்கு 164
கோவனூர் 280
கோவிந்தராச சமுத்திரம் 361
கோவிந்தனேந்தல் 186
கோவிலுள்த்துறை 27, 56
கோனுடையாமூப்பன் 192

**க்**

க்ருஷ்ணயங்கார் 509

**ச**

சகிரண்ணியோர்த்தகம் 446
சக்கர்க்கோட்டை 78, 192
சக்கரராவுத்தன் செய் 306
சக்கிலியன் குண்டு 471
சக்கிலியன்குடி 306
சக்கிலியன் செய் 306
சங்கம்பத்து 352
சங்கர குருக்கள் 35, 66, 70, 155
சடையப்பன் 266

சடைய மூப்பன் 192
சடையாமங்கலம் 140
சடையப்பன் 389
சதாசிவ பட்டர் 70
சத்திரகிராமம் 294
சந்திரசேகர குருக்கள் 35
சந்திரதேவன் 36
சபாபதி கட்டளை 346
சபையார் 33
சமனப்பள்ளி 123
சமுத்திரம் 251
சம்பை 222
சம்மடியேந்தல் 263
சருவமணியம் 471
சர்க்கரைப்புலவர் 241
சர்தர்வேசலி 357
சர்வமானியம் 424
சலாபத்துறை 77
சலுப்பர் 236, 276
சவராமங்கலம் 187
சவாது 83, 170
சறுவமானியப் பட்டையம் 419
சறுவமானியம் 528
சறுவேசுர குருக்கள் 35
சறுவேசுரன் 36
சன்னவட்டிவயல் 123

### சா

சாத்தாங்குடி 274
சாத்தக்குட்டி செட்டி 455
சாசுபத பட்டையம் 204
சாணாயேந்தல் 204
சாதிப்பிள்ளை 194
சாத்தக்காளாயி 160
சாத்தணிவயல் 241
சாந்தபிள்ளை 241
சாமநத்தம் 186
சார்மான் 460
சாராயக்குடி 76
சாரிசெய்தல் 459
சார்மூஸ்ர் பாப்ஷர் 357
சாழுவநாயக்கன் பட்டணம் 222
சாணாயேந்தல் 321
சானார்குடி 174
சாணி அய்யன் 540

### சி

சிக்கள் 236, 274, 491
சிக்கள் கண்மாய் 483
சிங்க முத்தண்டி 539
சிதண்டியல்ராம் மகாலன் கோட்டை 539, 540
சிதம்பரன் சேருவக்காறன் 112
மூலக்கரை 496
சித்துரெட்டியார்கள் மடம் 423
சிந்தான்புலியத்தேவன் 61, 62
சிந்தான்புலியன் 62
சிப்பி 540
சிருதவயல் 262
சிரைகுடித்த பட்டையம் 527
சிரைங்குளங்கண்மாய் 487
சிலம்பன் 169
சிலுகவயல் 180
சிலையப்பனும்பலகாறன் 496
சில்பாசார்ரியர் 200
சிவகெங்கைச் சீமை 77
சிவகெங்கை 294
சிவசங்கரன் செட்டியார் 373
சிறுதேட்டு 266
சிவநாகுடி 100
சிவந்தான் கோட்டை 504

சிவந்தியப்பன் பொட்டல் 357
சிவயோக னாயகி 222, 300
சிவனேரி 123
சிவியார் 236
சிவியார் இடையர் 276
சிறுகவயல் 163
சிறுகுளம் 7, 112, 311
சிறுகைக் கண்மாய் 204
சிறுகொம்பூதி 306
சிறுதுகுடி 174
சிறுதேட்டு அறண்மனை 265
சிறுநாகுடி 100
சிறைக்குளம் கண்மார் 491
சின்ன இளமனூர் 174
சின்ன எலை 311
சின்னக் குப்பா மூப்பன் 192
சின்ன கூத்தன் 212, 213
சின்னச் சருக்கான் 192
சின்னத்தம்பி நாலங்கராயன் 289
சின்னதம்பி நாளங்கராயன் 237
சின்னதம்பியா பிள்ளை 223
சின்னத்தம்பியாப்புள்ளை 221
சின்னத்தேவர் 274
சின்னத்தேவர் சீமை 236
சின்ன தொண்டி 262
சின்னத் தொண்டி 155
சின்ன நாட்டான் 433
சின்ன மூப்பன் 192
சின்னமெய் மூப்பன் 192
சின்னமெய்ய மூப்பன் 193
சின்னய்யர் 346
சின்னய்யா 265, 274, 307
சின்னாயக்குடி 491
சின்னான் வேலைகாறன் 262
சின்னு பண்டாரம் 367
சின்னையா சீமை 236

**சீ**

சீவனூறு 123
சீவிலி நாயகர் 34
சீனிரகுநாத தேவர் 27

**சு**

சுக்கிரவாரக் கட்டளை 255
சுக்குறவாறக் கட்டளை 379
சுங்கம் 476
சுங்கிறாய்ப்புத்து 175
சுந்தரதாசிமடம் 192
சுந்தரபாண்டியன் பட்டணம் 163 164, 193
சுந்தரமய்யன் 213
சுந்தனாலூர் 247
சுப்பையன் ஐயங்கார் 468
சுயம்பாகம் 66
சுருங்கன் கடமை 482
சுலுத்தான் சஹாயீசரிபகீர் 394
சுவாமிக்கு சறுவமானியம் 476
சுளிமின்னல் பொன் 226

**சூ**

சூரநேம்பல் 82
சூரன்கோட்டை 77, 78
சூரைக்குடிச்சீமை 87
சூற்பகை செட்டி குமரன் 373

**செ**

செகுட்டக்கோன் 140
செங்காணேந்தல் 262
செங்கோல் 10
செட்டி ஏந்தல் 240
செந்திப் பெருமாள்பிள்ளை 451
செம்பிநாடு 77, 241, 352, 387, 450

செம்பியநாடு 207
செம்மானேந்தல் 280
செய்யானேந்தல் 504
செல்லத்தேவர் 236, 275
செல்லப்பன் 106
செல்லப்பெருமாளய்யன் 63
செல்வகுடும்பன் 262
செவிய்யன் 81
செவ்விருக்கை நாடு 250, 326, 352, 361
செறத்தை 335
சென்ன வீரப்பண்டாரம் 255, 135
சென்ன வீரப்பன் 335, 342
சென்னீலகுடி 112

**சே**

சேணியர் 36
சேது 247, 251, 255
சேது ஆண்டான் 175
சேதுக்கரை 145
சேதுகால் 44
சேது குடும்பன் 482
சேது தனுக்கோடி 7
சேது நிலையிட்ட பிரமாதிராயன் 36
சேதுபதி 181
சேதுபதி காத்த தேவர் 221, 311
சேதுபதி காத்த தேவர் முத்து விசைய ரெகுநாதத்தேவர் 316
சேதுபதி காத்த முத்து ரெகுநாதத் தேவர் 329
சேதுபதி காத்தரெகுனாதத்தேவர் 316
சேதுபதி ரகுநாதத் தேவர் 66, 160
சேதுபதி ரெகுனாத தேவர் 100, 101 111
சேதுபதி ரெகுநாத தேவர் 163
சேதுபாதை 352, 509
சேது மார்க்கம் 77, 394
சேது மூலம் 163, 294
சேது யாத்திரை 446
சேது ரகுநாதச் சேதுபதித் தேவர் 66
சேது ராசாவின் பேட்டை 373, 374
சேதுராமபட்டன் 36
சேதுராமலிங்கபிள்ளை 124
சேதுராமலிங்கம்பிள்ளை 135, 141
சேதுராமலிங்கய்யன் 346, 347
சேதுராமு ஆசாரி 213
சேது ராஜ்ஜியம் 76
சேதுவுக்கு ராசா 25
சேமணூர் 155, 519
சேமனூர் 263, 265
சேவுகப்பெருமாள் முக்கந்தன் 213
சேனக்காணி 352
சேனாதிபதி சாத்திரியார் 468

**சொ**

சொக்கப்பஞ் சேருவைகாரன் 103
சொக்கப்பன் சேருவைகாரன் 100
சொக்கனாத பிள்ளை 83
சொக்கன்திடல் சேருவைகாரர் 535
சொக்குபிள்ளை 170
சொரியன்திடல் 82

**சோ**

சோத்துக்கலையூர் 106
சோமநாதன் சேருவைக்காரன் 237
சோமாசி சேருவைகாறன் 275
சோமேசுரமுதலி 36
சோழமண்டலம் 288

சோனக சேருவை 212
சோனக சேருவைகாறன் 213
சோளகை சேருவைகாறன் 174
சோளியக்குடி 262
சோனகர்கள் 76

## த

தச்சமல்லி 122, 123
தச்சனூறணி 385
தச்சனேந்தல் 280
தடாகப்பிரதிஷ்டை 247
தண்டல் சாறர் 222
தண்ணீர் பந்தல் 455
தமிழ் ஆரியர் 33, 34, 36
தமிழ் வித்யாதரர் 241
தம்பா பண்டாரம் 160
தம்பி நயினார் 36
தம்பி மரைக்கான் 213
தம்பியாயி 160
தம்பிராட்டி தீரணை 180
தம்பிராமன் 36
தரகர் 222
தற்மராசபிள்ளை 170
தவசப்பிள்ளையர் 17
தவளைக்குளம் தென் கண்மாய் 496
தளவாய் சேதுபதி 4, 7, 18, 22, 27, 33, 35, 40, 41, 44, 45, 87, 163
தளவாய்ச் சேதுபதிகாத்த தேவர் 90
தளவாய் சேதுபதி காத்த தேவர் 3, 7, 12, 16, 25, 35, 55, 87, 100 111, 351
தனுக்கோடி 3, 7, 18, 45, 195, 242, 255, 295, 335,
தனுஷ்கோடி 82
தன்மராசி 36
தன்மராயப்பிள்ளை 251
தன்னரசுதேவன் தோட்டம் 175
தறகன் சொவந்திறம் 264

## தா

தாசறதினாதற் கோவில் 10
தாண்டவந் சேருவைக்காரன் 236
தாண்டவமூர்த்தியார் 36
தாண்டவன் சேருவைகாறன் 275
தாண்டவராயன் 67
தாண்டவேசுரர் 33, 34
தாமரைக்குளம் 192
தாம்பிரகாகனம் 437
தாம்பிரசாதனம் 187
தாம்பிரபேனி 187
தாலிகாசாதனம் 375
தாம்பூரசாதனம் 528
தாளியாரேந்தல் 468
தாளைப்பத்திரம் 247
தாறுமூர்த்தி 36
தானாபதிக்கம் 174

## தி

திட்டகுளம் 180
தியாகராச சுவாமியார் 288
தியாகவஞ்சேரி 3
திருக்காவுடையார் 276
திருக்கார்னூர் 134
திருச்சுனாப்பனி 459
திருத்தங்கால் 134
திருத்தாங்கூர் 232
திருப்பக்கோட்டை 341
திருப்பத்தூர் 87
திருப்பராதியான் ஊரணி 82
திருப்பாலைக்குடி 192
திருப்புல்லாணி 22, 83, 151, 186, 219, 225, 322, 395

திருப்புல்லாணியூர் 380
திருப்பெருந்துறை 62, 106, 122, 140 222, 299
திருப்பொற்கோட்டை 204
திருமணக் கண்மாய் 169
திருமணக் குளக்கால் 169
திருமலை உடையான் சேதுபதி காத்த தேவர் 10
திருமலைச் சேதுபதி 180
திருமலைச் சேதுபதி காத்த தேவர் 55, 61, 70, 133
திருமலை சேதுபதி காத்த தேவர் 63, 107
திருமலைச் சேதுபதி காத்த ரெகு நாத தேவர் 140
திருமலைய தளவாய் சேதுபதி காத்த தேவர் 81
திருமலைய சேதுபதி ரெகுநாத தேவர் 87, 88, 93, 95, 106
திருமலை ரெகுநாத சேதுபதி காத்த தேவர் 81
திருமலை நாயக்கரய்யன் 33, 35, 93
திருமலை நாயக்கர் 87, 129, 130
திருவத்தியூர் ஊருணி 250
திருவனந்தல் கட்டளை 63
திருவிடானைச் சீமை 477
திருவாரூர் 288
திருவாவடுதுறை 95, 329, 34
திருவாவடுதுறை பண்டார சன்னதி 476
திருவாழிக்கல்லு 186, 187
திருவிடையாபிள்ளை 213
திருவிளையாட்டம் 145
திருவுடையாத்தேவர் 274
திருவுத்தர கோசமங்கை 144, 451 200, 241, 246, 281, 427
திருவுப்பிள்ளை 237
திருவேங்கட்சாரியார் 247
தியனூர் 450
தினைக்குளம் 186, 172
தீர்த்தப்பு நோகிதம் 446

**து**

தும்மினியாண்டி 36
துறைமக்கள் 419
துலுக்கர்கள் 76
துவாகுடி ஏந்தல் 528
துவாரகுழம் 100
துள்ளுக்குட்டி மூப்பன் 193
துழுவர் 236, 276
துறைமுகங்கள் 540
துறைமுகங் கொண்டான் 255
துறைமுகம் பேட்டை 150
துற்கைவன தாழங்குடி 123
தூக்காக்குடி ஆறு 204

**தெ**

தெசரதராமன் 30
தெஞ்சியேந்தல் 362
தெய்வக் கன்னி 236
தெய்வச் நல்லூர் 207
தெய்வச்சிலை ஆசாரி 83
தெய்வச்சிலைப் பெருமாள் 185, 219
தெய்வராயன் 116, 117
தெய்வேந்திரனேந்தல் 251
தெள்ளாப்பிள்ளை ஊரணி 346
தெற்பசயணம் 219

தென்கரை அரசு 509
தென்கொம்பு ஊரணி 261, 362
தென்னாலை நாடு 168, 169
தென்சமுத்திரம் 10

தே

தேத்தாங்கால் 362
தேரிடுவேலி 379
தேர்போகி 250
தேர்போகி நாடு 87, 231
தேத்தாங்கால் 362
தேர்போகி நாடு 93
தேவதாயம் 419
தேவமார் 419
தேவர் கட்டளை 458
தேவரேந்தல் 281
தேவிப்பட்டணம் 269
தேவேந்திரபட்டற் 112, 150
தேவை அம்பலவாணன் 53
தேர்போகித்துறை 294
தேனாறு 232

தொ

தொட்டியக்கம்பலத்தார் 376
தொட்டியர் 230
தொண்டமானர் 275
தொண்டர்யேந்தல் 321
தொண்டைமானார் வகை 275
தொளிச்சான் வீரன் தட்டு 387
தொழிலாளியள் 16
தொறுவளூர் புரவு 321
தோணிச்சிட்டு 245
தோணித்துறை 294
தோப்புக்காறர் 16

ந

நகரத்தார் 222
நகரத்து கோட்டையேந்தல் 456
நகரத்து நாவிதன் 456
நக்கன் பெரியான் கண்வாயி 263
நடுவர் முன்னிலை 461
நடுவில் கூத்தம் 299
நத்தத்து சேருவைகாறன் 534
நம்பிதாளை 263
நம்பிப்பாடி மாகாணம் 288
நம்பியா மூப்பன் 192
நம்ம நாச்சியம்மன் 263
நயினா பிள்ளை 36
நயினா மணியக்காறன்கால் 362
நயினா ஸ்தானிகள் 458
நயினார் 36
நயினார் தானிகர் 460
நயினுகுட்டி சேருவைக்காரன் 191, 193
நரசிங்கப் பட்டன் 36
நரசிங்கன் ஏந்தல் 335
நரிகுமிச்சா திடல் 294
நரிகுடி 162, 262
நரிகூட்டி பரம்பு 262
நல்ல தண்ணீர் கிணறு 294
நல்ல முத்தப்பன் பட்டவிருத்தி 62
நல்லாங்குடி 186
நல்லான் செட்டி கண்மாய் 536
நல்லுக்குபடி 140
நல்லுக்குறிச்சி 144
நவபாசாணம் 294 269
நவல்லகுடி 263
நவாபு வாலாசாகிபு 522

நா

நாகாச்சி 362
நாகாச்சி கண்மாய் 352
நாகாச்சி கறுப்பு மூப்பன் 192
நாஞ்சி வயல் 93
நாட்டார்கால் 455
நாட்டிசேரி 95
நாட்டு இடையர் 27
நாட்டுக்கணக்கு 424
நாட்டு வட்டகை 442
நாட்டு வகுப்பார் 419
நாணாக்குடி 93, 195
நாயக்கமார் 419
நாயக்கர் கட்டளை 458
நாராயணன் 36
நாலங்கராயன் ஆசாரி 266
நாலாங்கராயன் சட்டையப்பன் 375
நாலுகோட்டை 275
நாலுகோட்டை உடையத் தேவர் 236
நாலுகோட்டை நாட்டு அம்பலக் காரர் 535
நாவலூர் குளம் 164
நாளெங்காரியன் 251

நி

நிலமளஇய மங்கலம் 155
நிலமுடையான் கண்மாயி 387

நீ

நீருவாங்கி 116
நீருகுடி 123
நீலுகண்டி கோவில் 77
நீர்த்தடாக முத்து 300

நூ

நூறாலம்சா 394

நெ

நெசவன் 76
நெடு உடையரான் மூப்பன் 192
நெட்டி ஏம்பல் 61
நெட்டேர் 280
நெல்லியடிக்குளம் 476
நெல்லியடித்தோப்பு 476
நெப்பவத்தம் 222
நொச்சியடி 362
நொரண்டிநரயணூரணி 169
நொண்டி மூப்பன் 192

ப

பகையனி பிராந்தனி 204
பங்குனித் திருவிழா 77
பச்சரித்திடல் 394
பஞ்சந்தாங்கி வயல் 123
படிக லிங்கம் 33
படைத்தலைவர் 534
படையன் கிளை 192
பட்டக் காணிக்கை 26, 311
பட்டக் கிராமம் 57
பட்டக் கிறாமம் 27
பட்டங் கட்டி கிளை 192
பட்டணம் 186
பட்டமங்கலம் 164
பட்டர் 16
பட்டுக்கோட்டை 221
பட்டுக்கோட்டை சீமை 77
பட்டுகோட்டைச் சீமை 87
பட்டுநூல்கார செட்டியர் 235
பட்டுநூல் காரர் 76
பணிக்கனேந்தல் 186
பண்டாரம் 151

பண்ணைக்காடு 387
பண்ணைக்கிராமம் 419
பண்ண செய் 164
பண்ணிகுத்தி ஏந்தல் 186
பண்ணிய மூப்பன் 192
பதிங்கலத்து வரியினை 419
பதினெட்டு நாடு 227
பதினென்சாதி 77
பத்திரா தரவை 316
பந்தலா சூறணி 123
பரஞ்சோதி கமலய்யன் 289
பரதேசிக் கட்டளை 87
பரதேசி முத்திரை 106, 145
பரம்பரை 522
பரளச்சி கண்மாய் 423
பரிசார்கம் 66
பரிசு 16
பரிவார தேவதை 33
பருத்திக்குடிநாடு 112
பருமணல்த்தேரி 294
பருவதவர்த்தினி அம்மன் 7
பருவதவற்தனி அம்மன் 262
பருவதவற்தனியம்மன் 261
பர்வத வர்த்தினி 254, 255
பலபுட்டைக்குடி 187
பலிக்குப்பலி 193
பல்லக்கு ஊயகர் 33
பல்லவ குலாந்தக நல்லூர் 423
பவானி சங்கர மஹாராஜா 265
பவித்திர மாணிக்க சதுருவேத மங்கலபுரம் 249
பழங்கரை 222
பழம்பதி நாதர் 164
பழம்பதி வாய்க்கால் 164
பழுபாக ஊரணி 305
பளஞ்சிறாய் 307
பளனிமலை 352
பளனிமலை பண்டாரம் 553
பள்வலசை ஏந்தல் 186
பள்ளர் ஊரணி 424
பள்ளத்தூர் குளம் 164
பள்ளர் குடி 212
பள்ளவேற்குடி 294
பள்ளித்தம்மம் 164
பள்ளி மடம் 129
பள்ளிமடை 112
பள்ளி முனைக்குடா 388
பள்ளிவாசல் 394
பள்ளுபறை 528
பறுவதவர்த்தினி அம்மன் 451, 3
பறுவதவற்த்தினி அம்மன் 40
பறையன் 76, 456
பனங்கூடல் 361
பனஞ்சாயல் 164
பனஞ்சிறாய் 306
பனையங்கால் 306
பனையேந்தல் 387
பனையேரி சாளான் 76
பன்றியேந்தல் 262
பன்றி யேம்பல் 263
பன்னாயேந்தல் 504
பன்னைக் கிறாமம் 274

பா

பாகைப்பொட்டல் 497
பாடிக்காவல் 264
பாண்டவாய் ஆறு 288
பாண்டி ஊர் 100
பாண்டித் தேவன் 63
பாண்டியூர் 3, 352

பாண்டினாடு 299
பாத்திப சேகரநல்லூர் 116
பாப்பாகுடி 100, 102, 103
பாப்பான் கோட்டை 204
பாம்பன் 264
பாம்பன் துறை 17
பாம்பாறு 134, 232, 250
பாம்பூரணி 504
பாலக்குளம் 442
பாலசுப்ரமணியசுவாமி 325
பாலையேந்தல் 379
பால் குளம் 285
பாளையக் காரர் 56
பாளையக் காறர் 419
பாறனூர் 186

பி

பிச்சமூப்பன் 192
பிச்சை சேருனவகாறன் 275
பிரதாணி கட்டளை 458
பிரதாணி தாண்டவராயன் 294
பிரதானி தாமோதரம் பிள்ளை 451
பிரம்ம தேசம் 299
பிரமாலையம் 539
பிலிச்சான் மூப்புன் 192
பிள்ளைமார் 275
பிள்ளை வீரராயி 193
பிறமலை சூள்ந்த பொன்னம ராபதி நாடு 527
பிறவாய் 186

பீ

பீமா ஊரணி 134

பு

புகையிலைத் தோட்டம் 306
புங்கடித் துறை 17
புண மூப்பன் 213
புதுகுடி 134
புதுக் குடிக்குளம் 164
புதுகுளம் 134, 307, 394, 395
புதுக்கோட்டை 169
புதுக்கோட்டை சீமை 87
புதுவைக்கோட்டை 160
புத்தூர் 437
புத்தூர் பாதை 263
புத்தூர் மாகாணம் 519
புலியாத்தி கண்மாய் 455
புலியூர் 164
புல்லல் குடி 161, 212
புல்லாட்குழ கண்மாய் 321
புல்லமடை 180
புல்லாணி 491
புல்லுக்குடி ஏந்தல் 140
புல்லூர் 164
புவனேசுவரியம் 514
புழுகுவனச் சொக்கனாதபண்டாரம் 145
புளியங்குட்டம் 305, 306
புளியடித் துறை 17
புளியாண்டான் கரிசல் 204
புள்ளாரு முக்கந்தன் 213
புறோகிதர் காணியாச்சி 447
புனய் பரனை நாடு 116

பூ

பூச்சிக்கிளை 192
பூசாரி கடம் போடை 311
பூசாரி நாடான் தட்டு 388

பெ

பெண்ணாகுட்டி கண்மாயி 361
பெயராமாயேந்தல் 496
பெரிய அய்யா 55, 156
பெரிய எலை 315
பெரிய கண்மாய் 436
பெரிய குப்பன் மூப்பன் 192
பெரிய குருந்தன் தட்டு 321
பெரிய கூத்தன் 212, 231
பெரிய கூத்தன் ஊரணி 263
பெரிய கோட்டை கவண்டமார் 535
பெரிய சருக்காண் 192
பெரியணன் 225
பெரிய தொண்டி 263
பெரிய நாட்டான் 433
பெரியநேந்தல் 82
பெரிய மாயாகுளம் 387
பெரிய முதலி 36
பெரிய வீரமூப்பன் 192
பெருங்கருணை 276
பெருங்கரை 116
பெருங்காடு 106
பெருமானேந்தல் 262
பெருமாள் சேர்வைக்காரன் 102
பெருவயல் 192, 373
பெருவாய்க் கோட்டை 539

பே

பேசமங்கலம் 61
பேட்டி செயிவித்தல் 459
பேயாண்டி தட்டு 321
பேய்க்குளம் ஊறணி 487
பேறா கண்மாய் 77

பொ

பொசுக்குடி 326
பொருகட்டி பூரணி 467
பொட்டக் குளம் 7
பொதுவண முத்தான் 7
பொம்மு செட்டியார் 373
பொருத்துக்கரை 321
பொற்க் கோட்டை 82
பொன்னம்பலம் பிள்ளை 130
பொன்னரியானேந்தல் 116
பொன்னுக்கு மீண்டான் 163

போ

போயிண்டாமார் 276
போவிண்டமார் 236
மகமை 476
மகரநோம்பு 539
மக்கத்துப்பள்ளி 389
மக்கமதினம் 357
மக்க மதீனம் 395
மங்க தேவன் கண்மாய் நீருபிடி 536
மங்கலக்குடி 193
மங்களேசுவரக்குருக்கள் 368, 428
மங்கைநாதஸ்வாமி 14+
மங்கையநாதன் 275
மங்கைனாதசுவாமி 379
மஞ்சக்காடு 175
மஞ்சக்குடி 241
மஞ்சப்புத்தூர்ச் செட்டியார் 276
மஞ்சளோடை 251
மஞ்சள்கறைச்சான் 262, 263
மஞ்சி ஊர் 437
மடக்குளம் 164
மடத்துடையா மூப்பன் 192
மடைக்குளம் 306
மணக்குளம் 164
மணலூர் 61

மணியகாறர் 16
மணியக்காறர் 222
மணியக்காறன் 17
மணியம் 477
மண்கோட்டை 262
மண்டலக்கோட்டை 164, 540
மஞ்சூர் 164
மதராஸ் ஒப்பேர்ட்கவர்னர் 522
மதவடைச்சியான் 112
மதுரை 375, 389
மதுரை உத்தண்ட மூர்த்தி 266
மதுரை செட்டியன் 276
மதுரை சேகரம் 174
மதுரை மினல்பொன் 62
மதுறாபுரி 130
மந்திரநாதகுருக்கள் 514
மயிலாடு திடலொட்டி 306
மயிலுமரி 123
மரியாதிமணுசர் 35
மருதகாற்தலை 361
மருங்கன் 192
மருங்கூர் 163
மருதங்கநல்லூர் 40
மருத பண்டாரம் 122, 223, 124
மருதம்பிக்குளம் 311
மருதூர் 164, 263, 306
மருதொண்டி 362
மலங்கரை 175
மலையந்த முதலியார் 62
மலைவளர் காதலியம்மன் 33, 34
மல்லகச் செட்டியல் 236, 276
மல்லம்மா தோட்டம் 175
மல்லாரி ஊத்து 109
மளையனேந்தல் 186
மறிச்சுக்கட்டி 186
மன்னார் சலாபம் 21, 214, 255, 300

மா

மாகாணி 192
மாகாணி மூப்பன் 192
மாகாளியம்மன் 263
மாணிக்கனேரி 357
மாணிக்கன் செட்டியார் 373
மாதவபட்டன் 36
மாதவனேரி 164
மாப்பிள்ளைத்தேவர் 236
மாமூல்படி 460
மாயாண்டியாசாரி 11
மாரிதூர்க்கை 76
மாரிபத்தக அய்யாசாமிக்குருக்கள் 486
மாரி மூப்பன் 192
மாவிலிங்கை ஊறணி 387
மாஷுரணி 82
மாறந்தை 186
மாறியாடும்பெருமாள் பிள்ளை 486
மானாமதுரை 236

மி

மிறாசுதார்கள் 460
மின்னந்தி 326

மீ

மீனாட்சி சொக்கநாதர் சுவாமி 150, 151

மு

முகவாபுரி 274
முகலூறணி 307
முகவை 235, 321, 486
முகிழ்த்தகம் 155

முகில்த்தகம் 50
முசாபருல்லா இபுறாகீம் 387
முடிகண்டம் 535
முட்டத்திசைந்தல் 362
முதலூர் 361
முத்தத்துநாடு 93
முத்தப்ப சேருவைக்காரன் 236
முத்தப்பன் 187
முத்தப்பன் சேருவைக்காரன் 275
முத்தாப்பாசாரி 247
முத்திருளப்பிள்ளை 362, 424
முத்திரைப்பழி 419
முத்து ஆதி நாராயணப்பிள்ளை 247
முத்துக்கருப்பனாசாரி 265
முத்துக்காமாட்சி 55
முத்துக்குமாரசுவாமி ஓதுவார் 353
முத்துக்குமார முத்துவிசைய ரெகுநாத சேதுபதிகாத்த தேவர் 419
முத்துகுமார விசையரகுநாத சேதுபதி காத்த தேவர் 373, 386, 387,
முத்துக்கூரிசெட்டி 455
முத்து சேருவைகாறன் 236
முத்துத்திருவுடையாத்தேவர் 264
முத்து நாடு 87
முத்துப்பண்டாரம் 380, 395
முத்துரகுநாத தேவர் 275
முத்துரகுனாதச் சேதுபதி காத்த தேவர் 375
முத்துராமலிங்க சுவாமி 486
முத்துராமலிங்க விசைய ரெகுநாத சேதுபதி 466
முத்துராமலிங்க விசைய ரகுநாத சேதுபதி காத்த தேவர் 446, 476, 491, 486, 500
முத்து ரெகுனாதச் சேதுபதிகாத்த தேவர் 316
முத்து வயிரவநாத தேவர் 241, 246
முத்துவிசய இரகுனாத சேதுபதி காத்த தேவர் 421, 427, 441, 442
முத்துவிசய ரகுநாத சேதுபதி 534
முத்துவிசைய ரகுநாத சேதுபதி புத்திரிகையாகிய சேஷம்மா 518, 519
முத்துவிசைய ரகுநாதச் சேதுபதி காத்த தேவர் 288
முத்துவிசைய ரகுநாத தேவர் 311
முத்துவிசைய ரெகுநாத சேதுபதி காத்த தேவர் 250, 325, 433, 518
முத்துவிசைய ரெகுநாத் சேதுபதி பூபாலபுரம் 250
முத்துவிசைய ரெகுநாத முத்து ராமலிங்க சேதுபதி 522
முத்துவிசைய ரெகுநாத முத்து ராமலிங்க சேதுபதி காத்ததேவர் 504,565
முத்துவிசைய ரெகுநாத சேதுபதி 285
மூத்து வையிரபிள்ளை 486
மூப்பனை 186
மும்முகாத்தன் 3
முருகப்பன் மடம் 204
முருக்கடிப்பற்று 186

மூ

மூலைத்திடல் 274
மூப்புக்காணி 460
மூவேந்திர வேளான் 5_8
மூளிப்பயல் 306

மெ

மெய்ய மூப்பன் 192

மை

மையானேந்தல் 352
மையன்னேந்தி 352

மே

மேதலை ஓடை 186
மேநாட்டான் கண்மாய் 536
மேலச்சீந்தை 203, 208
மேலப்பிறந்தனி 123
மேலமகாளிச் சீர்மை 100
மேல் கரை 73
மேன்மங்களம் 107
மேல் வீத்தை 311

மொ

மொத்தி தேவர் 275

மோ

மோருக்குளம் 192

ர

ரகுநாத சமுத்திரம் 306, 307
ரகுநாத சேதுபதி 191
ரகுநாத சேதுபதி காத்ததேவர் 235, 321, 346
ரகுநாத சேர்வைக்காரன் 236
ரகுநாதன் 117
ரகுநாதன் சேருவைக்காரன் 275
ரகுநாதீஸ்வரம் 346
ரகுநாதச் சேதுபதிகாத்ததேவர் 305
ரகுநாத திருமலைச் சேதுபதிகாத்த தேவர் 144
ரகுநாத தேவர் 180

ரா

ராக்க மூப்பன் 192
ராக்கக்குடும்பன் 212, 213
ரார்சிங்க மங்கலம் 514
ராச பிள்ளையார் கோவில் 362
ராச புத்திராள் 235, 236
ராச முத்திரை 35
ராசராச ஈசுவரி அம்மன் 70
ராச ராசேசுவரி அம்மன் 368
ராதான் கிளை 192
ராமகோ வுண்டன் 140
ராமசாமி 157
ராமசாமி பட்டாபிசேகம் 241
ராமணய்யன் 361
ராமந்ர்த சமுத்திரம் 116
ராமநாத சுவாமி 25, 44, 285
ராமநாத பண்டாரம் 17, 25, 55
ராமநாதபுரம் 11, 274,482
ராம பிள்ளை 36
ராம மூப்பன் 192
ராமய்யன் 81, 335
ராமலிங்கக் குருக்கள் 150
ராமலிங்க நம்பியர்ர் 368
ராமலிங்கம் 34, 124
ராமனாத குருக்கள் 35
ராமனாத சுவாமி 7, 33, 40
ராமனாதபுரம் சீமை 477
ராமனாதன் 27
ராமாயணப் பிரசங்கம் 241
ராமீசுரம் 33 192
ராமு சேருவைக்காரன் 236

ராயசம் 83, 157, 247
ராயசம் குப்பையாண்டி 487
ராய தொண்டைமானார் 231
ராவுத்த பண்டாரம் 62
ராவுத்தமார் 419

### ரெ

ரெகுநாத காதலி ஆயிபுரம் 232
ரெகுநாதக்காவேரி 466, 67
ரெகுநாத குடுப்பன் 263
ரெகுநாத குருக்கள் 155, 157. 442 446, 458,
ரெகுநாத சமுத்திரம் 436, 306
ரெகுநாத சேதுபதி காத்த தேவர் 50, 155, 157, 225, 254, 280, 341 356, 368, 455, 416, 500, 509
ரெகுநாத சேருவைக்காறன் 237
ரெகுநாத திருமலைசேதுபதி காத்த தேவர் 70, 76, 144, 149, 155, 231
ரெகுநாத தேவர் 163, 207, 208 241
ரெகுநாத ராய தொண்டைமானார் 231
ரெகுநாத சேதுபதி தேவர் 231
ரெகுநாதன் 102
ரெகுனாதச் சேதுபதி 173
ரெகுநாததேவர் 311
ரெகுநாத தொண்டைமானார் 63
ரெகுனாதன் சேருவைகாறன் 275
ரெங்கநாத்புரம் 455

### வ

வகையறா 527
வங்கநூர் 123
வங்காரு பண்டாரம் 151, 380
வடக்கு வாசல் 130
வடசமுத்திறக்கறை 10
வடமாத்தூரு 534
வடுகக்குசவர் 276
வடுகனாத தேவர் 274
வட்டாணம் 164
வணங்காமுடி 306
வணதேவர் 263
வண்ணான் தட்டு 321
வண்ணான் செய் 306
வதிபிடிங்கி கிளை 192
வயல் ஈழத்தான் 123
வயறானேந்தல் 362
வயிரவன் கோயில் 316
வயிரவன் செட்டியார் 373
வரகுணாவயநாடு 513
வரிச்சோறு 419
வலங்கைவரி 467
வலசை இடையர் 236, 276
வலமாவூர்க்கண்மாய் 285
வலைக்காவல்கார மூப்பன் 192
வலைதோணி 77
வலையர் 192
வலையன் சோளியன் கண்மாய் 204
வலையன் வயல் 241
வழிமறிகாறர் 222
வளமாவூர்க் குளக்கால் 255, 442
வளுவாபுரி 168
வள்ளுவன் 76
வன்னித்தேவர் 306

### வா

வாகைக்குளம் 306, 307
வாச்சமாகாளித் தேவன் 275
வாணாடர் ஊறணி 100
வாணியன் 151
வாமதேவ குருக்கள் 35

வாமதேவர் 262
வாமதேவன் அறைக்கட்டளை 160
வாலிலாப்புலி 112
வாளவந்தாளம்மன் கோவில் 394
வாளி நாடான் தட்டு 388
வானர வீர மதுரை 275
வாறேறு பூண்முலையம்மன் 379
வானியர்குடி 76

வி

விசயரகுநாத சேதுபதி 241
விசய ரகுநாத சேதுபதி தேவர் 246
விசுவநாத ஆசாரி 102, 117, 187, 247
விசுவலிங்கம் 34
விசுவநாத ரேந்தல் 263
விசுவேசுபரர் 168
விசையரகுநாத சேதுபதி காத்த தேவர் 186, 277 280, 294, 450 509,
விசைய ரகுநாத ராணி சேதுபதி மங்களேசுவரி 518
விசயரெகுநாத சமுத்திரம் 274
விசையன் சேதுபதி 266, 269
விரிசிபட்டன் 36
விரிசியானேந்தல் 263
விருசிலை நதி 164
விரிசிலையாறு 164
விளக்கனேந்தல் 262 263,
விளத்தூர் 241, 262,
விளத்தூர் வகுத்து கால் 500
விளப்பத்தி ஏந்தல் 186
விளாங்காட்டூர் 140
விளி ஓடைக் கண்மாய் உள்வாய் 491
விசைய ரெகுநாத பெரிய தோப்பு 265
விசயரெகுநாத சேதுபதி காத்த தேவர் 254

வீ

வீசு கொண்ட தேவன் 379
வீரணாசாரி 170
வீரபத்திரன் நாயகம் 251
வீரபாசாரி 261
வீரப்பாசாரி 200
வீரப்பிள்ளை கிளை 192
வீரப்ப பண்டாரம் 22
வீரப்பபிள்ளை ஆவான் 62
வீர்ம நல்லூர் 231
வீர மூப்பன் 192 193
வீரராயன் பொன் 212
வீரலட்சுமி நாச்சியார் 522
வீராண்டி மூப்பன் 192
வீரணார் 122
வீழி மங்கலம் 123

வெ

வெங்கடேஸ்வரய்யன் 231
வெங்கட்டங்குறிச்சி 3
வெங்கலமுடைய பிள்ளை 306
வெங்காயக் குண்டு 466
வெங்கிடநாராயணஜயன் 455
வெடந்தைகண்ணன் 7
வெட்கவினை 534
வெட்டுச்செய் 164
வெண்ணத்தூர் 140
வெண்ணிமாலை 306
வெத்திவேலாயுதனாசாரி 83
வெலமர் 236, 276

வெள்ளாம்பற்று 186, 241
வெள்ளாம்பற்றுச்சீமை 87
வெள்ளாழச்செட்டி 276
வைத்தியக்கொடி சரப்பனி 539
வெள்ளைதுற்கையம்மன் 33
வெள்ளையன் மூப்பன் 192
வெள்ளையன் 225

வே

வேங்கிடம்மா சமுத்திரம் 280
வேங்கூர் 107
வேதபராகர் 241
வேதாளை தூங்கமூப்பன் 192
வேப்பங்குளம் 424
வேம்பாறு 192
வேலங்குளம் 7
வேலங்குளம் வேலத்தேவன் 535
வேலப்பிள்ளை, 61, 62
வேலாயுத சுவாமியார் 352
வேல் வாங்கினான் 36
வேளங்குடி 262
வேளாநேரி 428
வேளான் தரவை 192, 93

றா

றாதா நல்லூர் 100
றாமநாதசுவாமி 10
றாமநாதபுரம் 130
றாமலிங்கதுரை 130
றாமீசுவரம் 10
றாமேசுவரம் 295
றாயசம் 170

ன

னாவிலிவுயல் 61

ஸ

ஸங்கராந்திபுண்யகாலம் 509
ஸ்தானிகர் 427



இராமேசுவரம் கோயில்



(1) கிழக்குக் கோபுரம்

இராமர்

(3) திருக்குளம்





வடக்குப்

பிராகாரம்

சேனபதி மன்னர்களின்

உருவச் சிலைகள்

இராமலிங்க விலாசம்

அரண்மனைக் காட்சிகள்







இராமலிங்க விலாசம்

அரண்மனைக் காட்சிகள்







செறந்தைச் செப்பேடு



இராமலிங்க விலாசம் ஓவியங்கள்







சேதுபதி நாயங்கள்

குளப்பட்டிச் செப்பேடு

குளப்பட்டிச் செப்பேடு



பெருங்காட்டுச் செப்பேடு







திருப்பொற்கோட்டைச் செப்பேடு



திருப்பொற்கோட்டைச் செப்பேடு

விளாளர்ச் செப்பேடு



விளாளர்ச் செப்பேடு









கடம்பங்குடிச் செப்பேடு



இராமேசுவரம் செப்பேடு



புல்லாக்குடிச் செப்பேடு



புல்லுக்குடிச் செப்பேடு



இராமேசுவரம் செப்பேடு



இராமேசுவரம் செப்பேடு